# குன்றக்குடி அடிகளார்

# நூல்வரிசை

தொகுதி -7

## சமய இலக்கியம்

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை

15 தொகுதிகள்
6000 பக்கங்கள்

## தொகுதி - 7

## சமய இலக்கியம்

தமிழ் வளர்ச்சி இயக்ககம்
எழும்பூர்
2007
சென்னை-600 008
தமிழ் வளர்ச்சி வளாகம்

முதன்மைப் பதிப்பாசிரியர்
தவத்திரு பொன்னம்பல அடிகளார்

விற்பனை உரிமை :

மணிவாசகர் பதிப்பகம்
31, சிங்கர் தெரு, பாரிமுனை,
சென்னை-600108.

முதல் பதிப்பு : டிசம்பர், 2001
திருவள்ளுவர் ஆண்டு : 2032
உரிமை : திருவண்ணாமலை ஆதீனம்
மணிவாசகர் வெளியீட்டு எண் : 890

**விலை : ரூ. 80-00**

பதிப்பாசிரியர் குழு :
தமிழாகரர் **தெ. முருகசாமி**
**நா. சுப்பிரமணியம்**
**குன்றக்குடி பெரியபெருமாள்**
**க. கதிரேசன்**
**மரு. பரமகுரு**


செயலர் :
பதிப்புச்செம்மல் **ச. மெய்யப்பன்**

கிடைக்குமிடம் :
**மணிவாசகர் நூலகம்**
12-B, மேல சன்னதி, சிதம்பரம் - 608 001.
31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை - 600 108.
9, சிவப்பிரகாசம் தெரு, தி.நகர், சென்னை - 600 017.
110, வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை - 625 001.
15, ராஜ வீதி, கோயமுத்தூர் - 641 001.
28, நந்தி கோயில் தெரு, திருச்சி - 620 002.

தொலைபேசி :

| | | |
|---|---|---|
| சிதம்பரம் | : | **30069** |
| சென்னை | : | **5361039** |
| தி. நகர் | : | **4357832** |
| மதுரை | : | **622853** |
| கோயமுத்தூர் | : | **397155** |
| திருச்சி | : | **706450** |

அச்சிட்டோர் : மணிவாசகர் ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை 600 021.
தொலைபேசி : 5954528



தமிழ் மாமுனிவர்
தவத்திரு குன்றக்குடி அடிகளார்
1925 - 1995

தமிழ்மாமுனிவர் அருள்நெறித் தந்தை

# தவத்திரு குன்றக்குடி அடிகளார்

## வாழ்க்கைக் குறிப்புகள்

| ஆண்டு | நிகழ்வுகள் |
|---|---|
| 1925 | • தோற்றம் |
| | • பூர்வாசிரமம் : தந்தையார் : திரு. சீனிவாசம் பிள்ளை<br>தாயார் : திருமதி. சொர்ணத்தாச்சி |
| | • பிள்ளைத் திருநாமம் : அரங்கநாதன் |
| | • தோற்றம் பெற்ற ஊர் : தஞ்சை மாவட்டம் திருவாளப்புத்தூர் அருகேயுள்ள நடுத்திட்டுக் கிராமம். |
| 1931 - 1936 | • சிதம்பரம் அண்ணாமலை நகரில் வாசம்.<br>• 'சொல்லின் செல்வர்' ரா.பி. சேதுப்பிள்ளை, நாவலர் நாட்டார், சுவாமி விபுலானந்தர் ஆகியோர் தொடர்பு. |
| 1937- 1942 | • தமையனார் திரு. கோபாலகிருஷ்ண பிள்ளை வீட்டில் கடியாபட்டியில் வாழ்தல். |
| | • பள்ளியிறுதித் தேர்வு எழுதுதல். |
| | • 1942 விடுதலைப் போராட்டத்தில் ஈடுபாடு. |
| | • 'வினோபா பாவே படிப்பகம்' தொடங்கி நடத்துதல். |
| 1945 | • தருமபுரம் ஆதீனம் 25ஆவது குருமகாசந்நிதானம் கயிலைக் குருமணி அவர்களிடம் கந்தசாமித் தம்பிரான் என தீட்சாநாமத்துடன் தம்பிரானாதல். |
| | • தருமபுரம் தமிழ்க் கல்லூரியில் பயிலுதல். |
| 1947 - 1948 | • சீர்காழிக் கட்டளைத் தம்பிரான் - திருஞான சம்பந்தர் திருமடம் தூய்மைப் பணி; திருமுறை வகுப்பு, விழா நடத்துதல். |
| 1949 | • குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனத்தின் இளவரசு பட்டம் ஏற்பு. திருநாமம் ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள். |
| 1951 | • காரைக்குடிக் கம்பன் விழாவில் 'புதரிடைமலர்' என்ற தலைப்பில், அறிஞர்களின் நெஞ்சம் கவர்ந்த சொற்பொழிவு. |
| 1952 | • குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனத்தின் 45ஆவது குருமகா சந்நிதானமாக எழுந்தருளல். |

- அருள்நெறித் திருக்கூட்டம் தோற்றம்.
- ‘மணிமொழி’ என்னும் பெயரில் இயக்கப் பத்திரிகை வெளியிடல்.

1953
- ஆதீனத்தின் அருளாட்சியிலுள்ள பிரான்மலைத் திருக்கோயில் சித்திரைத் திருவிழாவின்போது (சங்க கால வள்ளல் பாரி வாழ்ந்திருந்த மலையில்) வள்ளல் பாரி விழாத் தொடங்குதல்.
- பல்லக்கில் பட்டணப் பிரவேசம் வருதலைத் தவிர்த்தல்.
- இலங்கைப் பயணம் - இரண்டு வாரம் சுற்றுப் பயணம்.

1954
- இராசாசி தலைமையில் தேவகோட்டையில் அருள்நெறித் திருக்கூட்ட மாநாடு.
- திராவிடர் கழகத் தலைவர் பெரியார் சந்திப்பு.
- தாய்லாந்து, இந்தோசீனா, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் சுற்றுப்பயணம் (3 திங்கள்)

1955
- அருள்நெறித் திருப்பணி மன்றம் தொடங்குதல்.
- ‘தமிழ்நாடு’ நாளிதழ் தவத்திரு குன்றக்குடி அடிகளார் என்ற பெயரை அறிமுகப்படுத்துதல்.

1956
- அறிஞர் அண்ணா குன்றக்குடி திருமடத்திற்கு வருகை.
- ஆச்சார்ய வினோபா பாவே திருமடத்திற்கு வருகை.

1958
- குன்றக்குடியில் உயர்நிலைப்பள்ளி தொடங்குதல்.

1959
- ஆ. தெக்கூரில் பள்ளிச் சீரமைப்பு மாநாடு நடத்துதல்; பாரதப் பிரதமர் நேரு மாநாட்டிற்கு வருகை.

1960
- மத்திய அரசு சேமநலக் குழு உறுப்பினராதல்.

1962
- சீனப்போரின்போது தங்க உருத்திராட்ச மாலையைத் திருவொற்றியூர்க் கூட்டத்தில் ஏலம் விட்டு ரூ. 4000 தருதல்.
- மதுரை அருள்மிகு மீனாட்சியம்மன் திருக்கோயிலில் திருமுறைத் தமிழ் அருச்சனை தொடங்குதல்.

1965
- இந்தி எதிர்ப்புப் போராட்டம்; அரசு வழக்கு தொடர்தல்.

1966
- தமிழ்நாடு தெய்வீகப் பேரவைத் தோற்றம்.

1967
- திருப்புத்தூர்த் தமிழ்ச் சங்கம் தோற்றம்.
- திருக்கோயில் கருவறைக்குள் சீலமுடைய அனைவரும் சாதி வேறுபாடின்றி திருமுறை நெறிப்படி - போதொடு நீர் சுமந்தேத்தி வழிபாடு செய்வதெனத் திருப்புத்தூர்த் தமிழ்ச் சங்கம் தீர்மானம் நிறைவேற்றுதல்.

1968
- இரண்டாம் உலகத் தமிழ்மாநாடு - ‘திருக்குறள் உரைக்கோவை’ நிகழ்ச்சி தொடக்கவுரை நிகழ்த்தல்

- திருக்குறள் இந்திய நாட்டின் தேசிய நூலாக வேண்டுமென்று இம்மாநாட்டில் வலியுறுத்தல்.

- இலங்கைப் பயணம். இரண்டு வாரங்கள், இலங்கை யாழ்ப்பாணத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் திருக்கோயில் நுழைவுக்காக உண்ணா நோன்பிருத்தல்.
- கீழவெண்மணித் தீவைப்பு நடந்த இடத்தைப் பார்வையிட்டுப் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல கூறுதல்; புத்தாடை வழங்குதல்.

1969
- பாபநாசம் பொதிகையடி திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி ஏற்பு;
- கலைஞர் மு. கருணாநிதி பாரி விழாவிற்கு வருகை
- கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் விருப்பத்தின் வழி தமிழ்நாடு சட்டமன்ற மேலவை பொறுப்பேற்றல்
- தமிழ்நாடு தெய்விகப் பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெறல்.

1970
- சட்டமன்ற மேலவையில் இந்து அறநிலையத் திருத்த மசோதா - சாதி வேறுபாடின்றி அனைவரையும் அர்ச்சகராக நியமனம் செய்தல் பற்றிப் பேசுதல்.

1971
- தமிழ்நாடு சமாதானக் குழுத் தலைவராதல்.
- சோவியத் பயணம்; 22 நாள் சுற்றுப் பயணம்.

1972
- பாபநாசம் பொதிகையடி திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி, திருவள்ளுவர் கலைக் கல்லூரியாக உருவாதல்.
- சென்னை, மயிலாப்பூர் திருவள்ளுவர் திருக்கோயில் திருப்பணிக்குழுத் தலைவராக நியமனம்; வள்ளுவர் கோட்டம் திருப்பணித் தலைவராக நியமனம்.
- குன்றக்குடித் தருமைக் கயிலைக் குருமணி உயர்நிலைப் பள்ளிக்குப் புதிய இடத்தில் கட்டடம் கட்டித் திறத்தல்.

1973
- திருக்குறள் பேரவைத் தோற்றம்.
- திருச்சியில் தமிழ்நாடு தெய்விகப் பேரவை இரண்டாவது மாநில மாநாடு நடத்துதல்.
- “கோயிலைத் தழுவிய குடிகளும் குடிகளைத் தழுவிய கோயிலும்” என்ற முழக்கம் நாட்டளவில் வைக்கப்பெற்றது.
- குன்றக்குடி கிராமத்தைத் தன்னிறைவுக் கிராமமாக ஆக்கும் திட்டம் உருவானது.

1975
- நாகர்கோவிலில் தமிழ்நாடு தெய்விகப் பேரவை மூன்றாவது மாநில மாநாடு நடைபெறல்.

- சென்னைப் பல்கலைக் கழகத்தில் சொர்ணம்மாள் அறக்கட்டளைச் சொற்பொழிவு.
- மதுரை காமராசர் பல்கலைக்கழகம் ஏ.பி.சி. வீரபாகு சைவசித்தாந்த அறக்கட்டளைச் சொற்பொழிவு.
- அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சொர்ணம்மாள் அறக்கட்டளைச் சொற்பொழிவு.
- இராமநாதபுரம் இனக் கலவரம் - அமைதிப்பணி.

1982
- குமரி மாவட்டம் மண்டைக்காடு கலவரம் - அமைதிப் பணியாற்றல்.
- மண்டைக்காடு அமைதிப்பணி பற்றிச் சட்ட மன்றத்தில் முதல்வர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். பாராட்டுதல்.
- திருவருட்பேரவை தொடங்குதல்.
- மலேசியா, கொரியா, ஹாங்காங், ஜப்பான், செஞ்சீனா முதலிய நாடுகளில் சுற்றுப்பயணம்.
- புளியங்குடி இனக்கலவரம் - அமைதிப்பணி.

1984
- பாரதத் தலைமை அமைச்சர் திருமதி. இந்திராகாந்தி அவர்கள் குன்றக்குடிக் கிராமத் திட்டக்குழுவின் பணிகளைப் பாராட்டல்.

1985
- நடுவணரசு திட்ட ஆணைக்குழுப் பிரதிநிதிகள் குன்றக்குடி வருகை; கிராம வளர்ச்சிப் பணிகளைப் பார்வையிட்டுப் பாராட்டுதல்.
- பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் வளர்ச்சிப் பணிக்குத் திட்டக்குழு அமைத்தல்.
- மணிவிழா


1986
- தமிழ்நாடு அரசின் முதல் திருவள்ளுவர் விருது பெறுதல்
- இந்திய அரசு திட்டக்குழு குன்றக்குடித் திட்டப் பணியைப் பாராட்டி "Kundrakudi Pattern" என்று அறிவித்தது.

1989
- இவர் எழுதிய 'ஆலயங்கள் சமுதாய மையங்கள்' என்னும் நூல் தமிழ்நாடு அரசின் முதற்பரிசு பெற்றது.
- அண்ணாமலைப் பல்கலைக்கழகம் கௌரவ டாக்டர் (D.Litt) பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.

1991
- இந்திய அரசின் அறிவியல் செய்தி பரப்பும் தேசியக்குழு, தேசிய விருது வழங்கிச் சிறப்பித்தது.
- இலண்டன், அமெரிக்கா சுற்றுப்பயணம்.
- அரபு நாடுகள் பயணம்.

1993
- மதுரை காமராசர் பல்கலைக்கழகம் 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' விருது வழங்கிச் சிறப்பித்தது.

1995
- இறைநிலை யடைதல்.



# அடிகளாரின் சமய, இலக்கியப் பணிகள்

பதிப்புச்செம்மல் **ச. மெய்யப்பன்**
நிறுவனர் : **மெய்யப்பன் தமிழாய்வகம்**

தமிழ்மாமுனிவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் தமிழ்கூறு நல்லுலகில் சமய மறுமலர்ச்சிக்கு வழிகண்டவர். அடிகளார் பூர்வாசிரமத்தில் செட்டிநாட்டில் எங்கள் ஊராகிய இராமச்சந்திரபுரத்தில் உயர்நிலைக் கல்வி பயின்றார்கள். எங்கள் தந்தையார் குங்கிலியம் பழ. சண்முகனார் அவர்களும், அடிகளாரின் அண்ணன் அவர்களும் விநோபா பாவே வாசகசாலையைத் தொடங்கினர். அடிநாள் தொட்டு அடிகளாரை நான் நன்கறிவேன். அடிகளார் திருவண்ணாமலை ஆதீனத்தில் பொறுப்பேற்ற பின்னர் சிறந்த சொற்பொழிவாளராக விளங்கினார்கள். முதன்முதலில் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களும் அடிகளார் அவர்களும் நாங்கள் நடத்திய தமிழர் திருநாள் திருக்குறள் விழாவில் ஒரே மேடையில் பேசினர். அப்பொழுது ஆத்திகமும் நாத்திகமும் ஒரே மேடையில் சந்திக்கின்றன என்ற செய்தியை வியப்புடன் நாளிதழ்கள் வெளியிட்டன.

50, 60களில் அடிகளார் தமிழ்மேடைக்குத் தம் பேச்சால் புதிய வலிமை சேர்த்தார்கள். தமிழகம் முழுவதும் அடிக்கடி பயணம் செய்யும் நான் அடிகளாரின் நூற்றுக்கு மேற்பட்ட பொழிவுகளைச் செவிமடுக்கும் நல்வாய்ப்பைப் பெற்றேன். அடிகளார் நூல் பலவற்றைப் படிக்கும் பேறும் பெற்றேன். அப்பொழுதெல்லாம் அடிகளார் சிந்தனைகள் அனைத்தையும் ஒருசேரத் தொகுத்துப் பார்க்க வேண்டும் என்ற வேணவா என்னுள்ளத்தில் முகிழ்த்தது. அது இன்று கைகூடுகிறது.

தமிழ் மாமுனிவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் தமிழ்நாடு செய்த தவப்பயனால் 1925இல் தோன்றி 70 ஆண்டு காலம் தமிழகத்திற்குப் பல்வேறு பணிகள் வாயிலாகக் கடமை ஆற்றிய நாட்டுத் துறவியாவார்.

தவத்திரு அடிகளாரைப் புரட்சித்துறவி என்றும், மிகச் சிறந்த சொற்பொழிவாளர் என்றும் நாடு கருதும்.

அடிகளார் எழுத்துக்கள் அனைத்தையும் நூல்வரிசை யாகத் தொகுக்கும் போது ஒவ்வொரு தொகுதியிலும் 400 பக்கங்களுக்குக் குறையாமல் 15 தொகுதிகளாக மொத்தம் சற்றொப்ப 6000 பக்கங்கள் அளவில் விரிந்தன. தம் 50 ஆண்டுப் பொது வாழ்வில் அடிகளார் எழுதிய 60 நூல்களையும் பதிப்பாசிரியர் குழு 5 தலைப்புக்களில் வகைப்படுத்தியது. நூற்றொகுதி அனைத்தையும் ஒருசேர வைத்து நோக்கும்போது அடிகளார் மிகச் சிறந்த நூலாசிரியராகச் சிறப்பதை நாம் உணர்கிறோம்.

1999 டிசம்பர் திங்களில் முதல் தொகுதி முகிழ்த்தது. 2001 நவம்பரில் தொகுதிகளின் அச்சுப் பணி முடிந்தது. திருக்குறள் பற்றி மட்டும் அடிகளார் கட்டுரைகள் 4 தொகுதிகளாகச் சற்றொப்ப 1600 பக்க அளவில் விரிந்துள்ளது.

தருமபுரம் ஆதீனம், பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க அடிகள் ஆகியோர் அளித்துள்ள அணிந்துரைகளில் அடிகளாரின் இறையுணர்வையும், பக்திவழி நாட்டுக்கு ஆற்றிய பங்களிப்பையும், சைவத்திற்கும், தமிழுக்கும் அடிகள் ஆற்றிய அளவிடற்கரிய பணிகளையும் போற்றியுள்ளனர்.

தமிழ்நாட்டின் மிகச் சிறந்த திறனாய்வாளர்களான சிலம்பொலி செல்லப்பர், வா.செ. குழந்தைசாமி, தமிழண்ணல், வை. இரத்தினசபாபதி, ஔவை நடராஜன், சிற்பி பாலசுப்பிரமணியன், ச.வே. சுப்பிரமணியம், கு. சுந்தரமூர்த்தி முதலியோர் அடிகளார் நூல்வரிசையை ஆராய்ந்து, தேர்ந்து, தெளிந்து அடிகளாரின் சிந்தனை வளத்தையும், சமூக உணர்வினையும், பல்துறை அறிவினையும், மனித நேயத் தையும், தமிழாற்றலையும், அழுத்தமாக எடுத்துக் கூறும் பெற்றியினையும் தங்கள் அணிந்துரைகளில் சான்றுகளுடன் விளக்கி உள்ளனர்.

பொதுவாக 15 தொகுதிகளிலும் அடிகளாரின் ஆளுமை வெளிப்பட்டாலும், மூல இழையாகச் செல்வது தமிழ்ச் சமூகத்திற்குரிய விழுமங்கள், உன்னதங்கள், உயர்வுகள், சிறப்புக்களே. பழந்தமிழ் இலக்கியமாகிய பத்துப்பாட்டு, எட்டுத் தொகையில் தொடங்கி பாரதி பாடல்வரை தமிழரின் தனி அடையாளங்களின் வேர்களை அவை இனங்காட்டுவன. அயல் வழக்கினைத் தமிழ் வழக்கு வென்ற திறத்தினை அடிகளார் அழுத்தம் திருத்தமாக ஆவணமாக்கி விடுவார்.

சமயக் கட்டுரைகள் பொதிந்துள்ள இத்தொகுதிகள் வாழ்முதலாகிய இறைவனைப் பற்றிய அடிகளாரின் சிந்தனைப்

பதிவுகளைக் கொண்டன. இந்தப்புலம் அடிகளாரின் ஆன்மா விரும்பும் விருப்பமான நிலம். அவர்கள் நாளும் பயணம் செய்யும் ஞானபூமி. ஆதலால் சமயம்பற்றி அடிகள் கொண்ட அனைத்துக் கருத்துக்களின் கருவூலமாக இத்தொகுதிகள் திகழ்கின்றன. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல, கோயிலைத் தழுவிய குடிகளும், குடிகளைத் தழுவிய கோயிலும் என்னும் கொள்கை உருவாக்கம் அடிகளாரின் தனிக்கொடை.

தமிழ் இலக்கியம் சமயம் சார்ந்த இலக்கியம். சமணமும் தமிழும், பௌத்தமும் தமிழும் எனப் பகுத்தாலும் இலக்கிய நிலப்பரப்பில், பங்களிப்பில் சைவமும் தமிழும்தான் தனிச்சிறப்பு பெறுகிறது.

அடிகளார் சிவநெறியினைச் சிரத்திலும் சிந்தையிலும் வைத்துப் போற்றிக் கூறிய, எழுதிய கருத்துக்கள் சைவ சமயத்திற்குப் புத்துணர்வையும், புத்தொளியையும் நல்குவன. புரட்சித் துறவியாகிய அடிகளாரின் புதிய பார்வை திருமுறை களை மறுமைக்கு மட்டுமின்றி இம்மைக்கும் வழிகாட்டும் என நிறுவுவன. மனிதனை மேம்படுத்தும் எண்ணங்களை, சீரிய செவ்வறங்களைக் கூறுவன திருமுறைகள்.

அடிகளார் அப்பரடிகளிடம் கொண்ட அன்பு அளவிடற் கரியது. நாவுக்கரசர் காட்டிய நல்லறங்களை நாளும் சொல்லி மகிழ்பவர். எட்டாந் திருமுறை ஆகிய திருவாசகத்தை எண்ணி எண்ணி எப்போதும் இறும்பூது எய்துபவர். சேக்கிழார் இயற்றிய 12ஆம் திருமுறையாகிய திருத்தொண்டர் புராணத்தை நிகழ்கால சமூக வாழ்க்கையோடு இயைத்துக்காட்டி, சைவ சமயம் என்பது தமிழர் வாழ்க்கை நெறி என்பதை ஒல்லும் வகையெலாம் உணர்த்தியவர்.

கோயிற் பண்பாடு என்னும் கோட்பாட்டை விளக்குவதில் அடிகளார் முதல் வரிசையர். சைவ சமய, தோத்திர, சாத்திர சரித்திரக் கருத்துக்களில் ஆழங்கால் பட்டவர். பரந்துபட்ட தமிழ்நூற் பயிற்சியும் வாழ்வியல் அனுபவங்களும் இத் தொகுதிகளில் ஒளி வீசுகின்றன.

இறைவன், பிறவித்துன்பம், வினைக் கொள்கை, ஊழ் உண்மை, ஓதி உணர்தல், புலனடக்கம், மெய்ப்பொருளை உணர்தல், விண்ணும் மண்ணும், வீட்டுலகம் முதலியன பற்றி அடிகளார் கூறிச் செல்லும் கருத்துக்கள் ஆழ்ந்த சிந்தனைகளின் வெளிப்பாடு.

அடிகளார் தெளிவுற அறிந்திடுதல், தெளிவுற மொழிந்திடுதல் என்ற இரு நிலையிலும் சிறப்பாக விளங்கியவர் என்பதனை இத்தொகுதிகள் பறைசாற்றுகின்றன. இலக்கியக் கட்டுரைகளாயினும் சரி, சமயக் கட்டுரைகளாயினும் சரி அடிகள் மனித குல மேம்பாடு ஒன்றிற்கே உயர்வளிப்பவர் என்பது விளங்கும்.

இந்நூல் வரிசையால் அடிகளாரிடம் தமிழ் முனிவர் திரு.வி.க.வின் சமுதாயப் பார்வையும், சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானம் அவர்களின் சமுதாய அரசியற் பார்வையும் இலங்கியதை அறியலாம். தமிழ் தேசியம் வேர்கொள்ள அடிகளார் ஆற்றிய பணி தமிழர் வரலாற்றில் பதிவு செய்யப் பெற்று விட்டது.

அருள் நெறித் திருக்கூட்டம், தெய்வீகப் பேரவை, திருக்குறட் பேரவை, திருவருட் பேரவை முதலிய அமைப்புக்களைத் தோற்றுவித்து, தமிழ் இனம், நாடு முன்னேறப் பல்லாற்றானும் பணிசெய்தவர்.

உலகின் பெரும் பகுதியினைப் பலமுறை வலம் வந்தவராதலால் இவர் தம் எழுத்தும் பேச்சும் சமூக உணர்வுடன் சிறந்து விளங்கின. பயணத்திற்குப் பயணம் இவரது அனுபவ அறிவு செழுமை பெற்றதை இந்நூல்வரிசை பரிணாம முறைப்படி உணர்த்துகிறது. சமுதாய உய்வுக்கு அடிகள் உரைத்த பொன்மொழிகளின் படிமுறை வளர்ச்சியை, வாழ்வியல் அறங்கள் பற்றிய அடிகளாரின் நோக்கும் போக்கும் மாற்றம் பெற்ற திறத்தினை இவ்வரிசை நூல்கள் உயிரோவிய மாக்குகின்றன. தமிழகத் துறவிகள் வரலாற்றில் அடிகளாரைப் போல அனைத்துலகையும் வலம் வந்தவர் வேறு எவரும் இலர்.

பரிபாடலின் பக்திநெறி பற்றிப் பேசினாலும், பாரதியின் பக்திமைபற்றிப் பேசினாலும் பக்திநெறியில் அடிகளின் பார்வை புதியது. ‘பூமியில் எவர்க்கும் இனி அடிமை செய்யோம், பரிபூரணனுக்கே அடிமை செய்து வாழ்வோம்’ என்கிற கோட்பாட்டை, ‘நாமார்க்கும் குடி அல்லோம்’ என்னும் நாவுக்கரசரின் குரலோடு இணைத்து சுதந்திரக் குரலாக எடுத்துரைப்பார். விடுதலை வேள்விக்கு வித்திட்டவர் என வீறார்ந்த மரபை விளக்கிக் கூறுவார்.

கடவுட் பற்றும், கவிதைப் பற்றும், கட்சிசாரா நாட்டுப் பற்றும் அடிகளார் எழுத்துக்களில் எங்கும் பரக்கக் காணலாம்.

பாரதியாரை ப. ஜீவானந்தம் ஆரவாரமாக, உணர்ச்சி பொங்கச் சொல்லிக் கூத்தாடுவார், அடிகளாரோ ஆரவாரமின்றி ஆழ்ந்த அமைதியோடு அழகு தமிழில் ஆற்றொழுக்காக எடுத்துரைப்பார். இவர் எழுத்து நடை திரு.வி.கவைப் போல, பேச்சு நடை தழுவியது. சிறிய தொடர்கள் சிந்தனையைத் தூண்டுபவை.

ஒட்டுமொத்தமாக எழுத்துக்கள் அனைத்தையும் ஒருசேரத் தொகுத்துப் பார்க்கிறபோது அடிகளாரின் அறிவாற்றலும், எழுத்தாற்றலும், தமிழாற்றலும் நம்மை வியப்படையச் செய்கின்றன. ஒரு நொடியும் வீணாக்காது தமிழினம் உய்ய அடிகள் ஆற்றிய அரும் பணிகளின் ஆழத்தையும், அகலத்தையும் விரிவையும் இந்நூல் வரிசைகள் விளக்குகின்றன. உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை.

# அணிந்துரை

## *தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார், பேரூராதீனம்.*

தமிழகத்தில் அருள்நெறிச் சிந்தனையை நெறிப் படுத்தியவர் தமிழ் மாமுனிவர், அருள் நெறித் தந்தை எனப் போற்றப்படும் திருவண்ணாமலை ஆதீனம் தவத்திரு குரு மகாசந்நிதானம், தெய்வசிகாமணி அருணாசல பரமாச்சாரிய தேசிகராகிய குன்றக்குடி அடிகளார் ஆவார்கள். அவர்களது அருளுரைகள் நிரந்தினிது சொல்லியவாகும். மொழிக்கு மொழி தித்திக்கும் மூவர் மொழியும் திருவாசகமும் அவர்களது சிந்தனையில் ஆழப் பதிந்தவை. பக்தி இலக்கியமாக, சமயநூலாக அமைந்த அவற்றின் செழுமையை உணர்ந்து, அவற்றில் செறிந்துள்ள செம்மணித் திரள்களை வெளிப்படுத்திய சிந்தனையாளர் அடிகளார்.

திருநெறிய தமிழ் என்பதைச் சொல்லோவியமாக வழங்கியவர். துதிசெயும் நாயன்மார் தூய சொல்மலர் மொழிகளை நுகர்ந்த புனிதர்; வாழ்வோடியைந்த சமயநெறி வளத்தை நுகர்ந்து தேனாய், இன்னமிழ்தமாய்த் தித்திக்கத் தந்த நூல் 'சமய சிந்தனை'. இது பல தொகுப்பாக வெளிவருவது தமிழ் கூறும் நல்லுலகிற்குக் கிடைத்த கருவூலம் எனலாம். ஆழ்கடலில் முத்தெடுப்பது போலத் திருமுறைப் பாடல்களில் அமைந்துள்ள திட்ப நுட்பம் செறிந்த சொற்களை எடுத்து வழங்கும் பாங்கு அடிகளாருக்கே கைவந்த கலை.

தவத்திரு அடிகளாருடன் தொடர்ந்து பழகும் வாய்ப்புக் கிடைத்தது. ஆதீனப் பொறுப்பேற்ற காலந் தொட்டுப் பேரூராதீனத் தொடர்பை வளப்படுத்தி நட்புக்கு இலக்கணமாகத் திகழ்ந்தார்கள். தமிழகத்திலும் கடலுக் கப்பாலும் நடமாடிய நற்றமிழ் முனிவர், செல்லும் இடங்களுக்கெல்லாம் அழைப்பார். ஒருங்கிருந்து உகந்து பேசிச் சமயநெறியின் பிணைப்பை வளப்படுத்திய குணக்குன்று. தமிழகத்தின் ஊர்கள் தோறும் திருவீதி வலம் வருதல், அன்பர்களுடன் கலந்துரையாடல் ஆகியவற்றில் பங்கு கொள்வோம். பல்லக்குப் பவனியை ஒதுக்கிவிட்டுத் தெருத் தெருவாக வலம் வந்து, தெருமுனைக் கூட்டங்கள் நடத்தினோம். கூட்டங்கள் நடந்த போதெல்லாம் அடிகளார் நட்பு உடனிருந்து பிரித்தறிய முடியா பெருங்கிழமை நட்பாய் மலர்ந்தது. சமுதாயச் சிக்கல், சமய நெறிச் சிக்கல் ஏற்படும் போதெல்லாம் அழைத்துக் கருத்துக்களைக் கேட்கும் ஆரா அன்பினர். அரசியல் சூழல்களால் ஏற்படும் கலக்க நிலையில் முடிவும் இடையூறும் முற்றியாங்கெய்தும் படுபயனும் இதுவென உசாவிய மாண்பினர். இது எமது வாழ்வில் ஏற்பட்ட மறக்க முடியாத சிறு குறிப்புக்கள். அவர்களது எளிமையும் இனிய பண்பும் நெஞ்சை விட்டு என்றும் நீங்காது இருப்பது, கடவுளியல் தண்ணளியுடையது; வேறுபாடுகளைக் கடந்தது; விழுமிய ஒருமைப்பாடுடையது. தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்தல் எனும் கோட்பாடு திருநீலகண்டர் காட்டும் நெறி என வழங்கியுள்ளார்.

சமயசிந்தனை நூலுக்குள் நுழைவோம். ஆளுடைய பிள்ளையார் பாடலில் "நீதியால் தொழுக" என்பது ஒருதொடர். இன்றைய வழிபாட்டின் முரண்பாடுகளை எடுத்துக்காட்டி, சடங்குகளாலும் பகட்டுகளாலும் தொழும் சூழல் மாறவேண்டும். சமயவாழ்க்கை அகநிறை அன்பால், அருளார்ந்த சீலத்தால், நீதியால் என்று முழுமை பெறுகிறதோ அன்றே தொழுதல் நலம் பெறுகிறது என ஆய்ந்து உணர்த்தப்படுகிறது.

''நீதியால் தொழுமின் உம்மேல் வினை நில்லாவே'' என்பது மறைமொழி. சமயச்சார்பற்ற ஒழுக்க நெறி, ஊற்றுக்கள் இல்லாத ஓடைபோன்றது என்பதைப் பொழுதுபோக்கிப் புறந்திரிவார் உணர வேண்டும் என்பார் அடிகளார்.

கடவுளியலைப்பற்றி உணர வேண்டும். 'உணணற்கரிய நஞ்சையுண்டு ஒரு தோழம் தேவர் விண்ணிற்பொலிய அமுதளித்த விடையூர் விமலனை" நுண்ணறிவால் வழிபாடுசெய்ய வேண்டும் என விளக்கும் பாங்கு மெய்மை உணர்வடையத் துணையாகிறது.


வழிபாடு சடங்கல்ல; அது உயிரியல் முறை; உயிர்வளர்ந்து வாழுதலே வழிபாட்டின் பயன். நாள்தோறும் வழிபடவேண்டும். வழிபடவேண்டிய முறையைப் பயின்று அறிந்து கொள்ளுதல் வேண்டும் என்பதைப் "பரவு முறை பயிலும் பந்தர்சொன்மாலையை" உணர்த்தும் பாங்கு திருநெறிய தமிழுக்கு வளந் தருவதாகிறது.

திருநாவுக்கரசர் அருளிய திருமுறைகள் ஓதத்தக்கன; உணரத்தக்கன; சமுதாய நலம் சார்ந்தன; அவர் வழியில் நடந்தால் சமுதாயம் வளரும் எனத் தமது ஆழ்ந்த உள்ளக்கிடக்கையை அடிகளார் வெளிப்படுத்தியுள்ளார். "மெய்மையாம்" என்னும் தேவாரத்திற்குத் தரும் விளக்கம்: ஆன்மதரிசனம், சிவதரிசனம், ஆன்மசுத்தி பெறலாம். கடவுள் உயிர்ப்பாய் புறம் போந்து புக்கு ஆட்டுவிக்கிறான். அந்நிலை சிவபோதம். பின் பக்குவம் வந்துழி அவனுக்குள்ளேயே ஒளிந்து கொள்கிறான். அந்நிலையே சிவயோகம் என்று விளக்கியுள்ளமை உணரலாம். இங்கர்சால், பிளேட்டோ, சாக்ரடீஸ் போன்ற அயல் நாட்டறிஞர்களைச் சுட்டிக்காட்டி அவரினும் சமுதாய சீர்திருத்தத்திற்குத் தகைசான்றவர் அப்பர் அடிகள் என்கிறார்.

அப்பரடிகள் அருளியவை ஆகமநெறி. மெய்யியல் கூறுபாடுகள், புலன்பொறி மயக்கச் சூழல்கள் பற்றிய செய்திகளை விளக்குவதுடன் வழிபாட்டு நெறியில் ஏற்றத் தாழ்வுகளைச் சாடும்பான்மை, வெளிப்படுத்தும் சொல்திறன் ஆழம் உடையது; ஆக்கம் தருவது.

''மனிதர்காள் இங்குவம் மொன்று சொல்லுகேன்'' என்னும் அறைகூவலின் பின்புலம் அன்றும் வாழ்வியல் நெறியைக் கேட்போர் அருகியிருந்தனரோ என்னும் ஐயத்திற்குரிய நோக்கில் விளக்குகிறார். அடிகளார் கூறும் சிந்தனைவளம் போற்றத்தக்கது.

அடிகளார் இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த சமயத் தலைவர். திருக்கோயில்களும் வழிபாட்டு நெறியும் மனித சமுதாயத்தை உயர்த்துவதற்கு அமைந்தன. அப்பணியைத் திசைதிருப்பிய காலச் சூழல்களையும் அயல் மரபுகளையும் சாடி மென்மையுணர்வுடன் வெளிப்படுத்தி இளைய தலைமுறையினர்க்கு வழிகாட்டிய ஞானச் செல்வர். வாழையடி வாழையாக வரும் திருமரபு, செந்தமிழ் மரபு செழிக்க முயல்வோம்.



தவத்திரு

குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

# முன்னுரை

## தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

இருபதாம் நூற்றாண்டின் அப்பரடிகள், காவி உடுத்திய கார்ல் மார்க்ஸ், அருள்நெறித் தந்தை என அன்னவராலும் அன்பொழுகப் பாராட்டப்பெற்ற குருமகாசந்நிதானம் ஆற்றிய அற்புதச் சொற்பொழிவுகள் சமய இலக்கியம் என்று முகிழ்த்திருப்பது மிகுந்த மனநிறைவைத் தருகின்றது. சமயம் மனிதனைச் சமைப்பதற்கே; பண்படுத்துவதற்கே! சமயம் வாழ்க்கை நெறி; வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் நெறி, சமய உலகம் சமூகத்தை விட்டு விலகிச் சென்ற பொழுதுதான் – ஏழாம் நூற்றாண்டில் நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தப் பெருமானாலும், நாவுக்கரசர் பெருமானாலும் ஏற்றப்பட்ட ஞானவேள்வி சுடர்விட்டுப் பிரகாசித்து, பன்னிரண்டாம் நூற்றாண்டில் சேக்கிழார் காலத்தில் உச்சக் கட்டமாகப் பொங்கிப் பரிணமித்தது, இடையில் சமய உலகில் ஒரு தொய்வு ஏற்பட்டது.

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சமய உலகில் மிகப்பெரிய மறுமலர்ச்சியை உருவாக்கியவர்கள் அருள்நெறித் தந்தை குருமகாசந்நிதானம் தவத்திரு அடிகளார் பெருமான். இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உலகம் முழுவதும் “அடிகளார்” என்ற சொல் அவர்கள் ஒருவரைத்தான் குறித்தது. சமயத்தையும் சமுதாயத்தையும் ஒருங்கிணைக்கின்ற உறவுப் பாலமாக விளங்கினார்கள். சமூகத்தை விட்டுச் சமயம் விலகிச் சென்ற பொழுது சடங்கும் ஆரவாரத் தன்மையும் நிறைந்திருந்த சமயத்தை மக்களுக்குரியதாக மாற்றிக் காட்டினார்கள்.

சமய இலக்கியத்தை ஓதி உணர்வதோடு அல்லாமல் வாழ்வில் நடைமுறைப்படுத்தினார்கள். நாட்குறிப்பேடு போல் சமய இலக்கிய நாட்குறிப்பேடு ஒன்று பேணப்பட்டது. அதில் அறுபத்து மூன்று நாயன்மார் ஒவ்வொருவரின் நாள் குறிக்கப்பட்டிருக்கும், உதாரணமாக, கண்ணப்பநாயனாரின் நாளன்று கண்ணொளி வழங்க உதவி செய்தல் என்ற திட்டங்கள் செயற்படுத்தப்படும்.

நாயன்மார்களின் அடிச்சுவட்டில் அவர்களின் தொண்டு வாழ்வியல் மீண்டும் நடைமுறைக்குக் கொணரத் திட்டம் செயற்பட்டது. சமயத்தை இயக்கமாக, வாழ்வியலாக மாற்றுகின்ற முயற்சியில் சிறப்பாகச் செயற் படுத்தினார்கள். உழவாரக் கருவி ஏந்தித் தமிழகம் முழுவதும் உலாவந்தார்கள். உழவாரக் கருவி திருக்கோயில்களில் முளைத்த முட்புதர்களை மட்டும் களையவில்லை, சமுதாயத்தில் முளைத்திருந்த முட்புதர்களையும் களைந்தது.

சமய இலக்கியம் வெறும் தத்துவ நூல் அல்ல, அனுதினமும் சமயத்தை வாழ்வில் நடைமுறைப் படுத்திய அனுபவசாரம், 'அப்பர் விருந்து' என்ற நூலில் முழங்காலுக்கு மேல் வேட்டி உடுத்தி, உருத்திராக்க மாலை அணிந்த பழைமையான தோற்றத்திற்குரிய அப்பர் பெருமானின் புதுமைச் சிந்தனையைப் புதிய கோணத்தில் சமய உலகுக்கு அடையாளம் காட்டியுள்ளார்கள்! என்னே புதுமை. இதோ, பானைச் சோற்றுக்குப் பதச் சோறுபோல், அப்பர் பெருமான் பாடலுக்குப் புதிய விளக்கம்.

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே!"

என்று அப்பர் பெருமான் பாடுகின்றார்! இந்தப் பாடலுக்குப் புதிய விளக்கம்! குற்றமற்ற வீணையின் இனிய கீதத்தை எல்லோரும் கேட்டு மகிழலாம். தேவையான நிபந்தனை நம் காதுகளுக்குக் கேட்கின்ற சக்தி வேண்டும், மாலைக் காலத்து அழகிய நிலவை எல்லோரும் பார்த்து மகிழலாம். அதற்குத் தேவையான நிபந்தனை நம் பார்வையில் குறைபாடு இல்லாது இருக்க வேண்டும். வீசுகின்ற தென்றல் காற்று எல்லோருக்கும் பொதுவானது, ஆண்டவனுக்கும் பொதுவானது; அடிமைக்கும் பொதுவானது, அதைப் போலவே பரம்பொருள் எல்லோருக்கும் பொதுவானது, வல்லார்க்கும் மாட்டார்க்கும் வாய்ப்பளிக்கும் வாய்ப்பாக, எல்லோருக்கும் பொதுமைப் பொருளாக இறையின்பத்தை அடையாளம் காட்டினார்.

அருள்நெறித் தந்தையின் சமயம் பற்றிய புதிய சிந்தனை எந்நாளும் எண்ணி இன்புறத்தக்கது. உடல் வாழ்வு தன்னலம் பற்றியது; உயிர் வாழ்வு பொது நலம் பற்றியது. சராசரி மனித வாழ்க்கையை உயிர்ப்புள்ளதாக்கி முழுமையாக்கும் உணர்வின் தேவையிலே தோன்றியது சமயம், இதனை நிறுவிய மகாசந்நிதானம் "பொதுவில் ஆடுபவன் நிழலின் பொதுமையைக் காணாமல், தீமையை அகற்றாமல் நன்மையைச் சாதிக்காமல், துன்பத்தைத் துடைக்காமல், இன்பத்தைப் படைக்காமல் கிழடுதட்டிச் செயலிழந்து போன நமது சமய அமைப்புகள் குறையுடைய நடைமுறைகளே!" என்று சமய உலகை மாபெரும் புனருத்தாரணம் செய்ய வேண்டும் என்று அறைகூவுகின்றார்கள். சமயம் மனிதத்தை மேம்படுத்த! சமயம் மனித வாழ்வுக்கே! சமயம் மனிதத்தைப் புனிதமாக்க என்ற உயர்நிலையில் சமய உலகப் பாதைக்கு நம்மை அழைத்துச் செல்லும் அருள்நெறித் தந்தையின் பாதையில் பயணம் செய்ய, சமய இலக்கியம் வாழும் மானிடத்திற்கு அற்புத வழிகாட்டியாகும்.

இவ் அரிய நூல் ஆக்கத்தைத் தமிழ் கூறும் நல்லுலகத்திற்குத் தொகுப்பு நூலாக வெளியிடும் மணிவாசகர் பதிப்பக ச. மெய்யப்பன் அவர்களுக்கு நெஞ்சு நிறை நன்றிகள்! இந்நூல் தொகுப்புக்குப் பெரிதும் பாடுபட்ட நம் ஆதீனக் கவிஞர் மரு. பரமகுரு, பலவகைகளில் இந்நூல் தொகுக்கும் களத்தில் கடமையாற்றிய இராமசாமி தமிழ்க் கல்லூரி முன்னாள் முதல்வர் தெ. முருகசாமி ஆகியோருக்குப் பெரும் நன்றியறிதலுடன் கூடிய பாராட்டுக்கள்! இந்நூலுக்கு அரியதொரு அணிந்துரை வழங்கியுள்ள பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றி.

முன்னைப் பழமைக்கும் பழமையாய், பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் விளங்கும் நமது சமய உலகப் பாதையில் பயணம் செய்ய 'சமய இலக்கியம்' வழிகாட்டும் என்று நம்புகின்றோம். 'சமய இலக்கியம்' இயக்கமாக மாறினால் அதுவே சமய உலகத்தின் மாபெரும் புனருத்தாரணம் ஆகும். 'சமய இலக்கியம்' புதிய மறுமலர்ச்சிக்கு வழிகாட்டும் என்று இறையருளைப் போற்றிப் பிரார்த்திப்போம்!

# உள்ளுறை


| | | | |
|---|---|---|---|
| 1. | திருஞானசம்பந்தர் | ....... | 17 |
| 2. | கடவுளியல் விளக்கும் காட்சி! | ....... | 26 |
| 3. | உயிருக்குரிய உணவு | ....... | 29 |
| 4. | பத்திமை யென்னும் வித்து | ....... | 33 |
| 5. | புனித நெறி | ....... | 36 |
| 6. | அறிவொடு வழிபடுக | ....... | 38 |
| 7. | பக்திமையின் பண்பாடு | ....... | 40 |
| 8. | தலைமையின் தகுதிப்பாடு | ....... | 47 |
| 9. | கூசாதுரைக்கும் சொல் | ....... | 50 |
| 10. | ஈதலுக்குக் காலம் ஏது? | ....... | 53 |
| 11. | துறவு எது? | ....... | 56 |
| 12. | முரண்பாடா? | ....... | 60 |
| 13. | தெய்வம் பேணார் தெளிவு | ....... | 63 |
| 14. | குளிர் சார ற் கொடுங்குன்றம் | ....... | 67 |
| 15. | கடமையா? கடவுளா? | ....... | 70 |
| 16. | உண்மைத் தொண்டர் | ....... | 73 |
| 17. | நீதியால் தொழுக | ....... | 76 |
| 18. | எது திருத்தலம்? | ....... | 80 |
| 19. | அடியார்க்கு நல்லவையே | ....... | 83 |
| 20. | பொய்யிலா அடிமை | ....... | 86 |
| 21. | உய்யும் நெறி | ....... | 90 |
| 22. | வீடு பெறும் வழி | ....... | 94 |
| 23. | வெற்றி | ....... | 98 |
| 24. | பரவும் முறையைப் பயில்க! | ....... | 101 |
| 25. | அப்பர் | ....... | 104 |
| 26. | அப்பர் விருந்து | ....... | 141 |
| 27. | தொண்டின் நெறி சிறக்க | ....... | 263 |
| 28. | அப்பரடிகளின் போராட்டங்கள் | ....... | 268 |
| 29. | அப்பரடிகள் காட்டிய நெறி | ....... | 281 |
| 30. | ஜீவா பார்வையில் அப்பரும் மணிவாசகரும் | ....... | 283 |
| 31. | திருநாவுக்கரசர் | ....... | 291 |
| 32. | சமய இலக்கியங்கள் | ....... | 327 |
| 33. | சமய இலக்கியங்களில் அறநெறி | ....... | 342 |
| 34. | சுந்தரர் | ....... | 350 |
| 35. | திருமுறையின் ஆற்றல் | ....... | 396 |

1

# திருஞானசம்பந்தர்

செந்தமிழையும் சிவநெறியையும் போற்றி வளர்த்த பெருமை தமிழகத்திற்கு உண்டு. நாயன்மார்கள், பழுத்த மனத்து அடியார்கள் எனப் பலர், காலந்தோறும் தோன்றி, திருநெறிய தமிழைப் போற்றி வளர்த்து வந்துள்ளனர். தமிழினத்தை ஆண்ட மூவேந்தர்களும் தண்ணார் தமிழைப் பேணுவதிலும் சிவநெறியைப் பேணுவதிலும் முன்னின்றனர். செந்தமிழையும் சிவநெறியையும் பேணி வளர்த்த நாயன் மார்களில் முதலில் நின்றவர் திருஞானசம்பந்தர்.

திருஞானசம்பந்தர் தம்மைத் "தமிழ்ஞான சம்பந்தர்" என்று சொல்லிக் கொள்வதில் மகிழ்ந்தார். திருஞான சம்பந்தரைப் போற்றவந்த நம்பிராரூரர், "நாளும் இன்னிசை யால் தமிழ் பரப்பும் ஞான சம்பந்தர்" என்று போற்றினார். சீகாழியில் சிவபாத இருதயர் - பகவதியார் ஆகிய இருவரும் தவம் செய்து பெற்ற குழந்தை திருஞானசம்பந்தர். இன்று நம் நாட்டில் "ஆஸ்திக்கு ஒரு பிள்ளை" என்பர். அங்ஙனம் நினைத்த பெற்றோர்களுக்குப் பிறந்த குழந்தையல்ல திருஞானசம்பந்தர். செந்தமிழையும் சிவநெறியையும் பேணி வளர்க்கக் குழந்தை வேண்டும் என்று தவம் செய்து பெற்ற குழந்தை. இளமையிலேயே அமுது உமையம்மையால்

சிவஞானம் கலந்த பாலூட்டப் பெற்ற குழந்தை. மனம் வாக்குகளுக்கு அப்பாற்பட்ட கடவுளைக் கைவிரலால் சுட்டிக்காட்டி,

*தோடுடைய செவியன் விடையேறி ஓர்*
*தூவெண் மதிசூடிக்*
*காடுடைய சுடலைப் பொடிபூசி என்*
*உள்ளம் கவர்கள்வன்*
*ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்*
*தேத்த அருள் செய்த*
*பீடுடைய பிர மாபுரம் மேவிய*
*பெம்மான் இவனன்றே!*

என்று அம்மையப்பனை அடையாளம் காட்டிய குழந்தை. உமையம்மையார் ஊட்டிய பால் பைந்தமிழ்க் கவிதைகளாக மலர்ந்தன. தமிழ்நாடு முழுதும் உள்ள திருக்கோயில்கள் தோறும் சென்று, ஞானத் தமிழ்ப் பாடல்களைப் பாடிப் பரவினார் திருஞானசம்பந்தர்.

திருஞானசம்பந்தரின் தமிழ், வெல்லும் தமிழ், நீரையும் நெருப்பையும் வென்று விளங்கிய தமிழ். சாம்பலை, பூம்பாவையாக்கியது திருஞானசம்பந்தருடைய அருந்தமிழ். திருஞானசம்பந்தர் தாம் அருளிச்செய்த பதிகங்கள்தோறும் கடைக்காப்புப் பாட்டில் பதிகம் ஓதுதலின் பயன் என்ன என்பதையும் அருளிச்செய்கின்றார். ஏன்? திருஞான சம்பந்தரின் தமிழ், அவர் தன்னிச்சையாகத் தந்ததல்ல. திருஞானசம்பந்தர் தம்மைத் "தன்னிகரில்லாச் சண்பையர் கோன்" என்று கூறிக்கொள்வதைக் காண்க. திருஞான சம்பந்தரிடம் தன்முனைப்பு இருந்ததில்லை. சிவமாம் தன்மை பொருந்தியவர். ஆதலால் பதிகம் பயன் கூறியது ஏற்புடையதேயாம்.

மனிதன் சிந்திக்கும் இயல்பினன். சிந்தனை சிறந்தால் மனிதன் வளர்வான். மனிதனின் சிந்தனை அன்புடையதாக

அமையவேண்டும். மானுடத்தின் உயிர்நிலையே அன்புதான்! "அன்பின் வழியது உயிர்நிலை" என்றார் திருவள்ளுவர். "அன்பே சிவம்" என்றார் திருமூலர். அடியார்கள் என்றும் எப்பொழுதும் அன்புறு சிந்தையுடையவர்களாக இருப்பர்; சிவனை, எம்பெருமானைக் கூடும் அன்பினில் கும்பிடு தலையே குறிக்கோளாகக் கொண்டிருப்பர். இன்ப வடிவினராகித் திருநல்லூர்ப் பெருமணத்தில் எழுந்தருளி யுள்ள இறைவனின் திருவடிகளைப் போற்றுவர். சிவன் - அவனை அன்புறு சிந்தையில் கொண்டு விளங்கும் நாயன்மார்கள் தொண்டு செய்வதையே குறிக்கோளாகக் கொள்வர். எத்தொண்டு செய்தாலும் சிவனுக்கெனவே செய்வர்; பயன் பற்றிக் கருதார்; அதனால் துன்புறுதல் இலர். துன்பம் என்பதே ஒன்றை விரும்பும் பொழுதுதான் வருகிறது. விருப்பத்தைக் கடந்த நிலையில் சிவ சிந்தனையுடன் தொண்டு செய்தால் துன்பம் வருவதில்லை.

இன்று அன்புறு சிந்தையர் அருகிவரும் நிலை. எங்கும் எதிலும் வாணிகப் போக்கு! ஒரு காலத்தில் தொண்டாக விளங்கிய பணிகள் பலவும் இன்று தொழிலாக மாறி விட்டன! இன்று திருக்கோயில்களில் திருமடங்களில் கூடத் தொழிலாளர்களே உள்ளனர்; தொண்டர்கள் இல்லை. அதனால், தொழிலுலகத்திற்குரிய பணி நிறுத்தம் முதலியன திருக்கோயில்களுக்கும் வந்துவிட்டன; தொண்டு செய்தல் மனிதராய்ப் பிறந்தோர் ஒவ்வொருவரின் கடமையாகும். தொண்டர்கள் பெருகி வளர்ந்து தொண்டு சிறந்தால்தான் இந்த வையகம் துன்பத்தினின்றும் நீங்கும்; இன்புறும்; மானுடமும் வழிவழி சிறந்து விளங்கி வாழ இயலும். இத்தகு தொண்டு அருகிப் போனமையால் இன்று எங்கும் துன்பம்! காவல் நிலையங்களும் சிறைச்சாலைகளும் ஆட்சி அதிகாரச் சட்டங்களும் பல்கிப் பெருகி வளர்வதன் காரணம் தொண்டு செய்வோர் குறைந்து போனதல்ல. இல்லாது போனதுதான்; ஓரோவழி "தொண்டின் புனைவில்" விளம்பர வாணிகம்

நடைபெறுகிறது. அது விளம்பரமே ஒழியத் தொண்டு அல்ல. தொண்டு என்பது அன்புறு சிந்தையுடன் அர்ப்பணிப்பு உணர்வுடன் செய்யப்பெறுவது. அதனால்தான் அப்பரடிகள் "என் கடன் பணி செய்து கிடப்பதே!" என்றார். கிடப்பது அஃறிணையேயாம். அஃறிணைப் பொருள்கள் - குறிப்பாகத் தாவரங்கள், மானுடத்தின் வாழ்வுக்கு நிறைய உதவி செய்யும். ஆனால் எந்தப் பயனையும் திரும்ப எதிர்பார்க்கா. மழைக்கும் மரங்களுக்கும் நன்றி சொல்வார் யார்? ஆதலால் பயன் கருதாது தொண்டு செய்வோர் துன்புறமாட்டார்கள் என்பது திருஞானசம்பந்தரின் திருவுள்ளம்.

அன்பில் விளைவது நலம். நலம் வேண்டுவோர் அன்புடையராதலன்றி வேறு வழியில்லை. அன்புக்கு நலம் என்று கூறும் வழக்கும் உண்டு. மானிட வாழ்க்கையின் இயக்கத்திற்குப் பொறுப்புள்ள உறுப்பு சித்தம். ஆம்! சித்தத்தின் தொழில் சிந்தனை. சிந்தனையில் அன்பு இருப்பின் சொல், செயல் அனைத்தும் நலமாக அமையும். இன்று அன்புறு சிந்தையினரையும் காணோம். நலந்தரும் சிந்தையினரையும் காணோம். நாள்தோறும் அன்புக்கும் நலத்திற்கும் மாறுபட்ட நிகழ்வுகளே மிகுதியாக நடக்கின்றன. இவற்றைத் தவிர்க்கவும் மக்கள் சமுதாயம் அன்புறு சிந்தையுடையதாகவும் நலந்தரு சிந்தையுடையதாகவும் விளங்கத் திருஞானசம்பந்தர் அருளிச்செய்த திருமுறைப் பாடல்கள் உதவும்.

இன்று எங்கும் பேச்சு! எப்போதும் பேச்சு! சொற்களை வழங்குவதற்கு யாரும் தயங்குவதில்லை. ஆனால் எல்லோரும் 'சொல்' தான் சொல்கிறார்கள். சொல்லப்பெறும் சொற்களுக்கு இலக்கணம் வேண்டாமா? பயன் வேண்டாமா? பயனற்ற சொற்களைக் கூறுவானைப் 'பதடி' என்றது திருக்குறள். இளங்கோவடிகள் "வறு மொழியாளர்" என்று திட்டினார். திருஞானசம்பந்தர் பயனற்ற சொற்களை நகைச்சுவை ததும்ப, "முட்டைக் கட்டுரை மொழிவ

கேளாதே!" என்றருளிச் செய்கின்றார். தேர்வில் மதிப்பெண் வாங்காமையை "முட்டை வாங்கினான்" என்று பரிகாசம் செய்வதுண்டு. அதுபோல் எந்தவிதமான பயனும் இல்லாததுடன் அறியாமையும் கலந்த சொற்களை "முட்டைக் கட்டுரை" என்று குறிப்பிடுகின்றார். முட்டைக் கட்டுரையை, பயனற்ற சொற்களைக் கேட்கவும் கூடாது; சொல்லவும் கூடாது என்பது திருஞானசம்பந்தர் வழங்கும் அறிவுரை.

தமிழர் பண்பாடுகளில் தலையாயது கொடுத்தல். 'இல்லை' என்று கூறி இரத்தலுக்கும் முன்பே கொடுத்தல், அறம். இந்த அறப்பண்பைத் திருஞானசம்பந்தர் பல இடங்களில் பாராட்டியுள்ளார். தஞ்சை மாவட்டத்தில் திருக்கண்டியூருக்கு அருகில் திருவேதிகுடி என்று ஒரு சிற்றூர் உள்ளது. அங்குள்ள திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள பெருமானை, வேதங்கள் வழிபட்டமையால் அவ்வூர் திருவேதிகுடி என்று பெயர் பெற்றது. இத் திருத்தலம் வளமாக அமைந்திருந்தது என்பதனை "வளமாரும் வயல் வேதிகுடியே!" என்றருளியமையால் அறியலாம். இன்று இந்தத் திருக்கோயில் முறையாகப் பேணப்படவில்லை. இத் திருத்தலத்தில் அன்று வாழ்ந்த மனிதர்கள் மிகவும் கொடைப் பண்பு உடையவர்களாக விளங்கியிருக்கிறார்கள்.

விலை ஏற்றம் என்பது இப்போது மட்டும் உள்ள சிக்கல் அல்ல. திருஞானசம்பந்தர் காலத்திலும் விலை ஏற்றம் இருந்திருக்கிறது. விலை ஏற்றத்தைப் பற்றித் திருவேதி குடியில் அருளிச் செய்த பதிகத்தில் திருஞானசம்பந்தர் குறிப்பிடு கின்றார். "வையம் விலை மாறிடினும்" என்பது திருஞான சம்பந்தர் வாக்கு. விலை மாறுதல் என்பது விலை ஏற்றத்தையே குறிக்கிறது. இந்த மண்ணகத்தில் விலை மாறினாலும் கெடாத பண்பாடுடைய திருவேதிகுடி மாந்தர்கள் புலவர்களுக்கு வழங்குவர். அங்ஙனம் வழங்கும்

பொழுது இனிய முகத்துடன் இன்சொற்கள் கூறி வழங்கும் பண்பாடுடையவர்கள்.

..........

*வையம் விலை மாறிடினும் ஏறுபுகழ்*
*மிக்கழிவி லாத வகையார்*
*வெய்ய மொழி தண்புலவ ருக்குரை செ*
*யாத அவர் வேதிகுடியே!*

என்பது திருஞானசம்பந்தர் வாக்கு.

புகழ் பெறுதல் அரிது. பெற்ற புகழைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும் என்ற அறிவுரை உணர்தலுக்குரியது. கொடையளிப்பதில் காலந்தாழ்த்தக்கூடாது. இன்று, நாளை என்று கூறக்கூடாது என்பது தமிழர் மரபு. சங்க காலத்தில் மூவன் என்பவன் பெருந்தலைச்சாத்தனார் என்ற புலவருக்குப் பரிசில் தரக் காலம் நீட்டித்தமையின் காரணமாகப் புலவர் பரிசிலே பெறாமல் போய்விட்டார் என்று வரலாறு உண்டு. திருஞானசம்பந்தர் சீகாழி நகர மக்கள்,

*இரந்தோர்க்கு எந்நாளும் காலம் பகராதார்*

என்று அருளிச் செய்கின்றார். இன்று தமிழரிடையே இந்தப் பண்பு அருகிக்கொண்டு வருகிறது.

திருஞானசம்பந்தர், மனித நேயம் மிக்குடையவர். இறைவழிபாட்டிற்கு ஈடாக மனித நேயம், உயிரிரக்கம் ஆகிய பண்புகளைக் கொண்டிருந்தார். திருமருகல் திருத்தலம் தஞ்சை மாவட்டத்தில் உள்ளது. இத்திருத்தலத்திற்கு வழி பாட்டிற்கு எழுந்தருளிய திருஞானசம்பந்தர் ஊரின் எல்லைக்குள் நுழையும்பொழுதே அவர் தம் காதில் ஒரு பெண்ணின் அழுகுரல் கேட்கிறது. உடன் திருஞானசம்பந்தர் திருக்கோயிலுக்குச் செல்லாமல் அழுகுரல் கேட்ட திசையில் செல்கிறார். ஆங்கு ஒரு மடத்தின் திண்ணையில் ஓர்

இளைஞன் பிணமாகக் கிடக்கின்றான்! அந்தப் பிணத்தின் அருகில் ஒரு கன்னிப் பெண் அழுது புலம்பிக் கொண்டிருக்கிறாள். அந்தக் கன்னிப்பெண் அந்த இளைஞனைக் காதலித்து மணம் செய்து கொள்ள விரும்பிப் பெற்றோர்களுக்குத் தெரியாமல் இருவரும் உடன் போக்கில் வந்துவிட்டனர். திருமருகல் திருக்கோயிலில் திருமணம் செய்து கொள்வதாகத் திட்டம். திருமருகல் வரும்பொழுது நள்ளிரவாகிவிட்டது. திருக்கோயில் நடை சார்த்தப் பெற்றுவிட்டதால் அந்த மடத்தில் தங்கி மறுநாள் காலையில் திருமணம் செய்து கொள்ளலாம் என்ற முடிவில் படுத்துத் தூங்கினர். அவர்களுடைய தீயூழ், அந்த இளைஞனை ஒரு நச்சுப் பாம்பு கடித்துவிட்டது. நஞ்சினால் அந்த இளைஞன் அவளின் காதலன் இறந்துபோனான். பொழுது புலர்ந்தது. பெண், தான் மணக்க இருந்த காதலன் இறந்துகிடப்பதைக் கண்டு ஒன்றும் செய்வதறியாமல் அழுகிறாள். உடன் போக்கில் வந்த காதலர்களேயாயினும் தனியே படுத்துறங்கினாலும் உடலுறவு ஏற்படவில்லை. அவ்வளவு ஒழுக்கக் கோட்பாடுகள் அன்றைய தமிழரிடம் இருந்தன. "பாம்புகூட அவனைத் தீண்டும் பேறு பெற்றது. ஆனால் அவள் அவனைத் தீண்டி அழமுடியவில்லை" என்று சேக்கிழார் கூறுகிறார்.

'வாளரவு தீண்டவும் தான் தீண்ட கில்லாள்' என்பது சேக்கிழார் வாக்கு. முறையாகத் திருமணம் ஆகாத நிலையில் ஓர் ஆணின் உடலைப் பெண்ணோ, பெண்ணின் உடலை ஆணோ தொடக்கூடாது என்ற மரபு, தமிழ் மரபு; தமிழர் பண்பாடு. கன்னிப் பெண்ணின் துன்பமறிந்த திருஞானசம்பந்தர் நெஞ்சு நெக்குருகித் திருமருகல் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவனை வேண்டி,

*சடையாய் எனுமால் சரண் நீ எனுமால்*
*விடையாய் எனுமால் வெருவா விழுமால்*

*மடையார் குவளை மலரும் மருகல்*
*உடையாய் தருமோ இவள்உள் மெலிவே*

என்று வேண்டிப் பதிகம் அருளிச்செய்கின்றார். இப்பதிகத்தினை ஓதுவார் எவர் நெஞ்சும் உருகும். இப்பதிகத்தில் பெருமான் அமரர்கள் சாவாமல் காக்க நஞ்சுண்டு கறைக் கண்ட முடையானாக - நீலகண்டனாக ஆய வரலாற்றை நினைவுகூர்ந்து 'நீலகண்டமுடையாய்' என்று பாடுகின்றார். ஆலகால நஞ்சையே யுண்டு கண்டத்தில் அடக்கிய நீ, இந்த இளைஞன் சாவதற்குக் காரணமாய நச்சுப் பாம்பின் நஞ்சைக் கெடுத்து அருளுதல் எளிதே என்ற பொருள் தோன்றப் பாடுகின்றார். திருஞானசம்பந்தர் தம் வயமாக்கிக் கொண்ட திருவருள் ஞானம், அந்த இளைஞனை உயிர்ப்பித்தது. இளைஞன் எழுந்தான். இளங்காதலர்கள் முகங்களில் புன்முறுவலைக் கண்டு மகிழ்ந்து திருமணம் செய்துவைத்தார் திருஞானசம்பந்தர். அதற்குப் பிறகுதான் திருமருகல் திருக்கோயிலுக்குச் சென்றார். அன்று நடந்த இந்த வரலாற்றின் மாட்சிமையுடன் இன்றையப் புன்மையை எண்ணி வேதனைப்பட வேண்டியிருக்கிறது. திருஞான சம்பந்தரின் அருட்பாடல்கள்தான் நமக்கு வழிகாட்ட வேண்டும்.

திருஞானசம்பந்தரின் தமிழ் அருமையானது; எளிமையானது; ஆயினும் பொருள் பொதித்தது. அவர் திருச்சிராப்பள்ளியில் அருளிச்செய்த பதிகத்தில் இறைவனை,

*நன்றுடை யானைத் தீயதில் லானை*

என்று தொடங்கிப் பாடிப் பரவுகின்றார். 'நன்றுடையானை' என்றாலே போதும். 'தீயதில்லானை' என்று எதிர்மறையாகவும் அருளிச் செய்தது ஏன்? இந்த அடிகள் ஆழ்ந்த சிந்தனைக்குரியன. நம்மில் பலர் 'நன்று' என்று கருதிக் கொண்டிருப்பது உண்மையில் நன்றன்று. நன்று என்றால்

தீமைக் கலப்பில்லாத நன்றாக இருத்தல் வேண்டும். ஒருபொழுது நன்றாகவும் ஒருபொழுது தீதாகவும் இருப்பது நன்றாகாது. அதுபோலவே, ஒருவருக்கு நன்றாகவும் பிறிதொருவருக்குத் தீதாகவும் அமைவது நன்றாகாது. இன்று நம்முடைய வாழ்க்கையில் இத்தகைய தீமையும் கலந்த நன்மைகளையே நன்மை என்றும் நன்று என்றும் கருதிக் கொண்டிருக்கின்றோம். இறைவன் அப்படியல்ல. அவன் தீமையின் கலப்பே இல்லாத பூரண நன்மை என்பதை விளக்க, “நன்றுடையான், தீயதில்லான்” என்று கூறி விளக்கி அருளுகின்றார். நாம் அனைவரும் தீமைக் கலப்பில்லாத நன்மையை அடைய வேண்டுமாயின் “நன்றுடையானாக, தீயதில்லானாக”த் திருச்சிராப்பள்ளியில் எழுந்தருளியுள்ள இறைவனை வணங்கவேண்டும். திருஞானசம்பந்தர் அருளிய பாடல்களைப் பாடும் வல்லமை பெற்று வாழ்வாங்கு வாழ்தல் வேண்டும்.

தமிழில் திருஞானசம்பந்தர் அருளிச்செய்த திரு முறைகள் ‘முத்தமிழ் நான்மறை’ என்றும் “பண்பொலி நான்மறை” என்றும் போற்றத்தகுவன. நாளும் இன்னிசை யால் தமிழ் வளர்த்தவர் திருஞானசம்பந்தர்; தமிழ் நெறியை வளர்த்தவர். திருஞானசம்பந்தர் அருளிச்செய்த திருநெறிய தமிழ் வளர்க! வையகம் துயர் தீர்க!

**2**

# கடவுளியல் விளக்கும் காட்சி!

இறை, எல்லா உயிர்களையும் விட மிக்குயர்ந்து மேம்பட்டது. ஆற்றலாலல்ல; ஆட்பாலவர்க் கருளும் திறத்தால் மேம்பட்டது. கடவுளைக் காணாமல் போகலாம். கடவுளைப் பற்றி விவாதங்கள் நிகழலாம். ஆனால், கடவுளியலைப்பற்றி விவாதங்கள் நிகழ முடியாது. **இன்று எங்கும் கடவுளியலைப் பற்றிப் பேச்சில்லை; கடவுளைப் பற்றிய பேச்சே அடிபடுகிறது.** கடவுளியலைப் போற்றிப் புகழ்ந்து பேணுவாரைக் காணோம். கடவுளைப் பூசிப்பார் பலருண்டு. தமது இயலை விரும்பாமல் தம்மை விரும்புவாரைக் கடவுளும் நாடார். கடவுளியல் தண்ணளியுடையது; வேறுபாடுகளைக் கடந்தது; விழுமிய ஒருமைப்பாடுடையது; நன்றென்றே வாழ்த்தப் பெறுவது.

எம்பெருமான் "நீலகண்டம்" என்றும் அழைக்கப் படுகின்றார். அந் நீலகண்டத்தை வண்ணத்திற் காட்ட முடியாது போனாலும், வடிவத்தில் காட்டும் தோற்றமே ஒவ்வொரு மனிதரின் கண்டத்திலும் உருளும் உருளை என்று கூறுவர். எம்பெருமான் கண்டம் உயிர்களைக் காத்தது; இன்பத்தை வழங்கியது. ஆனால், அதன் நினைவாக விளங்கும் கண்டத்தின் உருளைகள் வாழ்விக்கப் பயன்

படுவதில்லை; வண்ணமில்லையல்லவா? வண்ணமில்லாத வடிவமும் வடிவமோ? பயன் தருமோ? பயணமே பயன்படுதல் நோக்கமுடையது. கருங்கடலினின்று தண்ணீர் ஆவியாக மாறிப் பயணம் செய்கிறது. பயணத்தால் அந்நீரும் தூய்மை பெறுகிறது. நிலவுலகத்தையும் தூய்மை செய்கிறது. வானின்று மண்ணுக்குப் பயணம் செய்கிறான் இறைவன். ஏன்? மனிதர்களை ஆட்கொண்டு அருளுதற் காகவே! மனிதனின் வாழ்க்கைப் பயணம் என்ன ஆகிறது? அவன் பயணத்தின் பயன் கருதுவதில்லை; பயன் தரத்தக்க பணி களை மேற்கொள்ளுவதில்லை. அவனுடைய வாழ்க்கைப் பயணம் ஆகிவிடுகிறது. மனித வாழ்க்கையின் பயன் கடவுள் நலம் அறிய பயணம் பெறுதலேயாகும். இந்த ஒப்பற்ற கடவுள் நலம் – இன்ப அன்பு நலம் எளிதில் கிடைக்குமா? பூசனை யால் மட்டும் பெற முடியுமா? தன்னல மறுப்பால் பெறலாம்; பிறர் நலம் பேணும் பெருந்தவத்தால் பெறலாம். இதுவே கடவுளியலின் உயிர் நாடி. இந்தச் சமய உயிரியலின் தன்மை இன்றைய சமய வாழ்க்கையில் இல்லை. அதனாலேயே சமய நெறிகளைப் பற்றிச் சர்ச்சைகள் எழுந்துள்ளன.

பதவிக்குப் பலர் போட்டி போடுவர்; ஆனால், பதவிக்குரிய தகுதி பேணார்; தக்க பணிகளைச் செய்யார். இது மனித உலகத்தின் இயல்பு மட்டுமல்ல; அமரர் உலகமும் அப்படியே! தக்கன் வேள்வியில் அமரர்கள் தலைமை வேண்டிப் பெற்றனர். ஆனால், அலை கடலில் ஆலகால நஞ்சு எழுந்தபொழுது அலறி ஓடினர். எந்தை ஈசன் உண்ணற்கரிய அந்த நஞ்சை உண்டான்; அமரர்களைக் காப்பாற்றினான். நஞ்சினைத் தொடர்ந்து அமுதம் வந்தது. அமரர்கள் நாவில் எச்சில் ஊறியது. நஞ்சைக் கண்டு நடுங்கி ஓடிய அமரர்கள் அமுதுண்ண நாவாசை காட்டினர். இறைவன், அமுதுண்ண விரும்பாது அமரர்களுக்கு அதனை வழங்கினான். அமரர்களைப் போகத்தில் ஆழ்த்தினான்; வாழ்வித்தான். இஃதொரு புராண வரலாறு. ஆனாலும்

தத்துவச் செறிவுடையது. நஞ்சனைய துன்பத்தை ஏற்றுக் கொள்; தொழிற்படு; மற்றவர்களை வாழவைத்திடு; அதுவே வாழ்க்கையின் தவம் என்பது இந்த வரலாறு புகட்டும் வாழ்க்கைத் தத்துவம். இந்தத் தத்துவம் உண்மையிற் செயற்படும் பொழுதே கடவுளியல் காட்சியளிக்கும். அதனாலேயே பெருமான் விடைக் கொடி உயர்த்தியிருக் கிறான். கொடி என்பது கொள்கையின் சின்னம். இறைவன் விடைக்கொடி உயர்த்தியிருப்பதன் நோக்கம் என்ன? பொருள் என்ன? உயிர்வர்க்கத்திலேயே கடுமையாக உழைக்கும் இயல்பினது விடையாகிய எருது. உழைத்த பயனையெல்லாம் மனித உலகம் உண்டு மகிழ வழங்கி விடுகிறது அது. ஆனால், அந்த எருதோ வெறும் வைக்கோலைத் தின்று உயிர் வாழ்கிறது. அங்ஙனம், உயிர்வாழ்தலும் கூட மீண்டும் உழைத்து உலகத்தை வாழ்விக்கவேதான்! இதுவே இறையியற் கொள்கை; கடவுளியல்காட்டும் தவம். இத்தகு வாழ்க்கை முறையை மேற்கொண்ட அனைவரும் சமயநெறியாளர்கள். அவர்கள் நெஞ்சில் இறைவன் கோயில் கொள்வான். அதுவே, விடையூர்தல் தத்துவத்தின் விளக்கம். இத்தகு வாழ்க்கைமுறை என்றைக்குத் தனி மனித வாழ்க்கையிலும் சமூக வாழ்க்கையிலும் மேம்பட்டு விளங்குகிறதோ அன்றே கடவுளியல் உலகத்தவரால் ஒப்புக்கொள்ளப் பெறும். வேறு எந்தவகையாலும் முறையாலும் உலகம் ஒப்புக்கொள்ளாது. இதனைத் திருஞான சம்பந்தர்.

> ***உண்ணற் கரிய நஞ்சையுண் டொருதோழந் தேவர்***
> ***விண்ணிற் பொலிய அமுதமளித்த விடைசேர்***
> ***கொடியண்ணல்***

என்று பாடிப் பரவிப் போற்றுகின்றார்.

# 3

## உயிருக்குரிய உணவு!

ஊண் உண்ணப்படுவது. உண்பது ஒரு சடங்கல்ல. அஃதொரு கடமையல்ல; அஃதொரு பணி. பயன் கருதிச் செய்ய வேண்டிய பணி. பயன் அடையத்தக்க வகையில் செய்ய வேண்டிய பணி. ஊண் பலவகை. வாழ்க்கையில் ஒவ்வொரு பகுதிக்கும் ஊண் தேவை. இன்று உடல் இயக்கத்திற்கு உண்ணப்பெறும் உணவையே உணவு என்று பலர் கருதுகிறார்கள். மற்றைய உணவுகளைப்பற்றி அவர்களுக்குத் தெரியாது. ஏன்? உணவையுங்கூடப் பலர், உடலியக்கத்திற்கு என்று கருதி உண்பதில்லை. சுவைத்து உண்பது நன்று. ஆனாலும் சுவைக்காக உண்ணக்கூடாது. உடல் இயக்கத்திற்கும், பணிக்கும் தேவைப்படும் ஆற்றலுக்கும் ஏற்றவாறு உணவு முறை அமையவேண்டும். உண்ணும் உணவு, உடலுக்கு வலிமையே. அஃது இயங்கும் ஆற்றலை வழங்குவதாக இருக்க வேண்டும். உடல் இயக்கத்திற்காகவே உண்கின்றோம். உண்பதற்காக அல்ல. உடல் இயக்கத்திற்கு உண்ணப்பெறும் உணவைப்போலவே அறிவியக்கத்திற்கு உண்ணவேண்டிய உணவு உண்டு. அதனை வள்ளுவம், 'செவியுணவு' என்று கூறும். வாய் உணவிற் சுவைகாண்பது போலவே செவியாலும் சுவை

கண்டு உண்ணவேண்டும். அறிவுடைய வாழ்க்கை வாழ வேண்டும். செவிச் சுவை உணரார், வாய்ச்சுவை உணவு உண்பது வறிதே பயனற்றுப்போகிறது.

*செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்*
*அவியினும் வாழினு மென்?*

என்பார் திருவள்ளுவர்; செவியால் சுவைத்து வாழாத வாழ்க்கை அறியாமையின் காரணமாக அவலத்தில் ஆழ்ந்து அழியும்.

உயிரியல் வாழ்க்கைக்கு உடல் கருவியேயாகும். உடற் கருவியற்ற உயிரியல் வாழ்க்கை பயன்படுதலும் இல்லை; பயன் கொள்ளுதலும் இல்லை. உயிரின் வளத்தை மையமாகக் கொண்டே உடலியல் வாழ்க்கை அமைகிறது; உலகியல் வாழ்க்கை உருவாகிறது - உயிர் செழித்து வளரவும் உணவு தேவை. அது எந்த உணவு? உடல் வளர்ச்சிக்குரிய உணவு ஒருபொழுது உண்பதில்லை, அடிக்கடி உண்ண வேண்டும். பசியை முற்றாக மாற்ற உணவால் முடியாது. பசித்து உண்பவர்க்கு மீண்டும் பசி வரும் என்பர் மாதவச் சிவஞான முனிவர். ஆதலால் உடல் இயக்கத்திற்குப் பயன்படும் உணவு, சிற்றுணவு என்று கருதப்பெறும். இந்த உணவுக்குப் பசியை ஆற்றுகின்ற ஆற்றல் உண்டு. ஆனால் பசியை மாற்றுகின்ற ஆற்றலில்லை. செவி வழியாக உண்ணப்படும் உணவோ நல்லுணவு. அது நாட்டில் எளிதாகக் கிடைப்பதில்லை. அப்படியே கிடைத்தாலும் செவிச்சுவை முற்றாகக் கைகூடுவதில்லை. அது மேலும் மேலும் பசியை எழுப்புகிறது. செவியுணவு, உயிர் நிறைவைப் பெறத் துணை செய்யும். ஆனாலும், அதுவே நிறைவாகாது. வாயுணவும் செவியுணவும் உடல் வாயில்களான வாய் வழியாகவும் செவி வழியாகவும் உண்ணப்பெறுவன; உயிர், நிறைவை நோக்கி நடத்தும் பயணத்திற்குத் துணை செய்வன. ஆனால் உயிருக்கு நேரடியான உணவாகா இவை. உயிருக்கு

உணவு திருவருளே. உயிருக்கு உற்ற குறையை நீக்க, நிறைநலம் வழங்கத் திருவருளாகிய உணவாலேயே இயலும். குறைவிலா நிறைவாழ்வான நல்வாழ்க்கையை-துன்பத் தொடர்பில்லாத நிறை இன்ப வாழ்க்கையை நேரடியாக வழங்கும் ஆற்றல் வாயுணவுக்கும் செவியுணவுக்கும் இல்லை. ஆயினும், இவை இரண்டும் இன்றி உயிர் நிறை நலம் பெறமுடியாது. இவையிரண்டின் துணையுடன் உலாவரும்போதே உயிர் தனக்குரிய உணவை உண்ண முயலவேண்டும்.

உயிர்களுக்குரிய உணவு எது? இறைவன் திருவருளை நினைந்து தமிழ் செய்தலே உயிருண்ணுதற்குரிய உணவாகும். இறைவனை நினைத்தலின்மூலம் உண்ணும் உணவு, நிறைஉயிர் உண்ணத்தக்க உணவாகும். இந்த உணவு குறைந்தால் துன்பம் வந்துவிடாது; மிகுதியானாலும் துன்பம் வராது. இறையை – இறைவன் திருவருளை உன்னி உன்னி எண்ணுதலை உணவு என்றே திருஞானசம்பந்தர் குறிப்பிடு கின்றார். உடலுக்கிடும் உணவை உடல் ஏற்று, முறையாகச் செரித்து உணவின் பயன்கொள்ளும்பொழுது, உடல் பிணியினின்றும் விடுதலை பெறுகிறது; பயன் கொள்கிறது. உயிர் இறைவன் திருவருளை நினைந்து தவம் செய்தலின் மூலம் அத் திருவருளின் தன்மைகளைத் தனக்கு உரிமையாக்கிக்கொள்ளும்பொழுது, பிறவிப்பிணியிலிருந்து விடுதலை பெறுகிறது; வாழ்க்கையின் பயனைக் கொள்கிறது.

உயிர் உண்ணும் உணவெனத் தக்கது இறைவன் திருவருள் என்றால், அந்த உயிர் திருவருளில் ஒன்றித் திளைத்து உறுபயன் கொள்ளவேண்டும் என்பது தெளிவா கிறது. மேலும், உணவினால் உடலே பயன்பெறுகிறது; உணவிற்குப் பயனில்லை. உணவிற்காக யாரும் உண்பதில்லை. அதுபோலத் திருவருளால் உயிரே வளம் பெறுகிறது; உயிருக்கே ஆக்கம். உயிருக்கு உண்ணப்படும் திருவருள் நிறைவைத் தரவல்லது. உயிருக்கு நிறைவைத் தரத்தக்க

வகையில் பத்திமை செய்தலே பாங்கான முறை. இதனைத் திருஞானசம்பந்தர்.

இறையூண் துகளோ(டு) இடுக்கண்எய்தி
இழிப்பாய வாழ்க்கை ஒழியத்தவம்
நிறையூண் நெறிகருதி நின்றீரெல்லாம்
நீள்கழ லேநாளும் நினைமின் சென்னிப்
பிறைசூழ் அலங்கல் இலங்கு கொன்றை
பிணையும் பெருமான் பிரியாத நீர்த்
துறைசூழ் கடந்தைத் தடங்கோயில் சேர்
தூங்கானை மாடந் தொழுமின்களே.

என்று பாடுகின்றார்.

4

# பத்திமை யென்னும் வித்து

பத்திமை வாழ்க்கை எளிய ஒன்றன்று. பத்திமை வாழ்க்கையை இன்று மேற்கொண்டொழுகுவோர் பலகோடி யாக இருக்கலாம். ஆனாலும் அவர்களில் எத்துணை பேர் பத்திமைப் புனலில் தோய்ந்து எழுந்தவர்கள்? எத்துணை பேர் பத்திமைப் புனலில் தோய்ந்து எழும் தகுதி யுடையவர்கள்? என்பதை எண்ணிப் பார்த்தால் ஒருசிலர் கூடத் தேறமாட்டார்கள். சின்னங்கள், சடங்குகள் ஆகியவை கருவிகளே தவிர ஞானமாகா. சடங்குகள் தொடக்க நிலையேயன்றி முடிவு நிலையாகா. இன்று நம்மிடையில் நிலவும் சமய வாழ்க்கை, சடங்கு நெறிச் சமய வாழ்க்கையே தவிர சீலம் நிறைந்த சமய வாழ்க்கையல்ல.

நம்முடைய உடலியல் வாழ்க்கை விந்தையானது. உடலியற் பொறிகள் - புலன்கள் வேற்றுமை இயல்புடையன. ஆயினும், நோக்கத்தால், பயன்படும் திறத்தால் ஒற்றுமை யுடையன. உடலியற் பொறிகள் - புலன்கள் தோற்றத்தால் ஒருமைப்பாடுடையன. இந்த உடலியல் வாழ்க்கை பழக்கத்தால் பண்படுத்தப் பெறவேண்டிய ஒன்றாகும்; வழக்கத்தால் வளப்படுத்தப் பெறவேண்டிய ஒன்றாகும்.

கு.கி.VII.3.

இந்த உலகியலில் எங்கும் எதிலும் சுவையூற்றுக்கள் மலிந்துள்ளன. அச் சுவையினை மோப்பம் பிடித்துச் செல்லும் இயல்பின புலன்கள். புலன்கள் தாம் மட்டும் செல்வனவல்ல; தம்மையுடைய தலைவனையும் இழுத்துச் செல்லும் தகையன. அங்ஙனம் புலன்கள் இழுக்கும் பொழுது, இழுப்புழிச் செல்லாமல், செல்லும் நெறி தேர்ந்து அவ் வழியில் மட்டும் புலன்களைச் செலுத்தித் தாமும் செல்ல வேண்டியது மனித வாழ்க்கையின் கடமை. வேளாண் மைக்குக் களை, பகை. நல்ல பத்திமை வாழ்க்கைக்கு உயிர்ப் பகையாகிய காமம் முதலிய அறுவகைப் பகைகளையும் வெற்றி பெறுதல் வேண்டும். அடுத்து, மாறாத இன்ப அன்பை அடையத் தடையாக இருப்பவை குணங்களேயாம். அரச குணம் என்று சொல்லக்கூடிய உயர்ந்த குணம், அறிவு விருப்பமுடையது; ஆள்வினை யாற்றல் உடையது; விரைந்து தொழிற்படும் இயல்பினது. ஆயினும் இக் குணம், உலகியல் இன்பத்திற்கு ஏற்புடையதானாலும் நிறை இன்பத்திற்குத் தடையே. விண்ணின்றிழியும் துளிகள் பலப்பலவாகச் சிதறும் பொழுது உரிய பயனை அவை தருவதில்லை. அந்த நீர்த்துளிகள் ஒரு காலாக, ஓர் ஆறாக, ஓர் ஏரியாக உருமாறும் பொழுதே உண்மையில் அவை உலகுக்குப் பயன்படுகின்றன. அதுபோலவே, சிந்திக்கும் திறனுடைய சித்தம், சிந்தனையை ஒரு நெறியின்பாற் படுத்திக் கொள்ளத் தவறினால் சிந்தனைத் திறன் பயனற்றுப் போகிறது. அதனாலன்றோ, "ஒரு நெறிய மனம் வைத்து உயர்ஞான சம்பந்தன்" என்றார் ஆளுடைப் பிள்ளையார். "ஒன்றியிருந்து நினைமின்கள் உந்தமக்கு ஊனம் இல்லை" என்றார் அப்பரடிகள். 'ஒருமையுடன் நினது திரு மலரடி நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேண்டும்" என்றார் வள்ளலார். ஆதலால், நுண்ணுடலின் செயலுறுப்புக்களாகிய மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் நான்கு கருவிகளையும் ஒருநெறிப்படுத்தவேண்டும். இவையனைத்தும் செய்தாலும் இதயத்தின் ஆழத்தில் பேய்ச்சுரையை

விதையாகப் போட்டுவிட்டால் என்ன பயன்? இதயத்தின் ஆழத்தில் பத்திமை யென்னும் விதையை விதைக்க வேண்டும். இங்ஙனம் பத்திமையாகிய வித்தை விதைத்த பிறகு, உலகப் பொது நூற் புலவர் திருவள்ளுவர் கூறிய செம்பொருளை – மெய்ப்பொருளை நிலையான உணர்வில் நினைவு கூர்தல் வேண்டும். தனக்குவமையில்லாத் தலை வனாக – சிவனெனும் நாமம் தனக்கேயுடைய செம்மேனி யம்மானாக விளங்கும் சிவபரம் பொருளை நீள நினைந்தும் – நினையாமல் நினைந்தும் வாழ்த்தி வணங்குதல் வேண்டும். இங்ஙனம் வாழக் கற்றுக் கொண்டால் இறைவன் வாழ்க் கையை மட்டும் அளிப்பதில்லை. சிவபெருமான் தனக் குரியனவாகப் பெற்றிருக்கும் நலன்களையெல்லாம் உயிர்க்கு வழங்கி வாழ்வித்தருளுவான். சீவன், சிவமாதலிற் சிறந்த பேறு வேறு எது? இந்த இனிய பேற்றினையுடைய பொறிகள் வழி செல்லற்க; பொறிகளை அரன் பணியில் ஆற்றுப்படுத்துக! மூவாத் துன்பத்திற்கு ஆளாக்கும் முக் குணத்தை எண் குணத்தான் தாளை வணங்குதலில் ஈடுபடுத்துக! சித்தத்தைச் சிவன்பால் வைத்து ஒன்றுக! ஒரு நெறிய மனம் பெறுக! நீள நினைக்கும் நெஞ்சில் பத்திமை என்ற விதையை விதைத்திடுக! இன்ப அன்பை எளிதில் பெறலாம்.

*பத்திப்பேர் வித்திட்டே பரந்தஐம் புலன்கள்வாய்ப்*
*பாலேபோகா மேகாவாப் பகையறும் வகைநினையா*
*முத்திக்கே விக்கத்தே முடிக்குமுக் குணங்கள்வாய்*
*மூடாவூடா நாலந்தக் கரணமு மொருநெறியாய்ச்*
*சித்திக்கே யுய்த்திட்டுத் திகழ்ந்தமெய்ப் பரம்பொருள்*
*சேர்வார்தாமே தானாகச் செயுமவன் உறையுமிடங்*
*கத்திட்டோர் சட்டங்கங் கலந்திலங்கு நற்பொருள்*
*காலேயோவா தார்மேவுங் கழுமல வளநகரே.*

– திருஞானசம்பந்தர்

# 5

# புனித நெறி

வாழ்க்கை, அறிவுடையது; பொருளுடையது; இலட்சியங்களுடையது; நெறிகளுடையது என்பது திருஞான சம்பந்தர் கொள்கை. வாழ்க்கை, துன்பத் தொடக்குண்டு கிடக்கிறது. இந்தத் துன்பத் தொடக்கிலிருந்து விலகி, இன்பியல் வாழ்க்கைக்கு மனிதன் செல்ல வேண்டும். அங்ஙனம் துன்பத்தை இன்பமாக மாற்றியமைக்க வேண்டுமானால், தெளிவான அறிவு தேவை. தெளிவான அறிவும் உணர்வும் இன்றி எந்த முயற்சியெடுத்தாலும் கைகூடாது; பயனும் கிடைக்காது.

மனிதனுக்கு அறியாமையை விடக் கொடிய பகை வேறு இல்லை. மயக்கத்தைவிடத் தீமை தருவது வேறு எதுவும் இல்லை. அதுவும், அறியாமையை அறிவு என்று கருதி - நம்பி மயங்கும் மயக்கம் மிகவும் கொடுமையானது. இன்றைய சமுதாயத்தில் அறியாமையை அறிவு என்று நம்பி தன் முனைப்புடன் தலை தடுமாறித் திரிபவர்கள் பலர். அவர்களின் பேதைமை இரங்கத் தக்கது. எது போல? நல்ல வெட்டவெளியில் வெய்யில் எரிக்கும்பொழுது தொலைவில் நின்று பார்த்தால் தண்ணீர் அலைகள் பாய்ந்து செல்வது போல் ஒரு காட்சி தெரியும். அதனை இலக்கிய நூலார்,

"பேய்த் தேர்" என்று கூறுவர். இந்தப் பேய்த் தேரை, தண்ணீர் வேட்கையெடுத்த ஒருவன் தண்ணீர் வெள்ளம் என்று கருதிக் குடத்தினை எடுத்துக்கொண்டு தண்ணீர் எடுக்கச் சென்றால், அது எவ்வளவு பைத்தியக்காரத்தனமானது! பரிகாசத்துக் குரியது! அவனுக்குத் தண்ணீரும் கிடைக்காது; தாகமும் தணியாது. மேலும், பயன்படா முயற்சியில் ஈடுபட்டதால் ஆற்றலும் வீணாக்கப்பட்டது. அதுபோல் வாழ்வை வளர்க்காத – வாழ்வுக்குப் பயன் தராத கொள்கைவழிச் செல்லுதல் பயனற்றது.

கடவுள் உண்டு என்று நம்பி, கடவுளை எங்கும் எல்லாவற்றிலும் கண்டு, இதயக் கனிவுடன் ஏத்தி வழிபடுதல் உய்யும் நெறி, இன்ப நெறி. அதனை விடுத்து அறிவு என்ற பெயரில் அறியாமை பேசிச் சழக்குகளுக்குக் காரணமாகிய சாத்திரம் பேசி மயங்கி மையல் வலைப்படுதல் பாழ் நெறியாம். இப் போக்கு இம்மையிலும் துன்பம் தரும். ஆதலால், வல்லாளர்க்கு வல்லாளனாக விளங்கி வாழ் வளிக்கும் இறைவனை – திருப்பருப்பதத்தில் எழுந்தருளி யுள்ள பரமனைப் போற்றி வழிபடுவதே புனித நெறி.

*சடங்கொண்ட சாத்திரத்தார் சாக்கியர் சமண்குண்டர்*
*மடங்கொண்ட விரும்பியராய் மயங்கியோர்*
*பேய்த்தேர்ப்பின்*
*குடங்கொண்டு நீர்க்குச்செல்வார் போதுமின்*
*குஞ்சரத்தின்*
*படங்கொண்ட போர்வையினான் பருப்பதம் பரவுதுமே.*

– திருஞானசம்பந்தர்

# 6

# அறிவொடு வழிபடுக!

சமய வாழ்க்கை என்பது எளியதொன்றன்று. கடவுளை நம்புதலும் அவனை வழிபடுதலும் இன்று ஒரு சடங்காகவே மாறிவிட்டது. வழிபாட்டுக்கும் அறிவுக்கும் இன்றைக்குப் போதிய தொடர்பில்லை. ஏதோ, அது உயிர்ப்பற்ற சடங்காக இருக்கிறதே தவிர அறிவும் இல்லை; அனுபவமும் இல்லை. விஞ்ஞானியாக இருந்து விஞ்ஞான சோதனைகள் செய்வதை இன்று அருமையானதென்று பலர் கருதுகிறார்கள். அறிவின் பாற்பட்டதாகவும் நம்புகிறார்கள். ஆனால், சமயத்தை - கடவுள் வழிபாட்டை அங்ஙனம் கருதுவதில்லை. கடவுள் வழிபாட்டுக்குச் சார்பாக நிற்பவர்களும்கூடப் பெரும் பாலோர் பொய்ம்மையே செய்கிறார்கள்.

விஞ்ஞான ஆராய்ச்சி என்பது பெரும்பாலும் அறிவின்மையத்திலேயே செய்யப்படுவதால் அது உடனடி யாகப் பயனையும் தருகிறது. கடவுள் வழிபாடு அங்ஙனம் செய்யப் பெறாமையால் பலருக்கு அந்த அறிவில் ஐயம் ஏற்படுகிறது. நமது முன்னோர், கடவுளை வழிபடுவதற்கும் கூடப் பேரறிவு வேண்டும் என்று நம்பினர். ஏன்? நமது முன்னோர்கள் கடவுள் வழிபாட்டில் ஈடுபட்டு வழிகாட்டியவர்கள் சிந்தனையில் வல்லவர்களாக இருந்து

'சித்தர்கள்' என்று பெயர் பெற்றிருந்தனர், அறிவில் மேம்பட்டது பேரறிவு. பேரறிவைச் சமயமரபு 'ஞானம்' என்று குறிப்பிடும். ஞானம் என்றால் குறைவற்ற பேரறிவு என்பதும், துன்பத்தினைத் தாராது, இன்பத்தினை வழங்கும் நல்லறிவு என்பதும் சமயநூற் கருத்து. கடவுள் வழிபாட்டில் ஈடுபடுகிறவர்கள், கற்றல் கேட்டலுடைய பெரியோராகத் திகழ்ந்தார்கள் என்று ஆளுடைய பிள்ளை பேசும். ஏன்? மாணிக்கவாசகர் சமய வாழ்க்கையின் ஆய்வினை, நானார்? என் உள்ளம் ஆர்? ஞானங்கள் ஆர்? என்று முறைப்படுத்தி ஆராயத் தூண்டுகிறார்... இங்ஙனம், அறிவாராய்ந்த ஞானிகளே கடவுளைத் தொழுதனர். ஞானத்தால் தொழுவார் என்று அருள்நூல் பேசும்.

கடவுளைத் தொழுதல் என்பது இன்று வழக்கத்தின் பாற்பட்டதாகி விட்டது. வெற்றுச் சடங்காகவே உலவுகிறது. ஆனால், உண்மையில் கடவுளைத் தொழுது பயன்பெற வேண்டுமானால் நுண்ணறிவு வேண்டுமென்று திருஞான சம்பந்தர் எடுத்தோதுகின்றார். நுண்ணறிவு கொண்டால் தான் சிவஞானம் பெருகும். அப்போதுதான் இறைவனின் திருவருட் காட்சி கிடைக்கும். அது வரையில் உருவ வழிபாடு தான் நிகழும். கடவுள் வழிபாடு நிகழாது. சட்டியே சுடும்; கறி வேகாது! இதனைத் திருஞான சம்பந்தர்,

தோலுடை யான்வண்ணப் போர்வையினான்
சுண்ண வெண்ணீறு துதைந்திலங்கு
நூலுடை யானிமை யோர்பெருமான்
நுண்ணறி வால்வழி பாடுசெய்யுங்
காலுடை யான்கரி தாயகண்டன்
காதலிக் கப்படுங் காட்டுப்பள்ளி
மேலுடை யானிமை யாதமுக்கண்
மின்னிடை யாளொடும் வேண்டினானே,

என்னும் திருப்பாடலினால் உணர்த்துகின்றார்.

# 7

# பத்திமையின் பண்பாடு

பத்திமை கொண்ட வாழ்க்கை தூயது. இனிமை நலம் மிக்கது. சழக்குகளைக் கடந்தது; வழக்குகளை வென்றது; மகவெனப் பல்லுயிரும் ஒக்கப் பார்க்கும் தண்ணளி யுடையது. உண்மையான பத்திமை, வாழ்க்கையில் விளங்கி னால் சிக்கல்கள் இல்லை; பகையில்லை. போரில்லை; சட்டங்களின் தொகுதியில்லை. மார்க்ஸ் மாமுனிவர் கண்ட அரசற்றசமுதாயம் அமையும். பண்பட்ட நிலத்தில் விளைச்சல் பெருகி உயர்வதைப் போலப் பத்திமைச் சமுதாயத்தில் அன்பு பெருகும்; அருள் வளரும்; எங்கும் சமநிலை காட்சியளிக்கும்.

இத்தகு பத்திமை வாழ்வு உள்ளத்தொடுபட்டது. பயிருக்கு வளம் தரும் மண்ணின் உரச்சத்து எளிதில் கண்ணுக்குப் புலனாவதில்லை. வளரும் பயிரின் வளம் கொண்டே மண்ணின் வளம் காண்கின்றோம். பத்திமை வாழ்வு உடலொடு தொடர்புடையதல்ல. உடல் ஒரு வாயிலே! ஆனால் முழுக்க முழுக்க உள்ளத்தோடு தொடர்புடையது. நெஞ்சில் பத்தி தழைத்தால் பாரினில் பண்பு தழைக்கும், இன்றோ, பத்திமை வாழ்க்கையின் வடிவங்களே கொலுவீற்றிருக்கின்றன; உணர்வில்லை. சடங்கு

ஆசாரங்களே மிஞ்சி வளர்கின்றன. சத்தான – சாரமான வாழ்க்கையைக் காணோம். ஐயகோ! இதனினும் கொடுமை ஒன்றுண்டோ? திருஞானசம்பந்தர் பத்திமை வாழ்க்கையின் இலக்கணத்தை வடித்துத் தந்துள்ளார்.

இன்று, எங்கும் பரபரப்பு! எதிலும் பரபரப்பு! ஆண்டவன் முன்னே அருச்சனை நாமங்களைச் சொல்வதில் கூடப் பரபரப்பு! காரணம் பத்திமை நோக்கமல்ல. அருச்சனை தொழிலாகிவிட்டது. குறைந்த நேரத்தில் நிறையச் சம்பாதிக்க வேண்டுமென்றால், அருச்சனையைச் சாங்கோ பாங்கமாகச் செய்ய முடியுமா? அப்படியே அருச்சகர் செய்தாலும் செய்துகொள்ள வந்தவர் அடுத்த பேருந்தில் போகப் பரபரத்துக் கொண்டிருப்பார். ஒரு செய்தியினைக் கேட்டுக் கலந்து, ஆராய்ந்து பேசி முடிவெடுக்க மனமில்லை. பரபரப்பு! 'இப்படிச் சொன்னாயாமே!' அப்படிச் சொன்னா யாமே! என்ற ஆவேச உணர்ச்சி! தகுதியை வளர்த்துக் கொள்ளக் கொள்ள உரிமை கிடைக்கும் என்ற நம்பிக்கை யில்லை. உரிமை யுணர்வில் ஒரே பரபரப்பு! தகுதியைப் பற்றி மனம் எண்ணிக்கூடப் பார்க்க மறுக்கின்றது. செய்தித் தாள்களில் சில வரிகளே வருகின்றன. பேசியவர் கருத்துக்கும் செய்திக்கும் உறவிருக்காது; உடன்பாடு இருக்காது. செய்தி தந்தவர் முன்னே குறைத்துப் பின்னே சிதைத்துத் தமது தொழிலுக்குரிய பாணியில் செய்தி தந்திருப்பார். "கள் குடிக்கலாம் என்று வள்ளுவர் கூறியதாக அடிகளார் கூறுகிறார்." இந்தப் பொய்ச் செய்தியில் அரசியல் ஆர்வமுடையவர்களுக்கு – அடிகளாரைப் பிடிக்காதவர் களுக்கு உடனே பரபரப்பு! உண்மை கேட்டெழுத நேரமில்லை. ஆனால் ஊரெல்லாம் பேசநேரமுண்டு. நிறை தவறிய அரசியலுக்குப் பரபரப்பு! இப்படி எத்தனையோ வகையில் பரபப்பு! பரபரப்புடையவர் பண்பாளராக முடியாது. பத்திமைக்கும் பரபரப்புக்கும் எப்பொழுதும் பகை. "பரபரக்க வேண்டா பலகாலும் சொன்னேன்," என்றார்

தருமை ஞானசம்பந்தர். திருஞான சம்பந்தரும் பரபரப்பு கூடாதென்றார். பரபரப்பு கூடாதென்பது மட்டுமல்ல; பரபரப்புக்குரிய சூடு ஆற வேண்டுமென்கிறார். ஆக்கின சூட்டில் அள்ளித்தின்ன முடியாதல்லவா? சூடு ஆற வைத்துத்தானே சுவைத்து உண்டு மகிழவேண்டும். உள்ளமும் ஆற அமர நிதானித்து எண்ணிப்பழகும் இயல்பைப் பெற்றால் பகை வராது; பண்பு வளரும்; பக்தியும் வளரும்; பரமனும் அருள்வான்.

பத்திமைக்குக் கள்ளத்தனம் முரணானது. வஞ்சனை ஒழிந்தால்தான் வாழ்வியல் சிறக்கும். உதடு சிரிக்கிறது. ஆனால் உள்ளமோ பற்றி எரிகிறது. முகம் முகமன் உணர்வைக் காட்டுகிறது. ஆனால் முதுகுக்குப் பின்புறம் பேசப்படுகின்றது. பாராட்ட மனமில்லை. ஆனாலும், பாராட்டு நிகழ்கிறது. பிறர் ஏற்றங்கண்டு மகிழ மனமில்லை. ஏதேதோ பேசப்படுகிறது. கருத்து மாறுதல்கள் அல்லது தவறுதல்கள் திருத்தப்படக் கூடியவையே! ஆனால் அவை வஞ்சகத்திற்கு வித்திடக் கூடாது. இன்று எங்கும் வஞ்சகமே ஆட்சி செலுத்துகிறது. கள்ளம் ஒழிந்தால்தான் கங்காளரைக் காணலாம்.

சொல், உலகத்தில் மிக உயர்ந்தது. சொல்லே மனித உலகத்தை இணைக்கும் பாலம். சொல்லே உணர்வைத் தூண்டுகிறது; உள்ளன்பை வளர்க்கிறது; உறுதியைத் தருகிறது; உறவினை வளர்க்கிறது. பரமனையும் தருவது. இத்தகு ஆற்றலுடைய சொல்லை இன்றைக்கு நெறி தெரிந்து பயன்படுத்துவோர் எத்தனை பேர்? சொல்லில் நிகழ்ந்த சோர்வுதானே கோவலனின் உயிர் கொண்டது. நீதியிற் சிறந்த நெடுஞ்செழியனை அநீதிக்கு ஆளாக்கியது. சொற்களைத் தேர்ந்து பயன்படுத்த வேண்டும். அப்படிப் பயன்படுத்தத் தவறினாலும் குறைந்த அளவு சொற்களின் வெப்பத்தை யாவது குறைக்க வேண்டும். சிலர் சொற்கள் செவியைச் சுடுகின்றன; நெஞ்சைச் சுடுகின்றன; உணர்வைச் சுட்டு

அழிக்கின்றன. இங்ஙனம் சுடும் சொற்கள் பேசுவோர், நிறையத் திருநீறு பூசியவர்களிலும் இருக்கிறார்கள். அக்கு மணிகளை எண்ணில் பலவாக அணிந்தவர்களிலும் இருக்கிறார்கள். சொற்கள் ஈரக் கசிவுடையனவாக இருக்கவேண்டும் என்பது பற்றியே போலும், சொல்லை வழங்கும் நாவினைச் சுற்றி ஈரப்பசை எப்பொழுதும் இருக்க உமிழ் நீர்ச் சுரப்பிகளை இயற்கை அமைத்தது. சிலர் வாய் வறண்டும் கிடக்கும். பாவம்! ஐயன்மீர்! வெப்பம் நிறைந்த சொற்களைக் கூறாதீர்! அவை ஒரு பொழுதும் பயன் தரா. பத்திமைக்கு வெப்பச் சொற்கள் பகை. பரமன் ஏறெடுத்தும் பாரான். பத்திமை வாழ்வு வேண்டுமாயின் சுடும் சொற்களைத் தவிர்மின்!

மனித வாழ்க்கை செயல்களை உயிர்ப்பாகக் கொண்டது. செயற்படா உலகம் செம்மை நெறியிற் சேர முடியாது. தொழிற்படா உலகம் தொல்லை இரும்பிறவிக் கடலைக் கடத்தல் முடியாது. செயற்படுக! செயற்படுக! ஆனால் காமத்தோடு செய்யற்க! காம உணர்ச்சி காரியத்தில் நாட்டங் கொடுக்காது. பயன்மீதே நாட்டங் காட்டும். ஒருத்தி உயிரை நேசிக்காது–காதலித்து அன்பு காட்டாது – அவளை வளர்க்காது – அவளிடத்தில் நலங்காண முடியாது. உடலின்பம் ஒன்றையே கருதிப் பெண்டாளுதல் காமம். இத்தகு காமம் இன்பத்தையும் வழங்காது. மாறாகத் துன்பத்தைத் தரும். பொருள், மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதது. உண்பித்தும், உண்டும் மகிழப் பொருள் தேவை. இதற்குப் பொருள் தேடாது, 'பொருளாளனா'கப் பொருள் தேடுதல் காமமாகும். நட்பு, தோழமை உலகத்தில் மிக உயர்ந்தது. 'அது கிடைக்கும் இது கிடைக்கும்' என்று நட்பு பூணுதல், நட்பன்று; காமம். காமம் என்பது பயனின்றி இயங்கும் ஓர் உணர்ச்சி. அது தன்னலத்தைச் சுற்றியே வட்டமிடும். மற்றவர்களைப் பற்றிக் காம உணர்வுடை

யாருக்குக் கவலையே இருக்காது. அவர்கள் ஏதாவது செய்தாலும் காம விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ளச் செய்வார்களே தவிர, பலருக்குப் பயன்படச் செய்யார். ஏன்? இந்த அசுர காமம் ஒருவனை இடமாகக் கொண்டு முதலில் இயங்கினாலும் பின்னே வளர்ந்து அவனையே மடக்கி - அவனை அணு அணுவாக அழித்தொழிக்கும். ஐயகோ! இத்தகைய காம உணர்வு மனித உலகத்தை அரித்து உருக்குலைக்கும் என்புருக்கி நோயாகும். வீட்டில் காதலித்து இன்புற்று வாழ்க! இது காமமன்று; அறம்! திருமடங்களில் துறவிருந்து உடைய பொருளைப் பேணி அறஞ் செய்க! அஃது அறம். ஆனால். செல்வச்செருக்கு, தன் முனைப்பு, மக்கட்பணி மறத்தல் காமத்தின் சின்னங்கள். துவராடையே துறவாகாது. நெஞ்சிற் சந்து பொந்துகளிலுங்கூட சம்பிரதாய மென்ற பெயரில் 'நான்', 'எனது' என்ற செருக்கு ஒட்டியிருக்கக் கூடாது. இத்தகு துறவு தூய உலகத்தை வழி நடத்தும் அறம். கடவுளுக்கு அருச்சனை செய்க! அவன் திருவடியைக் காதலித்து அருச்சனை செய்க! 'அது வேண்டும் இது வேண்டும்' என்று அருச்சனை செய்வது காமம். 'நாதன்தாள் வாழ்க' என்று அருச்சித்தல் காதல், பக்தி.

மனித வாழ்க்கையின் மையம் மனமே! அவன் வீழ்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் மனமே காரணம். மனத் தூய்மையே அனைத்து அறங்களுக்கும் அடிப்படை. நெற்றி நிறைய நீறு தாங்கினால் போதுமா? பூசும் நீறுபோல் உள்ளும் புனிதமிருக்கவேண்டும். மனத் தூய்மை எளிதில் கிடைப்பதன்று. மனத்தூய்மை இல்லாதார் தன் முனைப்பில் ஈடுபடுவர்; உயர்வு மனப்பான்மை கொள்வர். கூடிப் பழகுதலில் கூச்சங் காட்டுவர். ஆணவப் போக்கு ஆட்சி செய்யும். எப்பொழுதும் ஒருவழிப் பயணமே செய்வர். எதையும் எளிதில் மறவார். இத்தகு கேடுகள் மனத் தூய்மை யின்மையின் சின்னங்கள். பத்திமை வளர வேண்டிய இடம்

மனம். பயிர் வளர்தற்குரிய நிலம் திருந்தாமல் பயிரை வளர்க்க முடியாது. மனம் திருந்தாமல்-தூய்மையடையாமல் பத்திமை வாழ்க்கை வாழ்வது இம்மியும் முடியாது. பத்திமை வேடம் கொள்ளலாம்; பஜனை செய்யலாம். ஆனால் அது பத்திமை வாழ்க்கையாகாது.

இறைவனை ஒன்றிய உணர்வுடன் ஏத்தி வழிபடுதல் வேண்டும். அலையும் மனம் கூடாது. வழிபடும் கடவுள் வடிவங்கள் பலவாகக் கூடாது. 'இவர் தேவர், அவர் தேவர்' என்று அலையக் கூடாது. வழிபாடு செய்யுங்காலத்தின் அளவால் பெருமை யுடையதாகிவிடாது. ஆரவாரச் சடங்கு களால் வழிபாடு சிறந்துவிடாது. வழிபாட்டுக்கு ஒன்றிய மனம் தேவை. இறைவன் திருவடியில் மனம் ஒன்ற வேண்டும்; பொருந்த வேண்டும். அதுவே வழிபாடு!

இறைவன் நாமத்தை நல்லவாறு சொல்லி வாழ்த்த வேண்டும். சிலர், நல்லவாறும் வாழ்த்த மாட்டார்கள். **'பகைவர்களை அழித்து எனக்கு அருள் செய்க' என்று இறைவனை வாழ்த்துதல் ஆரியமரபு.** அங்ஙனம் வாழ்த்துதல் நெறியன்று. அவர்களுக்கு இறைவனும் அருள் பாலிக்க, மாட்டான். நல்லன கருதி, நல்லன சொல்லி, நல்ல வண்ணம் நன்றுடையானாக இருக்கின்ற இறைவனை வாழ்த்துதலே இறைவனை வாழ்த்தும் மரபு. இது தமிழ் மரபு. இங்ஙனம் வாழ்த்துதலே பக்திமைக்கு வித்து. பரமனருள் பெறுதற்குரிய வழி.

இங்ஙனம் பரபரப்பின்றி, கள்ளத்தனம் ஒழிந்து, காம உணர்வுடைய செயல்களிலிருந்து விடுதலை பெற்று, மனந்தூய்மையுடையவராகி இறைவன் திருவடிகளிடத்தில் அன்பு காட்டுதலையே பற்றெனக் கொண்டு ஒன்றிக் காதலித்து நல்லவாறே ஏத்தி வழிபட்டாலும் இறைவன் அருள் முழுநிலையில் முதிர்ந்து வெளிப்பட்டுவிடுவதில்லை. உயிரின் வளர்ச்சிக்குத் தகுந்தவாறு அளந்தே இறைவன்

அருளை வழங்குவான். வழங்கக்கூடாது என்பதல்ல. வழங்கி னாலும் பயன்படுத்தும் தகுதியிருக்காது என்பதனால்-அவன் வளர்த்து வளர்த்தே வழங்குவான். கண்ணப்பன் அன்பினை வளர்க்க ஆறு நாள் தேவைப்பட்டது. காளத்தியப்பனுக்கு! ஆனால், பன்னாள் அருச்சித்த சிவகோசாரியார் வளர வில்லை. இன்றோ கண்ணப்பர்களை வளர்க்க நம்முடைய கோயில்கள் விரும்பவில்லை. சிவகோசாரியார்களைப் பாதுகாக்கவே விரும்புகிறது. மனிதனின் ஆன்மத் தகுதிக்கு ஏற்றவாறே இறையருள் கிடைக்கும். இங்ஙனம் பத்திமை வாழ்க்கையின் சிறந்த இயல்பினைத் திருஞான சம்பந்தர்,

> ஒல்லையாறி யுள்ளமொன்றிக் கள்ளமொழிந் துவெய்ய
> சொல்லையாறித் தூய்மைசெய்து காமவினை யகற்றி
> நல்லவாறே யுன்றனாம நாவினவின் றேத்த
> வல்லவாறே வந்துநல்காய் வலிவலமே யவனே,

என்று பாடுகிறார்.

# 8

# தலைமையின் தகுதிப்பாடு

தகுதி வாய்ந்தது தலைமை. தலைமைக்குரிய தகுதிகள் ஒன்றல்ல; பலப்பல. தகுதியனைத்தும் பெற்ற தலைமை தரணியில் கிடைப்பதில்லை. ஏன்? அமரர் உலகத்தும் கிடைப்பதில்லை. பொதுவாகப் பலர் தம்முடைய தகுதியை உயர்த்திக்கொள்ள விரும்புவதில்லை. ஆனால், தலைமைக்கு மட்டும் முந்திக்கொண்டு போட்டி போடுகின்றனர்.

மாணிக்கவாசகர், அமரர் உலகத்திலும் தகுதியுடைய தலைவர்கள் வேண்டுமென்று விழைகின்றார். தக்கன் வேள்வி செய்தான். வேள்வியில் இடப்படும் திருவமுதுப் படையற் பொருள்களைச் சிவனே பெறுதற்குரியவன். ஆனால் மண்ணில் நடமாடுவோர்க்கு இருப்பதைப் போலவே நான்முகனுக்கும், திருமாலுக்கும் தலைமை வேட்கை வந்து விட்டது. தலைமை வேட்கை வெறி பிடித்ததல்லவா? சதி பிறந்தது. வேள்விக்குச் சிவம் அழைக்கப்பெறவில்லை. நான்முகனும் திருமாலும் தலைமைக்குரிய இன்பத்தை அனுபவித்தார்கள். துய்த்தலும், மகிழ்தலும் தலைமைக்குரிய இலக்கணமல்லவே! தாங்குவதன்றோ தலைமையின் இலக்கணம். அலை கடலில் நஞ்சம் எழுந்தது. தலைமையைத் தேடிப் பற்றிக்கொண்ட நான்முகனும் திருமாலும் நஞ்சினை

ஒடுக்கி உலகைக் காப்பாற்ற முடியாமல் தங்களையும் காப்பாற்றிக்கொள்ள முடியாமல் அழுது அரற்றினர். எந்தை ஈசனிடம் முறையிட்டனர். அவன் தனக்குவமையில்லாத் தலைவனன்றோ; நஞ்சை யுண்டு உலகத்தைக் காத்தனன்.

இன்றும் பலர் தலைமையை விரும்புகின்றனர். ஆனால் அதற்குரிய தகுதியை முயன்று அடைய மறுக்கின்றனர். அது மட்டுமா? தலைமைக்குரிய தகுதிகளுடையாரை ஏற்றுக் கொள்ளவும் மறுக்கின்றனர். இழித்தும் பேசுகின்றனர். இதனால் எல்லாமா தலைமை வந்துவிடும்? தலைமைக்குரிய தகுதியுடையாரை உலகம் ஏற்றுக்கொள்ளாததால் அவர்கள் தலைவர் அல்லர் என்று ஆகிவிட மாட்டார்கள். தலைமை, தலைமைதான்!

தலைமைக்குரிய இயல்பு - தகுதி போகம் துய்த்தலன்று. புகழில் மயங்கித் திரிதலன்று. ஆன்ற ஆள்வினையே தலைமைக் குரிய தகுதியை நிலைநாட்டும். கொலையே தொழிலெனக் கொண்டு, கோட்டை கொத்தளங்கள் கட்டி, வாழ்ந்த திரிபுர அரக்கர்கள் நிலை என்ன ஆயிற்று? அளவற்ற செல்வத்தாலும், வலிமையினாலும் அரக்கர்கள் கை ஓங்கி நின்றது. அமரர்களும்கூட அவர்களுக்கு ஏவல் செய்யத் தலைப்பட்டனர். ஆயினும் அறத்தின் சார்பின்மையால் அந்தத் தலைமை தற்காலிகமாயிற்று. அதுதானே நியதி! எந்தை ஈசன் மேருமலையை வில்லாகக்கொண்டு, முப்புரமழித்து மூவுலகையும் காத்தனன். ஆயினும் தலைமைக் கிறுக்குப் பிடித்த இந்த அமரர்கள் சிவபெருமானை நாள்தோறும் - வாய்ப்புக் கிடைக்கும் பொழுதெல்லாம் "இவரா தலைவர்! இல்லை, இல்லை! இவர் தலைவரல்லர்" என்றெல்லாம் பேசுகின்றனர். இவர்கள் எதைப் பேசினா லென்ன? அவன் தனக்குவமையில்லாத் தலைவனேயாம்.

ஆதலால் தலைமைப் பண்புகளைப்பெற முயற்சி செய்ய வேண்டும். அதற்குத் தனக்குவமையில்லாத் தலைவன்

தாளினைப் பணிந்து அவன் இயல்புகளைப் பெறவேண்டும். தகுதியால் வருவதே தலைமை. மற்றபடி இடத்தால் - பொருளால் - வாய்ப்பால் - அதிட்டத்தால் - மற்றவர் ஏமாற்றத்தால் வரும் தலைமை, தலைமையாகாது. ஒவ்வொரு வரும் நிறை நலமிக்க தலைமைக்கு முயற்சி செய்யவேண்டும்.

*கொலைவரையாத கொள்கையர் தங்கள் மதில்மூன்றும்*
*சிலைவரையாகச் செற்றனரேனும் சிராப்பள்ளித்*
*தலைவரை நாளும் தலைவரல் லாமை யுரைப்பீர்காள்*
*நிலவரை நீல முண்டதும் வெள்ளை நிறமாமே!*

— திருஞானசம்பந்தர்

கு. கி. VII. 4.

# 9

## கூசாதுரைக்கும் சொல்!

பொய்! அம்மம்ம! அது இன்றைக்குப் பெற்றிருக்கும் செல்வாக்குக்கு எல்லையே இல்லை. எங்கும் இன்று பொய் நடமாடுகிறது; ஆட்டம் ஆடுகிறது. இன்றையப் பேச்சுலகில் உண்மைக் கலப்பும் இருக்கலாம். ஆனால் பொய்யே முதல்! இன்றைய மனிதன் பொய்யைப் புதுப்பாணியாக்கிவிட்டான். வள்ளுவன் கூறியதைப்போல் பொய்யைச் சொல்வன்மை, ஒப்பனை செய்து காப்பாற்றி வருகிறது. அதுமட்டுமா? “பொய் சொல்லலாம் என்று வள்ளுவரே கூறியிருக்கிறார்.” இப்படி ஓர் ஆதரவுப்படலம்! ஆம்! ‘பொய்ம்மையும் வாய்மையிடத்த’ என்று வள்ளுவர் கூறியது உண்மை. ஆனால், பொய் வாய்மையாகிறது என்பது வள்ளுவத்தின் கருத்தல்ல. பொய், பொய்யேதான்! ஆனால், விளையும் பயன் நோக்கி வாய்மையிடத்தில் வைத்தெண்ணலாம் என்பதேயாம். ஆம்! சொல்லும் செயலும் பயன் நோக்குடையன. என்ன பயன்? உயிர்த்தகுதி மேம்பாடு அடைய வேண்டும். உயிர்கள் அறத்தில் அருளில் தூய்மையில், வாய்மையில் தோய்ந்து வளர்தல் வேண்டும். செடிக்கு நீருற்றுதல் செயல். அதன் பயனாகச் செடி வளரவேண்டும். கரும்பலகையில் எழுதுதல் செயல் – சடங்கு. அதன் பயன் கரும்பலகையில் எழுதுவதைச்

சிந்தையில் எழுதிக் கொள்ளுதலாகும். ஒளியைத் தாங்கிப் பேரொளிப் பிழம்பாகிய பரம்பொருளை வழிபடுதல் செயல் - சடங்கு. அதன் பயன் உயிர் ஒளிமயமாதல். ஆதலால் பயன் நோக்கியே செயல் - சடங்கு.

மனம் வாழ்க்கையின் அடிநிலம். அது எண்ணவல்லது; நினைக்க வல்லது; உணரவல்லது. ஏன் இத்தனைத் தொழிற் பாடு? மனம் நல்லவண்ணம் விளைந்து பயனுறுதற்கே! மனம்தானே மனிதனுக்கு உருவம் கொடுப்பது; வாழ்விப்பது; மனத்தின் வண்ணமே மனிதனின் வடிவு - செயல். ஆங்கிலக் கவிஞன் மில்ட்டன் "மனமே நரகத்தையும் சொர்க்கத்தையும் படைப்ப"தென்றான். இன்று சிலர் சொர்க்கத்தை நிலவரைப்படத்தில் தேடுகின்றார்கள்! பரிதாபம்! மனமே சொர்க்கத்தின் பிறப்பிடம்! அப்பரடிகளும், "மனத்தகத்தான்" என்றார். வாய்மை சொல்லி, மற்றவர்க்கு நன்மை வராது தீமைவரின் அது வாய்மையல்ல. சொல்லளவில் வாய்மை போலத் தோற்றினாலும், இயல்பால்-தன்மையால் வாய்மை யன்று. பொய் சொல்லுவதின் மூலம் பிறர்க்கு நன்மை விளையுமானால் அந்தப் பொய்ம்மையை வாய்மையாகக் கருதலாம் என்பதே வள்ளுவத்தின் கருத்து. வாழ்க்கையின் இலட்சியம் நன்மை விளைவித்தலே. அந்த முழு நன்மையே - புரைதீர்ந்த நன்மையே கடவுள். "நன்றுடையானை" என்பது தேவாரம். புரைதீர்ந்த நன்மை எது? அது எப்படி இருக்கும்? இன்று அதைப் பார்த்தவர் யார்? யாருக்கும் தீமை தராமல் நன்மை தருவதே புரை தீர்ந்த நன்மை. ஆதலால் இன்றைய உலகியல், நன்மை - தீமைக் கலப்படமாகவே விளங்குகிறது. அதற்கு முதற்காரணம் மனிதன் வாழ்வித்து வாழவும், மகிழ்வித்து மகிழவும் விரும்புவதில்லை. அவனுடைய தனிப் பட்ட வாழ்க்கையுணர்வே பூதாகாரமாக வளர்ந்திருக்கிறது. ஒரு மனிதனுடைய 'தன்னலம்' பெரும் பகுதி மற்றவர்க்குத் தீமையாகவே இருக்கும். 'பிறர் நலம்' பெரும் பகுதி நன்மையாகவே இருக்கும். தன்னலத்தில் பொதுநலம் - பிறர்

நலம் உள்ளடங்குவதில்லை. ஆனால் பொது நலத்தில் தன்னலம் நிச்சயமாக உள்ளடங்கியது. கழனியில் கிடக்கும் தண்ணீர் கழனியையும் தொடர்ந்து காப்பாற்றாது; கண் மாயையும் காப்பாற்றாது. ஆனால், கண்மாயின் தண்ணீர் கழனியைக் காப்பாற்றும். கண்மாய் - பொதுநலம், கழனி - தன்னலம். கண்மாயின் வாயிலாகக் கழனிக்குத் தண்ணீர் பாய்ச்சுதலே வாழ்வியல் முறை. கழனியின் மூலம் கண் மாய்க்குத் தண்ணீர் தேக்கமுடியாது.

ஆதலால், உயர்ந்த நன்மை விளைவிக்கக்கூடிய சொற்களே வாய்மை; சிந்தனையே வாய்மை; செயலே வாய்மை. இத்தகைய வாய்மையில் மனமும் வாயும் தோய்ந்து பழகவேண்டும். யாருடைய மனத்திற்கும் வாய்க்கும் பொய் கூச்சப்படும் பொருளாக இருக்கிறதோ, அவர்களே வாழ் வோர், வாழ்விப்போர். மனமும் வாயும் கூச்சப்படாமல் பொய்யைச் சொல்லுதலைத் திருஞானசம்பந்தர் கண்டிக் கின்றார். அவர்தம் பாடல்,

*மாசூர் வடிவின்னார் மண்டையுணல் கொள்வார்*
*கூசா துரைக்குஞ்சொற் கொள்கை குணமல்ல*
*வாசார் பொழிலம்பர் மாகா ளம்மேய*
*ஈசா வென்பார்கட் கில்லை யிடர்தானே.*

# 10

## ஈதலுக்குக் காலம் ஏது?

*தமிழர்நெறி வழங்கும் நெறியே! வாங்கும் நெறியன்று.*

"நல்லாறு எனினும் கொளல் தீது, மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று" என்று வள்ளுவம் பேசும். ஔவைபாட்டி "இட்டார் பெரியோர்" என்றே கூறினார். "தம்மை மாறியும் அறம் புரிவது இந்நாடு" என்றார் பெரும்பற்றப்புலியூர் நம்பி. ஆனால் ஆரிய மரபு கொடுப்ப தல்ல; கொள்ளுவதேயாகும். அவர்கள் கொள்ளுவதன் மூலமே பெரும் பேறு எய்துகின்றனர். மனித இயலுக்கு மாறான அறமாகும் இது. கொடுப்பதிலேதான் உயிர். அன்பைப் பெறுகிறது. இன்பத்தை அடைந்து அனுபவிக் கிறது. உலகின் எல்லா உயிர் இனங்களுமே கொடுப்பதில் தான் மகிழ்ச்சியடைகின்றன. செடிகள், கொடிகள், மரங்கள் மனித குலத்திற்கு வழங்கும் கொடை அம்மம்ம, எவ்வளவு அற்புதமானவை! அதனாலன்றோ, வகை வகையாய் நிற்கும் செடி, கொடி மரங்கள் வையகத்திற்கு அன்பு செய்கின்றன என்று பாரதி பாடினான். கொடுத்தலினும் கொள்வது ஒருவகைத் தகுதிக் குறைவே. தமிழன் இத்தகு கொடை வளத்தை உயிரெனப் போற்றுபவன். தமிழன் பொருளீட்டுவான். ஏன்? வாழவா? இல்லை; வாழ்விக்கவே!

வாழ்விப்பதன் மூலமே அவன் வாழ்வான். 'இயல்வது கரவேல்' என்பது அவனது பொருள் பொதிந்த வாழ்க்கைப் பழமொழி. கொடைத் தன்மைக்கு கையிலுள்ள பொருள் அளவல்ல. அல்லது இன்றைக்கு உருக்குலைந்து வழங்கும் பண்பற்ற பழமொழியாகிய "தனக்கு மிஞ்சியே தானமும் தருமமும்" என்ற பழமொழியின் பாங்குமல்ல.

ஈதல், இசைபட வாழ்தல் உயிர்க்குற்ற நெறியாகும். கொடுத்தால் மட்டும் போதுமா? சிலர் கொடுப்பர், ஆனாலும் அது கொடையாகாது. பெறுவான் தவம் தூண்டக் கொடுப்பதும் உண்டு. இயல்பாக நிகழ்வதே கொடை. ஏதாவதொரு தூண்டுதலின் மூலம் கொடை நிகழுமானால் அதுவும் கொடையன்று. கொடைக்குக் கொடையே குறிக்கோள்! அஃதின்றி கொடைக்கு வேறு உள்நோக்கம் வருமானால் அது கொடையன்று; வணிகமே! அறவிலை வாணிகர் ஆதலைத் தமிழகத்து ஆன்றோர் விரும்பியதில்லை. இவையெல்லாவற்றையும் விட கொடை வழங்கக் காலம் தாழ்த்தக்கூடாது. காலம் தாழ்த்தப்படுமாயின் கொடை பெறுவானின் தகுதி குறையும். பெறுவானின் தகுதியைக் குறைக்கும் வகையில் வழங்குதல் கொடையன்று. பெறுவான் தகுதியை உயர்த்தும் வகையில் கொடை நிகழுதல் வேண்டும். ஆதலால் காலம் தாழ்த்திக் கொடையளித்தல் தகுதியுடைய தன்று. சிலர் காலம் தாழ்த்துதல் மட்டுமின்றிப் பலதடவை கூறிக் காலத்தைத் தள்ளிப்போடுவர். சிலர் கொடைக்கு மனம் இருப்பதாகவும் ஆனால் காலம் ஒத்து வரவில்லை யென்றும் கூறுவர். அங்ஙனம் கூறுதல் வண்மைக்கு அழகன்று; வாழும் நெறியுமன்று.

சீர்காழியில் வாழ்ந்த மக்கள், வண்மையிற் சிறந்த வர்கள்; வழங்குவதில் புகழ்பெற்றவர்கள்; காலத்தில் கொடுத்தவர்கள்; எக்காரணத்தை முன்னிட்டும் 'நாளை' என்றும், 'மறுநாள்' என்றும் காலம் கூறிக் கடத்தாமல் வழங்கியவர்கள். அதனால்தான் போலும்,

திருஞானசம்பந்தர் அழுதவுடன் அவர் தம் தந்தையைத் தேடாமல் - தேடி உணர்த்தாமல் - நேரடியாகவே - உடனடியாகவே அன்னைக்கு அன்னை பராசக்தி பாலட்டி ஊட்ட முன் வந்தாள். வாழும் மக்கள் இயல்பு கடவுளியல் இயங்கவும் துணை செய்யும்போலும்! இதனைத் திருஞானசம்பந்தர் -

*மாலும் பிரமனும் அறியா மாட்சியான்*
*தோலும் புரிநூலும் துதைந்த வரைமார்பன்*
*ஏலும் பதிபோலும் இரந்தோர்க் கெந்நாளும்*
*காலம் பகராதார் காழிந் நகர்தானே,*

என்று பாடுகின்றார்.

# 11

## துறவு எது?

துறவு எது? துறவி யார்? என்பன போன்ற வினாக்கள் இன்றல்ல, நேற்றல்ல, பல நூறு ஆண்டுகளாகக் கேட்கப் பெற்றவை. இன்றும் கேட்கப் பெறுபவை. தமிழகம், தனக்கென ஒரு சிறந்த சமய நெறியைப்பெற்று விளங்கிய புகழுடையது. சேக்கிழார் தமிழகத்துச் சமய நெறியினைச் 'செழுந்தமிழ் வழக்கு' என்றார். இந்தச் செழுந்தமிழ் வழக்கு அயல் வழக்கை வென்று விளங்க வேண்டுமென்றார். திருஞானசம்பந்தர் வரலாற்றில் இந்தக் குறிப்பு நமக்குக் கிடைக்கிறது. இங்குச் சேக்கிழார் குறிப்பிடும் அயல் வழக்கு எது? சமண் சமயமே அயல் வழக்கு - சமண சமயம் கடுந்துறவின் பாற்பட்டது. அந்தச் சமணத்தை எதிர்த்தே திருஞான சம்பந்தர் கிளர்ச்சி செய்தார்.

மாணிக்கவாசகர் பௌத்தத்தைச் சந்தித்து இருக்கிறார்; பௌத்தத்தை வழக்காடி வென்றிருக்கிறார். அந்த வழக்கில் "நம் பெருமான் பெண்பால் உகந்தாடுகின்றானே" என்று பௌத்தர்கள் கேலி செய்திருக்கிறார்கள், மாணிக்க வாசகர்,

*பெண்பா லுகந்திலனேல் பேதாய் இருநிலத்தோர்*
*விண்பாலி யோகெய்தி வீடுவர்காண்...*

என்று பதில் சொல்லுகிறார்.

அப்பரடிகள் ஐயாற்றில் கயிலையைக் காண்கிறார். கயிலைக் காட்சியை ஊனுருக, உளமுருக நின்று பாடுகிறார். கயிலையில் "காதல் மடப்பிடியோடும் களிறு வருவன" காண்கிறார். சுந்தரர், பரவையாரை மணந்து பெற்ற சிற்றின்பமே பேரின்பமாக வாழ்ந்தார் என்று சேக்கிழார் பாடுகின்றார். இவர்கள் நமது நாயன்மார்கள்; வழிகாட்டும் தலைவர்கள். ஒன்று தெளிவாகத் தெரிகிறது. வாழ்க்கைத் துறவை நம்முடைய சமய ஆசிரியர்கள் ஏற்றுக்கொள்ள வில்லை என்று.

வாழ்க்கை, பல்வேறு கூறுகளை உடையது. உடல் வாழ்க்கை – உயிர் வாழ்க்கை – உணர்வு வாழ்க்கை என்றெல்லாம் பகுத்துக் காணுவர். சிலர், உடல் வாழ்க்கைக் குரியதையே உயிர், உணர்வு வாழ்க்கைக்கும் உரியதாக்கி விடுவர். அது விலங்கியல் வாழ்க்கை. இந்த வாழ்க்கைப் படிகள் அனைத்தையும் அடைந்து அனுபவித்து அதனதன் எல்லையிலே நின்று உணர்விற் சிறந்து வாழ்தல் சிறப்புடைய வாழ்க்கை – சீலம் நிறைந்த வாழ்க்கை.

திருஞானசம்பந்தர் சமணத் துறவிகளைப் பார்த்து வியப்புப் பொருள்படக் கூறுவதுபோலக் கூறுகிறார், "துறவி யாகுமே" என்று! நீ துறவியாவாய் – எப்பொழுது? துறப்பதினால் மட்டும் துறவியாகி விடுவதில்லை. துறக்கக் கூடாத ஒன்றைத் துறக்காமலிருப்பதின் மூலமே துறவியாகின்றாய்? துறந்த பொருட்களின் பட்டியல் பெருகலாம். 'உடை துறந்தேன்' என்பார் ஒருவர். அதில் அவருக்கென்ன இழப்பு? உடலுக்கல்லவா இழப்பு? "உணவைத் துறந்தேன்!" என்பார் ஒருவர். அதில் அவருக்கென்ன இழப்பு? உடலுக்கல்லவா இழப்பு? துறந்த பொருள்களின் பட்டியல் பெருகுவதால் பயனில்லை. எல்லாரும் எல்லாவற்றையும் வைத்து கொண்டா வாழ்கிறார்கள்? மகிழ்கிறார்கள்? காலால் நடத்தல் துறவு என்றால், உலகத்தில் ஆயிரம் ஆயிரம் பேர் கால்களால் நடக்கிறார்கள். அவர்கள் எல்லாம் துறவிகளா?

ஒரு வேளை உண்பது துறவென்றால் அது தானும் உண்ணாதார் பலரிருக்கிறார்கள். அவர்களைத் துறவியாக்கி விடலாமா? ஆதலால் துறந்த பொருட்களைக் கொண்டு துறவியை நிர்ணயிக்க முடியாது. துறக்கக்கூடாததை அவன் துறக்காமல் இருக்கிறானா? திருஞானசம்பந்தர் உண்மைத் துறவு நிலையை விளக்குகின்றார். நீ துறவாதிருந்தால் துறவியாவாய் என்கிறார். எதைத் துறக்கக்கூடாது? இறைவன் திருநாமத்தை நெஞ்சு துறக்கக்கூடாது; மறக்கக்கூடாது; ஏத்தி வழிபடத் தவறக்கூடாது; இறைவன் திருநாமத்தை மறவாது நினைப்பற நினைந்து ஏத்தி வாழ்தலின் மூலமே துறவியாவாய் என்கிறார், அதுவே துறவுக்கு இலக்கணம் என்பதைத் 'துறவியாகுமே' என்று வலியுறுத்துகிறார்.

பௌத்தத் துறவிகள் கடவுளை மறந்தனர். சமணத் துறவிகள் நோன்பே கடவுளெனக் கொண்டனர். இன்றையத் துறவிகளில் சிலர், கடவுளை மறந்து சாதியே அனைத்தும் என்று சாதிவெறி பிடித்து அலைகின்றனர். சிலர் - உருத்திராக்கம் அதிகமாக அணிபவர்கள் - கடவுளை மறந்து காசுகளை எண்ணுகின்றனர். கடவுட் கோயில் நமக்கு வேண்டாம். காணிகளே வேண்டும் என்று சொல்லிக் கோயிலைப் பாழடித்து விட்டுக் காணிகளை வைத்துக் களிப்புறுகின்றனர். இப்படிப்பட்ட 'துறவிகள்' நம்முடைய தலைமுறையில் இல்லையா? என்ன? தில்லைக்குச் சென்று அங்குள்ளோரைக் கேட்டால் விடை கிடைக்கும். உடை துறவுக் கோலந்தான்! வாழும் வகை துறவு போலத்தான் தெரிகிறது! ஆனாலும் துறவன்று! கனியின் தோல் பழுத்து பின் உட்புறம் பழுப்பதில்லை. அகத்திற் கனிந்த, கனிவே தோலையும் பற்றுகிறது. சுவைமிக்க கனிவு புறத்திலிருந்து அகத்தே செல்வதன்று. புறம் வேண்டுமானால் வாயிலாக இருக்கலாம். முதற்கனிவு கனியின் உட்பகுதியேயாகும். கனியின் உட்புறம் கனியாமல் தோல் மட்டும் கனிநிறம் காட்டினால் அது கனியல்ல, வெம்பல்! துறவிலும் உள்ளம்

பழுக்கவேண்டும். 'பழுத்த மனத்து அடியார்' என்பார் மாணிக்கவாசகர். இன்றோ உடல் பழுத்திருக்கிறது; உடை பழுத்துக் காட்டுகிறது; ஆனாலும் உள்ளம் பழுக்கவில்லை! ஆங்காரம் பிடித்தாட்டுகிறது. இவர்கள் திருஞான சம்பந்தர் கூறிய துறக்கக் கூடாத ஒன்றைத் துறந்துவிட்டனர். ஆதலால் இவர்கள் இன்னும் 'துறவியல்ல இனிமேலும் துறவியாதல் அரிது. உண்மைத் துறவியாக வேண்டுமா? திருஞான சம்பந்தர் கூறுவதைப்போல இறைவன் திருநாமத்தை நினைப் பற நினைந்து ஏத்துங்கள்! அந்தச் சீலமே துறவாக்கும். இதனைத் திருஞான சம்பந்தர்,

*பிறவி யறுப்பீர்காள்! அறவனாரூரை*
*மறவா தேத்துமின், துறவியாகுமே!*

என்று பாடுகின்றார்.

# 12

## முரண்பாடா?

எந்தை ஈசன் சலமிலன். அவன் பெயர் சங்கரன். குறியொன்றுமில்லாத கூத்து ஆடுபவன். அவன் அம்மை யோடு அப்பனாக இருந்து அருள் வழங்குகின்றான். அன்னை உமையினைப் பிரியாமல் உடம்பிடம் கொடுத்தவன். அதனால் அவனைப் "பெண்பால் உகந்த பித்தன்" என்றும் அறியாதார் கூறுவர். ஆனால், தமிழக மக்கள் மங்கை பாகனை, குவளைக் கண்ணிக் கூறனை வழிபடுதலையே பெருவழக்காகக் கொண்டு வந்துள்ளனர். சங்கத் தமிழிலக்கிய மாகிய ஐங்குறுநூறு "நீலமேனி வாலிழைபாகத்து ஒருவன்" என்று பாராட்டும். திருவள்ளுவரும் ஆதியாகிய சக்தியைப் பங்கிலே உடையவன் என்ற பொருட் குறிப்பிலேயே 'ஆதிபகவன்' என்று பாடினார். இறைவன் அருளும் மூர்த்தியாக விளங்கி அருள் செய்த பொழுதெல்லாம் அம்மையப்பனாகவே காட்சியளித்ததாக நம்முடைய திருமுறை கூறும். நம்முடைய மாணிக்கவாசகரும் இந்த அம்மையப்பன் திருக்கோலத்தை,

*தோலுந் துகிலுங் குழையுஞ் சுருள்தோடும்*
*பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியுஞ்*

*சூலமுந் தொக்க வளையு முடைத்தொன்மைக்*
*கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ,*

என்று பாடிப் பரவுகின்றார்.

இங்ஙனம் பெண்ணோடு கூடிவாழும் பெருந்தலைவன் காமனை எரித்தான். காமன் உயிர்களுக்கு விருப்பத்தை விளைவிக்கும் தொழிலையுடையவன். சிறப்பாகப் பெண்ணியற் காதலைத் தோற்றுவிப்பவன். ஒருகால் உமையை எம்பெருமான் பிரிந்திருந்த பொழுது அந்தப் பிரிவை மாற்றி அவர்களைக் கூடச் செய்வதற்காகச் சிவபெருமானிடம் தன்னுடைய தொழிலாகிய காமத்தைத் தோற்றுவிக்க முயற்சி செய்தான். ஆனால் சிவபெருமான் காமத்தின் வழிப்படாது, காமனை விழித்து நோக்கி எரித்தான். இங்ஙனம், காமனை எரித்தவன் உமையொடும் கலந்து வாழ்கிறான் என்று திருமுறைகள் பேசும். இதனைத் திருஞானசம்பந்தர்,

*காம னெரிப்பிழம் பாக நோக்கிக்*
*காம்பன தோளியொ டுங்கலந்து*
*பூமரு நான்முகன் போல்வரேத்தப்*
*புகலி நிலாவிய புண்ணியனே*
*ஏமவ னத்தெரி யாட்டுகந்த*
*வெம்பெரு மானிது வென்கொல்சொல்லாய்*
*வீமரு தண்பொழில் சூழ்மிழலை*
*விண்ணிழி கோயில் விரும்பியதே!*

என்று பாடுகின்றார்.

காமனை எரித்தவன் உமையுடன் கலந்து வாழ்தல் முரணில்லையா? என்று கேட்கத் தோன்றும், முரணில்லை. ஒன்றைத் துய்த்தலோ அல்லது மகிழ்தலோ காமத்தின் வழிப் பட்டதாக இருக்குமானால் அது தீது. அத்தகைய துய்ப்புணர்வு எரியிடைப்பட்ட எண்ணெய்போல மேலும் மேலும் காமத்தை வளர்க்கும். அத்தகைய துய்ப்புணர்வு

தூய்மையான இன்பத்தைத் தராது; அமைதியைத் தராது; அவலத்தையே தரும்; உயிரைச் செழுமைப்படுத்தாது; உருக் குலைக்கும். துய்ப்பிப்போரிடையேகூட இனிய உணர்வுடன் கூடிய இன்பக்கலப்பு இருக்காது. அங்கே சுயநலமே தாண்டவமாடும். அங்கே புணர்ச்சிக்கே இடம்; உணர்ச்சிக்கு இடமில்லை. இத்தகைய காமம் நரகத்தின் வாயில்.

எந்தை ஈசன், உமையொடு கலந்திருப்பதோ, காமத்தால் விளைந்ததன்று. தான் துய்க்க வேண்டும் என்ற விருப்பில் எழுந்தன்று. உலகுயிர்கள் போகம் துய்த்து மகிழ்ந்து வாழ அவன் அன்னை உமையுடன் கலந்து வாழ்கின்றான். இந்தக் கலத்தல் தண்ணளியின் பாற்பட்டது; இன்ப அன்பு வழிப்பட்டது. உலகு தழீஇய காதல். இங்குப் புணர்ச்சிக்கு இடமில்லை; உணர்ச்சிக்கு இடமுண்டு. இங்ஙனம் கலந்து வாழும் நெறி நாட்டிடையிலும் மலருமாயின் மண்ணகம், விண்ணகமாகும்.

இங்ஙனம், மங்கை பாகனாக விளங்கும் மூர்த்தியை முறையாக வழிபாடு செய்வோர் பொன்னினைப் பெறுவர்; பொருளினைப் பெறுவர்; போகத்தினைத் துய்ப்பர். அவ்வழி அவாத் தணிந்து அருளியல் காட்சி தலைப்பட்டுத் திருவினைப் பெற்றுத் திருவருளில் திளைப்பர். இதுவே நம்முடைய நாயன்மார்கள் காட்டிய வாழ்க்கை நெறி.

# 13

## தெய்வம் பேணார் தெளிவு

வாழ்க்கை, அறியாமையில் தொடங்குகிறது. அறிவை நோக்கிப் பயணம் செய்கிறது. அறியாமை கடலினும் அகல முடையது; ஆழமுடையது. அறிவு வர வர, அறியாமை சற்றே அகலும். முற்றாக அறியாமை அகலப் பலகாலம் ஆகும். ஏன்? பல பிறவிகள் எடுக்கவேண்டியது ஏற்படும். அதுவும், பெற்ற அறிவை மீண்டும் இழக்காமல் இடையீடின்றி அறிவை நோக்கிப் பயணம் செய்தால்தான் அறியாமை முற்றாக அகலும். அறியாமை முற்றாக அகன்ற உயிர். அறிவு மயமா கிறது; ஞானத்தின் வடிவம் எய்துகிறது. உயிர், ஞான நிலை எய்திய பிறகு அதற்கு விருப்புமில்லை, வெறுப்புமில்லை; இன்பமுமில்லை, துன்பமுமில்லை; பிறப்புமில்லை, இறப்பு மில்லை. ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த இன்ப அன்பில் நிலைபெற்று மகிழ்கின்றது.

அறிவு, குழப்பமானது. அறிவின் இயற்கை அது வளர, வளர அறியாமையின் வன்மையைக் காட்டுவது; குழப் பத்தைத் தரக்கூடியது. இதுவோ அதுவோ என்று ஆராய்ந்து கொண்டிருப்பவன் அறிவின் ஆதித்தொடக்கத்தில் இருக் கிறான். இன்னும் தெளிவாகச் சொன்னால் அவன் ஒரு குழப்பவாதி. அவன் ஒரு பொழுதும் முடிவுக்கு வர

மாட்டான். வினாக்களின் தொடர்ச்சியிலிருக்கும் வரை அறியாமையின் தொடர்ச்சி இருப்பதாகவே பொருள். அப்படியானால் வினாவிற்கு அறிவு முரண்பட்டதா? என்ற வினா தோன்றலாம். இல்லை, இல்லை! அறிவைப்பெறும் சாதனங்களில் தலையாயது வினாதானே! "நான் ஆர்? என்னுள்ளம் ஆர்? ஞானங்கள் ஆர்?" என்ற வினாக்களை மாணிக்கவாசகரே கேட்கிறாரே! ஆனால், அறிவாக்கம் நோக்கிக் கேட்கப்படும் வினா வேறு. அறியாமைக்கு ஊட்டம் தரக் கேட்கப்படும் வினா வேறு. அறிவைப் பயனாகக் கருதிக் கேட்கப்படும் வினாவில் அறிவு வேட்கை தலைப்படும். ஆங்கு விவாத உணர்ச்சி இருக்காது. சிலர், தம்மை அறிஞர் என்று தாமே காட்டிக் கொள்வதற்கு வினா கேட்கின்றனர். அத்தகைய வினாவே அவர்களை அறியாதார் என்று அறிமுகப்படுத்துகிறது.

அறியாமை அகல, அறிவு பெறப் பல முயற்சிகள் தேவை. முதல் முயற்சி சிந்தித்தல். இன்று, சிந்தனைப் பழக்கம் பலருக்கு இல்லை. இன்று பலருடைய மூளை சத்திரம் போலத்தானிருக்கிறது. அதாவது, வீடு என்றால் அங்கேயே சிலர் வாழ்வர். சத்திரம் என்றால் வருவோரையும் போவோரையுமே பார்க்கலாம். அதுபோல், இன்று பலர் நூல்களைப் படிப்பது, மூளையில் ஏற்றிக்கொள்வது, திரும்ப ஒப்புவிப்பது என்ற பணிகளையே செய்வர்; சிந்திப்பதே இல்லை! சிந்திக்கின்ற மனிதன், வாழ்க்கையில் விபத்துக் களுக்கு ஆளாக மாட்டான். அவனுடைய அறிவு, நிலையானபடி முறையில் வளர்ந்து வரும்.

சிந்தனையைத் தொடர்ந்து கற்றல், அடுத்து அறிவு பெறும் முயற்சி. கற்பது என்பது உயிரின் இன்றியமையாத கடமை. கற்கும் முயற்சிக்குத் தானே கண்கள் தரப்பெற்றன. கற்றலையடுத்து வரும் முயற்சி, கேட்டல். கேட்பது, உயிரின் அறிவாக்கத்திற்கு ஒரு சிறந்த முயற்சி. எளிய முயற்சியும் கூட. ஆனால், யாரிடம் கேட்கவேண்டுமோ, அவரிடம் கேட்காது

போனால் அறிவு நலத்திற்குப் பதில் அறியாமையும் குழப்பமும்கூட மிகலாம். சுவைபார்த்து உண்பதைப் போலச் சுவை பார்த்துக் கேட்கவேண்டும் என்பது வள்ளுவர் கருத்து. கற்றலும் கேட்டலும், சாதாரணமானவர்கள் பணியல்ல. மாணவர்கள் கடமை மட்டுமல்ல. பெரியவர்களும் செய்ய வேண்டிய கடமை என்பதனைத் திருஞானசம்பந்தர், "கற்றல் கேட்டலுடையார் பெரியார்" என்று பாராட்டுவார். இங்ஙனம் முத்திறத்தாலும் பெறும் அறிவு, ஒரு சிறு கூறேயாம்.

அடுத்து, அறிவைப் பெருக்கி வளர்த்துக்கொள்ளும் நெறி, பெற்ற அந்தச் சிறு கூறாகிய அறிவை வாழ்க்கையில் வாழ்ந்து காட்டுதலாகும். சிந்தனை, அறிவைப் பெறும் வாயிலே தவிர சிந்தனையே அறிவன்று. கல்வி, அறிவைப் பெறும் வாயிலே தவிர, கல்வியே அறிவன்று. இம் மூன்றி னாலும் பெற்ற செய்தியை - கருத்தை அறிவாக்கி உயிர்க்குத் தரவல்லது வாழும் முறையேயாம். அறிவியற் கூடத்துச் சோதனைகளில் விஞ்ஞான அறிவு கிடைப்பதைப் போல வாழ்க்கைச் சோதனைகளில் அறிவு கிடைக்கிறது. சோத னைக்கு ஆட்படவும், வாழ்க்கையைச் சோதனைக்கு ஆளாக்கவும் திறமை தேவை. கோழை, ஒரு பொழுதும் அறிவுடையவனாக முடியாது. இங்ஙனம், வாழ்க்கை அனுபவத்தின் மூலம், அறிவு முழுமை நலம் பெறுதற்குரிய தகுதியை எய்துகிறது. ஆனாலும் முழுமை அடைந்து விடுவதில்லை. அறிவு நலம் முழுமையடைய அல்லது முழுமை அடைந்தது என்பதை அறிந்துகொள்ளத் துணை செய்வது இறைவழிபாடேயாம். காரணம், ஒரு முழுமை, மற்றொரு முழுமையை நாடுதல் - கவர்ச்சிக்கப்படுதல் - ஒன்றோடொன்று கலத்தல் உலகியலின் நியதி; இயற்கை. இறைவன் முழுநிறை அறிவினன்; வாலறிவன். ஆதலால், அறிவு நலம் பெற்ற உயிர், மேலும் முழுமை நலம் எய்த, வழிபாடு துணை நிற்கிறது. மேலும், தெளிவாகச் சொன்னால் இந்த நிலை எய்திய உயிர்கள் செய்யும் வழிபாடே வழிபாடு.

அறிவின் வாசனையே இல்லாத உயிர்கள், இன்று இறைவனை வழிபடுவதில்லை; தம் ஆவல்களையே வழிபடுகின்றன. இதனையே, வழிபாடென்று கருதி அறியாதவர்கள் நாத்திகம் பேசுகின்றனர்.

**ஞான நிலையில் ஞானிகள் தொழுவதே வழிபாடு.** இங்ஙனம் உலகியலறிந்து, அருளியல் உணர்ந்து, ஈசன் திறம் நினைந்து வழிபடாதார் எவ்வளவு கற்றென்ன? எவ்வளவு கேட்டென்ன? அவர்கள் எவ்வளவுதான் தெளிவாக விரிவுரைகள் செய்தாலென்ன? அவையெல்லாம் மீண்டும் மீண்டும் சேற்றிற்குள் இழுத்து அமிழ்த்தும் செயல் முறையேயாம். அவர்களுடைய அறிவையும் தெளிவையும் மதித்து ஏற்றுக்கொள்ள முடியாது என்று திருஞான சம்பந்தர் எடுத்துக் கூறுகின்றார். பூம்புகார்ச் சாய்க்காட்டில் எழுந்தருளியுள்ள ஈசனையே தெய்வம் என்று தெளிந்து வழிபடுவாரே வழிபடுபவர். அவர்களே கற்றல் கேட்டலுடைய பெரியார். அங்ஙனம் வழிபடத் தெரியாதவர்களின் தெளிவு, தெளிவன்று.

*வையநீ ரேற்றானு மலருறையு நான்முகனும்*
*ஐயன்மா ரிருவர்க்கு மளப்பரிதா லவன்பெருமை*
*தையலார் பாட்டோவாச் சாய்க்காட்டெம் பெருமானைத்*
*தெய்வமாப் பேணாதார் தெளிவுடைமை தேறாமே.*

— திருஞானசம்பந்தர்

# 14

# குளிர் சாரற் கொடுங்குன்றம்

திருக்கொடுங்குன்றம் மிக உயர்ந்த மலை; வானைத் தொட்டுத் தழுவி உயர்ந்திருக்கும் மலை. மலை முகட்டில் மஞ்சு தவழ்கிறது. மழைபொழி மேகம் மலை முகட்டைத் தழுவித் தவழ்ந்து கிடப்பதாலும் மலை குளிர்ச்சி பொருந்தியிருக்கிறது. ஆங்கு வெப்பமில்லை; குளிர் சாரலாக விளங்குகிறது. கரும் புயலைப் பிறைச் சந்திரன் கிழித்துக்கொண்டு முன்னேறிச் செல்கிறது! ஆம்! முழுமதியன்று; ஆனாலும் முழுமதி ஆகக்கூடியது. குறை வடிவம் நீங்கி நிறை நல் வடிவம் பெற விரைந்து முன்னேறுகிறது கூனற்பிறை. இந்த இனிய காட்சியைத் திருஞானசம்பந்தர் பார்க்கிறார். வண்மைத் தமிழில் எழிலுற இனிய கவிதை பிறக்கிறது! இயற்கை எழிலில் தோய்ந்து கவிதை வருகிறது! நம்மையும் கவிதைவழி மலையழகில் ஈடுபடுத்துகிறார். இல்லை, திருஞானசம்பந்தர் ஞானத்தின் திருவுரு புறத்தியல் இயற்கையில் மட்டும் தோய்பவரல்லர். அந்த இயற்கையில் உயிராக விளங்கும் தத்துவத்திலும் திளைப்பவர். நம்மையும் திளைக்கச் செய்பவர்.

பிறைச் சந்திரன் கருமேகத்தைக் கிழித்துக்கொண்டு நிறை வடிவம்பெற முன்னேறுகிறது. உயிர்கள் குறை யுடையன. ஆனாலும் நிறை நலம் பெறுதற்குரியன. உயிர்கள் நிறை நலம் பெறுதற்குத் தடை, உயிரைப் பிணைத்து நிற்கும் கருமேகமனைய ஆணவம். ஆணவக் கருமேகத்தைச் சீலத்தாலும் தவத்தாலும் நீக்கிக்கொண்டு கொடுங்குன்றில் அமர்ந்துள்ள நல்ல மங்கை பாகன் திருவடிகளைச் சாரும் உயிர்கள் குறைகளினின்று விடுதலை பெறும்; நிறைநலம் பெறும்; திருவருட்பொலிவு பெறும்; வெப்பத்தினின்று நீங்கித் தண்ணளியுடையான் தாள்களைச் சேர்ந்ததால் இன்பத்தில் திளைக்கும்.

ஆணவம், உயிர்களுக்கு உடன் பிறந்தே கொல்லும் நோய். ஆணவம், அறிவை மறைக்கும்; நெறிகளைத் தடுக்கும்; அரக்கத் தன்மையை நல்கும்; நீதியொடு தழுவிய வாழ்க்கை யினின்று அகற்றும். அநீதிக்கு அழைத்துச் செல்லும்; அடக்கம் அதற்கு இல்லை. அம்மம்ம! ஆணவத் துடிப்புடையார்க்கு நல்லதுமில்லை, தீயதுமில்லை; உறவுமில்லை, நட்புமில்லை; தவமுமில்லை, சீலமும் இல்லை. ஆணவம் முற்றாக முடிவில் தம்மைச் சார்ந்தாரையே அழிக்கும். இந்த அழிவிலிருந்து தப்பிக்க ஒரே வழி பிரான்மலை நல்ல மங்கைபாகன் தாளினைச் சார்தலேயாம்.

பிரான்மலை என்ற திருக்கொடுங்குன்றத்தில் எழுந் தருளியுள்ள நல்ல மங்கை பாகன், இன்பத் திருவுருவன்; தாயிற் சிறந்த தயாவுடையவன். நல்லறிவு கொளுத்துபவன். நன்னெறியில் நிறுத்துபவன். இன்பங்கள் வழங்குபவன். ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்பத்தையும் அருளுபவன். நல்ல மங்கை பாகனின் திருவடிகள் ஆணவ வெப்பக்காற்றில் தவிக்கும் உயிர்களுக்குத் தண்ணிழல்; குளிர் நிழல். அத் திருவடிகளே நமது உயிர்க்கு உற்ற துணை! அத் திருவடிகளையடைந்து அயரா அன்பில் வாழ்த்தி வணங்கு வோமாக.

வானிற்பொலி வெய்தும்மழை
மேகங்கிழித் தோடிக்
கூனற்பிறை சேருங்குளிர்
சாரற்கொடுங் குன்றம்
ஆனிற்பொலி யைந்தும்அமர்ந்
தாடியுல கேத்தத்
தேனிற்பொலி மொழியாளொடு
மேயான்றிரு நகரே,

என்றார் திருஞானசம்பந்தர்.

# 15

# கடமையா? கடவுளா?

"கடமையைச் செய். அதுவே போதும்; கடவுள் வழி பாடு அவசியமில்லை" என்று குரல் கேட்கிறது! இந்தக் குரல் கொடுப்பவர்கள் தங்களை அப்பட்டமான புதிய பகுத்தறிவு வாதிகளாகக் கருதிக் கொள்கிறார்கள். "கடவுளை வழிபடு வதே கடமை. கடவுளை வழிபடாதவர் எந்தக் கடமையைச் செய்தாலும் பயனில்லை." இப்படி மற்றொரு குரல் கேட்கிறது! இந்தக் குரல் கொடுப்பவர்கள் பழைமை வாதிகள். இவர்களுக்கு உலகம் இன்னமும் பின்னேதான் இருக்கிறது. எப்பொழுதும் உலகம் பின்னே கிடப்பதில்லை. நாளைய உலகம் முன்னே கிடக்கிறது. பழைமையாக இருப்பது குறையல்ல. ஆனால் முன்னோர் நெறி என்ன என்பதை உள்ளவாறு உணரவேண்டும். "கடமையைச் செய்; கடவுளை வழிபடு" என்று மூன்றாவது குரல் கேட்கிறது! இந்தக் குரல் நடைமுறை வாழ்க்கையொடு கூடியது; ஏற்றுச் செயற்படக்கூடிய குரலும் கூட. இந்தக் கருத்துப் போரில் ஆளுடைப் பிள்ளையார் எந்த அணியில் நிற்கிறார்? ஏழாம் நூற்றாண்டில் நடமாடியவர் ஆளுடைப் பிள்ளையார்; அவர் சமய நெறியாளர்; சமயசீலம் நிறைந்தவர்; சமய நெறியை உடலுக்கு உடுத்தும் உடையென இல்லாமல், உயிர்க்கு

உடுத்திய உடலெனக் கருதிப் போற்றியவர்; இல்லை, உடலுக்குள் விளங்கும் உயிரெனக் கருதிப் போற்றியவர்.

கடமை – இந்த உலகத்தின் இயக்கத்திற்குரிய அச்சாணி. கடமை யென்ற அச்சாணியில்தான் உலகம் சுழல்கிறது; இயங்குகிறது. **வாழ்தலுக்கும், சாதலுக்கும் இடையே உள்ள போராட்டம் கடமையை மையமாகக் கொண்டது.** சொர்க்கத்தை அடைய வேண்டுமானாலும் அடி அடியாக நகர்ந்து சென்றுதான் அடையவேண்டும். சொர்க்கத்தை அடையும் காலம் வரையில் வாழ்கின்ற வாழ்க்கையென்ற ஒன்று உண்டே! அந்த வாழ்க்கையை மனிதன் கடன் படாமல் நிகழ்த்த வேண்டும். களவு செய்யாமல் நடத்தவேண்டும். வாழ்க்கையைக் கடன் படாமலும் களவு செய்யாமலும் நடத்தக் கடமை செய்தலைத்தவிர வேறு வழியேது? உழைக்காமல் உண்டால் உழைத்து உணவைக் கொடுத்தவனுக்குக் கடன் படாமல் வேறு என்ன? உழைப்பை உழைப்பால் ஈடு செய்யாமல் எடுத்துக்கொண் டால் அது களவு. எடுத்துக்கொண்ட அளவுக்குத் திரும்பக் கொடுத்ததாக இல்லை. இந்தக் கடன்காரனைக் கடவுள் உலகம் எப்படி ஏற்றுக்கொள்ளும். **ஆதலால் சொர்க்கத்தின் வாயிலைத் திறக்கும் சாவி கடமையேயாகும்.**

கடவுள், யாரை விரும்புகிறார்? பசி தீர உண்டு உறங்குபவனையா? ஒருபொழுதும் இல்லை. கடமையைச் செய்யாதவன் கடவுளுக்குப் பக்தனாக முடியாது. சைத்தானுக்கு வேண்டுமானால் தோழனாகலாம். கடவுளே கடமையின் திருவுரு; உலகத்தின் மிகப்பெரிய தொழிலாளி; ஓய்வு உறக்கமின்றித் தொழிற்படுபவன்; ஐந்தொழில் நிகழ்த்து பவன். கடவுள், கடமையை விருப்புடன் செய்பவன் நெஞ்சுக் குள்ளேயே எழுந்தருளுகின்றான். கடமை உணர்வுடைய மனமே, கடவுள் உணர்வைப் பிரதிபலிக்கும் மனச்சாட்சி. அவன் நெஞ்சமே கடவுளின் சந்நிதி.

திருஞானசம்பந்தர் செய்தொழில் பேணுதல் பற்றி, தொழில்முறை பற்றிப் பேசுகிறார். செய்கிற தொழிலை முறையாகச் செய்யவேண்டும்; திறமையாகச் செய்ய வேண்டும்; பயன்தரத்தக்க வகையில் செய்யவேண்டும். அது மட்டும் போதாது. நிலையான பயன் தரத்தக்க வகையில் அத் தொழிலைப் பேணுதலும் வேண்டும். செய்தொழிலைப் பேணி வளர்க்காது போனால் திறன் குன்றும்; வளம் குறையும்; வாழ்க்கை கெடும். அப்பொழுது நரகம் நாடி நம்மைச் சூழும். செய்தொழிலைப் பேணி வளர்த்தால் அறிவு வளரும்; ஆற்றல் பெருகும்; வளம் கொழிக்கும்; இறைவன் எங்கே? எங்கே? என்று கடமையைச் செய்பவனைத் தேடி வந்து தோழமை கொள்வான்; துணை நிற்பான். இறைவன் செல்வனாக வீற்றிருப்பான்; இன்பம் தருவான். யாருக்கு? பூவும் நீரும் இட்டவர்க்கு மட்டுமா? இல்லை, செய்தொழில் பேணியோர்க்குமாம்.

*பைம்மா நாகம் பன்மலர் கொன்றை*
*பன்றிவெண்கொம் பொன்று பூண்டு*
*செம்மாந் தையம் பெய்கென்று சொல்லிச்*
*செய்தொழில் பேணியோர் செல்வர்*
*அம்மா னோக்கி வந்தளிர் மேனி*
*யரிவையோர் பாக மலர்ந்த*
*பெம்மா னல்கிய தொல்புக ழாளர்*
*பேணு பெருந்து றையாரே.*

திருஞானசம்பந்தர் காட்டும் நெறியே பழைய நெறி. அதுவே புதிய நெறியும்கூட. **கடமையைச் செய்! கடமையைக் கடவுள் வழிபாடெனச்செய்! ஒன்றிய உணர்வுடன் தொழிற்படு! ஆற்றலை ஆள்வினையில் காட்டு! செய்தொழிலைச் செப்பமுறச் செய்ய அறிவையும் ஆற்றலையும் நல்கி வழிகாட்டும்படி கடவுளைப் பிரார்த்தனை செய். இதுவே திருமுறை நெறி.**

# 16

## உண்மைத் தொண்டர்

உயிர், ஒரு வளமார்ந்த விளைநிலம். அறிவார்ந்த விளை நிலம். ஓயாது தொழிற்படும் தன்மையது. விதை விதைக்காமலே உணர்வுகளை மையமாகக் கொண்டு வினைகளை விளைவிக்கும் தன்மையது. அலை கடலில், அலை வரிசை ஒன்றின் பின் ஒன்றாய் வீசுதலைப் போல அவா, அலைகள் வீசும் தன்மையது. ஒன்றை நினைக்கும், அதை அழித்துப் பிறிதொன்றை நினைக்கும். ஓயாத போராட்டம். 'அவா வெள்ளம்' என்று மணிமொழி பேசும். பிறப்பைத் தரத்தக்க ஆற்றல் அவாக்களுக்கே உண்டு. செயலுக்குக் களம் அவா. அவாவுக்குத் தாய் ஆசை. ஆசை அவாவைத் தூண்ட அவா செயலைத் தூண்ட இன்பம்-துன்பம், வசை-வாழ்த்து, காய்தல்-உவத்தல், பகை-நட்பு ஆகிய சுழிகளில் உயிர் கிடந்து அலமருகின்றது. அலைகடலும்கூட நள்ளிரவில் உறங்கும் என்பர். அவா வெள்ளத்தால் அலைக்கப்பெறும் உயிர், பேய் படுத்துறங்கும் இரவிலும் உறங்குவதில்லை. மகிழ்ச்சி மேலிட்டிருந்தால் கற்பனை. ஆழ்துயில் கிடைக்காமலிருந்தால் கனவு. மனம், பகைப்புயலில் சிக்கித் தவித்தால் குள்ளநரித்தனச் சதித் திட்டங்கள். இங்ஙனம், சொறியச் சொறிய அரிப்

பெடுக்கும் வினை வழிப்பட்டு உழலும் வாழ்க்கையிலிருந்து விடுதலை பெற வழி என்ன?

தொண்டராக வேண்டும். அதுவே, வினை நீக்கத்திற் குரிய வழி. தொண்டராதல் வினை நீக்கத்திற்குத் துணை செய்யுமா? அதுவே இன்றைக்கு ஒரு தொல்லையாக இருக்கிறதே! இல்லை, இல்லை. தொண்டிற்குத் தொல்லை உலகத்தில் இல்லை! இல்லையே! போட்டிச் சங்கங்கள் தோன்றுகின்றன. அரசியல் கட்சிப் போட்டா போட்டிகள் இருக்கின்றன. அருள்நெறி மன்றம் என்றால் தவநெறி மன்றம் தோன்றுகிறது. பேரவை என்றால் இந்துமன்றம் தோன்று கின்றது. இவையெல்லாம் தொண்டு கருதித்தானே தொடங்கப் பெறுகின்றன! இல்லை! இல்லை! இவை யெல்லாம் சில நலன்களை மையமாகக் கொண்ட அமைப் புக்கள்! தொண்டிற்கெனத் தொடங்கியவை யாகா.

தொண்டராதல், எளிதன்று. தொண்டராம் தன்மைக்குப் பழுத்த மனம் வேண்டும். விருப்பு, வெறுப்பு இவைகளின் நாமங்கூட அறியா நன்னெஞ்சு தேவை. பணி செய்தலன்றிப் பயன் பற்றிக் (தற்பயன்) கணக்கிடும் நோக்கம் கூடவே கூடாது. ஓயாது உழைத்திடும் உயரிய பண்பு தேவை. சித்தத்தைச் சிவன்பால் வைத்துச் செழுந்தவம் செய்யும் இயல்பு தேவை.

இத்தகைய உயரிய குணங்களோடு மாந்தர் உலகத் திற்குத் தாயெனவும், தாதியெனவும், அன்பில் தாழ்ந்து செய்யும் தொண்டே தொண்டு. இத்தகைய தொண்டு உயிரை உருகச் செய்யும். உணர்வைப் பழுக்கச் செய்யும். செயல் நிகழும். மனத்தில் காயமிருக்காது. தற்செருக்கு இருக்காது. புலி வேட்டையிலும் கொடுமையான புகழ் வேட்டைக்கு அங்கு இடமில்லை. அடக்கம் அங்கு ஆட்சி செய்யும். பணிவே பண்பாக விளங்கும். உதவி செய்வோர், உதவி பெறுவோர் என்ற வரையறையும் இல்லை. உண்மைத்

தொண்டுப் பார்வையில் பெரியோரும் இல்லை; சிறியோரும் இல்லை. இத்தகைய பண்படுத்தப்பெற்ற பழுத்த மனம் கிடைத்த பிறகு செய்வதே தொண்டு. அஃதல்லாத பொழுது செய்வது தொண்டாகாது. அஃதொரு வகை வினையே. இந்த வினை தீமையையோ நன்மையையோ செய்யும். துன்பத்தையோ இன்பத்தையோ அல்லது இரண்டையுமோ தரும். புகழ்ச்சியையும் இகழ்ச்சியையும் தரும். உலகத்தில் விளையாட ஓர் அனுமதிச் சீட்டாக இது பயன்படலாம். ஆனால், உய்திபெற வேண்டுமானால் தொண்டராதலே நன்று. தொண்டராகிச் செய்யும் தொண்டு - செயலே செய்தாலும் - பின் பிறப்பைத் தராது. வாய்விண்ட வித்தைப் போல வினை மாண்டு போகும். இன்ப அன்பு செழிக்கும். அன்னியூர் ஆண்டவனை இதயத்தில் எழுந்தருளச் செய்க! அடக்க நினைக்காதே, அடங்குக! பணி செய்க! கள்ளினும் காமத்தினும் கொடிய புகழினைக் காமுற்று அலையாதே! இகழ்ச்சி கண்டு ஏக்கமுறாதே! யாவர்க்கும் தாழாகப் பழகு! வினை விளைத்தற்குக் காரணமாகிய உடலை ஓயாது உழைப்பில் ஈடுபடுத்து. உலகு தழைக்க உழைத்திடு. மற்றவர் கண்ணுக்கு மறைவாக வாழ். ஒளிந்தல்ல, ஒழுக்கத்தின் பாற்பட்டு! தொண்டராவாய்!

குண்டர் தேரருக் கண்ட னன்னியூர்த்
தொண்டு ளார்வினை விண்டு போகுமே.

– திருஞானசம்பந்தர்

# 17

# நீதியால் தொழுக

மனிதனது தேவைக்கேற்ப வருமானம் வந்து கொண்டிருந்தால் அவன் நேர்மைத் திறமுடையவனாக, ஒழுக்க சீலனாக, அறத்தின் வழிச்செல்பவனாகத் திகழ் கிறான். தேவையை நிறைவு செய்ய முடியவில்லையானால் திசைமாறித் திரும்புகிறான். தேவைப் பூர்த்திக்காக, சிந்தனை ஓட்டத்திலும் மாற்றம் ஏற்படுகின்றது. அவன் சிந்திப்ப தெல்லாம் 'தேவை நிறைவு' பற்றித்தான். அவ்வாறு முனையும் போது, அவனுக்கு முன்னாலே தோன்றும் நீதி, நேர்மை, ஒழுக்கம் முதலியவற்றைப் புறக்கணிக்க முயலுகிறான்.

இங்குதான் சமயம் மனிதனைத் திருத்தி நல்லாற்றுப் படுத்துகின்றது. 'சின்ன தேவைக்காக உலகின் நிலை பேறான ஒழுக்க நெறியை விட்டு வழுவாதே' என்று நல்லுரை பகருகின்றது சமயம். மனிதனது மனத்திலே தோன்றும் தீய எண்ணங்கள், தாறுமாறான சிந்தனைகள் இவைகளுக்குத் தடை போடுகிறது .சமயம். சமயச் சார்பற்ற ஒழுக்க நெறி, ஊற்றுக் கசிவில்லாத ஓடை போன்றதாகும்; மணற் பரப்பின் மீது கட்டப்பட்ட மனை போன்றதாகும்; வேரில்லாத மரம் போன்றதாகும். மனிதனை மனிதன் வஞ்சித்து ஏமாற்றி வாழ்கின்ற காலத்தில் சிந்தனையைத் திருத்துகிறது சமயம்.

சிந்தனை செயலாக வந்த பின்னர், செயலைத் திருத்த முற்படுகிறது அரசியல். குற்றங்கள் நிகழ்ந்த பின்னர் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து அவர்களுக்குத் தண்டனை வழங்குகிறது சட்டம். இந்தக் குற்றத்திற்கு அடிப்படையாக இருக்கும் எண்ணத்தையே-சிந்தனையையே திருப்பி நல்வழிப் படுத்துகிறது சமயம்.

வாழ்க்கை எப்பொழுதுமே குறைவுடையதுதான். சில இடங்களில் இதற்கு மாறாகத் தோற்றமளிக்கலாம். ஆனால் எல்லாருக்கும், எவ்வகையிலேனும் குறைவு இருந்து கொண்டேதான் இருக்கும். நிறைவான பொருள் எது என்பதைக் துருவித்துருவி ஆராய்கின்ற பொழுது ஆதியும் அந்தமுமற்ற இறைவன் ஒருவன்தான் என்ற முடிவு ஏற்படுகிறது. இறைவன் குறைவற்றவனாக அன்பே உருவாக இன்பமே வடிவினனாக இருக்கின்றான். இத்தகு பொருளை மனிதன் சார்ந்திருப்பதனால் சான்றாண்மை மிக்கவனாக மாறிவிடுகின்றான். இறைவனைச் சார்வதற்குச் சமயமும் வழிபாடும் உறுதுணையானவை.

இறைவனைத் தொழுதல் ஓர் அறிவியல் முயற்சி. அறியாமையில் அல்லலுறும் உயிர் ஞானத் திரளோனாக நிற்கும் இறைவனைத் தொழுதல் மூலம், அறியாமை நீங்கப் பெறுகிறது; உயிர் ஞானம் பெறுகிறது. துன்பத் தொடக்கில் தொல்லையுறும் உயிர், துன்பத் தொடக்கிலிருந்து விடுதலை பெற்று, இன்பத்தில் திளைத்து மகிழ்கிறது. இறைவனைத் தொழுதல் இறைவனுக்காக அல்ல. அவன் பெறக்கூடியது ஒன்றுமில்லை. இறைவனைத் தொழுதல் உயிரின் வளர்ச்சிக்கே யாம். இறைவனைத் தொழுதல் என்றால் உடனடியாகச் சடங்குகளே நினைவுக்கு வரும். சடங்குகள் சமயமாகா; இறைவனைத் தொழுதல் ஆகா. ஆனால் அவையின்றியும் சமய வாழ்வு வாராது; கடவுளைத் தொழுதலும் ஆகாது. சடங்குகள் சமயவாழ்க்கைப் பயிற்சிக்குத் தொடக்க நிலையில் துணை செய்வன; வழிபாட்டுணர்வில் நிலைத்து

நிற்கக் காப்பாகத் துணை செய்வன. இறைவனைச் சடங்கு களால் தொழும் அளவிலேயே தொழுகை முற்றுப்பெறாது. சடங்குகள் தொடக்க நிலையின. இறைவனைத் தொழுதலாகிய பயன் அல்லது சமய வாழ்க்கை அகநிறை அன்பால் அருளார்ந்த சீலத்தால், நீதியால், என்று முழுமை பெறுகிறதோ அன்றே இறைவனைத் தொழுதல் முழுமை நலம் எய்துகிறது.

சிலர், இறைவனைச் சடங்குகளால் தொழுகின்றனர். இல்லை; நாடகத்தால் நடிக்கின்றனர். ஆனால் அவர்கள் வாழ்க்கையில் அழுக்காறு அடங்கவில்லை; அழுக்காறு தோன்றுவதற்குரிய கூறுகளும் கெடவில்லை; அவாக்களால் அலைப்புறுகின்றனர்; வெகுளியால் வெந்து அழிகின்றனர்; கடுமொழி பேசுகின்றனர்; ஆங்காரத்தில் விஞ்சுகின்றனர்; பகைத் தீயால் பலருக்குத் துன்பம் செய்கின்றனர். தற்சார்பே தழைத்து நிற்கிறது; அநியாயமே ஆட்சி செய்கிறது; அநீதி அணிகலனாக விளங்குகிறது. இத்தகையோர் மனிதரில் "பொக்கு" போன்றவர். "பொக்கு" என்றால் உள்ளீடில்லாத பதர். "பொக்க மிக்கவர் பூவும் நீரும் கண்டு நக்கு நிற்பன்" என்பது அப்பரடிகள் வாக்கு. இத்தகையோர் சமய வேடங்கள் பூணலாம். ஆரவாரமான சமய சடங்குகளைச் செய்யலாம். ஆயினும் என்? அது இறைவனைத் தொழுத லாகாது.

திருஞானசம்பந்தர் இறைவனைத் தொழும் நெறி காட்டுகிறார். இறைவனைத் தொழுதல் என்பதே இறை வனின் குணங்களை மேற்கொண்டு ஒழுகுதல் என்பதே பொருள். பொறிகளால் செய்யும் நூறாயிரம் சடங்கை விட புலன்களால் நின்றொழுகும் பண்பு ஒன்றேயாயினும் அதற்குரிய தகுதி உண்டு; பயன் உண்டு. பலநூறு பண்புகள் புலனில் நின்றொழுகுதலிலும் உயிர்க்கு அவற்றைப் பண்பாக சேர்த்தல் அதனிலும் விழுமியது. ஆதலால் வாழும் வாழ்க்கை முறையால் இறைவனைத் தொழுதல் சிறந்த தொழுகை முறை.

இறைவன் துலாக்கோலனையன், வேண்டுதல் வேண்டாமையிலாதவன், நீதியின் வடிவம். இல்லை அவனே நீதி! நீதி மனித உலகத்தைத் தழுவியது. இல்லை! நீதி உயிர்க் குலமனைத்தையும் தழுவியது. உயிர்க்குலமனைத்துக்கும் ஊறு செய்யாத தத்துவமே நீதி. உயிர்க்குலத்திற்கு இயல்பியல் அன்பு காட்டுவதே நீதி. உயிர்க்குலத்தைக் காக்க அவசியம் ஏற்படும்போது தம்மை ஒறுத்துக் கொள்ளுதலே நீதி. நீதி உழைப்பைக் கவர்வதில் மகிழ்வதல்ல; உழைப்பில் மகிழ்வது. நீதி துய்ப்பில் மகிழ்வதல்ல; துறவில் மகிழ்வது. நீதி தற்சார்பைச் சார்ந்ததல்ல; நீதி இன்புறுத்துவதில் இன்புறுவது; நீதி வாழ்விப்பதில் வாழ்வது. இத்தகைய சீலம் நிறைந்த நீதியாய் வாழ்கின்ற வாழ்க்கை முறையால் இறைவனைத் தொழு; வினைச் சார்பு வராது என்கிறார் திருஞான சம்பந்தர். ஆம், செயல் புரிவது உயிரின் இயற்கை, செயல் மாண்டு அடங்குதல் எளிதன்று. செயலில் தவம் செய்தலே நம்மனோர்க்குச் சாலும். அதாவது வினை செய்தலில் தவம் செய்தலே நம்மனோர்க்கு இசைந்தது. வினை செய்தால் அவ்வழி பற்றும் பாசமும், இன்பமும் துன்பமும் வரத்தானே செய்யும்! அவ்வழி உயிர் மன அலைவுகளுக்கு ஆளாகும். ஆனால் நீதியால் நின்று வினை செய்யும் பொழுது அந்த வினை செயலைப் பெருக்குவதைவிட செயல் மாண்டடங்கத் துணை செய்கிறது. ஆதலால் செயல் செய்க! தற்சார்பான செயல்களைத் தவிர்த்திடுக! உலகுயிர் தழைத்தினிது மகிழ்ந்து வாழச் செயல் செய்க! அதுவே, இறைவனைத் தொழும் முறை என்பது திருஞானசம்பந்தர் வாக்கு.

*போதியார் பிண்டியா ரென்றிவர் பொய்ந்நூலை*
*வாதியா வம்பினம் மாவெனுங் கச்சியுள்*
*ஆதியார் மேவியா டுந்திரு வேகம்பம்*
*நீதியாற் றொழுமினும் மேல்வினை நில்லாவே.*

# 18

# எது திருத்தலம்?

திருத்தலம் — சிறந்த பெயர்! ஊர்களெல்லாம் திருத்தலங்கள் ஆகா. திருக்கோயில் இருக்கும் இடமெல்லாம் திருத்தலமாகி விடுவதில்லை. ஆம்! திருத்தலம் இயற்கையில் அமைவதன்று. திருவருள் துணையுடன் வளர்ந்த மனிதர்கள் படைப்பது திருத்தலம். ஆம்! மனிதன் ஊர்களையும் படைப்பான். சொர்க்கத்தையும் படைப்பான்; நகரத்தையும் படைப்பான்; திருத்தலங்களையும் படைப்பான். படைக்கும் மனிதனின் தரத்திற் கேற்ப ஊர் என்று பெயர் பெறுகிறது; திருத்தலம் என்று பெயர் பெறுகிறது. திருஞானசம்பந்தர் திருத்தலத்திற்கு இலக்கணம் காட்டுகிறார்.

பொய்ம்மை — புண்ணியத்திற்கு எதிரிடை. பொய்ம்மை உயிரின் வளர்ச்சிக்கு ஊறு செய்யும். உள்ளீடற்ற பதரினும் கேடானது பொய்ம்மை சேர் வாழ்க்கை. பொய்ம்மை, உயிர்க்கு ஊதியம் சேர்ப்பதற்குத் தடை. உயிர், ஊதியமற்றுப் போனால் உள்ளீடற்றுப் போகும். உயிரின் உள்ளீடாகிய அன்புறுபத்தி முதலிய இனிய பண்புகளில்லாதார் பொய்ம்மையே பேசுவர்; பொய்ம்மையே செய்வர். பாலை வனத்தில் பசுஞ்சோலையைக் கண்டாலும் காணலாம்.

பொய்ம்மை உலாவும் பதி, திருத்தலமாகாது. பொய்ம்மை செய்யாதவர் வாழும் பதியே திருத்தலமாகும்.

பொய்ம்மையை விஞ்சிய கொடுமை, சலம் செய்தல். கொலையினும் கொடுமை சலம் செய்தல். சலம் என்றால் என்ன? நல்லது போலக் காட்டித் தீமை செய்தல். அன்புடன் பழகுதல் போல நடித்துப் பகை வளர்த்தல். இதுவே வஞ்சகம். உள்ளம் ஒன்று வைத்துப் புறம் ஒன்று பேசுதல். விரைந்து செய்வார் போலக் காட்டி — ஆனாலும், ஏதும் செய்யா திருத்தல் சலம். வார்த்தைகளில் அக்கறை! ஆனால் வாழ்க் கையில் இல்லை! இத்தகையதோர் மனித உருவில் உலாவினாலும் இவர்கள் மனிதர்களல்லர். இத்தகையோர் வாழும் ஊர், வளர்தல் முயற்கொம்பே! ஊரே வளரமுடியாத பொழுது, திருத்தலம் ஆதல் ஏது?

மனிதரல்லார், வள்ளுவர் வார்த்தையில் மக்கட் பதடி எனப்படுவர். யாக்கைக்கே இரைதேடி அலைபவர்; எப்படி யாவது பிழைக்கவேண்டுமென்று எண்ணுபவர்; இவர்களுக்கு அறிவில் ஆர்வமில்லை; ஆள்வினையில் தேட்ட மில்லை. துய்த்தலில் பெரு வேட்கை. எதையும் பேசுவர். எதையும் செய்வர். இவர்களுக்கு நினைத்ததே விதி. இவர்களை வள்ளுவர் கயவர் என்பார். கொல்லாமையை எடுத்தோதிய திருவள்ளுவர் கயவரைக் கொன்றால்தான் பயன் என்றால் கொல்லலாம் என்றார். இத்தகைய இழிஞரை — கயவரை நீதர் என்று குறிப்பிடுகிறார் திருஞானசம்பந்தர். நீதித் தன்மையிலாதவர் நீதராகலாம். இவர்கள் வாழும் ஊரும் சுடுகாடாகலாமே தவிர ஊர் கூட ஆகாது. திருத்தலமாவதை எண்ணிக்கூடப் பார்க்க வேண்டாம்.

இதுவரையில் திருத்தலமாவதற்கு எதிரிடையாகவுள்ள குணக்கேடுகள் பற்றித் திருஞான சம்பந்தர் விவரித்தார். அதுபோலவே ஓர் ஊரைத் திருத்தலமாக்குவதற்குரிய பண்பு என்ன என்பதையும் விளக்குகிறர்.

மேட்டிலிருந்து பள்ளம் நோக்கித் தண்ணீர் வீழ்தல் இயற்கை. கீழ் நோக்குதல் உலக இயற்கை. மேல்நோக்கி

வளர்தல் உயிரினத்தின் தலையாய கடமை. மனிதர்க்கு உறுப்பென அமைந்த புலன்கள் இயல்பில் அழுக்குச் சார்புடையன. இழுக்குடை நெறியில் உயிர்களை இழுத்துச் செல்லும் தகையன. இது புலன்களின் தன்மை. தன்மையென்றாலும், இயற்கையன்று; மாறுதலுக்குரியது; வளர்ச்சிக்குரியது. கீழ்மைப் படாது வளரப் புலன்களை வெற்றி கொள்ள வேண்டும். புலன்களை வெற்றி பெறாதார் நல்லவர்களாதல் முடியாது. அவர்களுக்கு இறையருளும் கிட்டாது. ஆதலால் வென்ற ஐம்புலன் உடைய சான்றோர் வாழும் ஊர் திருத்தலம்.

திருத்தலம் திருக்கோயில் மட்டுமன்று. முடிந்த முடிபாகத் திருக்கோயிலும் திருக்கோயிலைச்சூழத் தக்காரும் வாழும் ஊரே திருத்தலம் என்பது திருஞானசம்பந்தர் திருவுள்ளம். தகுதி பலவும் உடையார் வாழும் பதியே திருத்தலம். தகுதியுடையார்தாமே தனக்குவமையில்லா தானைச் சிந்தனை செய்ய இயலும். சிந்தனை சிவத்தில் தோய்ந்தால்தானே புலன்கள் அழுக்கினின்றும் அகலும். சிந்தனையைச் சிவத்தில் வைத்தார், இறைவனை நீங்காது போற்றுவர். உள்ளம் அதனால் தூய்மை பெறும்; அகநிலை செழிக்கும்; பொறிகள் புனிதம் பெறும். இத்தகு தக்கோர் எண்ணுவன விளங்கும். செய்வன துலங்கும். அவர்கள் வாழும் சூழலே இன்பச் சூழல். எம்பெருமான் இந்தச் சூழலில் திருவருள் திருவோலக்கம் கொள்ளும். அப்பொழுதே ஊர் திருத்தலமாகிறது.

*நிலநீரொ டாகாச மனல் காலாகி நின்றைந்து*
*புலநீர்மை புறங்கண்டார் பொக்கஞ் செய்யார் போற்றோவார்*
*சலநீத ரல்லாதார் தக்கோர் வாழுந் தலச்சங்கை*
*நலநீர கோயிலே கோயிலாக நயந்தீரே,*

என்பது திருஞானசம்பந்தர் திருவாக்கு.

# 19

## அடியார்க்கு நல்லவையே!

இன்று தமிழ்ச் சாதியை — பாரத சமுதாயத்தை அரித்து அழிக்கும் தீய பழக்கங்களில் ஒன்று நாள் பார்த்தல் என்பது. 'நாள் பார்த்தல்' என்ற வழக்குத் தொன்மைக் காலத்தில் நாளை உரியவாறு பயன்படுத்துதல் என்ற பொருளிலேயே தொடங்கியிருக்க வேண்டும். ஆனால் இன்றோ, பணிகளைத் தள்ளிப் போடவும், அவ்வழி பயனை இழக்கவும்தான் நாள் பார்த்தல் என்னும் கொள்கை பயன்படுகிறது. மனிதனோடு தொடர்புடைய தத்துவங்களி லெல்லாம் மிகச் சிறந்த தத்துவம் காலம்தான். காலத் தத்துவம்தான் மனிதனை வளர்க்கிறது; பதப்படுத்துகிறது; துய்ப்பிற்குத் துணையாக நிற்கிறது. மனிதன் காலத் தத்துவத்திற்குக் கட்டுப்பட்டவன். அதாவது விரைந்து செல்லும் காலத்தின் இயல்பை அறிந்து, காலத்தை உரியவாறு பயன்படுத்திக் கொள்ளத் தவறி விடுவானானால் காலம் அவனை அழிக்கும். இம்மையும் மறுமையும் நரகமே கிடைக்கும்.

நாள் என்பதே காலத் தத்துவத்தை மனிதனுக்கு உணர்த்தும் ஒரு சொல். நாள் என்பது மனிதனின் வாழ்நாளின் ஒரு பகுதி. ஒரு மனிதனின் வாழ்நாள் சட்டென முழுமையாக அழிந்து விடுவதில்லை. இரும்பைத் துரு

அரித்து அழிப்பதைப் போல், மரத்தைக் கரையான் அணைந்து அரித்து அழிப்பதைப் போல், காலமும் நாள் என்ற பெயரில் வளர்வது போல, நயந்து காட்டி, அரித்து அழிக்கிறது.

கோள் என்பது, பூத காரியங்களுள் ஒன்று. கோள்கள் மாறுபடின் தட்ப வெப்பம் மாறலாம். தட்பவெட்பம் மாறு படின் மனிதனின் வாழ்வில் மாறுபாடுகள் தோன்றலாம். ஆனாலும் அவை மனிதனை அழித்து விடா. மனிதன் காலத் தத்துவத்தில் காலூன்றி நின்று கடமைகளைச் செய்து, காலம் அவனிடத்தில் கிழட்டுத்தனத்தைச் சேர்க்காமல் காலத்தை வெற்றி கொள்ள வேண்டும். இதுவே வாழ்க்கை முறை.

ஆனால் எதையும் எளிதில் வழிபடும் மனப் போக்குடைய நம்முடைய சமுதாயத்தினர் நாளையும் கோளையுங் கூட வழிபாட்டுப் பொருளாக்கி விட்டனர். அதுவும் அன்பில் மலர்ந்த வழிபாடா? இல்லை! அச்சத்தில் தோன்றிய வழிபாடு! வழிபாட்டிற்கு அடிப்படை, அச்சமாக இருப்பது முறையன்று. இன்று பலர், கடவுளைக் கூட வழிபடுவதில்லை. ஒன்பது கோள்களையே (நவக்கிரகங் களையே) வழிபட்டுக் கொண்டிருக்கின்றனர். என்ன பேதைமை! எப்படியிருந்தாலும் சைத்தான் சைத்தான் தானே! சைத்தான் என்னதான் நன்மை செய்தாலும் அது மாறாகத் துன்பத்தைத்தான் தரும். வழிபடுதற்குரியது கடவுள் ஒன்றேயாம்.

திருஞானசம்பந்தர், சமணரோடு பொருத மதுரைக்குப் பயணமாகிறார். பாலறாவாயர்மீது பரிவு கொண்டோர் "நாளும் கோளும் நன்றாக இல்லை" என்று சொல்கின்றனர். காழிப் பிள்ளையாரோ நாளும் கோளும் நமக்கு என்றும் நன்றே என்று ஐயத்திற்கிடமின்றிக் கோள்வழிப் பட்ட அச்சத்தை மறுக்கின்றார்.

"எனது தந்தை ஈசன், அருளே உடனாகவுடைய அம்மையைப் பங்கில் கொண்டவன். அந்த அருள் முன்னே இந்தக் கோள்கள் என்ன செய்ய முடியும்? எந்தை ஈசனோ

நஞ்சையும் அமுதாக்கியவன். காக்கும் கருணையைக் காட்டும் கறைக் கண்ட முடையவன். அவன், இணையற்ற இன்பப் பேரொலியாகிய வீணையொலியுடன் என் நெஞ்சத்தில் எழுந்தருளியுள்ளான். திங்களின் குறை நீக்கி நிறை வழங்கியவன். வையத்து இடர் நீக்கக் கங்கையைச் சடையில் தாங்கியருளினவன். அவன், என்னுள்ளத்தே புகுந்திருக்கின்றான். இனி, நான் மனிதனல்லன். எந்தை ஈசனின் அடியார்களில் ஒருவன். அவனுடைய தண்ணருளை, நாடி நரம்பில் எல்லாம் தேக்கி நான் வாழ்கிறேன். அதனால் நாளும் கோளும் நம்மைத் தீண்டா. இயல்பில் துன்பந் தரும் அவை, எமைத் தீண்டித் துன்பந் தராததோடன்றி நல்லவையும் செய்யும். எந்தை ஈசனின் கொற்றாள், நந்தமக்கும் கொற்றாளல்லரோ? எனவே நாளும் கோளும் சிவனடியார்க்கு நல்லவையே! என்றும் நல்லவையே; எப்பொழுதும் நல்லவையே! அவை அஞ்சுதற்குரியனவும் அல்ல". இங்ஙனம் நாளையும் கோளையும் வழிபடுவதை ஏழாம் நூற்றாண்டிலேயே மறுத்துப் பேசிய பெருமை திருமுறைத் தமிழுக்குண்டு.

ஐயன்மீர்! ஆளுடைய பிள்ளையின் வழிபாட்டைப் போற்றுமின்! நாளை — கோளைக்கண்டு அஞ்சன்மின்! இறைவன் உம் நெஞ்சத்தில் வந்து அமரத்தக்கவாறு தூய தவம் பேணுமின்! துன்பம் நலியும். இன்பம் பெருகும். இது திருஞானசம்பந்தரின் அறவுரையன்று; ஆணை!

*வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்*
*மிகநல்ல வீணை தடவி*
*மாசறு திங்கள் கங்கை முடிமேல ணிந்தென்*
*உளமே புகுந்த வதனால்*
*ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன்வியாழன் வெள்ளி*
*சனிபாம் பிரண்டு முடனே*
*ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல*
*அடியா ரவர்க்கு மிகவே.*

# 20

## பொய்யிலா அடிமை

அடிமை என்ற சொல்லின்மீது அண்மைக் காலமாக அரசியல் உலகத்திற்கு வெறுப்பு அதிகம். ஆம்! அடிமை வாழ்க்கையை அகற்றவே உலகம் முழுதும் எல்லா நாடு களிலும் போராடினார்கள். மக்களின் அடிமைத் தளையை அறுத்தெறிந்த ஃபிரெஞ்சுப் புரட்சியும், அமெரிக்கப் புரட்சியும், சோவியத் புரட்சியும், இந்திய விடுதலைப் புரட்சியும் மனித உலக வரலாற்றின் மைல் கற்கள்; திருப்பு மையங்கள்; நீங்கா நினைவுகள்! இங்ஙனம் ஒருபுறம் அடிமைத் தளையை அறுத்தெரியும் முயற்சி ஆவேசத்தோடு வெற்றி பெற்று வருகிறது! அதே போழ்து அருளாளர்கள் மையத்தில் அடிமை ஆர்வம்! ஏன் இந்த முரண்பாடு? விடுதலைக் கவிஞர் பாரதியும் கூட,

> பூமியில் எவர்க்கும் இனி அடிமை செய்யோம்—பரி
> பூரணனுக்கே அடிமை செய்து வாழ்வோம்

என்றார். ஏன்? உலகியலில் ஒரு மனிதன் பிறிதொரு மனிதனுக்கு அடிமையாவது, வயிற்றுப் பிழைப்புக்காக! 'வயிறு பிழைத்தல்' என்பதே எண்ணியும் பார்க்க முடியாத கேவல வாழ்க்கை! தன்னறிவில், தன் திறனில்,

தன்னுழைப்பில் வாழ்ந்தும் — வாழ்வித்தும் வாழ்தலே வாழ் வாங்கு வாழும் வாழ்க்கை! உலகியலில் மனிதன் அடிமைப் படுத்தப்படுகிறான். உலகியல் அடிமையில் அன்பின் கிழமை இல்லை; அறிவின் ஆக்கமில்லை; இன்பம் ஆமாறில்லை. இஃது அறியாமை வாழ்வு; அச்சத்தின் வழிப்பட்டது; துன்பமே சூழ்வது!

அருளியல் அடிமை பிழைப்புக்காக அல்ல; வாழ்தலுக் காக! அருளியல் அடிமையில் அடிமை கொள்வானும் அடிமையாக இருக்கிறான். அடிமைப்படுவானும் அடிமை யாக இருக்கிறான். அடிமை ஏற்கும் ஆண்டவன் 'அடியார்க் கெளியன் சிற்றம்பலவன்' என்று எழுதிய கைச்சாத்து, வரலாற்றுச் சிறப்புடையது. அருளியல் அடிமையில் அறிவு சிறக்கிறது; ஞானம் பெருகி வளர்கிறது; அன்பு நனிசிறந்து அருளாக மலர்கிறது. அம்மம்ம! அடிமைப் படுதல் தவறன்று. ஏன்? எதனால்? என்ற கேள்விக்கு விடை வரும்பொழுதே அடிமை கண்டிக்கப் பெறுகிறது. வெறும் ஆணுக்கு ஒரு பெண் அடிமையானால் இரங்கத் தக்கது. ஆனால், காதல் வழியில் அதே பெண் காதலனுக்கு அடிமையாதலும், அக் காதலன் காதலிக்கு அடிமையாதலும் வாழத் தெரிந்தவரின் சிறந்த பண்பு. அந்த வாழ்க்கையில் யார் ஆளுநர்? யார் அடிமை? என்ற கேள்விக்கே இடமில்லை. அந்தக் கேள்வி பிறக்குமானால் பிறந்த நிலையிலேயே அந்த மனையறம் இறக்கும். அங்கு உடல் பேசலாம். ஆனால் உயிர் பேசாது; உணர்வு பேசாது. உயிர்ப்பும் உணர்வும் இல்லாத வாழ்க்கை யும் ஒரு வாழ்க்கையா? அது போலவே வளரக் காமுறும் ஓர் உயிர் இறைவனைக் காதலித்து ஆர்வமுடைய தாகி அடிமை பூணுகிறது. இந்த அடிமை வாழ்க்கையில் இறைவனுக்கு இருக்கும் இன்பத்தைவிட உயிருக்கே இன்பம் அதிகம். உலகியல் அடிமை வாழ்க்கையில் உயிர் தேய்கிறது; அருளியல் அடிமை வாழ்க்கையில் உயிர் வளர்கிறது.

இறைவனுக்கு அடிமை! ஆம்! இறைவன் அருளே கருதி அடிமை பூணுதல்; வாழ்த்துவதன்றி வகையறியா வகையில் அடிமை பூணுதல்; திருவடியே பற்றுக்கோடாக அடிமை பூணுதல். அதுவே உண்மையான அடிமை! அத்தகைய அடிமைத் திறம் நாயன்மார்களிடத்தில் இருந்தது. இறைவனும் உவந்து கேட்டு அருளிச் செய்தான். அது மெய்யடிமை. இன்றோ, அருளியற் சூழலில் அடிமை என்ற சொல் வழக்கு அடிபடுகிறது. ஆனால் பொருள் வழக்கு இல்லை. இறைவன் பெயரால் ஓர் ஆதிக்கம் நடைபெறுகிறது; ஓர் ஆளும் வர்க்கம் உருவாக்கப்பெற்றுள்ளது. பல கோடி மனிதர்கள் அடிமைப்படுத்தப் பட்டிருக்கிறார்கள். ஆம்! இன்று இறைவன் பெயரை அடியார் உச்சரிக்கும் பொழு தெல்லாம் கோயிற் காணிக்கைகள் நினைவிற்கு வருகின்றன; காணி, பூமிகள் நினைவிற்கு வருகின்றன. சாதி, சமூக நினைவுகள் வருகின்றன; இன, மொழி நினைவுகள் வரு கின்றன. இவையெல்லாம் அருளியல் அடிமைப் பண்புகளா? இல்லை, இல்லை! இவையெல்லாம் இறைவன் பெயரில் நடக்கும் அடக்கு முறை ஆதிக்கம்! இந்த அடிமை, பொய்யடிமைத் தனமாகும். உடல், சிவத்தின் அடிமையாகக் கோலம் காட்டலாம். உதடுகள் சிவத்தின் அடிமையென்று சொல்லலாம். ஆனால் அந்தோ பரிதாபம்! உள்ளம் காணிக்கு, பூமிக்கு, காணிக்கைக்கு, சாதிச் சழக்குகளுக்கு, வம்புக்கு, பிழைப்புக்கு அடிமைப்பட்டிருப்பதை யார்தான் மறுக்க இயலும்? அதனாலே – பொய்யடிமைத்தனம் மிகுந்திருப்பதால் இறைவனும் பேச மறுக்கிறான். நாட்டில் நடமாட முன் வருகின்றானில்லை. அவன் பொய்யிலா அடிமை பூண்டவர்களுக்கே அருள் செய்பவன். **பொய்யில், உண்மை கலக்கலாம். அதனால் பொய் உண்மையாக மாறி வளரும். ஆனால், உண்மையில் பொய் கலப்பது பாவத்திற் பாவம்! அருளியலில் பொய்யடிமைத்தனம் வேண்டாம்.** அருளியலில் பொய்யடிமையைத் தவிர்ப்பது உடனடியான தேவை.

எங்ஙனம் தவிர்க்க முடியும்? பொய்யடிமைத்தனமே அரியணையும் ஏறி விட்டது; உபதேசங்களை உதிர்க்கின்றது. நாமெல்லாம் எளியவர்கள். என் செய்ய? புரட்சி தேவை. அருளியலில் பொய்யடிமை பூண்டொழுகுவோர் அறவே அகற்றப் பெறவேண்டும். இதுவே திருஞானசம்பந்தரின் திருவுள்ளம்.

*கையரிவையர் மெல்விரல்லவை காட்டி யம்மலர்க்*
*காந்தளங்குறி பையராவிரிவும் புற வார்பனங் காட்டூர்*
*மெய்யரிவையொர் பாகமாகவு மேவினாய்கழ லேத்தி*
*நாடொறும் பொய்யிலாவடிமை புரிந்தார்க் கருளாயே.*

– திருஞானசம்பந்தர்

# 21

# உய்யும் நெறி

மனித உலகு தொடங்கிய காலந்தொட்டு ஓயாது ஒரு போர் நடந்துகொண்டிருக்கிறது. போர் ஒன்றல்ல பலப்பல. ஆனாலும் போருக்குரிய அடிப்படை ஒன்றேயாம். இருளுக்கும் ஒளிக்குமிடையே போர். அறியாமைக்கும் அறிவுக்குமிடையே போர். ஆணவத்திற்கும் அடக்கத்திற்கு மிடையே போர். துன்பத்திற்கும் இன்பத்திற்குமிடையே போர். பிறப்புக்கும் இறப்புக்குமிடையே போர். இந்தப் போர்கள் ஒவ்வொரு தனிமனிதனிடத்திலேயும் நாள்தோறும் — இல்லை, நாழிகை தோறும் நடந்துகொண்டேயிருக்கின்றன. அமரர்—அசுரர் சண்டை களங்களில் மட்டுமல்ல, நம்முடைய நெஞ்சக் களத்திலேயும் நடந்துகொண்டிருக்கிறது. இந்தப் போரில் வெற்றிபெற விழிப்புணர்வு தேவை; உழைப்பார்வம் தேவை. ஓயாது தொழிற்படும் இயல்பு தேவை. இச்சைகளுக்கு எளிதில் ஆளாகக் கூடாது. மயக்கம் மதியைக் கெடுக்கும். பொறிகளின் வலிமை புன்தொழிலை வளர்க்கும். புலன்களின் தூய்மை புண்ணியத்தைச் சேர்க்கும். ஏறி ஆடுவது, கழைக்கூத்து ஆனாலும், காசில் குறிக்கோள் இருப்பதைப் போல எத்தொழில் செய்தாலும் இறைவனிடத்தில் ஒன்றிய சிந்தனை தேவை. நமது பகைமை எளிதான ஒன்றல்ல. அம்மம்ம! செழு

ஞாயிறுங்கூட உலகில் முற்றாக இருளை யகற்ற முடியவில்லை. கோடானுகோடி நூல்களும் கூட அறியாமையை அகற்றுவதில் வெற்றி பெற்றதில்லை. எண்ணிக்கையில் பலவாகிய திருக்கோயில் களும் ஆணவத்திற்குச் சாவுமணி அடிப்பதில் வெற்றிபெற்ற பாடில்லை.

உயிர், இருளை எதிர்த்துப் போராடுவதை, என்று தொடங்கியதோ தெரியாது. உயிரின் படைக் கலங்கள் வளர்ந்துள்ளன என்பது உண்மை. ஆனாலும் போரில் வெற்றி கிட்டியபாடில்லை. அறிந்ததைவிட அறியாததல்லவா அதிகமாக இருக்கிறது! முனைப்பல்லவா முந்துகிறது! தன்னலப் பேய் துறவியையே துரத்துகிறதே! அந்தோ! இன்றைய துறவும் மண்ணிலும், பொன்னிலும் எடு பிடியிலும் மமதைச் செருக்கிலும் படிந்து மாசுற்றிருப்பதை அறியாதார் யார்? ஆம்! ஞாலம் முழுதும் இருளகற்றி ஒளிப்பரப்பப் பல நூறாயிரம் கைகள் ஓயாது உழைக்கின்றன! வண்ணவிளக்குகள் சொலிக்கின்றன! ஒரே ஒரு நொடி, ஏதோ நிகழ்கிறது! இருள் சூழ்ந்து விடுகிறது! கண்களால் பார்க்க இயலவில்லை! கால்களால் நடமாட முடியவில்லை! சிந்தனை சிதறி ஓடுகிறது! அச்சம் கால் கொள்ளுகிறது! இது இன்றைய அனுபவம். ஆம்! இருள் வலிமையுடையது. அறி யாமை ஆற்றலுடையது. இருளொடு போராடி வெற்றிபெற ஒளி மட்டும் போதாது. நாமே ஒளிமயமாக மாறவேண்டும். அறியாமை, அடர்த்து மோத வல்லது. வளர்ந்து வரும் அறிவையெல்லாம் எடுத்து விழுங்க வல்லது. அதனா லன்றோ, "அறிதோறறியாமை" என்றார் வள்ளுவர். இன்றும், நம்முடைய அறிவின் ஆற்றலைவிட அறியாமையின் தொகுதியே விஞ்சி நிற்கிறது. கற்றற்கு ஒன்றுமில்லை என்று எண்ணும் மனிதன் அல்லது சமூகம் வாழ்ந்து கொண்டி ருந்தாலும் மரணத்தின் வாயிலில் புகுந்து விட்டதாகவே கருத வேண்டும்.

'வளர்ந்த மனிதரையும், இருள் அணைத்து மயக்குகிறது; அறியாமை அச்சுறுத்துகிறது' என்பதனை நம் திருஞான சம்பந்தர் எடுத்துக் கூறும் முறை வியந்து பாராட்டுதலுக் குரியது. எம்பெருமான் மன்பதை உலகிற்குத் தீங்கு செய்த கடக்களிற்றை அடக்கி ஒடுக்கி அதனுடைய தோலையுரித்து அணிந்து கொள்கிறான். இச் செயல் நிகழும் பொழுது அப்பனுடனிருந்த அவனது அருளாற்றலாகிய — பரஞானமே யாகிய அம்மை அஞ்சி, அப்பனை அணைத்து அவனுள் ஒடுங்கியதாகக் கூறுகிறார். ஏன்? இந்தப் பாடலுக்குச் சொற்களால் பொருள் காண்பது பயனற்றது. இஃதொரு தத்துவப்பிழிவு. இல்லை, வாழ்வியல் படிப்பினை! அருளே ஆற்றலாகவுடைய, முழு ஞானமே திருவுடலாகவுடைய உமையே அஞ்சுகிறாள் என்பது அன்னையின் அச்சத்தை உணர்த்த வந்த இடமன்று. நம்மை, உடன் பிறந்தே கொல்லும் வியாதியெனப் பற்றி அழிக்கும் ஆணவத்தின் கொடுமையை உணர்த்த வந்தது. இருள்மலப் பிடிப்பில், ஆணவச் செருக்கில் சிக்குண்ட மனிதன் தேறுதல் அரிது. அவன் அறியாமை யையே அறிவெனப் போற்றுவான். மதம் பிடித்த யானை, பாகனையும் மீறிப் பல திசைகளிலும் ஓடித்திரிவதைப் போல அவனும் அலைந்து திரிவான். அந்தப் பச்சை ஆணவத்தின் தோலை யுரித்து, பக்திப் புனலில் நனைத்துப் பதப்படுத்தித் தொண்டு எனும் தூய வெய்யிலில் காயப்போட்டு வாழ்ந்தாலே வாழ்க்கையில் வெற்றி பெறலாம்.

இருள் கொடியது. அறியாமை, பாவம். மயங்குதல் மதியைக் கெடுக்கும். அடங்காமை ஆரிருள் உய்க்கும். புலனில் அழுக்கு புண்ணியத்தைக் கெடுக்கும். ஊனின் பெருக்கம் உயிரின் ஆக்கத்தைக் கெடுக்கும் என்று தெரிந்து தெளிதலே வாழ்க்கையின் தொடக்கம். எந்த நொடியிலும் வழுக்கி வீழாமல் அறியாமையோடு பொருதும் போர்க் குணம் மாறாமல் தாழ்வெனும் தன்மையோடு தவம் பல இயற்றித் திருத்தொண்டு செய்து வாழுதலே வாழ்வாங்கு

வாழும் நெறி. மனித உயிர்க்கு மாண்பினைச் சேர்க்கும் நெறி. அச்சத்தினின்று அகல அரனிடத்து ஒடுங்கிய அம்மையே போலச் சித்தத்தைச் சிவன்பாலே வைத்து ஒன்றுதலே உய்யும் நெறி.

*சங்கு செம்பவ ளத்திரண் முத்தவை தாங்கொடு*
*பொங்கு தெண்டிரை வந்தலைக் கும்புனற் பூந்தராய்த்*
*துங்க மால்களிற் றின்னுரி போர்த்துகந் தீர்சொலீர்*
*மங்கை பங்கமும் அங்கத்தொ டொன்றிய மாண்பதே!*

– திருஞானசம்பந்தர்

# 22

# வீடு பெறும் வழி

பிறவி, நோக்கமுடையதே — உயர் நோக்கமுடையதே. அதாவது, துன்பம் நீக்க வருவது பிறவி. இன்பம் தரவல்லது பிறவி. இல்லை; துன்பம் காரியம், துன்பத்துக்குக் காரணம் அறியாமை. காரணம் செழுமையுற்றாலே காரியம் கைகூடும். அறியாமை அகலவேண்டும். அறிவு பெருகி வளர வேண்டும். இந்த அறிவு ஐயத்தின் நீங்கியதாக இருக்க வேண்டும். ஐயத்தின் வழிபட்ட அறிவு, சொல் வழக்கால் அது அறிவு என்று சொல்லப்பட்டாலும், தன்மையால் அது தரும் பயனால் அது அறியாமையேயாகும். சிறந்த அறிவு சிற்றெல்லைக்குட் பட்டதன்று. எந்த ஒரு அறிவும் சிற்றெல்லைக்குள் பயிலும் வரையில் அது குறையுடைய அறிவே. எந்த ஒரு குறையும் அடுத்து முயன்றாலும் குறை நிலையிலேயே நிறைவைப் பெறமுடியாது. குறையறிவு, குறைவிலா நிறையறிவாய் இருக்கின்ற பரசிவத்துடன் உணர்வு நிலையில் உறவு பெற்று நிறைவு பெற்று, அந்த நிறைவைத் தனக்கு உரிமையாக்கிக் கொள்ளும் பொழுதே, முற்றாக அறியாமை அகல்கிறது; துன்பம் அகல்கிறது. இந்த நிலையிலேயே அறிவு, ஞானம் என்று பெயர் பெறுகிறது. துன்பத் தொடக்கிலிருந்து முற்றாக

விடுதலை பெற்று, இன்ப அன்பில் ஒன்றித் திளைத்தலே வீடு ஆகும்.

மனித வாழ்க்கையின் இலட்சியம் விடுதலையே — வீடு பெறுதலே. உலகியலில், குடியிருக்கும் வீடு இல்லாத வாழக்கை துன்பமானது. குடியிருக்கக் குடிசை இல்லாத அவல வாழ்க்கை இரங்கத்தக்கது.

*புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்*
*துச்சில் இருந்த உயிர்க்கு,*

– என்பது குறள்.

இந்த உலகியலில் எப்படி வீடு அற்ற வாழ்க்கை துன்பமானதோ, அதைப் போலவே உயிர்க்கு மறுமையில் இறைவன் திருவடியாகிய — இன்ப அன்பாகிய வீடு கிடைக்காது போனாலும் அவலமேயாம். இந்த உயர்ந்த வீட்டை ஞானத்தினாலன்றி வேறு எந்த வகையாலும் பெற முடியாது. சிலர், கொடிய விரதங்களாலேயே ஞானத்தை — வீட்டை அடைய முடியும் என்று நம்புகிறார்கள் — முயல்கிறார்கள். புத்தர்கூடத் துன்பத்தை மாற்றவே, விரதங்களால் ஆகிய துன்பத்தை ஏற்றுக்கொண்டார். அவர், துன்பத்தை மாற்றுவதற்கு உடலை வருத்தக்கூடிய விரதமுறைகளை எடுத்துச் சொன்னாரே தவிர, ஞானத்தைக் காட்டினாரில்லை. உடல் வருத்தமுறுவதனாலேயே, உயிர் அறியாமை நீங்குமா? உடல் வருந்தியதுதான் பயன்; உயிர்க்கு யாதொரு பயனும் இல்லை. சமணர்களும் அடிப்படித்தான். ஏன்? நம்முடைய நாட்டில் வறட்சித் தன்மையுடையதாக நடமாடும் வைதீகமும் அத்தகையதுதான். உண்ணாமல் உடலை வருத்துவதால் ஞானம் வராது. அதனால் உண்ணா நோன்பு முதலிய தவவொழுக்கங்கள் வேண்டாம் என்பது பொருளா? இல்லை. உடலை வருத்தும் உண்ணா நோன்பு வேறு, உடலைப் பதப்படுத்தும் உண்ணா நோன்பு வேறு. ஊனைப்பெருக்க உண்ணுதல் தவறு; ஊனைப் பாதுகாக்க

உண்பது அவசியம். உடம்பை அழித்திடும் தவம் கொடியது. அவ்வழி உயிரும் அழியும். அதனாலன்றோ திருமூலர்,

*உடம்பார் அழியின் உயிரார் அழிவர்*
*உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே,*

என்றார். இங்கு, வளர்த்தல் என்பது ஊன் பொதி தசைகளை வளர்த்தலன்று. பயன்படு தகுதியும் திறனும் வளர்த்தலே, வளர்த்தல் என்பதற்குக் கொள்ள வேண்டிய பொருள்.

ஆதலால், ஞானம் வேண்டுமா? உயிரைச் சார்ந்துள்ள அறியாமையை அகற்றுங்கள்; உடலை வருத்திப் பயனில்லை; உடல் வாடுவதால் உயர் ஞானம் கிட்டாது; வீடும் கிடைக்காது. இதுவே நமது சமயநெறி; திருஞானசம்பந்தர் காட்டிய நன்னெறி.

*வீடும் ஞானமும் வேண்டுதிரேல் விரதங்களால்*
*வாடின் ஞானம் என்னாவது?*

என்று கேட்கிறார். இந்த வினாவினால் கிடைக்கும் விடை, விரதங்களால் உயிரின் ஞான முயற்சியும் கெடும். மண்ணைக் கெடுத்து மனை கட்ட முடியுமா? கண்ணைக் கெடுத்துக் காவியம் படைக்க முடியுமா?

ஞானம் பெறுவதற்குக் கருவிகளாக, மிகச் சிறந்த நுட்ப முறையில் வழங்கிய அறிவுக் கருவிகளும், செய்கருவிகளும் செப்பமாக அமைந்தது உடம்பு. புலன்கள் அறிவுக்கருவிகள்; பொறிகள் செய்கருவிகள். அறிதலும் செய்தலும்கூட அறியாமை அகலவும் அறிவினைப் பெறவுமேயாம். அவை நிகழும்போது களைப்புத் தோன்றாமல் இருக்கச் சில இன்ப அனுபவங்களும் உடன் நிகழ்வாக நிகழ்கின்றன. உடலினைக் கொண்டு வாழும் போதெல்லாம், செய்கருவிகளாகிய பொறிகள் வாயிலாகவும் அறிகருவிகளாகிய புலன்கள் மூலமாகவும் நல்லறிவைச் சேர்த்துக்கொண்டே இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அறிவு வளரும்; வளர்ந்து

பேரறிவாக மலரும்; ஞானம் என்று பெயர் பெறும். இக் கருவிகள் அழிந்துபடின் எங்ஙனம் ஞானம் கிடைக்கும்? தூர்ந்த வாரியின் வாயிலாகக் கழனிக்கு நீர் கிடைக்குமா? ஞானமே கிடைக்காதபோது ஞானத்தின் பயனாகிய வீடும் கிடைக்காது. அப்படியானால், திருஞானசம்பந்தர் ஞானம் பெறக் காட்டும் வழி என்ன?

திருஞானசம்பந்தர், ஞானம்பெற — வீடுபெறக் காட்டும் வழி மிக எளிய வழி. நீரில் பலகால் மூழ்க வேண்டாம்; நெருப்பிடை நிற்க வேண்டாம்; காற்றையே குடித்து வாழ வேண்டாம்; காதல் மனை வாழ்க்கையைத் துறக்க வேண்டாம்; செந்தமிழ்க் கலை தேர்ந்து கற்றிடல் வேண்டாம், இசை வேண்டாம். அது மிக எளிய வழி. அது என்ன? திருவலஞ்சுழியில் எழுந்தருளியுள்ள இறைவனைத் திருஞானசம்பந்தர் பாடிய திருப்பாடல்களைப்பாடும் ஞானம் பெற்றிருக்கின்றவர் அடி சேர்ந்து, அவர்களைப் பாராட்டி, அவர் வழி நின்று ஒழுகுதல் மூலம் ஞானம் பெறலாம்; அவ்வழி வீடும் பெறலாம். மீண்டும் பாடலைப் படித்துச் சிந்தனை செய்து செயற்படுவோமாக.

*வீடும் ஞானமும் வேண்டுதி ரேல்விர தங்களால்*
*வாடின் ஞானம் என்னாவது? எந்தை வலஞ்சுழி*
*நாடி ஞான சம்பந்தன் செந்தமிழ் கொண்டிசை*
*பாடு ஞானம் வல்லாரடி சேர்வது ஞானமே.*

— திருஞானசம்பந்தர்

கு. கி. VII. 7.

# 23

# வெற்றி

இறைவன் ஏத்தலுக்குரியவன், போற்றிப் புகழ்தற்குரிய வன். ஏன்? இறைவன் என்ற காரணத்திற்காகவா? அவன் பலவற்றைத் தந்தருளுபவன் என்பதினாலா? அழித்திடுவான் என்ற அச்சத்தினாலா? அச்சம் பயம் ஆகியவற்றில் தொடங்கும் வழிபாடு, வழிபாடல்லவே.

பின் ஏன்? இறைவனுடைய வெற்றியைத்தான் பாடிப் பரவுகின்றோம். அவன் பெற்ற வெற்றிக்காகவே அவன் வாழ்த்தப் பெறுகிறான். வெற்றியா? யாரை வெற்றி கொண்டான்? வெற்றி கொள்ளப்பட்டவன் பகைவனா? வெற்றி என்றால் பகைவன் ஒருவன் வேண்டுமே! இறைவன் வேண்டுதல் வேண்டாமை இல்லாதவன்! குணம் குறி இல்லாதவன்! அப்படியானால் அவனுக்கு ஏது பகைவன்?

இறைவனுக்குப் பகைவனில்லை. பகைவனில்லை — என்றால் புராணங்களில் வருவன பொய்யா? முப்புரம் எரித்த வரலாறு! அறுமுகச் செவ்வேள் சூரபதுமனுடன் போர் புரிந்தது! இவையெல்லாம் என்ன? சூரபதுமன் இறைவனுக்குப் பகைவன் தானே! அரக்கர் இறைவனுக்குப் பகைவர்தானே!

புராணங்களைப் படித்துணரும் கலை, ஒரு நுண்கலை. புராணங்களுக்கு வெறும் சொற்பொருள் காண்பது போதாது; கூடாது. உய்த்துணர்தலுக் குரியன ஏராளம் உண்டு. அரக்கர் அரனுக்குப் பகைவரில்லை! சூரபதுமன் முருகனுக்குப் பகைவனல்லன்! பின்... சூரபதுமனுக்குப் பகையாகிய ஆணவம், அறியாமை, துன்பம் ஆகியன முருகனுக்கும் பகையே. தனக்குப் பகையாக — உடன் பிறந்தே கொல்லும் பகையாக விளங்கும் அறியாமை மேலீட்டால் அரக்கர் மெய்ப்பொருள் அறிவதில்லை; தம் அறியாமை யறிந்து விலக்குவதில்லை. அதுமட்டுமா? ஆணவச் சேர்க்கை யால் அதிகாரச் செருக்கு தலைகாட்டுகிறது. போற்றி வணங்கிப் பாங்காக இருந்து பணி செய்ய வேண்டியவர் களைக்கூட ஏவல் கொள்ளத் தூண்டுகிறது. அது தாயிற் சிறந்த இறைவனை — ஆற்றலை வழங்கிய அண்ணலைக்கூட எதிர்க்க அரக்கரைத் தூண்டுகிறது; முரட்டுத்தனம் சேர்க்கிறது; மிகை செய்கிறது.

கயிலையைத் தூக்க முயல்கிறான் இராவணன். ஏன்? தன் வலிமையைக் காட்ட! இராவணன் வலிமையுடையவன் தான்! ஆனால் அவன் வலிமைக்கும் எல்லை உண்டல்லவா? வலிமையின் எல்லை கடந்து விளங்கும் வலிமையோடு இறைவனோடு மோதுகிறான். இராவணன் மோதவில்லை; அவனது தீயபண்புகள் மோதுகின்றன.

இராவணன் தவத்தில் சிறந்தவன்; நாடோறும் பூசனை செய்பவன். “இராவணன் மேலது நீறு” என்று பாராட்டப் பெற்றவன். ஆனால் பெறவேண்டியன பெற்றபிறகு “தருக்கு” வந்து விட்டது. இல்லாதபோது உள்ள எளிமை, எளிமை யாகாது; அது ஏழ்மையே. பெற வேண்டியன எல்லாம் பெற்று விளங்கும் போது பெறும் எளிமையே எளிமைப் பண்பு. இராவணன், இயற்கையில் நல்லவன்; ஆனால் தருக்கு வந்து சேர்ந்து விட்டது. வந்தடைந்த தருக்கு இராவணனுக்கு நலம் தருவதற்கு வரவில்லை. மரத்தோடு ஒட்டி வளர்ந்து —

மரத்திலேயே பின்னிக் கிடந்து — மரம் போலவே விளங்கினாலும், புல்லுருவி மரத்துக்குப் பகையே. புல்லுருவி வளர்ந்த மரம் வளம் குன்றும் — வலிமை குன்றும்; பூக்காது — காய்க்காது. புல்லுருவி, ஒரு "பூர்ஷ்வா". அதாவது மரம் உழைத்து எடுத்துக்கொண்டு வரும் உணவை இடைமறித்துப் பறித்துக் கொள்வது அது. அதுபோல அறிவின் பயனை உயிர்க்குச் சேரவிடாமல் ஆணவம் தடுத்துப் பறிக்கும். அதனால் அவ்வாணவ முடையவன் மிண்டு செய்வான். எனவே, இறைவன் இராவணனை வெற்றி கொள்ளவில்லை; ஆறுமுகச் செவ்வேள் சூரபதுமனை வெற்றி கொள்ளவில்லை. அவர்களுடைய மிண்டுத் தனத்தையே வெற்றி கொண்டனர்.

இறைவன் பெற்ற வெற்றியால் இராவணனுக்கே பயன்; சூரபதுமனுக்கே பயன். மற்றவர்க்குப் பயன்தரும் வெற்றியே வெற்றி! அது இறைவன் பெறும் வெற்றியேயாம். தமக்கு நலன் சேர்க்கும் வெற்றி இறைவனின் வெற்றி! அதனாலேயே வணங்குகிறோம்; வாழ்த்துகிறோம்.

*வண்டலார் வயற்சாலி ஆலைவளம்*
*பொலிந்திடலார் புனல்திரை*
*கொண்டலார் கொணர்ந்தங் குலவுந்திகழ் கோட்டாற்றில்*
*தொண்டெலாம் துதிசெய்ய நின்றதொழிலனே! கழலால்*
*அரக்கனை*
*மிண்டெலாம் தவிர்த்தென் உகந்திட்ட வெற்றிமையே.*

— திருஞானசம்பந்தர்

# 24

## பரவும் முறையைப் பயில்க!

அறிவியல், தத்துவம் மட்டுமல்ல. அஃதொரு செய்முறை. விதிமுறைகளைப் பிசைந்து செய்யும் செயல்கள் அறிவியற் பயனைக் கூட்டுவிக்கும். இது பருவுலகில் காணப் படும் காட்சி.

அதுபோலவே, நுண்ணியலைச் சார்ந்த அறிவியலும் உண்டு. அதன் பெயர் சமயம். உயிர் நுண்பொருள். கடவுள் நுண் பொருள். இவை இரண்டைப் பற்றியும் திறனாய்வு செய்யும் தத்துவக் கொள்கைக்குச் சமயம் என்பது பெயர்.

உயிர் — கடவுள் இரண்டும் நுண் பொருளானாலும் இவை இரண்டுமின்றி உலகின் பருப்பொருள்கள் பொரு ளுடையனவாதலில்லை; பயன்படுதலும் இல்லை. நுண் பொருளுக்கும் பருப் பொருளுக்கும் உறவு ஏற்படுத்தி ஒன்றோடொன்று தொடர்புண்டாக்கி ஒன்றின் குறையைப் பிறிதொன்றின் மூலம் நீக்கி நிறை நலம் நல்குதல் வாழ்வியலின் அடிப்படை.

இந்த அடிப்படையை ஆராய்ந்து இருவேறு நுண் பொருள்களாக இருக்கின்ற கடவுள் — உயிர் இவ்விரண்டி

னிடையே இசைவு உண்டாக்குதல் சமயநெறியின் அடுத்த இலட்சியம்.

உயிர் நுண் பொருள்; அறிவுப் பொருள் ஆயினும் உயிரின் அறிவு இயல்பில் குறையுடையது. ஆனாலும் நிறை அறிவைப் பெறத் தகுதியுடையது. கடவுள் நுண் பொருளா னாலும் பேரறிவுப் பெரும் பொருள். உயிரின் குறையறிவை நிறை அறிவாக்குவது இறையின் பேரறிவே. இறையின் பேரறிவை, உயிர் பெறுதற்குரிய அறிவுச் செயல்முறையே வழிபாடு.

வழிபாடு ஒரு சடங்கல்ல. அஃது ஓர் உயிரியல் செய்யும்முறை. இறையின் பேரறிவை நினைந்து அதனோடு ஒன்றாகிக் கலந்து அதன் பேரறிவைத் தனக்கு உரிமையாக்கிக் கொண்டு உயிர் வளர்ந்து வாழுதலே வழிபாட்டின் பயன். உலகியல் விஞ்ஞானச் செயல் முறையினும் இந்தச் செயல்முறை அருமையானது; எளிதில் கைவரத் தக்கதன்று. இன்று பலர் வழிபடுகின்றனர். ஆனால், வல்லாங்கு வழிபடுபவர் எத்துணை பேர்? இல்லை என்றே கூறினும் மிகையன்று.

"நட்டகல்லும் பேசுமோ, நாதன் உள் இருக்கையில்?" என்றார் ஒரு சித்தர். என்ன பொருள்? நட்ட கல்லைச் சமய மெய்யுணர்வு வழிபாட்டு முறையில் கடவுளாக்க வேண்டும். இன்றும் பலர் பிறப்பின் வழி திருக்கோயில்களில் பூசனை உரிமை பெறுகின்றனர். அவர்களுக்குப் பயிற்சி இல்லை. இறை வழிபாடு — அதிலும் குறிப்பாகத் திருக்கோயில் வழிபாடு பயின்று செய்ய வேண்டிய ஒன்று. அஃது ஓர் அருள் நுட்பக்கலை! முயன்றால் எளிதில் கைகூடும். ஆனாலும் அருமையானது.

பூசனையில் இடையீடின்றி நினைத்தலாகிய தியானம் இன்றைக்குப் பலருக்குக் கைகூடுவதில்லை. அறுபட்ட கயிற்றைப்போல அறுந்த சிந்தனையே இன்று பலருக்கு!

நெஞ்சத்தால் இறைவன் திருநாமங்களை எண்ணுவோர் இல்லை. அகப் பூசனை செய்வோர் இன்று யார்? இதயக் கமலம் எத்துணை பேருக்குத் தெரியும்? உள்ளக் கிழியில் உருவெழுதும் உயர்கலை தெரிய வேண்டாமா? உள்ளக் கிழியில் எழுதிய உருவைப் புறத்தே கல்லில் — செம்பில் எழுந்தருளச் செய்விக்கும் திறன் பெற்றார் யார்? வழிபாட்டுக்கு இன்று பயிற்சி தருவாரில்லை. பயிற்சிபெற வேண்டுமென்ற உணர்வே கூட இன்று மறைந்து விட்டது.

திருஞானசம்பந்தரே வழிபாட்டு முறைகளைத் தாம் பயின்றதாகக் குறிப்பிடுகின்றார். ஆனால், நம்மனோர்க்கு வழிபாட்டு முறைகளைப் பயிலும் ஆர்வமில்லை; அஃது ஓர் இறை இயல் அறிவு என்ற நம்பிக்கைகூட இல்லை. ஆதலால், நாள்தோறும் இறைவனை வழிபட வேண்டும். வழிபட வேண்டிய முறையைப் பயின்று அறிந்து கொள்ளுதல் வேண்டும். அப்பொழுதே திருவருளின்பம் கிடைக்கும். இதனைத் திருஞானசம்பந்தர்,

*மரவம் பொழில்சூழ் கடவூர்*
*மண்ணுமயான மமர்ந்த*
*அரவமசைத்த பெருமா*
*னகலமறிய லாகப்*
*பரவுமுறையே பயிலும்*
*பந்தன்செஞ்சொன் மாலை*
*இரவும்பகலும் பரவி*
*நினைவார்வினைக ளிலரே,*

என்று பாடுகின்றார்.

# 25

# அப்பர்

தமிழக வரலாற்றில் ஏழாம் நூற்றாண்டு, ஒரு பொற்காலம்! "இருள்கடிந்து எழுகின்ற ஞாயிறே போன்று" அப்பரடிகள் உலாவந்த காலம்! அப்பரடிகள் சிவனடிக்கே பதித்த நெஞ்சுடையவர்; நடையறாப் பெருந்துறவு பூண்டவர்; தொண்டின் திருவுருவமேயாக நடமாடியவர். இன்று இருபதாம் நூற்றாண்டின், புதிய சீர்திருத்தம் என்று பேசப்படும் அனைத்தையும், ஏழாம் நூற்றாண்டிலேயே சிந்தித்துச் செயலாற்றிய பெருமை அப்பரடிகளுக்கு உண்டு.

## முடியாட்சியை எதிர்த்து முழங்கியவர்

உலக வரலாற்றில் முடியாட்சியை எதிர்த்து 14, 15ஆம் நூற்றாண்டுகளுக்குப் பிறகுதான் கிளர்ச்சிகள் தோன்றின. அமெரிக்காவில் கி.பி. 1783ஆம் ஆண்டிலும் பிரான்சு நாட்டில் கி.பி. 1789ஆம் ஆண்டிலும், சோவியத் ரஷ்யாவில் 1917ஆம் ஆண்டிலும்தான் மக்கட் புரட்சி தோன்றியது. ஆனால், நமது அப்பரடிகளோ ஏழாம் நூற்றாண்டிலேயே பல்லவப் பேரரசை எதிர்த்து மனித குலத்தின் அடிப்படை உரிமை களுக்காகப் போராடியவர்.

மனிதன் அரசுக்கு அடிமையல்ல. மனிதனின் உரிமைகளைப் பாதுகாக்கவே அரசு. அதிலும் சமயம், தனி மனிதனின் விருப்பார்வத்தைப் பொறுத்தது. இதில் தலையிட அரசுக்கு அதிகாரம் இல்லை என்று அப்பரடிகள் ஏழாம் நூற்றாண்டிலேயே உரிமை முழக்கம் செய்து வெற்றியும் பெற்றவர்.

அப்பரடிகள் சாதிகளை எதிர்த்தவர்; தீண்டாமையை எதிர்த்தவர்; மூடத்தனமான சடங்குகளை எதிர்த்தவர்; பல்வேறு சமயத் துறைகளிடையே இணைப்பைக் கண்டவர்; மதப் புரோகிதர்கள் வழி வேற்றுமைகள் உருவாதலைத் தவிர்த்தவர்; ஒருமை நிலையை உண்டாக்கியவர்; நாடு முழுவதும் நடையாக நடந்து நாளும் நன்மையளிக்கும் அருள்நெறிக் கொள்கைகளைப் பரப்பி வந்த பெருந் தகையாளர்.

திருநெறிய தமிழ் நெறிக்கும் புத்துயிர் அறித்த அண்ணல், அப்பரடிகள். திருஞானசம்பந்தருடன் சேர்ந்து நின்று அசைவன, அசையாதன அனைத்திலும் சமயம் பெருக்கிய உத்தமர். தமிழ் நாட்டின் திருத்தொண்டு வளர்வதற்காக அவதரித்தருளிய தமிழாளியர். பன்னிரு திருமுறைகளில் 4, 5, 6ஆம் திருமுறைளை அருளிச் செய்தவர். அப்பரடிகளின் திருமுறைகளை ஓதுவோர் திருநின்ற செம்மையே செம்மை நலம் எய்துவர். இஃது உண்மை; உறுதி.

அப்பரடிகள் திருநெறிய தமிழ்க் கவிதை யுலகிற்குத் தாண்டகம் என்ற புதுவகை யாப்பை வழங்கி யருளியுள்ளவர். இதனால் "தாண்டக வேந்தர்" என்று சிறப்பித்துப் பேசப்படுகிறவர். திருஞானசம்பந்தரால் 'அப்பர்' என்று அழைத்துச் சிறப்பிக்கப் பெற்றவர். அந்தணரில் சிறந்த அப்பூதியடிகள் அப்பரடிகளின் திருவடிப் போதுகளைப் பற்றிக்கொண்டு உய்திபெற்றவர்.

## சைவத்தின் இரு விழிகள்

தமிழ் நாட்டிலேயே, தொண்டை நாடு மிகவும் சிறப்புடையது. "தொண்டை நாடு சான்றோருடையது" என்பது ஆன்றோர் வாக்கு. சேக்கிழார் திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணத்தில் தொண்டை நாட்டின் சிறப்பினை விரிவாக விளக்கிப் பாடியுள்ளார்.

சைவ ஞானாசிரியர்கள் நால்வரில் இருவர் — அப்பரடிகளும், சுந்தரரும் அவதரித்த புண்ணிய நாடு தொண்டை நாடு. தொண்டை மண்டலத்தில் திருமுனைப் பாடி நாட்டில் சிவம் பெருக்கும் திருவாமூரில் அப்பரடிகள் தோன்றினார். அப்பரடிகளை நாட்டுக்கு அளித்த குலமரபு, சைவ வேளாண் மரபாகும்.

சைவ வேளாளர் மரபில் குறுக்கையர் குடியில் அப்பர் அவதாரம் செய்தார். திருவாமூரில் புகழனார் — மாதினியார் தம்பதிகளுக்கு இரண்டு தவ விளக்குகள் தோன்றின. ஒன்று மூத்தது — திலகவதியார் என்ற பெண். இரண்டாவது மருணீக்கியார் என்ற ஆண் மகவு. தங்களுடைய மனை யறத்தின் நன்கலமாகிய மக்களை முறையே வளர்த்தனர் பெற்றோர்!

## திலகவதியார்

திலகவதியாரை மணந்துகொள்ள கலிப்பகையார் விரும்பினார். இருபாலும் ஒத்துப்போய் திருமணம் செய் விக்கும் உடன்பாடு ஏற்பட்டது. இடையில் தமிழரசர் களுக்கும் வடபுலத்தரசர்களுக்கும் ஏற்பட்ட போரில் படைத் தலைமை ஏற்றுப் போரிட, கலிப்பகையார் சென்றுவிட்டார்.

இந்நிலையில், திலகவதியாரின் தந்தை புகழனார் இறந்து போனார். கற்புக்கடம் பூண்ட மாதினியாரும் உடன் இறந்தார். திலகவதியாரும் மருணீக்கியாரும் பெற்றோரை இழந்த நிலையில் ஆற்றொணாத் துயரத்திற்கு ஆளானார்கள்.

இந்நிலையில் மேலும் ஒரு துன்பம் படர்ந்தது. அதாவது போருக்குச் சென்றிருந்த கலிப்பகையார் போரில் திறமையாகப் போரிட்டு உயிர் கொடுத்துப் புகழ் பெற்றார். இது திலகவதியார் வாழ்க்கையில் ஈடு செய்ய முடியாத இழப்பு! என்ன செய்வார்? திலகவதியாரும் இறக்கத் துணிகிறார்.

ஆனால், அருமைத் தம்பி மருணீக்கியார் நலங்கருதி உயிர் துறந்தாரில்லை. அதேபோழ்து — திருமணம் ஆகாத நிலையேயாயினும் பேசிமுடித்த நிலையே போதுமானது என்று கைம்மை நோன்பு மேற்கொண்டு தவம் செய்யத் தலைப்பட்டார்; அத்துடன் மருணீக்கியாரைப் பேணி வளர்க்கும் பொறுப்பினையும் ஏற்றுக் கொண்டார். இதனை அப்பரடிகள்,

*'அம்மை யார் எனக்கு' என்றென்று அரற்றினேற்கு*
*அம்மை யாரைத்தந் தார் ஆரூர் ஐயரே!* (5–7:6)

என்று பாடுவதால் அறியலாம்.

உரிய அம்மையை (அம்மாவை) இழந்தேன். ஆனால், இறைவன் அம்மையைப் போலவே என்னைக் காக்க தமக்கையைத் தந்தான் என்று விளக்கி யருள்கின்றார். உறவால் தமக்கையேயாயினும் பணிநிலையில் அம்மை யாகவே திலகவதியார் விளங்கினார் என்பது உய்ந்துணரத் தக்கது.

## இளமைக் காலப் பணிகள்

மருணீக்கியார் நாளும் வளர்ந்து வந்தார்; இளமைக் கோலம் பெற்று விளங்கினார்: அறிவு வளரப் பெற்று உலகியல் உணர்வையும் பெற்றார். தமது குடும்பத்தில் தொடர்ந்து வந்த துன்பத்தை மறக்கப் பல நல்லறங்களை மேற்கொள்கிறார். உணவு வழங்கும் ஆதுலர் சாலைகள், தண்ணீர்ப் பந்தல்கள் அமைத்தல், காடு வளர்த்தல், குளங்கள்

அமைத்தல், கொடையளித்தல், விருந்தளித்தல், செந்தமிழ் நாவலர்களுக்கு வல்லாங்கு வழங்குதல், எல்லார்க்கும் உதவுதல் என்று நல்லறங்கள் பலவும் செய்தார்.

## சமணத்தில் சேர்தல்

இந்தக் காலம் சமண முனிவர்கள் தமிழகத்தில் கால்கொண்டிருந்த காலம். பாடலிபுத்திரத்தில் சமணப் பள்ளிகள் தோன்றின. தமிழ் நாட்டுமக்கள், சமண முனிவர் களின் வாதத் திறமையால் ஈர்க்கப் பெற்றனர். கொல்லாமையாகிய அருள்நலஞ் சார்ந்த ஒழுக்க நெறியைப் பரப்பியதனாலும் தமிழகத்தில் சமண சமயம் பரவும் நிலை உருவாகியது.

மருணீக்கியாருக்குத் தம்து குடும்பத்தில் தொடர்ந்து நடந்த உயிரிழப்புகளாலும் இன்னபிற சூழ்நிலைகளாலும் நிலையாமை உணர்வில் தலைப்பட்டுத் துறவு நெறியை விரும்பினார். சமணர்களின் அறிவுரைகள் மருணீக்கியாருக்கு இதமாக அமைந்தன; சமணத்தில் சேர்ந்தார். மருணீக்கியார் அல்லலுற்ற நிலையில் அறிவுரை — அறவுரை கூறித் தேற்றி, சைவ நெறியே சாலச்சிறந்தது என்று அவருக்கு உணர்த்து வார், அன்றும் இல்லை போலும்!

மருணீக்கியார் சமணத்தில் சேர்ந்து அருங்கலை நூலான எல்லாம் கற்றுத் தெளிந்து சமணர்களால் "தரும சேனர்" என்று பாராட்டப் பெற்றார்; சமணசமயத் தலை வரானார். ஆயினும் காலப்போக்கில் சமணசமய நெறி முறைகள் இயற்கைக்கு இசைந்தில்லாமையை உணர்ந்தார். வாழ்வைத் துறந்த ஒரு வாழ்வை, மருணீக்கியார் எண்ணிப் பார்க்கிறார்.

உடலினை வருத்தச் செய்யும் நோன்புகள் பற்றிய சிந்தனை அவருக்குத் தலைப்பட்டது என்பதனை அவர் பாடிய இசைப் பாடல்களாலும் "விரதமெலாம் மாண்ட

மனத்தான் கண்டாய்" என்றருளியதாலும் "வாச மலரெலாம் ஆனாய் நீயே" என்றும் "பழத்திடைச் சுவையொப்பாய்" என்றும் அருளிச் செய்த பாங்கின் வழியும் உணரமுடிகிறது. ஏன்? ஓர் ஆன்மாவின் வாழ்வில் ஏற்படும் வளர்ச்சியை முறைப்படுத்திப் பாடும் ஒரு பாடலில், துய்ப்பைத் தொடர்வதே துறவு என்ற பொருள்பட ஓதுகின்றார்.

அப்பன் நீ அம்மை நீ ஐய னும் நீ
அன்புடைய மாமனும் மாமி யும் நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொரு ளும் நீ
ஒரு குலமும் சுற்றமும் ஒரு ரும் நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்று வாய் நீ
துணையா யென் நெஞ்சந் துறப்பிப் பாய் நீ
இப் பொன் நீ இம்மணி நீ இம்முத்து நீ
இறைவன் நீ ஏறூர்ந்த செல்வன் நீயே, (6–95–1)

என்ற பாடலை ஓதி உணர்க.

ஓர் ஆன்மாவுக்கு உறவாய் வந்து உதவி செய்பவர்களை இப்பாடலில் தந்தை, தாய், தமையன், வாழ்க்கைத் துணை நலம் தந்துதவும் அன்புடைய மாமன் — மாமி, மனைவி, நுகர்பொருள்கள், குலம், சுற்றம், ஊர் என்று எல்லாம் முறைப்படுத்தி அருளிய நலத்தினை ஓர்க! உணர்க!

ஓர் உயிர் தந்தையின் விந்துவில் கருக்கொண்டு வளர்ந்த காலத்தை இயல்பாக நாம் கணக்கில் சேர்த்துக் கொள்வதில்லை. எனவே பிறப்புக்கு முதல்நிலையில் தந்தையையும் அடுத்த ஈன்று புறந்தரும் தாயையும் குறித்தார். குழந்தைப் பருவத்தில் தோழமையாகப் பழகி வாழ்வளிப்ப வளும் தாயே! ஓர் ஆன்மா பிறக்கும்பொழுதே அந்த ஆன்மாவோடு துணை சேர்க்க ஒரு பெண்ணையோ ஆணையோ ஈன்று வளர்த்து அன்புடன் மணமுடித்துக் கொடுப்பவர்கள் மாமனும், மாமியுமாவர்.

உலகியலில் பெரும்பாலும் ஆண் மக்களுக்கு அன்புடைய மாமனும் மாமியும் கிடைத்து விடுவதுண்டு. பெண்களுக்கு அன்புடைய மாமனும் மாமியும் கிடைக்க வேண்டும். இது நமது பிரார்த்தனை!

ஓர் ஆன்மா வளர நல்ல குலச்சார்பு தேவை. ஆம்! ஒழுக்க இயல்புகள் குலத்தின் வழிதானே வந்தமையும்! "குலஞ்சிறக்கும் ஒழுக்கம் குடிகட் கெல்லாம்" என்றான் கம்பன். அதுபோலவே உற்றுழி உதவச் சுற்றமும் தேவை. எல்லாவற்றிற்கும் மேலாக, பலர் கூடி வாழவேண்டாமா? எல்லாம் இறைவனின் அருட்கொடை! ஊர் என்பது பலர் கூடி ஒப்புரவுடையராக, ஒருமையுளராக வாழும் இடம்; உரிமையும் உறவும் உடையது சுற்றம்.

குலம், அறிவுக்கும் ஒழுகலாற்றுக்கும் களன். இத்தனை நலன்களும் அமைந்த நிலையில் மனிதன் பிறந்து வளர்கிறான். இங்ஙனம், வாழும் நலத்தினைப் பேசியவர் அப்பரடிகள். தரும சேனராக விளங்கியபோது அவருக்கு சமணசமயத்தில் நிலைகொள்ளும் உணர்வு வேறுபட்டது.

## சைவத்திற்குத் திரும்புதல்

இந்தச் சூழ்நிலையில் மருணீக்கியாருக்குத் தந்தையாக, தாயாக, தமக்கையாக, குலமாக, சுற்றமாக விளங்கிய திலகவதியார் தவமியற்றினார். நாளும் திருவதிகை வீரட் டானத்தில் எழுந்தருளியுள்ள இறைவனிடத்தில் திலகவதி யார் வேண்டிய பிரார்த்தனை என்ன? "அடியேன் பின்வந்தவனைப் பரசமயக் குழியினின்றும் எடுத்தாள வேண்டும்" என்பதே அந்தப் பிரார்த்தனை!

மருணீக்கியார் முன்செய்த தவமும், திலகவதியார் பிரார்த்தனையும் ஒருங்கிணையத் திருவதிகை ஈசன் திருவுளம் கொண்டான். தருமசேனராகிய மருள் நீக்கியாரை ஆட்கொள்ள அவருக்கு இறைவனால் கடுங்கனல் போன்ற

சூலை தரப்பெற்றது. மருணீக்கியார் குடலைச் சூலைநோய் வருத்த வருந்தினார்.

சமணர்கள், மந்திரங்களால் அந்தச் சூலை நோயை அகற்ற எடுத்த முயற்சிகள் வெற்றிபெறவில்லை. சமணர்கள் கைவிட்டுவிட்டனர்; துன்புற்ற அவர் திலகவதியை அடைந்து தமக்கையாரை — தாயன்பில் விஞ்சிய தமக்கையாரை, தவக் கொழுந்தை, திலகவதியாரை அடைந்து நிலமிசை வீழ்ந்து வணங்கினார்.

திலகவதியார் தம் இரு கைகளாலும் மருள்நீக்கியாரை எடுத்தாள்கின்றார். சைவநெறி தழுவவும் திருவதிகைத் திருக்கோயிலில் சென்று வழிபடவும் உரிமையளிக்கும் வகை யில் திலகவதியாரே "திருவாளன் திருநீறு" நல்கித் தீக்கை செய்து, உய்யுமாறு செய்தருளினார்.

சைவநெறியில் தீக்கை செய்தல், அன்று, எவ்வளவு எளிய முறையாக இருந்திருக்கிறது!

இன்று தீக்கை முறையில் குண்டங்கள் வேள்விகள் முதலியவை இடம்பெறுகின்றன. அதனால் பெருஞ்செலவு ஏற்படுகிறது. அதுமட்டுமா! சைவநெறியில் பெண்களும் தீக்கை செய்வித்தருளும் ஞானாசிரியராக அமையலாம் என்பதற்கும் திலகவதியார் மருணீக்கியாருக்கு ஞானாசிரி யராக அமைந்தது ஓர் எடுத்துக்காட்டு! மருணீக்கியார் உடனே திருவதிகை வீரட்டானத்து ஈசனை வணங்கி ஊனும் உள்ளமும் பொங்கிப் பெருக திருப்பதிகம் அருளிச் செய்கின்றார்.

கூற்றாயின வாறு விலக்க கிலீர்
　　கொடுமைபல செய்தன நான் அறியேன்
ஏற்றாய் அடிக் கேஇர வும் பகலும்
　　பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றா தென் வயிற்றின் அகம்படியே
　　குடரோடு துடக்கி முடக்கியிட

*ஆற்றேன் அடி யேன்அதி கைக் கெடில*
*வீரட்டா னத்துறை அம்மானே!* (4-1-1)

என்று பாடிப் பரவுகின்றார். திருவதிகை ஈசன் செந்தமிழ்ப் பாமாலைகளில் மகிழ்ந்து "திருநாவுக்கரசர்" என்ற புகழ் நாமத்தைச் சூட்டி அழைக்கின்றான். தமக்கையாரின் தூய அன்பினைக் கருவியாகக் கொண்டு, திருவதிகை ஈசன் அருளைப் பெற்று, சூலை நீங்கப் பெற்று, சிவனருளில் திளைத்தார்; இன்புற்றார்.

## சமணர்களால் ஏற்பட்ட துன்பங்கள்

இந்நிலையில் சமண முனிவர்கள் வாளாவிருக்க வில்லை. இந்திய நாட்டில், தமிழ் நாட்டில் வளர்ந்த சமயங்களுக்கிடையில் பூசல்கள் இருந்தன என்பது உண்மை. ஆனால் அவை மதச் சண்டைகளா? என்று ஆராய்ந்தறிய வேண்டும். உலகத்தில் மதத்தின் பெயரால் போர்கள் நடந்தன என்பது உண்மை. ஆயினும், அவை மதத்திற்காக நடந்த சண்டைகள் அல்ல. ஆதிக்கச் சண்டைகளேயாம்.

தமிழ்நாட்டில் சமணம் பரவிய காலத்தில், யாரும் அதை எதிர்க்கவில்லை. வழி வழிச் சைவ வேளாண் மரபினரான மருணீக்கியார், சமண சமயத்தைச் சார்ந்த போது யார் தடுத்தார்? ஒருவரும் தடுக்கவில்லை. பல்லவ, பாண்டிய மன்னர்களை மதம் மாற்றி அவர்களைத் தம் வசப்படுத்திக்கொண்டு மற்ற சமயத்தினருக்கு — குறிப்பாகச் சைவ சமயத்தினருக்குத் தொல்லை தந்த பொழுதே வம்பு பிறக்கிறது.

சமண சமயத்திற்கு மருள்நீக்கியார் சென்றபொழுது யாரும் அவரைத் தடுக்கவில்லை. திலகவதியார் கூட மனம் வருந்தினாரேயன்றித் தடுக்கவில்லை; ஆனால் தருமசேன ரான மருள்நீக்கியார், மீண்டும் சிவநெறிக்கு வர, தவம் செய்கிறார். அவ்வளவுதான்! மருள்நீக்கியார் சமணத்தி

லிருந்து சைவத்திற்கு மீள வந்தபொழுது சமணப் புள்ளிகள் ஆவேசப்படுகின்றன; அரசாணையை ஏவுகின்றன.

அகிம்சையைப் போதிக்கும் சமண சமயம், திருநாவுக் கரசருக்குச் சொல்லொணாத — எழுதிக்காட்ட இயலாத கொடிய துன்பங்களை விளைவித்தது. களிற்றுக் காலால் இடறவைத்தது; நச்சுச் சோறு ஊட்டியது; நீற்றறையில் இட்டது; கல்லில் கட்டிக் கடலில் எறிந்தது. சிவனருளைத் துணையாகக் கொண்டு திருநாவுக்கரசர் இந்த இடர்களை யெல்லாம் கடந்தார்; சமண சமய வன்முறைகளை வென்று விளங்கினார். ஒருவர் சமண சமயத்திலிருந்து மீண்டும் சைவத்திற்கு வந்ததில் எத்தனை எத்தனை அங்கலாய்ப்புகள்? கொடுமைகள்?

அந்நிலையிலும் கூடச் சைவ உலகம் அப்பரடிகளுக்குத் துணை நின்றதாகவும் தெரியவில்லை. ஏன்? இல்லை என்றே சொல்லலாம். மனிதரைப் பற்றிக் கவலைப்படாதவர்கள் நாம்! நமது சமயத் தலைவர்கள் கடவுளைப் பற்றியே அதிகம் எண்ணிக் கவலைப்படுகிறார்கள்! ஐயோ, பாவம்! வரலாறு தெரியாதவர்கள், வாழும் முறைமை தெரியாதவர்கள்!

திருநாவுக்கரசர் பொய் கடிந்தார்; பொறிகளின் மீது தனியரசாணை செலுத்தினார். பொறிகளுக்கும் புலன் களுக்கும் தோல்வியைத் தந்தார்; மெய்ந்நெறியே மேவி நின்றார்; திருவினைகளைக் கடந்து நின்றார்; திருந்தி சாத்வீக குணத்தைப் பெற்று வெற்றி கொண்டார். அன்பு நெறி யிலேயே நின்றார்.

திருநாவுக்கரசர் அருளிய திருமுறைகள் ஓதத்தக்கன; உணரத்தக்கன. திருநாவுக்கரசருடைய திருப்பாடல்கள் சமுதாய நலம் சார்ந்தன; சமுதாயத்தை நெறிப்படுத்தி நடத்தும் இயல்பின. திருநாவுக்கரசர் வழியில் நடைபோடில் சமுதாயம் வளரும்; வாழும்.

கு. கி. VII. 8.

## தன்னை அறிதல்

திருநாவுக்கரசர் சிவ நெறியில் தோய்ந்து விளங்கிய புலமை மிக்கவர். சைவத்தின் கொள்கையில் சிறந்தது தன்னை அறிதல்; அதன்பின்தான் தனக்குவமையில்லாத தலைவனை அறிதல்; உணர்தல். "தம்மை யுணர்ந்து தம்மையுடைய தலைவனை உணர்தல்" என்பது சைவ மரபு.

அறிவியல் முறையில் ஆய்வு செய்தாலும் நம்மை, நமது நிலையை, நமது தேவையை உணர்தலே முதற் பணி; நமது நிலையை நமது தேவையை உணராமல் எங்கே போவது? எதைத் தேடுவது? அதனால் சைவ மரபு, தன்னை யறிதலையே சமயக் கடமைகளில் முதன்மைப்படுத்தியது. திருநாவுக்கரசரும்,

*தன்னில் தன்னை அறியும் தலைமகன்*
*தன்னில் தன்னை அறியில் தலைப்படும்*
*தன்னில் தன்னை அறிவிலன் ஆயிடில்*
*தன்னில் தன்னையும் சார்தற்கு அரியனே,* (5–97.29)

என்றருளிச் செய்தார்.

## உள்ளமே கோயில்

*பப்போதிப் பவணனாய்ப் பறித்தொரு தலையோடே*
*திரிதர் வேனை*
*ஒப்போட ஓதுவித்தென் உள்ளத்தின் உள்ளிருந்தங்கு*
*உறுதிகாட்டி*
*அப்போதைக் கப்போதும் அடியவர்கட்கு ஆரமுதாம்*
*ஆரூரரை*
*எப்போதும் நினையாதே இருட்டறையின் மலடுகறந்து*
*எய்த்தவாறே.* (4–5.9)

இறைவன் உயிர்களுக்கு உயிராக இருந்தருள் செய்யும் பெற்றிமையை இந்தப் பாடல் உணர்த்துகிறது. திருநாவுக்

கரசர், "உள்ளக் கோயிலில் பெருமான் எழுந்தருளியுள்ள மையைப் பலர் அறிந்து கொள்வதில்லை. உள்ளத்தில் இறைவன் உள்ளான் என்பதை அறிந்து உணராதவர்கள் இறைவனை அடைவது அரிது" என்கிறார்.

ஆம்! மக்கள் இருட்டறையில் கரிய மலட்டுப் பசுவிடம் பால் கறந்ததைப் போலத்தான் வாழ்கின்றனர். "உள்ளத் துணர்மின்", உள்ளமே கோயில் என்று மேலும் அருளியமை யையும் அறிக! "துறந்தவர் உள்ளக் கமலம் மேவும் சோதித் திருவுரு போற்றி" என்று காஞ்சிபுராணம் போற்றும்; சேக்கிழார் பெருமானும் ஆன்மாவிற்கு, தன்னை அறியும் போதுதான் தன்னுடைய அறியாமையும் இயலாமையும் அறியவரும் என்றார்.

இந்தச் சூழ்நிலையில் கண்ணொளி இழந்தாருக்குக் கோல் ஒன்று தேவைபோல, ஆன்மா, இருளிலிருந்து ஒளியை நோக்கியும், கருவூரிலிருந்து திருவூரை நோக்கியும் நடத்த இருக்கும் பயணத்திற்குத் தனித்துணை தேவை. ஒளி தேவை; பேரொளி தேவை! வழித்துணை தேவை, மருந்து தேவை என்ற உணர்வு மேலிடும் போது தான் தெய்வம் உண்டெனும் சித்தம் உண்டாகி இறைவனைத் தேடும் ஆர்வம் தலைப்படும்.

*மெய்ம்மையாம் உழவைச் செய்து*
*விருப்பெனும் வித்தை வித்திப்*
*பொய்ம்மையாம் களையை வாங்கிப்*
*பொறையெனும் நீரைப் பாய்ச்சித்*
*தம்மையும் நோக்கிக் கண்டு*
*தகவெனும் வேலி இட்டுச்*
*செம்மையுள் நிற்ப ராகில்*
*சிவகதி விளையு மன்றே,* (4–76:2)

என்ற திருப்பாடலில் 'தம்மையும் நோக்கிக் கண்டு தகவெனும் வேலியிட்டு' என்ற அடி கவனத்திற்குரியது. சிவ போதத்தால் ஆன்ம தரிசனம்; சிவ தரிசனத்தால் ஆன்ம

சுத்தி. தகவு என்பது கொல்லாமை. கடவுள் உடலுக்குள் புகுந்து நின்று ஆட்டுவிக்கின்றான். பின் பக்குவம் வந்துழி அவனுக்குள்ளேயே ஒளித்துக் கொள்கின்றான். முன்னையது சிவ போதம். பின்னையது சிவ போகம்.

திருக்கன்றாப்பூர் திருத்தாண்டகப் பதிகத்தில் சிவன், உள்ளத்தில் எழுந்தருளியுள்ள பாங்கினை விளக்கமாகப் பாடியுள்ளார். மேலும்,

*வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்*
*தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்*
*சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே*
*வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே,*
(5–90–7)

என்று அப்பரடிகள் அருளிச் செய்தமை அறிக. நல்லதை நினைப்பதில் நாட்டம் செலுத்தாதது நெஞ்சு. ஆதலால், "மட நெஞ்சு" என்றார். நெஞ்சம் அமைந்தது எதற்காக? ஈசன் தன் திருவருளை நினைக்கவே நெஞ்சம். நெஞ்சு நினைத்தால் அது சொல்லாக உருக்கொள்ளும்.

ஆதலால், இறைவன் திருவடிகளை நினைத்த நெஞ்சு வாய்க்கு வாழ்த்தும் பணியைத் தருகிறது. வாய் இறைவன் புகழை வாழ்த்தவே வாய்த்தது. தலை, அவன் திருமுன்பு தாழ்த்தி வணங்க வாய்த்தது. ஒரு மனிதனின் உறுப்புக்களில் தலை, நெஞ்சு, வாய் ஆகியன திருவருட் பணியில் திருத்தொண்டில் ஈடுபடுதலைப் போல வளர்ச்சிக்கும் துணை செய்யும். பாதுகாப்பும் தரும். உய்யும் நெறியும் இதுவேயாம்!

இத்தன்மையுடையோர் மன உறுதியால் ஆட்டிப் படைக்கும் ஐம்பொறிகளைக் காவலில் வைப்பர். ஒருபோதும் மனங்கலங்கார்; திகைத்து நிற்கமாட்டார். அப்பரடிகளுடைய சிந்தைக்குச் சுருதி 'சிவாய நம' என்ற திருநாமம்; திருமந்திரம்.

எவருடைய உள்ளத்தில் சிவன் எம்பிரான் எழுந்தருள் கின்றான்? உணவின்றி வருந்தும் அனைவருக்கும் உணவளிப் போர், அறிவு நலம் மிகுதியும் பெற்றோர் ஆகியோர் உள்ளத்தில் அவன் எழுந்தருள்கின்றான். அறிவின் அடை யாளம் துன்பந்தவிர்த்தல். துன்பந் தவிர்த்தலுக்கு, துணையாயமையும் சிவனை, தேறித் தெளிதல்; உணர்தல்; வணங்குதல் — இந்த அறிவே அறிவு.

அன்புடையராதல், மெய்யன்புடையராதல் வேண்டும். பயன் கருதாது உள்ளவாறு காட்டும் அன்பு மெய்யன்பு. இந்த மெய்யன்பு பெறுதல் அவசியம். பொய்ம்மையும் தன்னலமும் எளிதில் நீங்கா. உடலை வருத்தியேனும் மெய்யன்பைப் பெறுதல் வேண்டும். அப்பரடிகள் எல்லை கடந்தவர். ஆதலால்,

> எவரேனும் தாமாக! விலாடத் திட்ட
> திருநீறும் சாதனமும் கண்டால் உள்கி
> உவராதே அவரவரைக் கண்ட போது
> உகந்தடிமைத் திறம் நினைந்து,

என்பார்.

திருநீறணிந்தவர் எவரேயானால் என்ன? அவரிடம் அன்பு காட்டுக. "மனிதரில் எவரேனும்" என்ற பிறகு, கடவுளில் ஏது வேறுபாடு! அப்பரடிகள் "இவர் தேவர்; அவர் தேவர்" என்று இரண்டாகப் பலவாகப் பேசிடும் மதச் சண்டைகளை மறுக்கிறார். ஒன்றே பரம்பொருள்! இரண்டு என்பது ஒன்றில்லை! ஒன்று என்றால் ஒருமை நிலை. இரண்டு என்றால் விவகாரம்.

ஆதலால், என்றும் எங்கும் உளனாகிய ஈசனை நினைந்து திருநீறணிந்து நிற்பவர் சிவனடியார். உயிர்க்கு உயிராக விளங்கும் கடவுளாகிய நடுதறியில், ஆன்மா கட்டப்பெற்றுள்ளது. பலருக்கு இன்று நெஞ்சமே இல்லை.

கூறுமாறு காணப்படுவதில்லை! நெஞ்சினைக் காணமுடியு மானால் அங்கு இறைவனைக் காணலாம்.

இறைவன், அன்பால் வழிபடுவோர் உள்ளத்தில் எழுந்தருள்கின்றான். அப்பரடிகள் காட்டும் வழிகாட்டுதலில், தன்னையறிதல், தன்னைக் கட்டுப்படுத்துதல். உயிருக்குயிராக உடம்பினுள் எழுந்தருளும் இறைவனை உணர்தல், வழிபாடு செய்தல் ஆகியன தேவை.

மனித வாழ்க்கையில் காலமும் நியதியும் இன்றியமை யாதன. காலம் போற்றியதில் அப்பரடிகள் தலை நின்றவர். காலத்தை வீணாக்குபவர்களைப் "பொழுது போக்கிப் புறக் கணிப்பார்" என்று கூறுகிறார். உலக இலக்கியங்களிலேயே இல்லாத புதிய செய்தி, "காலம் களவு போதல்" என்பது. பயன்படாது செலவழிக்கப் பெறும் காலம் களவுபோன காலம் என்கிறார். "களவு படாததோர் காலம் " — இது அப்பரடிகள் அருள்வாக்கு.

ஆனால் உலகியற் சூழலில் ஐம்பொறிகளின் கொட் டத்தை நோக்குழி வாழ்வதே அரிதாகிவிடுகிறது என்றார். உடம்பே கால்! கள்ளமே நாழி! துயரமே ஏற்றம்? துன்பமே கோல். பாழுக்கே நீர் இறைத்தல். பயிர்களோ காய்கின்றன. ஐவர் பயனில் செயலிலே தலைப்பட்டு அயர்ச்சியைத் தருகின்றனர்.

உடம்பொடு உயிர் தாங்கிப் பிறந்ததன் பயன் என்ன? இந்த உடம்பினைத் திருக்கோயிலாக்குதல்; உடம்பினுள் உத்தமனைக் காணுதல். இங்ஙனம் பயன் காணா வாழ்நிலையே "பயிர் அழிய விடல்" அதாவது பயிர் தீய்ந்து போகவிடுதல்.

இந்த உடலொடு கூடிய பிறப்பு ஒரு வாய்ப்பு. துன்பத்திலிருந்து நிலையாகத் தப்பித்துக் கொள்ளுதலுக் குரியது இப் பிறப்பு. இப் பிறவியின் அருமையினை அப்பரடிகள் விளக்கி உணர்த்துகின்றார்.

பல்வேறு பிறப்புக்களில் சுழன்று வந்த உயிர் இப்பிறப்பில் உய்தி பெறத் தவறினால் புழுவாய்ப் பிறக்கவும் நேரிடலாம் என்பது அப்பரடிகளின் கருத்து. "புழுவாய்ப் பிறக்கினும்" என்ற அருள் வாக்கு எண்ணத்தக்கது.

உயிரினத்தில் மனிதப் பிறவிக்கே மனம் உண்டு என்பது பழங்காலக் கொள்கை. நினைப்பதற்கு மனம் வேண்டும். மனமே இல்லாத பிறவியில் எங்ஙனம் நினைக்க முடியும்?

ஆதலால் "இப் பிறவியில் இறைவா உன்னை நினைந்தே என் ஆவி கழியும். கழிந்ததற்பின் என்னை மறக்கப்பெறாய் எம்பிரான் உன்னை வேண்டியதே" என்றார்.

*முன்னே உரைத்தால் முகமனே யொக்கும் இம்மூவுலகுக்கு*
*அன்னையும் அத்தனும் ஆவாய் அழல்வணா நீயலையோ*
*உன்னை நினைந்தே கழியும்என் ஆவி கழிந்ததற்பின்*
*என்னை மறக்கப் பெறாய், எம்பிரான் உன்னை*
*வேண்டியதே!* (4.112,3)

என்ற திருப்பாடல் உணர்த்தும் உண்மை அறிக.

முகமன் என்பது முகஸ்துதி. இந்த உலகியலில் முகமனே மிகுதி. உள்ளவாறு பேசுவோர் எண்ணிக்கை குறைவு. முகமனில் சொல்லப்பெறும் புகழுரை உண்மை யாகவும் இருக்கலாம்; உண்மை இல்லாமலும் இருக்கலாம். ஆயினும் முகமன் வசப்படுபவர்களின் எண்ணிக்கையே மிகுதி.

இறைவன் முன்னே, மொழியப் பெறும் புகழ், பொருள் சேர் புகழ். இறைவன் உலகுயிர்களுக்கெல்லாம் தந்தை, தாய் என்பது உண்மை. இது சத்தியம். இதனை இறைவன் திருமுன்பு மொழிதல் அவசியமில்லாதது. ஆனாலும் மக்கள் விடுவதில்லை. முறை கருதி முகமன் என்றார். உண்மையில் இறைவன் முன், மொழிவது முகமன் அல்ல, பொருள்சேர் புகழேயாம்.

இறைவா! நினைக்கும் புலன் பெற்றுள்ள மனிதப் பிறவியில், ஊனில் உயிருள்ளவரை உன்னை நினைப்பேன். நினைத்துக்கொண்டே இருப்பேன். மறவாமை ஊடாடாத நினைவில் நிலைத்திருந்து ஆவியை உன் நினைப்புடனேயே கழிப்பேன். உடலிலிருந்து உயிர் பிரிந்து போன பிறகு நான் என் செய்வேன்?

நினைக்குமாறுடைய பிறவி கிடைத்தால் பிழை வராது. நினைத்தற்குரிய மனம், நெஞ்சு, புலன் பெறாத இழி பிறவியைத் தந்தால் என் செய்வது? இறைவா, அப்போது நீ என்னை மறக்காது இருந்தருள் செய்ய வேண்டும் என்று வேண்டுகிறார். கல் நெஞ்சையும் உருகச் செய்யும் பாட்டு இது.

## நீதி உணர்வு

அப்பரடிகள் சமுதாயச் சிந்தனையாளர். ஆதலால் நீதி பற்றிய சிந்தனையில் சிறந்து விளங்கினார். நீதி என்பது என்ன? ஆன்மாவின் நல்ல குணம் நீதி. நீதி மனித குலத்தில் நட்பை வளர்க்கும்; பெற்ற நட்பை உறுதிப்படுத்தும்; ஒருவருக் கொருவர் நீதி நெறிமுறையில் நடந்து கொள்வார்கள்; பழகுவார்கள். அவர்கள் பிரிவதில்லை. இது வரலாற் றுண்மை.

நீதிக்கு முரணான ஆசைகள், செயல்முறைகள் தோன்றும்பொழுதுதான் மக்கள் முரண்படுகிறார்கள், மாறு படுகிறார்கள், போரிடுகிறார்கள்; சாகிறார்கள். ஆதலால் நீதி சார்ந்த வாழ்க்கையே உயர்ந்தது, வாழ்வதற்குரியது.

மகவெனப் பல்லுயிரையும் ஒக்க நோக்குதல். எல்லா உயிர்களும் வாழ்தல் ஆகியன நீதி சார்ந்த சமுதாய அமைப்பு. தமிழ் மக்களிடத்தில் நீதி சார்ந்த வாழ்க்கை முறைச் சிந்தனை, நீதி சார்ந்த வாழ்க்கை கால்கொண்டு விளங்கியது.

சங்ககாலக் கவிஞர் பக்குடுக்கை நன்கணியார் "ஒரு வீட்டில் சாப்பறை கேட்கிறது; பிறிதொரு வீட்டில் மங்கல ஒலி கேட்கிறது! ஏன் இந்த முரண்பாடு?" என்று கேட்கிறார். அருகிலிருந்த ஒருவன் "இந்த முரண்பாடு படைப்பாளனின் செயல்" என்கிறான்.

உடனே கவிஞருக்குக் கோபம் மேலிடுகிறது. "அவலமும் அழுகையும் ஒரு வீட்டில்; களிப்பும் மகிழ்ச்சியும் பிறிதொரு வீட்டில் என்று எண்ணிப் படைத்திருப்பானாயின் அப் படைப்பாளன் பண்பில்லாதவன்" என்று ஏசுகிறார்.

இது மட்டுமா? "இந்த உலகம் இன்னாததாக இருக்க லாம். ஆனால், மானிடம் இந்த இன்னாத உலகத்தை இனியன பொதுளுவதாக மாற்றி அமைக்க வெண்டும்" என்று பாடுகிறார்.

ஓரில் நெய்தல் கறங்க ஓரில்
ஈர்ந்தண் முழவின் பாணி ததும்பப்
புணர்ந்தோர் பூவணி அணியப் பிரிந்தோர்
பைதல் உண்கண் பனிவார்பு உறைப்பப்
படைத்தோன் மன்றவப் பண்பி லாளன்!
இன்னாது அம்மஇவ் வுலகம்
இனிய காண்கஇதன் இயல்புணர்ந் தோரே! (புறம் 194)

என்பது அந்தப் பாடல். கச்சியப்பரும் "மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என்பார்.

அப்பரடிகள், நீதியை ஏற்போர் இந்த உலகத்தில் குறைவு என்று கூறுகின்றார். நீதிநெறி நிற்க விரும்பாதார் நீதி சொல்பவரைப் பார்த்து, "நீதிதான் சொல நீ எனக்கு யார்?" என்று கேட்பர். இதிலிருந்து புலப்படும் உண்மை, உறவினர்களே நீதி சொல்லும் இயல்பினர் — உரிமை யுடையவர் என்பதாகும்.

அப்பரடிகள் இறைவனை "நீதிமுறை விளங்க இம் மண்ணில் புகுந்து இம் மண்மேல் நடமாடியவன்" என்று பாடிப் பரவுகின்றார். மேலும் கோயில் பதிகத்தில் பெருமானை, "நீதியே நிறைவே" என்று பாடிப் பரவும் பாங்கினை அறிக, ஓர்க; உணர்க!

## பக்தி—தொண்டு

அன்பு, மனித குலத்திற்கும் சரி, உயிர்க்குலத்திற்கும் சரி, இயல்பாயமைந்த அடிப்படைப் பண்பு — குணம். இந்த அன்பு, காட்டும் இடம் நோக்கி வேறு வேறு பெயர் பெறுகிறது.

கடவுளிடத்தில் காட்டப்பெறும் அன்பு, பக்தி என்று கூறப்பெறும். அன்பினால் ஆன்மா நினைந்தும் உணர்ந்தும் கடவுளிடம் காட்டப்பெறுவது பக்தி. தூய சிந்தனை பிறக்க, இறையன்பு வேண்டும். மனம், புத்தி, வாக்கு, செயல் எல்லாம் இறைவனை நோக்கி நடப்பதே பக்தி நிறைந்த வாழ்க்கை.

காந்தத்தை நோக்கி இரும்பு நகர்கிறது. அல்லது காந்தத்தால் இரும்பு ஈர்க்கப்படுகிறது. மனைவி கணவனைக் காதலிக்கிறாள். கொடி, கொம்பைப் பற்றிக் கொண்டு படர்கிறது. ஆறுகள் அலைகடலை நோக்கி ஓடிக் கலக் கின்றன. அதுபோல — "தைலதாரை" போல இடையறாது இறைவன் திருவடிகளைச் சிந்தனை செய்வது பக்தி.

"இறைவனை நோக்கி ஆன்மா அழுதலே பக்தி" என்பார் டென்னிஸன். நாம் வாழும் இந்தக் கலியுகத்திற்கு ஏற்ற நெறி, பக்தி நெறியாகும். எரியூட்டப் பெற்ற நெருப்பு கூட இடைவிடாது விசிறியும் ஊதியும் எரியும்படி செய்யத் தவறினால் அணைந்து போகும்.

அதுபோலவே நாம் அரிதில் முயன்று கிடைத்த ஞானம், வைராக்கியம், பக்தி முதலியவற்றை வாசனா மலம் அழித்துவிடும்! கொட்டும் மழையில் நனைவதில் குளிர்

அதிகமாக இருக்காது. ஆனால், மழை ஓய்ந்தபின் மரத்தடியில் நின்றால் மரக் கிளைகளிலிருந்து விழும் சொட்டுக்கள் அதிகக் குளிரையும் நடுக்கத்தையும் தரும்.

அதுபோல மூலமலமாகிய ஆணவத்தைக் காட்டிலும் வாசனாமலம் வேகமாகத் தாக்க வல்லது. அதனால் ஆயுட்காலம் முழுவதும், ஜீவன் முத்தி நிலையிலும்கூட, பக்தி நலஞ்செறிந்த உறுதிப்பாடுடைய வாழ்க்கையைப் பேண வேண்டும்.

இந்த உலகத்தை நடத்துவது, இயக்குவது நம்பிக்கையும் பக்தியுமேயாகும். கடவுள், மனம், வாக்குகளைக் கடந்த பொருள். கடவுள் காணப்படாத பொருள் என்று வாளா இருத்தல் தற்கொலைக்குச் சமம்.

நம்பிக்கையுடன் கடவுளைத் தேடவேண்டும்; பக்தி செய்யவேண்டும். இதன்மூலம் கடவுளைக் கண்டும் விடலாம். எவ்வளவுதான் பக்தி உயர்ந்ததாயினும் பக்தி இலட்சியமல்ல. பக்தி ஒரு சாதனமே! இந்த பக்தியே இலட்சியமாக விளங்கும் இரங்கத்தக்க நிலை தோன்றியுள்ளது.

அப்பரடிகளின் அருள்நோக்கால் இந் நிலை மாற வேண்டும். அப்பரடிகள் ஞானத் தலைவர், பக்தி கொண்டு ஒழுகியவர்; திருத்தொண்டே சார்பெனக் கருதி ஒழுகியவர்; அவர்தம் வாழ்க்கையிலும் வாக்கிலும் திருத்தொண்டு மேவி இருந்தது. உடலுறுப்புக்கள் அனைத்தையும் திருத்தொண்டில் ஈடுபடுத்தும் வகையில் திரு அங்கமாலைப் பதிகம் அருளிச் செய்தார்.

திருநாவுக்கரசர், திருக்கோயில் தொண்டுகளைச் செய்யும்படித் தூண்டுகிறார். பழங்காலத்தில் திருக்கோயிலில் தொண்டுமுறையில் நிகழ்ந்த பணிகள் அனைத்தும் இன்று தொழில்களாக மாறிவிட்டன. அறநிலையத்துறை செய்த மகத்தான காரியம் திருக்கோயில் பணியாளர்களைத் தொழிலாளர்களாக்கித் தொழிற்சங்கம் அமைத்து வேலை நிறுத்தம்

வரையில் போய்விட்டது! இது இரங்கத்தக்க நிலை! அப்பரடிகள், உலகியல் சார்பு எதுவும் இல்லாதவர்; சிவன்தன் திருவடிகளே பற்றெனக் கொண்டு வாழ்ந்தவர். அவர்தம் படைக்கலம் ஐந்தெழுத்துதான்; இதனை,

*படைக்கல மாக உன் நாமத் தெழுத்தஞ் சென் நாவிற்*
*கொண்டேன்,*
*இடைக்கலம் அல்லேன்; எழுபிறப் பும் உனக் காட்*
*செய்கின்றேன்;*
*துடைக்கினும் போகேன்: தொழுது வணங்கித்தூ*
*நீறணிந்துன்*
*அடைக்கலம் கண்டாய் அணிதில்லைச் சிற்றம்*
*பலத்தானே!* (4.81.8)

என்ற பாடலால் அறியலாம்.

"இடைக்கலம் அல்லேன்! எழுபிறப்பும் உனக்கு ஆட் செய்கின்றேன்" என்ற சொற்றொடரால் பத்திமையில் உள்ள உறுதிப்பாடு விளங்குகிறது. அப்பரடிகள் சிவன் எம்பிரா னுக்கு இராப்பகல் என்ற வேற்றுமை யின்றித் தொண்டு செய்தவர்.

சிவனை, தம் தலைவனை நினைத்தொறும் நினைத் தொறும் அகங்குழைந்து மெய்வருந்தி அழுதவர். அதனா லேயே அவர் கண்கள், "மழைவாரும் இணை விழி" என்று மாதவச் சிவஞான முனிவர் போற்றினார்.

*தொழு தெழுந்து ஆடிப்பாடித்*
*தோத்திரம் பலவும் சொல்லி*
*அழுமவர்க்கு அன்பர் போலும்*
*ஆவடு துறையனாரே!* (4.56.4)

என்ற அருள்வாக்கு உபதேசம் அல்ல. அது, அவர் வாழ்ந்த முறை; நம்மனோர் பின்பற்ற வேண்டிய முறை. அப்பரடி களின் அடிச்சுவட்டில் பக்தியும் தொண்டும் வளர்ந்தால்

நாடு வளரும்; சிவநெறி வளரும்; செந்தமிழ் வளரும்; அல்லன அகலும்; அறம் வளரும்; அன்பும் அமைதியும் இன்பமும் வளரும்; எங்கும் அன்பே அமையும்; பெரு வாழ்வு தோன்றும்.

## சமுதாயக் கேடுகளை எதிர்த்தவர்

அப்பரடிகள் இறைநெறியில் எவ்வளவு காலூன்றி நின்றாரோ அவ்வளவுக்குச் சமுதாயத் துறையிலும் காலூன்றி நின்றவர். சமுதாயக் கேடுகளைக் களைவதில் முனைப்புடன் ஈடுபட்டவர்.

அப்பரடிகளுடன் இணைந்த கருவி உழவாரம். திருக்கோயில் விமானங்கள், மதில்கள், திருச்சுற்றுகள் முதலிய வற்றில் முளைத்த செடி கொடிகளை அப்புறப்படுத்துதலே உழவாரப் பணி. இந்த உழவாரத் திருத்தொண்டை 'கைத் திருத்தொண்டு' என்று சிறப்பித்துக் கூறுவார் சேக்கிழார். ஏன்? சிவபெருமானே — திவீழிமிழலை இறைவனே அப்பரடி களின் கைத்திருத் தொண்டில் திருவுள்ளம் கொண்டு வாசி இல்லாத காசு அருளிய பான்மை உள்ளவாறு உணரத்தக்கது.

திருத்தொண்டு செய்யும் பாங்கு வளர்தல் வேண்டும். திருமறைக்காட்டில் மூடப்பெற்றிருந்த திருக்கோயில் கதவைச் செந்தமிழ்ப் பதிகம் பாடித் திறக்கச் செய்து எல்லோரும் வழிபாடு செய்து கொள்ளும் வாய்ப்பினை வழங்கினார்.

சமுதாயத்தில் நிலவிய சாதிகளை வன்மையாக மறுத்தவர் திருநாவுக்கரசர்.

*சாத்திரம் பல பேசும் சழக்கர்காள்*
*கோத்திர மும்குல மும் கொண் டென்செய்வீர்*
*பாத்தி ரம் சிவ மென்று பணிதிரேல்*
*மாத்தி ரைக்குள் அருளுமாற் பேறரே!* (5.60.3)

என்பார். படித்தவர்கள் செய்வது சாத்திரம். படித்தவர்கள் உண்மையான சமுதாய நலத்திற்கு எதிரிடையாகக் கூடச் சாத்திரம் செய்வதுண்டு. இதைப் பாரதி "பொய்ச் சாத்திரம்"

என்பான். சமுதாய ஒருமை, சமுதாய நலன் ஆகியவற்றிற்கு விரோதமாகவும் தன்னயப்புக்களின் தூண்டுதலாலும் சாத்திர விதிகள் செய்வது உண்டு. இங்ஙனம் செய்யப்பெற்ற சாத்திரங்களில் "தீண்டாமை" என்பதும் ஒன்று.

அப்பரடிகள் காலத்தில் மனிதம் போற்றும் அடிப்படை கொள்கைக்கு மாறாகச் சாதி வேற்றுமைகள் குறிப்பாகத் தீண்டாமை முதலிய தீமைகள் நிலவின. இவற்றை அப்பரடிகள் கடுமையாகச் சாடினார். அப்பரடிகளைத் தீண்டாமை எதிர்ப்புக் கொள்கையிலிருந்து மாற்றப் பல முயற்சிகளைச் சாதிப் பித்தர்கள் மேற்கொண்டனர்.

நிதியளிப்புகள், நிலக்கொடைகள், அதிகாரம் உள்ள பதவிகள் ஆகியனவெல்லாம் வழங்க முன்வந்தனர். அப்பரடிகள் எதையும் வாங்கக்கூடத் தயாராக இல்லை. தீண்டாமை விலக்குக் கொள்கைகளை விட்டுவிடவும் அவருக்கு விழைவும் இல்லை. விருப்பமும் இல்லை.

அதன்பின் ஆசாரம் முதலியனவற்றைக் காரணமாகக் காட்டித் தீண்டாமையை நிலைநிறுத்த முயல்கின்றனர். ஆயினும் அப்பரடிகள் இவற்றுக்கெல்லாம் சற்றும் இடந் தராமல் மறுக்கிறார். இதனை,

சங்கநிதி பதுமநிதி இரண்டுந் தந்து
தரணியொடு வானாளத் தருவ ரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போம் அல்லோம்
மாதேவர்க் கேகாந்த ரல்லா ராகில்
அங்மெல்லாம் குறைந்தழுகு தொழுநோ யராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்ப ராகில்
அவர்கண்டீர் நாம்வணங்கும் கடவு ளாரே!

(6-95. 10)

என்ற பாடல் நமக்குத் தெரிவிக்கிறது.

இந்தப் பாடல் மூலம் அப்பரடிகளுக்குத் தீண்டாமை ஒழிப்பில் இருந்த உறுதிப்பாடு புலனாகிறது. மானுடம் சமத்துவம் பெற ஒரே ஒரு தகுதி மெய்ந்நெறி நின்று ஒழுகுதல்தான்; மற்றபடி குலமன்று, கோத்திரமன்று; வேறு, எதுவுமன்று. இது நமது சமய நெறியின் தொன்மையான விழுமிய கொள்கை. இடையில் வந்த தீமையே சாதி முதலியன.

“எவனேனும் அவன் சண்டாளனாய் இருப்பினும் “சிவ” என்று சொல்வானானால் அவனோடு பேசுக; அவனோடு உறவு கொள்க; அவனோடு வசிக்க; அவனோடு இருந்து உண்க” என்பது முண்டக உபநிடத வாக்கு. பிரம்ம சூத்திரம் இதையே வழிமொழிவதாக நீலகண்டபாடியம் எடுத்து வழி மொழிந்துளது.

ஆயினும், இந்த மெய்ம்மை வாக்கு — உண்மை — இன்றுள்ள முண்டக உபநிடதத்தில் இல்லை. சாதிப் பித்தர்கள் அதனை மறைத்து விட்டனர். ஆயினும் நமது நல்லூழால் இந்த உண்மைப் பொருள், மெய்ம்மை நெறி நமக்குக் கிடைத்துவிட்டது.

இதனைத் தேடி வழங்கிய பெருமை மாதவச் சிவஞான முனிவருக்கு உரியது. மாதவச் சிவஞான முனிவர், தாம் இயற்றியருளிய கலைசைப் பதிற்றுப் பத்தந்தாதியில்,

*சிவன்எனும் மொழியைக் கொடிய சண்டாளன்*
*செப்பிடின் அவனுடன் உறைக;*
*அவனோடு கலந்து பேசுக; அவனொடு*
*அருகிருந் துண்ணுக என்னும்*
*உவமையில் சுருதிப் பொருள்தனை நம்பா*
*ஊமரோ டுடன்பயில் கொடியோன்*
*இவனெனக் கழித்தால் ஐயனே கதிவே*
*றெனக்கிலை கலைசையாண் டகையே!*

என்று, மொழி பெயர்த்து அருளியுள்ள பெற்றியினை நன்றிக் கடப்பாட்டுடன் எண்ணுவோம்! ஏற்று வாழ்வோம்!

சாதிப் பற்றுடையார், "இங்கு சண்டாளன் என்பது உயர்குடியிற் பிறந்து இழிநிலை எய்தினோரையே குறிக்கும். பிறவிச் சண்டாளர் எனப்படும் தாழ்த்தப்பட்டவர்களை — ஆதிதிராவிடர்களைக் குறிக்காது" என்பர்.

ஆயினும், இது சாதியைக் காப்பாற்றும் புன்மைக் குணமே; புல்லறிவாண்மையேயாம். நமது மெய்மை நெறியின் கொள்கை முற்றாகச் சாதி வேற்றுமைகளை நீக்குவது; தீண்டாமையை அறவே அகற்றுவதேயாகும். என்று, நமது சமுதாயத்தில் தீண்டாமை அறவே அகன்று, ஒரு குல அமைப்பு தோன்றுகிறதோ அன்றே நமது சமுதாயம் வளரும்; வரலாற்றுப் போக்கில் பாதுகாப்புடன் இருக்கும்; நாடு வளரும்; நமது சமயம் வளரும்.

அந்த நாளும் வருமோ? இன்று, நாடு போகும் நிலைமையை நோக்கும்போது சாதி வேற்றுமைகள் அகலும், தீண்டாமை அறவே அகலும் என்ற நம்பிக்கை உண்டாக வில்லை.

ஏன்? நமது நாட்டு அரசியல் தலைவர்கள் நோய்க்கே மருத்துவம் செய்கின்றனர். நோயின் காரணத்தை நாடி மருத்துவம் செய்வாரைக் காணோம். அது மட்டுமல்ல, எது செய்தாலும் அதற்குக் கைமாறாகப் பாராட்டு; புகழ்; வாக்குகள் என்ற பிச்சைக்காரப் புத்தி வளர்கிறது.

பழைய காலத்தில் சாதி முறைகள் இருந்தன; தீண்டாமை இருந்தது; ஆனால் அன்று அவை நெகிழ்ந்து கொடுத்தன. இன்றுள்ள சமுதாய முன்னேற்றம் நடை முறைகள், ஒதுக்கீட்டுக் கொள்கைகள் சாதிமுறைகளை இறுக்கமாக்கிக் கொண்டு வருகின்றன.

தீண்டாமை விலக்குப் பணி, 'குடியிருப்பு' (காலனி) கட்டுவதன்று; ஊரில் ஊர் நடுவில் வீடு கட்டுவது;

தீண்டாமை விலக்குப் பணி, சாதி — சமூகத்தின் பெயரால் இட ஒதுக்கீடும் சலுகைகளும் அல்ல.

இதனால் சலுகைகளைக் காப்பாற்றும் பொருட்டுத் தீண்டாமை, தீண்டாமை வழிபட்ட சாதி உணர்வு இறுக்கமாகிறது. சாதிகளைக் காப்பாற்றினால்தான் சலுகைகள் கிடைக்கும் என்ற நம்பிக்கை வளர்கிறது.

இதனால் எங்கும் சாதிக் கலவரங்கள் தோன்றுகின்றன. இதற்கு மாறாகப் பின்தங்கிய நிலைக்குரிய அளவைகள் இன்னன்ன என்று ஆய்வுசெய்து தெளிந்து அந்த அடிப்படையில் மனிதகுலத்தை வரிசைப்படுத்தி அவரவர் உயர்வுக்குரிய உதவிகளைத் திட்டமிட்டுக் காலக் கெடுவுடன் வழங்கி உயர்த்தலாம்.

இதனால் கி.பி. 2001ஆம் ஆண்டிலாவது நம்முடைய நாட்டில் ஒரே குலம் தோன்றும், சமுதாயம் உருக்கொள்ளும். அந்தப் பொற்காலம் வருமா?

அப்பரடிகள் நம்முடைய சமுதாயத்திற்குப் பொருளியல் கோட்பாட்டையும் வகுத்தருளினார். அவர்தம் பொருளியல் கோட்பாடு அறநிலை தழீஇயது. அதாவது "தர்மகர்த்தா முறை". இந்த முறையைக் காந்தியடிகள் விரும்பினார்.

இன்று இந்தக் கோட்பாடுகளை ஏற்றுப் போற்றப் பெறாமல் இருப்பது தவக்குறைவேயாம். அதுவும் நமது சமய நிறுவனங்கள் இந்தக் கோட்பாட்டைச் செயற்படுத்தாமையை வரலாறு மன்னிக்காது.

இன்று நமது சமயம் சடங்குகளிலேயே வளர்கிறது; வாழ்கிறது. அதனால் ஆன்ம வளர்ச்சி இல்லை; அனுபவம் இல்லை. சடங்குகளை அப்பரடிகள் உடன்படா நிலையில் மறுக்கிறார். அவர் போற்றியது பக்தியும் தொண்டுமேயாம்.

கோலும் புல்லும்ஒரு கையில் கூர்ச்சமும்
தோலும் பூண்டு துயரமுற் றென்பயன்
நீல மாமயி லாடு துறையனே
நூலும் வேண்டுமோ நுண்ணுணர்ந் தோர்கட்கே,

(5.39.8)

என்றருளியுள்ள பாடல் மூடச் சடங்குகளை வன்மையாகக் கண்டிப்பதையும் — மறுத்துரைப்பதையும் உன்னுக. இன்று நம்மை ஆட்டிப் படைப்பன இத்தகைய சடங்குகள் தாமே!

## பரிபக்குவம்

அப்பரடிகள் வளர்ந்தவர். அப்பரடிகளின் பரிபக்குவத்தையும் படிமுறை வளர்ச்சியையும் அவர்தம் திருமுறைப் பாடல்களால் உய்த்துணர முடிகிறது.

அப்பரடிகள் வாழ்க்கையின் அருமைப்பாட்டை விளக்கிப் பேசிய வகையில் உள்ள பாடல் பலப்பல. "வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின்!" என்று அருளியுள்ளமை எண்ணத் தக்கது.

ஆயினும் வாழ்வாங்கு வாழத் தவறின் அல்லலுண்டு என்பதை மறுப்பார் யார்? வல்லாண்மையில்லாதார் வாழ்க்கையில் நேரிடும் துன்பங்களை, விதந்து கூறுகின்றார். மனிதனை விரைவில் கெடுத்து மனிதனை ஏவல் கொள்ளுந் திறமுடையது வறுமை. இந்த உலகில் வறுமைக்கு ஈடான கொடுமை வேறொன்றும் இல்லை. வறுமை, மனிதனைத் தீமை செய்யத் தூண்டும்.

வறுமை, மனிதனுடைய உணர்வைக் கெடுக்கும். நற்குணங்களையும் இழக்கச் செய்யும். "நெருப்பிற்குள் தூங்க முடியும். வறுமையோடு தூங்குதல் அரிது" என்கிறது திருக்குறள். வறுமை இருப்பது இழிவில்லை. வறுமையைக் கடக்க முயற்சி செய்யாமல் இருப்பதே இழிவு. ஆதலால், திருநாவுக்கரசர், "விரைந்தாளும் நல்குரவு" என்றார்.

வறுமைக்கு மாற்று செல்வமே! செல்வம் மனிதனை வறுமைத்துன்பத்திலிருந்து காப்பாற்றும். விரைந்தாலும் வறுமை வந்தடைந்தபோது உள்ள விரைவு, செல்வம் தேடுவதில், செல்வத்தினைச் சேர்ப்பதில் மனிதன் காட்டு வதில்லை. இதுதான் விநோதம்!

சினம் கொடுமையுள் கொடுமை. சினம் தன்னைச் சேர்ந்தாரைக் கொல்லும். வறுமைக்கும் கோபத்திற்கும் உறவு உண்டு. கோபம், அனைத்துத் துன்பங்களுக்கும் தாய்! இந்த உலகில் உள்ள தொல்லைகளைக் கூர்ந்து நோக்கின் அவையனைத்துக்கும் கோபமே காரணம் என்பதை அறியலாம்.

“கோபத்தை அடக்குபவனே பாக்கியசாலி” என்றார் முகம்மது நபி. கோபம் பைத்தியத்துக்குச் சமம். அதனால் அப்பரடிகள் “பொல்லா வெகுட்சி” என்றார்.

இவைபோலவே, மகிழ்ச்சியும் துன்பத்தைச் செய்யக் கூடியதே! மகிழ்தலோடு நிற்பார் யார்? மகிழ்ச்சியாலும் மதிமயங்கித் தீமை செய்தல் உண்டு. மகிழ்ச்சியை நாடித் தகாதன செய்தலும் உண்டு.

அடுத்து வெறுப்பு. வெறுப்பு, இந்த உலகத்தையே துன்பச் சுமையாக்கிவிடும். வெறுப்பே ஒரு சுமை. வெறுப்பு மிகமிகப் பளுவானது. ஆம்! வெறுக்கப்படுபவன் அழியும் வரையில் அவனை அழிப்பதற்குரிய காரியங்கள் செய்ய வேண்டுமே! அதனால், வெறுப்பு உடையாரிடம் மற்றவர்க்கு வெறுப்பன செய்யத்தான் நேரம் இருக்கும்; தாம் வாழ முடியாது.

வறுமை, பொல்லா வெகுட்சி, வெறுப்பு ஆகியன வாழ்க்கையின் எதிர்மறை இயல்புகளாக அமைந்தும் செல்வம், மகிழ்ச்சி முதலியன உடன்பாட்டு நிலையில் அமைந்தும் மானுட வாழ்க்கையை அரிப்பவை.

இவற்றின் வலையில் வீழாமல் திருவாரூரில் எழுந்தருளியுள்ள கற்பகத்தைப் பற்றிக் கொள்வது பாதுகாப்பு.

*விரைந்தாளும் நல்குரவே, செல்வே, பொல்லா*
*வெகுட்சியே, மகிழ்ச்சியே, வெறுப்பே நீங்கள்*
*நிரைந்தோடி மாநிலத்தை அரித்துத் தின்பீர்க்*
*கில்லையே நுகர்போகம்! யானோ வானோர்*
*கரைந்தோட வருநஞ்சை அமுது செய்த*
*கற்பகத்தைத் தற்பரத்தைத் திருவா ரூரில்*
*பரஞ்சோதி தனைக்காண்பேன் படேன்நும் பண்பிற்*
*பரிந்தோடி யோட்டந்து பகட்டேன் மின்னே!*

(6.27.8)

என்ற பாடல் நினையத் தக்கது.

ஐம்பொறிகள் இயல்பாக நல்லவையே. ஆயினும் முறையாகப் பழக்கப்படாத ஐம்பொறிகள் தீமையே செய்யும். ஐம்பொறிகளை அப்பரடிகள் "வஞ்சப் பொறிகள்" என்று கூறுகிறார். ஏன்? எதனால்? நல்லன செய்தல் போலத் தீமை செய்தலால் 'வஞ்சப் பொறிகள்' என்றார், ஐம்பொறிகளை.

புண் சுமந்த விலங்கின் உடலினை, நோய் ஏற்படும் வகையில் கொத்தித் தின்னும் காக்கை போல்வன என்று கூறுகிறார். ஆம்! ஐம்பொறிகளுக்கு நமது துன்பம் தெரியாது! தெரியாது! அதனால், "மூள்வாய தொழிற் பஞ்சேந்திரிய வஞ்ச முகரி காண்" என்றார்.

நாள்தோறும் ஐம்பொறிகள் நடத்தும் ஆட்சியை "மம்மர் ஆட்சி" என்றார். ஐம்பொறிகளின் வழியில் வீழாது தடுத்து, காப்பாற்றிக் கொள்ள, பற்றிக் கொள்ளும் நெடுந்தூண், திருவாரூர் ஆளும் நெடுந்தூண் என்றார்.

*மூள்வாய தொழிற் பஞ்சேந் திரிய வஞ்ச*
*முகரி காண் முழுதுமிவ் வுலகை யோடி*
*நாள் வாயு நும்முடைய மம்ம ரானை*
*நடாத்துகின்றீர்க் கமையாதே! யானேல் வானோர்*

*நீள்வான முகடதனைத் தாங்கி நின்ற*
*நெடுந்தூணைப் பாதாளக் கருவை ஆரூர்*
*ஆள்வானைக் கடுகச்சென் றடைவேன் நும்மால்*
*ஆட்டுணே னோட்டந்தீங் கலையேன் மின்னே!*

(6.27.9)

*இந்தப் பிறவித் துன்பத்தை மாற்ற வழிதான் என்ன? வேதம் ஓதுதலால் அடைய இயலுமா? வேள்விகள் செய்யலாமா? நீதி நூல்களைப் படித்தால் சாலுமா? இவையெல்லாம் பயன் தாரா! ஈசனை உணர்தலே வழி; வேறு வழியே இல்லை!*

*அதனால்தான் "நிலையில்லாத நீ நிலைபெறுமாறு வேண்டுதியேல் ஈசனை நினைந்துய்ம்மின்"; தில்லையுள் கூத்தனுக்கு அன்பு பூண்டால், ஆட்பட்டால் அல்லல் என் செய்யும்? வல் வினைகள்தான் என் செய்யும்? ஒன்றும் செய்யா? நமன் தமரும், "சிவன் தமர்" என்று ஓடிவிடும்!" என்று கூறுகிறார்.*

## பழிபாவங்களுக்குக் கழுவாய் எது?

*பாவம், பழி நீங்குவதற்கு என்ன வழி? என்று நினைந்து, அப்பரடிகள் பாவநாசத் திருப்பதிகம் அருளிச் செய்துள்ளார். உலகந் தோன்றிய நாள் தொட்டு மனித வாழ்க்கையில் பாவங்கள் நிகழ்ந்து வந்துள்ளன. அதே போழ்து பாவ நீக்கத்திற்குரிய முயற்சிகளும் மேற்கொள்ளப் பட்டு வந்துள்ளன.*

*கிறித்தவ மத வரலாற்றில் "பாவ மன்னிப்புச் சீட்டு முறை" எழுப்பிய புயல், — புயலின் விளைவு நாடறிந் தோருக்குத் தெரியும்.*

*மனு நீதிச் சோழன் வரலாற்றில் பாவமன்னிப்புச் சடங்குகளை அமைச்சர்கள் விதந்து கூறுவதைச் சேக்கிழார்*

எடுத்து கூறுகிறார். பாவமும் பழியும் அற்று வாழ்தல் வேண்டும்.

கங்கையாடுவதும் காவிரியாடுவதும் பாவநீக்கத்திற்குத் துணை செய்யுமா? சாத்திரங்கள் பல கற்றும் என்ன பயன்? காலையில் நித்தம் நீரில் மூழ்கி என்ன பயன்? காடுகளிலும் நாடுகளிலும் திரிவதால் என்ன பயன்? ஊன் வருந்த நோன்பிருந்து என்ன பயன்? இவையெல்லாம் பாவம் நீக்கா.

அரனுக்கு அன்பில்லாமல் ஆயிரம் ஆயிரம் நற்பணிகள் செய்யலாம். ஓடும் இயல்புடைய தண்ணீரை ஓட்டைக் குடத்தில் தொகுத்து வைத்து மூடினால் நிற்குமா? அதுபோலத்தான் அரனுக்கு அன்பில்லாது செய்த பணிகள்! அரனுக்கு அன்பின்றிச் செய்யும் அறம் அறமல்ல.

ஈசனுக்கு அன்புடையோரே பாவம் பழியிலிருந்து விடுதலை பெற முடியும்! இறைவன் சிவன்! அவனை நினைந்து ஏத்தி மகிழின் பயனுண்டு. ஈசன் திருவடிகளைப் பற்றுக் கோடாகக் கொண்டால் அவன் காப்பான்! அவன் காவலாளன்!

சிவன் — ஈசன் ஊனிலும் உயிரிலும் உணர்விலும் கலந்து நின்று அருள் செய்வான்; கலந்து நின்று காத்தல் செய்வான். ஆதலால், எங்கும் ஈசன் உளன் என்று எண்ணி, ஈசன் திறமே பேணின் பாவங்கள் நீங்கும்; பழி அகலும்.

அரனுக்கு அன்பு பூணுதல், அரன் உணர்த்தும் வழியில் திருத்தொண்டு செய்தல் பாவநீக்கத்திற்குரிய வழி. மற்றபடி கழுவாய் முதலியன பயன் தரா. பாவம், பழி முதலியவற்றைக் கழுவாய்முறை நீக்காது.

ஆதலால், பாவம் செய்யற்க! ஓடித் திரியும் மனத்தை மடைமாற்றம் செய்க! ஒரோவழி பாவம் நிகழ்ந்துவிட்டால் இறைவனை நினைந்து நினைந்து உருகுக! இதுவே பாவ மன்னிப்புப் பெறும் முறை.

இடையறாது இறைவனைத் துதித்தால் பாவம் அணுகாது. ஒரோவழி அணுகினாலும் அரனடிக்கே வைத்த பக்தியைச் சாதனமாகக் கொண்டால், அது மேலும் தீவிரமாக வீழ்த்திவிடாது.

## கல்வியும் ஞானமும்

இந்தப் பயிற்சிக்குக் கல்வியும் ஞானமும் தேவை. மானுடப் பிறவி பயனுடைய பிறவியாதல் கல்வியினாலே யாம். அதனாலன்றோ தமிழ்மறை 'கற்க' என்றது.

"கற்காமல் இருப்பதைவிடப் பிறக்காமல் இருப்பதே நல்லது" என்றும் "அறியாமையே தீவினையின் மூலவேர்" என்றும் பிளேட்டோ கூறினார்.

யௌவன இத்தாலி கண்ட மாஜினி "கல்வியே ஆன்மாவின் உணவு; கல்வி இல்லையேல் நமது சக்திகள் ஸ்தம்பித்துவிடும்; பயன் தரா" என்றான்.

கல்வியின் துறைகள் பலப்பல. அதில் துறைதோறும் கல்வி மெய்ப்பொருள் கல்வி என்று பிரித்துப் பார்க்க வேண்டும். "நூலறிவு வந்துவிடும், மெய்ப்பொருள் அறிவு வரத் தயங்குகிறது" என்பர் சிந்தனையாளர்.

முறையான கல்வி மனிதனைச் சான்றோன் ஆக்கும்; ஞானியாக்கும். திருமுறைகள், மெய்கண்ட சாத்திரங்கள் மெய்ப்பொருள் விளக்க நூல்கள் ஆகியவற்றை உண்மை உணர்த்தும் நூல்கள் என்று கூறலாம்.

உண்மை நூல்களைக் கல்லாதவர் மனத்தில் கடவுள் அணுகவும் மாட்டான். ஒரோவழி அணுகி வந்தாலும் அவர்தம் அறிவில், உள்ளத்தில் நின்றருள் செய்ய மாட்டான். "கல்லார் நெஞ்சில் நில்லான் ஈசன்" என்பது திருமந்திரம். திருஞானசம்பந்தரும் "கற்றல் கேட்டல் உடையார் பெரியார்" என்றார். நமது திருநாவுக்கரசர்,

கல்லாதார் மனத்தணுகாக் கடவுள் தன்னைக்
கற்றார்கள் உற்றோரும் காத லானை,

என்றார். கல்லாதார் மனம் இருள் நிறைந்தது. அறியாமையின் ஆதிக்கத்திலிருப்பது. ஆதலால் ஞானமே வடிவான அவனை, "கல்லாதார் மனத்தணுகாக் கடவுள்" என்றார். அடுத்து "கற்றார்கள் உற்றோருங் காதலான்" என்றார்.

கல்வி கற்றல் ஒரு கலை; சிறந்த பொழுதுபோக்கு. குறைந்த செலவில் நடைபெறக்கூடிய பொழுதுபோக்கு. அதுமட்டுமா? மனிதன் பூரணத்துவம் அடையவேண்டும். அதாவது அன்பு, ஆன்மா, உடல் மூன்றும் சம விகிதத்தில் பயன் நோக்கி வளரவேண்டும்.

தூய வாழ்வின் வழியில்தான் சரியான கல்வி கிடைக்கும். நூல்களைப் படித்தால் மட்டும் போதாது. அடுப்பில் எரியும் கட்டைகளைப் புரட்டிப் போட்டால் நெருப்பு நன்றாக எரியும். அதுபோலப் படித்த நூல்களை, செய்திகளை அசைபோடவேண்டும்; உரிமைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

திருநாவுக்கரசர் "உற்று, ஓர்தல்" என்றருளிச் செய் கின்றார். உற்று ஓர்தல் என்றால் கூர்ந்து ஆராய்தல். "நான் ஆர்? என் உள்ளம் ஆர்? ஞானங்கள் ஆர்?" என்று ஆராய்ந்தறிதலைத்தான் உற்று ஓர்தல் என்று அப்பரடிகள் விளக்கியருளினார்.

இங்ஙனம் கற்றால்தான் ஏதம் களையலாம். ஆன்மா, ஆணவப் பிணைப்பு, இறைவன் திருவருள் ஆகியன பற்றி அறிந்து ஆராய்ந்து தெளிந்த சிந்தனைபெற்றுத் தெய்வம் தெளிதல் கல்வியின் பயன்.

ஆன்மாவின் அறிவு கருவிகளில் சிறந்தது சித்தம். சித்தம், சிந்தனை செய்தலுக்குப் பயன்படுவது. சிந்தனை சித்தத்தில் செறிய வேண்டும். அதாவது, சிவனடியில்

தோய்ந்த சிந்தனை தேவை. சிவஞானத்தைச் சிந்திக்கும் இயல்பு, சித்தத்திற்கு மிகுதியும் உண்டு.

சிவனடியைச் சிந்திக்கும் பேறுபெற்ற மனிதர்கள் வறிதே வாழார். அவர்தம் வாழ்க்கைக்குக் குறிக்கோள் உண்டு. குறிக்கோள் இல்லாத வாழ்க்கை — பயனற்றது. அதனால் திருநாவுக்கரசர் "குறிக்கோள் இலாது கெட்டேன்" என்றார்.

மானுடப் பிறவி அமைந்தது விபத்தினால் அல்ல. இந்த வாழ்வியலில் ஓர் ஒழுங்கு இருக்கிறது. முறை பிறழாத நிகழ்ச்சியும் இருக்கிறது. இவற்றை உற்று நோக்கும்போதே, இந்த மானுட வாழ்வுக்கு ஏதோ குறிக்கோள் இருக்கவேண்டும் என்பதை உய்த்துணர முடிகிறது. அந்தக் குறிக்கோள்தான் என்ன?

குறைவிலிருந்து விடுதலை பெற்று நிறைவு பெறுதல்; குற்றங்களினின்று நீங்குதல் என்பதே. எனவே, நின்று ஒழுக வேண்டிய நெறியறிந்து அந்நெறி நின்று ஒழுகுதல் வேண்டும். அப்பரடிகள்,

*செறிவிலேன் சிந்தை யுள்ளே*
*சிவனடி தெரிய மாட்டேன்*
*குறியிலேன் குணமொன் றில்லேன்*
*கூறுமா கூற மாட்டேன்*
*நெறிபடு மதியொன் றில்லேன்*
*நினையுமா நினைய மாட்டேன்*
*அறிவிலேன் அயர்த்துப் போனேன்*
*ஆவடு துறையு ளானே!* (4.57.7)

என்று பாடுகிறார்.

செறிவு ஏன் கைகூடவில்லை? உயிர் வாழ்க்கை அனுபவம் விநோதமானது. வாழ்க்கை என்பது அடுப்பு. ஆசை என்ற தீ அந்த அடுப்பில் பற்றி எரிகிறது. ஆசையினால்

அடையும் துய்ப்பு, சொறி சிரங்கைச் சொரிந்தால் கிடைக்கும் சிறுபொழுது இன்பம் போன்றது.

ஆன்மா, இந்தச் சிறுபொழுது அனுபவ இன்பத்தையே சதமெனக் கருதி விளையாடுகிறது! எதுபோல? உலைப் பானையில் இளஞ்சூட்டில் விளையாடுகின்ற ஆமை போல! இளஞ்சூடாக இருந்த நீர் சில மணித் துளிகளில் கொதி நிலைக்கு மாறியதும் அதில் கிடக்கும் ஆமை அழிந்து விடும்.

அதுபோல ஆன்மா அழியலாகாது; தப்பித்து உய்தி பெறுதல் வேண்டும். உய்தி பெற என்ன வழி? சிவபெருமான் திருவடிகளை அன்பினால் நினைந்து குழைந்து வாழ்தலே உய்யும் வழி. மேலும்.

*வாய்த்தது நந்தமக் கீதோர் பிறவி மதித்திடுமின்*
*பார்த்தற்குப் பாசு பதமருள் செய்தவன் பத்தருள்ளீர்*
*கோத்தன்று முப்புரந் தீவளைத் தான்தில்லை யம்பலத்துக்*
*கூத்தனுக் காட்பட் டிருப்பதன் றோநந்தன் கூழைமையே!*

(4.81.5)

என்பார்.

பிறவியை இழிவெனக் கருதாதீர்! பிறவியைத் துன்பம் என எண்ணாதீர்! வாய்த்த இப்பிறவியை மதித்துப் போற்றி வாழ்மின்! தில்லைக் கூத்தனுக்கு ஆட்பட்டிருப்பதே கூழைமை — கடமை! இதுவே உய்யும் நெறி.

## தொண்டு

ஆற்றல் மிக்க அன்பால் இறைவனைப் பலகாலும் அழைக்க வேண்டும். சிவன் திருவருளை நினையுமாறு நினைந்து வாழ்த்தவேண்டும். பக்தி, ஞானம் இவ்விரண்டின் பயன் தொண்டு. “தொண்டலால் உயிர்க்கு ஊதியமில்லை” என்றும் “தொண்டலால் துணையும் இல்லை” என்றும் அப்பரடிகள் விதந்து கூறுவார்.

"தொண்டே முக்திக்கு வாயில்" என்றார் அண்ணல் காந்தியடிகள். ஆனால் உலகியல் நடப்பு என்ன? இந்த உலகில் பலரும் அதிகாரத்தையே விரும்புகின்றனர். தொண்டு செய்ய யாரும் முன்வருவதில்லை. இறைவன் ஆன்மாக்களைத் தொண்டு நெறியில் பூட்டித்தான் ஆட்கொள்கிறான். உண்டு வாழ்வது தொண்டு செய்தற்கேயாம்!

*தொண்டு செய் தென்றும் சோற்றுத் துறையர்க்கே*
*உண்டு நீ பணிசெய் மட நெஞ்சமே* (5.33.10)

என்று அப்பரடிகள் அருளிச் செய்துள்ளமையை ஓர்க! அப்பரடிகள் மேற்கொண்ட திருத்தொண்டினைத் திருவீழி மிழலையில் எழுந்தருளியுள்ள பெருமான் "கைத்திருத் தொண்டு" என்று சிறப்பித்து வாசியில்லாக் காசு தந்தருளிய பெற்றிமையை அறிந்து தொண்டு நெறியை மேற்கொள்வோமாக!

## சமயப் பொறை

ஆற்றல் மிக்க அன்பும் தொண்டுள்ளமும் பெற வேண்டுமாயின் "இவர் தேவர், அவர் தேவர்" என்று பூசலிடும் குணம் ஆகாது. சமயங்களுக்கிடையில் கூடப் பகையும் பிணக்கும் கூடாது. நமது சமயநெறி வளர்ந்த நெறி. பொதுமை நெறியும் கூட!

ஆயினும் சைவ நெறியின் கொள்கை, கோட்பாடுகளை உணர்ந்து கொள்ளாமல் ஆத்திரத்தில் எரிச்சலில் சிலர் புதுச்சமயம் ஒன்றினைத் தோற்றுவிக்கின்றனர். இது அவசியமற்றது.

*விரிவிலா அறிவி னார்கள்*
*வேறொரு சமயஞ் செய்து*
*எரிவினாற் சொன்னா ரேனும்*
*எம்பிராற் கேற்ற தாகும்*

*பரிவினாற் பெரியோ ரேத்தும்*
*பெருவேளூர் பற்றி னானை*
*மருவிநான் வாழ்த்தி உய்யும்*
*வகையது நினைக்கின் றேனே!* (4.60.9)

என்றார். மேலும் "பல்வேறு சமயங்கள் கருதினானை" என்றார். ஆதலால் திருநாவுக்கரசர் சைவ நெறியில் நின்றவர்; அதேபோழ்து உலகின் பல்வேறு சமயங்களிடையேயும் ஒருமை நிலை கண்ட பெருந்தகையாளர்.

திருநாவுக்கரசர் — அப்பரடிகள் என்ற ஞானக் கதிரவனாகத் தமிழகத்தில் உலா வந்தார். தமிழர்களின் சமய உரிமைக்குப் போராடினார்.

புறச் சமயங்களை ஆய்வு செய்தும், நின்று ஒழுகியும் சைவ சமயமே சமயம் எனத் தெளிந்தார்; வாழ்க்கையை மதிக்கக் கற்றுக்கொடுத்தார்; பக்தியும் தொண்டும் உய்வைத் தரும் என்றார். சமுதாய உயர்வு தாழ்வுகளை அகற்றி ஒருமை நலம் காணத் தொண்டு செய்தார்; சமயங்களுக்குள் ஒருமைப்பாடு கண்டார்; போற்றினார்.

இன்று தமிழ்நாடு அடைந்துள்ள இடர்ப்பாடுகளி லிருந்து மீள ஒரே வழி, அப்பரடிகளின் திருவடிகள் தோய்ந்த தடத்தில் செல்வதேயாம்.

என் கடன் பணி செய்து கிடப்பதே!

# 26

# அப்பர் விருந்து

## 1. ஏழில் இருபது

### ஏழும் இருபதும்

நாம் இருபதாம் நூற்றாண்டில் வாழ்கிறோம். இன்றைய இளைஞர்கள் இருபதாம் நூற்றாண்டு, புதுமை நிறைந்த நூற்றாண்டு, அறிவு பெருகிய நூற்றாண்டு, ஆற்றல் பெருகிய நூற்றாண்டு, மறுமலர்ச்சியும், சீர்திருத்தமும் பொங்கி வழியும் நூற்றாண்டு என்று நினைக்கிறார்கள். இருபதாம் நூற்றாண்டின் தலைமுறை என்று சொல்லிக் கொள்வதிலேயே நம்மில் சிலர் பெருமைப் படுகிறார்கள்; நாங்கள் "பத்தாம் பசலிகள்" அல்லர், புத்தம் புதிய பிறவிகள் என்று சொல்லிக் கொள்வதிலேயே பலர் பெருமைப்படுகிறார்கள்.

ஆயினும், நாம் வாழுகிற இந்த நூற்றாண்டு இருபதாம் நூற்றாண்டு. தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ள இருபது என்கிற சொல் இருபதாம் நூற்றாண்டைக் குறிக்கும். ஏழு என்கின்ற சொல் ஏழாம் நூற்றாண்டைக் குறிக்கும். இருபதாம் நூற்றாண்டில் எவற்றையெல்லாம் நாம் புதுமைகள் என்று

கருதுகிறோமே, அவற்றையெல்லாம் ஏழாம் நூற்றாண்டி லேயே இந்த நாட்டில் பிறந்து வளர்ந்த நாவுக்கரசர் பெருமான் நமக்கு நினைவுறுத்திச் சென்றார் என்ற செய்தியை விளக்குவதே இத் தலைப்பின் நோக்கம்.

## மல்லிகை மணக்காதது ஏன்?

சாக்ரடீசை நாடு தெரிந்து கொண்ட அளவிற்கு இங்கர் சாலை நாடு தெரிந்து கொண்ட அளவிற்கு நமது அப்பரடி களைத் தெரிந்து கொள்ளவில்லை. இதற்குக் காரணம் தமிழர்கள் நன்றி கொன்றவர்களாகப் போனார்கள். அவர்கள் வீட்டுக் கொல்லையில் பூத்துக் குலுங்கி மணம் பரப்பும் மல்லிகை அவர்கட்குத் தெரியாமற்போயிற்று.

தன் வீட்டுக் கொல்லையில் இயல்பாய் மலர்ந்த இனிய அழகிய மல்லிகையைப் பறித்து அனுபவிக்கத் தெரியாமல் அடுத்த வீட்டுக்காரன் தோட்டத்தில் மலர்ந்த எட்டிப் பூவை நோக்கிப் போவதுபோல, நமது சமுதாயத்தின் போக்குப் போனமையின் காரணமாக ஏதாவதொரு புதிய கருத்து — புதிய சித்தாந்தம் என்றால் சாக்ரடீஸ் சொன்னார், இங்கர்சால் சொன்னார், பிளேட்டோ சொன்னார், என்று சொன்னால்தான் நாடு ஏற்றுக்கொள்ளும் என்ற ஒரு மனோபாவம், ஒரு மாயை வளர்ந்திருக்கிறது! இந்தக் குறையை நீக்கும் பொருட்டே 20ஆம் நூற்றாண்டில் நாம் எந்தச் செய்திகளைப் புதிய செய்திகள் என்று சொல்லுகிறோமோ அந்தச் செய்திகளை 7ஆம் நூற்றாண்டில் அப்பரடிகள் சொன்னார் என்பது இத்தலைப்பின் விழுமிய கருத்து.

## சமுதாய வயலிலே

இங்கர்சால், பிளேட்டோ, சாக்ரடீஸ், போன்றவர் களைவிடச் சமுதாய சீர்திருத்தத்திற்குத் தகுதியுடைய

பெரியார் அப்பரடிகள் என்பது நமது ஆழ்ந்த நம்பிக்கை. ஒன்றைத் திருத்தவேண்டும் என்று சொன்னால், அந்தக் கொள்கையில் நம்பிக்கையுடையவர்களே அதைத் திருத்த வேண்டும்; அவர்களால்தான் திருத்தவும் முடியும். அதில் நம்பிக்கையில்லாதவர்கள் திருத்தப்புகுவது வேடிக்கையாக, கேலிக்கூத்தாக, நகைப்புக்கிடமாகப் போய்விடும்.

"கழனிகளிலே களைபிடுங்க இறங்குகிறவன் முதலில் களை எது? விளையும் பயிர் எது? என்று தெரிந்துகொள்ள வேண்டும். இல்லையானால், பயிரையே களை என்று பிழையாகக் கருதிப் பிடுங்கிவிடுவான். இறுதியில் விரும்பிப் பாடுபட்ட விவசாயிக்கு எதுவும் மிஞ்சாது" என்று ஒரு சமயத்தில் பெர்னாட்ஷா மிக அழகாகக் கூறினார்.

நமது நாட்டிலே இன்று சீர்திருத்தம் என்ற பெயரால், தமிழகத்தில் தோன்றிய சமய சாத்திரங்களை முறையாகப் பயிலாதவர்கள், திருமுறைகளைத் தொட்டும் பார்க்காத வர்கள், அங்கொரு பாட்டும் இங்கொரு பாட்டுமாக மேலெழுந்தவாரியாகப் படித்துவிட்டு அதிலே சீர்திருத்தப் புயலை உருவாக்குகிறார்கள். எனவே, அவர்கள் விளை பயிருக்கு முட்டுக்கட்டையாகவுள்ள களையைப் பிடுங்கத் தகுதியுடையவர்கள் அல்லர். அப்பரடிகள் போன்றோர் நீண்டகாலப் பாரம்பரியம் உடையவர்கள். அவர்கள் காட்டும் புதுமையிலே கவர்ச்சி இருந்தது; ஆக்கம் இருந்தது; ஊக்கம் இருந்தது; உறுதி யிருந்தது; உயர்வு இருந்தது. அதே காலத்தில் பழமை என்ற அடித்தளம் அசைந்து ஆட்டம் காணாமலும் காப்பாற்றிக் கொண்டார்கள். ஒரு கட்டடத்திற்கு வண்ணம் பூசிக் கோலம் கொடுக்கவேண்டும் என்று முயலும்போது அந்தக் கட்டடத்தின் அடித்தளம் ஆட்டம் கண்டுவிடுமானால் நீடித்த நிலைபேறுடைய நலஞ்சார் நாகரிகம் இல்லாமலே போய்விடும்.

## வீடு வேண்டாமா?

இன்று நம் நாட்டில் நீடித்த நிலைபேறுடைய பழமையான ஒரு நாகரிகம் இருக்கக்கூடாதென்று கருதி நாள் தோறும் குடிசை கட்டும் பணியில் பலர் ஈடுபடுகின்றனர். இன்று ஒருவன் குடிசை கட்டுகிறான். நாளை அது நன்றாக இல்லை என்று பிரித்து எறிகிறான்; வேறு புதிய குடிசை கட்டுகிறான். அதனை மறுநாள் இன்னொருவன் பிரித்து எறிகிறான். ஆக நாள்தோறும் கட்டுவதும் பிரிப்பதுமாகிய புதுமையான வீடு கட்டுகிற காலமாக இருக்கிறதே தவிர, குடியிருந்து வாழும் நாகரிகம், இல்லாமற் போய்விட்டது.

## பழமையிலே புதுமை

அப்பரடிகள் போன்றோர் பழைய பாரம்பரியத்தை ஒத்துக்கொண்டே பழமைக்கும் புதுமைக்கும் இணைப் பூட்டினர். அப்பரடிகள் முழங்கால் வரை வேட்டி கட்டினார்; நிறைய நீறு பூசினார்; பெரும் பெரும் உருத்திராக்க மாலைகள் போட்டுக்கொண்டிருந்தார். அந்தக் கோலத்தைப் பார்த்தால் மிகப் பழைய நூற்றாண்டின் பழமை தெரிகிறது. அவள் உள்ளத்தை அவர் சிந்தனையைப் பார்த்தால் புத்தம் புதிய புதுமையையும் — இன்னும் பின்னால் வரப்போகிற புதுமையையும் — அவர் ஏற்றுக் கொண்டிருக்கிறார் என்பதை நாம் அறியலாம். அவர் பழமைக்கும் புதுமைக்கும் இணைப்பூட்டி இந்தச் சமுதாயம் அழிந்து படாமல் காப்பாற்றப் பெற வேண்டும் என்ற கருத்தில் ஒரு மாபெரும் இயக்கத்தையே நடத்தினார்.

## அப்பரடிகள் புரட்சிக்காரர்

நமது நாட்டில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கவிஞர்கள், ஏற்றத் தாழ்வுகளை ஏற்படுத்தி இன்னல்களை உண்டாக்கும் சாதிகள் வேண்டா என்று பாடினார்கள்.

அன்றுமுதல் இன்றுவரை தோன்றியுள்ள எல்லாக் கவிஞர்களும் அதையேதான் தொடர்ந்து பாடிக்கொண்டு வருகிறார்கள். புதிய தலைப்புக்களைப் புதிய சிந்தனைகளைப் பாடும் நிலைமை வரவில்லை. இந்தத் தலைமுறை ஒழுங்காக ஒரு காரியத்தைச் செய்து முடிக்கவேண்டும் என்று விரும்பினால், பழங்காலக் கவிதைகளில் வலியுறுத்திக் கூறப்பெற்றிருக்கிற அறநெறிகளை, ஒழுக்கக் கூறுகளை வாழ்க்கையில் நடைமுறைக்குக் கொணர்ந்து, புதிய சிந்தனைகள் புதிய செய்திகள் புதிய சித்தாந்தங்கள் தோன்றத் துணைபுரிய வேண்டும். வலியுறுத்திக் கூறப்பெறுகிற செய்திகளும் சிந்தனைகளும் சித்தாந்தங்களும் சிந்தனையோடு கலந்து செயல்முறைக்கு வராமையால் விண்வெளி பற்றிய செய்திகளும், வேறு வகையான செய்திகளும், உலக ஒருமைப்பாட்டுணர்வும் எண்ணங்களும் வளர வாய்ப்பில்லாமல் போயிற்று. இது ஒரு பெருங்குறைதான். இதையே அப்பரடிகள் எண்ணிப் பார்த்து ஒரு புதிய புரட்சியை நாடு முழுவதிலும் உண்டாக்கினார்.

## சமயவழிப் போரியக்கமா? சமுதாய நலப் பேரியக்கமா?

அப்பரடிகளின் வரலாறு சோதனை நிறைந்த ஒரு வரலாறு. அவர் சமண பௌத்த நாகரிகம் பரவியிருந்த காலத்தில், அந்த நாகரிகத்தை எதிர்த்துப் போராடினார். அப்பரடிகள் பௌத்தத்தையும் சமணத்தையும் எதிர்த்தார். என்று சொல்லும்பொழுது அவருக்குச் சமயவெறி இருந்தது என்று யாரும் தவறாகக் கருதிவிடக்கூடாது. சமணத்தையும், பௌத்தத்தையும் அப்பரடிகள் எதிர்த்தார் என்பதாலேயே அவர் சமய ஒருமைப்பாட்டிற்கு அப்பாற்பட்டவர் என்று கருதிவிடக்கூடாது.

உலகச் சமயங்களுக்குள்ளே ஓர் ஒருமைப்பாடு வேண்டும் என்று விரும்பியவர் அப்பரடிகள். ஆனாலும் அவருடைய வீட்டு நாகரிகத்தை, சமுதாய நாகரிகத்தைப் பிற

நாகரிகம் வந்து ஆட்சி செய்வதை அவர் வெறுத்தார். அவர் நடத்திய போராட்டம் சமயப் போராட்டமே யன்று. நாம் நன்றாக எண்ணிப் பார்த்தால் 25 விழுக்காடுதான் அதனைச் சமயப் போராட்டம் என்று கூறலாம். பௌத்த சமண சமயங்களால் ஏற்பட்ட குழப்படியிலிருந்து சமுதாயத்தைக் காப்பாற்றும் முயற்சிதான் 75 விழுக்காடு.

இன்று கிழக்காசிய நாடுகளில் புத்த மதத்தின் வெளித்தோற்றம் இருக்கிறதே தவிர உள்ளீடில்லை. புத்த மதத்தின் போர்வையிலே வாழ்கிற கூட்டம் பெருகி யிருக்கிறது. நியாயமாகப் பார்த்தால் புத்தரின் நெறியைக் கோடியில் ஒருவரே பின்பற்ற முடியும்.

தமிழகம் அத்தகைய போலி நடைமுறையை விரும்ப வில்லை. இங்கு பௌத்தம் வந்தபோது தமிழர்களின் அடித்தளத்தையே தகர்த்தழிக்கும் நாகரிகமும் வந்தது. நல்ல பண்ணும் இசையும் கேட்கக்கூடாது என்பது சமணத்தின் முக்கிய நோக்கம். பண்ணோடு பிறந்த பைந்தமிழை, இசையோடு பிறந்த இன்பத் தமிழை மறந்து விட்டுத் தமிழர்கள் எப்படி வாழமுடியும்? எனவே தமிழ் நாகரிகத்தின் — தமிழ்ப் பண்பின் தனிப் பாடல்களைப் பாடினார்; பண்ணோடு இசை பரப்பினார். தமிழகத்தின் இசைத்தமிழ் வரலாற்றில் மறுமலர்ச்சியை உண்டாக்கினார்! பண்ணோடு கலந்த பாடலுக்குப் புத்துயிரூட்டினார்! ஆம்! சமண பௌத்த சமயங்களால் தமிழிசை அழிந்து போகாமல் காப்பாற்று வதற்காக அவர் ஒரு பேரியக்கமே நடத்தினார்!

## தமிழ் இசை வெள்ளம்

இன்று தமிழிசை என்று கூறினால் நமக்குச் செட்டி நாட்டரசரின் நினைவு வரும். தெலுங்கிசை தமிழிசையை ஆக்கிரமித்தபொழுது தமிழிசையைக் காக்கச் செட்டி நாட்டரசர் செப்பரிய சீர்திருத்த இயக்கம் நடத்தினார்.

ஏழாம் நூற்றாண்டில் தமிழிசைக்கு ஆபத்து வந்த பொழுது பண்ணோடு இசை கேட்காது அதைக் கேட்பது பாவம் என்று கூறிய காலத்தில் பண்ணோடு இசை பாடித் தமிழகத்தில் இசை வெள்ளம் பாய்ந்தோடச் செய்த பெருமை அப்பரடிகளையே சாரும்.

அடுத்து, இயற்கையோடு கலந்து வாழுகின்றவன் தமிழன். இவ்வாறு இயற்கையோடு உறவாடிக் கலந்து வாழுகின்ற தமிழனைப் பார்த்து "நீ, மலரைப் பார்க்காதே அந்த மலரின் மணத்தை நுகராதே அது பாவம்" என்று கூறினார்கள். தமிழர்கள் எப்படி இதை ஒத்துக்கொள் வார்கள்? எனவேதான் அப்பரடிகள் இயற்கையோடியைந்த பாடல்களைப் பாடினார். "மூரி முழங்கொலி நீரானான் கண்டாய்!" என்று இயற்கையை வியந்தார்; "காதல் மடப் பிடியோடு களிறு வருவன கண்டேன்" என்பது போன்ற இயற்கை வருணனைகள் பலவற்றை நாம் ஐயாற்றுத் திருப்பதிகத்தில் காணலாம். இப்படி இயற்கையோடியைந்து மனித வாழ்க்கையை வளமாக்கிச் செழிப்பூட்டிடவே அப் பரடிகள் சமணத்தை எதிர்த்தார்.

## அம்மையப்பன்

தமிழகம் இருபாலருக்கும், பெருமை கொடுத்துப் பெண்ணினத்தின் வாழ்க்கையைப் பெருமையாகவும் தகுதி யாகவும் தரமாகவும் போற்றிக் காத்தது; காக்கின்றது; காக்கும். அதைத்தான் நாம், நான்மாடக்கூடலில், அங்கயற்கண்ணி ஆலயத்தில் பார்க்கிறோம். பெண்மையை இழிவுபடுத்தும் நாகரிகம் தமிழனுடையதன்று. தமிழனுடைய நாகரிகத்திலே எல்லாத் துறைகளிலும் பெண்மை உரிய பங்கும் பேசரிய பெருமையும் உயர்வும் கொடுத்துப் போற்றப்பெறுகிறது. பெண்மையை இழிவு படுத்துகிறவர்கள் சமணரும் பௌத்தரும் ஆவர். அவர்கள், இயற்கையோ டொத்து வாழும் தமிழினத்திற்குச் சிறிதும் ஒவ்வாதவர்கள்.

அதனாலேயே திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும் எங்கும் நிறைந்து எல்லாவற்றையும் எழிலுற இயக்கும் அம்மையோடப்பனாம் அருள் நிலையில் இறைவனை அம்மையப்பனாகக் கண்டார்கள். பெண்மைக்கு இழிவு தரும் அநாகரிகத்தைத் தடுத்துக் காக்க முயன்றார்கள். இப்படி நாம் பார்க்கின்ற போதுதான்; நமது அப்பரடிகள் வெறும் நாகரிகத்திற்காகப் போராடவில்லை; தமிழ்ச் சமுதாயத்தி னுடைய வீட்டு நாகரிகம் நாட்டு நாகரிகம் ஆகியவற்றைப் பாதுகாப்பதற்காகவே போராடினார் — ஏன்? ஒரு மாபெரும் இயக்கமே நடத்தினார் என்பதை அறிகிறோம். அத்தகைய அப்பரடிகள் என்னென்ன விதமான கருத்துக்களிலே நமக்குப் புதுமை ஊட்டினார், எழுச்சி யூட்டினார், ஏற்றம் தேடித் தந்தார் என்பனவற்றையெல்லாம் நாம் ஆராய வேண்டும்.

## அப்பரடிகளின் அறைகூவல்

நமது தமிழகத்தைப் பொறுத்தவரை நாம் முன்னே குறிப்பிட்டதுபோல் கடவுள் நம்பிக்கையில்லாத — வாழ்க்கை யோடு இணைந்து வாராத நாகரிகங்களைத் தூக்கிக் கொண்டு வந்த, பௌத்த சமண நாகரிகங்கள் தலைதூக்கி நின்ற காலம் ஏழாம் நூற்றாண்டு. இந்த பௌத்த சமண நாகரிகங்களைத் தடுத்து நிறுத்தித் தமிழினத்தின் தொன்மை யான சொந்த நாகரிகத்தைக் காக்க வேண்டுமென்பதற்காகத் தெருத் தெருவாக ஊர் ஊராகச் சுற்றி வந்தார் அப்பரடிகள். அவர் அப்படிச் சென்றபொழுது பல இடங்களில் அவருடைய கருத்துக்களைச் செவி கொடுத்துக் கேட்கக்கூட ஆட்கள் இருக்கவில்லை என்று தெரிகிறது.

'மனிதர்காள்! இங்கு வம்மொன்று சொல்லுகேன்' என்று உரத்த குரலில் ஊர் மக்கட்கு அழைப்பு விடுத்து, அவர் தமது கருத்துக்களைச் சொல்லத் தொடங்குகிற நேரத்தில், அவசரக்காரர்களாக உள்ள பலர் எழுந்து போகத் தொடங்கி

இருக்கிறார்கள் என்று தெரிகிறது. எனவேதான் "இருந்து சொல்லுவன் ஏழைகாள்! கேண்மின்கள்!" என்றும் சொல்லியிருக்கிறார். ஆம், "நான் உட்கார்ந்து சொல்லு கிறேன். கேளுங்கள்!" என்று சொல்லியிருக்கிறார். இது எதைக் காட்டுகிறது? அவர், தமிழகத்தில் தமது கருத்துக்களை வெளியிடத் தொடங்கியபொழுது இந்த நாட்டில் இருந்த சிக்கலான நிலையைத் தானே; அப்பரடிகள் பலப்பல இடங்களில் பல்வேறு சூழல்களில் பட்டினியாகக் கிடக்க வேண்டிய நிலை ஏற்பட்டுச் சிவபெருமானே அவருக்குச் சோறுகொணர்ந்து கொடுத்திருக்கிறார்.

நமது நாயன்மார்கள் இப்படி இறைவனே சோறு கொணர்ந்து கொடுக்கும் அளவிற்கு அருள் வல்லார்களாக இருந்தார்கள் என்பது நமக்குப் பெருமையாகத் தெரிகிறது. அதே நேரத்தில் அவருக்குத் தமிழகத்தில் இருந்த வரவேற் பையும் நாம் உணரமுடிகிறது. அருளியல் ஞானியான அப்பரடிகளை வரவேற்றுச் சோறு கொடுக்கத் தமிழகத்தில் ஆள் இல்லாமல் இருந்தமையாலேயே இறைவனே பொதி சோறு கொணர்ந்து கொடுத்திருக்கிறார்! இது தமிழகத்தின் அன்றையச் சிக்கலைத்தானே காட்டுகிறது!

### "திருத்தொண்டின் நெறி வாழ..."

இவ்வாறு சிக்கல் சூழ்ந்து நாட்டு மக்கள் இருளிலே மயங்கிக் கிடந்த காலத்தில்தான் அப்பரடிகள் தொண்டை நாட்டிலே — திருவாமூரிலே அவதரித்து அருமையான பாசுரங்கள் ஆயிமாயிரம் பாடினார். மக்களின் உள்ளங்களைத் தொடுகின்ற அளவிற்கு அவர் இசையோடு பாடினார்; நாடு முழுதும் சென்று நயத்தகு தொண்டு செய்தார். அப்பரடிகளின் வரலாறே தொண்டின் வரலாறு தான். "திருநாவுக்கரசு வளர் திருத்தொண்டின் நெறி வாழ" என்று சேக்கிழார் பெருமான் பாராட்டுகின்றார். இவ்வளவு சிறந்த அப்பரடிகள் ஏழாம் நூற்றாண்டிலேயே இருபதாம்

நூற்றாண்டின் — ஏன் அதன்பின் வரும் நூற்றாண்டின் புதுமைக் கருத்துக்களையும் சொல்லியிருக்கிறார். அவற்றில் சிலவற்றை நாம் இங்கே காணலாம்.

## நாமார்க்கும் குடியல்லோம்

உலக மக்கள் எல்லாரும் ஒருவரின் குறிப்பிட்ட ஆட்சிக்கு அடிமைப்பட்டுக் கட்டுப்பட்டுக் கிடக்காமல், அவர்களுடைய நலனுக்குகந்த ஆட்சி மலர வேண்டும் என்று கூறுவது ஓர் அரசியல் இயக்கம். இந்த அரசியல் இயக்கத்தைத் தொடங்கி வைத்த தலைவர்கள் — பெரியார்கள் உலகின் வெவ்வேறு கோடிகளிலே வாழ்ந்திருக்கின்றார்கள். அவர்கள் எல்லாம் 'உலகம் முழுவதிலுமுள்ள மக்கள் ஒரு குறிப்பிட்ட மன்னனுடைய எதேச்சாதிகாரத்திலிருந்து விடுதலை பெற வேண்டும். மக்காளட்சி மலரவேண்டும்' என்ற கருத்திற்காகவே போராடி வந்திருக்கிறார்கள். அந்தப் போராட்டத் தலைவர்களின் வரிசையிலே நமது அப்பரடிகளுக்கு ஒரு சிறப்பான இடம் உண்டு! கொடி கட்டி ஆண்ட பல்லவப் பேரரசனை எதிர்த்து அப்பரடிகள் "நாமார்க்கும் குடியல் லோம்!" என்று முழங்கியதே அதற்குச் சான்றாகும்.

## விடுதலை வீரர்

காஞ்சியிலே பல்வ மன்னன் கொடிகட்டி ஆளுகிறான். அவன், நமது அப்பரடிகளை அழைத்து வருமாறு ஆளனுப்புகிறான். அரசனின் ஆணையாயிற்றே என்று கருதி, அவர் மன்னனை நோக்கி ஓடவில்லை. "நாம் யார்க்கும் குடியல்லோம் எமக்காக ஆட்சியே யன்றி ஆட்சிக்காக நாமல்ல" என்று ஏழாம் நூற்றாண்டிலே அவர் உரிமை முழக்கம் செய்ததை அறிகிறோம். 'நாமார்க்கும் குடியல்லோம்' என்ற அப்பரடிகளின் அடியைத் தொடர்பாக வைத்துத் தான் இருபதாம் நூற்றாண்டில் பாரதியார்,

*நாமிருக்கும் நாடு நம*
*தென்பதறிந்தோம் — இது*
*நமக்கே உரிமையாம்*
*என்ப துணர்ந்தோம்*
*பூமியில் எவர்க்குமினி*
*அடிமை செய்யோம் — பரி*
*பூரணனுக்கே அடிமை*
*செய்து வாழ்வோம்!*

என்று பாடினார். ஆம்! ஏழாம் நூற்றாண்டிலேயே முழங்கால் வரை வேட்டியுடுத்திய கோலத்தால் மிகப்பழமையான வரான நமது அப்பரடிகள் "ஆட்சிக்காக மக்கள் அல்லர்; மக்களுக்காகவே ஆட்சி — அரசு எல்லாம்! கொடி கட்டி நாடாளும் பல்லவ மன்னனுக்கு நாம் அடிமையல்லோம்; இறைவனுக்கே நாம் அடிமை" என்ற கருத்தை வெளி யிட்டார். இவ்வாறு ஏழாம் நூற்றாண்டிலேயே விடுதலை முழுக்கம் செய்த பெருமை நமது அப்பரடிகளுக்கு உண்டு. எல்லாம் இறைவனுடைமை; எல்லாரும் இறைவன் மக்கள் என்னும் உடன் பிறப்பொற்றுமை எண்ணம் உண்மையான மக்கள் ஆட்சியை ஏற்படுத்தும்; சமுதாய ஆட்சி மலரும்; அதுவே இன்பமும் மகிழ்ச்சியும் ஆகும்.

## கவிழ்ந்த பாலுக்குக் காரணம் யார்?

அன்று இந்த நாடு அந்நியருக்கு அடிமைப்பட்டுக் கிடந்தமையின் காரணமாக இந்நாட்டு மக்களின் சராசரி வயது 27 ஆக இருந்தது. இன்றோ, இந்த நாடு சுதந்திரம் பெற்று விட்ட பிறகு, மக்கள் நலன் கருதுகிற சொந்தக் குடியரசு நாடாக ஆகிவிட்ட பிறகு பல்வேறு நலன்களும் சுகாதார வாய்ப்புக்களும் பெருகியுள்ளன. எனவே மக்களின் சராசரி வயது 47 ஆக உயர்ந்திருக்கிறது. 27இல் செத்தது

இறைவனின் திருவருள் என்றோ, 47 ஆக உயர்ந்திருப்பது விதி என்றோ நாம் சர்வ சாதாரணமாக நினைத்துவிடக் கூடாது.

நீண்ட நெடுநாட்களுக்கு நாம் வாழவே இறைவன் நமக்கு வாழ்க்கையைக் கொடுத்திருக்கிறான். "பாலைக் கொண்டுபோய்ப் பயன்பெறுமாறு வீட்டிலே கொடு" என்று கொடுத்தால், அதை நாம் இடையிலே கொட்டிக் கவிழ்த்து விட்டுக் கொடுத்தவனின் நோக்கம் அது என்று கூறிவிட முடியுமா? நாம், நமது வாழ்நாள் முழுவதும் வாழ்வாங்கு வாழவேண்டும் என்றே இறைவன் விரும்புகிறான். நாமோ, இறைவனின் அருள் நோக்கத்தை, விருப்பத்தை அறியாமல் இடையிலேயே வாழ்க்கையைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்கி விடுகிறோம். எனவே, இடையிலே வாழ்க்கை கெட்டுப் போவதற்குக் காரணம் இறைவனல்ல; இறைவனின் எண்ணத்தை — நோக்கத்தை மதிக்கத் தெரியாத நாம் தான்! எனவேதான் அப்பரடிகள் இந்த உலக மக்களை நோக்கி "வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி; மதித்திடுமின்" என்று கூறினார். இந்த நாட்டில் பௌத்த, சமண மாயா வாதங்கள் வந்தமையின் காரணமாக வாழ்க்கையையே மதிக்காத ஓர் உணர்ச்சி, உடல்நலம் ஓம்பாத ஓர் உணர்ச்சி, வாழ்க்கையின் சூழலையே மதிக்காத ஓர் உணர்ச்சி வளர்ந்தது. இந்த நிலைமையைப் பார்த்து வருந்தி — மனமிரங்கியே அப்பரடிகள், மனிதப் பிறப்பு மாண்புறு பிறப்பு; அது மதிக்கத்தக்க பிறப்பு; மகிழ்வின்ப வாழ்வளிக்கும் பிறப்பு; அன்பு அருள் பெருகும் அறிவுப் பிறப்பு; எனவே, மனிதப் பிறவியை மதித்துப் போற்று; அதற்கு ஒரு மரியாதை கொடு; அதைக் கொண்டுபோய்க் குப்பையிலே போட்டுப் பாழாக்கி விடாதே என்று கூறுவதுபோல,

*வாய்த்தது நந்தமக்கு*
*ஈதோர் பிறவி*
*மதித்திடுமின்*

என்கிறார். "மனிதப் பிறவியை மதித்துப் போற்று" என்று கூறும் பொழுதே அப்பரடிகள் "நாமார்க்கும் குடியல்லோம்; நமனையஞ்சோம்' என்று பாடுகிறார்.

ஒருவன் நலமாக வாழ்கிறான்; திட்டமிட்ட வாழ்க்கை நடத்துகிறான்; ஒழுக்கம் காத்து வாழ்கிறான். அகமும் புறமும் ஒத்து வாழ்கிறான். யாருக்கும் அகநலம் இல்லாமல் புறநலம் அமையாது. ஒருவன், நன்றாகக் குளித்து, உண்டு, உடுத்தி வாழ்வதால் மட்டும் நலம் வந்துவிடும் என்று கூறிவிட முடியாது. முறையாக வாழ்பவர்கள்கூட, வேளை தவறாமல் பல வகையான சுவையுணவுகள் உண்பவர்கள்கூட நோய் வாய்ப்படுகிறார்களே அதற்கு என்ன காரணம்? புறத்திலே அவர்களுக்கு எத்தகைய கேடுமில்லை! புறத்தில் எத்தகைய குறையும் வருவதில்லை. ஆனால் அவர்களுடைய எண்ணத்தின் ஊற்று, சிந்தனையின் ஊற்று காலப்போக்கிலே நச்சுத்தன்மையடைந்து புழுவுக்கில்லாப் பொல்லாங்காகி அவர்களுடைய செயல்களிலும் அத்தன்மை பரவிவிடுகிறது. எனவே அவர்களுக்குப் புறத்திலே நோய் கிடையாது. அகத்திலேதான் நோய்!

## நடலையல்லோம்

'நரகத்தில் இடர்ப்படோம் நடலையல்லோம்' என்றார் அப்பரடிகள். நடலை என்பது நல்ல பொருள் பொதிந்த ஒரு சொல். நான் தெருவிலே சுற்றித் திரிகிற நடைப்பிணம் அல்ல; சீனப் பொம்மையல்ல, ஆண்மை செறிந்த ஒரு மனிதன் என்ற கருத்திலேதான் 'நடலையல்லோம்' என்றார். 'ஏமாம்போம், பிணியறியோம், பணிவோமல்லோம் இன்பமே எந்நாளும் துன்பமில்லை' என்று பேசினார். உழைத்துண்டல் ஒருவர்க்கின்பம். உழைக்காதுண்டல் துன்பம். இத்தகைய உயர்ந்த வீரம் செறிந்த பாடல்களை இந்த நாட்டில் இருக்கிற குழந்தைகள் படித்தால், இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு மனிதனும் படித்தால் எவ்வளவு சிறந்த அக ஒழுக்கமும் புற

ஒழுக்கமும் பெற்று இந்த நாடு திகழும் என்பதை எண்ணிப் பாருங்கள்!

இந்த அக ஒழுக்கமும் மிக்கோங்கினால், சமுதாயத்தில் மக்கட்பண்பு மலர்ந்தோங்கும்.

## உயிரும் உலை நீர் ஆமையும்

வாழும் மனித சமுதாயத்திற்கு உலகியல் அறிவு மட்டும் போதாது. மக்கட் பண்பும் வேண்டும். மக்கட் பண்பையும் அறிவையும் பற்றிப் பேசுகிற திருவள்ளுவர்,

*அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்*
*மக்கட்பண் பில்லா தவர்,*

என்று குறிப்பிடுகிறார். அரம் போன்ற கூர்த்த மதி சிலருக்கு இருக்கும். அவர் கூறும் ஒரு வார்த்தைக்கு ஓராயிரம் பேரைச் சுண்டியிழுக்கிற வன்மையும் இருக்கும். ஆனால் அது நஞ்சாக, நரியின் தந்திரமாக, வாழ்நாள் முழுவதுமே வெறியை — வெறுப்பை ஊட்டுவதாகவே இருக்கும். இந்தச் சூழ்நிலையை மாற்றி, 'அறிவு' என்பதற்கு அழகான விளக்கம் தருகிறார் அப்பரடிகள். நல்ல எடுத்துக் காட்டுக்களோடு, உவமையோடு கூறுகிறார். வாழ்க்கையில் நன்மைபோல் தோன்றித் தீமை விளைவிப்பனவும் உண்டு. தீமைபோல் தோன்றி நன்மை புரிவனவும் உண்டு. நிலையற்றனபோல் தோன்றி நிலைப்பனவும் உண்டு. நிலைப்பனபோல் தோன்றி நிலையாதனவும் உண்டு. இந்தக் கருத்தை ஓர் அழகான உவமையோடு பொருத்திக் கூறுகிறார் அப்பரடிகள். பொதுவாக, நாட்டுப் புறங்களிலே 'ஆமை' சமைத்து உண்ணுகிற மக்கள் பலர் இருக்கின்றனர். அவர்கள் ஆமையைப் பிடித்து வருவார்கள்.

உலைப் பானையிலே தண்ணீர் ஊற்றி அதை அடுப்பிலேற்றித் தீயை மூட்டிப் பின்னர் ஆமையை அதில் போடுவார்கள். தண்ணீர் இளம் சூடாகிறது. தண்ணீரில்

கிடந்து மரத்துப் போனதால், அந்த இளம் சூடு ஆமைக்குச் சற்று வெது வெதுப்பாக இன்பமாக இருக்கும். இளஞ்சூடு அதற்கு மிகவும் மகிழ்ச்சியூட்டும். அந்த இளஞ் சூட்டின் இன்பத்தை இணையற்ற இன்பமாகக் கருதி அது அந்த வெந்நீரிலேயே நீந்தித் திளைக்கும். இதனை, 'உலையை ஏற்றித் தழல் எரிமடுத்த நீரில் திளைத்து நின்று ஆடுகின்ற' என்று அடுக்கிச் சொல்லுகிறார் அப்பரடிகள். அந்த இன்பம் வெளியே போய்விடாதபடி, அதனோடு ஐக்கியமாகிக் கலந்திருக்கிறதாம். திளைக்கும் என்ற சொல்லால் அதனைத் தெளிவாக உணர்த்துகிறார். ஆமை அந்த இன்பத்தில் ஆடித் திளைக்கும்போது ஓடுவதால் இன்பம் குறைந்துவிடுமோ என்று கருதிக் கொஞ்சநேரம் நிற்கிறதாம். பிறகு நிற்பதால் இன்பம் குறைந்துவிடக்கூடாதே என்று கருதி ஓடுகிறதாம். இந்தக் காட்சியை அப்பரடிகள் அழகாகப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

*உலையை ஏற்றித்*
*தழலெரி மடுத்த நீரில்*
*திளைத்து நின்றாடுகின்ற*
*ஆமைபோல் தெளிவி லாதேன்,*
*இளைத்து நின்றாடுகின்றேன்!*

என்று பேசுகிறார் அப்பரடிகள். ஆம்! அந்த ஆமைக்கு அறிவிருந்தது; நீரின் இளஞ்சூடு தெரிந்தது; வெதுவெதுப்பான நீர் இன்பந்தருவதை உணரும் ஆற்றலும் இருந்தது. ஆனால், இப்போது 8 மணிக்கு இளஞ்சூடாக இருக்கிற இளவெந்நீர், 8-30 மணிக்குக் கொதி நீராகித் தன்னை அழித்துவிடும் என்ற அறிவு மட்டும் இல்லை! அதுபோலவே, மனிதர்கள், வாழ்க்கை என்ற அடுப்பிலே, அனுபவம் என்ற பானையிலே, ஆசை என்ற தீ எரிய, உயிர் என்ற ஆமை, பெறுகிற சில பொழுது இன்பத்தைப் பார்த்து 'ஆகா ஊஹூ' என்று மகிழ்ந்து திளைக்கிறபோது பின்வரும் பெருந்துன்பத்தை

எண்ணிப் பார்க்க மறந்துவிடுகிறார்கள்; பின்னர் அவதிப் படுகிறார்கள்.

## யாதனின் யாதனின் நீங்கியான்

எந்த ஒன்று, ஆசை என்ற பெயரால் நம்மை மயக்குகின்றதோ, ஆசையின் பேரால் எதற்காக அலமந்து திரிகிறோமோ, அதுவே நம்முடைய இறுதிக் காலத்தில் நமது உயிருக்கு உலை வைப்பதாக இருப்பதை நம் ஒவ்வொரு வருடைய சொந்த வாழ்க்கையிலேயே நாம் காணமுடியும்.

பணமே, நமது ஆசைக்குரிய பொருளாக இருந்தால் அந்தப் பணம் திருட்டுப் போய்விட்டது என்ற செய்தியே நமது உயிர் குடிக்கும் கூற்றுவனாக மாறிவிடும். நாவின் சுவைக்கு அதிகமாக ஆட்பட்டு நிறைய உண்டுகொண்டே இருந்தால், கடைசிக் காலத்தில் நோய்வாய்ப்படும்போது, அந்த உணவினாலேயே உங்கட்கு இந்த நோய் வந்திருக்கிறது என்று மருத்துவர் கூறுகிற நிலையைப் பார்க்கிறோம். இப்படியாக நாம் ஆசைப்படுகின்ற ஒன்றே நமக்குப் பகையாக — கூற்றுவனாக அமைவதைப் பார்க்கிறோம். இதைத்தான் அப்பரடிகள் அழகாகக் கூறுகிறார். 'எது நன்று, எது தீது' என்பதைத் தோற்றத்தைக் கொண்டே முடிவு கட்டி விடாதே! அதனுடைய உள்ளீட்டைப் பார்! அந்த உள்ளீடுதான் நமக்கு முக்கியமானது என்ற கருத்திலே பாடிய பாடலைப் பார்க்கிறோம்.

## குறிக்கோள் இல்லாமல் வாழ்வா?

அடுத்து, 'அறிவு வேண்டும், அறிவிலே தெளிவு வேண்டும். இந்தத் தெளிவுதான் பின்னர் சைவமாக வளர்கிறது' என்ற கருத்தை நாம் அப்பரடிகளின் பாடல்களில் காணலாம். ஒருவனுக்கு அறிவிலே தெளிவு தோன்றி விட்டால் அவனுக்கென ஒரு குறிக்கோளும் தோன்றிவிடும். அறிவினால் தெளிந்த அவன் கொள்ளும்

குறிக்கோளே உயர்ந்த குறிக்கோளாக உள்ளது. இன்று உங்களுக்கு வாழ்க்கையில் ஏதேனும் குறிக்கோள் இருக்கிறதா? என்று கேட்டால் பலருக்குப் பதில் கூறவே தெரியாது. காரணம், அவர்கட்குக் குறிக்கோள், சாதனம் ஆகியவற்றிற்கிடையேயுள்ள வேறுபாடு தெரியாது. சிலர் திருக்கோயிலுக்குச் செல்வர். கோவிலுக்குச் செல்வது அதனால் ஏற்படுகிற நல்லுணர்வைப் பெறுவதற்குரிய சாதனமே தவிர கோவிலுக்குச் செல்வதே இலட்சியமல்ல. நல்லுணர்வைப் பெறுவது இலட்சியம். கோவிலுக்குச் செல்வது அந்த இலட்சியத்தை அடைவதற்குரிய சாதனம் தான். நாம் உடல்நலம் பெறுவது இலட்சியம். அந்த இலட்சியத்தை எய்த நாம் குளிப்பது சாதனம். அதுபோலவே, உள்ளத் தூய்மையை — உயர்ந்த பண்பை நாம் அடைவதற்கு கோயிலுக்குச் செல்வது ஒரு சாதனம்தான். இந்தச் சாதனத்திற்கும் குறிக்கோளுக்கும் வேறுபாடு தெரியாமல் வாழ்க்கை நடத்துகிற மனித சமுதாயத்தை நோக்கி மனமிரங்கிப் பாடுகிறார் அப்பரடிகள். அவர் பாலப் பருவம், இளமைப் பருவம், முதுமைப் பருவம் என மூன்று பிரிவாக வாழ்க்கையைப் பிரித்துப் பேசுகிறார். வாழ்க்கையில் குறிக்கோள் வேண்டும் என்றும் வலியுறுத்துகிறார். குறிக்கோள் இல்லாத வாழ்க்கை பயனற்றுக் கெட்டுப் போகும் என்று குறிப்பிடுகின்றார்.

'இளமையிலே பிழை, வாழ்க்கை நடுவிலே போராட்டம், முதுமையிலே கழிவிரக்கம்' என்ற மேலை நாட்டுப் பழமொழி ஒன்றுண்டு. எவனொருவன் இளமைப் பருவத்தில் பிழை செய்கிறானோ, அவன் வாழ்க்கையின் இடைப் பகுதியிலே போராடிக் கொண்டேதான் இருப்பான். சிலர் உலகத்தோடு போராடுவர். சிலர் தம் தீய உணர்ச்சிகளோடு போராடுவர். எப்படியாயினும் போராடுவார். வாழ்க்கையில் அமைதியே இருக்காது. அவர்கள் வாழ்க்கையின் இறுதிக் கட்டம் கழிவிரக்கமாகவே இருக்கும். "தாமஸ் உல்சி" போன்ற

வர்களின் வாழ்க்கை நமக்கு இந்த உண்மையைத் தெளிவாக உணர்த்துகிறது.

தாமஸ் உல்சி அரசியல் தந்திரத்தில் சமபலக் கொள்கையைக் கையாண்டு சிறப்புடன் செயலாற்றினான்; ஆனால் அரசனுக்கே உழைத்தான். சிந்தனையிலும் பரம்பொருளை நினைக்கவில்லை. ஆனால் அரசன் அவனை முதுமைக் காலத்தில் கைவிட்டுவிட்டான். இறைவன்தானே என்றும் துணைவன்? நன்மையிலும் தீமையிலும் துணைவன். அரசனால் கைவிடப்பட்ட உல்சி வாழ்க்கையுடன் போராடிக் கொண்டிருந்தான். முதுமைப் பருவத்தின் தொல்லை; வாழ்க்கை வளமனை வாழ்க்கையல்ல — குடிசை வாழ்க்கை; அப்போது அவன், "நான் அரசனுக்குச் செய்த சேவையில் ஒரு சிறு பகுதியையாவது ஆண்டவனுக்குச் செய்திருந்தால் நான் எனது இறுதிக் காலத்தில் இப்படி அனாதையாக நிற்க நேரிட்டிருக்காது" என்று இரங்கிக் கூறுகிறான். ஆம்; அவன் இளமைக் காலத்துப் பிழை வாழ்க்கை, நடுவிலே போராட்டமாக ஆகி, இறுதிக் காலத்தில் கழிவிரக்கமாக மாறியதைக் காண்கிறோம். இந்தக் கருத்துக்கு அணி செய்வது போல் அமைந்திருக்கிறது,

பாலனாய்க் கழிந்த நாளும்
பனிமலர்க் கோதை மார்தம்
மேலனாய்க் கழிந்த நாளும்
மெலிவுடன் மூப்பு வந்து
கோலனாய்க் கழிந்த நாளும்
குறிக்கோள் இலாது கெட்டேன்,

என்ற அப்பரடிகளின் பாடல். மனிதப் பிறவி கிடைத்தற் கரிய பிறவி. அதைக் குறிக்கோள் இல்லாமல் வாழ்ந்து கெட்டொழித்து விடலாமா? எனவே வாழ்க்கையில் குழந்தைகளாக இருக்கும் பொழுதே அவர்கட்கு நல்ல இலட்சியத்தை — குறிக்கோளை ஊட்ட வேண்டும். அந்த

வயதுக்கும், உணர்வுக்கும், அனுபவத்திற்கும் ஏற்ப மிக்குயர்ந்த இலட்சிய உணர்வை ஊட்டவேண்டும். அடுத்து இளமைப் பருவம். அதைத்தான் "பனிமலர்க்கோதை மார்தம் மேலனாய்க் கழிந்த நாள்' என்ற அப்பரடிகள் பேசுகிறார். அவ்வாறு இல்லற வாழ்வில், துணைவியோடு வாழும் போதும் ஒரு குறிக்கோள் இருக்கவேண்டும். குறிக்கோள் இல்லாத வாழ்க்கை கெட்டுப் போகும். இல்லற வாழ்க்கையில் என்ன குறிக்கோள் இருக்க முடியும் என்று கேட்கலாம். நன்றாக உளமொத்து வாழ்ந்து அந்த உளமொத்த வாழ்க்கையிலே நல்ல நீண்ட நெடும் பாரம்பரியத்தை உண்டாக்குகிற நன்மக்கட்பேற்றைப் பெறுவது குறிக்கோளாக அமைய வேண்டும். அப்படியில்லாமல் வெறும் உணர்ச்சிக்காக — மனப்பிராந்திக்காக இந்த வாழ்க்கை என்று கருதக்கூடாது; அது இல்லற வாழ்க்கையின் குறிக்கோளாக இருக்கக்கூடாது. மூப்பொடு மெலிவு வந்து, கோலனாய்க் கோல் ஊன்றி நடக்கும் காலம் மூன்றாவது பருவம் — இறுதிப் பருவம். அப்போதும் குறிக்கோள் வேண்டும் என்று கூறுகிறார்.

## மனம்போல் வாழ்வு

பருவுடல் தோற்றத்தால் மட்டும் ஒருவன் மனிதனாகி விடுவதில்லை. அவனுடைய உள்ளீடு என்ன? ஆன்ம நலம் என்ன? என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆன்ம நலம் இல்லாமற் போனால், மனிதனும் வெறும் பாடைத் தேங்காய் போலப் பயனற்றவனாய் விடுகிறான். வெறும் பாடைத் தேங்காயாவது அடுப்பு எரிக்கப் பயன்படும். ஆனால் குறிக்கோளிலா மனிதனால் என்ன பயன்? இந்த நிலையை வைத்துக் கொண்டுதான் நமது அப்பரடிகள் போன்றோர், வாழ்க்கையின் உயர்ந்த — சிறந்த சிந்தனைகளைப் பார்த்தார்கள். உயர்ந்த சிந்தனைகளையுடைய மேலான வாழ்க்கையை உண்டாக்க அப்பரடிகள் விரும்பினார்.

'இனியன நினையாதார்க்கு இன்னாதான்' என்று அப்பரடிகள் பேசுகின்றார். நிலத்திலே நீர் ஊற்று இருப்பது போல், மனிதனிடத்தில் நினைப்பு ஊற்று இருக்கிறது. நினைப்பு நல்லதாக இருந்தால் அவன் நல்லவனாகிறான். பொதுவாகப் பகல் 12 மணிக்கு நாம் ஒரு நல்ல விருந்து படைக்க வேண்டுமென்று விரும்பினால், காலை 8 மணிக்கே சமையற்கட்டுக்கு நல்ல சரக்குகளைக் கொடுக்கவேண்டும். சமையற்கட்டுக்கு நாற்றம் பிடித்த அரிசியையும் பூச்சி வைத்துக் கெட்டுப்போன கத்தரிக்காயையும் கொடுத்து விட்டு 12 மணி விருந்துக்கு நல்ல சாப்பாடு வேண்டு மென்றால் ஒரு பொழுதும் வராது. சமையற்கட்டுக்குக் கொடுக்கப்பெற்ற சரக்குகளுக்கு ஏற்பவே பந்தியிலே விருந்து அமையும். அதுபோல, நமது இதயம் என்ற சமையற் கட்டில், ஏற்றப்பெற்ற எண்ணம் என்ற சரக்குகளுக்கு ஏற்பத்தான் சமுதாய வாழ்க்கை அமையும். இதயத்தில் எதை ஏற்றினோம் என்பதுதான் முக்கியம். அன்பு, ஒப்புரவு, ஈகை, இரக்கம், கண்ணோட்டம் முதலிய உணர்வுகளை ஏற்றினால் நாம் தூய மனிதராக — உலகிற் சிறந்த மனிதராக விளங்க முடியும். இல்லையானால், நமது வாழ்க்கை நரக வாழ்க்கையாகவே மாறிவிடும். ஒரு விலங்கு கொடுமையுடையதாக இருந்தால் கூட அவ்வளவு தீமையில்லை. ஒரு மனிதன் கொடியவனாக இருந்தால் அவன் மனித சமுதாயத்தையே பிடித்து ஆட்டி அலைக்கழிக்கிற பேய் போல ஆகிவிடுவான். ஆகையினால் தான் மனிதர்கள் தங்கள் உள்ளத்தைத் தூய்மைப்படுத்திக் கொள்ளவேண்டும்; இனியன எண்ணவேண்டும் என்று அப்பரடிகள் கூறினார்.

## கோத்திரமும் குலமும் கொண்டென் செய்வீர்!

வஞ்ச ஆறு வற்றினால் பக்தி ஆறு பெருக்கெடுத் தோடும் என்கிறார் அப்பரடிகள். ஒரு பாத்திரத்தில், எதையாவது ஒன்றை வைத்துக் கொண்டு அதன் மேலே

இன்னொன்றை ஊற்ற முடியாது. அதில் இருப்பதை அப்புறப்படுத்திவிட்டுத் தான் இன்னொன்றை ஊற்ற வேண்டும். வஞ்ச ஆறு, இயல்பிலேயே உள்ளத்தில் ஊற் றெடுக்கிறது. அதனைத் தூர்வை எடுத்துத் தூய்மைப் படுத்திவிட்டால் பக்தி ஆறு பெருக்கெடுக்கும். போட்டி, பொறாமை, சூது என்ற வஞ்ச ஆறு வற்றினால்தான் பக்தி ஆறு பெருக்கெடுக்கும். வஞ்ச ஆற்றை வற்றச் செய்வதற்கும் பல்வேறு சமுதாய உணர்வுகளையும் இன்று பலர் பேசு கிறார்கள்.

சாதிகளை ஒழித்துவிட வேண்டும் — குலச் சண்டைகளையும் கோத்திரச் சண்டைகளையும் போக்கிட வேண்டும் என்று பேசிகிறார்கள். இக்கருத்தை நமது அப் பரடிகள் ஏழாம் நூற்றாண்டிலேயே பேசினார்.

*சாத்திரம் பல பேசும்*
*சழக்கர்காள்!*
*கோத்திர முங்குல*
*முங்கொண்டேன் செய்வீர்?*

என்று கேட்டார். ஆனாலும் 7-ம் நூற்றாண்டிலிருந்து இந்த 20-ம் நூற்றாண்டு வரை, அண்ணல் காந்தியடிகள் வந்து சொல்லியும்கூட நம்மிலே தீண்டாமையை விட்டு விடத் தயாரானோர் எத்தனை பேர்? 7-ம் நூற்றாண்டில் இந்தக் கருத்தைக் கூறிய அப்பரடிகளின் சிலையைக் கோயிலுக் குள்ளே வைத்திருப்பதைப் பார்க்கிறோம்; குருபூசை நடத்து வதைப் பார்க்கிறோம். ஆனால் இந்த நாட்டை விட்டுச் சாதி வேற்றுமையும், குல வேற்றுமையும், கோத்திர வேற்றுமையும் போகவில்லை. இன்றைக்கும் போனபாடில்லை. எங்கே யிருந்து தீண்டாமை போக வேண்டுமோ, யார் மூலம் தீண்டாமை போகவேண்டுமோ, அங்கிருந்து, அவர்கள் மூலமாகத் தீண்டாமை போகவில்லை. இன்று தீண்டாமை ஒழிப்பை அரசு தன் பொறுப்பாக ஏற்றுக் கொண்டிருக்கிறது.

அதன் முழுப் பயனை நாம் இனிமேல்தான் காணவேண்டும். எங்கே தீண்டாமை குடி புகுந்து கொண்டு சமுதாயத்தைக் கெடுத்ததோ அங்கே இன்றும் சாதீய எண்ணங்களும் சாதீய உணர்ச்சிகளுமே இருந்து வருகின்றன. இருப்பதற்கேற்ற சூழ்நிலைதான் இருந்து வருகிறது. பொதுவான எந்த ஒன்றையும் மக்கள் மன்றத்தில் வைத்து மக்களை அதற்குத் தயார் செய்ய வேண்டுமே தவிர, அரசு தானாக இயக்கினால் உரிய பயன் இல்லாமற் போகும். அதுமட்டுமல்ல, அந்த இயக்கமும் வலுவற்றுப் போகும்.

## சமய வாழ்வில் சமுதாய உணர்வு

நம்முடைய நாட்டு அரசர்கள் இரண்டு தவறுகளைச் செய்தார்கள். அதனாலேயே நம்முடைய சமய வளர்ச்சி தடைப்பட்டிருக்கிறதோ என்று நான் ஐயப்படுகிறேன். ஒன்று அரசர்கள் அவர்களாகவே கோயில்களைக் கட்டியது. அவர்களாகக் கோயில்களைக் கட்டியமையின் காரணமாக, அங்கு வாழும் மக்களிடத்திலே, "இது நம்முடைய சொத்து; இதை நாம் பேணிக் காக்க வேண்டும்; சுற்றுச் சுவர்களிலும், கோபுரங்களிலும் முளைக்கின்ற மரங்களை நாம் வெட்டி யெறிய வேண்டும்" என்று கருதுகிற சூழல் இல்லை. அதை அனாதைச் சொத்தாகக் கருதுகிற நிலைக்கு மக்கள் தயாராகிவிட்டார்கள். கோயில், தர்மகர்த்தாவுக்குச் சொந்தம் என்று மக்கள் கருதுகிறார்கள். தர்மகர்த்தாவோ கிடைத்த வரை இலாபம் என்று கருதுகிறார். அவரிடமும் சமுதாய உணர்ச்சி வரவில்லை. காரணம், அந்தக் கோயில் சமுதாயத் தினால் எழுப்பப் பெறவில்லை என்பதுதான்! தயவு செய்து யாரும் தவறாகக் கருதிக் கொள்ளக்கூடாது. நான் குலோத்துங்க சோழனைப் பாராட்டுகிறேன்; இராஜராஜ சோழனைப் பாராட்டுகிறேன்; பாண்டியனைப் பாராட்டு கிறேன். ஆனாலும், அவர்கள் இந்தச் சமுதாயத்தைப் பார்த்து, 'இந்த ஊருக்கு ஒரு கோயில் தேவை: அதை நீங்கள் கட்டிக் கொள்ளுங்கள்' என்று கூறியிருந்தால், அந்த மக்களையே

திருக்கோயில் எழுப்பச் செய்திருந்தால் கோயிலையும், கோயில் சொத்தையும் பேணுகிற உணர்ச்சி அந்த மக்களுக்கு இருக்கும். இப்படி நாம் கூறும்போது அந்தக் கோயில் களையும் மக்கள்தாமே கட்டினார்கள்? மன்னனா கட்டி னான்? என்று நீங்கள் கேட்கலாம். மக்கள் தாம் கட்டி னார்கள். ஆனால் கூலிக்குக் கட்டினார்கள்; அரசனின் ஆணைக்குக் கட்டுப்பட்டுக் கட்டினார்கள். அவ்வாறின்றி, மக்களாகவே கட்டியிருந்தால் இந்த நாட்டில் பாடல்பெற்ற திருத்தலங்கள் பல அழிந்திருக்குமா? அந்தத் திருக்கோயில் களில் செடி, கொடிகள் முளைக்கமுடியுமா? இன்று பல கோயில்களின் சொத்து ஒரு சில மனிதர்களின் சுக போகத் திற்குப் போயிருக்குமா? இவையெல்லாம், தங்கள் சொத்து என்ற உணர்ச்சி மக்களிடம் இல்லாமற் போனதால் விளைந்த தீமைகள். இன்னொன்று, கோயில் எழுப்பியதோடு மட்டுமின்றி அவற்றிற்குச் சொத்தும் கொடுத்தது. இதுவும் ஒரு பெரிய குறைதான்.

பொது நிறுவனங்கள் மக்களாலேயே பாதுகாக்கப் பெறவேண்டும் என்று காந்தியடிகள் விரும்பினார். அவை மக்களாலேயே பாதுகாக்கப் பெறுகிற அளவிற்கு மக்களிட மிருந்தே வருவாய் வரவேண்டும். அவ்வாறின்றி, ஒரு பெரும் மூலதனம் இருந்துவிடுமானால் பணம் வருகிறது, எப்படியும் காரியத்தை நிறைவேற்றிவிடலாம் — மக்களைப் பற்றி நமக்கென்ன என்ற எண்ணம் எழக்கூடும். நாட்டில் இந்த நிலைமை ஏற்பட்டு நமது மதத்தைச் சார்ந்த மக்கள் பலர் பிற மதத்திற்குப் போயும்கூட, பலர் ஐந்தெழுத்தின் மெய்ப்பொருளை எண்ணிப் பார்க்க முடியாமல் போயும் கூட, நமது சமய மடங்களும், திருக்கோயில்களும் சிறிதும் கவலைப்படாமல் தங்களுடைய மணிகளை முழங்கிக் கொண்டு காலங்கடத்தி வருகின்றன. இதனாலேயே நமது திருக்கோயில்களுக்கும், மக்களுக்குமிடையே — நமது திருமடங்களுக்கும் மக்களுக்குமிடையே நீண்டதோர் இடைவெளி ஏற்பட்டது; இன்றும் இடைவெளி இருந்து வருகிறது.

ஒரு நாலாயிரம் மக்கள்! அவர்கள் மத்தியில் ஒரு கோயில். அந்த நாலாயிரம் மக்களின் குடும்பப் பொறுப்பாக அந்தக் கோயில் இருக்கவேண்டும். அந்த மக்களின் பொறுப்பாகவே அவர்களைச் சார்ந்த திருமடம் இயங்க வேண்டும் என்ற ஒரு நிலைமை இருக்குமானால், நமது சமய நிலையங்களுக்கும் மக்களுக்குமிடையே இடைவெளி ஏற்பட்டிருக்குமா? தொடர்பு குறைந்திருக்குமா?

கோயில்களுக்கும் திருமடங்களுக்கும் ஒரு நிரந்தரமான மூலதனம் ஏற்பட்டுவிட்டதால், அங்கு மக்கள் வந்தாலும் வராவிட்டாலும் அவை அதைப் பற்றிக் கவலைப்படுவ தில்லை. மக்களை வரவழைக்க வேண்டுமென்று விரும்பி னால், கச்சேரிகள், விழாக்கள் மூலம் கூட்டம் சேர்த்து விடுகிறார்கள். அலங்காரங்கள், கச்சேரிகள், களிநடனங்கள் இவையனைத்தும், மக்கள் கூட்டம் குறைந்தபோது, அவர் களைக் கவர்வதற்காக — கூட்டம் வரவேண்டும் என்பதற் காக — ஏற்படுத்தப்பெற்ற சப்பைக் கட்டுக்களாக, சாதனங் களாகவே மாறிவிட்டன. இவை நிரந்தரமான புரட்சியை ஏற்படுத்தவில்லை. மக்கள் மன்றத்தில்தான் சமய நிலையங் கள் இருக்கவேண்டும்; மக்கள் மன்றத்தின் தொடர்பில்தான் அவை இயங்கவேண்டும் என்று நமது அப்பரடிகள் கருதினார். எனவே, இவர் ஒரு மாசில்லாத தூய துறவியாகக் காட்சியளித்தார். "ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்கினார்". அவர் உழவாரத் திருப்பணி செய் கின்றபொழுது, பொன்னும் மணிகளும் கிளம்பின. அப்பரடி கள் அவற்றையெல்லாம் ஒக்கவே நோக்கினார்; ஆம்! செம்பொன்னையும் ஓட்டையும் ஒரே மாதிரியாகப் பாவித்தார். இப்பொழுது நம்மிற் பலர் ஓட்டைக்கூடச் செம்பொன்னாகப் பார்க்கும் அளவிற்கு வளர்ந்திருக் கிறார்கள். அப்பரடிகளின் வாழ்க்கை தூய களங்கமில்லாத வாழ்க்கை. "கூடும் அன்பினிற் கும்பிடலே யன்றி" வேறொன் றும் வேண்டாத வியத்தகு வித்தகத் துறவு அப்பரடிகளின்

துறவு. அவருக்கு நாட்டு மக்களின் நல்வாழ்விலே மிகச் சிறந்த ஈடுபாடு இருந்தது. இந்த நிலைமையை நாம் எண்ணிப் பார்க்கின்ற பொழுதுதான் அப்பரடிகளுக்குச் சமய வாழ்வில் ஏற்பட்ட சமுதாய உணர்வை நாம் உணர முடிகிறது.

## யாம் வணங்கும் கடவுளார்

பொதுவாக, மனித வாழ்க்கையில் இருக்கின்ற தவறுகளை நீக்க வேண்டுமானால், முதலில் அவனைச் சமுதாய மனிதனாக்க வேண்டும்.. சமுதாயத்தை விட்டுத் தனித்து ஒதுங்கி வாழும் மனிதன் தொடர்ந்து தவறுகளை இழைத்துக் கொண்டேதான் போவான். எவன் ஒருவன் துணிவாகச் சமுதாயக் கூட்டு வாழ்க்கையை — பத்துப்பேர் மத்தியிலே வாழுகின்ற வாழ்க்கையை ஏற்றுக் கொள் கிறானோ, அவன் காலப்போக்கில் திருந்திவிடுவான்.

ஒருவன் ஆவுரித்துத் தின்றுழலும் புலையனாகவே இருந்தாலும், அவன் சான்றோர்கள் — அடியார்கள் மத்தியிலே வாழக்கூடிய சமுதாய வாழ்க்கையை மேற் கொண்டு விடுவானானால், சமுதாயத்தில் வாழுகின்ற மற்றவர்களைப் பார்த்து — தன்னினும் மூத்த சான்றோர் களைப் பார்த்து — அவர்கள் வாழும் முறைகளைக் கவனத்தில் கொண்டு, அவன் இதுதான் நல்ல வாழ்க்கை போல் இருக்கிறது என்று கருதி "ஆவுரித்துத் தின்னுகின்ற" பழக்கத்திற்கே முழுக்குப் போட்டுவிடக் கூடும். இதனை நன்றாக உணர்ந்தவர் நமது அப்பர் அடிகள்.

எனவேதான்,

*அங்கமெலாம் குறைந்தழுகு*
*தொழு நோயராய்*
*ஆவுரித்துத் தின்றுழலும்*
*புலையரேனும்*

*கங்கைவார் சடைக்கரந்தார்க்*
*கன்ப ராகில்*
*அவர்கண்டீர் யாம் வணங்கும்*
*கடவுளாரே!*

என்றார். தாம் வணங்குகின்ற கடவுள் என்று சொல்லுகின்ற அளவில் நாம் அந்தப் பாடலைப் பார்க்கிறோம். ஒப்புயர் வற்ற சமுதாய ஒருமைப்பாட்டை, சாதிகுல கோத்திரங் களுக்கு அப்பாற்பட்ட சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்பது அப்பரடிகளின் கருத்து.

'கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பராவோர்' கருத்தில் அந்த ஆவும், ஆண்டவன் வீற்றிருக்கும் கோயில் என்ற எண்ணம்தானே உண்டாகும். பின்பு தாமாகவே அக்கொடுந்தொழிலை விட்டுவிடுவர். மேலும் கோவிலில் காணப்படும் வாகன நந்தியையும் நினைப்பர்.

## சமயத்தில் சமதர்மம்

அடுத்து, எல்லாரும் வாழ வேண்டும்; இன்பமாக வாழவேண்டும். பொருள் உடைமை, பிறருக்குத் தந்து உதவி வாழ்விப்பதற்கே என்ற உயர்ந்த தர்மகர்த்தாக் கொள்கையை அப்பரடிகள் குறிப்பிட்டு இருக்கிறார். அவர் வாழ்ந்த ஏழாம் நூற்றாண்டில், 'தர்மகர்த்தாக் கொள்கை' என்ற ஒரு கொள்கை இல்லை. எனினும், தர்மகர்த்தாக் கொள்கைக்கு வித்தூன்றுவது போல அப்பரடிகள் பேசி இருக்கிறார்.

*இரப்பவர்க்கு ஈய வைத்தார்*
*ஈபவர்க்கு அருளும் வைத்தார்*
*கரப்பவர் தங்கட் கெல்லாம்*
*கடுநர கங்கள் வைத்தார்*

என்று கூறுகிறார். ஒரு பெரிய மருத்துவர் இருக்கிறார். அவர்தம் பெட்டியிலே இரு நூறு ரூபாய் மதிப்புள்ள நல்ல

மருந்துகள் வைத்திருக்கிறார்கள். அவ்வளவு மருந்துகளும் அவர்தம் சொந்தப் பணத்தில் வாங்கியவைகளே. எனினும், எல்லா மருந்துகளையும் அவரே உட்கொள்ள முடியுமா? நோயுற்றவர்களுக்குத் தானே கொடுக்க வேண்டும்? மருத்துவ ரிடத்தில் ஏராளமான நல்ல மருந்துகள் இருப்பது போலச் சிலரிடத்தில் பெரும் பொருள் குவிந்து கிடக்கிறது. எதற்காக? இரப்பவர்கட்கு ஈவதற்காக! மருத்துவர்களிடமிருக்கும் மருந்து மற்றவர்களின் உடல் நோய் தீர்ப்பதற்காக!

ஆம்! கடவுள் அப்போதே அவனிடம் சொல்லித்தான் பணத்தைக் கொடுத்திருக்கிறார். "யாராவது வந்து கேட்டால் இல்லையென்று சொல்லாமல் இயன்றதைக் கொடு" என்று சொல்லியிருக்கிறார்... இரப்பவர்க்கு ஈவதற்காகப் பொருளை வைத்தார்; அப்படி இரப்பவர்க்கு இல்லை என்று சொல்லாமல் இயன்றதைக் கொடுப்பவர்களுக்கு அருளை வைத்தார். இரப்பவர்க்கு இல்லை என்று சொல்லிப் பொருளைச் சேமித்து வைக்கின்ற வன்னெஞ்சுடைய வஞ்சகர்களுக்கு எல்லாம், கடவுள் 'கடுநரகம்' வைத்திருக் கிறார். இதனையே 'கரப்பவர் தங்கட்கெல்லாம் கடு நரகங்கள் வைத்தார்' என்று அழுத்தமாக, தெளிவாகக் கூறுகிறார் நமது அப்பரடிகள்.

பொதுவாக, இடைக்காலத்திலே சமய உலகத்திற்கு வந்த ஆபத்துகூடச் செல்வர்களால்தான், வந்தது. இடைக் காலத்திலே, பரம தரித்திரர்களான ஏழை மக்களுக்கும் பரிந்து பேசுகிற கடமையைச் சமய உலகு மறந்துவிட்டது; அவ்வாறு பேசுவதனின்னும் விலகிவிட்டது. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த நமது அப்பரடிகள், "உற்றார் இல்லார்க்கு உறுதுணையாவான்" என்று பேசினார். சமுதாயத்தில் யாரொருவர்க்கு உறவினர் இல்லையோ, யார் ஒருவர் தெருவில் அனாதையாக விடப்பட்டாரோ அவருக் கிறைவன் உற்ற துணை என்று பேசினார். ஒருவன் உற்றாரிலாதார்க்கு உறுதுணையாக நின்று உதவிபுரிய

எண்ணினால் தன்னைச் சார்ந்தவர்களைக் கொண்டு செய்விப்பதே தக்கதாகும். அதுபோல் இறைவனும் தக்க வரை — செல்வரைக் கொண்டு செய்விப்பான். கண்ணுள்ள வரைக் கொண்டு கண்ணில்லார்க்குத் துணை செய்விப்பதும் இம்முறையேயாகும். ஆனால் இன்று நமது சமயம், உற்றார் உறவினர் இல்லாத அனாதைகளுக்கு உறுதுணையாக இல்லை. எல்லா வசதிகளும் வாய்ப்புகளும் உள்ளவர்க்கே மேலும் மேலும் பரிவு காட்டுவதாக — மரியாதை கொடுப்பதாக இருக்கிறது.

## அன்பே பொருள்

அடுத்து, 'அற்றார்க்கும் அலந்தார்க்கும் அருள்வானை' என்று பேசுகிறார். அற்றார்க்கும் அலந்தார்க்கும் அருள் செய்வது சமயத்தின் இயல்பு. சேக்கிழார் அருளிய பெரிய புராணத்தில் இறைவன் பல்வேறு சூழ்நிலைகளில், அற்றார் போல, அலந்தார் போலக் கோலம் கொண்டு மண்மீதில் எழுந்தருளி வந்ததைக் காண்கிறோம். "சிவபெருமான்" என்ற திருக்கோலப் பொலிவோடு அவர் வரவில்லை. அவர், அற்றார்போல; அலந்தார்போல வந்தபோதும் உரிய மதிப்பும் வரவேற்பும் கிடைத்தன அடியார்களின் இல்லங்ளிலே! இன்று இறைவனே அற்றார்போல, அலந்தார் போல வந்தால் அவனுக்கு ஒரு பிடிசோறு கிடைக்குமா என்பது ஐயப்பாடு தான்! நிலைமை அந்த அளவிற்கு மாறிவிட்டது. அற்றார்க்கும் அலந்தார்க்கும் அருள் செய்கின்ற, உற்றார் இல்லாதார்க்கு உறுதுணையாகின்ற அந்த உயர்ந்த சமய ஒழுக்கம் பரவவேண்டும். எல்லார்க்கும் கொடுப்பதுதான் வாழ்க்கையின் நோக்கம். அதுதான் சமுதாய ஒழுக்கம். அங்குதான் சமுதாயப் பண்பு வளர்கிறது. ஏழாம் நூற்றாண்டில் அப்பரடிகளிடத்தே இந்த உயர்ந்த சிந்தனை தோன்றியதை நாம் பார்க்கிறோம்.

பொதுவாக, மனிதன் ஒருவன்தான் வாழ்க்கையென்ற இலட்சியத்தோடு போராடுகின்றான். பிறரோடு மனங்கலந்து பேசி, அன்பு கலந்து உறவாடி, கூடி வாழ்வதே மனித குலத்தின் உயர்ந்த லட்சியம்! மனிதனைத் தவிர ஏனைய உயிரினங்கள், தோன்றிய சில காலம் வரை சார்ந்து வாழ்கின்றன. பின் தத்தம் வாழ்க்கையைத் தாமே பார்த்துக் கொள்கின்றன. அதனால் அவைகளுக்குச் சார்பின் மேன்மையும் நன்மையும் தெரியவாரா. மனிதன் பிறந்த நாள் தொட்டு இறக்கும் வரையும் சார்புடனே வாழ்கின்றான்; அதனால் கடவுள் சார்பையும் நாடுகின்றான்.

அன்பலால் பொருளுமில்லை
ஐயன் ஐயாறனார்க்கே

என்று அப்பரடிகள் குறிப்பிடுகிறார். ஐயாறப்பர் நாம் கொண்டுபோகும் தேங்காய்ப் பழத்தைப் பற்றிக் கவலைப் படவில்லை; நாம் உண்மையிலேயே அன்புடையவர்களாக மெய்யன்புடையவர்களாக இருக்கிறோமா? என்றுதான் அவர் பார்க்கிறார். அன்புதான் மனிதனை வளர்க்கிறது. அன்புதான் மற்றவர்களுக்கு உதவி செய்யவேண்டும் — மற்றவர்களை நாம் மகிழ்விக்க வேண்டும் என்ற எண்ணத்தை எழுப்புகிறது. அன்பில்லையானால் தன்னல வெறியே தலைதூக்கி நிற்கும். அன்பு இருந்தால் சமுதாயப் பற்று, தலைதூக்கி நிற்கும். கடவுளுக்குப் படைக்கும் அமுதும் தூய அன்பேயாகும். அறவாணர்க்கு அன்பென்னும் அமுது படைத்து வழிபட்டார் வாயிலார். "நடமாடுங் கோயில் நம்பர்க்கொன்றீவதே, படமாடுங் கோயில் பரமர்க்கு ஈவது" என்றார் திருமூலர். நடமாடுங் கோயில், நல்ல சமுதாயமே யாகும்.

சாதாரணமாகச் சில விலங்குளையும், செடி கொடி களையும் நாம் பார்க்கிறோம். அவை மக்கட் சமுதாயத்தி லிருந்து பெற்றுக் கொள்வது மிக மிகக் குறைவு. ஆம்; அவை

பெற்றுக் கொண்டதைப் போன்று பன்மடங்கு பயனைத் திருப்பிக் கொடுக்கின்றன. ஒரு கறவை மாட்டை எடுத்துக் கொள்வோம். அது ஒரு ரூபாய் மதிப்புள்ள தீனி தின்றால், இரண்டு அல்லது மூன்று ரூபாய் மதிப்புள்ள பாலை நமக்குத் தருகிறது; ஒரு தென்னை மரம்! அதற்கு நாம் செலவழிப்பது எவ்வளவு, அது நமக்குத் திருப்பித் தருவது எவ்வளவு, என்று நீங்களே எண்ணிப் பாருங்கள். இப்படி விலங்குகளும், செடி, கொடி, மரங்களும் சமுதாயத்திலிருந்து சிறிதளவு பெற்றுக் கொண்டு, பெருமளவு திருப்பிக் கொடுக்கின்றன. மனிதனோ சமுதாயத்திலிருந்து பெருமளவு பெற்றுக் கொள்கிறான்; சிறிதளவு திருப்பித்தரக்கூட, விருப்பங் கொள்ளாது வெட்கப் படுகின்றான். அப்படி ஏதேனும் கொஞ்சம் கொடுக்கத் தயாரானாலும் கொடுக்கும் அளவிற்கதிகமான பாராட்டை அவன் பெற விரும்பும் நிலையைப் பார்க்கிறோம். சமுதாயத் திற்கு நிரம்பக் கொடுக்க வேண்டும். அதுதான் சிறந்த சமுதாயப் பண்பு; தூய அன்புடையவர்களின் இல்ட்சியம்.

## கங்கை ஆடிலென்?

அப்பரடிகள் பல ஆரவாரச் செயல்களை, போலிச் சடங்குகளைத் தம் பாடல்களில் சற்றுக் கடுமையாகவே சாடிச் சொல்கிறார்.

*கங்கை ஆடிலென்?*
*காவிரி ஆடிலென்?*
*பொங்கு தண்கும*
*ரித்துறை ஆடிலென்?*
*ஓங்குமா கடல்*
*ஓதநீர் ஆடிலென்?*
*எங்கும் ஈசன்*
*எனாதவர்க் கில்லையே!*

என்று கேட்கிறார். நீ கங்கையில் போய் நீராடி வந்திருந்தாலும் காவிரியில் போய் நீராடி வந்திருந்தாலும் என்ன பயன்? எங்கும் ஈசன் இருக்கிறான் - எவ்வுயிர்க் குள்ளும் ஈசன் உறைகிறான் என்பதை நீ உணரவேண்டும்! உயிர்களிடத்து அன்பு செய்தல்வேண்டும் என்று வலியுறுத்து கிறார். ஓவியத்தை உதாசீனப்படுத்திவிட்டு, ஒதுக்கித் தள்ளி விட்டு, ஓவியனைப் பாராட்டுவதில் என்ன பொருள் இருக் கிறது? இப்படிச் செய்வதால் ஓவியனைத் திருப்தி படுத்திவிட முடியுமா? கவிதையைக் கழிவுக் கூடையில் போட்டுவிட்டுக் கவிஞனைப் பாராட்டுவதில் என்ன பொருள் இருக்கிறது? அப்படிச் செய்வதால் கவிஞன் திருப்தி அடைந்து விடுவானா? படைப்புக்கு நாம் வழங்குகிற பாராட்டுக்கள் தாம் ஓவியனுக்கும் கவிஞனுக்கும் நாம் செய்கிற சிறப்பு.

குழந்தைக்கு நாம் அளிக்கிற பாராட்டுத்தான் அக்குழந்தையின் தாய்க்கு நாம் செய்கின்ற சிறப்பு. இதுதான் உலக இயல்பு. ஆனால் நமது சமுதாயத்தில் இன்று நடப்பதென்ன? இறைவனுக்கு எல்லா வகையான சிறப்புக் களும் செய்கின்றோம். ஆனால் இறைவனின் உடைமையாக — உறைவிடமாக, இறைவனை உணர்த்தும் பிரதிபிம்பமாக — நிழற்படமாக இருக்கின்ற மனித சமுதாயத்தை — மனித உயிர்களை — மனித குலத்தைப் புழுதியிலே புரள விட்டுட்டு, சாக்கடையிலே மிதக்கும் புழுக்களைப் போலத் துடிக்க விட்டுட்டு மனித குலத்தின் அப்பனாக — அம்மையாக — அன்புடைய மாமனும் மாமியுமாக — ஒண்பொருளுமாக விளங்குகிற இறைவனை எப்படித் திருப்திப்படுத்த முடியும்? சிறப்புச் செய்யமுடியும்?

## கையூட்டுக் கேட்பவரா கடவுள்?

கடவுளைச் சிலர் பயங்கரப் பொருளாக்கிவிட்டார்கள். இறைவனிடத்துப் பக்தியும் பரிவும் கொள்ளவேண்டும். கடவுளைக் கும்பிடாவிட்டால் நரகம் கிடைக்கும் என்று

அச்சுறுத்துகின்றார்கள். கடவுளைக் கும்பிட்டவனுக்கு மோட்சமும், கடவுளைக் கும்பிடாதவனுக்கு நரகமும் கிடைக்கும் என்றால் கடவுள் இலஞ்சம் வாங்குபவரா? கடவுளை நாம் புகழ்ந்து பாடும் பாடல்களைப் புகழ் உரைகளை இலஞ்சமாகப் பெற்றுக் கொண்டு, கடவுள் மோட்சம் அருளுவார் என்று எண்ணுவது தவறு; அது நடக்கவே நடக்காது. இறைவனுக்கு நமது மன நெகிழ்ச்சியும் மனத் தூய்மையும்தான் தேவை. இவற்றை உண்டாக்கிக் கொள்ளத் தோத்திரப் பாடல்களையும் பிறவற்றையும் சாதனங்களாக வைத்துக் கொள்ளலாம், அவ்வளவுதான்.

கங்கை ஆற்றில் மீன் எப்போதும்தான் கிடக்கிறது. காவிரியில் தவளை எப்போதும்தான் இருக்கிறது. அவற்றிற்கு ஞானம் வருகிறதா? கிடையாதே! ஏன்? அவற்றிற்குச் சிந்தனை கிடையாது. இந்த உலகத்தை நாம் போற்ற வேண்டும்; இந்த உலக மக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டும். அதுதான் சிறந்த வழிபாடு.

## பஞ்சம் நீங்கப் படிக்காசு வேண்டுமா?

இன்றும் பலர் மூட்டை கட்டிக் கொண்டு காசிக்குப் போவார்கள். ஆனால் சுற்றுப் புறத்திலே — தெரு மருங்கிலே — வாழப் பிறந்தும் வாழ வகையின்றி அவதிப்படுகின்ற காட்சியைக் கண்ணிருந்தும் காண மறுக்கிறார்கள்! விழியிருந்தும் குருடர்களாகிறார்கள்! காசிக்குப் போவதில் தவறில்லை. ஆனால் தங்கள் கொல்லைப் புறத்திலே ‘குய்யோ முறையோ’ என்று எழும் கூக்குரலைக் கேட்கமாட்டார்கள். தெருப்பக்கத்திலே எழும் அழுகுரலைக் கேட்கமாட்டார்கள்! அண்மையில் நடைபெற்ற உலக மாநாட்டில் வெளியான ஒரு செய்தி, மத உலகத்திற்கே ஓர் அறைகூவலாக இருக்கிறது. அது, கிறிஸ்துவ மதமாக இருந்தாலும் சரி, இஸ்லாமிய மதமாக இருந்தாலும் சரி தான். அந்த அறைகூவல் உலக மதங்கள் அனைத்திற்கும் பொதுவே! “நாள் ஒன்றுக்கு உலகில்

10 ஆயிரம் பேர் உணவின்றிச் சாகிறார்கள்” என்று அந்த மாநாட்டில் கூறப்பெற்றது. அப்படியானால் “இம்மையே தரும் சோறும் கூறையும்”, “அற்றார்க்கும் அலந்தார்க்கும் அருள் செய்வானை” என்ற பாடல்கள் நடைமுறைக்கு வருவது எந்த நாள்? ஒன்று நடைமுறைக்கு வந்துவிட்டால் அதை மெய்யென்று கூறுகிறோம்; நடைமுறைக்கு வராத போது பொய்யென்றும் கற்பனையென்றும் கூறுகிறோம். ஏன், பழைய சமய இலக்கியங்களை — வரலாறுகளை நடைமுறைக்குக் கொண்டுவரக்கூடாது? அன்று திருவீழிமிழலையில் அப்பரடிகள் இறைவனிடம் படிக்காசு பெற்றுப் பஞ்சம் போக்கினார். பஞ்சத்தில் அடிபட்ட மக்களுக்குச் சோறு போட்டார். அதை இந்த 20-ம் நூற்றாண்டில் ஏன் செய்யக்கூடாது என்றால், “அன்று இறைவன் படிக்காசு கொடுத்தார். இன்றும் அப்படிக் கொடுத்தால் பஞ்சம் நீங்கத் தொண்டு செய்யலாம்” என்று சிலர் சொல்கிறார்கள்.

அன்று, அப்பரடிகளுக்குப் படிக்காசு கொடுக்கின்ற நிலையில் இறைவன் இருந்தான். வாங்குகின்ற நிலையில் அப்பரடிகள் இருந்தார். செப்பால் அடித்த ஒரு காசுகூட அப்பரடிகளிடம் இல்லை. அவர், தம் உடைமைகள் என்று சிவபெருமானின் திருவடிகளைத் தவிர வேறு ஒன்றையும் பற்றாதவர்.

அப்பரடிகளுக்கு உலகில் எப்பொருளும் இல்லை. இறைவன் கொடுத்தார். அப்பரடிகளிடம் ஆண்டவன் பொருள் வைக்கவில்லை; ஆனால் அருள் வைத்தார். அப்பரடிகள் அவ்வருளால் பாடினார். வேண்டுங்காலத்து இறைவன் வலிய வந்து வேண்டும் பொருளையும் அருளினர். இப்போது செல்வர் பலரிடம் ஆண்டவன் பொருள் வைத்துள்ளார். அவர்கள் அப்பொருளைச் சமுதாயத்துக்கு ஈந்து ஆண்டவன் அருளைப் பெறுதல் வேண்டும். இதுவே அவர் தம் தலைக்கடன். இப்போது பெரும்பொருள் குவித்து

வைத்திருப்பவர்கள், குவிந்துள்ள பொருளை என்ன செய்ய லாம் என்று தெரியாமல் திண்டாடுகிறார்கள்.

அப்படியிருக்க இறைவன் கொடுக்க வேண்டிய அவசியம் என்ன? இன்று சமயத்தின் பெயரால், ஆண்ட வனின் பெயரால் குவிந்திருக்கும் பணத்தைப் பயன்படுத்திப் பணம் இல்லை என்ற நிலை ஏற்பட்டால் இறைவன் கொடுக்கத்தான் செய்வார். இன்றைக்கும் நாம் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி அழுதரற்றி இறைவனைக் கூப்பிட் டால் அவர் ஏன் என்று கேட்கத்தான் செய்வார்! இறங்கி வந்து கருணை புரியத்தான் செய்வார்! தேவை ஏற்படும் போது உதவத்தான் செய்வார்! இந்த உண்மைகளை அப் பரடிகள் பாடல்களிற் காண்கிறோம்.

பெரும் பொருளாதாரப் புரட்சியை விரும்பிய காரல் மார்க்ஸ் போன்றவர்கள்கூடப் "பொருளைச் சேர்த்து வைத்தி ருப்பவன் கொடுக்கிறானா? இல்லையா? இல்லையென்றால் அடித்துப் பிடுங்கு!" என்றுதான் கூறினார்கள். அவ்வாறு அடித்துப் பிடுங்கினாலும் பிடுங்கின நேரத்தில்தான் வலியும் தொல்லையும் இருக்கும். ஆனால் 'நீ கொடுத்து வாழா விட்டால் இறைவன் உனக்கு நரகம் வைத்திருக்கிறார். அந்த நரகத்திற்குப் போய் நீ காலமெல்லாம் அவதிப்படாமல் இருக்க வேண்டுமானால் உன்னிடம் உள்ளதை ஒளிக்காமல் கொடு' என்றார் அப்பரடிகள். இந்தப் பொருளாதாரச் சம வாய்ப்புச் சமுதாய நோக்கோடு — பொதுமை நோக்கோடு பேசுகின்றார் அப்பரடிகள்.

*மாசில் வீணையும்*
*மாலை மதியமும்*
*வீசு தென்றலும்*
*வீங்கிள வேனிலும்*

*மூசு வண்டறைப்*
*பொய்கையும் போன்றதே*
*ஈசன் எந்தை*
*இணையடி நீழலே!*

என்பது அப்பர் வாக்கு.

ஆம், அவ்வளவும் பொதுமை. யாராவது சுவர், எழுப்ப முடியுமா? வேலி போட முடியுமா? மாசில்லாத வீணையின் இனிய ஒலியை, ஏழையும் கேட்டு அனுபவிக்கலாம்; செல்வனும் கேட்டு அனுபவிக்கலாம் செவிகள் மட்டும் செவிடாகாமல் இருந்தால்! மாலைக்கால மதியத்தின் அழகு — தண்ணொளி இன்பம், கோடீஸ்வரனுக்கும் குடிசையில் வாழ்வோனுக்கும் பொது — மனக்குறையில்லாதார் அனைவருக்கும் மாலை மதியம் இனிக்கும்; இன்பம் செய்யும். அதுபோலவே இறைவனின் தண்ணருளும் எல்லார்க்கும் பொது. அதை அனுபவிக்க மொழி வேறுபாடு கிடையாது; இனவேறுபாடு கிடையாது; மதவேறுபாடு கிடையாது. உள்ளம் மட்டும் கல்லாக — இரும்பாக இல்லாமல் உண்மையன்புடனிருக்க வேண்டும்.

இறைவனுடைய திருவடிகளும் இறைவனின் ஆக்கத்தினால் ஏற்பட்ட உலகியல் பொருள்களும் இங்கு வாழும் மக்கள் அனைவருக்கும் பொதுவானவை. அவற்றை மக்கள் அனைவரும்கூடி அனுபவித்துப் பயன் பெறவேண்டும் என்ற சிறந்த தத்துவத்தை — சித்தாந்தத்தை நாம் 'மாசில் வீணையும்' என்ற அப்பரடிகளின் பாடல் வாயிலாக அறிகிறோம்.

## மொழி ஒருமைப்பாடு

இன்று மொழி ஒருமைப்பாடு, இன ஒருமைப்பாடு என்றெல்லாம் பேசப் பெறுகிறது. இன்று மொழிச்சிக்கல் நமது நாட்டில் உச்சம் பெற்றிருக்கிறது. எனவே நாம் யாரும் ஆத்திர அவசர உணர்ச்சிகளுக்கு ஆட்படாமல் அமைதியாக ஆழ்ந்து சிந்தனை செய்து பார்க்க வேண்டும். மனிதனுக்கு

வாய் இருக்கிறதென்றால் அது, தன்னோடு தன் அண்ணன் தம்பிகளாக வாழ்கின்றவர்களோடு மட்டும் பேசிக் கொண்டிருக்க அல்ல. நம் வீட்டிற்குள் இருக்கும் காற்றை மட்டும் அனுபவிக்க வேண்டும் என்பதற்காகவா நமது வீடுகளில் சன்னல் வைக்கிறோம்? வீட்டின் வெளியில் இருக்கும் ஆரோக்கியமான காற்றுப் போக்குவரத்தினால் ஆரோக்கியமான வாழ்வு அமைவது போல, ஒரு மனிதனுடைய தாய்மொழிப் பற்றும் பிற மொழி உறவும் சேர்ந்து மனிதனின் உள்ளத்தை வளர்க்கிறது; அவனை உலக மனிதனாக்குகிறது.

மரம் நன்றாக வளர்ந்து பூத்துக் காய்த்துப் பயன்தர வேண்டுமானால் மரத்திற்கும் மண்ணுக்கும் நல்ல உறவு இருக்க வேண்டும். மண்ணோடு மரத்திற்கு இருக்கிற தொடர்புதான் அந்த மரத்தைக் காக்கும்; வளர்க்கும். எனினும், அது மட்டும் போதாது; அந்த மரத்திற்கு விண்ணோடும் தொடர்பு வேண்டும். காற்று வேண்டும். கதிரொளி வேண்டும். ஆம் மண்ணிலிருந்து மட்டுமல்ல, வேறு பல சூழல்களிலிருந்தும் அதற்கு உணவு தேவைப்படுகிறது. இவ்வாறு, மண்ணோடும் விண்ணோடும் அந்த மரத்திற்கு உறவு இருந்தால்தான் அது வளர்ந்து வாழ்ந்து பசுமையாகச் செழித்துப் பூத்துக் காய்த்துக் கனிந்து பெரும் பயன் தரமுடியும். அதுபோலவே மனித இனம் விரிந்து பரந்து வாழவேண்டுமானால், உலகத் தொடர்பு கொண்டு உயர வேண்டுமானால், சிந்தனையால் செழுமையுற வேண்டு மானால் மனிதனுக்கும் தாய்மொழிப் பயிற்சியோடு பிற மொழி அறிவும் தேவை. இந்த இருபதாம் நூற்றாண்டினுக்கு இன்றியமையாததை நன்றாகப் பாடி இருக்கிறார் அப்பரடிகள்.

*வடமொழியும் தென் தமிழும்*
*மறைகள் நான்கும் ஆனவன் காண்*

என்று குறிப்பிடுகின்றார். அந்த ஏழாம் நூற்றாண்டில் ஆங்கிலம் இல்லை; ஆங்கிலத்தைப் பற்றிய பிரச்சனை இல்லை. எனவே ஆங்கலத்தைப் பற்றிப் பேசவும் இல்லை. ஆங்கிலம் இடைக்காலத்தேதான் வந்தது. இடைக்காலத்திலேயே போகவும் போகிறது. அதைக் கட்டி அழுவதாலே நமக்குப் பெரும் பயன் எதுவும் ஏற்படப் போவதில்லை. காரணம், ஆங்கிலத்தில் சிலரே பயிற்சி பெற்றிருக்கிறார்கள்.

பாரதத்தில் ஏறத்தாழப் பத்து விழுக்காட்டினரே ஆங்கிலத்தில் பயிற்சி பெற்றிருப்பார்கள். அன்று — அந்த நூற்றாண்டில் நமது பாரத நாட்டை — இந்திய நாட்டை இணைத்த மொழிப் பாலங்கள் வடமொழியும், தமிழ் மொழியுமேயாகும்.

வடக்கே வாழ்ந்தவர்கள் அனைவரும் தமிழைப் பயில ஆரம்பித்தார்கள். தெற்கே இருந்தவர்கள் அனைவரும் வடமொழியைப் பயில ஆரம்பித்தார்கள். மொழி உறவு, மொழிப்பாலம் அமைந்தது. இதனையே இந்த மொழி ஒருமைப்பாட்டையே "வடமொழியும் தென்தமிழும் மறைகள் நான்கும் ஆனவன்" என்று குறிப்பிட்டார் நமது அப்பரடிகள். 'ஆரியமோடு தென் தமிழ்' என்றார். இவ்விரு மொழிகளுக்குள்ளும் உறவு வளர வேண்டும்; கருத்துப் பரிமாற்றம் வேண்டும் என்ற கருத்தைப் பார்க்கிறோம். இது மொழி ஒருமைப்பாடு.

## மனிதகுல ஒருமைப்பாடு

அடுத்து மனிதகுல ஒருமைப்பாடு பற்றியும் அப்பரடிகள் குறிப்பிட்டிருக்கிறார். இன்று, அணுகுண்டு யுகத்தில் உலக ஒருமைப்பாடு பற்றிப் பேசுகிறோம். அன்று, அப்பரடிகள் மனிதகுல ஒருமைப்பாட்டை வலியுறுத்தினார் என்றால் தலையிலே குண்டு விழும் என்ற அச்சத்தின் அடிப்படையிலே அன்று. நியாயத்தின் அடிப்படையிலே — இலட்சியத்தின் அடிப்படையிலேதான் அவர் மனிதகுல

ஒருமைப்பாட்டை வலியுறுத்தினார். 'எல்லா உலகமும் ஆனாய் நீயே' என்கிறார். எல்லா உலகத்திலும், உலகத்தின் எல்லாப் பகுதிகளிலும் ஒருமைப்பாடு நின்று நிலவ வேண்டும் என்றார். இன்று விரிந்த சிந்தனையுடையவன், பரந்த கருத்துடையவன் ஒருமைப்பாட்டை நினைத்துப் பார்க்கிறான். விரிந்து பரந்த உலகத்தோடு உறவு கொள்ளக் கைநீட்டுகிறான்.

அப்பரடிகள் காலத்தில், உலகத்தோடு உறவுகொள்ள நல்ல வசதிகள் இல்லாதிருந்த காலத்தில் 'எல்லா உலகமும் ஆனாய் நீயே!' என்று பாடினார், அப்பரடிகள். உலகத்திற் கெல்லாம் இறைவன் ஒருவனாய் நிற்கின்றான் என்ற சித்தாந்தப்படி இங்கு நாம் உலக ஒருமைப்பாட்டைப் பார்க்கிறோம்.

## சமயவழி ஒருமைப்பாடு

இதற்கு அடுத்தபடியாகச் சமய ஒருமைப்பாடு. அந்தச் சமய ஒருமைப்பாட்டையும் நாம் அப்பரடிகளிடத்துக் காணலாம். "ஆறு சமயத்து அவரவரைத் தேற்றும் தகையன; தேறிய தொண்டரைச் செந்நெறிக்கே ஏற்றும் தகையன" என்றார். விரிவிலார் வேறொரு சமயம் சொன்னாரேனும் அதுவும் எம்பிரானுக்குப் பொருந்தும் என்று கூறுகிற அளவிற்குச் சமய ஒருமைப்பாடு இருந்தது. அப்பரடிகள் கூறிய மொழி ஒருமைப்பாடு, உலக ஒருமைப்பாடு, சமய ஒருமைப்பாடு மூன்றும் உலகில் நிலவுமானால் சண்டை ஏது? சச்சரவு ஏது? அமைதி தவிர வேறொன்றும் இருக்க முடியாது. அப்பரடிகள் கூறுவதுபோல 'இன்பமே எந்நாளும் துன்பமில்லை!' இவ்வளவு சிறந்த ஒருமைப்பாட்டை ஏழாம் நூற்றாண்டிலேயே அப்பரடிகள் வலியுறுத்தியும்கூட, இந்த இருபதாம் நூற்றாண்டில் கூட ஏன் வளரவில்லை? நம்மிடையே ஒருமைப்பாட்டுக்குறை எப்படி வந்தது? ஆழ்ந்து சிந்தித்தால் இதற்குக் காரணம் தெரியவரும். நம்முடைய

பக்தி இயக்கம் உணர்ச்சியைத் தொடுவதாக மாறினால் சிறந்த ஒருமைப்பாடு விரைவில் மலரும் என்பதில் ஐயமில்லை.

## எங்கே இறைவன்?

இதற்கு அடுத்தபடியாக, எங்கே இறைவன் இருக்கிறான்? அவனை எங்கே போய்த் தேடுவது என்ற கேள்வியைக் கேட்டுக் கொண்டு அப்பரடிகள் பேசுகின்றார். அழகான ஓர் உவமை வாயிலாக இதனை அப்பரடிகள் விளக்குகின்றார்.

விறகுக் கடையிலே விறகைப் பார்க்கிறோம். அந்த விறகில் நெருப்புத் தெரிகிறதா? நெருப்புத் தெரியவில்லை. அதனாலேயே அதில் நெருப்பு இல்லை என்று கூறிவிட முடியுமா? விறகிற்குள், நெருப்பை உண்டாக்கும் சக்தி இருக்கிறது. பாலில் நெய் தெரிகிறதா? தெரியவில்லையே. அதனாலேயே பாலில் நெய் இல்லை என்று கூறிவிட முடியுமா? விறகில் தீ மறைந்திருப்பது போல, பாலில் நெய் மறைந்திருப்பது போல மாமணிச் சோதியனான இறைவன் எங்கும் மறைந்திருக்கிறான். ஒன்றோடொன்று சேரக் கடைந்து வெண்ணெய் எடுத்து நெய்யைக் காண்பது போல உறவுக்கோல் நட்டு உணர்வென்னும் கயிற்றினால் முறுக வாங்கிக் கடைந்து இறைவனைக் காண முடியும் என்கிறார் அப்பரடிகள்.

*விறகில் தீயினன் பாலில்படு நெய்போல்*
*மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்*
*உறவுக்கோல் நட்டு உணர்வுக் கயிற்றினால்*
*முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே!*

என்கிறார். "உறவுக்கோல் நட்டு" என்கிறார். இப்போது கடவுளை நெடுந்தொலைவிலே வைத்திருக்கிறோம். குருக்கள் கடவுளா? கோயில் கடவுளா? என்ற மயக்கம் பலருக்கு

இருக்கிறது. அப்பரடிகள் “உறவுக்கோல் நட்டு” என்று கூறுகிறார்.

*அப்பன்நீ அம்மைநீ ஐய னும்நீ*
*அன்புடைய மாமனும் மாமி யும்நீ*
*ஒப்புடைய மாதரும் ஒண்பொரு ளும்நீ*
*ஒருகுலமும் சுற்றமும் ஒரு ரும்நீ*
*துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்று வாய்நீ*
*துணையாய் என்நெஞ்சம் துறப்பிப் பாய்நீ*
*இப்பொன்நீ இம்மணிநீ இம்முத் துநீ*
*இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன் நீயே!*

இப்பாடலின் வாயிலாக அன்பின் படிமுறை வளர்ச்சியை அப்பரடிகள் நமக்கு உணர்த்துகிறார். அப்பாவிடத்திலே இருக்கிற அன்பைவிட அம்மாவிடத்திலே அன்பு கொஞ்சம் அதிகம்தான். அதன் பிறகு மாமியார், மாமனார் உறவு வருகிறது.

அன்புடைய மாமனும் மாமியும் என்று பேசுகின்றார். அன்பின் பரிணாம வளர்ச்சியை அப்பரடிகள் மிக நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறார்.

## தாய்மொழி வழிபாடு

இந்தப் பரிணாம வளர்ச்சியைக் குறிப்பிட்டுப் பாடிய அப்பரடிகள் இறைவனையே உறவாகப் பார்க்கிறார். கடவுளைக் கடவுளாகப் பார்த்து, ஆடிக்கொருதரம் கும்பிடுவதால் பயனில்லை. கடவுள் உறவு இருக்க வேண்டும்; உடைமைப் பொருளாக இருக்கவேண்டும். இப்படி கருதுதற் குரிய உணர்வு நமது சொந்தச் சிந்தனையில் ஊறி வளர வேண்டும். பிற்காலத்தில் கடவுள் பக்தி அப்படி ஊற் றெடுக்கும் அளவிற்கு இல்லாமற் போயிற்று. அதற்கான உணர்வு வற்றிப் போய்விட்டது. கோயிலுக்குப் போனால் குருக்கள் கையில் இருக்கிற மணி ஒலிக்கிறது; பக்தர்கள்

மனத்திலே நெகிழ்ச்சியில்லை; சுயசிந்தனை ஓட்டம் இல்லை. இதற்காகத்தான் தமிழில் வழிபாடு நடத்த வேண்டுமென்று நாம் வலியுறுத்துகிறோம். தாய்மொழிச் சிந்தனை மனிதனைப் பிரிப்பதன்று. உலகில் வாழும் மற்றவர்களோடு நாம் பழக, வேறு மொழிகளையும் கற்கவேண்டும். ஆனாலும் தாய் மொழிச் சிந்தனையிலிருந்து விலகக்கூடாது. தாய்மொழிச் சிந்தனைதான் உணர்வைப் பெருக்கும்; உணர்வைச் சுரப்பிக்கும்! இதனால்தான் நாம் தாய்மொழியில் வழிபாடு வேண்டுமென்று வலியுறுத்துகிறோம். இது தவிர நமக்குப் பிற மொழிகளிடத்து வெறுப்போ, காழ்ப்போ துளியும் இல்லை.

## கைம்மாறு கருதாக் கடப்பாடு

அடுத்து, தொண்டின் நெறி நின்று தொண்டின் சிறப்பை உலகிற்கு உணர்த்தினார் அப்பரடிகள். "தொண்டு செய்! தொண்டு செய்வதே மனிதனின் வாழ்க்கை! தொண்டலால் உயிருக்கு ஊதியமில்லை!" என்றார் அப்பரடிகள். உடம்பிற்கு ஊதியம் பணம், காசு, பொருள் முதலியன. உயிருக்கு ஊதியம் தொண்டு ஒன்றுதான். தொண்டு செய்வதாலே மனிதன் உயர்கிறான்; அவனுடைய உள்ளீடு சிறக்கிறது. எனவேதான் "தொண்டு செய்! தொண்டோடு பக்தி செய்!" என்றார்.

நாம் நடக்குபோது வலக்காலை வைத்தவுடன் இடக் காலை யோசித்தா எடுத்து வைக்கிறோம்? நாம் நடந்து செல்லவேண்டும் என்று முடிவெடுத்துக் கொண்டதும் எப்படி வலக்காலும் இடக்காலும் மாறி, மாறித் தொடர்ந்து இயல்பாக வைக்கப் பெறுகின்றனவோ அப்படியே வாழ்க்கை யில் தொண்டும் பக்தியும் மாறி மாறி இயல்பாகவே நடைபெற வேண்டும். ஒரு கால் தொண்டு, இன்னொரு கால் பக்தி. இரண்டு கால்களாலும் நடக்கின்ற மனிதன் எப்படித் தனது நடைப் பயணத்தை இன்பமாகச் சிறப்பாக

முடிக்கின்றானோ, அப்படியே தொண்டையும், பக்தியையும் வாழ்க்கைக் குறிக்கோள்களாகக் கொண்டு வாழுகிற மனிதன், தன் வாழ்க்கையை இன்பகரமாக நடத்த முடியும். அவன் வாழ்க்கை இன்ப வாழ்க்கையாகத் திகழும். இந்த உண்மையை மிக நன்றாக உணர்ந்தே நமது அப்பரடிகள் தொண்டின் வடிவமாகத் தொண்டின் செல்வராகத் திகழ்ந் தார். "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்றார்.

இன்று பணி செய்வதிலும்கூடப் பலர், பலாபலன் களைக் கணக்கிட்டே செய்கின்றனர். "பணி செய்ய வேண்டும், பலனை எதிர்பார்க்கக் கூடாது." என்றார் அப்பரடிகள். இத்தகு உயர்ந்த கொள்கைகள் பலவற்றை அப்பரடிகள் ஏழாம் நூற்றாண்டிலேயே வலியுறுத்திச் சென்றிருக்கிறார். நாம் வாழும் இந்த இருபதாம் நூற்றாண்டில் நாம் எவ்வெவற்றையெல்லாம் புதிய சிந்தனைகள் என்று எண்ணுகிறோமோ அவற்றையெல்லாம் ஏழாம் நூற்றாண்டில் இந்த நாட்டில் தோன்றிய அப்பரடிகள் மிக மிக அழகாக, ஆணித்தரமாகச் சொல்லிச் சென்றிருக் கிறார். ஏழாம் நூற்றாண்டில் அப்பரடிகள் காண விரும்பிய சாதிகுல பேதமற்ற, பொருளாதார ஏற்றத்தாழ்வற்ற, எல்லா ரும் எல்லாப் பெருஞ்செல்வமும் பெற்று வாழ்கிற, அன்பாலே மக்கள் குலம் இணைந்து வாழ்கிற, தொண்டின் வழிப்பட்ட புதிய சமுதாயம் காணும் முயற்சியில் ஈடுபடு வோமாக!

## 2. அன்பில்லையேல்...!

இன்று நம் நாட்டில் கடவுள் நம்பிக்கையுண்டு; வழிபாட்டு வெளிப்பாடும் உண்டு; திருக்கோயில்கள் சூழ்தலும் உண்டு; திருநீறு அணிதலும் உண்டு; ஆறுகாலப் பூசைகளுமுண்டு; விழாக்களும் உண்டு; வேடிக்கைகளும்

உண்டு; "அருச்சனைகள்" உண்டு; அமுது படையல்கள் உண்டு; இன்னும் என்னென்னவோ உண்டு. இவ்வளவும் இருந்தும் நாம் ஏன் கடவுளைக் காணவில்லை? கடவுள் காண முடியாத பொருளா? கடவுள் என்ன கற்பனையா? அல்லது பொய்யா? புனைந்துரையா? கடவுள் நம்பிக்கை யில்லாதவர்கள், "கடவுள் இல்லை, அதனால் காண முடியாது" என்பர். கடவுள் உண்டா? இல்லையா? என்ற வழக்கை நடத்துவதற்கு இன்றைய தமிழர்கள் தகுதியுடை யவர்களல்லர். அண்டங்களில் ஒன்றாகிய மதியினையே இப்பொழுதுதான் மாந்தன் பார்க்கத் தொடங்குகிறான்; அமெரிக்க மாந்தனும் உருசிய மாந்தனும் இதில் போட்டியிட்டுக் கொண்டு முயற்சி செய்கிறான்.

அண்டங்களில் ஒன்றாகிய மதியைக் கண்டுபிடிக்கவே இத்தனை நாளாயினவென்றால் "அப்பாலுக்கப்பாலாய்" என்று பாடப்பெற்ற பரம் பொருளை, உண்டா? இல்லையா? என்று ஆய்வதற்குரிய அறிவெல்லையை நாம் இன்னும் அணுகக்கூட இல்லை. ஆதலால், கடவுள் உண்டு என்று நம்புவதே இப்போதைக்கேற்ற அறம். ஆனால், ஏன் நம்மால், உள்ள கடவுளைக் காணமுடியவில்லை? கடவுள் ஏன் நம்மைக் கண்டு ஒளிந்து கொள்கிறார்.

நாம் கடவுளையும் ஏமாற்றுவதில் வல்லவர்கள். கடவுள் நம்மிடத்தில் எதை விரும்புகிறாரோ, நாம் அதைத் தருவதில்லை. கடவுள் நம்மிடத்தில் நம்முடைய நெஞ்சத்தில் ஓரிடம்; ஒண்டுக் குடித்தனம் செய்ய விரும்புகிறார்; மாறாத அன்பை வேண்டுகிறார். நாமோ அவருக்கு இவற்றைக் கொடுக்க அணியமாய் இல்லை. அதற்கு மாறாகத் தேங்காய் களைக் கொடுக்கிறோம்; பழங்களைக் கொடுக்கிறோம். ஏன்? சிலர் முடியையே கொடுக்கிறார்கள். கடவுள் விருப்பத்தை வழங்காத வல்லாள கண்டர்கள் நாமே!

இன்னும் சிலர் திருத்துறை, திருக்குளங்களில் நீராடு வதில் வல்லவர்கள்! கங்கை என்றும் காவிரி என்றும் சுற்றித்திரிந்து மூழ்கிக் குளித்து மகிழ்கின்றனர். ஆனாலும் அவர்களிற் பலர், சராசரி மக்களாகக்கூட விளங்காமையைப் பார்க்கிறோம். நறுநீரால் (தீர்த்தத்தால்) இவர்களுக்குப் பயன் விளைந்ததோ இல்லையோ, இவர்களால் நறுநீர் கெட்டது என்னவோ உண்மை. இவர்களை ஆட்சி செய்யும் விலங் குணர்ச்சியிலிருந்து இவர்கள் விடுதலை பெறவில்லை. திருத் துறைகளில் மூழ்கி எழுந்திருப்பதால் திருவருட்பேறு பெற்று விடுவதென்றால் நீர் வாழ்வன அனைத்துமே பெற்றுவிடுமே! நண்டும் தவளையும் நாயகன் அருள் பெற்றிருக்கவேண்டுமே! அப்பரடிகள், வினாவிற்கேற்ற விடை தருகிறார். அப்பரடிகள், சமயத்தைப் பருவுடல் வாழ்க்கையில் மட்டும் கொண்ட வரல்லர்: உயர்ந்த பட்டறிவில் திளைத்தவர். அவர் வாழ்ந்த மெய்யறிஞர்; புரட்சியிற் பூத்த புதுமலர்; புதுமணம் வீசிய நறுமலர்; அருள் மணங்கமழ்ந்த திருமலர்.

தண்ணீர் இயல்பாக ஓடும் தன்மையுடையது. எங்கும் கெட்டியான அடைப்பிருந்தாலன்றித் தண்ணீர் தேங்காது. உருண்டு ஓடுதல் அதன் இயற்கை. இங்ஙனம் ஓடும் தண்ணீரை ஓட்டைக் குடத்தில் இரண்டு கைகளால் அள்ளிச் சேர்த்து மூடி வைப்பது முடிந்த காரியமோ? தண்ணீரைக் கைகளால் அள்ளிப் பானையில் சேர்ப்பதற்கு முன்பே பாதி போய்விடும். பானையோ ஓட்டை! பானையில் விழுந்த தண்ணீரும் அடுத்த கைத் தண்ணீர் வருவதற்கு முன்பு ஓடிவிடும். இந்த நிலைமையில் ஓட்டைப் பானைக்குள் தண்ணீரை வைத்து எப்படி மூடுவது? வெறும் பானையைத் தண்ணீர் இருப்பதாகக் கற்பனை செய்து கொண்டு மூடினால்தான்! அப்படி மூடி வைப்பதால் என்ன பயன்? என்ற இரக்கத்திற்குரிய வினாவை அப்பரடிகள் வினவுகிறார். அதுபோல ஓரிடத்திலும் நிலைபெறாது உருண்டு ஓடும் மனம். இந்த மனம் தங்கியிருக்கின்ற குடமாகிய உடம்பைத்

திருத்துறைகளில் குளிப்பாட்டித் திருவருள் கிடைத்ததாக நம்பி வாழ்வது ஓட்டைக் குடத்தில் ஓடும் நீரினை அடைத்து வைத்த முட்டாளின் செயலோடு ஒக்கும்.

இறைவனைக் கோடி துறைகளில் குளித்தாடுவதால் மட்டும் காண முடியாது; நெஞ்சு கலந்த அன்பினாலேயே காண முடியும். "ஆற்றல் மிக்க அன்பால் அழைக்கின்றிலேன்" என்றும், "அருச்சனை வயலில் அன்பு வித்திட்டு" என்றும் மாணிக்கவாசகர் பேசுகின்றார். "ஐயன் ஐயாறனார்க்கு அன்பலால் பொருளில்லை" என்பர் அப்பரடிகளும். ஆதலால், இறைவனின் திருவருளைப் பெற அன்பே வழி; வேறு வழிகள் இறுதிப் பயனைத் தரா.

கோடி தீர்த்தங் கலந்து குளித்தவை
ஆடி னாலும் அரனுக்கன் பில்லையேல்
ஓடு நீரினை ஓட்டைக் குடத்தட்டி
முடி வைத்திட்ட மூர்க்கனோ டொக்குமே

என்பது அப்பரடிகளின் திருப்பாடல்.

## 5. புழுவிற் கடைமனிதன்

மனிதப் பிறப்பு மிகமிக உயர்ந்தது. உயிரினம் அனைத்துக்கும் மனிதனே நாயகன். ஆண்டவனுக்கு அடுத்து அணியார் சிறப்புடையது மனித இனமேயாகும். ஏன்? ஆண்டவனையேகூட, வளர்ந்த மனிதர்கள் ஏவல் கொள்வார்கள். இத்தகு சிறந்த மனித இனம் இன்று தாழ்ந்து கிடக்கும் நிலையினை எண்ணினால் வேதனை பெருகுகிறது. ஏன்? எதனால்?

மனிதனை, மனித இயல்புகளை ஆராய்வதில் அப்பரடிகளுக்கு இணை யாரோ? அப்பரடிகள் இந்த ஆய்வின் முடிவுகளைப் பிறர்மீது ஏற்றிக்கூற மாட்டார். "பிறர் தீமை சொல்லா நலத்தது சால்பு" என்பது வள்ளுவமன்றோ? எந்தக்

குறையினையும் தம்மீது ஏற்றியே பாடும் இயல்பு குணக்குன்றனைய அப்பரடிகளுக்கு உண்டு. குற்றமிலராய் வாழ்தல் சிறப்பு. ஆயினும் குற்றம் வந்திடுமோ என்று அஞ்சி, அஞ்சி அறநெறியில் நின்றிடுதல் அதனினும் சிறப்பு.

உயிரினங்கள் அனைத்திற்கும் பசி உண்டு. பசியைத் தணித்துக் கொள்ள உணவினை நாடி முயலும் முயற்சி எல்லா உயிர்களுக்கும் உண்டு. உண்டு மகிழ்தலும் உண்டு; உறங்கிக் கழித்தலும் உண்டு; இன்ப துன்பங்களைச் சார்ந்து மகிழ்தலும் நோதலும் உண்டு. இவையனைத்தும் மிகுதிப் படுவது தீமையென்றாலும் உயிரின் இயற்கையாகும். இவை உயிரியல் வாழ்க்கைக்கு இன்றியமையாதனவும் ஆகும். இதனால், இந்தக் குணங்களால் வேறு இனத்திற்குக் கேடொன்றுமில்லை. மனிதனோ, இவைகளோடு மட்டு மில்லாமல் மற்ற உயிரினத்திடத்தில்லாத ஒரு பெரிய தீமையைப் பெற்றிருக்கிறான். அதுதான் பொல்லாங்கு பேசுதலும், பொல்லாங்கு செய்தலும் ஆகும். எந்தவொரு விலங்கும் வலிய மேற்சென்று யாருக்கும் தீங்கு செய்வதில்லை. மனிதனோ விலங்கிலிருந்து உயர்ந்து விளங்கிக் காட்சி தரவேண்டியவன். அணைத்து அள்ளித் தூக்கமுடியாத அளவுக்கு ஆசாபாசக் கடலில் வீழ்த்தி விடுகிறான்.

ஒரு சாதாரணப் புழு, உடலைப் பேணுவதில் மனிதனைப் போலவே அதிக அக்கறை காட்டுகிறது. ஆனால் அப்புழு பொல்லாங்கு பேசுவதில்லை; பொல்லாங்கு செய்வதில்லை! சிவனடியார் திருக்கூட்டம் என்பது பழுத்த மனத்தடியார் கூட்டமாகும். அவர்கள் நன்றுடையவனையே கருதுவார்கள்: அல்லன கருதார். செம்மனச் சான்றோராக விளங்கித் தம் மகவெனப் பல்லுயிரையும் ஒப்பப் பார்த்து, பரிந்தோம்பிக் காப்பவர்கள். இத்தகு அடியார்கள் குறைவிலா நிறைவாகக் கோதிலா அமுதாக, புண்ணியத்தின் புண்ணிய மாக விளங்கும் சிவபெருமானின் அடியார்கள். இவர்கள்

உயிரால் தனித்து, இறைவனுடன் ஒன்றித்து வாழ்பவர்கள். ஆயினும், சீலத்தின் சார்பால் கூடி வாழ்பவர்கள். அவர்களுடைய கூட்டத்தைப் 'புனிதர் பேரவை' என்று சேக்கிழார் பாராட்டுவார். தூய்மையில் தூய்மையே புனிதம். தூய்மையில் தூய்மையின்மை ஒரோவழி காணலாம். ஆனால், புனிதத்தில் தூய்மையின்மை ஊழி பெயரினும் காண முடியாது. "ஊழி பெயரினும் தாம் பெயரார்" என்பது வள்ளுவம். இத்தகு சிறந்த சிவனடியார் கூட்டத்திற்குள் தனக்கு இடம் கிடைக்குமோ? என்று அப்பரடிகள் ஐயப்படுகிறார்.

> புழுவுக் குங்குணம் நான்கெனக் கும்மதே
> புழுவுக் கிங்கெனக் குள்ளனபொல் லாங்கில்லை
> புழுவி னுங்கடை யேன்புனி தன்தமர்
> குழுவுக் கெவ்விடத் தேன்சென்று கூடவே

என்பது அப்பர் திருப்பாடல்.

சிவம், பண்பு, இனிமை இவற்றிற்கு முரண்பாடு தீமை. அதாவது பொல்லாங்கு — தீயன எண்ணுவோர், செய்வோர் சார்வோர், சிவநெறியைச் சார்ந்தவராகக் கருதப்பட மாட்டார்கள். அவர்களுக்குச் சிவன் எம்பிரானிடத்தில் இடமில்லை. ஏன்? அவனுடைய அடியார்கள் கூட்டதிலுங்கூட இடம் கிடைக்காது. சிவநெறி நாளும் நன்மை பெருகு அருள்நெறி இயக்கமாகும். இஃது அப்பரடிகளின் ஆணை.

## 4. நெஞ்சமும் ஊசலும்

மனித வாழ்வின் மையம் நெஞ்சமேயாம். நெஞ்சத்தின் இயல்பே மனிதனின் வாழ்க்கைக்கு அடித்தளமாகிறது. நெஞ்சு நிலையான தன்மையுடையதன்று. அதற்கென்று தொழில் தன்மை உண்டே தவிர, குணத்தன்மை கிடையாது. நெஞ்சிற்குக் குணங்களாகிய சிறப்பை, மனிதன் தன்னுடைய அறிவறிந்த ஆள்வினையால் ஆக்கித்தரக் கடமைப்

பட்டிருக்கின்றான். நெஞ்சிற்கு மெல்லியல்புகளை மனிதன் தந்து, நெஞ்சின் வழி இயங்குகின்ற பொறிபுலன்களாலே பயன் அடைய வேண்டும். அதனால்தான் நெஞ்சை இரந்து கேட்கிறார் திருஞானசம்பந்தர், நல்லவண்ணம் இருந்து துணை செய்யும்படியாக!

நெஞ்சத்தின் தொழில் — இயல்பு சுவைத்தலாகும்; ஆனால், அலையும் இயல்புடையதுமாகும். அது ஒன்றை நன்றென்று கருதி ஏற்றுச் சுவைக்கும். உடனடியாகவே, "சீச்சீ, இது நன்றன்று" என்று பிறிதொன்றினை நாடும். நாடிப் பிடித்து நன்றென்று சுவைக்கும். பின் "சீச்சீ, இது நன்றன்று; முந்தியதே நன்று" என்று மீண்டும் போய்ச் சுவைக்கும். சில சமயங்களில் "இதுவா? அதுவா?" என்று விரைந்த முடிவுக்கு வரமுடியாமல் இடையிலும் நின்று அலையும். இதுவே நெஞ்சத்திற்குரிய தொழில்.

மனிதன் தன்னுடைய அறிவின் திறன் கொண்டு நலம்தரும் சுவையைத் தேர்ந்து அதனை நெஞ்சு துய்க்கும் படி செய்யவேண்டும். நெஞ்சு துய்ப்பதற்கே உரிய ஒன்று. அதற்குரிய அனுபவத்தை நாம் தேர்ந்து தேர்ந்து தெளிந்து வழங்கத் தவறிவிட்டாலும், அது தன் முயற்சியில் தன்னிச்சையாகத் துய்த்தற்குரிய பொருளைத் தேடி அலை கிறது. அதுபோதே அவலம் தொடருகிறது. நாள்தோறும், நாழிகைதோறும் தூய அன்பு, தொண்டு, நல்வழிபாடு ஆகியவற்றில் நெஞ்சத்தை ஈடுபடுத்தித் துய்க்கச் செய்தல் வேண்டும். அதற்கு அறிவறிந்த ஆள்வினை தேவை. அஃது அற்றவர்கள், நெஞ்சத்தைத் தன் போக்கில் விடுகிறார்கள். அது முன்னர்ச் சொன்னது போல் ஒன்றைவிட்டு ஒன்றுபற்றி நிறைவான துய்ப்புக் கிடைக்காமல் எய்த்து அலைகிறது; சோர்வடைகிறது; துன்பத்தின் கொள்கலன் ஆகிறது. நெஞ்சுக்கு உற்ற அனைத்து அவலங்களையும் மனிதனின் ஆன்மாவும் அடைய வேண்டியதிருக்கிறது. ஏன்? உடம்பும் பொறி புலன்களும்கூட, அல்லற்பட வேண்டியதிருக்கிறது.

இங்ஙனம் அவையும் நெஞ்சத்தை ஊஞ்சலுக்கு உவமை காட்டுகிறார் அப்பரடிகள், ஊஞ்சல், மரத்தில் கட்டப் பெற்றிருக்கிறது. உயிரியல், வாழ்க்கையென்ற மரத்திற் கட்டப் பெற்றிருக்கிறது. ஊசற்பலகையை மரத்தோடு இணைப்பன இரண்டு கயிறுகள். உயிரை வாழ்க்கையோடு இணைப்பன ஆசை, பாசம் என்ற கயிறுகள். ஊஞ்சல் புறப்பட்ட இடத்திலிருந்து முன்னே செல்லும்; பின்பு புறப்பட்ட இடத்திற்கு வரும்; திரும்ப ஏகும், வரும்; இடை உலவும். இந்த ஊஞ்சலின் இயக்கத்தோடு நெஞ்சை உவமித்தது சிந்தனைக் குரிய விருந்து.

*உறுகயி றூசல்போல் ஒன்றுவிட் டொன்று பற்றி*
*மறுகயி றூசல் போல வந்துவந் துலவு நெஞ்சம்*
*பெறுகயி றூசல் போலப் பிறைபுல்கு சடையாய் பாதத்*
*தறுகயி றூசலானே னதிகை வீரட்டனீரே!*

என்பது பாடல்.

"ஊசல் பூத்த உளம்" என்று பிரபுலிங்கலீலை பேசுகிறது. ஒன்றுவிட்டு ஒன்றுபற்றி வந்துலவும் நெஞ்சத்திற்குக் கயிறூசல் ஒப்பு. முதன் முறையாகத் தன் நிலையை விட்டுச் சென்று பிறிதோரிடத்தைப் பற்றுவது 'உறுகயிறூ சல்.' பற்றிய அவ்விடத்தை விட்டு மீண்டு, தொடங்கிய நிலைப்பக்கம் வருவது மயிகயிறூசல்; அந்நிலையை விட்டு மற்றொரு பக்கம் சென்று பற்றுவதும் அதைவிட்டு மீள்வதும் அவ்விரண்டு ஊசலேயாகும். இடையில் வந்து உலவும்பொழுது வாசற் கயிறு முறுக்கு அவிழ்தல் உண்டு. முறுக்கு ஏறுதல் உண்டு.

"உறுகயிறூசல்" ஆகும் பொழுது கயிறு முறுக்கேறியும், திரும்ப மறுகயிறூசல் ஆகும் பொழுது முறுக்கவிழ்ந்தும் ஒருவழிப்படாமல் பிறர் வழிகளில் கயிறு இயக்கப்படுவதால் கயிற்றின் வலிமை தளர்ந்து தாங்கி நிற்கும் இயல்பை இழந்து "அறுகயிறூசல்" ஆகிறது. அது போல அவா மிகுதியினால் நாடி நரம்புகளில் முறுக்கேறி ஒன்றை நாடியும் அதனை

அடைந்தும் அடையாமலும் அவலப்படும் வழி அவா என்ற பாசக்கயிறு தளர்ந்து அறுகிறது. ஊஞ்சற் கயிறு அறுந்தால் தரை தாங்குதல் போல, ஆன்மாவைப் பற்றி அலைக்கும் அவா பாசக் கயிறு அறுந்தால் ஆன்மாவைத் தாங்கும் தரை இறைவன் திருவடிகளேயாகும்.

ஊஞ்சல் தன்மை உடையதாக இருக்கும் நெஞ்சத்தை மாற்றி நிலைமாறச்செய்ய வேண்டுமென்றால் தாங்கித் திருவருள் சுரக்கும் திருவடிகளை நினைத்து வாழ்த்துதலே வழி; இதனையே 'நிலைபெறுமா றெண்ணுதியேல்' என்ற திருப்பாடலில், அடிகள் விளக்கி அருளுகிறார்.

## 5. முயல் விட்டுக் காக்கைபின் போனவாறே!

அப்பரடிகள் இறைவன் கருணையை நினைந்து, நெஞ்சு நெகிழப் பாடுபவர். உயிர் அருவப்பொருள். அதற்கு ஓர் உருவத்தைத் தந்து உலகிடை அனுப்பித் துய்ப்பன துய்த்து, மகிழ்வன மகிழ்ந்து—குறை நீங்கி நிறைநலம் பெறச் செய்யும், அவன் கருணையே கருணை. இதனை,

> என்பிருத்தி நரம்புதோல் புகப்பெய் திட்டு
> என்னையோ ருருவமாக்கி,

என்று பாடுகிறார். உருவமாக்கிய இந்தப் பணிக்கு ஈடாக எதனைக் கூறமுடியும்? இந்த உருவத்தினை முதலாகக் கொண்டுதானே மனிதன் வளர்கிறான்; வரலாறு படைக்கிறான்; உலகில் வேறு எந்த அறிவியல் படைப்பையும் விட இந்த மானுட யாக்கையின் படைப்பு அதிநுட்பமானது; அறிவியல் தன்மையுடையது. இந்த உடல் உயிர்க்கூட்டின் பயன், உயிரை இன்புறுத்தலேயாம். இறைவன் திருவுள்ளம் இன்புறுத்தலேயாம். ஆயினும் உயிர், பெற்றுள்ள சிற்றறிவு அடங்கவா செய்கிறது? அது தன்னிச்சையிலேயே ஆட்டம்

போடுகிறது! அறிவுப் பொருளைத் திருத்திச் சீராக்குதல் எளிய காரியமன்று. அறிவற்ற சடப்பொருள் எளிதில் பக்குவப்படும். அறிவு நாடகமாடும் நடிக்கும்; உணர்ந்தது போல் காட்டிப் பின் தன்னெறியே மேற்கொள்ளும்; இன்பத்தைத் துன்பமாகக் கருதும்; துன்பத்தை இன்பமாகக் கருதும்; அடக்கினாலும் சிலநாள் அடங்கும். வாய்ப்பு வந்துழி மிஞ்சும். இத்தனை இக்கட்டான நிலையில் உயிருக்கு அறிவு கொளுத்தியே—அதனை அறியச் செய்தே பக்குவப்படுத்த வேண்டியதிருக்கிறது; அடிமைப்படுத்தவும் முடியாது. இன்பத்திற்கு எதிர் துன்பம். துன்பத்திற்குக் காரணம் அறியாமை. அறியாமையினால் செய்த செயல்களின் விளைவுகள் வினை! நோய் நீங்குகிறவரை உணவு சுவைக்காது என்பதுபோல, வினை நீக்கம் பெறும்வரையில் நிறைநல இன்பத்தையும் துய்க்க முடியாது. ஆதலால்,

முன்பிருந்த வினை தீர்த்திட்டு

என்கிறார்! தீமை நீங்கினால் போதாது; நன்மை விளங்கிட வேண்டும். இதனை வள்ளுவமும்,

சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு

என்று கூறுகிறது. அருணகிரியாரும்,

**"பொய்யை நிந்திக்கிலேன் உண்மை சாதிக்கிலேன்,"** என்று கூறுகிறார். தீமைக்குக் காரணமாகிய அறியாமை நீங்கிய வுடன் அறிவு ஆங்கு விளங்கவேண்டும். இறைவன் உயிரிடத்து விளங்கிய முன்னை வினை வாசனை நீங்கிய பிறகு, அந்த உயிரின் உள்ளத்தையே கோயிலாகக் கொண்டு குடியிருந்தருளுகின்றான்."

அறியாமையில் உயிர் கிடக்கும்பொழுது உடலினுள் இருக்கும் உயிரும், மாற்றாரும் அறிய முடியாவண்ணம் நின்றருள் செய்யும் இறைவன், வினை நீக்கத்துக்குப் பிறகு

பலரும் காணும் திருக்கோயிலென்ன, உயிரிடத்து விளக்கமுற வீற்றிருக்கின்றான். இறைவன், உள்ளத்து இடங்கொண்ட மையின் காரணமாக அன்பு ஊற்றுக்கண் திறக்கிறது; உயிரிடத்து ஆற்றல் மிக்க அன்பைத் தூண்டுகிறது; இந்த நிலையில் 'அன்பும் சிவமும்' ஒன்றென்ற குரல் எழும்புகிறது. அன்பினாலாவது இன்பமே, அன்பினாலல்லது வன்பினால் ஆவது எப்பொழுதும் இன்பமன்று. அஃது ஒரு சேறு. அன்பு இன்புறுத்துகிறது. அன்பு பெருகி இன்பத்தில் திளைக்கும் பொழுது மேலேது? கீழேது? உயிர், இன்புறுத்தும் பொரு ளிடத்தும் அடிமையாகிறது. இஃது அறிவியல் அடிமை; உணர்வின்பாற்பட்ட அடிமை. இத்தகைய இறைவன் திருவருளை நினைந்து வாழ முடியாமல் பிற தெய்வங்களை வணங்குவதும், பிற நெறிகளைச் சார்வதும் வேடிக்கையாக இருக்கிறது! அப்பரடிகளே தம் வரலாற்றினை நினைந்து வியந்து பாடுகிறார். முயல், நாட்டில் திரிவது, அதனால் அதைப் பிடிப்பது சுலபம். எளிதில் பிடிக்கக்கூடிய முயலைப் பிடிக்காமல் விட்டுவிட்டு எளிதிற் பிடித்தற்கியலாத காக்கையைப் பிடிக்கக் காக்கையின் பின்னே ஓடித்திரியும் செயலை நினைவுபடுத்துகிறார். காக்கையோ வானில் பறக்கிறது. மனிதனுக்கோ பறக்கும் சக்தியில்லை, எங்ஙனம் பிடிக்க முடியும்?

கையிலிருக்கும் முயலை விட்டுவிட்டுக் காக்கையைப் பிடிக்கப்போவதாகவும் பொருள் கொள்ளலாம். முயல் சிவநெறி; நாம் பிறந்த நெறி, எளிதில் அமைந்த நெறி; இன்றமிழ் நெறி; ஆரத்துய்த்து மகிழத் துணை செய்யும் தூநெறி; இனிய நெறி, எளிய நெறி. இந்நெறிகளில் பிறந்திருந்தும் இந்நெறி நின்று வாழாது பிற நெறிகளைத் தேடியலைவதும் தாயிற்சிறந்த தயாவுடைய நம் சிவன் தாளினைத் தொழாது வேறு தெய்வங்களைத் தேடியலை வதும் காக்கையின் பின் ஓடுவதை யொக்கும்.

*இனிய பாடல்! பாடிப் பயிலுக!*

*என்பிருத்தி நரம்புதோல் புகப்பெய்திட்*
*டென்னையோ ருருவ மாக்கி*
*இன்பிருத்தி முன்பிருந்த வினை தீர்ந்திட்*
*டென்னுள்ளங் கோயி லாக்கி*
*அன்பிருத்தி யடியேனைக் கூழாட்கொண்*
*டருள்செய்த வாரு ரர்தம்*
*முன்பிருக்கும் விதியின்றி முயல்விட்டுக்*
*காக்கைபின் போன வாறே.*

(அப்பர் தேவாரம்—நான்காந் திருமுறை திருவாரூர்: பழமொழி)

## 6. காயும் கனியும்

இந்த உலகிடைப் பல சமய நெறிகள் நின்று நிலவுகின்றன. இச்சமய நெறிகள் அனைத்தும் இலட்சிய நோக்கால் ஒருமைப்பாடுடையனவேயாம். ஆயினும் இலட்சியத்தைப் பற்றிய அறிவிலும் தெளிவிலும், அந்த இலட்சியத்தை அடைதற்குரிய நெறிமுறைகளிலும் வேறுபாடுகள் உண்டு. இந்த வேறுபாடுகள் இயல்பாய அறிவு அனுபவக் கூறுகளின் அடிப்படையிலேயே தோன்றுவன. இவ்வேறுபாடுகள் சிந்தனையுடையார்க்கு மகிழ்வையே தரும்; வெறுப்பினை விளைவிக்கா.

உயிர்களின் மேம்பாடு என்ற அடிப்படையில் சமய நெறிகள் ஒன்றுபட்டாலும் தத்துவ அடிப்படையில் மாறுபடுகின்றன. இம்மாறுபாடுகள் தத்துவக் கூர்தல் வழி தோன்றுவன. தமிழினத்தின் தனி நெறியாகிய சித்தாந்தச் சிவநெறி முழுதுற வளர்ந்த நெறியாகும். சித்தாந்தம் என்ற சொல்லுக்கே 'முடிந்த முடிபு' என்பது பொருள். சித்தாந்தச் சிவநெறியில் இறைவன் கருணை நிறைந்தவனாக — தாயிற் சிறந்த தயாவுடைய தண்ணளியுடையோனாகப் போற்றப்

படுகின்றான். திருநீறு உயிர்களுக்குக் கவசம்; வினை நீக்கிப் பாதுகாப்புத் தரவல்லது. திருக்கோவையார் அருளிச் செய்த மாணிக்கவாசகர், குழந்தையின் நோய்க்குத் தாய் மருந்துண்பதைப் போன்று இறைவன் தன்னைத் தொழுது எழும் உயிர்களின் "வினை வலம் நீறெழத் திருநீறணி அம்பலவன்" என்று ஆண்டவனைப் பாராட்டினார். இந்த அனுபவத்தைக் கண்டு சுவைத்தற்கேற்றவாறு கூறுபவர் நமது அப்பரடிகள். இறைவன், "மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த மேனியான்" என்று இதயம் குளிரப் பாடுகின்றார். அவன்றன் திருவடியைத் தொழுதால் நோன்பின்றி — வருத்த மின்றி இறைவனே நம்மை வலிய ஏற்றுக் கொள்வான். அதனுடைய அடையாளமே அவன் வெண்ணீறு சண்ணித்த மேனியனாக இருப்பது. அவனைத் தொழாது உறிதூக்கித் திரிந்து உடலையும் உயிரையும் வருத்திக் கொள்வதால் பயன் என்ன? உடலையும் உயிரையும் வருந்துகின்ற நோன்புகளால் உயிர் உய்தி பெறலாம் என்று கூறும் சமய நெறிகள் காய் அனையவே.

பெரும்பாலும் காய்கள் சுவையாக இருப்பதில்லை. காய்களை எளிதில் பெறவும் முடியாது; அடித்துப் பறிக்க வேண்டும். காய்களைத் தின்று அனுபவிப்பதிலும் தொல்லை அதிகம். காய்கள் எளிதில் செரிக்கா; ஆண்டில் இளையர் உண்ண முடியாது; பிறிதொரு சுவையூட்டாமலும் உண்ண முடியாது; செரித்த பின்பும் காய்களால் பெறப்படும் உடற்பயன் மிகமிகக் குறைவு. அதுபோலவேதான் நோன்பு களால் உடலை வருத்தும் சமய நெறிகளைச் சார்ந்து நிற்பதும் எளிதன்று. அவை உடலையும் உயிரையும் வருத்துவன; விளையும் பயனும் தெளிவானதன்று. கனி, எளிதில் கிடைப்பது; வலியக் கிடைப்பது; தொட்டால் சாறு கிடைக்கும்; ஆண்டில் இளையவரும் உண்ணலாம்; முதிய வரும் உண்ணலாம்; தானே கனிந்ததானமையால் சுவை

முற்றியது; சுவையூட்டத் தேவையில்லை; சுவைத்தலும் இனிது; தின்று மகிழ்தலும் இனிது; எளிதில் செரிக்கும்; முழுவதும் உடலுக்குப் பயன்தரும். சித்தாந்தச் சிவநெறி கனிச்சாறு அனையது. "ஒரும் வேதாந்தம் என்று உச்சியிற் பழுத்த, ஆரா இன்ப அருங்கனி பிழிந்து சாரங்கொண்ட சைவ சித்தாந்தத் தேனமுதருந்தினர்" என்பது குமர குருபரர் வாக்கு. சிவன், விரதங்களெல்லாம் மாண்ட மனத்தவன்; பழத்திடைச் சுவையொப்பவன்; கனியும் கனிதரு சுவையும் ஒத்தவன், "ஈசன் எனுங்கனி" என்பர் அப்பரடிகள். காய் காவலுடையது; கனியாகும் வரையில் காவலுண்டு. காயாகப் பறித்துத் தின்ன வேண்டுமென்றால் களவாகக் கல்லெறிந்து பறித்திடுதல் வேண்டும்; கனி காவலற்றது. கனி பறித்தற் குரியதுமன்று. அதுபோலவே காய் அனைய சமயங்களில் நிற்பவர்களுக்குப் பொறிகள் காவலும் புலன்கள் காவலும் வேண்டும். சிவநெறியின் கொள்கை வாழ்க்கை மகிழுதலுக் குரியது என்பதாகும். இறைவனே "பொன்னும் மெய்ப்பொருளும்" தந்து துய்க்கச் செய்வான்; "ஒப்புடைய மாதராய்" நின்று துய்க்கச் செய்வான். அனுபவத்திற்குத் தடையில்லாத இடத்தில் காவலும் கிடையாது; களவும் வாராது. சிவநெறி காவலற்ற நெறி; அனுபவ நெறி. இந்நெறியல்லாது வேறு நெறிகளில் நின்றொழுகுதல் கனியிருக்கக் காய் கவர்ந்ததையொக்கும். "கனியிருக்கக் காய் கவர்ந்தது" என்பது மிகவும் சுவையானது. சிவநெறியில் பிறந்திருந்தும் சமணத்திற்குச் சென்று திரிந்ததை அடிகள் அழகாகக் குறிப்பிடுகிறார். இதனை,

மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த
    மேனியான் தாள்தொ ழாதே
உய்யலா மென்றெண்ணி யுறிதூக்கி
    யுழிதந்தென் னுள்ளம் விட்டுக்

*கொய்யுலா மலர்ச்சோலைக் குயில்கூவ*
*மயிலாலும் ஆரு ராரைக்,*
*கையினாற் றொழாதொழிந்து கனியிருக்கக்*
*காய்கவர்ந்த கள்வ னேனே,*

என்ற அப்பர் திருப்பாட்டு உணர்த்தும்.

## 7. இருட்டறையில் மலருகறந்து எய்த்தவாறு...!

சமயநெறிகள் உலகிடைப் பலப்பலவாய்த் தோன்றி விரிந்துள்ளன. குறிக்கோள் அடிப்படையில், அதாவது உயிர்கள் உய்திபெறு நிலைபேறாய இன்பத்தில் திளைக்க வேண்டும் என்ற நோக்கில், சமய நெறிகளுக்குள் முரண் பாடுகள் இல்லை; மோதுதலும் இல்லை. ஆயினும் உயிர், உலகு, கடவுள், பிறப்பு, இறப்பு ஆகிய உண்மைகளைப் பற்றிய அறிவில் சமய நெறிகள் முரண்பட்டே பேசுகின்றன இந்த முரண்பாடுகள் தவிர்க்க முடியாதவை. காலம், பட்டறிவு ஆகியவற்றின் அடிப்படையில் வேறுபாடுகள் இருப்பது இயற்கையேயாம்.

ஆதலால், சமய ஒருமைப்பாட்டுணர்வைப் பேணிப் பாதுகாப்பதோடு பல்வேறு சமய நெறிகளையும் கற்றுத் தெளிந்து நின்று ஒழுகி அனுபவமும் பெற்று, எந்த நெறியில் அதிகத் தெளிவும் உறுதியும் இருக்கின்றனவோ அதை எடுத்துக் கொள்ள வேண்டுவது மனித உலகத்தின் கடமை யாகும். இங்ஙனம் எடுத்துக் கொள்ளக் கூடிய தகுதி பெறாத வர்களை 'விரிவிலார்' என்று அப்பரடிகள் கண்டிக்கிறார். இன்று, சமய நெறியினர் பல்துறையையும் ஆராயும் துணிவின்றித் தேங்கியே நிற்கின்றனர். மக்களைச் சிந்திக்கத் தூண்டாமல் பழக்க வழக்க வலையிற் சிக்கவைத்து ஆதிக்கம் செய்யவே சமய நெறியாளர்களும் விரும்புகின்றனர். சமய

அனுபவம் சிந்தையில் தோன்றித் தெளிவடைய வேண்டிய ஒன்று. அதற்குரிய வாய்ப்பைச் சமயவுலகம் வழங்க மறுத்தால், மனித உலகம் உணர்வும் அனுபவமுமற்ற ஒரு கண்மூடித்தனமான சமய பழக்கவழக்கங்களிலேயே நிற்கும். இதனால் சமய நெறிக்கும் சிறப்பில்லை; மனித உலகத்திற்கும் பயன் இல்லை.

அப்பரடிகள் சமண சமயத்தில் தொடக்க காலத்தில் நின்று ஒழுகியவர். அந்நெறி அவருடைய அறிவுப் பசிக்கு ஈடு கொடுக்க முடியவில்லை. அவரது அனுபவ உணர்வுக்கும் அது களமாக அமையவில்லை. சமண சமயம் அறிவையும் அனுபவத்தையும் வளர்ப்பதற்குப்பதில் உலகியலை விரித்துப் பேசி ஒடுங்கச் சொல்லிற்று. ஒன்றை விரித்துப் பேசுதலே ஒடுங்குவதற்குத் துணை செய்யாது. அதோடு, ஒடுங்குதலால் உயிர் ஒருபொழுதும் உய்தி பெற முடியாது. மாறாக ஒழுகுதலால் உயிர் உய்தி பெற முடியும். ஒழுகுதல் புலன்களை நல்லன சுவைக்கப் பழக்கப்படுத்திப் பக்குவப்படுத்துதல். இதனைத் திருமூலர் 'மடைமாற்றுதல்' என்பார். அதாவது வீணே போகும் தண்ணீரை மடை மாற்றிக் கழனியிற் பாய்ச்சுதலைப் போலத் தற்சார்பான ஆசைகளில் செல்லும் புலன் நுகர்வை இறையருளில் மடை மாற்றி ஈடுபடுத்துதல் ஆகும்.

ஓடுதலும் திரிதலும் சமணர் இயல்பு. அதாவது ஓரிடத்தில் இருந்தாலே பற்று வந்துவிடுமாம். அதனால் இடம் விட்டு இடம் ஓடிக்கொண்டிருக்க வேண்டும். இங்ஙனம் ஓடுவதால் பற்று இல்லாமல் போய்விடும் என்று சொல்லிவிட முடியாது. பற்று, மற்றவர் காட்சிக்குப் புலனாகும் வண்ணம் வெளிப்படுதற்கு வேண்டுமானால் வாய்ப்பில்லை எனலாம். பற்று ஒட்டிக் கொண்டேயிருக்கும். ஓரிடத்திலிருந்தே பற்றின்றி இருப்பதுதான் உண்மையில்

முற்றிலும் பற்று விடுதற்குச் சாதகமாகும். தாமரையிலை, தண்ணீருக்குள்தான் கிடக்கிறது. ஆனால், தண்ணீர் அதில் ஒட்டாது. புளியம்பழம் ஓட்டுக்குள்ளிருந்தாலும் ஓட்டுக்கும் பழத்துக்கும் உறவு இருக்காது. அதுபோல் ஒன்றில் நின்று பற்றின்றி வாழ்தலே சிறப்பு. இதுவே, சிவநெறியின் இயல்பு. இங்ஙனம், வாழ்க்கையோடியைந்து வராத சமண சமயத்தில் நின்று அலைந்து திரிந்து எய்த்தலை அப்பரடிகள் இனிய உவமையால் விளக்குகின்றார்.

இருட்டறை! ஒளியில்லை! அந்த அறையில் ஒரு மலட்டுப் பசு! அதனைப் பால் கறந்து எய்த்த காட்சியை அப்பரடிகள் உவமையாக்குகின்றார். இருட்டறையில் பசு இருப்பதையே காண முடியாது. அதுபோல் உயிரின் தன்னறிவும், இறைவனின் பேரறிவும் இணைந்து செயற் பட்டாலன்றி ஞானத்தைக் காண முடியாது. பசுவோ மலட்டுப்பசு! அதாவது, அனுபவத்திற்கு வராத சமயம் என்பது கருத்து. கறந்து எய்த்தல்-சமண சமயத்தினின்று அலுத்ததை நினைவூட்டுகிறது; இங்ஙனம், கிடந்து எய்த்த அப்பரடிகளுக்கு இறைவன் உறுதி காட்டி உய்ய ஆட் கொண்டதை அப்பரடிகள் அழகு தமிழில் பாடுகின்றார்.

*பப்போதிப் பவணனாய்ப் பறித்ததொரு*
*தலையோடே திரிதர் வேனை*
*ஒப்போட வோதுவித்தென் னுள்ளத்தி*
*னுள்ளிருந்தங் குறுதி காட்டி*
*அப்போதைக் கப்போது மடியவர்கட்*
*காரமுதா மாரூ ரரை*
*எப்போதும் நினையாதே யிருட்டறையின்*
*மலடுகறந் தெய்த்த வாறே*

என்பது அப்பர் திருப்பாடல்.

# 8. பாழூரில் பிச்சை

பிச்சையெடுத்து வாழ்வது வையகத்தின் இயற்கை யன்று. "இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின்" என்ற திருக் குறளில் திருவள்ளுவர் "இரந்தும்" என உம்மை கொடுத்து அழுத்தியதே இரந்து வாழும் வாழ்க்கை, நெறி பிறழ்ந்தது - நியதி கடந்தது என்பதை அறிவுறுத்தவேயாம். ஒரோவழி, இயற்கைச் சூழலால் எளியராகிய வழி, இரந்தும் வாழ வேண்டிய இன்னாத சூழல் ஏற்பட்டுவிடின், அந்த இன்னாமையை ஓரளவாவது இனியதாக்கிக் கொள்ள வேண்டாமா? அது மட்டுமின்றி நெறி கடந்த இரப்பினை, நெறியுடையதாக்கிக் கொள்ள வேண்டாமா? அதனால் இரப்பினையும் நெறியாக்கிக் கொள்கிற இனிய வழி வகையைக் கண்டு காட்டியது வள்ளுவம். இதனை,

*இரப்பன் இரப்பாரை எல்லாம் இரப்பின்*
*கரப்பார் இரவன்மின் என்று,*

என்ற திருக்குறளால் அறியலாம். அதாவது இரப்போர்க்கு கரவாது உவந்து ஈவார்கண்ணே இரத்தல் குற்றமன்று. அவரிடத்து இரத்தலும் ஈதலே போலும் என்றும் வள்ளுவம் கூறுகிறது. அஃதெங்ஙனம் இரத்தல், நெறியாக முடியும்? ஈதலாக முடியும்? இரப்பார்க்கு உவந்து ஈயாது கரப்பார் மாட்டு இரத்தல் மூலம் இரப்பவர்க்கு இழிவு வருகிறது; ஏமாற்றம் ஏற்படுகிறது; வறுமையும் அழிந்த பாடில்லை. அதே போழ்து தன்னை நோக்கி இரந்தவர்க்கு ஈயாது கரந்தவனுக்கும் இழிவு வருகிறது; இரந்தும் இல்லையென்று கூறியதால் பாவம் ஏற்படுகிறது. கரவாது உவந்து ஈவார்கண் இரந்து கேட்பதன் மூலம், இழிவு தோன்றுவதில்லை; பயனும் கிடைக்கிறது; வறுமையும் நீங்குகிறது. அதோடு ஈவான் உவந்து ஈதலின் மூலம் அவனுக்கு மகிழ்வு கிடைக்கிறது; ஈத்துவக்கும் இன்பம் கிடைக்கிறது; ஈவானுக்கு இரப்பானின்

மூலம் அறம் செய்த புண்ணியம் கிடைக்கிறது. ஆதலால், கரவாது ஈவார்கண் இரப்பது முற்றிலும் தவறன்று.

ஆனால், அப்பரடிகள் பாழூரில் பிச்சையெடுத்து அல்லற்படும் அவலத்தை எடுத்துக் கூறி விளக்குகின்றார். ஊரோ பாழூர்! ஆங்கு பொருள்வளம் இல்லை! உருவத்தால் மனிதர்கள் வாழுகிறார்கள்! உள்ளத்தால் கொடிய விலங்குகள் அனையர் வாழுகிறார்கள்! ஆங்கு ஆள் வினையும் இல்லை; ஓயாது உழைத்திடும் இயல்பும் இல்லை; உறுபொருள் ஈட்டுதலும் இல்லை; அன்பும் இல்லை; ஆர்வமும் இல்லை; இடிந்த வீடுகள்; ஓட்டைக் கூரைகள்! ஒட்டிய வயிறுகள்! ஒளியிழந்த கண்கள்! கபடு நிறைந்த கன்றிய நெஞ்சங்கள்! விரோத மனப்பான்மையுடன் வீண்வம்பு விளைவித்திடும் நரியனையார்! அழுக்காற்றுப் பிண்டங்கள் இன்னும் எப்படி எப்படியோ கூறலாம்! "பாழ்" என்ற சொல்லில் அனைத்தும் அடங்கும். பாழ்பட்ட பொருள், தான் பயன்படாததோடன்றிப் பிறிதொன்றையும் பயன் பயன்படாதபடி தடுக்கும். இத்தகு பாழூரில் பிச்சையெடுக்கப் போகும் மனிதனின் பேதமையை என்னென்பது? பிச்சை போடுவார் யார்? பல ஊர்களில் கெட்டவர்களாகப் பலர் இருந்தாலும், சிலராவது நல்லவர்களாக வாழ்வார்கள். அத்தகு ஊரில் ஒருவரிடம் இல்லையானாலும் பிறிதொருவரிடம் வாங்கலாம். ஆனால், அப்பரடிகள் காட்டும் ஊர் பாழூர்! ஆங்கு வாழும் அனைத்து மனிதரும் பாழ்! அந்த ஊரில் ஆசை மிகுதியால் பிச்சையெடுக்கப் புகுந்து அலைந்தவன் அடையும் அவலம் கொடிது! கொடிது! அதுபோல் தொழுதகைத் துன்பம் துடைத்திடவும் இருளகற்றி இன்பம் வழங்கிடவும் தந்தையாய், தாயாய், இன்னுயிர்த் தோழனாய் துணை நின்று தண்ணளி செய்து அருளாரமுதத்தை வாரி வழங்கி இன்புறுத்தும் தலைவனாம் ஈசனில்லாத சமண சமயத்தின் அனுபவம் அப்பரடிகளுக்குப் 'பாழூ'ரை நினைவுபடுத்தியிருக்கிறது. "யாரொடு நோகேன்;

யார்க்கெடுத் துரைப்பேன் ஆண்ட நீ அருளிலையானால்?" என்ற மணிமொழியைப் போல எய்ப்பினில் சேமவைப்பாகப் பயன்படும் சிவனெம்பிரான் இல்லாத சமண நெறியில் யாரிடம் போய் எதைக் கேட்பது? வழங்குவார்தாம் யார்? அங்கு மாசில் வீணையின் நாதம்தான் ஏது? மாலை மதியத்தின் மகிழ்வு ஏது? வீசு தென்றல் ஏது? மலரிடை மணம் நுகர முடியுமா? யாதொன்றும் இல்லை! சூன்யம்! எங்கும் வறட்சி! இன்பமே நிறைந்த உலகைத் துன்ப நரகாக்கிடும் பொல்லாத விரத நெறி வாய் படைத்தவனைத் துய்க்கச் செய்யாமல் அழிக்கும் நெறியன்றோ?

அப்பரடிகள் சிவநெறியில் பிறந்தவர்; உய்யும் நெறி நாடியவர். உறிதூக்கிச் சமண் நெறியில் புகுந்தார்! தேடினார்! தேடினார்! ஆனால், ஆங்குத் தேவர்கோ அறியாத தேவ தேவனைக் காணோம். "என்று வந்தாய்" எனும் இனிய சாயல் காட்டித் தண்ணளி செய்து சுவையமுதூட்டி வாழ்வித்திடும் வள்ளல் சிவபெருமான் இல்லை! அதனாலேயே சமண் நெறியைப் "பாழூர்" என்றும், யாருமில்லாத ஊரில் பிச்சையெடுக்கப் புகும் பேதைமையைக் காட்டியும் பெரு நெறியில் பிறந்தும் இச்சிறுநெறியில் புகுந்ததை நினைத்தும் பாடுகின்றார்! ஆவியை வீண் போக்காமல் அழகியதாக்கி, தமக்கு அணியென ஆக்கிக் கொண்ட ஆரூரானை நினைந்து நினைந்து நெஞ்சு நெகிழப் பாடுகின்றார் அப்பரடிகள்.

*பூவையாய்த் தலைபறித்துப் பொறியற்ற*
*சமண்நீசர் சொல்லே கேட்டுக்*
*காவிசேர் கண்மடவார் கண்டோடிக்*
*கதவடைக்கும் கள்வ னேன்றன்*
*ஆவியைப் போகாமே தவிர்த்தென்னை*
*யாட்கொண்ட வாரூ ராரைப்*
*பாவியே னறியாதே பாழூரிற்*
*பயிக்கம்புக் கெய்த்த வாறே!*

என்பது பாடல்.

# 9. எண்சாண் உடம்பில் இருக்கும் வாணிகர்!

இந்த உடம்பு எண்சாண் அளவினது; உயிர் உறைதற் கேற்ற இனிய குடியிருப்பு. உயிர் உடலில் குடியிருந்தாலும் வாடகைக் குடியிருப்பேயாம்; முற்றிலும் உரிமையுடைய தன்று. ஐம்பொறிகளும், உடலுக்கு நாயகராக விளங்கி உடலுக்குத் துன்பமே செய்கின்றன. நீதி நெறிக்கு மாறுபட்ட வாழ்க்கை முறைகளிலேயே பொறிகள் ஈடுபடுத்துகின்றன. இந்த ஐம்பொறிகளும் வணிகரைப் போல் வாணிகம் செய் கின்றன. அதிலும் நெறிவழிப்பட்ட வாணிகமன்று; தம் சுவை ஒன்றையே முன்னிலைப்படுத்தி முனைகின்றன; தாம் துய்த்த லிலேயே வேணவாக் காட்டுகின்றன. இந்தத் துய்ப்பின்மூலம், யாதொரு பயனும் உடலுக்கும் இல்லை; உயிருக்கும் இல்லை. முறைகேடான பொறிகளின் துய்ப்பாதலினால் உடல் நோய் வாய்ப்படவே செய்கின்றது. எளிதில் மூப்பும் முதுமையும் வந்தடைகின்றன. திறன் மிக்க அறிவும், ஆற்றல் நிறை உழைப்பும் மக்கி மறைந்து போகின்றன. வாழ்க்கையில் ஈடு இணையற்ற பேறாகிய புகழை இழப்பதோடன்றி இகழ்ச்சியும் வந்தடைகிறது. தம்மைக் கொண்டவர்க்கு, இல்லாத தீங்குகளைச் செய்து, தாம் சிறுபொழுது மகிழும் ஐம்பொறி களின் வாணிகம், வாணிகமா? இல்லை, இல்லை, கொள்ளை! ஆனாலும் அப்பரடிகள் வாணிகமாகவே உருவகம் செய்கிறார். இந்த நீதியோடு படாத வாணிகத்தை ஐவர் செய்யத் துணை நிற்கின்றனர். ஏனைய உள்பொருள் களாகிய தத்துவங்கள் தொண்ணூற்றாறு. இந்த தொண்ணூற் றாறு தத்துவங்களும் தெளிந்த வாழ்க்கை வழங்குவதற்குப் பதில் மயங்குகின்றன.

இந்த மயக்கத்தின் காரணமாக உய்திக்குத் துணை செய்யத் தவறிய இந்த உடம்பில் உயிர் தானே குடியிருப்ப

தாகக் கருதி மயங்கி அறிவிழந்து பொறிகளின் ஆதிக்கத்தி லிருக்கும் இந்த உடம்பைப் பேணிப் பாதுகாக்கின்றது. காலம் தவறாமல் உணவு வழங்கியும், நோய்க்கு மருந்து கொடுத்தும், இன்னும் என்னென்னவோ எடுபிடிகள் எடுத்தும் உடலைப் பேணத்தான் செய்கின்றோம். இந்த உடம்பின் மீது ஓர் ஈ, கொசு உட்காரத் தாங்கினோமோ, என்ன? அவ்வளவு பாதுகாப்பு! எனினும் இந்த வீடு காலி செய்யப் பட வேண்டிய ஒன்றே. நாமாகக் காலி செய்தாலும் பரவா யில்லை. நமக்கு உணர்வில்லாமலே மயங்கிய நிலையில், பேணிய உடம்பினின்று பெயர்ந்து நகர்கின்றோம். எங்கு நகர்வது? ஆயுட் கால முழுவதும் அண்டி இச்சை முகம் காட்டிச் சுரண்டிப் பிழைத்த பொறிகளாகிய வாணிகர் களையும் இப்பொழுது காணோம். தத்துவங்களும் மயங்கிக் கிடக்கின்றன. அதன் காரணமாக அறிவும் வேலை செய்யவில்லை; உணர்வும் வேலை செய்யவில்லை! நம்முடைய நிலை வலிவற்றுப் போயிற்று! உழைத்து ஊட்டி வளர்த்த பொறிகள் கைகொடுக்கவில்லை; மயக்கம் போடுகின்றன. எங்கும் இருள்! என்ன செய்வது நம்மால் ஒன்றும் ஆவதற்கில்லை! இறைவனுடைய கருணையே வலிய வந்து எடுத்தாள வேண்டியதிருக்கிறது.

திருக்கொண்டீச்சரத்து இறைவன் நம்மை எடுத்தாள் பவன். அவன் விண்ணுயர்ந்த நிற்கும் திருக்கோயிலை உடையவன். அவன் திருக்கோயிலின் உயரம், எடுத்தாளும் கருணைக்கு எடுத்துக்காட்டு. உலகின் எந்த திசையிலும் நின்று நிலவும் உயிர்களையும் வானுயர்ந்து நின்று அழைக்கும் அவனது கருணையின் சின்னமே, அணி செய்து நிற்கும் கோபுரம். அவன்றன் அழைப்பை அலட்சியம் செய்யக் கூடாது. அந்த அருளழைப்பை ஏற்று அவனுடைய திருவடியைச் சார்ந்து பீடுசால் பெருமை பெற்று வாழ வேண்டும். அப்பொழுதும் பொறிகளுக்கு இழப்பில்லை. மாறாக நிறைதல் இன்பம் அவைகளுக்குக் கிடைக்கின்றன.

நுகராத மணத்தை நுகரவும், காணாதன காணவும், கேளாதன கேட்கவும், வாய்ப்பு ஏற்படுகிறது. உலகியலைத் துய்க்கும் பொறிகள் அழிந்து போகின்றன. திருக்கொண்டீச் சரத்தான் திருவடியைத் துய்க்கும் பொறிகள், திருவருளைத் துய்க்கும் பொறிகளாகின்றன. ஆதலால், வறிதே பாழாகாமல் வாழ்வாங்கு வாழத் திருக்கொண்டீச்சரத்தான் திருவடிகளைப் பேணுவோம்.

*சாணிரு மடங்கு நீண்ட சழக்குடைப் பதிக்கு நாதர்*
*வாணிக ரைவர் தொண்ணூற் றறுவரு மயக்கஞ் செய்து*
*பேணிய பதியி னின்று பெயரும்போ தறிய மாட்டேன்*
*சேணுயர் மாட நீடு திருக்கொண்டீச் சரத்து ளானே* – அப்பர்

## 10. எங்ஙனம் கூடுவது?

அப்பரடிகள், இறைவனைத் தெளிந்து கண்டு துய்த்த சிவஞானச் செல்வர். அவருடைய பாடல்கள் சிவஞானத் தெளிவு. அத்தகு அப்பரடிகளே, பல இடங்களில் எங்ஙனம் இறைவனைக் காண்போம்? என்று ஏங்கிப் பாடுகின்றார். உலகியலானாலும் சரி, அருளியலானாலும் சரி, இன்பம் தருகின்ற ஒன்று மேலும் அன்பினைப் பெருக்கி வளர்க்கும். உலகியல் காதலின்பமும் இத்தகையதே! அருளின்பம் அதனினும் ஆராத தன்மையுடையது! அதனாலன்றோ இறைவனை 'ஆரா அமுது' என்று அருளாளர்கள் பாடிப் பரவுகின்றார்கள்! இங்ஙனம், சிவத்தில் திளைத்த சிந்தையுடையோரே ஏங்கியும், அழுதும் பாட, இன்று அதன் நுழைவாயிலிற்கூட அடியெடுத்து வைக்காதவர்கள் 'காட்டு' என்று கேட்கிறார்கள்; பிறிதொருவர் 'காட்டுகிறேன்' என்கிறார்! இஃதென்ன, விளையாட்டுப் பொருளா? அல்லது வேடிக்கைப் பொருளா? அல்லது சந்தையில் கொள்முதல் செய்யும் காய் கறியா? புற்றாக, மரமாக வடிவம் மாறும் வரையில் கொடுந்தவம் இயற்றியவர்களும் அல்லற்பட்டி

ருக்கச் சாதாரண மனிதர்கள் கடவுளைக் காண்பது எங்ஙனம்?

நமது உள்ளத்தின் இயல்பு, எதையாவது ஒன்றை நினைத்துக் கொண்டிருப்பது. உள்ளத்தின் இத்தொழிலை 'உள்குதல்' என்பர். உள்ளத்தால் உள்ளவாறு நினைப்பவர் உள்ளத்தின் உணர்வாக இறைவன் விளங்குவான். இதனை,

*நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்*

என்றும்,

*நினைக்கும் நெஞ்சின் உள்ளார்*

என்றும்,

*நினைப்பார்கள் மனத்துக்கோர் வித்தும் ஆனாய்*

என்றும் அப்பரடிகள் பல இடங்களில் பாடுவது சிந்திக்கத் தக்கது. பல்லவப் பேரரசன் கட்டிய கற்கோயிலைவிட, பூசலார் நாயனார் கட்டிய மனக்கோயில் இறைவனுக்கு எல்லையற்ற மகிழ்ச்சியைத் தந்தது. இறைவன் பூசலார் நாயனாரின் மனக்கோயிலுக்குத்தான் முதலிடம் தந்து குடி புகுந்தான். உள்ளத்தின் தொழிற்பாட்டில் விளையும் பண்பே உணர்வு. உணர்வற்றவர்களுக்கு, உள்ளம் இல்லை என்பதே பொருள். அப்படியே இருந்தாலும் அது இயங்கவில்லை என்பது தெளிவு. பெருமைக்குள் எல்லாம் தலை சிறந்தது உணர்வே. உள்ளம், இறைவனை உள்கிட, அவனே அந்த உள்குதலின் விளைவாகிய உணர்வாக வடிவம் பெற்று எழுந்தருள்கின்றான். இதுவே இறைவனை உள்ளத்தில் காண்பதற்குரிய இனிய எளிய வழி.

உள்ளத்திற்கு இயல்பிலேயே ஒன்றினை விட்டுப் பிறிதொன்றினைப் பற்றும் இயல்பு உண்டு. அந்த இயல்பை மடை மாற்றி, உலகுக்கு ஒருவனாய் நிற்கின்ற இறைவனையே உள்கச் செய்து இறைவனை உணர்வு வடிவமாக்கி அவனை நினைந்து நினைந்து, உருகி உருகி, நெகிழ்ந்து நெகிழ்ந்து

துய்த்தல் பேரறிவாளர்கள் இயல்பு. அப்பரடிகளே, "உணர்வு அவன் காண்" என்றும், "உணர்வாய் நின்ற திருவனே" என்றும், "உணர்வெலாம் ஆனானே" என்றும் "உற்றிருந்த உணர்வெலாம் ஆனானே" என்றும், "ஊனாகி, உயிராகி அதனுள் நின்ற உணர்வாகி" என்றும் அருளியுள்ள அடிகள் உணரத்தக்கன. இங்ஙனம் உள்கி உணர்வாகிக் காணக் கூடிய இறைவனை அப்பரடிகளும் உள்கி உருகிக் காண ஆர்வம் காட்டுகிறார். ஒரு பொருளை நினைத்து உள்குதற்கு அந்தப் பொருளிடத்தில் பற்று வேண்டும். பற்றுகள் பலவும் தீது என்று பேசிய வள்ளுவர் இறைவனுடைய திருவடியைப் பற்றுதலை மட்டும் நன்றென்று காட்டிப் "பற்றுக" என்றும் ஆற்றுப்படுத்தினார்.

*பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்*
*பற்றுக பற்று விடற்கு,*

என்று பேசுகிறது குறள்.

அப்பரடிகள் இறைவனை உள்கி அன்பின் மிகுதியினால், நினைந்து நினைந்து உருகுகிறார். அடிகள் தம் நெஞ்சத்தில் இறைவனை நினைந்த அன்பு ஊற்றெடுக்கிறது. அதன் காரணமாக அடிகள் உள்ளம் உருகுகிறது. அன்பின் பெருக்கமும் உள்ளத்தின் உருக்கமும் இறை காட்சிக்கு இன்றியமையாதன. ஆற்றல் மிக்க அன்பால் நெஞ்சுருகி நினைப்பதன் மூலம்தான் இறைவனைக் காண முடியும். இஃதன்றிக் கூர்ந்த பகுத்தறிவோ, வாதிடும் திறனோ, சாத்திரத் தொகுப்புகளோ சாட்சியங்களோ கூட இறைவனைக் காணத் துணை செய்ய முடியாது. ஏன்? இறைவனிடத்து அன்பும் உருக்கமும் இல்லாத தவமும் கூட இறைவனைக் காணத்துணை செய்யாது. அப்பரடிகள் நெஞ்சத்தில் அன்பு பெருக்கெடுத்து ஊறுகிறது; தன்னூற்றாகத் தடைப்படாது பெருக்கெடுத்து ஊறுகிறது. இதனை,

*உள்கினேன் நானும் காண்பான்*
*உருகினேன் ஊறி ஊறி*

என்று அடிகள் குறிப்பிடுவதன் மூலம் உணரலாம். ஆயினும், "நின்னை அரியனாகக் கருதாது, எளியனாகக் கருதிப் போற்றுதல் ஒழிந்தேன்" என்றும் அடிகள் இரங்கிக் கூறுகின்றார். இங்ஙனம், இறைவனை எளியனாகக் கருதி இழந்துபடுதல் படிமுறையில் ஞான நெறிக்கு உயர்ந்தவர்களுக்கும் கூட நேரிடுகிறது என்றால், சாதாரண மனிதர்களின் நிலைமை என்ன ஆவது? இங்ஙனம் அல்லற் படுவோர் வாழ்க்கையை இருதலை மின்னுகின்ற கொள்ளி மேல் எறும்பின் உள்ளத்திற்கு உவமிக்கின்றார் அடிகள் பெருமான். உள்ளம் எறும்பென்று உவமிக்கப்படுகிறது. ஆம்! உள்ளம் எறும்பு போலச் சுறுசுறுப்பானதுதான். ஆனால், எறும்பின் சுறுசுறுப்பெல்லாம் வயிற்றுக்கு இரை தேடுவதிலேயாம். அதற்கு வேறு அலுவல் இல்லை. வயிற்றுக்கே இரை தேடி அலையும் எறும்பு இருதலைக் கொள்ளி மேலதானால் உணவு வேட்கையால் ஓட முனைகிறது. ஆனால் இரு முனைகளிலும் பற்றியெரியும் கொள்ளியோ அச்சுறுத்துகிறது. இங்ஙனம் உலகியல் வேட்கை பற்றி யெரியும் உள்ளத்தராக இருப்பவர்களால் இறைவனைக் காண முடியாது; அவனைக் கூட முடியாது என்பது அப்பர் அடிகள் கருத்து.

ஆதலால் தந்தம் ஈசன் எம்பெருமானை உள்ளத்தால் உள்கி, ஆற்றல் மிக்க அன்பால் நினைத்து அவனையே உணர்வாக்கி உருகி, கண்டு இன்புற முயல்வதே சமய வாழ்க்கை.

*உள்ளுவார் உள்ளத்தானை உணர்வெனும்*
*பெருமையானை*
*உள்கினேன் நானுங்காண்பான் உருகினேன் ஊறிஊறி*
*எள்கினேன் எந்தைபெம்மான் இருதலை மின்னுகின்ற*
*கொள்ளிமேல் எறும்பெனுள்ளம் எங்ஙனம் கூடுமாறே!*

என்பது அப்பர் திருப்பாட்டு.

# 11. தடை செய்து ஆட்கொண்ட தண்ணளி!

அப்பரடிகளை இறைவன் நாடறியச் சூலை மூலம் ஆட்கொண்டார். இறைவனால் ஆட்கொள்ளப்பெற்ற பிறகு அப்பரடிகள் இறைவனுடைய திருவருளை நினைந்து நினைந்து நாடு முழுதுமுள்ள திருக்கோயில்களுக்குச் சென்று, உருகிப்பாடி வழிபட்டு வருகின்றார். திருவருளின்பம் ஆராத் தன்மையது. ஆதலால், மேலும் மேலும் இன்பமுற வேட்டு நைந்து பாடுகின்றார். சிலபொழுது, இன்ப அன்பு மேலும் முறுகி வளரும் நோக்கத்துடன், இடையறவு படும்பொழுது துடிதுடிக்கும் உள்ளத்துடன் அழுது பாடுகின்றார்.

திருக்கச்சியேகம்பத் திருத்தலத்தில் அப்பரடிகளுக்கு இன்பத்தில் இடையறவு ஏற்பட்டிருக்கிறது என்று ஆங்கு அருளி செய்த பதிகத்தின் மூலம் உணர முடிகிறது. முதற்பாட்டிலேயே, "செய்ய வேண்டிய பணிகளிலிருந்து தவறினால், புளியம் விளாறினால், இறைவன் மோது விப்பான்" என்ற குறிப்பிற் பாடுகின்றார். "புளியம் விளாறினால், மோதுவித்த பின் உகந்தும் மகிழ்விப்பான்" என்றும் பாடுகின்றார்.

இந்தப் பதிகத்தில் இம்மாதிரி ஏராளமான செய்திகள் பேசப்படுகின்றன. உயிர்களிடத்தில் அன்பினைத் தழைக்கச் செய்து, அதனை நுகர்ந்து அனுபவிக்கும் இயல்பினன் இறைவன். சிறந்த அன்பு, தடைகளால்தான் தழைத்து வளரும். தரங்குறைந்த பெயரளவில் அன்பு என்று மினுக்கு வது தடைகளால் தடைப்படும். ஆதலால், இறைவனும் உயிர்களிடத்தில் செயற்கையில் தடைகளைத் தோற்றுவித்துத் தடைகளைத் தாண்டி வளரும் அன்பினைத் தழைக்கச் செய்து வளர்க்கின்றான். இங்ஙனம் செய்யும் இயல்பினனாக இறைவன் இருப்பதை, நினைத்து பாடுவதால், அத்தகைய ஒரு

தடைப்பட்ட உணர்ச்சி அப்பரடிகளுக்குக் கச்சியில் கால்கொண்டிருக்க வேண்டும்.

திருமால் நாள்தோறும் ஆயிரம் பூக்கள் கொண்டு அரனை அர்ச்சிக்கும் நோன்பேற்று, முறை வழுவாமல் செய்து வந்தார். ஒருநாள் திருமால் ஆயிரம் பூ எண்ணி எடுத்து வந்து அர்ச்சனை செய்து கொண்டிருக்கும் பொழுது, ஆயிரத்திற்கு ஒரு பூ குறைந்து விட்டது. இயல்பாகக் குறையவில்லை. சிவபெருமானே வேண்டுமென்று ஒரு பூவைக் குறையச் செய்து, மலர் குறைந்ததன் காரணமாகத் திருமால் மனங்கரைந்து அழுது, தனது கண் மலரை இடந்து மலரென இடத் தூண்டித் தடுத்தாட்கொண்டதை அப்பரடிகள் நினைத்து பாடுகிறார்.

*குறிக்கொண் டிருந்துசெந் தாமரை யாயிரம்*
*வைகல்வைகல்*
*நெறிப்பட விண்டை புனைகின்ற மாலை நிறையழிப்பான்*
*கறைக்கண்ட நீயொரு பூக்குறை வித்துக்கண் சூல்விப்பதே*
*பிறைத்துண்ட வார்சடை யாய்பெருங் காஞ்சியெம்*
*பிஞ்ஞகனே!*

என்பது அப்பர் திருப்பாடல்.

தன்னை இறைவன் இனிதே ஆண்டுகொண்டான் என்றும் பின்னர் ஐம்பொறிகளுக்கு ஒற்றியாக வைத்தான் என்றும் கூறுகிறார். 'ஏன்று ஆண்டு கொண்டாய்' என்பது மலக்கட்டு நிலையில் வாழ்ந்த போது, கருணையினால் ஆண்டு கொண்டு உய்தற்குரியவாறு முதற் பிறப்பு கொடுத்தமையைக் குறிப்பிடுவதாகக் கருதலாம். உய்தற்குரிய வண்ணம் உயிரை இறைவன் உடலொடு சேர்ப்பிக்கின்றான்.

உடலிடைத் தங்கிய உயிர், பொறிகளைக் கொண்டு ஆரத் துய்த்து, வேட்கை தணிந்துழி இறைவா இன்ப நிலையை எய்துகிறது. பொறிகளுக்கு உயிரிடத்தில் நிரந்தரமான

செல்வாக்குமில்லை; உரிமையுமில்லை. உயிர்களுக்கும் பொறிகளுக்கும் உள்ள உறவு தற்காலிகமானதே.

அதனைத்தான் அடிகள், "ஐவருக்கு ஒற்றி வைத்தாய்" என்று பாடுகின்றார். ஒற்றி அனுபவம் பொறிகளுக்கு முழு உரிமையைத் தராது. பொருளுக்குரியவர் பொருளைக் கேட்கும்பொழுது பொருளைத் திரும்பத் தரவேண்டும். உயிருக்கு உரிய நாயகன் இறைவனே. உயிருக்கு உடையவனாகிய நாயகன் உயிர்களைப் பக்குவப்படுத்துவதற்காகப் பொறிகளிடத்தில் ஒற்றிவைக்கிறான். பின்னே, உரிய பொழுது மீட்டுக் கொள்கிறான்.

திருவாளன் திருநீறு, திலகவதியார் தர, சிவநெறிக்கு அடிகள் வருவதற்கு முன்பிருந்த நிலையை ஒற்றிக்காலமென அடிகள் பாடுகின்றார். பின், திருவதிகையில் ஆட்கொண்டமையை ஐவரிடமிருந்து ஒற்றி மீட்டதாகப் பாடுகின்றார். இப்படி முன்னர்க் கட்டுண்ட நிலையில் கிடந்தபொழுது, ஆட்கொண்டு உடைமைக்காரனாகிப் பிறப்பருளி ஐவருக்கு ஒற்றி வைத்து ஒற்றி மீட்டுத் திருவதிகையில் ஆட்கொண்டமை நாடறியும். ஆதலால், உடையவனாக ஏற்றுக் கொண்டமையை இனி மறைக்கவோ மறுக்கவோ முடியாது. ஆதலால், அருள் புரிக என்று பாடுகின்றார்.

ஏன்றுகொண் டாயென்னை யெம்பெரு மானினி
யல்லமென்னில்
சான்றுகண் டாயிவ் வுலகமெல் லாந்தனி
யேயென்றனை
ஊன்றிநின் றாரைவர்க் கொற்றிவைத் தாய்பின்னை
யொற்றியெல்லாம்
சோன்றுகொண் டாய்கச்சி யேகம்ப மேய
சுடர்வண்ணனே!

என்பது அப்பர் பாடல்.

## 12. அஞ்சுவது யாதொன்றும் இல்லை!

மானிடராய்ப் பிறந்து வாழ்தல் அரிய பேறு: இனிய பேறு; எளிமையிற் கிடைக்கக் கூடிய ஒன்றன்று. அதனாலன்றோ, 'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என்று ஆன்றோர் கூறினர். இந்த மானுட வாழ்க்கையின் பயனாவது, உயிர், அறிவு நலம் பெறுதல்; ஆன்ற அனுபவம் பெறுதல்; மூத்து முதிர்தல்; துன்பத் தொடக்கிலிருந்து விலகி இன்பச் சார்பாதல் ஆகியனவாகும். எங்ஙனம் உயிர் அறிவுபெறும்? குறைகள் நீங்கி நிறைவு பெறும்?

அறிவு எல்லையற்றது. அறிவுக்கோர் எல்லை அரனேயாம்; அதனாலன்றோ, வள்ளுவம் 'வாலறிவன்' என்று இறைவனை வாழ்த்துகிறது. கடவுள் நம்பிக்கையுடையவர்கள், இயல்பில் முட்டாள்களாக இருக்க முடியாது. காலத்தின் கொடுமை, இடையில் கடவுட் சார்புடைய மதத் தலைவர்கள், புரோகிதர்கள் தங்கள் பணியைச் செய்யத் தவறியதால் அறிவு விளக்கம் இல்லாதவர்களும் கூட இன்று கடவுள் நம்பிக்கையுடையவர்களாக இருக்கிறார்கள். ஆனால் அது நம்பிக்கையே தவிர, வாழ்க்கையன்று. கடவுள் கொள்கையை நம்பி ஏற்றுக் கொள்ளுதல் என்பது ஆழமும் அகலமும் நிறைந்த அறிவின் முதிர்ச்சியிலே ஏற்படக் கூடியதாகும். உலகியலின் அமைதியினை ஆராய்ந்து அந்த ஆய்வின் முடிவாகவே, கடவுளைக் கண்டனர் நம்முடைய முன்னோர். கடவுள் நம்பிக்கையுடையோராக வாழ்தற்குப் பேரறிவு தேவை; விரிவான வாழ்க்கை அனுபவங்கள் தேவை. ஆதலால், அறிவின் உயர்மட்ட எல்லையாக விளங்கும் அரனை, எண்ணி வழிபடுதலின் மூலம், வாழ்க்கையில் உறவுபடுத்திக் கொள்ளுதலே அறிவு பெறுவதற்குரிய வழி.

இந்த முயற்சியிலே உலகியல் நுண்கலைகள் அனைத்தையும் ஆரத் துய்த்தறியும் வாய்ப்புகள் ஏற்படும். உலகியலைத் துறைதோறும் ஆராய்ந்து அவற்றின் இயல்புகளைக்

கண்டறிந்து அவற்றிற்கு அப்பாற்பட்டிருக்கும் கடவுளை அறிதலே, அறிவில் முதிர்ந்த ஞானம். இதனை விளக்கத்தான் போலும் பரப்பில் பெரிய திருக்கோயிலை எடுத்து வாயில்கள் பல அமைத்து அத்திருக்கோயிலினூடே பரப்பில் மிகச் சிறிய ஓரிடத்தில் கூர்ந்த கவனத்திற்குரியதாக எம்பெருமானை எழுந்தருளச் செய்தனர்! அறிவுப் புலன் ஆழமும் அகலமும் உடையதாக வளர்ந்து, பின் நுண்மாண் நுழைபுலமாக வளர வேண்டுமென்பதே வாழ்வியல் நியதி.

அறிவின் தெளிவில்லாத இடத்தில் கடவுட் சார்பு இருக்கும் என்பது நம்பமுடியாத ஒரு செய்தி. வேண்டு மானால் கடவுள் நம்பிக்கை இருக்கலாம். அதுவும் அச்சத் தின் பாற்பட்டதாகவோ, அல்லது வழக்கத்தின் பாற்பட்ட தாகவோ இருக்கலாம். கடவுட் சார்புடைய வாழ்க்கை அச்சத்திற்கு முரணானது. ஆங்கு அஞ்சாமையே நிலவும்.

"அஞ்சுவது யாதொன்றும் இல்லை" என்பது அப்பரடிகள் வாக்கு. ஆதலால், இந்த உடம்பு உயிர்க்குக் கிடைத்த ஒப்பற்ற கருவி. இக்கருவியை முறையாகப் பயன்படுத்தி உயிர் பயனடைதல் வேண்டும். உயிரடையக் கூடிய பயன்நிலை பேறுடையதாகவும், இன்பம் தருவதாகவும் இருக்க வேண்டும். அதற்குரிய ஒரே வழி, அறிவிற்கறிவாக விளங்கும் அரனை வழிபடுதலாகும். வழிபடுதலென்பது, இன்று பெரும்பாலும் வையகத்தில் இல்லை. ஓர் உயிர், ஒன்றில் அகமும் புறமும் ஒன்றெனக் கலந்து, ஒன்றாகிச் செய்தலே வழிபாடு.

உயிரின் இயல்பு ஒன்றைக் கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்றறிதல் ஆகிய ஐந்து செயல்களின் வழியாகவே முழுத்தன்மை அடைய முடியும். அஃதின்றிக் கடையில் தேங்காயை வாங்கிக் கொண்டு போய்க் குருக்கள் கையில் கொடுத்து உடைக்கச் செய்து, வாங்கி வருதல் மூலம் பக்தியும் வந்துவிடாது; பயனும் வந்துவிடாது. கோயிலில்தான்

தேங்காயை உடைக்க வேண்டுமென்ற அவசியமில்லை. அம்மியில் உடைத்தாலும் உடைபடும். அறிவு தொழிற்படும் பொழுதே, அனுபவம் கிடைக்கிறது.

அனுபவம் வந்த பிறகே அந்த அறிவு உயிருக்கு உடைமையாகிறது. அதுவரையில் அறிவிற்குத் தெரிந்த ஒன்று கூட அனுபவத்திற்கு வருவதில்லை; உடைமையாக மாறுவதில்லை, அறிவு செயற்பாட்டின் மூலம்தான் சிந்திக்கும்.

இன்று நம்முடைய வழிபாட்டு முறைகள், மனித குலத்திற்கு வந்த சாதிப்பழக்க வேற்றுமைகள் மனித குலத்தை வழிபாட்டினின்று விலக்கியிருக்கின்றன. மனிதன் இன்றைக்கு திருக்கோயிலைக்காட்சிச் சாலையாகப் பயன்படுத்துகின்றானே தவிர, அவன் வழிபடுவதில்லை. வழிபாட்டுக்குரிய உரிமைகள் அவனுக்கு வழங்கப்படுவதில்லை. காரணம் கேட்டால் தகுதி வேண்டாமா? என்கிறார்கள் சிலர்.

தகுதி பெறத்தான் திருக்கோயிலுக்கு வருகிறோமே தவிர, தகுதி பெற்றதைக் காட்ட வருவதில்லை. எழுதிக் காட்டும் ஆசிரியன் எழுதுவிக்கவும் செய்தால்தான் அறிவு உரிமையாகிறது. அறிவியல் ஆய்வுச் சோதனை செய்யும் ஆசிரியன் மாணாக்கனையும் செய்யச் செய்தால்தான் மாணாக்கர்க்கு அறிவு கிடைக்கிறது. அதுபோலத்தான், வழிபாடு செய்து வைக்கும் அர்ச்சர்கள் வழிபாடு செய்யச் செய்தால்தான் வழிபாட்டின் பயன் கிடைக்கும்.

இதுவே காலத்திற்கு முந்திய ஆன்றோர் வழக்கு. இடையில் புகுந்த சாதி முறையும் தொழில் முறையும் இந்த இனிய வழக்கத்தைக் கெடுத்துவிட்டன. ஆதலால், உண்மையான வழிபாடு உயிர்கள் செய்வதில்லை. உண்மையான வழிபாடு செய்யாமையின் காரணமாக உயிர்கள் அடைய வேண்டிய வழிபாட்டின் பயனாகிய பேரறிவும் பேராற்றலும் கிடைக்கப் பெறவில்லை. ஏதோ பழக்கத்தின் காரணமாகச் செய்கிறான். நனைய வேண்டிய இடத்தில் நனையாமற்

குளிக்கிறான். தோய வேண்டிய இடத்தில் தோயாமல் தொங்குகிறான். ஒன்றித்துக் காதலிக்க வேண்டிய இடத்தில் ஒதுங்கி நிற்கிறான். மிகச்சிறந்த உயிரறிவின் ஒளிவிளக்காகத் திகழ வேண்டியவன் முட்டாளாகப் பெயர் சூட்டிக் கொள்கிறான்.

வழிபாடு ஓர் அறிவியல் சாதனை; அதன் பயன் பொய்யன்று. இன்று அது பலருக்குப் பொய்ம்மையாக விளங்குகிறது. காரணம் பொய்யுடைய மனிதர் கையில் அது சிக்கியதேயாகும்.

வழிபாடு அறிவின் விளக்கமாக அமைந்தது. ஆனால் அஃது இன்று முட்டாள்தனமாகக் காட்சியளிக்கிறது. பலர் அதை அப்படியே ஆக்கிவிட்டனர். சிந்திக்க வேண்டியது சிலையின் அடியிலுள்ள எழுத்துக்களையல்ல. இந்த எழுத்துக் களைத் தோற்றுவிக்கக் கூடியவாறு, நம்முடைய கடந்த காலச் சமய வாழ்க்கை அமைந்திருக்கும் கால நிலையை எண்ணி நோதல் வேண்டும். எல்லாமாய் அல்லதுமாய் விளங்கும் பெருமானைக் காப்பாற்ற மட்டும் திருக்கோயில்கள் அல்ல. உயிர்களைத் தூய்மை செய்து பேணி எடுத்து வளர்க்கவே திருக்கோயில்கள். உயிர்களிடத்தில் அன்பு ஊற்றினைக் காணவே திருக்கோயில்கள். அந்த ஊற்றின் முன்னே கடவுள் குழைந்து நிற்கிறான். அத்னைத் துய்ப்பதில் அவனுக்கு எல்லையற்ற மகிழ்ச்சி. அவனுடைய அருள் வெளிப்பாடு அங்கேயே பூரணத்துவம் பெறுகிறது.

மனிதனை மிருகமாக்கி, வேறுபாடுகளை நிரந்தரப் படுத்துவது இறை நெறியாக இருக்க முடியாது. பாவியே ஆனாலும் அவன் மாட்டு இறைவனுக்குள்ள கருணை இம்மியும் குறையாது. தூய்மை என்பது, சாதி முறைகளைக் காப்பாற்றும் கண்ணாமூச்சி விளையாட்டே தவிர, அதில் உண்மை இருக்க முடியாது. உடலால் தூய்மையற்று உள்ளத்தால் தூய்மையுடையோர் இல்லையா? உள்ளத்தால்

உலகத்து அழுக்கெல்லாம் பெற்று உடலால் தூய்மை காட்டுபவர்கள் இல்லையா? அன்றும் முத்தநாதன் இருந் தான். இன்றும் முத்தநாதன் இருக்கலாம் அல்லவா?

தனித்தனியே மனிதர்கள் வழிபாட்டிற்குரிய இடங் களைப் பெறுதல் அரிது என்பதனால்தான் நமது திருக் கோயிலில் பண்டு பலரும் வழிபாடு செய்து கொள்ளும் உரிமை பெற்றிருந்தனர் என்பது, வரலாற்று முறையிலும் மறுக்க முடியாத உண்மையாகும். வேத நெறி தழைத்தோங்கச் செய்த திருஞானசம்பந்தரும் திருத்தொண்டின் நெறி விளக்கத் தோன்றிய திருநாவுக்கரசரும் இந்த வழிபாட்டு முறையையே எடுத்துக்காட்டிப் பாடியுள்ளனர். திருக் கோயிலில் எம்பெருமான் எழுந்தருளியிருப்பது வழிபாடு பெற அல்ல; உயிர்களுக்கு எளிமையான அருள் வழங்கவே யாம்.

அப்பரடிகள் திருவங்கமாலையில் மிகத் தெளிவாக நம்மை வழிபாடு செய்து கொள்ளும்படி ஆணையிடுகிறார். வழிபாட்டில் நாட்டமின்றித் திரிவோரைப் பார்த்து யாக்கையால் பயனென்? என்று வினவி, வழிபாட்டுணர்வில் ஆற்றுப்படுத்துகின்றார். அரன் எழுந்தருளியுள்ள திருக்கோயி லில் வலம் வந்து வணங்கச் சொல்கிறார்; கைகளால் பூக்களை எடுத்துப் போடச் சொல்கிறார்; தாமே போடுதல் போன்ற பொருள்பட 'அட்டி' என்று பாடுகின்றார்; இறைவனைப் போற்றி போற்றியென்றே தொழுது வணங்கித் தூமலர் தூவச் சொல்கிறார். இதுவே திருமுறை வழிபாட்டு நெறி; நமது ஆன்றோர்களில் திருக்கோயில் வழிபாட்டு ஒழுக்கம். அப்பரடிகள் அருளிய திருப்பாடலைச் சிந்தனை செய்யுங்கள்.

***ஆக்கையாற் பயனென்?—அரன்***
***கோயில் வலம் வந்து***
***பூக்கையா லட்டிப் போற்றி யென்னாதஇவ்***
***ஆக்கையாற் பயனென்?***

# 13. நமது பழக்கமா?

நமது குழுகாய வாழ்க்கையில் பலர் கூடி உண்ணும் பொழுதும் ஒருவரோடொருவர் பேசாமலேயே உண்கிறோம். உண்ணும்பொழுது பேசுவதைப் பெரியவர்கள் அனுமதிப்ப தில்லை. அங்ஙனம் பேசுவது ஆசாரக்கேடு என்று கருது கிறார்கள்; கண்டிக்கிறார்கள். குழந்தைகள் உண்ணும் பொழுது, பேசத்துடிக்கிறார்கள்; பெரியோர்கள் அடக்கு கின்றனர். பேச்சுக்குப் பதில் அழுகை பிறக்கிறது. இங்ஙனம் உண்ணும்பொழுது உரையாடக் கூடாது என்ற வழக்கம் எப்பொழுது தோன்றியது? யாரிடமிருந்து வந்தது? என்று அறிந்து கொள்ளுதல் சுவையான செய்தி!

தமிழர் வாழ்வில் சமண சமயம் வந்து கலந்த பொழுதே இந்த வழக்கம் வந்திருக்கிறது. தமிழினம் சமண சமயத்தை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், அவர்களையறியாமலே அந்த சமயப் பழக்கவழக்கங்கள் சில, அவர்களுடைய வாழ்க்கை யில் வந்து பொருந்தியுள்ளன. சமணர்களின் சீரிய ஒழுக்கங் களுள் தலையாயது, நேரிடையாகவோ மறைமுகமாகவோ திட்டமிட்டோ தற்செயலாகவோ பிற உயிர்களைக் கொலை செய்யக் கூடாது என்பது. தற்செயலாகவும் உயிர்க்கொலை நிகழக் கூடாது என்பதற்காகச் சமண்சமயம் சில ஒழுக்க விதிகளை விதித்திருக்கிறது. அவற்றுள் ஒன்று திறந்த வாயினராக இருத்தல் கூடாது என்பது. இருந்தால், சிறு பூச்சிகள் இயற்கையில் வாய்க்குள்ளிருக்கும் பற்பசையில் சென்று ஒட்டி இறத்தல் கூடும் என்று கருதுகிறது. அதனாலேயே சமண முனிவர்கள் தம் வாயின்மீது ஒரு சிறு திரையிட்டிருப்பர்.

இவ்வளவு விழிப்பாகக் கொல்லாமையைக் கருதுப வர்கள் உண்ணும்பொழுது உரையாடினால் சிறு பூச்சிகள் வாய்க்குள் செல்லக் கூடுமென்று உரையாடுவதற்கு தடை விதித்தார்கள். அடுத்து உரையாடுதலின் மூலம் மகிழ்வு

பிறந்து, அம்மகிழ்ச்சிப் போக்கில் திட்டமிட்ட அளவிற்கு மேலாக உண்ணக்கூடிய சூழ்நிலை ஏற்படலாம். அது நோன்பை மீறிய செயலாகும். இந்த அடிப்படையிலும் உண்ணும் பொழுது உரையாடுதலைச் சமணம் தடுக்கிறது. சமணர்களுக்குரிய இந்த பழக்கம்—சமண முனிவர்களுக்கு விதித்த இந்த நெறி எப்படியோ நம்மையும் அறியாமல் நம்முடைய குமுகாய வாழ்க்கையிலும் ஒட்டிக் கொண்டு விட்டது.

அப்பரடிகள் "மூங்கைகள் போல் உண்ணும் மூடர்" என்று உண்ணும்பொழுது உரையாடாதார் பண்பைக் கண்டிக்கிறார்.

பொதுவாக, உண்பதும் ஒரு விழுமிய கடமையேயாம். மிகச்சிறந்த பயனுடைய பணிகளைச் செய்தற்குக் கருவியாக அமைந்துள்ள உடலைப் பேணுதலும் ஒரு தவமேயாகும்.

"உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே" என்று திருமந்திரம் பேசுகிறது. இங்கே உடம்பை வளர்த்தல் என்பது சதைப் பிண்டங்களை வளர்ப்பது என்பதன்று. உடலுக்குரிய விழுமிய திறன்களை வளர்ப்பது என்று பொருள் கொள்ளுதல் வேண்டும். சதைத் திரட்சிகள் எரி விறகிற்குப் பயன்படுமேயன்றிப் பணிகளுக்குப் பயன்படா. உயிர் உயர்தற்குரிய அன்பிற்கலத்தல், தொண்டு செய்தல் ஆகியனவற்றிற்குத் துணையும் தோழமையும் குமுகாயச் சூழலும் இன்றியமையாதன. தனி மனிதன் தனியே அன்பிற்கலத்தல் இயலாது. அவன் தன்மாட்டே அன்பு காட்டுதலை 'அன்பு' என வழக்கில் எடுத்துக் கொள் வதில்லை. அது சுயநலம்! அன்பன்று; அவமேயாம்.

ஒருவன் தன்மாட்டே தான் அன்பு காட்டிக் கொள்ளுதல் தீமையையே பெருக்கும்; இன்பத்தினைப் பெருக்காது. அதனாலேயே அன்பு காட்டுதற்குரிய களமாக

விலங்குகள் போலல்லாது மனித குமுகாயத்தை ஒரு கூட்டு வாழ்க்கையாக இயற்கை அமைந்துள்ளது. மனித குமுகாயத்தில் அரக்கனைத் தவிர, தனி மனிதனே இல்லை! ஞானியானால் இறையுடன் தோழமை கொண்டு ஒன்றிக் காதலித்து இன்புறுவர். அவர்களுக்கும் இறைவன் என்ற ஒரு தோழனுண்டு. இவன் அவனைக் காதலிக்க, அவன் இவனைக் காதலிக்க மிகப் பெரிய ஞானக் காதல் வாழ்வு மலர்கிறது.

எனவே, மனித உயிர் குறைகளினின்று விடுதலை பெற அன்பினாற் கலந்த உறவு தேவை. உறவு தோன்றி வளர்தற்குரிய சூழ்நிலைகள் பலவற்றுள் பலர் ஒருங்கிருந்து உண்ணும் சூழ்நிலையே சிறப்புடைய சூழ்நிலையாகும். அதனாலேயே வள்ளுவம், பகுத்துண்ணலைத் தொடர்ந்து “பல்லுயிர் ஓம்புதல்” என்று பேசியது. திருமுறைகளும், திருக்குறளும், விருந்தோம்புதலை நெறிகளுக்கெல்லால் உயர்ந்த நெறி என்று எடுத்தோதுகின்றன.

மனித உறவுகளுக்குக் கொடிய பகையாகிய அழுக்காறு, பிற கட்டங்களில் தலை காட்டுதல் போல உண்ணும் பொழுது தலைகாட்டுதல் இயலாது. அளவுக்கு மிஞ்சிக் குவித்து வைக்கின்ற செல்வத்தைப் போலல்லாமல் யாரும் அளவோடுதான் உண்ண இயலும். ஆதலால் அழுக்காற்று உணர்வு தடை செய்யப்படுகிறது. அதோடு பிற கட்டங்களில் மனிதன் தன் மகிழ்வுணர்வைப் பூரணமாக வெளிப்படுத்தி விடுவதில்லை. உண்ணும்பொழுது தன்னுடைய நிறைவை அகன்ற ஒளிபடைத்த கண்கள் மூலமும், மகிழ்வு கொப்பளிக்கின்றதை முகத் தோற்றத்தின் மூலமும், சுவைத்து மகிழ்ந்தமையை உதடுகளில் பொங்கி வழியும் புன்னகை மூலமும் யாதொன்றும் தடை செய்ய முடியாவண்ணம் வெளிப்படுத்துகிறான். இத்தகைய சூழ்நிலையில் உறவு கலத்தலைப் போலப் பிற சூழ்நிலைகளில் முடியாது.

அது மட்டுமின்றி ஒருவர் உண்பதை உடனிருப்பவன் விரும்புகிறான் என்பது தெரியாது போனால், உண்பவனுக்கு அவனையறியாமலே ஐய உணர்வும், கூச்சமும் தலை காட்டுகின்றன. அதன் காரணமாகத் தயங்கித் தயங்கி உண்கிறான். அப்பொழுது அவன் உள்ளத்தில் மகிழ்வுணர்வு இல்லாமற் போகிறது. உள்ளத்தில் மகிழ்வுணர்வு இல்லாமல் உண்ணும் உணவு, நஞ்சாக மாறி விடுகிறது. அதனால் நலம் கெடுகிறது; நோய் வந்தமைகிறது.

ஆதலால், உண்ணும்பொழுது உரையாடாது உண்ணுதல் நல்ல வழக்கமன்று; ஒழுக்கமன்று; அறநெறியுமன்று; வாழ்வாங்கு வாழும் நெறியுமன்று; உடலியலில் பேணும் நெறியுமன்று. அதனாலன்றோ, தாயுமானார் "உறவு கலந்து உண்ணக் கண்டீர்" என்று எடுத்தோதினார். உறவு கலக்க உரையாடல் இன்றியமையாதது. ஆதலால், பலர் கூடி உண்ண வேண்டும். உறவு கலந்து உண்பித்துச் சிரித்துப் பேசி மகிழ்வு சிறக்க உண்ண வேண்டும். ஆனால் உண்ணும் பொழுது உரையாடலை 'அரட்டைக் கச்சேரி'யாக மாற்றிவிடக் கூடாது. பயனற்ற சொற்களைப் பலர் கூடி உண்ணும் பந்தியில் கட்டாயம் தவிர்க்க வேண்டும்.

அதுமட்டுமின்றி உணர்ச்சி வசப்படுத்தக் கூடிய, அவல உணர்வுகளைத் தரக்கூடிய செய்திகளை மறந்தும் பேசக் கூடாது. இது நேர்மாறான பயனைத் தந்துவிடும். உண்ணும் நேரம் குற்றங்குறைகளை உணர்த்தவன்று. உண்ணும்பொழுது மனித இயலைத் தூண்டி உயர்த்துதற்குரிய மகிழ்வும் ஊக்கமும் தரத்தக்க செய்திகளையும், உயர்வு தாழ்வுகளை விரிவுபடுத்தாத உறவு நெறிகளையும் காட்டிப் பேசுதல் வேண்டும். இத்தகைய உரையாடலோடு கலந்துண்ணும் பழக்கம் நமது குமுகாய வழக்கம். இந்த இனிய வழக்கம் மீண்டும் நமது குமுகாயத்தில் மலர்வதாக.

# 14. ஆற்றில் கெடுத்துக் குளத்தில் தேடுவதா?

இறைவன் எங்கும் இருக்கின்றான்; எல்லாவற்றிலும் இருக்கின்றான்; எப்பொழுதும் இருக்கின்றான். எங்கும் இறைவன் தங்கியிருப்பதனாலேயே அவனுக்கு இறைவன் என்று பெயர். "எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்று மணிமொழி இறைவனைப் போற்றுகிறது; பாராட்டுகிறது. எல்லாத் திருக்கோயில்களுக்குள்ளேயும் நுண்ணறிவில்லாத வரும் கண்டு அறிந்து போற்றும்படி திருமேனி கொண்டு இறைவன் எழுந்தருளியுள்ளான். திருக்கோயில்கள் யாவும் இறைவன் திருக்கோயில்களே. எல்லாத் திருக்கோயில்களிலும் எழுந்தருளியுள்ள மூர்த்திகளிலும் இறைவன் திருவருட் பொலிவோடு எழுந்தருளியிருக்கிறான். ஆனால், நம்மில் பலர் அதை உணர்வதில்லை. இங்கென்றும் அங்கென்றும் இறை வனைத் தேடி அலைந்து கொண்டிருப்பார்கள்.

ஒரு திருக்கோயிலில் வழிபாடு செய்து வைக்கும் பொறுப்புள்ள அர்ச்சகரே இன்னொரு திருக்கோயிலில் உள்ள தெய்வத்திற்கு நோன்பு எடுத்துக் கொண்டு அங்குச் செல்வார். இது எவ்வளவு பெரிய அதிசயமான செய்தி! சிற்றுண்டிச்சாலையை வைத்திருப்பவர் தாம் அங்கு உண்ணாமல் அடுத்த கடையில் போய் உண்டு, வருகிற தென்றால் அது வேதனையைத் தரக்கூடிய செய்தியல்லவா?

திருநல்லூர்த் திருக்கோயில், எம்பெருமான் எழுந்தருளி யுள்ள திருக்கோயில். அங்கு, கண்ணுக்கும் கருத்துக்கும் தோற்றமாகும்படி இறைவன் எழுந்தருளியிருக்கின்றான். ஆனாலும் திருநல்லூர்த் தொண்டர், திருநல்லூர்த் திருக்கோயிலுக்குள்ளேயா இறைவனைக் காண முயல்

கின்றனர்? காசிக்குச் செல்லுகின்றனர்! இதனை அப்பரடிகள் கண்டிக்கின்றார்.

கெட்ட புத்தியால் ஆற்றில் ஒரு பொருளைக் கெடுத்து விட்டு அந்தப் பொருளைக் குளத்தில் சென்று தேடினால், கிடைக்குமா? ஒரு பொழுதும் கிடைக்காது. சுந்தரருக்குக் கிடைக்கவில்லையா? என்று கேட்கத் தோன்றும். சுந்தரர் ஆற்றிலே பொன்னை, இறைவன் ஆணைப்படி போட்டவர்; கெடுத்தவரல்லர்.

ஆற்றில் போடுதலுக்கும், கெடுத்தலுக்கும் நிறைய வேறுபாடு உண்டு. அதுவும் துர்மதியால் கெடுத்தது என்பது அப்பரடிகள் வாக்கு. மற்றவர்களுக்குத் தெரியாமல் வைத்து அனுபவிக்க வேண்டும் என்று மடியில் மறைத்தது துர்புத்தி. அப்படியே ஆற்றில் இறங்கும் பொழுது அந்தப் பொருள் கெட்டுப் போகிறது. அதை எப்படி குளத்தில் எடுக்க முடியும்? அதுபோலச் சிலர் இறைவனை உள்ளூரில் நன்றாகக் கும்பிட்டால் மற்றவனும் கும்பிட்டுவிடுவானே என்றஞ்சி அயலூர்களுக்கே கும்பிடப் போவதுண்டு.

இறைவன் எங்கும் இருக்கிறான். நம்மூர்க் கோயிலில் இருக்கிறான்; பூசனை இல்லாது பூட்டப் பெற்ற கோயிலுக்குள்ளும் இருக்கிறான். கதவைத் திறவுங்கள்; அன்போடும் ஆராக் காதலோடும் அவனோடு பேசுங்கள்: மலர்ந்த மனத்தைப் பேசிக் காட்டும் மலர்களைத் தூவுங்கள்; உணர்வின் சின்னமாக—உருக்கத்தின் வெளிப்பாடாகத் திகழும் கண்ணீரால் முழுக்காட்டுங்கள்; கண்ணீர் வர மறுத்தால் குடங்களால் நீர் முகந்து ஆட்டுங்கள். காலத் திற்குக் காலம் கனிந்து கண்ணீர் வரும். இறைவனைக் காணலாம். அதனை விடுத்துக் காற்றிலும் கடிய வேகத்தில் உலகெல்லாம் திரிந்து இறைவனைக் காணமுயல்வது ஆற்றில் கெடுத்துக் குளத்தில் தேடிய அறியாமையோடொக்கும்.

இதனை,

தேற்றப் படத்திரு நல்லூ ரகத்தே சிவனிருந்தால்
தோற்றப் படச்சென்று கண்டுகொள் ளார்தொண்டர்
துன்மதியால்
ஆற்றிற் கெடுத்துக் குளத்தினிற் றேடிய வாதரைப் போல்
காற்றிற் கடுத்துல கெல்லாந் திரிதர்வர் காண்பதற்கே!

என்று அப்பர் பாடுகிறார்.

## 15. மன்றத்து நின்ற மரம் வாழுமோ?

இன்றைய மனித சமுதாயத்தில் 'தனி உரிமை', 'பொது உரிமை' என்ற சொற்கள் பெரு வழக்கில் வழங்கப் பெறு கின்றன. தனி உரிமை-பொது உரிமை என்ற சொற்கள் பெருவழக்காதல் வளரும் சமுதயாத்திற்கு நல்லதல்ல. ஏன்? தனி உரிமையும் பொது உரிமையும் இன்று ஒன்றோடொன்று மோதக்கூடச் செய்கின்றன. தனி உரிமையும் பொது உரிமையும் அரும்பும் மலரும் போல் ஒன்றையொன்று தழுவி நிற்க வேண்டியன. தனி உரிமை, பொது உரிமை ஆகியவற்றில் முதலிடம் கொடுத்துப் பேணத்தக்கது பொது உரிமையேயாம்.

பொது உரிமை தாயானால் தனி உரிமை சேய். ஆனால் சமுதாயப் பேரறிவு வளராததன் காரணமாகத் தனி உரிமையிலிருந்துதான் பொது உரிமை தோன்ற வேண்டும் என்ற கருத்து மேலோங்கியிருக்கிறது. ஆனால் மனித சமுதாய வரலாற்றுப்படியும், வாழ்வியல் முறைப்படியும் பொது உரிமைதோன்றி வளர்ந்து செழுமையடையும் பொழுதே தனி உரிமை தோன்றுகிறது.

நம்முடைய சமுதாயத்தில் தனி உரிமை உணர்வு வளர்க்கப்பட்டமையின் காரணமாக, இந்த நாள் வரையில் பொது உரிமையை விட, தனி உரிமையே முதன்மைப் படுத்தப்பட்டு வருகிறது. இன்னும் நம்முடைய சமுதாயத்தில்

பொது உரிமை இயக்கங்களாகிய கூட்டுறவு இயக்கங்கள் பலவீனமுற்றேயிருக்கின்றன. அரசு வழிப்பட்ட பொதுத் தொழில்கள் தனியார் தொழில்களை விட—தனியார் தொழில்களை நோக்கச் செழுமையான இலாபங்களைத் தரவில்லை. ஏன் நம்முடைய சமுதாயத்தின் பொது நிறுவனங் களாகிய கோயில்களை எடுத்துக் கொள்வோமே! அவை களைப் பேண வேண்டுமென்ற உணர்வு எல்லாருக்குமா இருக்கிறது? இல்லவே இல்லை! இன்று கோயில்களைப் பேணும் பொறுப்பேற்றிருக்கின்ற சிலரிடத்தில் கூட, அது பொது, ஆதலால் பேணுகிறோம் என்ற உணர்வு இல்லை. இங்ஙனம் பேணுவோரில் சிலருக்கு அது 'வேலை'; பலருக்கு அது 'பிழைப்பு'; அதனாலேயே நம்முடைய பொது நிறுவனங்களுடைய உடைமைகளும் முதலீடுகளும், அதற் கியைந்த பணிகளும் கோடிக் கணக்கில் பல்கிப் பெருக வில்லை.

சமுதாயத்தின் இந்த இழிமனப் போக்கு இன்று நேற்று தோன்றியதன்று. அப்பரடிகள் காலத்திலும் இதே நிலைமை தான்! ஊர் நடுவே, ஒரு மன்றம்! மன்றம் என்றால் பொது இடம் என்று பொருள். நம்முடைய இறைவன் மன்றிலாடு கிறான் என்பது நம் ஆன்றோர் வழக்கு. மன்றத்தையே 'பொதுவில்' என்றும் அழைப்பதுண்டு. மன்றத்திலாடும் இறைவன் என்றால் இறைவன் உலகுக்குப் பொது என்பது பொருள்.

உலகத்தின் முதல் பொதுவுடைமைத் தலைவன் இறைவனே! அவன் மகிழ்ந்தாடக் கூடிய இடம், மன்றம். அந்த ஆனந்த வெள்ளத்தமுதில் திளைப்பவர்கள் உலகத்து மக்கள். இங்ஙனம் பொது மக்களுக்குப் பல நூறு ஆண்டு களுக்கு முன்பே, தமிழகச் சமய நெறியில் கருக்கொண்டு விட்டது. ஆயினும் பழக்கங்கள் அக்கருவை மூடி மறைத்துச் சிதைத்து விட்டன.

மன்றம் பலர் கூடுமிடம். ஆங்கு நிழல் தருவதற்காக மரங்கள் வைக்கப் பெற்று வளர்ந்திருக்கும். நிழலில் கூடி யிருந்து மகிழ்ந்தவர்கள், நிழல் தந்த மரங்களைப் பேணுவதில்லை. பேணாதது மட்டுமின்றித் தேவைக்கேற்பச் சிறிதும் பெரிதுமாகக் கொம்புகளை ஒடித்துச் சேதப் படுத்துவர். தொங்கும் கிளைகளை மாடுகளும் கடித்து மேய்ந்து அழிக்கும். நோய் தரும் பூச்சிகள் ஒட்டி, மரங்களை உருக்குலைக்கும்.

இங்ஙனம் மன்றத்தில் நின்ற மரமாயினும் மன் பதைக்குப் பயன்பட்டதாயினும் அம்மரம் பேணுவாரின்றி பெருந்துன்பமே உறுகின்றது. காரணம், மன்றத்தில் நின்ற மரம்! வீட்டகத்தே நின்ற மரமாக இருப்பின் எங்ஙனம் பேணுவர் என்று எடுத்து எழுதவும் வேண்டுமோ? தாம் வளர்த்ததாக இருப்பின் நச்சு மரமேயானாலும், கொல்ல மாட்டார்கள் என்று மணிமொழி பேசுகிறது. வளர்த்த பாசம் அத்தகையது! மன்றத்தில் நிற்கும் மரமும்—பொது இடத்தில் நிற்கும் மரமும் படும் துன்பத்தைத் துன்பத்திற்கு எல்லையாக எடுத்துக் காட்டுகிறார், அப்பரடிகள். ஆதலால் அப்பரடிகள் காலத்தும் பொதுமையுணர்வு தோன்றவில்லை. பொது வுரிமைப் பொருள்களைப் பாதுகாக்க வேண்டுமென்ற உணர்வு வளரவில்லை எனலாம்.

தனியுரிமையும், தனி மனிதவுணர்வும் நஞ்செ்ன வளர்ந்து மனித சமுதாயத்தை அரித்துக்கெடுத்திருக்கின்றன. மனித சமுதாயம் என்ற ஒப்பற்ற மாளிகை 'யான், எனது' என்ற இரண்டு 'இடி'களால் தகர்க்கப்பட்டு வந்திருக்கிறது. 'யா'னிலும் 'ஒரு மனித' னிருக்கிறான். 'நா'மிலும் ஒரு மனிதனிருக்கிறான். 'என' திலும் 'ஒரு மனித'னுடைய உணர்வு இருக்கிறது. 'நமதிலும்' ஒரு மனிதனுடைய உணர்வு இருக்கிறது. ஆனால், இரண்டிற்குமிடையேயுள்ள வேற்றுமை 'யான், எனது' வெறுப்பை வளர்க்கிறது; பகையை வளர்க்கிறது; பாதுகாப்பின்மையைத் தோற்றுவிக்கிறது. 'நாம்',

'நமது' என்ற உணர்வு, அன்பைப் பெருக்குகிறது; உறவை வளர்க்கிறது; பாதுகாப்பைத் தருகிறது.

தனியுரிமையில் பொதுவுரிமை அடங்காது. பொது வுரிமையில் தனியுரிமை அடங்கும். ஆயினும் வழி வழி சமுதாயத்தில் வேண்டிய அளவு பொதுமையுணர்வு வளரவில்லை. 'யான்', 'எனது' என்ற உணர்வு மனிதனுடைய உத்வேகத்தை அழிக்கிறது. தனிமனிதன் ஒப்பற்ற காரியங் களைச் செய்துவிட முடியாது. இதனை உணர்த்தவே மிகப் பருமனான ஒரு தேரைப் பலர் கூடி இழுக்கும் மரபைச் சமயநெறி தோற்றுவித்தது. ஆயினும் என்? தேர் இழுக்கப் பெறுகிறது. ஆனாலும் சமுதாயப் பொதுவுணர்வு தோன்ற வில்லை. தேரோட்டம் ஒரு சடங்காகப் போய்விட்டது.

மனிதன், ஒன்றில் ஒன்றவேண்டும். அந்த ஒன்று கடவுள். எல்லா உலகுக்கும் ஒருவனாக இருக்கின்ற கடவுள்! அவன் "இவனுமல்லன்; அவனுமல்லன்" அவனுக்கு ஒன்றென்றே பெயர் கூறினும் பொருந்தும். அவனையே "எல்லா உலகமும் ஆனாய் நீயே" என்று அப்பரடிகள் பாராட்டுகின்றார். "அம்மையப்பரே உலகுக்கு அம்மை யப்பர்" என்று சாத்திரம் பேசும்! "ஞாலமே விசும்பே, இவை வந்து போம் காலமே!" என்று மணிமொழி பேசும். அந்த ஒன்றில் வேறுபாட்டுணர்வு அற்று ஒன்றிக் கலந்தால் துன்பம் வராது என்ற கருத்தை அப்பரடிகள் இனிது விளக்கிப் பாடுகின்றார். அதாவது, தனிமை துன்பம் தரும்; பொதுமை இன்பம் தரும். கடவுள் ஒன்று, அதுவே, உலகத்திற்கு ஒன்று. அந்த ஒன்றை ஒன்றியிருந்து நினைத்தால் இன்புறலாம் என்பதாகும்.

*மன்றத்துப் புன்னைபோல மரம்படு துயரமெய்தி*
*ஒன்றினா லுணரமாட்டே னுன்னையுள்*
*வைக்கமாட்டேன்*

தே. தி. VII-15.

*கன்றிய காலன்வந்து கருக்குழி விழுப்பதற்கே*
*அன்றினா னலமந்திட்டே னதிகைவீ ரட்டனீரே,*

என்பது அப்பர் திருப்பாட்டு.

## 16. உழுத சாலிலேயே உழுதல்

நெஞ்சம் விந்தையானது. அலைகடலையும் நெஞ்சத்தையும் ஒப்பிடலாம். அலைகடலில் எண்ணத் தொலையாத அலைகள் உண்டு. அது போல, எண்ணத் தொலையாத ஆசை அலைகள் நெஞ்சில் உண்டு. அலைகளின் எண்ணிக்கை பலவானாலும், அவை புதிய வண்ணமும் வடிவமும் உடையன அல்ல; முன் பின் என்ற காலமாறுபாடேயாகும். உருத்தெழுந்து வந்த அலை, கரையில் மோதி அலையென்ற வடிவமிழந்து, பெயரழிந்து ஆங்காரமடங்கிக் கரையால் எதிர்த்துத் தாக்கப் பெற்று உருக்குலைந்து கரைந்து தண்ணீராகக் கடலில் கலக்கிறது. மீண்டும் அத்தண்ணிர்த் துளிகளே காற்றழுத்தத்தின் துணை கொண்டு அலையாகி மோதுகிறது. ஆக, வடிவத்திலும் மாறுதலில்லை; செயலிலும் மாறுதல் இல்லை. அதுபோலவே ஆசை அலைகள் நெஞ்சில் எழுகின்றன. ஒன்றன்பின் ஒன்றாக எழுந்தாலும் ஆசைகள் புதியன அல்ல; பழைய சுயநலமேதான்! பழைய சுயநலம் மாறிப் புதிய பிறர் நலமாக இருப்பின் குணம் மாறும்; பயன் விளையும். ஒருக்கால் சுயநலமும் காப்பாற்றப் பெற்றாலும் பெறலாம்.

இந்த நெஞ்சு, அறியாமைத் தன்மையுடையது. அதற்கு ஆய்ந்தறியும் அறிவுணர்வை விட வழக்கம்தான் பெரிது. அது, இன்று புதுப்பாதை போடாது; நேற்று நடை பயின்ற பாதையிலேயே செல்லும்; அந்தப் பாதை நாற்றமுடையதாக இருந்தாலும் மூக்கைப் பிடித்துக் கொண்டாவது அந்தப் பழைய பாதையில் செல்ல வழி நடத்துமே தவிர, எளிதில் வழக்கத்தை மாற்றாது. நெஞ்சம், ஆசைகளின் ஊற்றுக்களன்.

ஆசைகள் துன்பத் தருவனவேயன்றி இன்பந்தரா. அதனா லன்றோ,

> *ஆசை யறுமின்கள் ஆசை யறுமின்கள்*
> *ஈசனோ டாயினும் ஆசை யறுமின்கள்*

என்று திருமந்திரம் பேசிற்று. ஆசையை விடுக என்றால் ஒன்றும் வேண்டாம் என்பது பொருளன்று. அன்பின், வழியல்லாமலும், பண்புவழிப் பயன் கருதாமலும் விழைவது, ஆசை. உணவு, உடல் வாழ்க்கைக்கு இன்றியமையாதது. உடலைப் பேணவும், பேணிப் பாதுகாக்கவும், திறனுறு வகையில் உடலைப் பயன்படுத்திக் கொள்ளவும் உணவை விரும்புதல் ஆசையாகாது. ஆனால், உணவின் மேலேயே ஆசை கொண்டு சுவையில் நாட்டம் வைத்து அச்சுவை உடலியக்கத்திற்குத் தீங்கு பயந்தாலும் உணவை விரும்பி யுண்பது ஆசையாகும்.

பொருள், வாழ்க்கைக்கு இன்றியமையாதது. பொரு ளின்றேல் பூவுலகம் இல்லை. நெறிமுறைப்பட்ட துய்ப்பிற்கும், தொடர்ந்து உயிர் வாழ்வதற்கு, மற்றவர் உயிர் வாழும்படிச் செய்யும் அறமாகிய ஈதலுக்கும் பொருள் தேவை. இந்த வகையில் பொருளை விரும்புதல் ஆசையன்று. அங்ஙன மின்றிப் பொருள் மீதே விருப்பங்காட்டி, "பொருளுடை யோன்" என்று பலர் சொல்ல விரும்பித் 'துய்க்காமலும், ஈந்து மகிழாமலும், மகிழ்விக்காமலும் பொருளொன்றையே குறியாகக் கொண்டு சேமிப்பது' ஆசையாகும். மண்ணில் பயிர் தழைக்க மழைத்துளி தேவை. அதுபோல, மனிதகுலம் செழிக்க அன்பு தேவை. உயிர், காதலால் செழித்து வளரும். காதல் பாலுணர்வின் பாற்பட்டது மட்டுமன்று; அதனையும் கடந்தது. காதல் உயிர்களைச் செழிக்கச் செய்யும்; உணர்வு களைச் செழிக்கச் செய்யும்; தூண்டி வளர்க்கும்; தூய்மை சேர்க்கும்; பொறிகளுக்கும் புலன்களுக்கும் அன்பினைச் சேர்க்கும். இத்தகு தூய காதல் வழி ஒருவன் ஒருத்தியை

நாடுதலும் ஒருத்தி ஒருவனை நாடுதலும் ஆசையாகாது. பயனின்றி உயிர்களை அரித்தழித்து உருக்குலைக்கும் பாலுணர்ச்சியின் வெறியில் மகளிரை நாடுதல் ஆசையாகும். உயிருக்குக் கடவுள் துணை. தாயிற் சிறந்த தயாவுடன் தண்ணளி சுரக்கும் துணை. கடவுளை வாழ்த்துதல் வாழ்வே யாகும். கடவுளை மாறா அன்பினில் வாழ்த்துதல் வேண்டும்.

அங்ஙனம், கடவுளை வாழ்த்துதல் ஆசையாகாது. அங்ஙனமின்றி, "இது வேண்டும், அது வேண்டும்" என்ற விண்ணப்பங்களுடன், விண்ணப்பத்தை நிறைவேற்றுவதற் காகக் கடவுள் மீது விருப்பமின்றி, விருப்பங்கள் மீது விருப்பத்துடன், கடவுளை வாழ்த்துதல் ஆசையாகும்.

ஆசை துன்பத்தையே தரும். ஆசையுணர்வில் சுவை புதிதன்று; பொருள் புதிதன்று; உணர்வும் புதிதன்று. எல்லாம் பழைய சுயநலத் தேவையின் மயம். அஃது அரிப்புடைய சொறிசிரங்கைப் போல உயிர் வாழ்க்கையை அரித்து எரித்துக் கொண்டிருக்கிறது.

நேற்று, என்னை நான் நேசித்ததால், அடைந்தது, துன்பமே. நேற்றுக்கு முந்திய நாள் கதையும், அதுவே. ஆயினும் "நான்", "எனது" என்ற நச்சு உணர்வுகள் மாற்றப் பட்ட பாடில்லை. திரையில் காட்சி மாறினாலும் உணர்வு மாறாது போனால் பயனில்லை. நாள்கள் மாறினாலும், நாடிடும் நாட்டம் மாறினாலொழியப் பயனில்லை. நேற்றைய துன்பமே இன்று மீண்டும் வருகிறது. நேற்றைய 'நான்' இன்று 'நாம்' ஆக மாறி வளர்ந்தால், துன்பம் தொலையும். நேற்று என்னுடையது; இன்று 'நம்முடையது' என்று மாறி, வளர்ந்தால் பயனுண்டு. 'நானில்' உலகமில்லை. ஆனால் 'நம்மில்' 'யானும்' அவலம் தரத்தக்க ஆசையினின்று விலகி அன்பு வடிவம் பெற்று ஆங்கு இருக்கிறது. ஆளுக்கு அழிவில்லை. தீமைக்கே அழிவு.

'என்னுடையது' 'நம்முடையது' ஆன பிறகு தனி ஒருவரின் உரிமை அழிந்துவிடவில்லை; மாறாக உறுதி பெற்றிருக்கிறது; ஆங்காரமற்றிருக்கிறது. மேலும் சொன்னால், ஒருவரைப் பாதுகாக்கப் பலர் முன் வந்திருக்கிறார்கள் என்பதே உண்மை. ஒருவனாகத் தனித்து, வயிற்றிலும் வாயிலும் அடித்துக் கொண்டு அவலத்துடன் வாழ்க்கை முடிவதைவிடப் பலர் பாதுகாக்கும் வாழ்க்கையே புகழுடைய வாழ்க்கை. தானே உண்பதைவிட, உண்பிக்க உண்பது சுவையுடையது. தானே சிரித்து மகிழ்வதைவிடப் பிறர் மகிழ்விக்க மகிழ்வது மாண்புடையது. தானே, தன்னை வியந்ததலைவிட மற்றவர் வியந்து பாராட்டுதல் சிறப்புடைய தாகும்.

ஆதலால், நேற்றைய வாழ்க்கையில் விளைந்த துன்பத் தினைப் பார்த்து அதனினும் விலகி வாழ்தல் வேண்டும். அதுபோலவே நேற்றைய வாழ்க்கையிலேற்பட்ட இன்பத் தினைப் பார்த்து அந்த இன்பத்தினை மேலும் வளர்த்துப் புதுமையாக்கி அனுபவித்தல் வேண்டும். 'நேற்று' அப்படியே அப்பட்டமாக 'இன்று' ஆகுமானால், பயனில்லை 'நேற்று' போய் 'இன்று' உருவாகும் பொழுது கழிப்பன கழித்து, கொள்வன கொண்டு புதுமைப் பொலிவு பெறவேண்டும். வறட்சித் தன்மையுடைய கிழட்டுத் தனத்தை நீக்கப் புதுமை உணர்வு துணை செய்யும். ஆக புலன்களைச் சென்ற வழியே செல்லவிடாமல், போன வழியிலேயே போய்ப் பாழாகி விடாமல், புதுநெறியில்—பொது நெறியில் நெஞ்சத்தை நாம் பழக்க வேண்டும். ஆனால், புலன்களோ புதுமையில் நாட்டமில்லாது வழக்கத்திற்கும் பழக்கத்திற்கும் அடிமை யாகின்றன. "எங்களால் மாற்றிக் கொள்ள இயலவில்லையே! நாங்கள் என்ன செய்வது" என்று அங்கலாய்க்கின்றன. இந்தப் பொல்லாப் பழக்கம் பயனுடையதன்று.

நிலம், பரப்பளவில் அதிகமுடையது. ஒரு நிலம் முழுவதையும் உழுதால்தான் நிலம் பயனுடையதாகும். ஒரு

நிலத்தின் ஒரு சால் நிலம் உழப்பெற்று, அதற்கு அண்மைத் தாய அடுத்த சால் நிலம் உழப்பெறாது போகுமானால், முன்னர் உழுத உழவினால் பயனில்லை. அது போலவே நேற்றைய தீய பழக்கத்தை விலக்க அதனைச் சார்ந்து வரக்கூடிய தீய பழக்கங்களையும் விலக்க வேண்டும்.

நேற்றைய நற்பழக்கத்தை உறுதிப்படுத்திக் காப்பாற்றிக் கொள்ளப் புது நற்பழக்கங்களும் தேவை. பக்தியாகிற நற்பழக்கத்தை அரண் செய்து காப்பாற்றத் தொண்டு தேவை. இங்ஙனம் இனிய பழக்கங்களை விரிவாக்கிக் கொள்ளாமலும் வாழ்தல் வாழ்க்கை ஆகாது. இதனை அப்பரடிகள் "உழுத சாலில் உழவே விரும்பும் இழுதை நெஞ்சம்" என்று எடுத்துக் காட்டி இடித்துரைக்கின்றார். ஆதலால், வழக்கங்களையும் பழக்கங்களையும் மாற்றி நலம் பல பெருக்கி, நன்றுடை யானை வாழ்த்தி வாழக் கற்றுக் கொள்ள வேண்டும்.

சுவைத்தனவே சுவைக்க விரும்புதல் நெஞ்சத்தியல்பு; அங்ஙனம் மாறாது சுவைக்கத் தக்கன நன்றுடையான் திருத்தாள்களேயாம். மற்ற சுவைப் பொருள்கள் மாறாது போனாலும் சுவைத்தற்குரிய நோக்கம் மாறவேண்டும். இதனை,

*எழுது பாவைநல் லார்திறம் விட்டுநான்*
*தொழுது போற்றிநின் றேனையுஞ் சூழ்ந்துகொண்*
*டுழுத சால்வழி யேயுழு வான்பொருட்*
*டிழுதை நெஞ்சமி தென்படு நின்றதே!*

என்ற அப்பர் திருப்பாட்டால் அறியலாம்.

## 17. யாதினும் இனியான்

மனித உயிர் வாழ்க்கை சுவையொடுபட்டது. உயிரின் இயக்க உணர்ச்சி சுவைத்தலேயாகும் துய்த்தலும், சுவைத் தலும் உயிரின் பிறப்புரிமைகள். உயிர் வளர்தலுக்கும் சுவைப்

புல உணர்வே மூலமும் முதலுமாக விளங்குகிறது. அது போலவே உயிர் வாழ்க்கை, அவலத்தில் ஆழ்தலுக்கும் சுவையே காரணம். தனிமனிதப் போராட்டமானாலும் சரி, சமுதாயப் போராட்டமானாலும் சரி, ஆழச் சிந்தித்தால் சுவைப்புலன்களை மையமாகக் கொண்டே தோன்றி யிருக்கும்.

மனிதரில் பெரும்பாலோர் ஏன், எல்லாருமே நாவின் சுவைக்கு ஆளாகின்றனர். இதில், அதீத மாமுனிவர்களைத் தவிர வேறு யாரும் விதி விலக்கல்லர். சுவையாக உண்பதற்கே வாழ்வதாக கருதிக் கொண்டிருப்போர் ஏராளம்! சோறே சொர்க்கமென்று வாழ்பவர்களும் உண்டு! இன்னும் கொஞ்சம் வளர்ந்தவர்கள் பால்சுவையில் ஈடுபடுகிறார்கள். பால்சுவையைச் சுவைத்து மகிழ்ந்து வாழ்கிறார்கள். நாச் சுவையை விட இந்தச் சுவையை ஆர்தல் நுட்பமானதாகும். பலர், சுவையுணர்வின்றிப் பால்வாழ்க்கை நடத்துகின்றனர். இஃதொரு கலை. அதனாலன்றோ திருவள்ளுவரும்,

*மலரினும் மெல்லிது காமம் சிலரதன்*
*செவ்வி தலைப்படு வார்*

என்றார். இந்த இரண்டு சுவையிலும் ஈடுபடத் துடிக்கும் மனிதர்களை எங்கும் காணலாம். இன்னும் சற்று வளர்ந்தவர்கள் இந்த இரண்டு சுவையிலும் அமைதி கொள்வதில்லை. ஏன்? இவ்விரண்டையும் கூடத் துச்ச மெனத் தள்ளவும் துணிவர். அவர்களுடைய சுவைப் பசி, ஆணை செலுத்துதல் ஆகும். பலரோடு பிறந்து வாழ்ந்தாலும் அவர்கள் அனைவரிலும் தன்னை உயர்த்தி விஞ்சியவனாகக் காட்டிக் கொள்ளுதல்; தன்னாணை கேட்டுச் செயற்படு வோரைக் கண்டு மகிழ்தல். இத்தகு சுவை நுகர்ச்சி கோடியில் ஒருவருக்கே ஏற்படும். அவர்களே பலர் புகழ விளங்கு வார்கள்.

இன்னும் வளர்ந்தவர்கள் மேற்கூறிய சுவை நுகர்வினால் இன்பமுமுண்டு, துன்பமுமுண்டு, ஆக்கமுமுண்டு, அழிவுமுண்டு என்பதனை உணர்ந்து, தன்னை, தன்னுடைய வாழ்க்கையைச் சுவைத்து சுவைத்துத் திருத்தித் திருத்தி முழுநலம் அடையச் செய்தலில் ஈடுபடுவர். அவர்கள் தம் உயிரினும் இனியனாகிய இடைமருதீசனை எண்ணித் தம்முயிருடன் கலக்கச் செய்து இனிமை நலம் துய்ப்பர். வேறு எப் பொருளைச் சுவைத்தாலும் பசி நீங்காது. காமமும் எல்லைக்குட் பட்டதன்று. மேலும் மேலும் முறுகி வளர்வதே காமத்தின் இயல்பு. அதிகார மனப் போக்கும் எல்லைகளைக் கடந்து விரிவடைவதேயாம். பகையும், போரும் விகாரத்தின் விளைவுகள்; திருவருட் சுவையோ தீதற்ற சுவை. சுவைத்த அளவுக்குப் பயன் தரும். அச்சுவை முறுகி வளர்ந்தாலும் சுவைக்கின்றவனுக்கு நன்மையே. இச்சுவை, அழுக்காறு, அவா, வெகுளிகளுக்கு அப்பாற்பட்டது. ஆதலால் சுவை களுக்கெல்லாம் தலையாயது திருவருட்சுவையே. இதனை அப்பரடிகள் படிமுறையில் விளக்கிக் காட்டுவது உணரத் தக்கது.

*கனியி னுங்கட்டி பட்ட கரும்பினும்*
*பனிம லர்க்குழற் பாவைநல் லாரினும்*
*தனிமு டிகவித் தாளு மரசினும்*
*இனியன் தன்னடைந் தார்க்கிடை மருதனே!*

என்பது அப்பர் திருப்பாடல்.

## 18. களவுபடாத காலம்

இந்த உலகை—உலக இயக்கத்தை நடத்துவது காலம். காலம் என்னும் களத்தில்தான் மனிதன் வளர்கிறான்; வரலாறு உருவாகிறது. காலம் மிகவும் விழுமியது; போற்றத்தக்கது; பயன்கொள்ளத்த தக்கது. காலம் என்ற நெருக்கடியை இலட்சியமாக வைத்துத்தான் மனிதன்

வளர்கிறான். காலம் அருமையானது. சென்ற காலம், நிகழ் காலத்தை நிர்ணயிக்கிறது. நிகழ்காலமும், எதிர் காலத்தை உருவாக்குகிறது. இந்த உலகில் எந்த ஒன்றையும் மனிதன் படைத்துக் கொள்ள முடியும். ஆனால் புதியதொரு காலத்தை அவன் படைத்துக் கொள்ள முடியாது. அது போலவே மனிதன் இழந்த அனைத்தையும் திரும்பப் பெறலாம். ஆனால் இழந்த காலத்தைத் திரும்பப் பெற முடியாது.

வாழ்நாள் பல வினாடித் துளிகளை உள்ளடக்கியது. ஒவ்வொரு வினாடித்துளியும் கழியும்போது உயிர்வாழ்க்கை கரைகிறது; மரணம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் மகிழ்விலேயே ஈடுபடும் மனப்போக்குடைய நாம் மரணத் திற்கு அஞ்சுவதால்—அயர்ந்து மறந்து விடுகிறோம். நாம் அறிந்துகொண்டாலும் சரி, அறியாமல் போனாலும் சரி, உணர்ந்தாலும் சரி, உணராமல் போனாலும் சரி வாழ்நாள் கரைந்தே போகிறது. எப்படி முயன்றாலும் வாழ்நாள் கரையத்தானே செய்யும். அதைப் பற்றிக் கவலைப்பட்டு என்ன? என்று கேட்கலாம். ஆனால் வாழ்நாளை முற்றிலும் முழுதுமாகப் பயன்படுத்தினால் அது கரைந்து அழிந்ததாகக் கருதமுடியாது. வள்ளுவரும் "உளதாகும் சாக்காடு" என்பார். காலம் விரைந்து செல்லக்கூடியதே. அதனைத் தடுத்து நிறுத்துதல் என்பது இயலாது. ஆயினும் காலத்தின் நோக்கம் பயன்படுதலேயாம். காலம் முழுதுமாகப் பயன் பட்டிருக்குமானால் அஃது அழிவன்று; ஆக்கமேயாம். மனித உலகத்திற்கு ஒவ்வொரு வினாடித்துளியும் பயன்பட வேண்டும்.

ஒரு மனிதன் தனக்குரிய பொருள், தனது வாழ்வுக் குரிய பொருள், பிறரால் அவனறியாமல் கொள்ளை கொள்ளப்படும்போது களவு போய்விட்டது என்று கூறுகி றான். இத்தகைய களவு, உடைமைகளுக்கு மட்டும் தானா? காலத்திற்கும் உண்டு, அடிக்கடி சிலர் நேரம் போனதே

தெரியவில்லை என்றும் கூறுகின்றனர். இப்படிக் கூறும் பொழுது அவர்கள் இம்மியும் கவலைப் படுவதில்லை.

நம்மை அறியாமல் நமது செயலுக்கும் பயன்படாமல், பயன் தராமல் வாளா கழிகின்ற காலமும் களவு போனதாகவே கருதப்படும். இங்ஙனம் அப்படி அடிகளே கூறுகின்றார், "களவுபடாததோர் காலம்" என்பது அவர் வாக்கு! உடைமைகளைப் பாதுகாக்கும் கவலை இல்லையா? பூட்டும் சாவியும் தோன்றவில்லையா? கணக்குப் பார்க்கும் பழக்கம் இல்லையா? காலம் படைத்துத் தரும் உடைமைகளுக்கு இவ்வளவு அக்கறை எடுப்பவர்கள் ஏன் மூலப் பொருளாகிய காலம் பற்றிக் கவலைப்படாது இருக்கிறார்கள்? அதுதான் புரியாத புதிர்! உடைமை இழப்பு உடனடியாகத் துன்பம் தருவது. ஆனால் மனம் வைத்து முயன்றால் ஈடு செய்ய - வல்லது. காலத்தின் இழப்போ நெடிய துன்பத்தைத் தரவல்லது; ஈடுசெய்ய முடியாததும் கூட. ஆயினும் அதைப் பற்றி மனித உலகம் போதுமான கவலை காட்டுவதாகத் தெரியவில்லை. எப்படியும் மனிதனுக்குக் காலம் போற்றும் உணர்வு வேண்டும் என்பதற்காக வினாடி வரையில் பகுதி பிரித்துக் காட்டினார்கள். வினாடியைவிட்டால் நிமிடத்திலாவது முடித்துக் கொள்ளட்டும் என்றும் நிமிடம் குறைந்தாலும் மணிக்கணக்கில் தொலைக்காமல் இருக்கட்டும் என்றும் பிரித்துக் காட்டினார்கள். ஆனால் நாள்கணக்கில், மாதக் கணக்கில் ஆண்டுக் கணக்கில்கூடப் பயனற்றுக் காலம் கழிவதை-இல்லை, அழிக்கப்படுவதை என்னென்று கூறுவது?

காலம் முழுமையாகப் பயன்படுத்தப் பட வேண்டும்; ஆக்கத்திற்குப் பயன்படுத்தப்பட வேண்டும். காலம் சென்ற அடிச்சுவடு சாதனையின் மூலமாகத் தெரியவேண்டும். அப்பொழுதுதான் காலம் பயன்பட்டதாகும். அங்ஙனம் இல்லாமல் "நாளை" என்று கடத்தி வாழ்வதை இயற்கை ஒரு பொழுதும் மன்னிக்காது. அப்படிப்பட்டவனுடைய காலம் சைத்தனால் களவு கொள்ளப்படும். ஆதலால், உய்திக்குப்

பயன்படவேண்டிய காலத்தைக் களவு போகாமல் உரியவாறு பயன்படுத்தி அளவுக்குட்படாத அன்பால் ஐயாறப்பனை வாழ்த்தி வாழ்ந்திடுதல் வேண்டும் என்றார் அப்பர் அடிகள். அறநெறிப்படி காலம் போற்றுதலும் சிறந்த கடமையாகும்.

*வளர்மதிக் கண்ணியி னானை*
*வார்குழ லாளொடும் பாடிக்*
*களவு படாததோர் காலங்*
*காண்பான் கடைக்கணிற் கின்றேன்*
*அளவு படாதோ ரன்போ*
*டையா றடைகின்ற போது*
*இளமண நாகு தழுவி*
*யேறு வருவன கண்டேன்!*
*கண்டே னவர்திருப் பாதங்*
*கண்டறி யாதன கண்டேன்!*

என்பது அப்பர் அருள்வாக்கு.

## 19. சிற்றம்பலம் சென்றாய்வீர்

சுடுகாட்டில் எரிகின்ற நெருப்புக்கிடையில் ஒருவன் கிடக்கின்றான். அவன் பிணமல்ல, அவனுக்கு உயிர்ப்பிருக்கிறது. ஆனால் உயிரோட்டமாக இல்லை. மெல்ல மூச்சு வந்து கொண்டிருக்கிறது. அவன் நெருப்பினால் எரிந்து அழிக்கப் படுகின்றான். எரி நெருப்பிலிருந்து அவனால் தப்பித்துக் கொள்ளமுடியும். ஆனாலும், உயிர்ப்பாற்றல் குறைவின் காரணமாக—பிணத்தின் தன்மையை எய்திவிட்டதன் காரணமாக ஆற்றலின்றி எரிநெருப்புச் சுடக்கிடக்கின்றான். சுடுகாட்டில் இங்ஙனம் கிடப்பதால் மற்றவர்களும் எடுத்துக் காப்பாற்ற முன் வரவில்லை. அவர்களுக்கு இவன் பிண மாகவே காட்சியளிக்கின்றான். தப்பித்தவறி உயிர்ப்பிருப் பதை அறிந்தாலும் சுடுகாட்டில் உயிர்ப்பிருப்பது ஏலாது; அது கேடு என்று கருதி எடுத்துக் காப்பாற்ற முன் வரவில்லை.

மாறாகப் பிணம் அசைகிறது. மூச்சு விடுகிறது, என்று சிரித்துக் கேலி செய்து அவனைக் கொல்லாமல் கொல்லு கின்றனர்.

இத்தகைய ஒரு காட்சியை அப்பரடிகள் உவமிக்கின் றார். எதற்கு? உயிர், அரித்துத் தின்னும் வினையினால் அரிக்கப்பட்டு அழிந்து போதலுக்கு உவமிக்கிறார்! உயிர் ஆற்றலுடையது; அறிவுடையது; ஆள்வினையுடையது; இன்ப அன்பு நுகர்வுக்குரியது; சிறப்புடைப் புலன்களைக் கருவியாக உடையது. ஏன்? எந்தை ஈசன் இறைவனையே அன்னை யாகவும் அத்தனாகவும் உறவு பூண்டது. ஆயினும் என்? வினையின் அரிப்பிலிருந்துது அது மீள முடிவதில்லை. தனது தகுதிப் பாட்டினை இழந்து, வஞ்சப் புலன்களின் வஞ்சனை களுக்கு இரையாகி மயங்கிக் கிடக்கிறது. அறிவு தொழிற் படவில்லை; ஆன்ற ஆள்வினையும் தொழிற்படவில்லை. துன்ப இன்பச் சுவை வேறுபாடுகளை உள்ளவாறு சுவைத்துத் தீயதை விலக்குதலுக்கும், நல்லது மேற்கொள்ளுதலுக்குமுரிய செயற்பாடில்லை. இந்தத் தளர்ச்சி பொருந்திய—முறை பிறழ்ந்த நிலையினால், வினை மேலும் மேலும் அடர்த்துத் தாக்கி உயிரை வலுவிழக்கச் செய்கிறது. நல்லுணர்விலிருந்து விலக்கித் தனிமைப்படுத்துகிறது. அதன் மூலம் வாழ்வுக்கும் புகழுக்கும் உரிய உயிரை அரித்து அரித்து அணு அணுவாக அழிக்கின்றது.

இங்ஙனம் வினைகளால் அரிப்புண்டு, அணு அணு வாக அழிதலைவிடச் சாவது மேல். ஆயினும், எலும்பு கடித்துத் தின்னும் நாய்க்குத் தன் வாயிலிருந்து செங்குருதி கொட்டினாலும் எலும்பு துண்டின் வேட்கை அதற்கு மாறாததைப் போல, மனிதன் எவ்வளவுதான் வினை வழிப்பட்ட துன்பத்தை அனுபவித்தாலும் அவனுக்கு வினையிலிருந்து முற்றாக விடுதலை பெறவேண்டும் என்ற வேட்கை இல்லை. சுடுகாட்டில் பிணத்தன்மை தப்பித்துக் கொள்ளக்கூடிய ஒரே வழி, அவன் திருச்சிற்றம்பலத்தை நாடி அடைதலாகும். திருவருள் தன்மையுடைய அறிவு

மயமான மன்றத்தில் இன்பக் கூத்தாடும். இறைவனை — ஆடலரசை — தில்லைக்கூத்தனை நினந்து நினைந்து வழி பாடு செய்தால் வினைகளின் அரிப்பிலிருந்து விடுதலை பெறலாம் என்று நம்மீதுள்ள இரக்கத்தின் காரணமாக அப்பரடிகள் வழி நடந்துகின்றார்.

*அரிச்சுற் றவினை யாலடர்ப் புண்டுநீர்*
*எரிச்சுற் றக்கிடந் தீரென் றயலவர்*
*சிரிச்சுற் றுப்பல பேசப்ப டாமுனம்*
*திருச்சிற் றம்பலஞ் சென்றடைந் துய்ம்மினே!*

என்பது அப்பர் திருப்பாட்டு.

## 20. இறைவன் தங்கும் இடம்

நமது சமயநெறி இனிய நெறி; எளிய நெறி; “இது”, “அது” என்ற பிரிவினைச் சழக்குகளைக் கடந்த பெருநெறி. நமது சமயநெறியில் இறைவனை எப்படியும் தொழலாம்; எந்தப் பெயராலும் அழைக்கலாம்; எங்கும் தொழலாம். இங்ஙனம் அமைந்த ஒரு சன்மார்க்க நெறியை உலகில் வேறெங்கும் காண முடியாது, இறைவன் உருவமுடையவ னல்லன்; ஆயினும், உருவமுடையான். அவனை ஆலயங் களிலும் வழிபடலாம்; அவரவர் அகத்திலும் வழிபடலாம். இறைவன் என்ற சொல்லுக்கே பொருள், எல்லா உயிர்களிடத்திலும் தங்கியிருப்பவன் என்பதே. இறைவன், விரும்பி எழுந்தருளும் திருக்கோயில், உயிர்களின் நெஞ்சமே யாகும். “இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க” என்றார் மாணிக்கவாசகர்.

*நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்*
*நினையாது ஒருபோதும் இருந்தறியேன்*

என்று அப்பரடிகள் முதற்பதிகத்தில் அருளிச் செய்துள்ளார். இறைவனைத் தன் உயிருக்கு உயிராக எண்ணி உணர்தல் வேண்டும்.

இறைவனைத் தன் உயிரில் அறியும் தகுதியுடையவர்கள் உள்ளத்தில், இறைவன் தங்கி அருள்செய்வான்; அங்ஙனம் தன் உயிரில் இறைவனை அறியும் அறிவிலனாயின் அவனிடத்தில் தங்கி நிற்கும் இறைவனை அடைதற்கு இயலாதவனாகி அவலமுறுகின்றான்.

*தன்னிற் றன்னை யறியுந் தலைமகன்*
*தன்னிற் றன்னை யறியில் தலைப்படும்*
*தன்னிற் றன்னை யறியில னாயிடில்*
*தன்னிற் றன்னையுஞ் சார்தற் கரியனே!*

என்பது அப்பர் வாக்கு.

தன்னில், தன்னுயிரில் இறைவனைக் கண்டு தொழுதல் இனியதவம். "விறகில் தீயினன்" என்பர் நமது அடிகள். விறகிற்குள்தான் சக்தி மண்டிக் கிடக்கிறது. மணியினுள்தான் மணியின் ஒளி கனன்று கொண்டிருக்கிறது. பாலினுள்தான் நெய் இருக்கின்றது. அதுபோல் ஊனில், ஆவியில் இறைவன் இருக்கின்றான். ஆங்கு அவனைக் கண்டு தொழாமல் — நெஞ்சத்தைக் கோயிலாக்காமல் புறத்தே தேடியலைவதில் பயனென்ன? இதனையே சித்தர் ஒருவர், "நட்ட கல்லும் பேசுமோ நாதன் உள் இருக்கையில்" என்று கூறினார். இதயத்தில் இறைவனை எழுந்தருளச் செய்து பத்திமை செய்யும் தகுதியற்றவர்கள் திருக்கோயிலிலும் இறைவனைக் காண முடியாது. ஆதலால், மெய்ஞ்ஞான நெறியில் வளர விரும்புவர்கள் இறைவனை உள்ளக்கிழியில் உருவெழுதி உருகி நினைக்கவேண்டும். அகப்பூசை செய்யாமல் புறப்பூசை செய்தலை அருணந்திசிவம், "கையிலிருக்கும் தேனைப் பருகாமல் முழங்கை வழியாக வழிகின்ற தேனைக் குடிப்பதற்கு முயற்சி செய்வது போல" என்று கூறுகின்றார்.

ஆதலால் நம்முடைய மனம் என்ற கோயிலில் இறைவனை எழுந்தருளச் செய்து நாள்தோறும் அவனை வழிபட்டு உய்வோமாக!

## 21. வானகத்தை வழங்கும் வாழ்க்கை

*ஊனில் ஆவி உயிர்க்கும் பொழுதெல்லாம்*
*நான்றி லாவி யிருப்பன்என் நாதனைத்*
*தேன்றி லாவிய சிற்றம் பலவனார்*
*வான்றி லாவி யிருக்கவும் வைப்பரே!*

ஊன் வேறு, உயிர் வேறு. ஊன் — கருவி, உயிர் — ஊனாகிய கருவியைப் பயன்படுத்தும் கருத்தா. ஊனிற்குக் குணமில்லை; செயலில்லை. உயிருக்குக் குணம் உண்டு; செயலுண்டு. உயிர், ஊனாகிய கருவியைக் கொண்டுதான் தொழிற்படுகிறது; பயன் விளைவிக்கிறது. உயிர்க்கும் அறிவு, தொழில், குணம் ஆகியவை உண்டாயினும் அவை நிறைவுடையன அல்ல; இன்பமே தருவனவாகவும் இல்லை. ஆதலால், உயிர் தன்னினும் சிறந்த இறைவனை — திருச்சிற்றம் பலவனைத் துணையாக நாடிப் பெறுகிறது. இறைவனைத் துணையாகப் பெற்றோனின் ஊன், உயிர் எல்லாம் அன்பின் நெறிப்பட்டவை; அருளார்ந்தவை. ஊனில் நிலவும் ஆவி—உயிர், உயிர்க்கும் பொழுது எண்ணும்; நோக்கும்; சிரிக்கும்; செயற்படும். இவை நிகழும் பொழுது உயிராற்றல் மங்கி, ஊன் முழுமையாகத் தொழிற்படாது போனால் முடை நாற்றம் வீசும்; இரக்க உணர்ச்சியே இருக்காது. இது வெறுத்து ஒதுக்கத்தக்க வாழ்க்கை. உயிர் ஆற்றல் மட்டுமே தனியே தொழிற்படின் பகை, பிணக்கு, போட்டா போட்டிகள் தலைகாட்டும். இன்ப மயக்கத்தில் துன்பமே விளையும்.

உயிர், திருச்சிற்றம்பலவனை நாடித் துணையாகப் பெற்று அவனோடு கலந்து, அவன் தன் இயல்புகளைச்

சிந்தனை செய்து, தமக்குரியவனாகப் பெற்று உயிர்க்கும் பொழுதெல்லாம் உயிரின் கரணங்கள், தன்மை மாறித் திருவருள் வயத்தனவாக விளங்கித் தோன்றும்; இறைமைத் தன்மையே வெளிப்படும்; இன்ப அன்பே மேவி விளங்கும்; குற்றங்கள் நீங்கும்; குணங்கள் கால்கொள்ளும்; துன்பங் களில்லை; இன்பமே உண்டு. ஆக, உண்மையான இறை வழிபாடு என்பது, உயிர் உடல் கொண்டு வாழ்க்கையின் அனைத்துக் கோணங்களிலும் அனைத்துச் செயல்களிலும் திருவருள் மணங்கமழுதலேயாகும். தன் முனைப்பு நாற்றமே யிருத்தல் கூடாது.

தன்னலச் சார்பு, அறவே நீங்குதல் வேண்டும். வேண்டுதல் வேண்டாமை முற்றாக நீங்குதல் வேண்டும். மகவெனப் பல்லுயிரையும் ஒக்க நோக்கும் தன்மையிற் சிறந்து விளங்கவேண்டும். பழுதிலாத் துறவும், பீடுறுபண்பும் வீடும் வேண்டா விறலும், திருவருட் சார்புடையோரின் இலக்கணம். அவர்களை இனங்கண்டு கொள்ளும் அடையாளங்கள் அவை. அத்தகு சான்றோர் அச்சத்தினின்றும் நீங்கியவர்கள். அவலத்தினின்றும் விடுபட்டவர்கள். இறைவன் உவந்து குடியேறி நடமாடும் திருக்கோயில்கள் அவர்கள்! அவர்களே சான்றோர்கள். அவர்கள் மண்ணகத்தையும் விண்ணகமாக்கு வார்கள்.

வழிபாடென்பது கைகளால் கும்பிடுவது மட்டுமன்று; மலரிடுதல் மட்டுமன்று; வாழ்க்கை முழுவதுமே சமயமாக இருக்கவேண்டும். ஊனை இடமாகக் கொண்டு உயிர் உயிர்க்கும் பொழுதெல்லாம் அது எந்த சந்தர்ப்பமாயினும் சரி, கொடிய துன்பங்கள் சூழ்ந்தாலும் சரி, அல்லது இன்பமே சூழ்ந்தாலும் சரி இறைத் தன்மையை உயிர்ப்பிப்பதாக இருக்க வேண்டும். அதுவே நிறை நலமிக்க சமய வாழ்க்கை. அத்தகைய வாழ்க்கைதான் பிறவிப் பிணிக்கு மருத்தாக அமையும்; ஞானத்திற்கு உணவாக அமையும். அத்தகைய சமய வாழ்க்கையே துன்பத் தொடக்கில்லாத வானகத்தை வழங்க வல்லது என்பது அப்பரடிகள் கருத்து.

## 22. அகப்பகையை வெல்க

மனித உலகம் இன்பத்தையே விழைகிறது. அதற்காகவே உழைக்கிறது. ஆயினும், இன்பத்தின் சாயல்கூட இன்னும் மனித உலகத்தை அணுகவில்லை. இன்பத்தின் நிழல்களைத்தான் இன்று இன்பமென்று கருதி உலகம் அனுபவித்துக் கொண்டிருக்கிறது. என்ன இருந்தாலும் நிழல், நிழல்தானே! இன்று மனித உலகம், இன்பத்தை ஆரத் துய்க்க முடியாமல் தடையாக இருப்பது புறப்பகையன்று. ஒரு காலத்தில் புறப்பகையும் மனிதனை வருத்தியது. 'சுறுக்' கென்று தைக்கும் புறப்பகையைக் கடிதில் உணர்ந்த மனிதன், புறப்பகைகளை வெற்றி காண்பதில் படிப்படியாக முன்னேறி விட்டான்.

ஆதலால், இன்று அவனை வெள்ளம் வருத்துவதில்லை; தீ, சுடுவதில்லை; கொடிய விலங்குகளும்கூட வருத்துவதில்லை. அவற்றையெல்லாம் முறைப்படுத்தித் தன் ஆற்றல் எல்லைக்குள் உட்படுத்தி அனுபவத்திற்குக் கொண்டு வந்து விட்டான். அஃதோர் அற்புதமான சாதனை. அந்தச் சாதனையின் அருமையைக் குறைத்து மதிப்பிடுவதில் பொருளில்லை. ஆயினும், பலவற்றைப் பழக்கிய அவன், பழகத் தவறிவிட்டான். நாயினை நல்லவிதமாகப் பழக்கினான். ஆனாலும் அவன் பழகத் தவறிவிட்டான். அவனை இன்று வருத்துவது, புறப்பகையல்ல. அகப்பகையே யாகும். அழல் நெருப்பு அவனைச் சுடுவதில்லை. ஆனாலும், அழுக்காற்றுத் தீ அவனைச் சுடுகிறது. அலைகடல், அவனை வருத்துவதில்லை. அதனை அடக்கிக் கலம் செலுத்துகிறான். ஆனாலும் அவா வெள்ளம் அவனை அலைக்கழிக்கிறது.

இந்த அகப்பகையை வென்று, வெற்றி பெற்றாலேயே மனிதன் பகைப் பலத்துக்கு ஆளாகமாட்டான். மனிதனின் வாழ்வில் படைக்கலங்கள் மட்டும் அஞ்சாமைக்கு அடையாளமல்ல. படைக்கலம் தாங்கியவர்களிலும், பஞ்சை

கு. கி. VII. 16.

மனிதர்கள் உண்டு. படைக்கலம் தாங்காமலே கூடச் செருக்களத்தில் நின்ற வீரர்களுண்டு. அப்பரடிகள் படைக்கலம் தாங்கிய வீரரா? வில்லைத் தாங்கினாரா? வாளைத் தாங்கினாரா? இல்லை! அவருடைய நெஞ்சத்தைப் பழுதிலாத் துறவு என்ற அரணில் சேர்த்தார்; அங்கே நிலைநிறுத்தினார்; ஓடும், செம்பொன்னும் ஒக்கவே நோக்கினார். ஒண் திறல் பிறந்தது. இறைவன் திருநாமமாகிய ஐந்தெழுத்தையே நாவினில் படைக்கலமாகக் கொண்டார். கோட்டை கொத்தளங்கள் பெற்றுக் கொடிகட்டி ஆண்ட பல்லவப் பேரரசை வெற்றி கண்டார். "அஞ்சுவது யாதொன்றுமில்லை; அஞ்ச வருவதுமில்லை" என்று அடலேறு என முழங்கினார். இந்தத் தறுதண்மை—பேராண்மை சமய நெறிக்கே உரியது; அருளியலுக்கே உரியது.

ஆனால், ஐயகோ! இன்றைய சமய வரலாறு அச்சத்தின் கொள்கலனாக மாறியிருக்கிறது. பல்லவப் பேரரசனையே கலங்க வைத்த நெறியினைச் சார்ந்தவர்கள் கோட்டைக் காவலர்களைக் கண்டே கலங்குகிறார்கள். இன்று சமயம் வாழ்க்கைக்காக இல்லாமல் வயிற்றுப் பிழைப்புக்காக என்று ஆகிவிட்டது. பயனுக்காக அன்றிப் படாடோபத்துக்காக என்றாகி விட்டது. இன்றைய சமய உலகில் ஈர நெஞ்சினைக் காணோம். ஆதலால், கனிந்த அன்பினையும் காணோம். துறவு இன்மையால் தூய நெஞ்சத்தையும் காணோம். அஞ்சாமை யின்மையால் சைத்தானும் கை வரிசை காட்டுகின்றான்.

ஆதலால் எங்கு நோக்கினும் துன்பம்! பகை! இந்த இருண்ட சூழ்நிலைகளிலிருந்து நம்மை வழிகாட்டிக் காப்பாற்ற வல்ல ஆசிரியர் அப்பரடிகளேயாவார். அப்பரடிகள் மனித உலகத்தின் துன்பம் துடைக்க வந்த மாமணி! இருள் கடிந்து எழுந்த ஞாயிறு! வாழ்க்கைக்கொரு வழித்துணை! அப்பரடிகள், உபதேசங்களால் மட்டுமல்ல, அவர்தம் வாழ்க்கையாலும் நமக்கு வழி காட்டினார். மனம்,

ஒரு தன்மைத்தாயிருக்கக் கூடியதன்று. நெஞ்சமும் கூட அப்படித்தான்! இறைவனைவிட்டு ஒரு நொடி பிரிந்திருந் தாலும் அது கெட்டுவிடும். புறத்தே மண்டித் திணிந்து கிடக்கும் தீமையை உடனே பற்றிக் கொள்ளும் ஆற்றலுடையது. அதனாலன்றோ, "நினையாது ஒருபோதும் இருந்தறியேன்" என்று கூறுகின்றார். மாணிக்கவாசகரும் "இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!" என்று குறிப்பிடுகின்றார். நெஞ்சத்தை, இறைவனை நினைத்துக் கொண்டிருப்பதிலேயே பழக்க வேண்டும். அஃது ஒரு பொழுது மறந்தாலும் உடன், பாசி மூடிக் கொள்ளும். ஆதலால் அப்பரடிகளுடைய நெஞ்சு எப்பொழுதும் - இடையீடில்லாமல் இறைவனுடைய திருவடிகளைத் தடவிக் கொண்டிருந்ததாம். இன்றோ, நம்முடைய கைகள்தான் இறைவனின் திருமேனிகளைத் தீண்டித் தடவுகின்றனவே தவிர, நம்முடைய நெஞ்சு அவனைத் தீண்டித் தடவுவ தில்லை.

உடலுக்கு உயிர்ப்பு உயிர், உயிர்க்கு உயிர்ப்பு இறை, உடல் உயிர் உறவுக்கு இணைப்பு மூச்சுக் காற்று. இந்த இணைப்புக்கு அன்பே காரணம். இங்ஙனம், நெஞ்சத்தை இறைவன் தாளிணைகளுக்குத் தந்து வாழும் வாழ்க்கையே வாழ்க்கையென்றார் அப்பரடிகள். இறைவனை நமக்குப் பெற்றுத் தர வல்லது, நம்மிடத்தில் இருத்தி வைக்கவல்லது அன்பேயாகும். மாணிக்கவாசகர் இந்த அன்பினை 'ஆற்றல் மிக்க அன்பு' என்று கூறுவார். அப்பரடிகள் "ஐயன் ஐயாறனார்க்கு, அன்பலால் பொருளுமில்லை" என்றார். அது போலவே, தொண்டு செய்தலே உயிர்க்கு ஊதியம் என்றார். அப்பரடிகள் காட்டிய இறைவனை விட்டுப் பிரியாத நெஞ்சம், அவர் காட்டிய அன்பும் அவர் காட்டிய தொண்டும் நம்மைச் சேருமாயின் அவலம் வந்து அடையாது. ஈறிலாப்பதங்கள் யாவையும் கடந்த இன்ப அன்பு கிடைக்கும். இம்மையோடன்றி மறுமையும் ஏமாப்புடன் வாழலாம்.

# 23. வாழ்வியல் இயக்கம்

வாழ்க்கை ஒரு நெடிய பயணம். இந்நெடிய பயணத்தில் மனிதன், மா மனிதனாக, அதாவது முழு மனிதனாக வளர்ந்து உருப்பெறுகிறான். மனித வாழ்க்கையின் வளர்ச்சி ஒரு பரிணாம வளர்ச்சி! இந்த வளர்ச்சி தனி மனிதனாக நின்று ஒருவன் சாதித்துக் கொள்ளும் வளர்ச்சி யல்ல! ஒருவனுடைய வாழ்க்கை முழுதான நிறை நல வளர்ச்சியை அடைய, பலர் உதவி தேவை.

ஆன்மா, உருவம் இல்லாதது. ஆனால் அறியும் உணர் வுடையது. ஆயினும் உருவம் இல்லாமையின் காரணமாக அறிவு இருந்தும் இல்லாத நிலை. எனவே, இயக்கம் இல்லை; வளர்ச்சி இல்லை. அறிவு நலம் சார்ந்த ஆன்மா, அறியாமை யோடு பிணைப்புண்டு கிடக்கிறது. இயக்கமும் செயற்பாடும் இல்லையானால் அறிவுநலம் இல்லை; வளர்ச்சி இல்லை. உயிர் இருந்தும் இல்லாதது போல்தான். கோடையில் நீர்வற்றிக் கிடக்கும் குளத்தினால் யாது பயன்? கோடைக் காலத்தில் இலைகள் உதிர்ந்த நிலையில் மொட்டையாக நிற்கும் மரத்தினால் என்ன பயன்? இந்த நிலையில் திருவருளின் கண்ணோட்டம் உயிர்பால் வீழ்கிறது. ஒரு தலைமகன் வழி, உயிரின் இயக்கம் தொடங்குகிறது; வாழ்வு தொடர்கிறது.

ஆம்! ஒவ்வொருவர் வாழ்விலும் கிடைத்த முதல் துணை தந்தை; அப்பன்தான்! உயிர், அப்பனிடம் ஓராண்டு உற்றிருந்து ஜவ்வரிசி அளவு வடிவமுள்ள ஓர் உருப்பெற்றுப் பயணத்தைத் தொடங்கி, தாயின் கருப்பையைச் சென்று சேர்கிறது. முதற்பயணதில் கிடைத்த ஓர் உரு, அவ்வளவு தான்! ஆனால் இயக்கத்திற்குரிய புலன்கள், பொறிகள் கிடைக்கவில்லை. ஆம்! தாயின் கருப்பையே உயிருக்கு முழு வடிவம் கொடுக்கிறது. ஆகா! என்ன அற்புதம்! ஜவ்வரிசிப் பிரமாணமுள்ளதா யிருந்த விந்துவை முதலாகக் கொண்டு

என் தாய் தனது வயிற்றில் அற்புதமான மூளையும் இதயமும் அழகும் ஆற்றலும் வாய்ந்த ஓர் உருவமாக என்னை உருவாக்கித் தந்த அற்புதக் கொடைக்கு ஈடு ஏது? ஆதலால் உயிர் சந்தித்த-பெற்ற இரண்டாவது துணை தாய்! உயிர் உடம்பெடுத்துப் பிறந்தாயிற்று! குழந்தை என்ற பெயரில் சிலகாலம் படுத்து, தவழ்ந்து, உட்கார்ந்து, தள்ளாடி நடந்து, விழுந்து எழுந்து நடந்து பையனாயிற்று! அப்பனும் அம்மையும் எப்போதும் உடன் இருப்பதில்லை; இருக்கவும் முடிவதில்லை.

இப்போது அவர்கள் அடுத்த உயிரின் பயணத்தை ஆரம்பித்து வைக்கும் பணியில் ஈடுபட்டு விட்டனர்; அப்படியில்லாது போனாலும் அவர்கள் மூத்த தலைமுறையினர். இளமை நலம் சார்ந்த பையனுடைய உணர்வுகளை அவர்களால் புரிந்து கொள்ள முடிவதில்லை. சிலர் புரிந்து கொள்ளவும் முயற்சி செய்வதில்லை. "பையன் நேற்று தோன்றினான், நாம் மூத்தோர்" என்ற எண்ணம் அவர் களுக்கு! இது ஒருவகை நோய்! இதனை தலைமுறை இடைவெளி என்கின்றனர்.

இந்தச் சூழ்நிலையில் தனக்குச் சில ஆண்டுக்கு முன் பயணத்தைத் தொடங்கிய அண்ணன் துணையாக அமைகின்றான். அவன் ஆவல்களை, ஆர்வங்களைப் புரிந்து கொள்கிறான்; உடனுக்குடன் அடையத் துணையாய் இருந்து உதவி செய்கிறான். உணர்வில் ஒன்றாகின்றான், உருவாகி வாழ்கின்றான்; வாழ்விக்கின்றான். ஆயினும் என்ன செய்ய? வாழ்க்கையென்பது நாம் பெற்றதை மற்றவர்களும் பெறத் துணை செய்வதுதானே! அதனால் ஒவ்வொருவருடைய வாழ்வும் பிறிதோர் உயிரின் பயணத்திற்குத் துணையாய் அமைதல் இயற்கை; தவிர்க்க முடியாத கடமை! அத்தகைய அமைவில் பிறிதோர் உயிர் பயணத்திற்குத் துணை செய்யத் தக்க உற்பத்திக் கருவிகளுடன் ஒருத்தி பிறந்தாள்; வளர்ந்தாள். குறிப்பிட்ட இளமைப் பருவம் மீதூரத் தொடங்கிய நிலையில்

அண்ணனிடம் கொண்டுள்ள உறவு அமைதி பெறுவதில்லை. பாசம், அன்பாக மாறி வளர்ந்தது. இப்போது காதல் பருவம். காதல் பருவத்தில் அண்ணனிடமிருந்த—ஐயனிடமிருந்த உறவு நெகிழும் நிலையில் ஒருத்தியைத் தேடுகிறது.

ஒருத்தி என்ன கடைவீதியில் கிடைப்பாளா? அப்படி கிடைத்தாலும் வாழ்க்கைத் துணைநலமாக அமைவாளா? ஆதலால் இவன் பிறந்து வளரத் தொடங்கிய காலத்திலேயே இவனுக்காக ஒரு பெண்ணை ஈன்றெடுத்து வளர்த்து மனைவியாகத் தர முன்வரும் மாமனார், மாமியார் சாதாரண பணியையா செய்கிறார்கள்! இல்லை. அவர்கள் செய்வது மிகப் பெரிய பணி; உதவி! அதனாலேயே "அன்புடைய மாமன், மாமி" என் அழைக்கப்படுகிறார்கள்! ஆம்! எதிர்வரும் தேவையை நெஞ்சில் நினைத்து உதவி செய்வது ஒரு பெரிய அறம். மாப்பிள்ளைகளுக்கு வாய்க்கும் அன்புடைய மாமன், மாமி போல் பெண்கள் அனைவருக்கும் வாய்த்து விட்டால் இந்த உலகம் ஒரு சொர்க்கம்தானே! ஐயனை—அண்ணனைத் தொடர்ந்து அன்புடைய மாமன்; மாமி!

அடுத்து, காதல் மனைவி. அனைத்திலும் தனக்கு ஒப்புடைய தலைவி! இவன் வாழ்க்கைக்கு ஒப்புதல் அளித்து உடன் பயணம் செய்யும் தலைவி—மனைவி! வாழ்க்கைத் துணை நலம்! வேராக நின்று தாங்கி வளமூட்டி வாழ் வளிப்பவள்.

இதுவரை வந்தமைந்த துணைகள் உயிருள்ளன! இப்போது துணையாய் வந்தமைவது கருவியாக அமையும் பொருள்! பொருள், வாழ்க்கையின் தேவை! பொருள் இல்லார்க்கு இவ்வுலகமே இல்லை! அந்தப் பொருளும் உழைப்பால் வந்த பொருளாதலால் ஒண்பொருளாயிற்று! போதுமா? வாழ்க்கை இயக்கமாகி வளர்ந்து வருகிறது. ஆனால் முழுமையான நிறை நலம் சார்ந்த நிலை இன்னமும்

வரவில்லை. ஆனால் இந்த நிலையையே முழுமை நிலை என்று பலர் எண்ணுகின்றனர். இது தவறு.

அடுத்த நிலை, குலம் சார்ந்து வாழ்தல்! அதாவது, குல மரபு பேணிக் காத்து வளர்த்தல். இங்குக் குலம் என்று கருதப்பெறுவது சாதியன்று. குலம் என்பது ஒழுக்கம், பண்பு சார்ந்த மரபு! அதாவது வழி வாயாக ஒரு சிறந்த நற்பண்பு மீதூர்ந்து வருதல்.

குலம் சுரக்கும் ஒழுக்கம் குடிகட்கெல்லாம்

என்றார் கம்பர்.

இலன்என்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே உள

என்பது திருக்குறள். ஆதலால்; தான் பிறந்த குலம் சார்ந்த சிலரொடு உறவு நலம் காத்தல், பண்பு நலம் சார்ந்த வாழ்வியலுக்குத் தேவை. குலம் பொருந்தி வாழ்தலுக்கும் அடுத்த நிலை, சுற்றம் சூழ வாழ்தல்! சுற்றம் சூழ வாழ்தல் அன்பினை வளர்க்கும்; தன்னம்பிக்கையைத் தரும்; பாதுகாப்பு உணர்வு மேலிடும். கோட்டை, கொத்தளங்கள் தரும் பாதுகாப்பிலும், சுற்றம் தரும் பாதுகாப்பு மிகுதி. சிறந்த சுற்றம் வாழ்விற்கு தூண்டுகோல், நெம்புகோல்! சுற்றம் தாங்குகோலாக வளர்ந்து விளங்கும். குற்றம் குறைகளை மறந்து சுற்றம் பேணுதல், வாழ்க்கை வளரத்தேவை. வாழ்க்கை வளர்ச்சியின் முழுநிலை ஊரில் நிறைவு பெறுகிறது.

ஆம்! ஊரோடு சார்ந்து ஊரவர் கேண்மை பேணி வாழ்தல் வேண்டும். ஊரை வளர்த்து வாழ்தல் வேண்டும். ஊர் எது? ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர் பலர் வாழ்வது ஊர். ஊர் பழித்ததாலும் அதனை அணியெனக் கொண்டொழுகி ஊராகி வாழ்தலே வாழ்வின் நிறைவு. இதுவரையில் நலஞ்சார்ந்த வாழ்நிலை. நிறை நலம்

என்பது வேறு. அஃது உலகந்தழீஇயது. இந்தப் படிமுறை வளர்ச்சியில் ஓர் ஆன்மா வளர்தலை வாழ்வியலாக வளர்தலை—இயக்கமாகி வளர்தலை அப்பரடிகள் அழகுற விளக்குகின்றார்.

வாழ்வியல் பயணம் முடியவில்லை; தொடர்கிறது. தொடர்கிறது என்று கூறுவது தவறு. உயிர், தன்னை உற்று நோக்குகிறது. இல்லை, உற்று நோக்க ஆன்மாவை ஆற்றுப்படுத்துகிறது. சிவம்-கடவுள்! ஆம்! உற்று நோக்கியதன் பயன்? ஆன்மா மெள்ளத் தற்சார்பு நிலை அடைந்து வந்துள்ளது. ஆற்றலில் தற்சார்பு வரவேற்கத் தக்கது. ஆனால் வாழ்நிலையில் தன்னலம் வளர்ந்து விடக்கூடாது. ஐயனிடமிருந்து அன்பு தடம் புரள்கிறது. வீட்டின் இடையில் சுவர் தலைகாட்டுகிறது. காதல் மனைவி வேலைக்காரி யாகிறாள்! அந்நியமாகிறாள்! அவள், தனக்குரிய கடமை களைச் செய்யும் இயந்திரம்! அவளுக்கு இவன் செய்ய வேண்டிய கடமைகள் இல்லை என்ற நிலை! இந்த நிலை, முறை திறம்பிய வாழ்நிலை! துய்க்கும் நெறியில் துறவு சார்ந்தாலே துய்த்தல் சிறப்பாக அமையும். துறவும், துய்த்தலும் இரட்டை நாடிகள். “பிடியூட்டிப் பின்னுண்ணும் களிறு” என்பதறிக. இது துறவும் துய்த்தலும் ஒருங்கிணைந்த வாழ்வு நிலை. அப்போதுதான் அன்பு வளரும்; அறம் வளரும்; துறவு வாழ்க்கை தனி வாழ்க்கையல்ல. துறவும் துய்த்தலும் கலந்ததே நிறை நலம் சான்ற வாழ்க்கை! அப்போதுதான் உழைப்பு உணவாகிறது. கூடி உணவு உண்ணும் சுற்றம் சார்ந்த வாழ்வு மலர்கிறது. உழைப்பின் பயன் உலகை உண்பிக்கப் பயன்படுகிறது. இதுவே அறம் சார்ந்த எருதுவின் வாழ்க்கை முறை! எருது மீது எம்பெருமான்! உழைத்துப் பலபொருள் படைத்து அளித்து வாழ்வித்து வாழ்தல் எருதுவின் வாழ்க்கை! இத்தகையோர் இதயத்தில்தான் எம்பெருமான் எழுந்தருள்கின்றான்! இதயத்தை உறைவிடமாகக் கொள்கின்றான்; ஊர்தியாகக்

கொள்கின்றான்! வாழ்க்கை நிறைநலம் எய்திய நிலை இதுவே!

*அப்பன்நீ அம்மைநீ ஐயனும்நீ*
*அன்புடைய மாமனும் மாமியும்நீ*
*ஒப்புடைய மாதரும் ஒண்பொரு ளும்நீ*
*ஒருகுலம் சுற்றம் ஒருரும்நீ*
*துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய்நீ*
*துணையாயென் நெஞ்சந் துறப்பிப்பாய்நீ*
*இப்பொன்நீ இம்மணிநீ இம்முத்துநீ*
*இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன்நீயே"*

— திருநாவுக்கரசு சுவாமிகள்

## 24. அருள் நெறி வாழ்க்கை

நமது தாய்மொழியில் நிறைய இலக்கியங்கள் உண்டு. புறத்திணை இலக்கியங்களும் உண்டு; அகத்திணை இலக்கி யங்களும் உண்டு. இந்த இரண்டையும் கடந்து வளர்ந்த அருள்திணை இலக்கியங்களாகிய பக்தி இலக்கியங்களும் உண்டு. கடவுள் நம்பிக்கை உடையவராக இருப்பதும் அருள்நெறி வாழ்க்கை வாழ்வதும் எளியதன்று. விஞ்ஞா னிக்குத் தேவையான ஆற்றல்கள் அனைத்தும் அவ்வாற்றல் களோடு சீலமாகிய தவமும் அருள் வாழ்க்கைக்குத் தேவை. விஞ்ஞானத்தின் படைப்புக்கள் உலகியலை வளப்படுத்த மாறாது பயன்படுவன போலவே, மனித இயலில் உள்ளங்களை வளப்படுத்த மாறாது பயன்பட வல்லது மெய்ஞானம். அதாவது, பத்திமை வாழ்வு! ஆயினும், இன்று பத்திமை வாழ்வு அங்ஙனம் பயன்படாமையின் காரணமாக அதன் மீது ஐயங்கள் எழுந்துள்ளன. ஏன்? எதிர்க்களம் ஒன்றே தோன்றி வளர்ந்து வருகிறது.

அருளியல் வாழ்க்கை ஆற்றல் நிறைந்த வாழ்க்கை; அறிவறிந்த ஆள்வினையுடைய வாழ்க்கை; அன்பில் தழைத்த

வாழ்க்கை. அச்சத்தை உதறிய வாழ்க்கை; தனி உணர்வு செத்த வாழ்க்கை; பொதுவில் பூத்த வாழ்க்கை. இந்த இலக்கணத்தோடு நமது அருளியல் வாழ்க்கை அமையுமானால் மறுப்பார் யார்? கதிரவன் உலாப் போதலை மறுப்பாரும் உண்டோ? வீசு தென்றலை மறுப்பாரும் உண்டோ? இறைவனிருப்பிடத்தை உலகத்திற்கு அப்பரடிகள் அறிமுகப்படுத்துகின்றார். கோட்டையென விளங்கும் கோயிலைக் காட்டியா? அழி பசிக்குப் பயன்படும் அப்பத்தைக் காட்டியா? இல்லை! இல்லை! மாசில் வீணையைக் காட்டுகிறார்! இசைக்குரிய இசைவிக்கும் ஆற்றல் வேறு யாருக்கு உண்டு? கட களிறும் அடங்கவல்ல இசை! மாலையில், செவ்வானத்தில் திங்கள்! வீசுதென்றல்! அடைந்து கிடக்க, வீடு கட்டிய ஒருவன் அதனைக் கடந்து வெளியே வருகிறான்! காவலோடு வெளியே உலாப் போகிறான். ஏன்? வீசு தென்றலை அனுபவிக்க! இன்பத்திற்கு எல்லையேயான இளவெயிலை வஞ்சனையின்றி காழ்ப்புக் கலப்பின்றி — கலகப் புகைச்சலின்றி அனுபவிக்க! ஆகா, என்ன இனிமை! வண்டுகள் பாடுகின்றன! தண்ணீர் தங்கிய பொய்கை! அதன் எல்லையில் இனிய காற்று! தண்ணளி தழுவிய காற்று! இத்தகு இன்ப மயமானதாக இறையின் திருவடிகளைக் காட்டுகின்றார் அப்பர் பெருமான்.

*மாசில் வீணையும் மாலை மதியமும்*
*வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்*
*மூசு வண்டறை பொய்கையும் போன்றதே*
*ஈசன் எந்தை இணையடி நீழலே!*

என்பது அப்பர் திருப்பாடல்.

இன்றைய சமுதாயத்தில் அருளியல் வாழ்க்கை இத்தகைய இன்பம் தழுவியதாக இருக்கிறதா? இன்று சமய வடிவம் தெரிகிறது; ஆனால் சமய வாழ்க்கையைக் காணோம். ஆரவாரம் கேட்கிறது; ஆனால் அமைதியைக்

காணோம். தண்ணளியைக் காணோம். வேற்றுமையைக் காண்கிறோம். இந்த அவல நிலைமை எங்கிருக்கிறது. எங்கு இல்லை என்று சொல்ல முடியாது; எங்கும் பரவிக் கிடக்கிறது.

சமயம், ஒரு தத்துவம் மட்டுமல்ல. அஃதொரு வாழ்க்கை முறை. கடவுள், வாழ்த்துப் பொருளல்ல; வாழ்வுப் பொருள்; சமயம் உருவங்களோடு நிற்பதன்று. உருவங்களைக் கடந்த உணர்வுகளால், உணர்வுகளையும் கடந்த இன்ப அன்பால் மனித மனங்கள் மலரினும் சிறந்து மணம் பரப்ப வேண்டும். கனியினும் சிறந்த கனிவு பெற வேண்டும்; தீங்கரும்பினும் சிறந்த சுவை பெற வேண்டும். அப்பொழுதே சமய வாழ்வு முழுமை பெறுகிறது. இறைவன் தீதற்றோர் திருவுள்ளங்களில் எழுந்தருளவே விரும்புகின்றான். காஞ்சி மன்னன் கட்டிய பெருங்கோயிலை வறிதே விட்டு விட்டு, உள்ளத்தால் தூயதாகிய பூசலார் மனத்தைத் திருக்கோயி லாகக் கொண்டு எழுந்தருளினான். ஆதலால் உள்ளத்தைக் கோயிலாக்குங்கள்! அதனை அன்பினால் மெழுக்கிடுங்கள்! இறைவனை எழுந்தருளச் செய்யுங்கள்! பண்டு கண்ணப்பன் வழங்கிய அன்பினைப் போன்று இறைவனுக்கு வழங்குங்கள்! அவனுடைய தண்ணருள் சுரக்கும்; புன்புலால் யாக்கை புனிதமாகும். உங்கள் புலன்களில் இறைவன் தங்கித் திளைப்பான்! திருவருள் சுரப்பான். இன்பமே சூழும். எல்லோரும் வாழ்க!

## 25. அப்பரடிகளின் தொண்டு நெறி!

மனித உலக வாழ்க்கையின் நியதி வளர்தல், வளர்தல், வளர்தல்! இவ்வளர்ச்சிக்குத் தடை, பழமைகளின் மீதுள்ள பிடிப்பின் காரணமாகச் சிந்தனையில், செயலில் தேங்கிக் கிடத்தல். தேக்கத்தை மறுப்பதற்காகவும், மறைப்பதற்காகவும் உழுதசால் வழி உழுதல் செய்வர். உழுதசால் வழி உழும்போது பொய்த் தோற்றமான ஓர் இயக்கம் இருக்கும்.

ஆனால், உண்மையில் இயக்கம் இருக்காது. ஆங்கு உயிர்ப்புள்ள பழமையும் இருக்காது; புதுமையும் இருக்காது. ஏன்? உயிர்ப்புள்ள பழமையினால் புதுமையைத் தோற்று விக்காதிருக்க முடியாது.

எப்படி ஒரு மனிதன் செத்துப் பிணமாகிய பிறகு உயிர்ப்பில்லாது போகிறானோ, உற்பத்திக்குப் பயன்படாது போகிறானோ அதுபோலவேதான் ஒரு தத்துவம், ஒரு கொள்கை உயிர்ப்பில்லாத நிலையில் முடக்கப்படுமானால் வளர்ச்சிக்குத்த துணை செய்யாது. ஆங்கு முன்னைப் பழமையுமில்லை. பின்னைப் புதுமையுமில்லை. இங்ஙனம் சமய உலகம் தேங்கிக் கிடப்பதை எதிர்த்தார் அப்பரடிகள். அவர் சமய தத்துவங்களை உயிர்ப்புடன் ஆய்வு செய்த தால்தான் சமணத்திற்குச் சென்றார்; பின் சைவத்ததிற்கு வந்தார்; பின் இரண்டும் கடந்த பொதுமை நிலைக்கு வருகிறார்.

*உழுதசால்வழி யேஉழு வான்பொருட்(டு)*
*இழுதை நெஞ்சம்இது என்படு கின்றதே!*

(அப்பரடிகள் 5–891)

என்று இடித்துக்காட்டி 'எல்லா உலகமும் ஆனாய் நீயே!' என்ற பொதுமை நெறியையும் காட்டுகின்றார். இறைநெறி, 'இது', 'அது' என்ற சண்டைகளுக்கு இரையாகக் கூடாது. எல்லாம் வல்ல இறைவன் 'இதற்குள்ளும்' 'அதற்குள்ளும்' மட்டும்தான் இருக்கின்றான் என்றால் இறைவனுடைய பரந்துபட்ட நிலை என்னாவது?

*இவர்தேவர் அவர்தேவர் என்று சொல்லி*
*இரண்டாட்டாது ஒழிந்துஈசன் திறமேபேணி*

(அப்பரடிகள் 6,613)

என்பது அப்பரடிகள் வாக்கு. ஈசன் உயிர்களின் தலைவன் என்பது பொருள். சிறுமதிபடைத்த மனிதர்கள், உயிர்க்குலத்

தினரிடையில் வேறுபாடுகளை உண்டாக்கினர்; வேலிகளை அமைத்தனர். சின்னப் புத்தியின் காரணமாகத் தோன்றிய இந்த வேற்றுமைகளை இறைவன் பாற்படுத்தியும் கதைகள் கட்டத் தொடங்கி விட்டனர். அப்பரடிகள் இத்தகைய சிறுமைத்தனமான வேறுபாடுகளை முற்றாகக் கடிந்தவர். அவர் ஒரு பொதுமை நெறியாளர்.

*சாத்திரம் பல பேசும் சழக்கர்காள்*
*கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர்?*

என்ற அவரது வினாவே இதற்குச் சான்று.

இயற்கை உலகு, மானிட சாதிக்கு உணவாக, மருத்துவ மாக, உணர்வளிக்கும் ஆசிரியனாக, எல்லை கடந்த இன்ப அன்பினை அளிக்கும் இறையாக விளங்கி வாழ்வளிக்கிறது. இயற்கையோடியைந்த வாழ்வு யாண்டும் இல்லை. எங்கும் உயிர்ப்பில்லாத செயற்கை உலகு ஊடாடிக் கிடக்கிறது.

மனிதன் இயற்கையாகச் சிந்திப்பதில்லை. அவன் சார்பு வழிச் சிக்கியும், தன்னல வயப்பட்டும் சிந்திக்கிறான். அதனால் அச்சிந்தனையில் உயிர்ப்பில்லை; கவர்ச்சியில்லை. மனிதன் இயற்கையில் நுகர்ந்து வாழப் பொருள் ஈட்டுவதில்லை! துய்த்தும் மகிழ்வதில்லை; உயிர்ப்போடு உலா வந்து உலகத்தை வாழ்விக்கும் செல்வத்தைச் சிறைப் படுத்துகிறான்.

ஒருவன் கொள்ளைக்காரனாக மாறுகிறான். மற்றவன் கள்வனாக மாறுகிறான். இம்மறைகேடு, செல்வம் ஈட்டுதலில். இயற்கையாக வேண்டிய உழைப்பாற்றலைச் செலுத்தா மையும் உழைப்பின் விலையைக் கொடுக்காமல் பொருள் களின் மீது ஆசைப்படுதலும் தோன்றியவுடனேயே களவும் காவலும் தோன்றிவிட்டன. இஃது இயற்கை நெறி பிறழ்ந்த வாழ்வு. மனிதர்களிடையில் இன்று நிலவும் உறவுகள் கூட இயற்கையில் அமைந்தவையல்ல. மனித உறவுகளிடையே இன்று பேசப் பெறும் அன்பு, காதல் ஆகியவற்றில் கூட,

இயற்கையில் அமைந்திருப்பது மிகமிகச் சிறிய விழுக்காடே யாகும்.

மனித நிலையில் இன்றைக்கு அன்பு, தன்னயப்பை நிறைவேற்றிக் கொள்வதற்குரிய வாயிலாக அமைந்துள்ளதே தவிர, அது தியாகமாக இல்லை. மனித குல நாகரிகத்தின் தாயகமாக, தொட்டிலாக விளங்கும் காதல் வாழ்க்கை கூட இன்று நிர்வாணமான நயப்புகளுக்கு இரையாகிவிட்டது. எல்லாவற்றிற்கும் மேலாக உலகைத் தியாகத்தில் இயக்கு வதற்காக அமைந்த துறவு நெறியும் கூட, இன்று நிறுவனங் களாகி வழக்கமான செய்முறைகளுக்கு இரையாக்கப்பட்டு, நெகிழ்ந்து கொடுக்காத இறுக்கமான நடைமுறையாகி விட்டது. இதனை, அப்பரடிகள் உணர்ந்து ‘அன்பலால் பொருளுமில்லை ஐயன் ஐயாறனார்க்கே’ என்று ஆற்றுப் படுத்துகின்றார். அவர் இறையை, வாச மலரினும், மூரி முழங்கொலி நீரிலும் காணத் தூண்டுகிறார். வழிபாடு இயற்றும்படி வழி நடத்துகிறார். அப்பரடிகள் நடையறாப் பெருந்துறவை நாட்டுக்கு அறிமுகப்படுத்துகின்றார்.

இங்ஙனம் விளங்கிய அப்பரடிகள், தமிழக வரலாற்றின் ஒளிவிளக்கு. அப்பரடிகள் மானிட சாதியின் அடிமைத் தனத்தை வெறுத்தவர்; எதிர்த்துப் போராடியவர்; மனித உரிமைகளைக் காப்பதற்காக ஏழாம் நூற்றாண்டிலேயே முடியாட்சியை எதிர்த்துப் போராடியவர். அந்தப் போராட்டத்தின் காரணமாகப் பல்வேறு இன்னல்களை ஏற்றுக் கொண்டவர். இனவழியிலும் மொழிவழியிலும் பொதுமைக்கு இடையூறில்லாத தனித்தன்மையைப் போற்றிக் காத்தவர். ‘வடமொழியும் தென் தமிழும்...ஆனவன் காண்’ என்றும், ‘ஆரியன் கண்டாய்; தமிழன் கண்டாய்’ என்றும் அருளியவர். சிறந்த ஞானியாகத் திகழ்ந்த அப்பரடிகள், உடல் உழைப்பிற்கு, உரிய ஏற்றம் தந்தவர்.

தொண்டே வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்டவர். 'தொண்டலால் துணையுமில்லை' என்று உலகறியக் கூறியவர். திருக்கோயில் தொண்டு முதல், தெருவீதி பெருக்கும் தொண்டு வரையில் செய்தவர். சேக்கிழார், 'பார்வாழத் திருவீதிப் பணி செய்வார்' என்று அப்பரடிகளைப் பாராட்டுகிறார். அப்பரடிகள் தம் "கைத் திருத்தொண்டின்" சிறப்பின் காரணமாக 'வாசியிலாக் காசு' பெற்றவர். அப்பரடிகளின் வாழ்க்கை அன்பில் பழுத்த தவ வாழ்க்கை. அப்பரடிகள் அருளிச் செய்த பாடல்கள் அருளமுதப் பாடல்கள். அவர் தொண்டு ஞாலமுய்ய, நாமுய்யப் பயன்பட்டது; இன்றும் பயன்படவேண்டும்.

அப்பரடிகளுக்கு நாம் செய்யும் வழிபாடு அவர்தம் தொண்டு நெறி நிற்றலேயாம். திருநாவுக்கரசு வளர் திருத்தொண்டின் நெறி வாழ்க! வளர்க! உலகெலாம் மகிழ்க!

## 26. அப்பரடிகளின் அருள்நெறி

தமிழகம், வளர்ந்த நாகரிக மரபுகளைக் கொண்டு புகழ் பூத்ததாகும். மொழியியல், வாழ்வியல், கலையியல், சமய வியல் அனைத்திலும் தமிழகம் தனக்கென்று ஒரு மரபும், தனி நடையும் கொண்டு விளங்கிய பெருமையுடையது. காலந்தோறும் தமிழ் மொழியையும் தமிழ்நெறி மரபுகளையும் வளர்த்துப் பாதுகாத்த வரலாற்றுப் பெருமை தமிழினத்திற்கு உண்டு.

ஆயினும் கி.பி. 2 ஆம் நூற்றாண்டுக்குப் பின் தமிழ் மொழி வரலாறு– தமிழின் ஒருமைப்பாடு, சமயநெறி ஆகியன வற்றைப் பேணுவதிலும் பாதுகாப்பதிலும் ஒரு தொய்வு ஏற்பட்டது உண்மை. செந்தமிழ் வழக்கில் அயல் வழக்கு புல்லுருவி வடிவத்தில் ஊடுருவியமையால் தமிழ் மக்கள் ஏமாந்தனர். ஏமாற்ற வந்தவர்கள் ஏற்றங் கொண்டனர். தமிழ் மொழியில் அயல் மொழிச் சொற்களில் ஊடுருவல்!

திருத்தலங்களுக்கிருந்த தமிழ்ப் பெயர்களில் மாற்றம்! திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவன் - இறைவியின் தமிழ்ப் பெயர்கள் மாற்றம்! வரலாற்று அடிப் படையில் புகழ்பெற்ற திருத்தலங்களுக்குப் பொருந்தாப் புராணங்கள் செய்து, புகழ் மங்கச் செய்தல்! கொள்கை - கோட்பாடுகளில் கலப்படம்! எல்லாம் செய்யப் பட்டன! தன்னையும், கடவுளையுமே நம்பும் தமிழர்கள் சிறு தெய்வங்களை நம்பத் தலைப்பட்டனர்; நாளையும் கோளையும் கூட நம்பி வழிபடத் தலைப்பட்டு விட்டனர். தமிழர்களின் அறிவு கெட்டது; ஆள்வினைத்திறன் சுருங்கிற்று. வாழப் பிறந்தவர்கள் பிழைப்பு நடத்தத் தலைப்பட்டனர்.

இந்தப் படுவீழ்ச்சியிலிருந்து தமிழகத்தை மீட்க ஏழாம் நூற்றாண்டில் ஒரு பேரொளி எழுந்தது; நாடு முழுவதும் ஒளி வீசியது; கண்மூடித்தனமான மூடப்பழக்கங்களைச் சுட்டெரித்தது; ஞானத்தைப் பரப்பியது. தமிழர்கள் எழுச்சி பெற்றனர்; ஏற்றம் பெற்றனர். அந்தப் பேரொளி எது?

அந்தப் பேரொளிதான் ஞாலமெலாம் 'அப்பரடிகள்' என்று புகழ்ந்து போற்றும் தமிழ்த் தலைவர். அப்பரடிகள் அயல் வழக்கின் காரணமாக வந்து மண்டிக் கிடந்த தீமைகளைச் சாடினார்; மக்களுக்கு அறிவு விளக்கம் தந்தார்.

## முடியாட்சியை எதிர்த்த முதல்வர்

உலகம் முழுவதும் "அரசனின் ஆணை ஆண்டவனின் ஆணை" என்ற கொள்கை இருந்தபொழுது தமிழ்நாட்டில் மக்களின் அடிப்படைச் சுதந்திரத்திற்கு முரணாக இருந்து முடியாட்சியை, எதிர்த்துப் புரட்சி செய்த முதல் தலைவர் அப்பரடிகள்.

*நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்*
*நரகத்தி லிடர்ப்படோம் நடலை யல்லோம்*
*ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்*
*இன்பமே யெந்நாளுந் துன்பமில்லை*

*தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான*
*சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்*
*கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்*
*கொய்ம்மலர்ச்சே வடிஇணையே குறுகி னோமே.*

(ஆறாம் திருமுறை. 961)

*என்று முடியாட்சியை எதிர்த்துப் புரட்சி செய்த தலைவர் அப்பரடிகள். அப்பரடிகள் வாழ்ந்த காலம் ஏழாம் நூற்றாண்டு.*

*ஆனால், அன்று (ஏழாம் நூற்றாண்டில்) அப்பரடிகள் எண்ணிச் சொன்னவைகள், இன்று சீர்த்திருத்தக் கருத்துக் களாகப் போற்றப்படுகின்றன. தமிழுலகில் முதன் முதலில் சமுதாயச் சீர்திருத்தத்தைச் சிந்தித்துக் கூறிய முதல் புரட்சித் தலைவர், ஞானத் தலைவர் அப்பரடிகள்.*

## சமுதாயச் சீர்த்திருத்தம்

*தமிழ் மரபில் குலம் மட்டும் உண்டு. குலம் என்பது வழி வழி தலைமுறை சார்ந்த நெறி மரபினைச் சார்ந்தது. இதனை,*

*இலமென்னும் எவ்வம் உரையாமை ஈதல்*
*குலனுடையான் கண்ணே உள* – திருக்குறள் 223

*என்ற திருக்குறளாலும் அறிக. பிறப்பினால் அமையும் சாதிக் கொடுமைகள் தமிழகத்தில் இருந்ததில்லை. அயல் வழக்கின் நுழைவாலும் நிலபிரபுத்துவ சமுதாய அமைப்பின் காரண மாகவும் பிறப்பினால் சாதி வேற்றுமை, தீண்டாமை முதலியன வந்து புகுந்தன. இந்தச் சாதி வேற்றுமைகளை அப்பரடிகள் வன்மையாக மறுகின்றார்; கண்டிக்கின்றார்.*

*சாத்தி ரம்பல பேசும் சழக்கர்காள்*
*கோத்தி ரமுங்குல மும்கொண் டென்செய்வீர்!*

தி. 5. VII. 17.

*பாத்தி ரம்சிவ மென்று பணிதிரேல்*
*மாத்தி ரைக்குள் அருளுமாற் பேறரே*

என்று சாடுகின்றார். மேலும்,

*சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து*
*தரணியொடு வானாளத் தருவ ரேனும்*
*மங்குவார் அவர்செல்வம் மதிப்போ மல்லோம்*
*மாதேவர்க் கேகாந்த ரல்ல ராகில்*
*அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோ யராய்*
*ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்*
*கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில்*
*அவர்கண்டீர் நாம்வணங்கும் கடவு ளாரே!*

என்றும் அப்பரடிகள் பாடுகின்றார்.

இதையே பாரதியும்,

*சூத்திர னுக்கொரு நீதி–தண்டச்*
*சோறுண்ணும் பார்ப்புக்கு வேறொரு நீதி*
*சாத்திரம் சொல்லிடு மாயின்–அது*
*சாத்திரம் அன்று சதியென்று கண்டோம்*

என்று பாடுகின்றார்.

இந்தப் பாடல்களின் கோட்பாடுகளை இப்போதும் ஏற்காத இதயம் படைத்த, மருட்டுகின்ற மதத் தலைவர்கள் நமது நாட்டில் உள்ளனர். ஐயகோ! இன்றைய தமிழகம் யாரோ ஒரு பாவி நுழைத்த சாதிப் புன்மைகளால் சீரழிந்து வருகிறது. இந்தப் பொல்லாச் சாதித் தீமையை நீக்கினால் ஒழியத் தமிழகம் மீளாது. தமிழினமே ஒருமைப்பாடு குலைந்து சிதறுண்டு போகும். தமிழினத்தில் நுழைத்துள்ள சாதி வேற்றுமைகளை முற்றாக அகற்றத் தக்க வகையில் இட ஒதுக்கீட்டுக் கொள்கை, நடைமுறை விதிகளை மறு ஆய்வு செய்ய வேண்டும். திருக்கோயில் வழிபாட்டு முறையிலும்

கருவறையில் உள்ள பெருமானைப் பத்தராவார் அனைவரும் பூவும் புனலும் சொரிந்து வழிபடும் வாய்ப்பு, வழங்கப் பெறுதல் வேண்டும். இந்த உரிமை திருமுறைக் காலத்திலும் அதற்கு முன்பும் இருந்தது.

அப்பரடிகள்,

*மாதர்ப் பிறைக்கண்ணி யானை*
*மலையான் மகளொடும் பாடிப்*
*போதொடு நீர்சுமந் தேத்திப்*
*புகுவா ரவர்பின் புகுவேன்*
*யாதும் சுவடு படாமல்*
*ஐயா றடைகின்ற போது*
*காதல் மடப்பிடி யோடுங்*
*களிறு வருவன கண்டேன்*
*கண்டே னவர்திருப் பாதங்*
*கண்டறி யாதன கண்டேன்.* (4ஆம் திருமுறை)

என்று ஓதும் பாடலின் மூலம் பத்தராவார் ஒவ்வொருவரும் கருவறையில் எழுந்தருளியுள்ள பெருமானுக்குப் புனலும் பூவும் சொரிந்து வழிப்பட்டுள்ளனர் என்பதை அறிகின் றோம். இன்றும் வடபுலத்தில் இந்த மரபு இருக்கிறது. ஆனால், தமிழகத்தில் இந்த உரிமை இல்லை. அர்ச்சகர் சாதியை மாற்றும் முயற்சியை விட இந்த முயற்சி பயனளிக்கத்தக்கது. பழைய மரபைப் புதுப்பிப்பதுமாகும். மூலவர்-இறைவன் சந்நிதியில் (திருவாபரணங்கள் இல்லாத நிலையில்) நடைமுறைப்படுத்தலாம்.

## அறக்கட்டளை முறை

இன்று நம்மை வருத்தும் தீமைகளில் இரண்டாவது வறுமை, ஏழ்மையாகும். இந்த வறுமையிலிருந்து மக்களை மீட்கத் தவறிவிட்டால் இந்தத் தலைமுறையிலேயே தமிழர் கள் வலிமை இழப்பர்; தமிழகம் தாழும். பொருளியல்

துறையில் அறக்கட்டளை முறையை-தர்மகர்த்தா முறையை வலியுறுத்துவர்.

இந்தத் தர்மகர்த்தா முறையை அண்ணல் காந்தி யடிகள் இன்று இந்தியாவிற்கு அறிமுகப்படுத்தினார். ஆனால் இந்தத் தர்மகர்த்தாக் கொள்கையை ஏழாம் நூற்றாண் டிலேயே அப்பரடிகள் தமிழ் மக்களுக்கு அறிமுகப் படுத்தினார்.

*இரப்பவர்க் கீய வைத்தார்*
*ஈபவர்க் கருளும் வைத்தார்*
*கரப்பவர் தங்கட் கெல்லால்*
*கடுநர கங்கள் வைத்தார்*
*பரப்புநீர்க் கங்கை தன்னைப்*
*படர்சடைப் பாகம் வைத்தார்*
*அரக்கனுக் கருளும் வைத்தார்*
*ஐயன்ஐ யாற னாரே.*

(4ஆம் திருமுறை)

இது அற்புதமான தத்துவம். இரப்பவரின் துன்பம் நீக்கவே செல்வம் உடைமை. அச் செல்வம் உடைமையும் நாமாகப் பெற்றதல்ல. இறைவன் திருவருளால் அமைந்தது. அதுவும் இரப்பவர்க்கு ஈதல் செய்ய வேண்டும் என்ற குறிக்கோளுடன் அமைக்கப் பெற்றது. இது நியதி. இங்ஙனம் அல்லாத உடைமை அமைப்புகள் ஏற்கத்தக்கன அல்ல. அவை பிறர் பங்கைத் திருடிச் சேர்த்தவை. இவர்கள் பொருள் ஈட்டும் பொழுதும் பேணும்பொழுதும் கரந்து வாழ்பவர்கள். ஆதலால் இவர்களுக்கு நரகம் உறுதி என்கிறார் அப்பரடிகள்.

## பழகும் பண்பியல் கோட்பாடு

மனிதகுலம் கூடிவாழும் இயல்பினது. கூடிவாழ்வதே ஒழுக்கம். கூடி வாழ்தலுக்குச் சில பண்பியல்கள் தேவை. இதனைப் "பழகும் பண்பியல்" என்று கூறலாம். இத்துறையை

மேலை நாட்டினர் "Behaviorial Science" என்று வளர்த்துள்ளனர்.

பழகும் பண்பியலில் தலையாயது எது எனில் யாரோடும் அன்பாகப் பழகுவது. அந்நியமாவதற்குரிய செய்திகளைப் பின்தள்ளி வைத்து, ஒன்றுபடுதலுக்குரிய களங்களை உரமூட்டி வளர்த்தல். ஒருவர் இல்லாத இடத்தில் அவருடைய புகழ்மிக்க குணங்களைப் பலர் அறியக் கூறவேண்டும். அவரை நேரில் காணும்போது அவரிடம் முகமன் பேசாமல்-புகழ்ந்து கூறாமல் இடித்தும் எடுத்தும் கூறுவனவற்றைக் கூறித் திருத்த முற்படுதல் வேண்டும்.

*குணங்கள் சொல்லியும் குற்றங்கள் பேசியும்*
*வணங்கி வாழ்த்துவர் அன்புடை யாரெலாம்*

என்று பழகும் பண்பியலுக்கு இலக்கணம் கூறுகின்றார் அப்பரடிகள்.

## உழவாரத் திருத்தொண்டு

தமிழகத் திருக்கோயில்கள் சமுதாயத்தின் மையங்கள் ஆதலால் திருக்கோயில்களைப் பேணுவதில் அப்பரடிகள் ஆர்வம் மிகுதியும் காட்டினார். திருக்கோயில்களைப் பேணும் ஆர்வத்தினாலேயே உழவாரத்தினைக் கையிலேந்தி திருத்தொண்டு செய்தார். சேக்கிழார் "கைத்திருத் தொண்டு" என்று இதனைப் பாராட்டினார். அப்பரடிகள்,

*நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா*
*நித்தலும்எம் பிரானுடைய கோயில் புக்குப்*
*புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்*
*பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்*
*தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்*
*சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்*
*அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீ யென்றும்*
*ஆரூரா என்றென்றே அலறா நில்லே*

என்று திருக்கோயில் பணி செய்யக் கூவி அழைக்கிறார்! அப்பரடிகள், வாழ்ந்த காலத்தில் இந்தப் பணிகள் எந்த அளவுக்கு அவசியமாக இருந்தது என்பது தெரியவில்லை. ஆனால், இன்று இந்தப் பணிகளை அவாவி நிற்கும் திருக்கோயில்கள் எண்ணற்றவை. நமது திருக்கோயில்களை நாம் பேணிக்காக்க வேண்டும். அது நமது கடமை.

## எல்லை கடந்த அருளாளர்

அப்பரடிகள் வேறுபாடுகளைக் கடந்த நெஞ்சினர். உலகந் தழீஇய உணர்வினர்; நாடு, மொழி, சமய எல்லைகள் கடந்த அருளாளர். ஒரோவழி சமணர்கள், பௌத்தர்களைக் கடிந்த பகுதிகள் சில உண்டு. இவை மதத்தின் பெயரால் தவறு செய்தவர்களைக் கண்டிக்கும் நோக்கத்திலேயன்றி வேறு அல்ல. அதே போழ்து வேறுபாடுகளையும் தனித் தன்மைகளையும் அங்கீகரிக்கும் பேருள்ளம் அப்பரடி களுடையது.

*வடமொழியும் தென்தமிழும் ஆனான் கண்டாய்,*

*ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்*

என்ற அடிகள் கவனித்துப் படித்து இன்புறத் தக்கன. இறைவனை "எல்லா உலகமும் ஆனாய்" என்ற பாடல் உலக ஒருமைப்பாட்டினை வற்புறுத்தும் பாடல்.

இன்றைய தமிழகத்திற்கு அப்பரடிகளே சிறந்த வழிகாட்டி. அப்பரடிகள் காட்டிய அருள்நெறியே நமது நெறி.

உலகப் பொது நெறி. வளர்க அருள்நெறி!

# 27

# தொண்டின் நெறி சிறக்க

மனித உலகத்தை அன்பு வழியில் நடத்தி வாழ்வாங்கு வாழச் செய்வது கடவுள் நெறி. சமயம் வாழ்க்கையின் தத்துவம். தமிழர்களைப் பொறுத்த வரையில் சமய வாழ்வு கற்பனையன்று, பொய்யுமன்று, புனர்ந்துரையுமன்று. தமிழினத்தின் சமயக் கொள்கைகள் உயர்ந்த அனுபவ ரீதியான வாழ்க்கையிலிருந்து தோன்றியவை - வாழ்க்கை யோடு கலந்தவை.

உலகில் பல்வேறு இனங்களில் சமுதாய மறுமலர்ச்சிச் சிந்தனைகள் அரசியல் அரங்கங்களிலும் புரட்சிக் களங்களி லும், தோன்றியுள்ளன. தமிழகத்திலோ சமுதாய மறு மலர்ச்சித் திட்டங்களை, காலத்திற்குத் தேவையான முன்னேற்றக் கொள்கைகளைச் சமய நெறிக் காவலர்களாகத் திகழ்ந்த அடியார்கள் தமது செவ்விய வாழ்க்கையாலும், சிந்தனையாலும், உருவாக்கினார்கள்.

உலகின் பல்வேறு நாடுகளில் தோன்றிய சமுதாய முற்போக்குச் சிந்தனையாளர்கள் வரிசையில் வைத் தெண்ணப்பட வேண்டியவர் அப்பரடிகள். மனித இனத்தின் ஈடேற்றத்திற்காக நடைபெற்ற பிரெஞ்சுப் புரட்சி ரஷ்யப் புரட்சி ஆகியனவெல்லாம் தோன்றுவதற்குப் பலநூற்றுக் கணக்கான ஆண்டுகட்கு முன்பே, சான்றோர் தோன்றும்

நிலமெனப் பாராட்டப்பெறும் தொண்டை மண்டலத்தில் அப்பரடிகள் தோன்றித் தமிழகத்தில் புரட்சி நடத்தினார். அவருடைய புரட்சி அருள் வழிப் பாய்ந்தோடிய புரட்சி. அந்தப் பக்தி வெள்ளத்தால் அடித்து ஒதுக்கப்பெற்ற குப்பைகள் ஏராளம், ஏராளம்.

ஆளும் இனம், ஆளப்படும் இனம் என்ற வேறு பாட்டை அருளியல் தலைவர் அப்பரடிகள் எதிர்க்கிறார். அவரே மக்கள் இனத்தின் விடுதலைக்கு முதன் முழக்கம் செய்தவர். **"நாம் யார்க்கும் குடியல்லோம்"** என்பது அவருடைய விடுதலை முழக்கம். இறைவனே உலகின் தலைவன். அவன் ஒருவனுக்கே நாங்கள் குடிமக்கள் என்பது அவர் கொள்கை. சைவக் கொள்கையின்படி ஆன்மாவிற்கு வயதில்லை, உடலுக்குத்தான் வயது. இந்த உடலைப் பல்லாண்டுகள் கருவியாகக்கொண்டும் உயிர் உய்தி பெறலாம். உடலுக்கு ஏற்படுகின்ற மரணம் அறியாமையால் வருவது, நோயால் வருவது, அல்லது கூற்றுவனின் சேட்டையால் வருவது. மரணத்தை வெல்லுதல் மனிதனின் கடமை என்பதை மார்க்கண்டேயன் வரலாறு உணர்த்துகிறது. இன்று உலகம் முழுவதும் மரணத்தை வெல்லும் முயற்சி நடைபெறுகிறது.

நம்முடைய சுதந்திர பாரத நாட்டில் நல்லாட்சியின் காரணமாக நமன் தமர் புறமுதுகிட்டு ஓடிக்கொண்டு இருக்கிறார்கள். வாழ்நாள் வளர்ந்து கொண்டிருக்கிறது. இன்று நடைபெறும் இந்தப் புரட்சியை ஏழாம் நூற்றாண்டிலே எடுத்துக் காட்டினார் அப்பரடிகள். "நமனையஞ்சோம்" என்பது அவர்தம் வாக்கு. மேலும் அப்பரடிகள் சாதி, குலம், சமயவேறுபாடு இவற்றைக் கடந்து மனித குல ஒருமைப்பாட்டை வற்புறுத்துகிறார். வற்புறுத்துவ தோடு மட்டுமின்றி, இவ்வேறுபாடுகளைத் தோற்றுவித்துக் கொண்டு அவற்றிற்காக வழக்காடுகின்றவர்களைக் கடுமை யாகச் சாடவும் செய்கிறார். **"சாத்திரம் பல பேசும் சழக்கர்காள் கோத்திரமும் குலமும் கொண்டென் செய்வீர்".** அடுத்து அறுவகைச் சமயத்தவரைத் தேற்றும் தகையன, தேறிய தொண்டரைச் செந்நெறிக் கேற்றும் தகையன என்றும்,

வணங்குகின்ற துறைகள் பலப்பல வாக்கி என்றும், வருவனவற்றால் அப்பரடிகளுக்குச் சமய ஒருமைப் பாட்டில் இருந்த பெருவிருப்பை நாம் புரிந்து கொள்ளலாம். அப்பரடிகள் அகம் நிறைந்த அன்பு கலந்த வழிபாட்டையே வற்புறுத்துகிறார். இறைவனின் திருவருளைப் பெறுதற்கு வாயில், ஆன்மாக்களின் அன்பு; ஆன்மாக்கள், அன்பினைப் பெறுதற்குரிய வாயில், பூசனை என்பது மாதவச் சிவஞான முனிவரின் வாக்கு. **"மறைமிற் றெம்பிரான் மைந்த கேள், இறைமை நம் அருளினால் எய்தற் பாலதாம் அறைதரும் அருளும் மெய் அன்பின்** ஆவது அப்பொரை செழு பத்தியும் பூசைப் பெறாரோ" என்பது காஞ்சிப் புராணப் பாடல். திருவருளைப் பெறுவதற்குப் பூசனை, பூசை நேரிடையாத் துணை செய்யாது.

பூசையால் மனத்துள் கனிவும், கசிவும் தோன்றி அன்பு வெள்ளம் பெருக்கெடுக்க வேண்டும். அந்த அன்பே தூய திருவருளைத் தரும். திருவருளைப் பெறுதற்குரிய வாயில் அன்பு. அந்த அன்பைப் பெறுதற்குரிய வாயில் பூசை. அன்பினைத் தூண்டி வளர்க்கும் சாதனமே பூசை. இது அப்பரடிகள் நின்ற நெறி; நமக்கு நாம் வாழக் காட்டிய நெறி. ஏன்? சைவத் திருமுறைகள் அனைத்தும் அன்பு வழிபாட்டையே வற்புறுத்துகின்றன. இறைவன் உவப்பது நாம் அன்பு மிகுதியால் இடக்கூடிய பூவினாலும், நீரினாலுமேயன்றி நாவிற்குச் சுவைதரும் பொருள்களைப் படைப்பதனாலன்று. இன்று நம்முடைய திருக்கோயில்களில் பூவும், நீரும் கொடுத்து மக்கள் வழிபடும் காட்சி பெருகிக் காணவில்லை. "அன்பே சிவம்" என்பது சிவநெறியின் முடிவு. திருமந்திரம் அருளிச் செய்த திருமூலர் 'அன்பும், சிவமும், இரண்டென்பார் அறிவிலார்' என்று குறிப்பிடுகிறார். சேக்கிழார் அடிகள் 'அன்பினால் இன்பம் ஆர்வார்' என்றும் 'இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்' என்றும் அருளிச் செய்துள்ளது நினைந்தின்புறத்தக்கது.

ஆதலின் 'அன்பே இன்பம், இன்பமே என்னுடைய அன்பு' என்பார் மாணிக்கவாசகர். இத்தகு அன்பு வழி

பாட்டின் சின்னமே கண்ணப்பர். அதனாலன்றோ திருவருள் இன்பத்தில் ஆவியோடாக்கை புரை புரை அழுத மாணிக்க வாசகரும் "கண்ணப்பன் ஒப்பதோர் அன்பு", என்று குறிப்பிடு கின்றார். கண்ணப்பர் வரலாற்றில் வரும் சிவகோசாரியார் அறிவின் சின்னம், சடங்கின் சின்னம். இறைவன் மகிழ்ந்தது கண்ணப்பரின் பூசையிலேயேயாம். கண்ணப்பர் தமது திருவாயில் தண்ணீர் கொணர்ந்து உமிழ்ந்து திருமஞ்சன மாட்டியதைச் சேக்கிழார் "அன்பு உமிழ்வார்" என்று குறிப்பிடுகின்றார். இத்தகு அன்பு வழிபாடு நாட்டில் பெருக வேண்டும். அப்பரடிகள் குறிப்பிடுவதுபோலப் போதொடு நீர் சுமந்து பலர் திருக்கோயிலுக்கு வர வேண்டும். இத்தகு வழிபாட்டுமுறை வளர்வதால் மக்களுக்குள் ஒருமைப்பாடு பெருகும். திருத்தொண்டின் நெறி வளரும். இந்த அன்பை வளர்த்துக் கொள்ளும் பண்ணைகளுள் ஒன்று, சிவ பூசை. பிறிதொன்று, மக்களுக்குச் செய்யும் தொண்டு. நம்முடைய சமய நெறி தொண்டினாலேயே வளர்ந்த ஒன்று. அப்பரடிகள் எங்கும் ஈசன் இருக்கிறான் என்று கருதித் தொண்டு செய்யாமல் கங்கையிலும், காவிரியிலும் சென்று நீராடு வதைக் கடிந்து பேசுகிறார். "கங்கையாடிலென், காவிரி யாடிலென், கொங்கு தண்குமரித்துறை ஆடிலென் ஓங்குமா கடல் ஓத நீர் ஆடிலென் எங்கும் ஈசன் எனாதவர்க் கில்லேயே" என்று குறிப்பிடுகிறார். இதைவிட முற்போக்கான குரல் வேறெந்த நாட்டிலே பிறந்தது. வேறு எம்மொழியிலே பிறந்தது. இவ்வளவுதானா இதை விடக் கடுமையான தாக்குதலும் உண்டு; படித்துப் பாருங்கள். "இரப்பவர்க் கீயவைத்தார், ஈபவர்க் கருளும் வைத்தார், கரப்பவர் தங்கட்கெல்லாம், கடுநரகங்கள் வைத்தார்" என்றும் பாடுகிறார். மக்கட்குத் தொண்டு செய்வது இறைவன் உவக்கும் செயல் என்பது நம் ஆன்றோர் கொள்கை. பிற்காலத்தில் புண்ணியத்தை இருவகையாகப் பிரித்தார்கள். பசு புண்ணியம் உயிர்களுக்குத் தொண்டு செய்வதின் மூலம் பெறக்கூடியது. பதி புண்ணியம் இறைவனுக்குத் தொண்டு செய்வதின் மூலம் பெறக்கூடியது. இதில் பசு புண்ணியத்

திலும், பதி புண்ணியம் சிறந்தது. இக் கொள்கை தத்துவ ரீதியில் தவறானதன்று. ஆனால் திரிபுவாதமும் மயங்கிய பொருளும் கற்பிக்கப் பெற்றது. அதன் காரணமாகச் சைவ உலகத்திலிருந்து சங்க காலத்தில் சோழர் காலத்தில் நாயன் மார் காலத்தில் இருந்த தொண்டின் முறை விலகிச் சென்று விட்டது. ஆனால் சமய ஆசிரியர்களோ, சந்தான ஆசிரியர் களோ அவர்கள் அருளிய நூல்களோ இக் கொள்கைக்கு ஆதாரமாக இல்லை. சிவஞான போதமும், பதி புண்ணியம், பசு புண்ணியம், என்ற பாகுபாட்டைக் காட்டுகிறது. வேறு பாட்டை ஒத்துக் கொள்கிறது. ஆனால் இந்த வேறுபாடும் சிந்தனையைப் பொறுத்ததேயன்றி செயலைப் பொறுத்ததன்று.

தற்போதத்தோடு - தன்னுணர்வோடு செய்யாமல் சிவச் சிந்தனையோடு செய்ய வேண்டும். ஆண்டான் நினைவோடு ஆருயிர் அனைத்தையும் ஓம்புதல் வேண்டும். இங்ஙனம் செய்யப் பெறும் பசு புண்ணியமும், பதி புண்ணியமேயாம். இதனைச் சேக்கிழார் "பெருமையால் தம்மை ஒப்பார் பேணலால் எம்மைப் பெற்றார்" என்று கூறி விளக்குகின்றார். இக்கருத்தினையே திருமூலரும் "படமாடக் கோயிற் பகவர்க் கொன்றீயில் நடமாடக் கோயில் நம்பர்க் கங்காகா; நடமாடக் கோயில் நம்பர்க்கொன்றீயில் படமாடக் கோயில் பகவற்கஃ தாமே" என்று பாடுகிறார். இப்பாடலின் கருத்தை இன்றைய அஞ்சல் முறை நமக்கு உணர்த்தும். நாம் விரும்பிய ஒருவருக்குச் சேர வேண்டும், என்று விரும்பி முகவரியை எழுதி உலகில் எங்கோ ஒரு மூலையில் இருக்கிற அஞ்சற் பெட்டியில் இட்டாலும் அது உரியரையே சென்று சேரும். அது போல சிவபெருமானை நினைந்து அவனால் அங்கீகரிக்கப் பெற்ற எந்த ஓர் உயிர் வர்க்கத்திடமாயினும் நாம் ஒன்றைத் தருவோமானால் அது அவனையே சென்று சேரும். இத்தகைய மிகச் சிறந்த தொண்டின் நெறியை ஏழாம் நூற்றாண்டிலேயே மிக மிகத் தெளிவாக விளக்கியவர் அப்பரடிகள். அப்பரடிகள் தொடங்கி வைத்த தொண்டின் நெறியை மீண்டும் தொடங்கித் தொடர்ந்து செய்ய சைவத் திருமடங்களில் தலைவர்கள் முன் வரவேண்டும்.

**28**

# அப்பரடிகளின் போராட்டங்கள்

தமிழகத்தில் ஏழாம் நூற்றாண்டில் நடமாடிய அருள் நலஞ்சார்ந்த புரட்சிக்கனல் அப்பரடிகள். அப்பரடிகள் ஒரு போராளியார்; தமிழாளியர். சமுதாய நலம் நாடிய அருள்நெறித் தலைவர். மூடத்தனங்களைச் சாடிய சமயத் தலைவர். முடியாட்சியை எதிர்த்துப் போராடி, குடிமக்கள் உரிமையைக் காத்த காவலர். பூரண சுதந்திரம் நாடிய நற்றவத்தர். தமிழகம் முழுதும் நடந்து, கிளர்ச்சி செய்தவர்; உழைப்பும் தொண்டுமே உயிரெனக்கொண்டு உலாவிய உத்தமர். நடையறாப் பெருந் துறவியாக நடமாடிப் பணி செய்தவர் நாவுக்கரசர்.

ஒரு மனிதன் வாழ்க்கையில் வீர மிக்குடையவனாக வாழவேண்டுமானால், முதலில், அவன் தனக்குத்தானே போராடிப் புலன்கள்-பொறிகள் மீது, ஏன்? தனது ஆன்மா வின் மூலமே, ஆணை செலுத்துதற்குரிய தகுதி பெற வேண்டும். நாளும் ஆன்மாவை அரித்து அழிக்கும் ஆணவத்திலிருந்து விடுபடவேண்டும். ஆணவம்! ஆம்! அறியாமையின் திரண்ட வடிவமே ஆணவம்! ஆணவத்தி லிருந்து விடுதலை பெற எல்லாம்வல்ல இறைவனுக்கு அடிமையாதல் வேண்டும். ஆண்டவனுக்குத் தொழும்பாய்

அடிமை செய்தல் வேண்டும். யார் மாட்டும் எளியராய்த் தாழ்வெனும் தன்மையுடன் பழகவேண்டும்.

அப்பரடிகள் அச்சமின்றி வாழ்ந்தவர். "அஞ்ச வருவது யாதொன்றும் இல்லை" என்றார். ஏன்? அச்சம் ஆசைகளின் சேய்; அதிகாரத்தின் சேய். அப்பரடிகளுக்கு ஆசை ஏது? அவர் இனியன என்று கண்டவை இவை:

*கனியினும் கட்டி பட்ட கரும்பினும்*
*பனிம லர்க்குழற் பாவைநல் லாரினும்*
*தனிமுடி கவித் தாளும் அரசினும்...*
*இனியன் தன்னடைந் தார்க்கிடை மருதனே!*

என்பது அப்பரடிகள் திருவாக்கு. இத்தகு பழுதிலாத் துறவு சார்ந்த உள்ளத்தினருக்கு ஏது அச்சம்? அச்சம் இல்லாமை யால் அரசின் ஆணையை ஏற்க மறுக்கிறார். தாம் யாருடைய ஆட்சிக்கும் அடங்கி வாழவேண்டிய அவசியமில்லை என்கிறார்;

*நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்*
*நரகத்தில் இடர்ப்படோம் நடலை யில்லோம்*
*ஏமாப்போம் பிணியறியோம் பணிவோம் அல்லோம்*
*இன்பமே எந்நாளும் துன்ப மில்லை*
*தாமார்க்கும் குடியல்லாத் தன்மை யான*
*சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்*
*கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்*
*கொய்ம்மலர்ச் சேவடியினையே குறுகி னோமே!*

என்று வீரமும் விவேகமும் அருள்ஞானமும் கலந்த நிலையில் பல்லவப் பேரரசின் தூதுவர்களுக்குப் பதில் கூறுகின்றார் அப்பரடிகள். இந்த வீரம், துணிவு எங்கிருந்து கிடைத்தது, அல்லது பெற்றார் அப்பரடிகள்? இறைவனுக்குத் தொழும்பு பூண்ட பெற்றிமையால் வந்தது. இந்தத் துணிவு என்பதை

அப்பரடிகள் அருளிய இத் திருப்பாடல் நமக்கு விளக்கிக் காட்டுகிறது.

தாமார்க்கும் குடியல்லாத் தன்மை யான
சங்கரன் நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாம் என்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே.

என்பதை உணர்ந்தறிக.

ஆதலால், அப்பரடிகள் தம்மைத் தளைகளிலிருந்து விடுதலை செய்துகொண்டு- பரிபூரண சுதந்திர மனிதராய் விளங்கினார். அப்பரடிகள் சந்தித்த முதற் போராட்டம் பல்லவ அரசின் ஏகாதிபத்தியத்தை எதிர்த்த போராட்டம்! இந்தப் போராட்டத்தில் அறவழியில் துன்பங்களை ஏற்று, அனுபவித்துப் போராடிய வகையில் தமிழக வரலாற்றில், அப்பரடிகளே முன்னோடியாவார். பல்லவப் பேரரசை, அப்பரடிகள் எதிர்த்துப் போராடிய போராட்டத்தில், பெற்ற தண்டனைகள் பலப்பல. பாற் சோற்றில் நஞ்சு கலந்து கொடுத்தது, யானையின் காலில் இடறச் செய்தது, நீற்றறை யில் இட்டது, கல்லில் கட்டிக் கடலில் எறிந்தது ஆகிய கொடுமையான தண்டனைகள் வழங்கப்பெற்றன. இந்தக் கொடிய தண்டனைகளை தைரியமாக ஏற்றுப் போராடி, இறைவன் திருநாமத்தால் வெற்றிபெற்றவர் அப்பரடிகள். அதிகாரமும் ஆயுதங்களும் இன்றி ஆதிக்கக் குணமுள்ள ஓர் அரசை எதிர்த்துப் போராடிய அப்பரடிகள் ஒரு போராளி யர்தானே!

அப்பரடிகளிடம், துணிவும், வீரமும் இருந்தது போலவே அடக்கமும் எளிமையும் இருந்தன. அப்பரடிகளை ஞானாசிரியராக ஏற்றுக்கொண்டு, அப்பரடிகளைக் காணா மலே, உணர்வினால் போற்றித் தொழுது வாழ்ந்து வந்த அப்பூதியடிகளிடம், அப்பரடிகள், தம்மை அறிமுகப்படுத்திக் கொண்ட முறை நம்மனோர்க்கு எடுத்துக் காட்டு.

"தெருளும் உணர்விலாத சிறுமையேன் யான்" என்று தம்மை அப்பூதியடிகளிடம் அப்பரடிகள் அறிமுகப் படுத்திக் கொண்ட பாங்கு, அப்பரடிகளின் எளிமைக்கு ஓர் எடுத்துக் காட்டு என்று துணிந்து கூறலாம்.

அப்பரடிகள் நாளும் தமது பொறிகளுடன் புலன் களுடன் போராடி வெற்றி பெற்றுச் சீரான நிலையில் வைத்துக்கொண்ட ஞானத் தலைவராக விளங்கினார் என்பதை உன்னுக.

அப்பரடிகள் நாளும் உய்யும் நெறி நாடுகின்றார். அவர்தம் அகத்தினில் ஞானவிளக்கை ஏற்றிக்கொண்டு வேண்டிய அளவு தூண்டிவிட்டு மகிழ்கின்றார். இந்த மகிழ்ச் சியை அப்பரடிகள் அனுபவிக்க முடியாதபடி ஐம்பொறிகள் அகநிலையில் போராடுகின்றன என்று அருளியுள்ளார்! அப்பரடிகள் தனக்குத்தானே போராடித் தன்னை வென்ற தலைமகனாக விளங்கிய பெற்றிமை உலக வரலாற்றிற்கு ஓர் அற்புதமான செய்தி!

அப்பரடிகளை உலகியல் மட்டுமல்ல, வானுலகமே வந்து கவர்ச்சியூட்டினாலும் அப்பரடிகள் சித்தம் திரிந்தா ரில்லை. கலங்கினாரில்லை என்பதைச் சேக்கிழார்,

*இத்தன்மை அரம்பையர்கள் எவ்விதமும் செயல்புரிய*
*அத்தனார் திருவடிக்கீழ் நினைவகலா அன்புருகும்*
*மெய்த்தன்மை உணர்வுடைய விழுத்தவத்து மேலோர்தம்*
*சித்தநிலை திரியாது செய்பணியின் தலைநின்றார்.*

என்று அருளியுள்ள பாடல் உணர்த்துகிறது. அப்பரடிகள் தன்னைத்தானே வென்றெடுத்து விளங்கிய அருள்ஞானச் செல்வர் என்பதை உணர்த்துகிறது.

இங்ஙனம் அப்பரடிகள்,

*ஈர நெஞ்சினர் யாதும் குறைவிலர்*
*வீரம் என்னால் விளம்பும் தகையதோ*

என்று சேக்கிழார் போற்றியபடி விளங்கினார்.

அப்பரடிகள் தற்சார்பான ஆசைகளினின்று நீங்கியவர். ஆயினும் சமுதாய நல ஆர்வலர். சமுதாயத்தில் நிலவிய பல்வேறு தீமைகளைக் கடிந்து ஒதுக்குகின்றார். அந்தத் தீமைகளை, பொய்ம்மைகளைப் பாதுகாக்கப் போராடிய பழைய பஞ்சாங்கங்களை எதிர்த்துப் போராடுகின்றார். இந்தப் போராட்டத்தில் அவர் யாருடைய தயவையும் உதவியையும் எதிர்பார்க்கவில்லை. தந்தாலும் ஏற்கத் தயாராக இல்லை. தீண்டாமை, சாதி வேற்றுமை முதலிய தீமைகளுடன், அத் தீமைகளை அனுட்டிப்பார்களிடம் அப்பரடிகள் எந்தவிதச் சமாதானமும் செய்து கொள்ள விரும்பவில்லை. மிகமிகக் கண்டிப்பாகவே தீண்டாமை யையும், சாதி வேற்றுமையையும் எதிர்த்தார். இன்றுகூட நாம் அப்பரடிகளைப் போல் தீண்டாமை, சாதி வேற்றுமைகளை எதிர்க்க விரும்பவில்லை; துணிவில்லை. அரசியல் இயக்கங் கள் சொல்வது தீண்டாமை ஒழிப்பு! சாதி வேற்றுமைகளற்ற சமுதாயம்! ஆனால், நடைமுறையில் அவர்கள் தீண்டாமை, சாதிவேற்றுமைகளால் பிரிவுபட்டுக் கிடக்கும் சமுதாய அமைப்பையே விரும்புகின்றனர் என்பது அவர்களுடைய செயல்முறைகளினின்றும் நாடறியும் உண்மை. அப்பரடி களை அவர் காலத்துச் சமுதாயப் பழைமை வாதிகள் சங்கநிதி, பதுமநிதி முதலியவற்றைக் கொடுத்துத் தீண்டா மையை எதிர்த்துப் பேசவேண்டாம் என்று கேட்டுக் கொள்கின்றனர். அப்பரடிகள் அவற்றைத் துச்சமெனக் கருதி ஆர்ப்பரித்துச் சமூகத் தீமையை எதிர்த்தார். மீண்டும் பழைமைவாதிகள் நிலம், ஆட்சி முதலியவற்றை அப்பரடி களுக்கு வழங்குவது என்று பேரம் பேசுகின்றனர். அப்பரடிகளோ தீண்டாமை விலக்குவதில், சாதி வேற்றுமையை அகற்றுவதில் தயவு தாட்சண்யம் இல்லாமல் போராடுகின்றனர். ஏன்? தீண்டாமையை, சாதிகளை ஏற்க மறுக்கிறார்.

*சாத்திரம் பல பேசும் சழக்கர்காள்*
*கோத்திரமும் குலமும் கொண்டென் செய்வீர்*
*பாத்தி ரம்சிவ மென்று பணிதிரேல்*
*மாத்தி ரைக்குள் அருளுமாற் பேறரே*

என்பது அப்பரடிகள் வாக்கு. தீண்டாமை விலக்கு, சாதி வேற்றுமைகளை அகற்றுவதில் தமிழக வரலாற்றில் முதற் போராளி அப்பரடிகளே என்று துணியலாம். ஏன்? இந்திய வரலாற்றிலேயேகூட அப்பரடிகள்தான் முதற் போராளி!

அடுத்து, மனித குலத்தை வருத்தும் தீமை, வறுமை - ஏழ்மை! நமது சமுதாயம் ஒருவிதமான அமைப்பு. வளமும் வறுமையும் அருகருகில் நிலவும்-வள்ளல்களும் வறியவர்களும் வாழும் நாடு. இந்த வறுமை தொடர்ந்து இருந்து வருவது. பொருளியல் சித்தாந்தத்தில் தனி உடைமைச் சமுதாயம்-அமைப்புத் தோன்றிய காலத்திலிருந்தே வறுமை கால்கொண்டு வளர்ந்துவருகிறது. வல்லாளர்கள் உடைமை சேர்ப்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். வல்லமை இல்லாதவர்கள் இருப்பதையும் இழக்கின்றனர். தனியுடைமைச் சமுதாயம் இருக்கும் வரை வறுமை நிலவும். பொதுவுடைமைச் சமுதாயம் கண்டாலும் மனிதன், உடைமை ஆர்வமே காட்டாமல்-முழுமையான உழைப்பாளியாக வாழாமல் "பொதுவுடைமைதானே" என்று அலட்சியமாக இருக்கிறான். இன்று சோவியத் வரலாறு தரும் படிப்பினை என்ன? ஏன்? நமது நாட்டில் நடப்பது என்ன? நாட்டின் பெயரால் வாழ்கிறவர்கள்கூட நாட்டைத் திருடத்தான் நினைக்கிறார்கள்; திருடுகிறார்கள்; திருடிக் கொண்டிருக்கிறார்கள். இந்திய சமூகத்தில் தனிமனித உணர்வு பூதாகாரமாக வளர்ந்து வருகிறது. ஊர், நாடு என்ற சமூக உணர்வு இளைத்துப் போய்விட்டது. அதனால் அப்பரடிகள் தனியுடைமைச் சமுதாயம், பொதுவுடைமைச் சமுதாயம் என்ற இரண்டு அமைப்பையும் சாராமல் ஒரு புது

நெறி காட்டுகின்றார். தர்மகர்த்தாப் பொருளாதார முறையை அறிமுகப்படுத்துகின்றார். தனியுடைமைச் சமுதாயந்தான்! ஆனால் உடைமைகள் இறைவன் தந்தவை; இறைவனுக்குச் சொந்தமானவை. அந்த உடைமையின் பாதுகாப்பாளனே மனிதன்! உடைமைகளின் பயன் தேவைப்படுவோருக்குச் சென்றடைய வேண்டும். இஃதொரு புதுமையான பொருளா தாரக் கொள்கை. இந்தக் கொள்கையை இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் அறிஞர்கள் ஏற்று வரவேற்றனர். அண்ணல் காந்தியடிகள் பொருளாதாரத்தில் தர்மகர்த்தா முறையை விரும்பினார். ஆனாலும் நடைமுறையில் தர்மகர்த்தா முறை வெற்றிபெறவில்லை. அப்பரடிகள் தர்மகர்த்தா முறையை,

இரப்பவர்க் கீய வைத்தார் ஈபவர்க் கருளும் வைத்தார்
கரப்பவர் தங்கட் கெல்லாம் கடுநர கங்கள் வைத்தார்
பரப்புநீர்க் கங்கை தன்னைப் படர்சடைப் பாகம் வைத்தார்
அரக்கனுக் கருளும் வைத்தார் ஐயன்ஐ யாற னாரே

(4 ஆம் திருமுறை)

என்று கூறி விளக்குகின்றார்.

தர்மகர்த்தா முறை, ஏன் சமுதாயத்தில் வெற்றி பெற வில்லை. தர்மகர்த்தா முறை வெற்றிபெற முதல் தேவை மனித மதிப்பீட்டுச் சமுதாய அமைப்பு. அதாவது, மனிதனை மனிதனாக மதிப்பதற்கு வேறு தேவைகள்-சாதி, பொருள், பதவி முதலியன அவசியமில்லை. இன்று நம்மிடையே நிலவுவது பணமதிப்பீட்டுச் சமுதாயமே. ஆதலால் எப்படியும் பணத்தைச் சேர்! உடைமையைப் பெறு! என்ற நிலை உருவாயிற்று. இதன் காரணமாகப் பணம், உடைமை, சமுதாயத்தை மேலாண்மை செய்வதால் மனிதன் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டான். இந்த நிலைமாறவேண்டும். இந்த நிலை எளிதில் மாறுமா? மாறாது! இதற்கு முதலில் மக்கள்நலம் கருதும் அரசு (Welfare State)

தேவை. மக்கள் நலனுக்குரிய அடிப்படைத் தேவைகளுக்கு உத்தரவாதம் அளிக்கக்கூடிய அரசு வேண்டும். மக்களின் அடிப்படைத் தேவையாகிய கல்வி, வேலை வாய்ப்பு, மருத்துவம் ஆகியன அனைவருக்கும் எளிதில் தரமான முறையில் கிடைக்க அரசு பொறுப்பேற்க வேண்டும். இன்று நமக்கு வாய்த்துள்ள அரசு, பெயரளவிலேயே 'மக்கள் நல அரசு'. நடைமுறையில் அப்படி இல்லை. ஆதலால், சுரண்டல் முறைப் பொருளாதாரம் ஒழிய எல்லாருக்கும் எல்லாம் கிடைப்பதான இடம் நோக்கி இவ்வையகம் நகர, அப்பரடிகள் காட்டிய-அமைக்கப் போராடிய தர்மகர்த்தா முறையே நல்லது.

அப்பரடிகள் மெய்ப்பொருள் தேடிய தவநெறிச் செல்வர். செம்பொருள் உணர்ந்த செம்மல். அப்பரடிகள் சமயத்துறையில் அகம் நிறைந்த அன்பில் கனிந்து நிகழும் வழிபாட்டையே விரும்புகின்றார். மற்றபடி சடங்குகளை எதிர்த்துப் போராடுகின்றார். வழிபாட்டுக்கு "அன்பலால் பொருளும் இல்லை" என்பது அப்பரடிகள் கொள்கை - கோட்பாடு. அரனுக்கு அன்பில்லாது, உயிர்களிடம் அன்பில் லாது, ஆயிரம் ஆயிரம் தீர்த்தமாடுவதில் என்ன பயன்? என்பது அப்பரடிகளின் கேள்வி.

*கோடி தீர்த்தம் கலந்து குளித்தவை*
*ஆடி னாலும் அரனுக்கன் பில்லையேல்*
*ஓடும் நீரினை ஓட்டைக் குடத்தட்டி*
*மூடி வைத்திட்ட மூர்க்கனோ டொக்குமே!*

என்றும்,

*கங்கை யாடிலென் காவிரி யாடிலென்*
*பொங்கு தண்கும ரித்துறை யாடிலென்*
*ஓங்கு மாகடல் ஓதநீ ராடிலென்*
*எங்கும் ஈசன் எனாதவர்க் கில்லையே!*

என்றும் அப்பரடிகள் அருளிச் செய்துள்ள பாடல்கள் பழைமைக்கு வைத்த தீ அல்லவா?

ஏன்? இன்னும் ஒருபடி மேலே சென்று நூல், புல், கூர்ச்சம் முதலியன வேண்டுமா, என்றும் அறைகூவல் விடுகின்றார். பழைய பொருளற்ற சடங்குகளை எதிர்த்துப் போராடிய சமயத் தலைவர் அப்பரடிகள்.

அப்பரடிகள் தமிழுணர்வுடையார்; தமிழாசிரியர். ஆனாலும் மனிதகுல ஒருமைநலம் கருதி எல்லா மொழி களையும் இனங்களையும் தமிழ், தமிழர் என்னும் தனித் தன்மைக்குப் பழுதின்றி ஏற்றவர்; அங்கீகரித்தவர். மொழி ஆதிக்கமும் இன மேலாதிக்கமும் ஒருமை நலனைக் கெடுக்கும் என்ற உண்மையை அப்பரடிகள் அறிந்தவர்; உணர்ந்தவர்.

*வடமொழியும் தென்தமிழும் ஆனான் கண்டாய்*

என்றும்

*ஆரியன் கண்டாய்! தமிழன் கண்டாய்!*

என்றும் அருளி வேறு வேறாந் தன்மையையும் கடவுள் முன்னிலையில் அனைவரும் ஒன்றாந் தன்மையையும் விளக்கும் பான்மை அற்புதமானது. இன மேலாண்மை, இன ஒதுக்கல், இன இழிவு ஆகிய பொருந்தாக் கொள்கைகளை அப்பரடிகள் ஏற்காது மறுத்துப் போராடிய பெருந்தகை என்பதறிக.

அப்பரடிகள் தனது ஆத்ம நாயகனாக, உயிர்ப்பாக விளங்கிய இறைவனிடமும் போராடியுள்ளார். இறைவனிடம் இவர் நிகழ்த்திய போராட்டம் வாழ்வைப் பற்றியதல்ல. தூய்மையான அர்ப்பணிப்பு, அடையாளம் இவற்றுக்காகவே போராடினார். தனது ஆன்மா, தூய்மையாயிற்று, அவ்வழி உடலும் தூய்மையாயிற்று என்ற அடையாளம் காட்ட, அடையாளம் வைக்க வேண்டுகின்றார். இந்த அடை

யாளத்தைப் பெறவே சாகும்வரை போராடத் துணிந் துள்ளார் என்பதனை,

*புன்னெறியாம் அமண் சமயத்*
*தொடக்குண்டு போந்த வுடல்*
*தன்னுடனே உயிர் வாழத்*
*தரியேன் நான் தரிப்பதனுக்கு*
*என்னுடைய நாயக! நின்*
*இலச்சினையிட் டருள்! என்று*
*பன்னு செழுந் தமிழ்மாலை*
*முன்னின்று பாடுவார்*

(பெரிய புராணம் திருநாவுக்கரசு சுவாமிகள் பக். 211)

என்ற பாடல் விளக்குகிறது. ஆதலால், சாகும்வரை போராட்டம் என்பது அப்பரடிகள் கண்ட முறை.

அப்பரடிகளுக்குத் திருக்கயிலைத் திருக்கோலம் காண விருப்பம். தமிழகத்திற்கும் கயிலைக்கும் உள்ள நெடுந் தொலைவுபற்றி எண்ணினார் இல்லை; கவலைப்பட்டாரில்லை. கயிலைக்குப் பயணம் தொடங்கிவிட்டார். தொடர்ந்து நடக்கமுடியவில்லை. படுத்து ஊர்கிறார். உடம்பெல்லாம் தேய்கிறது. செங்குருதி சிந்துகிறது. ஆயினும் அப்பரடிகளிடத்தில் சோர்வில்லை. போர்க்குணம் ஓய வில்லை. அப்பரடிகள் கயிலையைக் காணும் போர் முனையில் வெற்றி பெறுகிறார். ஆம்! அப்பரடிகளின் போராட்டத்தினை, நிறுத்துவான் வேண்டிக் கயிலையையே ஐயாற்றுக்கு மாற்றினான் எம்பெருமான்! கயிலையையே திருவையாற்றுக்கு மாற்றுகின்ற அளவுக்கு அமைந்த அப்பரடிகளின் போர்க்குணம் போற்றத்தக்கது.

இன்று எங்கும் அச்சம்! ஆசை! சோம்பல்! முழுச் சோம்பல்! வாழவில்லை; பிழைப்பு நடத்த ஆசை! இந்த உலகியல் வாழ்க்கையில் யாருக்கும் போர்க்குணம் இல்லை! ஆன்ம ஞான வாழ்க்கையிலும் போராட்டம் இல்லை!

பழுதிலாத் துறவையும் எங்குத் தேடினும் காணோம்! எஞ்சியிருப்பது சோம்பல்! சுகவாழ்க்கையில் நாட்டம்! சமயத்துறையில் பொருளற்ற சடங்குகள்! சாதிகளின் கொட்டம்! இன்னோரன்ன தீமைகள் நாள்தோறும் வளர் கின்றன.

இன்றைய தமிழகத்திற்கு அப்பரடிகளே சிறந்த வழிகாட்டி! அப்பரடிகளின் அடிச்சுவட்டில் புதுமையும் பொதுமையும் காண, அன்பும் ஞானமும் காணப் போராடுவோமாக!

# 29

# அப்பர் அடிகள் காட்டிய நெறி

தமிழகம், அருள்நலம் கொழிக்கும் திருநாடு. விண்ணளந்து காட்டி வினைமறைக்கும் திருக்கோயில்கள் பல விளங்கும் நன்னாடு. கல்லெல்லாம் கலையாக்கிப் பேசும் பொற்சித்திரம் படைத்துப், பேணும் தெய்வமாக்கிப் பெரு நெறி கண்ட நாடு. தமிழ், இலக்கணவளம் பெற்றமொழி. ஆம் அதனினும் சிறப்பான இலக்கிய வளம் பெற்ற மொழி. 'ஆம்' அதனினும் **நெஞ்சை நெகிழச் செய்து நினைந்துருகச் செய்யும் பக்தி நெறியைப் பேணி வளர்ப்பதில் உலக மொழிகளில் தமிழே சிறந்தது.**

தமிழக வரலாற்றில் போர்கள் உண்டு. காதல் உண்டு. ஆயினும் இவையிரண்டையும் விஞ்சி நிற்பது திருவருள் நெறியேயாகும். இத்தகு அருள் நலம் பெற்ற தமிழகத்தில் ஏழாம் நூற்றாண்டில் ஒரு ஞாயிறு தோன்றிற்று. அது செங்கதிர் ஞாயிறல்ல; செந்நெறி ஞாயிறு! செங்கதிர் ஞாயிறு ஒரோ வழி சுடும். இஞ்ஞாயிறு மாறாச் செந்தண்மை ஞாயிறு! செங்கதிர் ஞாயிற்றுக்கு எழுதலும் படுதலும் உண்டு. இஞ்ஞாயிற்றுக்கு அவை யில்லை.

தமிழகம் நெறி தவறி மயங்கிக் கிடந்தபொழுது, இந்த ஞாயிறு தோன்றிற்று. தமிழினத்திற்கு - தமிழுக்கு - தமிழ் நெறிக்குப் புத்துயிரூட்டிய அப்பரடிகளே ஏழாம் நூற்றாண்டில் எழுந்த ஞாயிறு. அப்பரடிகள் உலக மனித சமுதாய வரலாற்றிலேயே போற்றத்தக்க விழுமிய பெருமை யுடையவர். உலகம் முழுவதும் அகத்தாலும் புறத்தாலும் ஒடுங்கி முடியாட்சியின் கீழ் ஆட்பட்டிருந்த காலம். அப்பரடிகளோ கொத்தடிமைத் தனத்திற்கு மூல காரண மாகிய முடியாட்சியின் சின்னமாகிய மன்னனின் அதிகாரத்தை முதன் முதலில் எதிர்த்தவர். 'நாம் யார்க்கும் குடியல்லோம்' என்று அரசை நோக்கி முதன் முதலில் பேசிய பெருமை - முடியாட்சியை மறுத்த பெருமை அப்பரடி களுக்கே உண்டு.

அது போலவே, 'மக்கள் குலம் ஒன்று, அவர்களிடையே எந்தவகையான வேறுபாடும் இருத்தல் கூடாது' என்ற இனிய கருத்தைத் தொன்மைக் காலத்திலேயே எடுத்தோதியவர் அப்பரடிகள். "கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர்" என்று கேட்கிறார். மனிதகுல ஒருமைப்பாடு அப்பரடிகளின் இலட்சிய கீதமாக இருந்தது. "வடமொழி ஆனான் கண்டாய்; தென் தமிழ் ஆனான் கண்டாய்!" என்று பாடி ஒருமை யுணர்வை யூட்டுகிறார். "ஆரியன் கண்டாய், தமிழன் கண்டாய்" என்று இந்திய ஒருமைப்பாட்டுக்கு முதன் முதலில் கால்கோள் செய்த பெருமை அப்பரடிகளுக்கே யுண்டு.

அடுத்து முடியாட்சியை எதிர்த்து முழங்கி, மரணத் தையும் வென்று வாழத்தூண்டுகிறார். மனித உலகத்துக்குச் சாதல் ஒரு பெரிய கொடுமை. சாகாமல் இருப்பதற்குரிய வழி வகை காண்பதில் அறிவியல் உலகமும் அருளியல் உலகமும் தொடர்ந்து முயன்று வருகின்றன. அந்த முயற்சிகளின் பயனாகச் சாதற்குரிய நாள் நீண்டு, வாழ்தலுக்குரிய நாள் வளர்ந்து வருகிறது. சாதல் ஒரு கொடுமை. ஆயினும்

அதைவிடப் பெரிய கொடுமை சாதலுக்கு அஞ்சுவது. என்றோ சாதல் நாள் என்பது முடிவு செய்யப் பெற்ற ஒன்று. அதை எதிர்நோக்கி எழுச்சியுடன் கடமைகளைச் செய்து முடித்துச் சாதல் கரத்தில் தன்னை ஒப்படைக்கத் தயாராக இருப்பவனே சிறந்த மனிதன்.

ஆனால் இன்றோ, சாதற் கொடுமையினும் சாக அஞ்சும் அச்சம், மனித உலகத்தை அலைக்கழித்துக் கொண்டிருக்கிறது. சிலர் நாள்தோறும் நூறு தடவை செத்துப் பிறக்கிறார்கள். அதனால், அறிவு மழுங்குகிறது; ஆற்றல் அழிகிறது; திறன் தேய்கிறது; துன்பமே சூழ்கிறது. வாழ்நாள் முழுதும் அழுதே முடிக்கின்றனர். இதனை உணர்ந்த அப்பரடிகள் ‘சாதலுக் கஞ்சாது சதுரப்பட வாழ்’ என்று எடுத்து மொழிகிறார். “நமனை அஞ்சோம்” என்று எடுத்து மொழிகிறார். நரகம் இங்கும் இருக்கிறது. அங்கும் இருக்கிறது. துன்பத்தின் எல்லைக்கு நரகம் எனப் பெயர். இப்பொழுது அஃது எங்கு இருக்கிறது என்று கேட்பவர் யார்? நரகத்தி லிருந்து கரையேறவும் முயற்சிக்காமலும் அதற்குள்ளேயே நொந்து இடர்ப்பட்டு மாளுதல் கூடாதென்பதனை ‘நரகத்திலிடர்ப்படோம்’ என்று கூறினார்.

மனிதன், வளரும் தன்னை மறந்தும் பொய்யென்று கருதக் கூடாது. அவன் உறு பொருள். அவனுக்கு அறிவுண்டு; திறனுண்டு; தொழிலுண்டு; துணைநிற்கச் சுந்தரத் தோழ னாகச் சொக்கேசன் உண்டு; இன்பமுண்டு; அவனுக்கொரு வரலாறு உண்டு என்று கருதாமல், தன்னையே பொய் யென்று கருதி, அழியக்கூடாது என்ற குறிப்பில் ‘நடலை யல்லோம்’ என்று பாடுகின்றார். மேலும், திறனற்ற – பயனற்ற வண்ணம், நடைப் பிணமாக வாழ்தலையும் “நடலை” யென்றே குறிப்பிற் காணலாம்.

மனித வாழ்க்கையில் ஆர்வமும், ஆள்வினைத் திறனும், உணர்வும் சிறந்து விளங்க மனக்களிப்பு இன்றியமையாதது.

கவலைப்படுதலும் முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு அழுதுகொண்டிருப்பதுமல்ல. இவை மேலும் துன்பத்தை வளர்க்கவே செய்யும். அதற்குப் பதிலாக நிகழ்ந்த சம்பவங் களை மறந்து மனத்தைச் சோர்வுபடாமல் தடுத்துக் களிப் பூட்டிக்கொள்ள வேண்டும். அப்பரடிகள் இந்த வாழ்க்கை யினை 'ஏமாப்போம்' என்று எடுத்துக் கூறி விளக்குகிறார்.

அடுத்து, மனித உலகத்தை வருந்துவது பிணி. உடற் பிணி இயற்கையன்று; செயற்கையேயாம். உடல் திறன் தெரிந்து நெறியோடும் முறையோடும் வாழ்ந்தால் பிணி வாராது. இன்று நம்மிற் பலருக்குக் குறை, அவர்தம் உடல் திறன் தெரியாதது. தெரிந்து தெளிந்து பேணும் ஆர்வமும் இல்லை. என்னவோ வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

பிணியில்லாத வாழ்க்கையே பெருவாழ்க்கையென்பு தால் 'பிணி யறியோம்' என்றார். அப்பரடிகளுக்குப் பிறந்த நாள் தொட்டுப் பிணி கிடையாது. அவர் உடலறிந்த ஒரே ஒரு பிணி சூலைப் பிணியேயாம். அந்தச் சூலையும் இயற்கைப் பிணியன்று; திருவருள் செய்த பிணி. அதனால், "அருட் பெரும் சூலை" யென்று அப்பரடிகளே குறிப்பிட்டுள்ளார்.

வாழ்க்கையில் இன்றும், என்றும் எப்பொழுதும் எவ்விடத்தும் இன்பமே யிருத்தல் வேண்டும். எந்நாளும் துன்பங்கள் கூடாது. அத்தகைய ஓர் உயரிய வாழ்க்கையை அப்பரடிகள் வையகத்திற்குக் காட்டுகின்றார். அந்த வாழ்க்கை ஏன் கிடைக்கவில்லை? அந்த வாழ்க்கை எப்பொழுது கிடைக்கும்? துன்பக் கலப்பில்லாத இன்பமே எழில் உருவமாகக் கொண்ட சங்கரனின் திருத்தாளை நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து, பொறி புலன் களெல்லாம் அத்தன்மையவாகி, அவன் தன் திருவடியை நாம் அண்ணித்து அடையும்பொழுது அவலங்கள் வாரா. இன்பமே! இன்பமே! இன்பமே! என்பது அப்பரடிகள் காட்டிய நெறி.

# 30

# ஜீவா பார்வையில் அப்பரும் மணிவாசகரும்

அமரர் ஜீவா பொதுவுடைமைச் சித்தாந்தத்தில் துறை போய அறிஞர். பொதுவுடைமை வாழ்க்கையை இப்பூவுலகம் முழுதும் வளர்க்க வேண்டும் என்ற நோக்கத்திற்காகவே வாழ்ந்தவர். தாமரைத்தண்டு மண்ணோடு தொடர்பு கொண்டேயிருக்கிறது. அதன் மலர் விண்ணிலே உலவும் கதிரவனை நோக்கி மலர்கிறது. விண்ணுக்கும் மண்ணுக்கும் ஓர் அரிய இணைப்பை அங்கு பார்க்கிறோம். அதுபோல, அமரர் ஜீவாவின் சிந்தனைக் கால்கள் தமிழக நாகரிகத்திலேயே பரவிநின்றன. ஆயினும் அவர் சிந்தனை மார்க்சிய சித்தாந்தத்தை நோக்கி மலர்ந்தது. இவ்விரு கருத்துக்களுமிடையே எழுத்தால்- பேச்சால் இணைப் பூட்டின இணையற்ற சிற்பி அமரர் ஜீவா. அவர்தம் வாழ்க்கையில் நிகழ்ந்த ஓரிரு சம்பவங்களைப் பின்னணி யாகக்கொண்டே இக்கட்டுரை அமைகின்றது.

திருச்சி தேவர் மன்றம் விழாக்கோலம் பூண்டு விளங்குகிறது. 20-ஆம் நூற்றாண்டின் சமய மறுமலர்ச்சி இயக்கமாகிய அருள்நெறித் திருக்கூட்டத்தில் கொடிகள் அரங்கை அலங்கரித்திருந்தன. நெற்றி நிறைய நீறு பூசிய

இளைஞர்களும், பெரியவர்களும் தேவர் மன்றத்தில் நிரம்பி வழிந்தனர். உயிருருக்கும் பாட்டினைத் தந்த மாணிக்க வாசகரின் திருவுருவம் அரங்கில் காட்சியளித்தது. திருவாசகப் பாடல்கள் பாடப்பெற்றன. இதற்கிடையில் அவையில் கையொலி – ஆரவாரம். அவையிலிருந்தோர் மன்றத்தின் நுழைவாயில் நோக்கிப் பார்வையைச் செலுத்தினர். கட்டான உடல். முறுக்கேறாத மீசை. கையில் ஓர் ஏடு. ஆகியவற்றோடு ஜீவா உள்நுழைந்து வந்து கொண்டிருந்தார். அவரை அந்த விழா அரங்கில் பார்த்ததில் பலருக்கு மட்டற்ற மகிழ்ச்சி. கருத்து வேறுபாட்டிலும் கலந்து பழகும் பண்பை நினைவுறுத்தும் நற்காட்சி என்று ஒருமைப்பாட்டுணர்வுடையோர் பேசிக்கொண்டார்கள். அதிபக்திமான்களுக்கு அச்சம். நாத்திகர் திருவாசக விழாவில் பேசுவதா என்ற கேள்வி–குமுறல். அமரர் ஜீவா அவர்கள் அரங்கில் வந்தமர்ந்தார். தவத்திரு அடிகளார் இன்ப அன்பு தழுவ வரவேற்றார். அமரர் ஜீவா அவர்கள் பேசத் தொடங்கினார். திருவாசக விழாவில் திருவாசகம்பற்றி அமரர் ஜீவா பேசினார். என்ன அற்புதம்! மணிவாசக பக்தர்களும்கூட இவ்வளவு பெரிய பக்தியை மாணிக்க வாசகருக்குக் காட்டியிருப்பார்களா என்பது சந்தேகம்தான். மிக அழகாக மரபு பிறழாமல் பேசினார். ஆனாலும் பார்வை தமது சொந்தப் பார்வையே! இல்லை. அப்படிச் சொல்வது சுத்தப் பொய்! நியாயமாகப் பார்த்தால் மாணிக்கவாசகர் பார்வைக்கும் அமரர் ஜீவா பார்வைக்கும் வேற்றுமையே இல்லை. இதுவே உண்மை. அன்று அவர் எடுத்துக்கொண்ட பாடல் "வான் பழித்து இம் மண் புகுந்து மனிதரை ஆட்கொண்ட வள்ளல்" என்ற பாடல். இந்தப் பாடலின் பொருள்நலம் அமரர் ஜீவாவின் சொல்லாற்றலால் புதுநலம் பெற்றது. பொது நலமும் பெற்றது. "இறைவனே மனிதரை ஆட்கொள்ளுவதற்காக–ஞானியரை ஆட்கொள்ளுவதற்காக அல்ல–அர்ச்சகர்களை ஆட்கொள்ளுவதற்காக அல்ல–நிலப்

பிரபுத்துவத்தின் மறுபதிப்பாக விளங்குகின்ற தர்மகர்த்தாக் களை ஆட்கொள்வதற்காக அல்ல-மடாதிபதிகளை ஆட் கொள்வதற்காகவும் அல்ல. மனிதரை-சாதாரண மனிதரை கருப்பனை-சிகப்பனை ஆட்கொள்ளுவதற்காக இறைவனே இம்மண்ணுலகிற்கு வருகின்றான்," என்று அவர் முழங்கிய போது அரங்கத்தில் கையொலி அலையென எழுந்தது! மீண்டும் தொடர்ந்தார்: "ஆட்கொள்ளும் வேலையின்மை யால் வானையே பழிக்கின்றான் கடவுள். இன்றையச் சமயமோ வேலை செய்வதைக் குற்றமெனக் கருதி, உண்டு உறங்கி வாழ்கிறது. ஜீவா கம்யூனிஸ்ட். கம்யூனிஸ்ட் ஜீவா சொல்லுவதைக் கேட்க வேண்டாம். உங்கள் மாணிக்கவாசகர் சொல்லுவதையாவது கேட்க வேண் டாமா? மனிதன் பட்டினியால் நோயால் வாடியலையும் போது அவனை ஆட்கொள்ளும் பொறுப்பு யாருக்கு? மாணிக்கவாசகரைப் பாராட்டும் பரம்பரையினருக்கு இல்லையா? நெஞ்சில் கை வைத்துச்-சொல்லுங்கள்" என்று அவர் ஆவேசத்தோடு கேட்டபோது அரங்கில் உருக்கம் கலந்த அமைதி நிலவியது. அன்று அவர் பேசிய பேச்சில் சைவத்தின் சின்னமில்லை-சடங்கில்லை. ஆயினும் அதன் சாரமிருந்தது.

பிறிதொரு நாள் இராமநாதபுர மாவட்டத்தில் உள்ள திருப்புத்தூரில் திருத்தளிநாதர் திருக்கோயிலில் திருமுறை விழா மேடையில் நால்வர் சந்நிதியில் அமரர் ஜீவா நின்று, 'நான் கண்ட அப்பர்' என்ற பொருள் பற்றிப் பேசியது இன்றும் அத்திருக்கோயிலில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. அப்பூதியடிகளே அமரர் ஜீவா வடிவில் வந்து அப்பரடி களைப் போற்றிப் புகழ்வது போலிருந்தது! கம்பீரக் குரலில் "நாமார்க்கும் குடியல்லோம்" என்ற பாடலை அவர் இடி முழக்கமென எடுத்துக் காட்டினார்: "உலகில் முடியாட்சியை எதிர்த்து போராடியவர்கள் வரிசையில் அப்பரடிகளும் நிற்கின்றார். அவர்தம் பெயரை நானிலமும் நாடும்

அறியாமல் சிலையாக்கி சிறைப்படுத்தி வைத்திருக்கும் சைவர்களின் நிலைமையை நான் என்னென்பேன்" என்று கூறியபோது அவை மெய்சிலிர்த்தது. ஆவேசம் கொண்டது. 20–ஆம் நூற்றாண்டின் வரையிலும்கூட நிறபேதத்தை ஒழிக்காத மேலைநாடுகள் உண்டு. 7–ஆம் நூற்றாண்டிலேயே சாதி இன வேறுபாடுகளைச் சாடிய பெருமை அப்பரடி களுக்கு உண்டு. அவர்தம் ஒருகுல நெறி பேணாமல் இன்றைய கோயில்களும் மடங்களும் சாதி குலவேற்றுமைகளை மேலும், மேலும் வளர்த்து வருகின்றன. அவர்களுக்கு அப்பரடிகள் பெயரைச் சொல்ல உரிமை ஏது? நான் கம்யூனிஸ்டாக இருந்தாலும் எனக்கே அந்த உரிமை உண்டு என்று அப்பரடிகள் மீது உரிமை கொண்டாடினார் ஜீவா! பின், அப்பரடிகள் பாடல்களில் பல்வேறு பாடல்களை எடுத்துக் காட்டினார். 'இரப்பவர்க்கு ஈய வைத்தார். ஈபவர்க்கு அருளும் வைத்தார், கரப்பவர் தங்கட்கெல்லாம் கடு நரகங்கள் வைத்தார்' என்ற திருப்பாடலை அவர் சிந்தனை கலந்த நகைச்சுவையுடன் விமரிசனம் செய்தது இன்றும் மறக்க முடியாத நிகழ்ச்சி. பசி என்று கேட்பவனுக்குக் கொடுத்து வாழ்பவனுக்கே திருவருள். இல்லை யென்று கூறி வஞ்சித்து வாழ்பவனுக்கு நரகம். இது அப்பரடிகள் கருத்து-இல்லை ஆணை! இன்றோ சமயநெறி நிற்பவர்கள் கொடுக்காதது மட்டுமல்ல-கொள்வதையே கடமையாகக் கொள்ளுகிறார்கள். பலரை வஞ்சித்து வாழ்பவர்களும் இன்று மிக எளிமையாகச் சமயப் போர்வை போர்த்திக் கொள்ளு கிறார்கள், என்று உணர்ச்சி ததும்ப எடுத்துக் காட்டியபோது அவையில் அமைதி நிலவியது.

இங்ஙனம் மார்க்சீய சித்தாந்தத்தில் ஊறிய அமரர் ஜீவா, இந்த நாட்டுக் கவிஞரை – பண்பாட்டை மறக்காமல் பாராட்டியது பெருமைக்குரியது – பாராட்டுதற்குரியது; அமரர் ஜீவா, இயற்கையிலே ஒரு சிந்தனையாளர். சமுதாய மாற்றத்தைச் சர்வாதிகாரம் ஆட்சி செய்யும் நாட்டில்

சட்டத்தின்மூலம் கொண்டு வரலாம்-மக்களாட்சிமுறை நடைபெறும் நாட்டில் கருத்து வளர்ச்சி-மனமாற்றத்தின் மூலமே கொண்டுவரவேண்டும் என்ற நம்பிக்கை அமரர் ஜீவாவுக்கு உண்டு. அதற்கெனவே, அவர் 'கலை இலக்கியப் பெருமன்றத்தைக் கண்டார். பட்டிதொட்டிகளில் தமிழகப் பண்பாட்டை முற்போக்கு அணியின் சார்பில் பரப்ப அமைப்பினைக் கண்டார். நாளும் வளர்த்தார். அந்தப் பணியைத் தொடர்ந்து செய்யும் பொறுப்பை ஏற்றுக் கொண்ட கலை இலக்கியப் பெருமன்றத்திற்கு நமது பாராட்டுக்கள்!

இறைவனைப் பெறுவது எப்படி? பிற சமயங்கள் 'தட்டினால் கதவு திறக்கப்படும்' என்று சொல்லும். தட்டும் சக்தி வந்துவிட்டால் கதவு திறக்க இன்னொருவரும் வேண்டுமோ? தட்டும் பதவி பெற்ற ஒருவர் அக் கதவினை உதைத்து, உடைத்து உள்ளே நுழைய முடியாதோ? மேலும் தட்டின பிறகு கதவு திறப்பதில் என்ன பெருமை இருக்கிறது? அதற்குக் கருணை என்றா பெயர்? வலிய உதவி செய்யும் (Volunteer Service) பண்பே வாழ்த்தப் பெறுகிறது. நம்முடைய வழிபடும் தெய்வமாகிய முருகன், தட்டாமலேயே கதவு திறப்பவன்; அதனாலன்றோ 'அவனருளாலே அவன் தாள் வணங்கி' என்று திருவாசகம் பேசுகிறது! நாம் திருவருளைப் பெறவேண்டும். அவ்வின்பத்தைப் பெற்று வாழவேண்டும் என்று விரும்பி முனைவதைவிட நமக்கு அத்திருவருள் நலத்தை வாரி வழங்கவேண்டும் என்றே திருவுளங் கொண் டுள்ளான் முருகன். வந்த பிறகு வாரி வழங்கவில்லை. இதைத்தான் 'வாரி வழங்குகின்றான் வந்து முந்துமினே' என்கிறார் மாணிக்கவாசகர். இக்கருத்தினைத் திருவாச கத்தில் பல இடங்களில் பரக்கக் காண்கின்றோம். இறைவன் திருவருள் வழங்குகின்றமையைப் 'பால் நினைந் தூட்டும் தாயினும் சாலப் பரிந்தூட்டும்' என்கிறார். அழுதபின் ஊட்டும் தாய் அவ்வளவு சிறப்புடையளல்லள். அழாம லேயே காலத்தையும் பசியையும் கருத்திற் கொண்டு

நினைந்தூட்டும் தாய் சிறப்பானவள். இறைவனாகிய தாயும், இத்தகைய தாயையும்விடச் சிறந்த முறையில் அருள் வழங்குகின்றான். 'நினைந்தூட்டும் தாயினும்' என்ற வரி நினைந்து நினைந்து மகிழத்தக்கது. இந்த வரியின் பொருளைத் திருக்குறள் இன்பத்துப்பால் தெளிவாக விளக்குகிறது. தலைவன் தலைவியிடம் 'உன்னை நினைந்தேன்' என்று கூறினான். உடனே தலைவி அழுதாள். 'ஏன்?' என்று தலைவன் கேட்கத் தலைவி, 'நினைந்தேன்' என்றால் நினைப்பதற்கு முன் மறந்ததும் உண்டன்றோ? என்கிறாள். மறதிக்குப் பின் தோன்றுவதே நினைவு. இறைவன் நினைந்தருள் வழங்கினான், என்றால் ஒருபோது மறந்தானோ என்ற கேள்வியும் எழும். அவன் ஒருபோதும் உயிர்களை மறக்கவில்லை என்பதைக் குறிக்கவே மாணிக்கவாசகர் இங்ஙனம் குறிப்பிடுகிறார்.

இறைவனின் திருவருளின்பம் நாம் பெறுவதல்ல– அவன் வழங்குவதேயாம். வான்பழித்து, மண் புகுந்து மனிதர் களை ஆட்கொள்கிறான். அவனுடைய திருவருளினாலேயே நாம் ஆட்கொள்ளப் பெறுகின்றோம். அவன் நம்மை ஆட்கொள்வதற்காகவே கோலங்கள் தாங்குகின்றான். ஆயிரம் திருநாமங்கள் பெறுகின்றான். எனவே, இறைவனை நாம் தேடிப் பெறுவதில்லை. அவனே நம்மை நோக்கி ஓடி வருகிறான். அவன் ஓடிவரும்போது நாம் அவனை இழக் காமல் பற்றிக் கொள்ளவேண்டும். மழையை நோக்கி மனிதன் போவதில்லை. மழைவளந்தரும் புயல் வானிலே பரவி வான் வீதியில் வருகிறது. அப்புயலைத் தீண்டி நீர்த் துளிகளாக மாற்றி மழையாகப் பெற மண்ணகத்தே குளிர்காற்றுத் தேவை. குளிர்ந்த காற்றுள்ள இடத்தில் மழை நிறையப் பெய்கிறது. மண் வளம் செழிக்கிறது. அது போலவே இறை வனுடைய திருவருள், வேற்றுமையின்றி எங்கும் பரவிக் கிடக்கிறது. அதைத் தனக்குப் பயன்படுத்திக் கொள்ள நம்முடைய நெஞ்சத்தைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும். ஆதலால்தான் நாம் இறைவனைத் தேடிப் போவதில்லை. அப்படித் தேடிப் போவதாலும் அவனைக்

காண முடியாது என்ற கருத்தை அருணகிரியார் அழகாக - தெளிவாக விளக்குகிறார்.

மனித மனம் ஒரு புரியாத புதிர் - அது செல்லக்கூடிய வேகம், மின் அணு அலைகள் செல்லும் வேகத்தைவிட அதிகமானது. அது எங்கும் செல்லும்-எப்போதும் செல்லும். சிறகடித்துப் பறந்து செல்லும். அது நல்லதா? தோட்டத்தில் மேயும் மாடு பட்டிக்குப் போகிறது. அடுத்த வீட்டு வாழ்வில் உலாவி மேயும் மனத்தை எந்தப் பட்டிக்கு அனுப்புவது? மாட்டை அடக்கப் பட்டி, மனத்தை அடக்கப் பக்தி. பட்டியில் அடைத்த மாடு வேறு வழியால் வெளியே போய்விட்டால் பட்டியால் பயனில்லை. பக்தியிருந்தும் பலர் வாழ்வில் மேய்ந்தால் அந்த பக்தியால் பயனில்லை. 'தடுங்கோள் மனத்தை' என்று ஆணை இடுகிறார் அருணகிரியார். கண்டபடி மேயும் மாட்டைக் கட்டிப் போட்டால் பொறுமையாக இருக்குமா? ஆத்திரப்படும், அறுத்துக்கொண்டு போக முயற்சிக்கும் - தடுத்து நிறுத்தப் போனால் கோபத்தோடு முட்டும். விரைந்து வேகமாகச் செல்லும் மனத்தைத் தடுத்து நிறுத்தி வாழாது போனால் வெகுளி வாழ்க்கையை வெருட்டும். ஆதலால்தான் 'விடுங்கோள் வெகுளியை' என்றாணையிடுகிறார். மனத்தின் வேகத்தைத் தடுத்து நிறுத்தினமையையும், வெகுளியை விட்டொழித்தமையையும் காட்டுவன தன்னலச் சார்பு அழிதலும் பிறர் நலப்பற்றுக் கால்கொள்ளுதலுமேயாம். அப்பொழுது எதுவும் தனக்கு மட்டும் உரியதல்ல-பிறர்க்கும் உரியதாகும். ஏன்? தாம் அனுபவிப்பதைவிட பிறரை அனுபவிக்கச் செய்வதிலேயே ஆனந்தம் காண்பர் மேலோர். இங்கேதான் பிறக்கிறது தானம். இப்படிச் செய்வதற்குத்தான் தானம் என்று பெயர். இன்றைய வழக்கில் தானம் என்றால் பாவக் கழுவாய்க்காக வணிகக் கண்ணோட்டத்தோடு இன்னாருக்குத்தான் கொடுப்பதென்ற வரையறையோடு நடைமுறை இருந்து வருகிறது. அது சரியன்று. இதனால் 'தானம் என்றும் இடுங்கள்' என்று ஆணையிடுகிறார். இவ்வளவும் இருந்தாலும் போதுமா? சிலர் பரப்பாகவே திரிவார்கள்.

அமைதியாக எதையும் பார்க்கும்-அநுபவிக்கும் ஆற்றலற்றவர்களாகப் பலர் இருப்பார்கள். தாமும் மாறுவார்கள். பிறரையும் தம் வழி மாற்ற முயற்சிப்பார்கள். எல்லாவற்றையும் தாமே தாங்குவது போல எண்ணிக் கவலைப் படுவார்கள். அஃது ஆன்மிக வளர்ச்சியின்மையின் சின்னம். இதற்கே 'இருந்தபடி இருங்கள்' என்று ஆணையிடுகின்றார். இருந்தபடி இருப்பதென்றால் உடலால் சோம்பியிருப்பதைச் சொல்லவில்லை. அதற்குப் பெயர் சோம்பேறித்தனம். 'சித்தம் அடக்கிச் சிவாயநம' என்று இருப்பதையே இங்ஙனம் கூறுகிறார்.

*நன்றே செய்வாய் பிழை செய்வாய்*
*நானோ இதற்கு நாயகமே*

– என்று இருத்தலே இருந்தபடி இருத்தல் என்பதாம். இங்ஙனம் ஆழ்ந்தால் முருகனைத் தேடிச் செல்லவேண்டாம். அவன் திருவருளைத் தேடி அடைய வேண்டாம். வேல் தாங்கும் முருகனின் திருவருள் வலியத் தானே வந்து வெளிப்படும் என்கிறார் அருணகிரியார். 'அருள் வந்து தானே உமக்கு வெளிப்படுமே' பாடலை முழுதும் ஒருமுறை படித்துப் பாருங்கள்.

*தடுங்கோள் மனத்தை; விடுங்கோள்*
*வெகுளியை; தானமென்றும்*
*இடுங்கோள்; இருந்தபடி இருங்கோள்*
*எழுபாரும் உய்யக்*
*கொடுங்கோபச் சூருடன் குன்றந்*
*திறக்கத் துளைத்த வைவேல்*
*விடுங்கோள் அருள்வந்து தானே*
*உமக்கு வெளிப்படுமே.*

இப்பாடலை முறையாகச் சிந்தித்து அவன் அருள் நம்மிடை வலிய வந்து மேவி நின்று விளங்கிப் பயன்தரும் வண்ணம் வாழ முயற்சிப்போமாக!

# 31

# திருநாவுக்கரசர்

தமிழகம், வழிவழி வரலாற்றுச் சிறப்புடையது. தமிழகம், அரசியல் வரலாற்றுச் சிறப்புக்கள், மிகுதியும் பெறாது போனாலும், அருளியல் துறையில் இந்தியத் துணைக் கண்டத்தில் தனிச் சிறப்புடைய வரலாறு பெற்றதாகும். பேசும் மொழியையும், கொண்டு ஒழுகிய நெறியையும் வாழ்க்கையோடு இசைத்த பெருமை தமிழர்க்கு உண்டு. வாழ்க்கை வேறு; மொழி வேறு; சமயம் வேறு என்ற நிலை தமிழகத்தில் என்றும் இருந்ததில்லை. தமிழ் இலக்கியங்கள் வாழ்க்கையை மையமாகக் கொண்டே தோன்றின. சமய நெறியும் அங்ஙனமேதான். அதனாலன்றோ சேக்கிழார் தமிழகச் சமய நெறியினைச் "செழுந்தமிழ் வழக்கு" என்று போற்றுகின்றார்.

இங்ஙனம், சமய நெறியில் வழிவழி வரலாற்றுச் சிறப்புக்கள் உள. என்றாலும், இடையில் சமய சமுதாய வாழ்க்கையில் தொய்வு தோன்றாமல் இருந்துவிடவில்லை. சமய நெறியை மேற்கொண்டு ஒழுகுவதில் ஏற்பட்ட தொய்வுகளையும், தூயநெறியல்லாத பொய்ந் நெறி நுழைவையும் அயல் வழக்கின் குறுக்கீட்டையும் நீக்கித்

தமிழகச் சமய நெறியைப் பேணிக் காக்கக் காலத்திற்குக் காலம் ஞானிகள் தோன்றியுள்ளனர்.

தமிழக வரலாற்றில் ஏழாம் நூற்றாண்டு விழுமியது. வரலாற்றுச் சிறப்புடைய இந்த நூற்றாண்டில்தான் ஞானத்தின் திருவுருவாக, நான்மறையின் தனித்துணையாக ஞாலமுய்ய, நாமுய்ய, சைவ நன்னெறியின் சீலமுய்யத் திருஞான சம்பந்தர் திருவவதாரம் செய்து, திருநெறிய தமிழின் மூலம் புறச்சமயப் பகை கடிந்து நமது சமய நெறியை வளர்த்தார். இதே நூற்றாண்டில் திருநெறிய தொண்டின் நெறி வாழத் திருநாவுக்கரசர் திருவவதாரம் செய்தருளினார். ஞாலத்தின் இருள்நீக்கும் ஞாயிறெனத் திருஞானசம்பந்தரும் திங்களெனத் திருநாவுக்ககரசரும் தோன்றிப் பணி செய்தருளினர்.

அப்பரடிகள் சான்றாண்மைக்குச் சான்றாக விளங்கிய தொண்டை நாட்டின் தென்பால், திருவாமூர் என்னும் திருப்பதியில் வழிவழி தாளாண்மையிலும் வேளாண்மை யிலும் நனி சிறந்த குடும்பத்தில் திருவவதாரம் செய்தார். அப்பரடிகள் இளமையிலேயே பெற்றோரை இழந்து, பெருகிய தவத்திற் சிறந்த தமக்கையார் திலகவதியாரால் வளர்க்கப்பெற்றார். அப்பரடிகளுக்கு இளமைக் காலம் தொட்டு ஆறாத அறிவுப்பசி. இந்த அறிவுப்பசியோடு பெற்றோர் பிரிவுத் துன்பமும் சேர, துன்ப நீக்கத்திற்கு வழியெது என்று ஆராயும் வகையில் “துறத்தலே துன்ப நீக்கத்திற்குரிய வழி” என்ற நெறியைக் காட்டும் சமண சமயத்தைச் சார்ந்தார்.

சமண சமயத் தத்துவ நூல்களைத் துறைபோகப் பயின்றார். சமண முனிவர்களாலேயே ‘தருமசேனர்’ என்று பாராட்டப்பெற்றார். தம்பியைப் பிரிந்த தமக்கை திலகவதியார் - திருவாமூரினின்றும் நீங்கித் திருவதிகை திருத்தலம் சென்று நாளும் தவம் செய்தார். உடன் பிறந்த

தம்பி, மருள் நீங்கி, திருந்தியமனத்துடன் அருள்நெறி சார்ந்திடத் தவம் செய்தார். தவம் பலித்தது. எம்பெருமானின் அருளிப்பாடாக மருள்நீக்கியாரைச் சூலை நோய் பற்றியது. சமண, சமய முறைகளில் சமண முனிவர்களால் சூலை நோயை மாற்ற இயலவில்லை. கூற்றைப்போலக் கொடுமை செய்த கொடிய சூலையில் வாடிய மருள்நீக்கியார் திலகவதியாரை அடைக்கலம் புகுந்தார். அன்னையிற் சிறந்த திலகவதியார் மருள்நீக்கியாருக்குத் "திருவாளன் திருநீறு" தந்தருளித் திருக்கோயில் வழிபாட்டுக்கு ஆற்றுப்படுத்தினார். இதுவும் திருமுறை மரபில் தீட்சைமுறை. மருள்நீக்கியாரை மயக்கித் துன்புறுத்திய சூலையினின்றும் விடுதலை பெற்றார்; திருநாவுக்கரசரானார் **"பண்ணார் இன்தமிழ்"** பாருக்குக் கிடைத்தது.

அப்பரடிகள் பிற சமயத்தினின்று தாம் பிறந்த சமயத்திற்கு மீண்டார். இந் நிகழ்ச்சியைத் தொடர்ந்து தமிழகத்தில் சமயப்பூசல் கால் கொண்டது. எப்பொழுதும் நம்முடைய சமய நெறியாளர்கள் பிற சமயங்களைத் தாக்கும் வழக்கமுடையவரல்லர். வழிவழி சிவநெறியில் தோன்றிய மருள்நீக்கியார் சமண நெறியைச் சார்ந்தபொழுது, யாரும் எதிர்க்கவில்லை. ஆனால், மருள்நீக்கியார் திரும்பத் தம் முடைய தாய்ச் சமயத்திற்கு வந்தபொழுது சமணர்கள் அரசின் துணைகொண்டு அவருக்குக் கேடு பல செய்தனர். அப்பரடிகள் திருவருள் துணை கொண்டு பகைப்புலத்துச் சோதனைகளில் வெற்றி பெற்றார். அப்பரடிகள் மூலம் தமிழகமே தம் வழிவழி மரபுகளைப் பாதுகாத்துக் கொண்டது.

தமிழகத்தில் அப்பரடிகள் உலா வந்தது ஏழாம் நூற்றாண்டில். உலகம் முழுவதும் ஏழாம் நூற்றாண்டில் மக்களின் சமூக வாழ்க்கை முறை பற்றிய கருத்துக்கள், சமய வாழ்க்கை ஆகியன எப்படியிருந்தன என்று அறிந்து கொண்டாலே, அப்பரடிகளின் அருமை நமக்கு விளங்கும்.

ஏழாம் நூற்றாண்டில் உலகத்தின் எந்தப் பகுதியிலும் சுதந்திர வேட்கை கால்கொள்ளவில்லை. மன்னனை மையமாகக் கொண்ட முடியாட்சி நிலவியது. "அரசனின் ஆணையை யாரும் மீற முடியாது; மீறக்கூடாது. ஏன்? அரசன் ஆணை தெய்வத்தின் ஆணை; அரசனது அதிகாரம் தெய்வத்தால் வழங்கப்பெற்ற அதிகாரம்" என்ற கருத்து, ஆட்சி செய்து கொண்டிருந்தது. ஆனால் அப்பரடிகள் பல்லவப் பேரரசன் ஆணையை மறுக்கின்றார். தனி மனித சுதந்திரத்திற்கு முதல் முழக்கம் தந்தவர் அப்பரடிகளேயாம். சமண முனிவர்களுடைய ஆலோசனையின் வழி, அப்பரடிகளின் தனிப் பட்ட சமய வாழ்க்கையில் பல்லவப் பேரரசன் குறுக் கிட்டதை அப்பரடிகள் வன்மையாக மறுக்கின்றார். ஆணைக்குக் கட்டுப்பட மறுக்கிறார். உலக மனித சமுதாயத் தின், முதல் விடுதலைப் பாட்டு முகிழ்க்கிறது; முழங்குகிறது.

நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலையில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே எந்நாளும் துன்ப மில்லை
தாமார்க்கும் குடியல்லாத் தன்மை யான
சங்கரன் நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடி இணையே குறுகினோமே.

பாடல் இது: இது விடுதலை முழக்கம்;

மரணமிலாப் பெருவாழ்க்கை; துன்பம் நீங்கிய தூய வாழ்க்கை; நின்ற சீலத்தால் பெற்ற ஏமத்தின் முழுயாப்பு (கலப்பு); பிணி நீங்கிய பெருமிதம். ஆம்; அடிமை வாழ்க்கையில் மரணமிலாப் பெருவாழ்வு கிடைக்குமா? அடிமை வாழ்க்கையே ஒரு நரகம் தானே; அடிமை வாழ்க்கை ஒரு நடைப் பிண வாழ்க்கை; அடிமை வாழ்க்கையில் பாதுகாப்பு ஏது? அடிமை வாழ்க்கை உடற்

பிணிகளையும் உயிர்ப் பிணியையும் ஆக்கும். அடிமை வாழ்க்கையின் அவலங்களை எதிர்மறையால் சுட்டிக்காட்டி அடிமை விலங்கை அறுத்தெறியச் சொன்ன முதற் கவிஞர் அப்பரடிகளேயாவார். சுதந்திரமான ஆன்மாவால்தான் இறைவனை அணுக முடியும். அனுபவிக்க முடியும். கோழைமையும் கொத்தடிமைப் புத்தியும் உடையவர்கள் அச்சத்தின் அடிமைகள்; அருள்நெறிக்குப் புறம்பானவர்கள். ஆண்டவன் அவர்களை ஏறெடுத்தும் பாரான். சுதந்திரம் இறையருளின் நியதி; இதனை அப்பரடிகள் தமது பாடலில் தெளிவாக விளக்குகின்றார். பல்லவப் பேரரசன் ஆணையை மறுத்து, அரசனைப் பார்க்க மறுத்துவிட்டார். அப்பரடிகளது வழியினைத் தொடர்ந்தே பாரதி,

> பூமியில் எவர்க்கும் இனி அடிமைசெய்யோம் - பரி
> பூரணனுக்கே அடிமை செய்து வாழ்வோம்,

என்றான்.

ஆக, அரசியல் அடிமைத் தனத்தை எதிர்த்துப் போராடியதில் "வால்டேரு"க்கும் "ரூஸ்ஸோ"வுக்கும் "ஜார்ஜ் வாஷிங்டன்"னுக்கும் முன்னோடி, அப்பர் அடிகள் என்பதே உண்மை.

அப்பரடிகள் வாழ்ந்த காலம் ஏழாம் நூற்றாண்டு; இன்றைக்கு ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு. நாம் வாழும் இந்தத் தலைமுறையில், புதியன என்று கருதிப் போற்றும் கொள்கைகள் பல உண்மையில் புதுமையல்ல. அவை, இந்த நூற்றாண்டுக்கும் உரியனவல்ல. இந்தச் சமயத்தில் நிலவும் சாதி வேற்றுமை மிகக் கொடுமையானது. அறிந்தோ அறியாமலோ இந்தச் சாதி வேற்றுமை பல நூறு ஆண்டுகளாகப் பேணப் பெற்று வருகிறது. இந்து சமய நிறுவனங்கள், திருக்கோயில்கள், திருமடங்கள் அப்பட்டமான சாதீய நிறுவனங்களாக உருப்பெற்று விட்டன. இவைகள் இன்று சமய நெறியைக்காக்கும் நிறுவனங்களாக, சமய

வழிப்பட்ட பொதுமைச் சமுதாயத்தைக் காக்கும் நிறுவனங்களாக விளங்காமல், சாதிகளையே காப்பாற்றி வருகின்றன. அப்பரடிகள் சாதி வேற்றுமைகளை மிகக் கடுமையாகச் சாடுகிறார். இன்றே போல, அன்றும் சாத்திரங்களை ஆதாரமாகக் காட்டிச் சாதி வேற்றுமைகளை நியாயப்படுத்தி அப்பரடிகளிடம் வழக்காடியுள்ளனர் சனாதானிகள். தண்ணருள் சார்ந்த நெஞ்சம் உடைய அப்பரடிகள் இந்தச் சனாதனிகளின் வீண்வம்படி வழக்கைத் தாங்க முடியாமல் திருப்பிக் கடுமையாகவே ஏசுகின்றார்.

*சாத்திரம்பல பேசும் சழக்கர்காள்*
*கோத்திரமும் குலமுங் கொண்டு என் செய்வீர்*
*பாத்திரம் சிவமென்று பணிதிரேல்*
*மாத்திரைக்குள் அருளும்மாற் பேறரே!*

என்பது அப்பரடிகள் வாக்கு. மக்கள் சிவத்தின் அருளைப் பெற்று நடமாடக் கோயில் எனப்படுவர். திருமூலர் வாக்கில் சிவம் எழுந்தருளுதற்குரிய நடமாடும் கோயில்கள்! அங்ஙனம் நடமாடும் உயிர்வர்க்கத்தின் அருமையை உணராமல், குலம் கோத்திரம் சொல்லி ஒதுக்குதல் நீதியுமன்று; நெறியுமன்று. பிறப்பில் வேறுபாடு காட்டுதல் பெருநெறி அன்று. சீலத்தின் காரணமாக வேறுபாடு காட்டினாலும் காட்டலாம். அதனைக் கூட அப்பரடிகளின் அருள் நெஞ்சம் ஏற்றுக் கொள்ளவில்லை.

*சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து*
*தரணியொடு வானாளத் தருவ ரேனும்*
*மங்குவார் அவர்செல்வம் மதிப்போம் அல்லோம்*
*மாதேவர்க் கேகாந்த ரல்லா ராகில்*
*அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோயராய்*
*ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்*
*கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில்*
*அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே,*

என்பது அவர் திருப்பாட்டு. ஏகாந்தர் = அன்பர்.

அப்பரடிகள் வல்லடி வழக்கில் வாழ்வாரை மைய மாகக் கொண்டு சுற்றி வட்டமிடும் சமயத்தை விரும்பி னாரில்லை. அவர். சனாதனிகள் காட்டும் காரணங்களைக் கூட மறுக்கிறார். சனாதனிகள், இந்த நாட்டில் ஆயிரம் ஆயிரமாக இருக்கும் தாழ்த்தப்பட்ட மக்களைப் பசுவைத் தின்னும் புலையர்கள் என்று பழி சுமத்தினார்கள். தொழு நோயர்கள் என்று கூறினார்கள். அப்பரடிகள் அந்த விவாதத்தை மறுக்கிறார். புலைத்தன்மை நீங்கத்தானே புண்ணியனடி நண்ணுகிறார்கள். அங்ஙனமிருக்கப் புலை யரென்று புறத்தே தள்ளுவது என்ன நியாயம், என்பதே அப்பரடிகள் கேள்வி? அப்பரடிகள் மக்களை வாழ்த்தவும் - வணங்கவும், அணைக்கவும்-அன்பு செலுத்தவும் ஒரே விதி தான் வகுக்கிறார். அவர்கள் "கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பராகி" இருக்க வேண்டும் என்பதுதான் அந்த விதி.

பழந்தமிழகத்தில் - திருக்கோவில்களில் இன்று ஆதிக்கம் செய்கின்ற சாதி முறைகள் இருந்ததில்லை. எல்லோரும் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள இறை வனைப் பூவும் நீருமிட்டுப் போற்றி வழிபட்டுள்ளனர். அப்பரடிகள்,

*ஆக்கை யாற்பயனென்-அரன்*
*கோயில் வலம் வந்து*
*பூக்கையா லட்டிப் போற்றியென் னாதஇவ்*
*ஆக்கையாற் பயனென்?*

என்று வினவுகின்றார். இங்ஙனம் சாதி குல வேறுபாடுகளைக் கடந்து திருக்கோயிலுக்குள் எழுந்தருளியிருக்கும் இறைவனைப் பூவும் நீருமிட்டு வரிசையாகச் சென்று அருச்சித்து வழிபடுவதே ஆன்றோர் மரபு. இதனைத் திருவையாற்றுத் தேவாரத்திலும் அப்பரடிகள்,

*மாதர்ப் பிறைக்கண்ணி யானை*
*மலையான் மகளொடும் பாடிப்*

போதொடு நீர்சுமந் தேத்திப்
புகுவார் அவர்பின் புகுவேன்
யாதும் சுவடு படாமல்
ஐயா றடைகின்ற போது
காதல் மடப்பிடி யோடும்
களிறு வருவன கண்டேன்
கண்டேன் அவர்திருப் பாதம்
கண்டறி யாதன கண்டேன்

என்று குறிப்பிடுகின்றார்.

அப்பரடிகள், சாதி வேற்றுமைகளைக் கடிந்ததோடு மட்டுமன்றிப் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளையும் வெறுத்தார். சமூகப் பொருளாதாரக் கொள்கையில் "தர்ம கர்த்தா முறை" என்பது ஒரு கொள்கை. இந்தக் கொள்கையை மனித குலத்திற்குத் தெளிவான வகையில் அறிமுகப் படுத்தியவர் அப்பரடிகள். இந்தத் தர்மகர்த்தாக் கொள்கை வழியில்தான், அண்ணல் காந்தியடிகளும் இந்திய சமூகத்தை வழி நடத்தினார். தர்மகர்த்தாக் கொள்கை 14, 15ஆம் நூற்றாண்டில் தான், உலகிற்குப் பரவலாக அறிமுகம் செய்து வைக்கப்பெற்றது. தர்ம கர்த்தாக் கொள்கை வழியில், செல்வம் யாரிடம் இருந்தாலும் அச் செல்வம் மக்களுடை யதே; மக்களே அச்செல்வத்தை அனுபவித்தற்குரியவர். செல்வத்தை உரிமையாகப் பெற்றவர்கள் செல்வத்தைப் பேணிப் பாதுகாத்து மக்களுக்கு வழங்கும் கடமை பூண்டவர்களே; செல்வத்தின் உரிமை முற்றான அனுபவத் திற்கு வாயிலல்ல. இந்தத் தர்மகர்த்தாக் கொள்கையின் கரு, ஏழாம் நூற்றாண்டிலேயே அப்பரடிகளின் அருள்பழுத்த நெஞ்சில் தோன்றிவிட்டது.

மருத்துவர் ஒருவர் தமக்குரிய பொருளில் பல நூறு ரூபாய்க்கு மருந்துகளை வாங்கி மருத்துவ நிலையத்தில் வைத்திருக்கிறார். அந்த மருந்துகள் அவருக்குரியன என்பதில்

கருத்து வேற்றுமையில்லை. ஆனாலும், அந்த மருந்துகள் அவருக்கு உரிமை யுடையன என்பதால் அவரே மருந்துகளை உண்ண முடியாதல்லவா? நோயுடையார்க்குத் தானே மருந்து; வறுமையைப் "பிணி" யென்றும், செல்வத்தை "மருந்து" என்றும் இலக்கிய உலகம் குறிப்பிடும். செல்வம் என்ற மருந்தைப் பெற்றிருப்பவர்கள் வறுமைப் பிணியாளர் களுக்கு வழங்கவேண்டும். அதுவே நியதி; நீதி. இந்த நீதி முறையில் வாழ்கின்றவர்களுக்கே நீதி தேவனின் அருள் கிடைக்கும். இந்த நீதியைப் புறக்கணிப்போரை நரகத்தி லேயே இறைவன் இடுவன்.

*இரப்பவர்க் கீய வைத்தார்*
*ஈபவர்க் கருளும் வைத்தார்*
*கரப்பவர் தங்கட் கெல்லாம்*
*கடுநர கங்கள் வைத்தார்*
*பரப்புநீர்க் கங்கை தன்னைப்*
*படர்சடைப் பாகம் வைத்தார்*
*அரக்கனுக் கருளும் வைத்தார்*
*ஐயன்ஐ யாற னாரே.*

இது அப்பரடிகளின் திருப்பாடல்.

அப்பரடிகள், "மக்கள் மனத்தில் வஞ்சகம் வற்ற வேண்டும்; பக்திப்புனல் பெருக்கெடுக்க வேண்டும்," என்ற நோக்குடையவர். அப்பரடிகள் பக்தியிற் சிறந்து விளங்கி னாலும், பக்தி வாழ்க்கையில் நம்மை ஆற்றுப்படுத்தினாலும் அவர் திருத்தொண்டின் நெறியை மேற்கொண்டொழு கினார். அப்பரடிகள் வரலாற்றின் சாரம் - அப்பரடிகள் அருளிச் செய்த திருமுறைகளின் சாரம் "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பதாகும். "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற வாக்கியத்தில் உலகச் சமயங்களின் பிரிவினையும், மறைகளின் (வேதங்களின்) மறை முடிவுகளின் (உபநிஷதங்களின்) சாரத்தினையும் தந்துள்ளமை உய்த்

துணரத் தக்கது. ஒரு பக்தன் திருக்கோயிலில் திருவலகு செய்வது திருத்தொண்டு. அதே பக்தன் செய்திக்கும் படத்துக்குமாக அதனைச் செய்யின் திருத்தொண்டல்ல. கடன் என்ற உணர்ச்சியில் மட்டுமே அது செய்யப்பெறின் கடமையாகும். கூலியுணர்வில் செய்யப்படும் பொழுது அது வேலையென்று சொல்லப்பெறும். பணி என்பது எல்லாவற்றிலும் உயர்ந்தது. முனைப்பின்றிப் பணிந்து செய்யப்பெறுவது பணி. முனைப்பில்லாததால் அங்கு "யானும்" இல்லை; "என்னும்" இல்லை. "நான்", "எனது" என்ற உணர்வு அற்றதால் பணியின் பயன் பற்றிய சிந்தனை இல்லை. அச் சிந்தனையின்மையால் உயர்திணையே யானாலும் - முனைப்பும், பற்றும் இல்லாத காரணத்தால் - அஃறிணை போலக் கூறப்பெறுகிறது. பழுத்தமனத்து அடியார்கள்-சீவன் முக்தர்கள் என அழைக்கப்படுதல் மரபு.

அப்பரடிகள், திருவவதாரத்தால் திருத்தொண்டின் நெறி வளர்ந்தது. அப்பரடிகளின் நெஞ்சம், இறைவன் திருவடிகளினின்று நீங்கியதே இல்லை. அப்பரடிகளின் திருக்கரங்கள் ஒருபோதும் உழவாரப் படையினை நெகிழவிட்டதில்லை. தமிழகத் திருக்கோயில்களைக் (ஏழாம் நூற்றாண்டில்) காக்கும் பணியென்று உழவாரப்பணியையே அப்பரடிகள் நம்பினார். ஆம்; இன்று தமிழகத்தின் சிற்றூர்களில் பல திருக்கோயில்கள் இடிந்து கொண்டிருக் கின்றன. ஏன்? காலத்தின் கோலமா? இல்லை, இல்லை; திருக்கோயிலின் மதில்களில்-தளங்களில் செடி கொடிகள் முளைக்கின்றன.

அவைகளை உடனுக்குடன் உழவாரப்படை கொண்டு அப்புறப்படுத்தாவிடில் செடிகள் மரங்களாகிக் கோயில்களை இடிக்கின்றன. இதனை அறிந்த அப்பரடிகள் உழவாரப் படை கொண்டு திருக்கோயில்களில் செடி கொடிகளை நீக்கும் திருத்தொண்டைச் செய்தார். இந்தப் பணியை மீண்டும் தமிழகம் முழுவதும் சமய நம்பிக்கை உடையோர் செய்ய

வேண்டும். தமிழ்நாடு தெய்வீகப் பேரவை தமிழகம் முழுவதும் இந்த - "உழவாரப் படை இயக்கத்தை" புதுப்பித்துச் செயற்படுத்தி வருகிறது. அப்பரடிகள் திருக்கோயில்களில் மட்டும் உழவாரப்பணி செய்யவில்லை. மக்கள் நடமாடும் திருவீதிகளிலும் கூட இந்தப் பணியைச் செய்திருக்கிறார். இதனையே, சேக்கிழார், 'பார்வாழத் திருவீதிப் பணி செய்வார்' என்று பாராட்டுகின்றார். அப்பரடிகள் திருத்தொண்டின் உருவமாகவே திகழ்ந்தவர். அப்பரடிகளின் கைத்திருத்தொண்டினைக் கண்டு கடவுளே மகிழ்ந்து அவருக்கு வாசியிலாக் காசு தந்தார். அப்பரடிகளை வாழ்த்தும்முறை, திருநாவுக்கரசு வளர் திருத்தொண்டின் நெறி வழி நிற்றலேயாம்.

அப்பரடிகள் சிறந்த அருட்கவிஞர். அடிகள், தாம் அனுபவித்த அருளார்ந்த அனுபவத்தினை இனிய தமிழில், எளிய நடையில் ஓதுவோர் உணர்வைத் தொடத்தக்க வகையில் வெளியிட்டுள்ளார். அப்பரடிகள், அருள் நலம் செறிந்த கவிதைகளைக் கவிதையாக மட்டுமின்றி இசைத் தமிழிற் சிறக்கப் பாடினார். அப்பரடிகளுடைய அருட் கவிதைகள் கல்லையும் உருக்கும் கனிவுடையன.

அப்பரடிகள் பழந்தமிழ் யாப்பிலக்கணத்திற்கு இசைந்த வகையிலேயே, தமது பாடல்களை அருளிச் செய்துள்ளார். இல்லை, நிறைநலம் சான்ற நெஞ்சத்துட் பிறந்த கவிதை களாதலால், இயல்பாகவே நிறை நலங்கள் வந்து பொருந்தி உள்ளன. அப்பரடிகள் "திருத்தாண்டகம்" என்ற புதுவகை யாப்பினைத் தமிழகத்திற்கு அளித்துள்ளார். திருத்தாண்டகம் பாடுவதில் அப்பரடிகள் தன்னேரில்லாதவராக விளங்கிய தால் "தாண்டகச் சதுரர்" என்றும் "தாண்டகவேந்தர்" என்றும் பாராட்டப் பெற்றுள்ளார். அப்பரடிகள் அருளிச் செய்துள்ள, ஆறாந்திருமுறை முழுவதும் தாண்டகத்திலேயே அமைந்துள்ளது. அப்பர் அடிகள் அருளிச் செய்துள்ள, திருவடித் தாண்டகப் பாடல்கள் மறைகளினும், மறை

முடிவுகளினும் மிக்குயர்ந்தன. நாள்தோறும் இத்திருவடித் திருத்தாண்டகத்தை ஓதுவோர் பக்தி நலத்திற்சிறந்து மேன்மையுறுவர். இது, முக்காலும் உண்மை.

அப்பரடிகளின் திருமுறைப் பாடல்கள் பத்திமை உணர்ச்சியில் வெளிவந்தவை யானாலும் "கைபுனைந் தியற்றாக் கவின்பெறு வனப்பே" போல இலக்கிய நயம் பொதுள அமைந்திருக்கின்றன. அப்பரடிகள் அருட்பெருஞ் சூலையினால் ஆட்கொள்ளப்பெற்ற பிறகு, திருவதிகையில் "கூற்றாயினவாறு" என்று முதற் பதிகம் பாடுகின்றார். அப்பதிகத்தில், தமிழகத்தின் அன்றிருந்த சமய நெறியின் குறைபாட்டினைக் குறிப்பில் உணர்த்துகின்றார். அப்பர் அடிகள் வழிவழிச் சிவநெறி மரபில் தோன்றியவர். ஆயினும், தமக்குப் புறச் சமயங்களின் இயல்பினையும், சிவநெறியின் சிறப்பினையும் எடுத்துக்கூறி நெறி நிறுத்தும் ஆசிரியர்கள் இல்லையே என்ற குறிப்பை உணர்த்துகின்றார். திலகவதியார் வழிவழி மரபில் அவரை வளர்த்தாரானாலும் சமய, தர்க்க விவாத முறையில் வளர்க்கவில்லை.

அன்று, சிவ நெறியில் நின்ற சான்றோர்கள் இங்ஙனம் தம்மை நெறி முறைப்படுத்திப் பாதுகாக்காமல், புறச் சமயத்தில் மூழ்கி, அளவு காணும்படி செய்து விட்டனர் என்று குறைபட்டுக்கொள்கின்றார். ஆம்: அப்பரடிகள் சிவநெறியிலிருந்து புறச் சமயத்திற்குச் சென்றபொழுது பரபரப்பில்லை; தேடுவாரில்லை. திலகவதியார் கவலைப்பட வில்லையா என்று கேட்கலாம். திலகவதியார் வருந்தியது உண்மை. திலகவதியார் வருத்தத்தைச் சமய உலகத்தின் வருத்தமாக ஏற்றுக்கொள்ள முடியாது. அது, உடன் பிறப்பு வழிப்பட்ட உணர்வு கலந்த பாசத்தின் வழிப்பட்டதே: ஆனால், அப்பரடிகள் புறச் சமயத்தினின்றும் சைவம் வந்தபோது, எவ்வளவு பரபரப்பு? அது சமய நிகழ்வாக மட்டுமல்லாமல் அரசியல் நிகழ்வாகவும் வடிவம் பெறும்

அளவுக்கு, வளர்ந்து விட்டது. அப்பரடிகள் நமக்கு இந்தப் படிப்பினையை உணர்த்தவே,

காத்தாள்பவர் காவல் இகழ்ந்தமையால்
கரைநின்றவர் கண்டுகொள் என்று சொல்லி
நீத்தாய் கயம்புக நூக்கியிட
நிலைக் கொள்ளும் வழித்துறை யொன்றறியேன்

அதாவது, நீர்நிலையின் கரையொன்றில் காவல் செய்வோர் நிற்கின்றனர். நீர்நிலைக்கண் வந்த ஒருவர், அக் கரையில் நின்ற வேறு சிலரை நீர்நிலையின்ஆழம் கேட்ட பொழுது "நீயே இறங்கிப் பார்த்துக் கொள்" என்று வழி காட்டினராம். அவர் நீர்நிலையில் இறங்கி நீர்நிலையின் ஆழத்தில் அல்லற்பட்டுக் கரையேற முடியாமல் தவித்ததாக வரலாறு. இங்கு நீர்நிலை சமயக்கால். ஆழங்காண விரும்பியவர் அப்பரடிகள். ஆழங்காட்டி அறிவுறுத்த வேண்டிய காவற் கடமை பூண்டோர் அப்பரடிகளின் வழி வழி சமய மரபில் வந்த சான்றோர். கரையில் நின்றவர்கள் சமண முனிவர்கள்.

சமண முனிவர்கள் தூண்டச் சமயத் தத்துவக் கடலுக்குள் குதித்து ஆழந்தெரியாமல் அறிவினால் வியவகாரம் செய்து கரையேற முடியாமல் அல்லற்பட்டவர் அப் பரடிகள், என்று சிந்தனை செய்து, ஒப்புநோக்க எத்தகைய உண்மை வெளிப்படுகிறது. இன்னும் அந்த நிலை மாறிய பாடில்லை.

தமிழ் இலக்கிய உலகில் திருக்குறள் காலத்தால் மூத்தது. திருக்குறளை இலக்கியம் என்று மட்டுமே நம்முடைய சான்றோர் கருதுவதில்லை. திருக்குறள் ஒரு மறை நூல்; அதனால் அப்பரடிகள் திருக்குறளைத் தமது திருமுறைப் பாடல்களில் அணியென எடுத்து ஆண்டிருக்கின்றார். வள்ளுவர், இனியவை கூறல் அதிகாரத்தில்,

*இனிய உளவாக இன்னாத கூறல்*
*கனியிருப்பக் காய்கவர்ந் தற்று*

என்று ஓதுகிறார். திருக்குறள், ஆழமான கருத்துடையது. சுவைமிக்க கனி துய்த்தற்குரியதாக - உரிமையுடையதாக இயல்பில் இருக்கிறது. ஆனால், அறியாமையின் காரணமாக அந்தக் கனியினைத் துய்த்து மகிழாமல் துவர்க்கும் காயினை, துய்த்தற்குத் தகுதியில்லாத காயினை. உரிமையில்லாத ஒன்றினை, உரிமையுடையோர் அறியாமல் கவர முயற்சி செய்வது ஏன் என்று கேட்கிறார். இனியன பேசுதல் இயற்கை. இந்த இனிய குறளினை அப்பரடிகள் கனி இடத்தில் சிவநெறியினையும், காய் இடத்தில் புறச் சமயத்தினையும் எண்ணி, இசைத்துப் பாடுவது படித்து இன்புறுத்தக்கது.

*மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த*
*மேனியான் தாள்தொ ழாதே*
*உய்யலாம் என்றெண்ணி உறிதூக்கி*
*உழிதந்தென் னுள்ளம் விட்டுக்*
*கொய்யுலா மலர்ச்சோலை குயில்கூவ*
*மயிலாடும் ஆரூ ரரைக்*
*கையினாற் றொழாதொழிந்து கனியிருக்கக்*
*காய்கவர்ந்த கள்வ னேனே.*

என்பது அத்திருப்பாட்டு.

அப்பரடிகள் சிறந்த உவமைகளின் மூலம் உண்மை களை விளக்க வல்லவர். இன்றைய மனித சமுதாயத்தில் 'தனி உரிமை', 'பொது உரிமை' என்ற சொற்கள் பெரு வழக்கில் வழங்கப் பெறுகின்றன. தனி உரிமை - பொது உரிமை என்ற சொற்கள் பெருவழக்காதல் வளரும் சமுதாயத்திற்கு நல்ல தல்ல. 'ஏன்? தனி உரிமையும் பொது உரிமையும் இன்று ஒன்றோடொன்று மோதக்கூடச் செய்கின்றன. தனி உரிமை யும், பொது உரிமையும் அரும்பும், மலரும்போல் ஒன்றை

யொன்று தழுவி நிற்கவேண்டியவை. தனி உரிமை பொது உரிமை ஆகியவற்றில் முதலிடம் கொடுத்துப் பேணத்தக்கது பொது உரிமையேயாம். பொது உரிமை தாய்; தனி உரிமை சேய். ஆனால், சமுதாயப் பேரறிவு வளராததனால் தனி உரிமையிலிருந்துதான், பொது உரிமை தோன்றுகிறது என்ற கருத்து மேலோங்கியிருக்கிறது. ஆனால் மனித சமுதாய வரலாற்றுப் படியும், வாழ்வியல் முறைப்படியும் பொது உரிமை தோன்றி வளர்ந்து செழுமையடையும் பொழுதே, தனி உரிமை தோன்றுகிறது. நம்முடைய சமுதாயத்தில் தனி உரிமை உணர்வு வளர்க்கப்பட்டமையின் காரணமாகப் பொது உரிமையைவிடத் தனி உரிமையே முதன்மைப் படுத்தப்பட்டு வருகிறது. இன்றும் நம்முடைய சமுதாயத்தில் பொது உரிமை இயக்கங்களாகிய கூட்டுறவு இயக்கங்கள் பலவீனமுற்றே இருக்கின்றன.

அரசு வழிப்பட்ட பொதுத் தொழில்கள், தனியார் தொழில்களைவிட - தனியார் தொழில்களை நோக்கிடச் செழுமையான இலாபங்களைத் தரவில்லை. ஏன்? நம்முடைய சமுதாயத்தின் பொது நிறுவனங்களாகிய கோயில்களை எடுத்துக் கொள்வோமே; அவைகளைப் பேண வேண்டுமென்ற உணர்வு எல்லாருக்குமா இருக்கிறது? இல்லவே இல்லை; இன்று கோயில்களைப் பேணும் பொறுப்பு ஏற்றிருக்கின்ற சிலரிடத்தில்கூட "அது பொது; ஆதலால் பேணுகிறோம்" என்ற உணர்வு இல்லை. இங்ஙனம் பேணுவோரில் சிலருக்கு அது 'வேலை'; பலருக்கு அது 'பிழைப்பு'! அதனாலேயே நம்முடைய பொது நிறுவனங் களுடைய உடைமைகளும் முதலீடுகளும், பல்கிப் பெருக வில்லை. அண்மைக் காலமாகப் பொது நிறுவனங்களும் வளர்ந்து வருகின்றன. இது நல்ல திருப்புமுனை.

சமுதாயத்தின் இழிமனப் போக்கு இன்று நேற்றுத் தோன்றியதன்று. அப்பரடிகள் காலத்திலும் இதே நிலைமை தான். ஊர் நடுவே ஒரு மன்றம். மன்றம் என்றால் பொது

இடம். நம்முடைய இறைவன் மன்றிலாடுகின்றான். மன்றத்தையே 'பொதுவில்' என்றும் அழைப்பதுண்டு. மன்றத்திலாடும் இறைவன் என்றால், இறைவன் உலகுக்குப் பொது என்பது பொருள். உலகத்தின் முதல் பொதுவுடைமைத் தலைவன் இறைவனே. அவன் மகிழ்ந்தாடிய இடம், மன்றம். அந்த ஆனந்த வெள்ளத்தமுதில் திளைப்பவர்கள் உலகத்து மக்கள். இங்ஙனம் பொதுமைக் கரு பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே தமிழகச் சமய நெறியில் கால்கொண்டுவிட்டது. ஆயினும் பழக்கங்கள் அக் கருவை மூடிமறைத்துச் சிதைத்துவிட்டன.

மன்றம் பலர் கூடுமிடம். ஆங்கு, நிழல் தருவதற்கான மரங்கள் தோன்றி இடர்களைக் களைந்து வளர்ந்திருக்கும். நிழலில் கூடியிருந்து மகிழ்ந்தவர்கள், நிழல் தந்த மரங்களைப் பேணுவதில்லை; பேணாதது மட்டுமன்றித் தேவைக்கேற்பச் சிறிதும் பெரிதுமான கொம்புகளை ஒடித்துச் சேதப் படுத்துவர். தொங்கும் கிளைகளை மாடுகளும் கடித்து மேய்ந்து அழிக்கும். நோய் தரும் பூச்சிகள் ஒட்டி மரங்களை உருக்குலைக்கும். இங்ஙனம் மன்றத்தில் நின்ற மரமாயினும் - மன்பதைக்குப் பயன்படுவதாயினும், அம்மரம் பேணுவாரின்றிப் பெருந்துன்பமே உறுகின்றது. காரணம் மன்றத்தில் நின்ற மரம்! வீட்டருகே நின்ற மரமாக இருப்பின் நன்கனம் பேணுவர் என எடுத்துக் கூறவும் வேண்டுமோ?

"தாம் வளர்த்ததாக இருப்பின், நச்சு மரமேயானாலும் கொல்லமாட்டார்கள்" என்று மணிமொழி பேசுகிறது. வளர்த்த பாசம் அத்தகையது. மன்றத்தில் நிற்கும் மரமும், பொது இடத்தில் நிற்கும் மரமும், படும் துன்பத்தைத் துன்பத்திற்கு எல்லையாக எடுத்துக் காட்டுகின்றார் அப்பரடிகள். ஆதலால் அப்பரடிகள் காலத்தும் பொதுமை உணர்வு தோன்றவில்லை; பொதுவுரிமைப் பொருள்களைப் பாதுகாக்க வேண்டுமென்ற உணர்வும் வளரவில்லை.

தனியுரிமையும், தனி மனிதஉணர்வும் நஞ்செனவளர்ந்து மனித குலத்தை அரித்துக் கெடுத்திருக்கின்றன. மனித சமுதாயம் என்ற ஒப்பற்ற மாளிகை, 'நான்', 'எனது' என்ற இரண்டு 'இடி'களால் தகர்க்கப்பட்டு வந்திருக்கிறது. 'நானிலும்' 'ஒரு மனித'னிருக்கிறான். 'நாமிலும்', ஒரு மனிதனிருக்கிறான். 'எனதி'லும், ஒரு 'மனித'னுடைய உரிமை உணர்வு இருக்கிறது. 'நம்'முடையதிலும் 'ஒரு மனித'னுடைய உணர்வு இருக்கிறது. ஆனால் இரண்டிற்கும் இடையே வேற்றுமை! 'யான்', 'எனது' என்ற உணர்வு வெறுப்பை வளர்க்கிறது; பகைமையை வளர்க்கிறது. பாதுகாப்பின்மையைத் தோற்றுவிக்கிறது. 'நாம்', 'நமது' என்ற உணர்வு அன்பைப் பெருக்குகின்றது; உறவை வளர்க்கின்றது; பாதுகாப்பைத் தருகின்றது.

தனி உரிமையில் பொதுவுரிமை அடங்காது. பொது உரிமையில் தனியுரிமை அடங்கும். ஆயினும், வழிவழி சமுதாயத்தில் வேண்டிய அளவு பொதுமையுணர்வு வளரவில்லை. 'நான்', 'எனது' என்ற உணர்வு, மனிதனுடைய உத்வேகத்தை அழிக்கிறது. தனி மனிதன் ஒப்பற்ற காரியங்களைச் செய்யவே முடியாது. இதனை உணர்த்தவே மிகப் பருமனான ஒரு தேரைப் பலர் கூடி இழுக்கும் மரபைச் சமயநெறி தோற்றுவித்தது. ஆயினும் என்? தேர் இழுக்கப் பெறுகிறது. ஆனாலும், சமுதாயப் பொதுவுணர்வு தோன்றவில்லை. தேரோட்டம் ஒரு சடங்காகப் போய்விட்டது. அதனால், தேரோட்டத்திலும் சண்டைகள் தோன்றி விட்டன!

மனிதன், ஒன்றில் ஒன்ற வேண்டும். அந்த ஒன்று கடவுள்; எல்லா உலகுக்கும் ஒருவனாக இருக்கின்ற கடவுள்; அவன் அவனுமல்லன், அவனுக்கு ஒன்றென்றே பெயர் கூறினும் பொருந்தும். அவனையே "எல்லா உலகமும் ஆனாய் நீயே" என்று அப்பரடிகள் பாராட்டுகிறார். "அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர்" என்று சாத்திரம் பேசும். "ஞாலமே விசும்பே இவை வந்து போம் காலமே" என்று மணி மொழி

பேசும். அந்த ஒன்றில் வேறுபாட்டுணர்வு அற்று, ஒன்றிக் கலந்தால் துன்பம் வாராது என்ற கருத்தை அப்பரடிகள் இனிது விளக்கிப் பாடுகின்றார். அதாவது, தனிமை துன்பம் தரும். பொதுமை இன்பம் தரும். கடவுள் ஒன்று. அதுவே உலகத்திற்கு ஒன்று. அந்த ஒன்றை ஒன்றியிருந்து நினைத்தால் இன்புறலாம் என்பதாகும்.

*மன்றத்துப் புன்னைபோல மரம்படு துயரமெய்தி*
*ஒன்றினா லுணரமாட்டே னுன்னையும் வைக்கமாட்டேன்*
*கன்றிய காலன்வந்து கருக்குழி விழுப்பதற்கே*
*அன்றினா னலமந்திட்டே னதிகைவீ ரட்டனீரே.*

என்பது அப்பர் திருப்பாட்டு.

அப்பரடிகள் உருவகத்தில் செய்திகள் அமைத்து விளக்குவதில் ஈடு இணையற்றவர். அப்பரடிகள், வாழ்க்கை யில் அறிவுவினுள் தெளிவும், தெளிவினுள் சிவமும் காண வேண்டுமென்ற கொள்கையினர். வாழ்க்கையில் அறிவு தலைப்படுவதே அருமையிலும் அருமை. அறிவில் தெளிவு காண்பது எளிதன்று. அறிவில் தெளிவின்மையினாலேயே சமயக் கணக்கர் முரண்படுகின்றனர்; மோதுகின்றனர். சமயச் சண்டைகள் கால்கொள்கின்றன. அறிவில் தெளிவு காண்புழி - இன்ப அன்பு முகிழ்க்கும். அதுவே சிவநிலை.

இந்த நிலையை எய்திட வேண்டிய ஆருயிர் மயக்க வலையிற் சிக்கித் தவிப்பதை அப்பரடிகள் நகைச்சுவை ததும்ப உருவகிக்கின்றார். எரிகின்ற அடுப்பு. அதில் உலைப்பானை. உலைப்பானை நீரில் மெள்ளச் சூடேறுகிறது. அந்நிலையில் குளிர் நீரில் கிடந்து மரத்துப்போன ஆமை உலைப்பானையில் இடப்பெறுகிறது. ஆமைக்கு இளம்சூடு உணக்கையாக இருக்கிறது; மகிழ்கிறது. அந்த மகிழ்ச்சியில் அந்தப்பானை நீர்க்குள்ளேயே திளைத்து நின்று விளை யாடுகிறது. என்னே அறியாமை எரிகின்ற அடுப்பிலிருக்கும் உலைநீர் எப்பொழுதும் இளவெந்நீராக இருக்காது. வெந்நீரின் வெப்பநிலை ஏறும். ஆமை, வெப்பநிலை மாற்றத்

தால் அழியுமல்லவா? இதை அறிந்துணரும் ஆற்றல் ஆமைக்கு இல்லை. ஆமைக்குத்தான் இல்லையா? ஆறறிவு படைத்த மனிதனுக்கு உண்டோ? வாழ்க்கையே இவ்வுலகம் என்ற ஓர் அடுப்பு. அவ் அடுப்பில் ஆசை என்ற தீ எரிகிறது. உணர்வாகிய நீர் மனிதன் பெற்ற சிறுபொழுது இன்பமே இளஞ் சூடுடைய வெந்நீர். இதனையே நிலையெனக் கருதித் திளைத்து மகிழ்ந்து விளையாடுகிறான் மனிதன். ஆனால் அவன் பெற்றதோ நிறை இன்பமல்ல. அவன் பெற்றது துன்பத்திற்குக் காரணமாய், இன்பம் போலத் தோற்றிய துன்பமே என்று விளக்க,

> உலையை யேற்றித் தழலெரி மடுத்த நீரில்
> திளைத்து நின்றாடுகின்ற ஆமைபோல் தெளிவிலாதேன்
> இளைத்து நின்றாடுகின்றேன்,

என்பார், அப்பரடிகள்.

அப்பரடிகள், பழமொழிகளைக் கொண்டு அறநெறி களை விளக்குபவர்.

இறைவன் கருணையை நினைந்து, நெஞ்சு நெகிழப் பாடுபவர். உயிர் அருவப்பொருள்; அதற்கு ஓர் உருவத்தைத் தந்து, உலகிடை அனுப்பித் துய்ப்பன துய்த்து, மகிழ்வன மகிழ்ந்து – குறைநீங்கி நிறைநலம் பெறச் செய்யும் கருணையே கருணை. இதனை,

> என்பிருத்தி நரம்புதோல் புகப்பெய் திட்டு
> என்னையோ ருருவ மாக்கி

என்று பாடுகிறார். இந்த உருவமாக்கிய பணிக்கு ஈடாக எதனைக் கூறமுடியும்? இந்த உருவத்தினை முதலாகக் கொண்டுதானே மனிதன் வளர்கிறான்! வரலாறு படைக் கிறான்? உலகில் வேறு எந்த அறிவியல் படைப்பையும் விட இந்த மானுட யாக்கையின் படைப்பு அதி நுட்பமானது; அறிவியல் தன்மையுடையது; இந்த உடல்-உயிர்க்கூட்டின் பயன் உயிரை இன்புறுத்தலேயாம். இறைவன் திருவுள்ளம்

இன்புறுத்தலேயாம். ஆயினும் உயிர் பெற்றுள்ள சிற்றறிவு அடங்கவா செய்கிறது? அது தன்னிச்சையிலேயே ஆட்டம் போடுகிறது; அறிவுப் பொருளைத் திருத்திச் சீராக்குதல் எளிய காரியமன்று. அறிவற்ற சடப்பொருள் எளிதில் பக்குவப்படும். அறிவு நாடகமாடும்; நடிக்கும்; உணர்ந்தது போல் காட்டிப் பின் தன்னெறியே மேற்கொள்ளும்; இன்பத்தைத் துன்பமாகக் கருதும்; துன்பத்தை இன்பமாகக் கருதும்; அடக்கினாலும் சில நாள் அடங்கும்; வாய்ப்பு வந்துழி மிஞ்சும். இத்தனை இக்கட்டான நிலையில் உயிருக்கு அறிவு கொளுத்தியே - அதனை அறியச் செய்தே பக்குவப் படுத்தவும் வேண்டியிருக்கிறது; அதை அடிமைப்படுத்தவும் முடியாது. இன்பத்திற்கு எதிர் துன்பமே. துன்பத்திற்குக் காரணம் அறியாமையும் அறியாமையினால் செய்த செயல்களின் விளைவுகளுமாம். நோய் நீங்குகிறவரை உணவு சுவைக்காததைப் போல, வினைநீக்கம் பெறும்வரையில் நிறை நல் இன்பத்தையும் துய்க்கமுடியாது. ஆதலால்,

*முன்பிருந்த வினை தீர்த்திட்டு*

என்கிறார்.

தீமை நீங்கினால் போதாது; நன்மை விளங்கிட வேண்டும். இதனை வள்ளுவமும்,

*சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ*
*நன்றின்பால் உய்ப்பது அறிவு*

என்று கூறியது. அருணகிரியாரும்.

*பொய்யை நிந்திக்கிலேன் உண்மை சாதிக்கிலேன்*

என்று கூறினார்.

தேவைக்குக் காரணமாகிய அறியாமை நீங்கியவுடன் அறிவு ஆங்கு விளங்க வேண்டும். இறைவன் உயிரிடத்து விளங்கிய முன்னை வினை வாசனை நீங்கிய பிறகு அந்த உயிரின் உள்ளத்தையும் கோயிலாகக் கொண்டு குடியிருந் தருளுகின்றான். உயிர் அறியாமையில் கிடக்கும்பொழுது

உடலினுள் இருந்து உயிரும், மாற்றாரும் அறியமுடியா வண்ணம் நின்று அருள் செய்யும் இறைவன் வினை நீக்கத்திற்குப் பிறகு, பலரும் காணும் திருக்கோயிலென்ன உயிரிடத்து முழு விளக்கமுற வீற்றிருக்கின்றான். இறைவன் உள்ளத்து இடங்கொண்டமையின் காரணமாக அன்பாகிய ஊற்றுக்கண் திறக்கிறது, உயிரிடத்து ஆற்றல் மிக்க அன்பைத் தூண்டுகிறது. இந்த நிலையில் 'அன்பும் சிவமும்' ஒன்றென்ற குரல் எழும்புகிறது, அன்பினாலாவது இன்பமே. அன்பினா லல்லது வன்பினால் ஆவது எப்பொழுதும் இன்பமன்று. அஃது ஒரு சேறு. அன்பினால் இன்புறுத்துகிறார். அன்பு பெருகி இன்பத்தில் திளைக்கும் பொழுது மேலேது? கீழேது? உயிர், இன்புறுத்தும் பொருளிடத்தில் அடிமையாகிறது. இது அறிவியல் அடிமை; உண்மையின் பாற்பட்ட அடிமை. இத்தகைய இறைவன் திருவருளை நினைந்து வாழ முடியாமல் பிற தெய்வங்களை வணங்குவதும், பிறநெறி களைச் சார்வதும் வேடிக்கையாக இருக்கின்றன. அப்பரடி களே தம் வரலாற்றினை நினைந்து வியந்து பாடுகிறார். முயல், நிலத்தில் திரிவது, அதனால் அதைப் பிடிப்பது சுலபம். எளிதில் பிடிக்கக்கூடிய முயலைப்பிடிக்காமல் விட்டு விட்டு, எளிதில் பிடித்தற்கியலாத காக்கையைப் பிடிக்க, காக்கையின் பின்னே ஓடித் திரியும் செயலை நினைவுபடுத்துகிறார். காக்கையோ வானில் பறக்கிறது. மனிதனுக்கோ பறக்கும் சக்தியில்லை. எங்ஙனம் பிடிக்க முடியும்?

கையிலிருக்கும் முயலை விட்டுவிட்டுக் காக்கையைப் பிடிக்கப் போவதாகவும் பொருள் கொள்ளலாம். முயல் சிவநெறி. நாம் பிறந்த நெறி, எளிதில் அமைந்த இனிய நெறி; இன்றமிழ் நெறி; ஆரத்துய்த்து மகிழத் துணை செய்யும் தூய நெறி; எளிய நெறி; இந்நெறியில் பிறந்திருந்தும் இந்நெறி நின்று வாழாது பிற நெறிகளைத் தேடியலைவதும், தாயிற் சிறந்த தயாவுடைய நம் சிவன் தாளினைத் தொழாது வேறு தெய்வங்களைத் தேடியலைவதும் காக்கையின் பின் ஓடுவதை யொக்கும். இந்த இனிய பாடலைப் பாடிப் பயிலுக.

*என்பிருத்தி நரம்புதோல் புகப்பெய்திட்*
*டென்னையோ ருருவ மாக்கி*
*இன்பிருத்தி முன்பிருந்த வினைதீர்த்திட்*
*டென்னுள்ளம் கோயி லாக்கி*
*அன்பிருத்தி யடியேனைக் கூழாட்கொண்*
*டருள் செய்த வாருரர்தம்*
*முன்பிருக்கும் விதியின்றி முயல்விட்டுக்*
*காக்கைப்பின் போன வாறே.*

அப்பரடிகள் சிறந்த சமய மரபுகளை வலியுறுத்தியது போலவே, பொருந்தாத பழக்க வழக்கங்களையும் மறுத்துரைப்பர். பொருளற்ற - உணர்வைத் தூண்டி வளர்க்காத வெற்றுச் சடங்குகளை அப்பரடிகள் ஏற்றுக் கொண்டதில்லை. பொருள் புரிந்து கொள்ள இயலாத கூர்ச்சம் முதலியன பயன்படுத்தும் சடங்குகளைக் கண்டிக்கின்றார். ஏன்? எல்லா உலகத்தையும் இறைவனாகக் காண்கின்ற ஞான உணர்வு அப்பரடிகளிடத்தில் முகிழ்த்திருந்தது. "எல்லா உலகமும் ஆனாய்" என்றும், "ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்" என்றும், "வாசமலரெலாம் ஆனாய் நீயே" என்றும் "முழங்கு ஒலி நீரானான் கண்டாய்" என்றும், "பண்ணின் இசை நீயானாய்", "பழத்திடைச் சுவை யொப்பாய்" என்றும் அப்பரடிகள் அருளிச் செய்த சொற்றொடர்களை நோக்கின், அடிகள் பெருமான் எல்லாம் வல்ல இறைவனை இந்த அண்டமாக, அண்ட சராசரங்களாக, இந்த அண்ட சராசரங்களில் நிலவும் உயிர்களுக்கு உயிராகக் கண்டு வழிபடுகின்ற ஞானப் பூசையையே போற்றிப் பாராட்டுகின்றார்.

"எங்கும் ஈசன் இருக்கிறான் என்று எண்ணி, அன்பு செய்யாமல் கங்கையாடுவதில்-காவிரியாடுவதில் என்ன பயன்?" என்று கேட்கிறார். அண்மையில் மறைந்த நமது பெரியாரும் இதே கேள்வியைத்தான் கேட்டார். அப்பரடிகள் கங்கையாடிலென்? காவிரியாடிலென்? என்று வினாக்

களைத் தொடுத்ததோடன்றிச் செய்யக் கூடாததை மறுத்துச் செய்ய வேண்டியதையும் வற்புறுத்துகின்றார். அதாவது "எங்கும் ஈசன் இருக்கிறான்" என்று அன்பு காட்ட ஆணை யிட்டார்.

*கங்கை யாடிலென் காவிரி யாடிலென்?*
*கொங்கு தண் குமரித் துறையாடிலென்?*
*ஓங்கு மாகடல் ஓத நீ ராடிலென்?*
*எங்கு மீசன் எனாதவர்க் கில்லையே*

என்று பாடுகிறார்.

நமது சமுதாய வாழ்க்கையில் பலர் கூடி உண்ணும் பொழுது ஒருவரோடொருவர் பேசாமலேயே உண்கிறோம். உண்ணும்பொழுது பேசுவதைப் பெரியோர்கள் அனுமதிப்ப தில்லை. அங்ஙனம் பேசுவது, ஆசாரக்கேடு என்று கருது கிறார்கள்; கண்டிக்கிறார்கள். குழந்தைகள் உண்ணும் பொழுது பேசத் துடிக்கிறார்கள். பெரியோர்கள் அடக்கு கின்றனர். பேச்சுக்குப் பதில் அழுகை பிறக்கிறது. இங்ஙனம் உண்ணும்பொழுது உரையாடக் கூடாது என்ற வழக்கம் எப்பொழுது தோன்றியது? யாரிடமிருந்து வந்தது? என்று அறிந்து கொள்ளுதல் சுவையான செய்தி.

தமிழர் வாழ்வில் சமண சமயம் வந்து கலந்தபொழுதே இந்த வழக்கம் வந்திருக்கிறது. தமிழினம் சமண சமயத்தை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், அவர்களையறியாமலே அந்தச் சமயப் பழக்க வழக்கங்கள் சில அவர்களுடைய வாழ்க்கையில் வந்து பொருந்தியுள்ளன. சமணர்களின் சீரிய ஒழுக்கங்களுள் தலையாயது, நேரிடையாகவோ, மறைமுக மாகவோ அல்லது திட்டமிட்டோ தற்செயலாகவோ பிற உயிர்களைக் கொலை செய்யக்கூடாது என்பது. தற்செய லாகவும் உயிர்க் கொலை நிகழக் கூடாது என்பதற்காகச் சமண சமயம் சில ஒழுக்க விதிகளை விதித்திருக்கிறது. அவற்றுள் ஒன்று திறந்த வாயினராக இருத்தல் கூடாது

என்பது. இருந்தால், சிறு பூச்சிகள் இயற்கையில் வாய்க்குள்ளிருக்கும் பற்பசையில் சென்று ஒட்டி இறத்தல் கூடும் என்று கருதுகிறது. அதனாலேயே சமண முனிவர்கள் தம் வாயின் மீது ஒரு சிறு திரையிட்டிருப்பர்.

இவ்வளவு விழிப்பாகக் கொல்லாமையைக் கருது பவர்கள் உண்ணும்பொழுது உரையாடினால் சிறு பூச்சிகள் வாய்க்குள் செல்லக்கூடுமென்று, உரையாடுவதற்குத் தடை விதித்தார்கள். அடுத்து உரையாடுதலின் மூலம் மகிழ்வு பிறந்தது; அம்மகிழ்ச்சிப் போக்கில் திட்டமிட்ட அளவிற்கு மேலாக உண்ணக் கூடிய சூழ்நிலை ஏற்படலாம். அது நோன்பை மீறிய செயலாகும். இந்த அடிப்படையிலும் உண்ணும்பொழுது உரையாடுதலைச் சமணம் தடுக்கிறது. இந்தச் சமணர்களுக்குரிய பழக்கம் சமண முனிவர்களுக்கு விதித்த நெறி, எப்படியோ நம்மையும் அறியாமல் நம்முடைய சமுதாய வாழ்க்கையிலும் ஒட்டிக் கொண்டுவிட்டது. அப்பரடிகள், "மூங்கை போல் உண்ணும் மூடர்" என்று உண்ணும்பொழுது உரையாடாதார் பண்பைக் கண்டிக் கிறார்.

பொதுவாக, உண்பதும் ஒரு கடமையேயாகும். மிகச் சிறந்த பயனுடைய பணிகளைச் செய்தற்குக் கருவியாக அமைந்துள்ள, உடலைப் பேணுதலும் ஒரு தவமேயாகும்.

"உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே" என்று திருமந்திரம் பேசுகிறது. இங்கே உடம்பை வளர்த்தல் என்பது சதைப் பிண்டங்களை வளர்ப்பது என்பதன்று. உடலியலுக் குரிய விழுமிய திறன்களை வளர்ப்பது என்று பொருள் கொள்ளுதல் வேண்டும். சதைத் திரட்சிகள் எரி விறகிற்குப் பயன்படுமேயன்றிப் பணிகளுக்குப் பயன்படா. உயிர் உயர்தற்குரிய அன்பிற் கலத்தல் - தொண்டு செய்தல் ஆகியனவற்றிற்குத் துணையும் தோழமையும் சமுதாயச் சூழலும் இன்றியமையாதன. தனி மனிதன் தனியே அன்பிற்

கலத்தல் இயலாது. அவன் தன்மாட்டே அன்பு காட்டுதலை 'அன்பு' என வழக்கில் எடுத்துக் கொள்வதில்லை. அது சுயநலம், அன்பன்று; அவமேயாம்.

ஒருவன் தன்மாட்டே, தான் அன்பு காட்டிக் கொள்ளுதல் தீமையையே பெருக்கும்; இன்பத்தினைப் பெருக்காது. அதனாலேயே அன்பு காட்டுதற்குரிய களமாக விலங்குகள் போலல்லாது மனித சமுதாயத்தை ஒரு கூட்டியல் வாழ்க்கையாக இயற்கை அமைந்துள்ளது. மனித சமுதாயத்தில் அரக்கனைத் தவிர, தனி மனிதனே இல்லை; ஞானியானால் இறையுடன் தோழமை கொண்டு ஒன்றிக் காதலித்து இன்புறுவர். அவர்களுக்கும் இறைவன் என்று ஒரு தோழனுண்டு. இவன் அவனைக் காதலிக்க, அவன் இவனைக் காதலிக்க மிகப் பெரிய ஞானக்காதல் வாழ்வு மலர்கிறது; எனவே மனித உயிர் குறைகளினின்று விடுதலை பெற அன்பினாற் கலந்தஉறவு தேவை. உறவு தோன்றி வளர்தற்குரிய சூழ்நிலைகள் பலவற்றுள் பலர் ஒருங்கிருந்து உண்ணும் சூழ்நிலையே சிறப்புடைய சூழ்நிலையாகும். அதனாலேயே வள்ளுவம், பகுத்துண்ணலைத் தொடர்ந்து 'பல்லுயிர் ஓம்புதல்' என்று பேசியது. திருமுறைகளும் திருக்குறளும், விருந்தோம்பலை நெறிகளுக்கெல்லாம் உயர்ந்த நெறி என்று எடுத்தோதுகின்றன.

மனித உறவுகளுக்குக் கொடிய பகைமையாகிய அழுக்காறு, பிற கட்டங்களில் தலைகாட்டுதல் போல உண்ணும்பொழுது தலைகாட்டுதல் இயலாது. அளவுக்கு மிஞ்சிக் குவித்து வைக்கின்ற செல்வத்தைப் போலல்லாமல், அளவோடு உண்பதலால் அழுக்காற்றுணர்வு தடை செய்யப்படுகிறது. அதோடு பிற கட்டங்களில் மனிதன் தன் மகிழ்வுணர்வைப் பூரணமாக வெளிப்படுத்தி விடுவதில்லை, உண்ணும்பொழுது தன்னுடைய நிறைவை அகன்ற ஒளி படைத்த கண்கள் மூலமும், மகிழ்வு கொப்பளிக்கின்ற திருமுகத் தோற்றத்தின் மூலமும் சுவைத்து மகிழ்ந்தமையை

உதடுகளில் பொங்கி வழியும் புன்னகை மூலமும் யாதொன்றும் தடை செய்ய முடியாவண்ணம் வெளிப்படுத்துகிறான்.

இத்தகைய சூழ்நிலையில் உறவு கலத்தலைப் போலப் பிற சூழ்நிலைகளில் முடியாது. அது மட்டுமின்றி ஒருவர் உண்பதை உடனிருப்பவன் விரும்புகிறான் என்பது தெரியாது போனால் உண்பவனுக்கு அவனையறியாமலே ஐய உணர்வும் கூச்சமும் தலைகாட்டுகின்றன; அதன் காரணமாகத் தயங்கித் தயங்கி உண்கிறான். அப்பொழுது அவன் உள்ளத்தில் மகிழ்வுணர்வு இல்லாமற் போகிறது. உள்ளத்தில் மகிழ்வுணர்வு இல்லாமல் உண்ணும் உணவு, நஞ்சாக மாறிவிடுகிறது. அதனால் நலம் கெடுகிறது; நோய் வந்தமைகிறது.

ஆதலால், உண்ணும்பொழுது உரையாடாது உண்ணுதல் நல்ல வழக்கம் அன்று; ஒழுக்கமும் அன்று; அது நெறியுமன்று; வாழ்வாங்கு வாழும் நெறியுமன்று; உடலியல் பேணும் நெறியுமன்று. அதனாலன்றோ, தாயுமானார். "உறவு கலந்து உண்ணக் கண்டீர்" என்று எடுத்தோதினார். உறவு கலக்க உரையாடல் இன்றியமையாதது. ஆதலால் பலர் கூடி உண்ண வேண்டும். உறவு கலந்து உண்பித்துச் சிரித்துப் பேசி மகிழ்வு சிறக்க உண்ண வேண்டும். ஆனால் உண்ணும் பொழுது உரையாடலை 'அரட்டைக் கச்சேரியாக' மாற்றி விடக் கூடாது. பயனற்ற சொற்களைப் பலர்கூடி உண்ணும் பந்தியில் கட்டாயம் தவிர்க்க வேண்டும்.

அது மட்டுமின்றி, உணர்ச்சி வசப்படுத்தக்கூடிய அவல உணர்வுகளைத் தரக்கூடிய செய்திகளை மறந்தும் பேசக் கூடாது. இது நேர்மாறான பயனைத் தந்துவிடும். குற்றம் குறைகளை உணர்த்தும் நேரம், உண்ணும் நேரமன்று: உண்ணும்பொழுது மனித இயலைத் தூண்டி உயர்த்து தற்குரிய மகிழ்வும் ஊக்கமும் தரத்தக்க செய்திகளையும், உயர்வு தாழ்வுகளை விரிவுபடுத்தாத உறவு நெறிகளையும்

காட்டிப் பேசுதல் வேண்டும். இத்தகைய உரையாடலோடு கலந்துண்ணும் பழக்கம் நமது சமுதாய வழக்கம். இந்த இனிய வழக்கம் மீண்டும் நமது சமுதாயத்தில் மலர்வதாக.

இந்த உலகை - உலக இயக்கத்தை நடத்துவது காலம். காலம் என்னும் களத்தில்தான் மனிதன் வளர்கிறான். வரலாறு உருவாகிறது. காலம் மிகவும் விழுமியது. போற்றத் தக்கது. பயன்கொள்ளத் தக்கது. காலம் என்ற நெருக்கடியை இலட்சியமாக வைத்துத்தான் மனிதன் வளர்கிறான். காலத்திற்கு இருக்கும் அருமையான வாய்ப்பு சென்ற காலம், நிகழ்காலத்தை நிர்ணயிக்கிறது; எதிர்காலத்தை உருவாக்கு கிறது.

இந்த உலகில் எந்த ஒன்றையும் மனிதன் படைத்துக் கொள்ளமுடியும். ஆனால் புதியதொரு காலத்தை அவன் அமைத்துக் கொள்ள முடியாது. அதுபோலவே மனிதன் இழந்த அனைத்தையும் திரும்பப் பெறலாம். ஆனால் இழந்த காலத்தைத் திரும்பப் பெறமுடியாது. வாழ்நாள் பல வினாடித் துளிகளை உள்ளடக்கியது. ஒவ்வொரு வினாடித் துளியும் கழியும்போது உயிர் வாழ்க்கை கரைகிறது. மரணம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் மகிழ்விலேயே ஈடுபடும் மனப்போக்குடைய நாம் மரணத்திற்கு அஞ்சுவ தால் அயர்ந்து மறந்து விடுகிறோம். நாம் அறிந்து கொண்டாலும் சரி, உணராமல் போனாலும் சரி, வாழ் நாளும் கரைந்தே போகிறது. எப்படி முயன்றாலும் வாழ்நாள் கரையத்தானே செய்யும். அதைப்பற்றிக் கவலைப்பட்டு என்ன என்றும் கேட்கலாம். ஆனால் வாழ்நாளை முற்றிலும் முழுதுமாகப் பயன்படுத்தினால் அது கரைந்து அழிந்ததாகக் கருதமுடியாது. வள்ளுவரும் "உளதாகும் சாக்காடு" என்பார். காலம் விரைந்து செல்லக்கூடியதே! அதனைத் தடுத்து நிறுத்துதல் என்பது இயலாது. ஆயினும் காலத்தின் நோக்கம் பயன்படுதலேயாம். காலம் முழுதுமாகப் பயன்பட்டிருக்கு மானால் அது அழிவல்ல; ஆக்கமேயாகும். மனித உலகத்திற்கு ஒவ்வொரு வினாடித் துளியும் பயன்பட வேண்டும்.

ஒரு மனிதன், தனக்குரிய பொருள் - தனது வாழ்வுக்குரிய பொருள் பிறரால் அவனறியாமல் கொள்ளை கொள்ளப்படும்போது களவு போய்விட்டது என்று கூறுகிறான். இத்தகைய களவு உடைமைகளுக்கு மட்டும் தானா? காலத்திற்கும் உண்டு. அடிக்கடி சிலர், நேரம் போனதே தெரியவில்லை என்றும் கூறுகின்றனர். இப்படிக் கூறும்பொழுது அவர்கள் இம்மியும் கவலைப்படுவதில்லை. நம்மை அறியாமல் நமது செயலுக்கும் பயன்படாமல் பயன் தராமல் வாளா கழிகின்ற காலமும் களவு போனதாகவே கருதப்படும்.

அப்பரடிகளே இங்ஙனம் கூறுகின்றார். "களவுபடாத தோர் காலம்" என்பது அவர் வாக்கு. உடைமைகளைப் பாதுகாக்கும் கவலை இல்லையா? பூட்டும் சாவியும் தோன்றவில்லையா? கணக்குப் பார்க்கும் பழக்கம் இல்லையா? காலம் படைத்துத் தரும் உடைமைகளுக்கு இவ்வளவு அக்கறை எடுப்பவர்கள், ஏன் மூலப்பொருளாகிய காலம் பற்றிக் கவலைப்படாது இருக்கிறார்கள்? அதுதான் புரியாத புதிர். உடைமை இழப்பு உடனடியாகத் துன்பம் தரவல்லது. ஆனால், மனம் வைத்து முயன்றால் ஈடு செய்ய வல்லது. ஆனால், காலத்தின் இழப்பே நெடிய துன்பத்தைத் தரவல்லது; ஈடு செய்ய முடியாததும்கூட. ஆனால், அதைப் பற்றி மனித உலகம் போதுமான கவலை காட்டுவதாகத் தெரியவில்லை. எப்படியும், மனிதனுக்குக் காலம் போற்றும் உணர்வு வேண்டும் என்பதற்காகவே வினாடி வரையில் பகுதி பிரித்துக் காட்டினார்கள். வினாடியை விட்டால் நிமிடத்திலாவது முடித்துக் கொள்ளட்டும் என்றும், நிமி டத்தைவிட்டால் மணிக்கணக்கில் தொலைக்காமல் இருக் கட்டும் என்றும் பகுதி பிரித்துக் காட்டினார்கள். ஆனால் நாட்கணக்கில் ஆண்டுக் கணக்கில்கூடப் பயனற்றுக் காலம் கழிக்கப்படுவதை - இல்லை, அழிக்கப்படுவதை என்னென்று கூறுவது!

காலம் முழுமையாகப் பயன்படுத்தப்பட வேண்டும். ஆக்கத்திற்குப் பயன்படுத்தப்பட வேண்டும். காலம் சென்ற அடிச்சுவடு, சாதனையின் மூலமாகத் தெரியவேண்டும். அப்பொழுதுதான் காலம் பயன்பெற்றதாகும், அங்ஙனம் இல்லாமல் "நாளை நாளை" என்று கடத்தி வாழ்வதை இயற்கை ஒரு பொழுதும் மன்னிக்காது. அப்படிப்பட்டவனுடைய காலம் சைத்தானால் களவு கொள்ளப்படும். ஆதலால், உய்திக்குப் பயன்பட வேண்டிய காலத்தைக் களவு போகாமல் உரியவாறு பயன்படுத்தி அளவுக்குட்படாத அன்பால் ஐயாறப்பனை வாழ்த்தி வாழ்ந்திடுதல் வேண்டும், என்றார் அப்பர் அடிகள். அறநெறிப்படி காலம் போற்றுதலும் சிறந்த கடமையாகும்.

*வளர்மதிக் கண்ணி யினானை*
*வார்குழ லாளொடும் பாடிக்*
*களவு படாததொர் காலங்*
*காண்பான் கடைக்கணிக்கின்றேன்*
*அளவு படாததோ ரன்போ*
*டையா றடைகின்ற போது*
*இளமண நாகு தழுவி*
*யேறு வருவன கண்டேன்*
*கண்டே னவர்திருப் பாதம்*
*கண்டறி யாதன கண்டேன்*

என்பது அப்பர் அருள்வாக்கு.

நெஞ்சம் விந்தையானது. அலைகடலையும் நெஞ்சத்தையும் ஒப்பிடலாம். அலைகடலில் எண்ணத் தொலையாத அலைகள் உண்டு. அதுபோலவே, எண்ணத் தொலையாத ஆசை அலைகள் நெஞ்சில் உண்டு. அலைகள் எண்ணிக்கை பலவானாலும் அவை புதிய வண்ணமும் வடிவமும் உடையன அல்ல; முன் பின் என்ற காலமாறுபாடேயாகும். உருத்துதெழுந்து வந்த அலை, கரையில் மோதி அலையென்ற

வடிவமிழந்து - பெயரழிந்து ஆங்காரம் மங்கிக் கரையால் எதிர்த்துத் தாக்கப்பெற்று, உருக்குலைந்து, கரைந்து தண்ணீராகக் கடலில் கலக்கிறது. மீண்டும் அத் தண்ணீர்த் துளிகளே காற்றழுத்தத்தின் துணைக்கொண்டு அலையாகி மோதுகிறது. ஆக, வடிவத்திலும் மாறுதலில்லை; செயலிலும் மாறுதல் இல்லை. அதுபோலவே ஆசை அலைகள் நெஞ்சில் எழுகின்றன. ஒன்றன்பின் ஒன்றாக எழுந்தாலும் ஆசைகள் புதியன அல்ல. பழைய சுயநலமேதான். பழைய சுயநலம் மாறிப் புதிய பிறர் நலமாக இருப்பின் குணம் மாறும்; பயன் விளையும். ஒருகால் சுயநலமும் காப்பாற்றப் பெற்றாலும் பெறலாம்.

இந்த நெஞ்சு அறியாமைத் தன்மையுடையது. அதற்கு ஆய்ந்தறியும் அறிவுணர்வை விட வழக்கம்தான் பெரிது. அது இன்று புதுப்பாதை போடாது; நேற்று நடை பயின்ற பாதையிலேயே செல்லும்; அந்தப் பாதை நாற்றமுடையதாக இருந்தாலும் மூக்கைப் பிடித்துக் கொண்டாவது அந்தப் பழைய பாதையில் செல்ல வழி நடத்துமே தவிர, எளிதில் வழக்கத்தை மாற்றாது. நெஞ்சம், ஆசைகளின் ஊற்றுக்களன். ஆசைகள் துன்பந் தருவனவேயன்றி இன்பந்தரா. அதனா லன்றோ,

> *ஆசையறு மின்கள் ஆசை யறுமின்கள்*
> *ஈசனோ டாயினும் ஆசை யறுமின்கள்*

என்று, திருமந்திரம் பேசிற்று. 'ஆசையை விடுக' என்றால் ஒன்றும் வேண்டாம் என்பது பொருளல்ல. அன்பின் வழியல்லாமலும், பண்பு வழிப் பயன் கருதாமலும் விழைவது ஆசை. உணவு - உடல் வாழ்க்கைக்கு இன்றியமையாதது. உடலைப் பேணவும், பேணிப் பாதுகாக்கவும், திறனுறு வகையில் உடலைப் பயன்படுத்திக் கொள்ளவும் உணவை விரும்புதல் ஆசையாகாது. ஆனால், உணவின் மேலேயே ஆசை கொண்டு, சுவையில் நாட்டம் வைத்து, அச்சுவை

உடலியக்கத்திற்குத் தீங்கு பயப்பினும் உணவை விரும்பி உண்பது ஆசையாகும்.

பொருள், வாழ்க்கைக்கு இன்றியமையாதது. பொருளின்றேல் பூவுலகம் இல்லை. நெறிமுறைப்பட்ட துய்ப்பிற்கும், தொடர்ந்து உயிர் வாழ்வதற்கும் மற்றவர் உயிர் வாழும்படிச் செய்யும் அறமாகிய ஈதலுக்கும், பொருள் தேவை. இந்த வகையில் பொருளை விரும்புதல் ஆசையன்று. அங்ஙனமின்றிப் பொருள் மீதே விருப்பங்காட்டிப் "பொருளுடையோன்" என்று பலரும் சொல்ல விரும்பித், துய்க்காமலும் ஈந்து மகிழாமலும், மகிழ்விக்காமலும் பொருளொன்றையே குறியாகக் கொண்டு சேமிப்பது, ஆசையாகும்.

மண்ணில் பயிர் தழைக்க மழைத்துணை தேவை. அதுபோல மனிதகுலம் செழிக்க அன்பு தேவை. உயிர், காதலால் செழித்து வளரும். காதல் பாலுணர்வின் பாற்பட்டது மட்டுமன்று; அதனையும் கடந்தது. காதல் உயிர்களைச் செழிக்கச் செய்யும்; உணர்வுகளைச் செழிக்கச் செய்யும்; தூண்டி வளர்க்கும்; தூய்மை சேர்க்கும்; பொறிகளுக்கும் புலன்களுக்கும் அன்பினைச் சேர்க்கும். இத்தகு தூயகாதல்வழி ஒருவன் ஒருத்தியை நாடுதலும், ஒருத்தி ஒருவனை நாடுதலும் ஆசையாகா. பயனின்றி உயிர்களை அரித்தழித்து உருக்குலைக்கும், பாலுணர்ச்சியின் வெறியில் மகளிரை நாடுதல் ஆசையாகும். உயிருக்குக் கடவுள் துணை. அவன் தாயிற் சிறந்த தயவுடன் தண்ணளி சுரக்கும் துணை. கடவுளை வாழ்த்துதல் வாழ்வேயாகும். கடவுளை மாறா அன்பினில் வாழ்த்துதல் வேண்டும்.

அங்ஙனமின்றி, "இது வேண்டும், அது வேண்டும்" என்ற விண்ணப்பங்களுடன், விண்ணப்பத்தை நிறைவேற்றுவதற்காகக் கடவுள் மீது விருப்பமின்றி, விருப்பங்கள் மீது விருப்பத்துடன், கடவுளை வாழ்த்துதல் ஆசையாகும். ஆசை துன்பத்தையே தரும். ஆசையுணர்வில் சுவை புதிதல்ல;

பொருள் புதிதல்ல; உணர்வும் புதிதல்ல; எல்லாம் பழைய சுயநலத் தேவதையின் மயம். அஃது அரிப்புடைய சொறி சிரங்கைப் போல உயிர் வாழ்க்கையை அரித்து எரித்துக் கொண்டிருக்கிறது.

நேற்று, என்னை நான் நேசித்ததால் அடைந்தது துன்பமே. முந்தா நாளையக் கதையும் அதுவே. ஆயினும் "நான்", "எனது" என்ற நச்சு உணர்வுகள் மாற்றப்பட்ட பாடில்லை. திரையில் காட்சி மாறினாலும் உணர்வு மாறாது போனால் பயனில்லை. நாட்கள் மாறினாலும், நாடிடும் நாட்டம் மாறினாலொழியப் பயனில்லை. நேற்றைய துன்பமே இன்று மீண்டும் வருகிறது. நேற்றைய 'நான்' இன்று 'நாம்' ஆக மாறி வளர்ந்தால், துன்பம் தொலையும். நேற்றைய என்னுடையது, இன்று 'நம்முடையது' என்று மாறி, வளர்ந்தால் பயனுண்டு. 'நானில்' உலகமில்லை. ஆனால், நாம் என்பதில் 'நான்' என்பது, அவலம் தரத்தக்க ஆசையினின்று விலகி அன்பு வடிவம் பெற்று ஆங்கு இருக்கிறது. ஆளுக்கு அழிவில்லை. தீமைக்கே அழிவு. 'என்னுடையது' 'நம்முடையது' ஆனபிறகு தனி ஒருவரின் உரிமை அழிந்து விடவில்லை; மாறாக உதவி பெற்றிருக்கிறது; ஆங்கார மற்றிருக்கின்றது. மேலும் சொன்னால், ஒருவரைப் பாது காக்கப் பலர் முன் வந்திருக்கிறார்கள் என்பதே உண்மை. ஒருவனாகத் தனித்து, வயிற்றிலும் வாயிலும் அடித்துக் கொண்டு அவலத்துடன் வாழ்க்கை முடிவு அடைவதைவிட, பலர் பாதுகாக்கும் வாழ்க்கையே புகழுடைய வாழ்க்கை. தாமே உண்பதைவிட, உண்பிக்க உண்பது சுவையுடையது. தாமே சிரித்து மகிழ்வதைவிட மற்றவர் மகிழ்விக்க மகிழ்வது மாண்புடையது. நாமே, நம்மை வியத்தலைவிட, மற்றவர்கள் வியந்து பாராட்டுதல் சிறப்புடையதாகும்.

ஆதலால், நேற்றைய நம் வாழ்க்கையில் விளைந்த துன்பத்தினைப் பார்த்து அதனின்றும் விலகி வாழ்தல் வேண்டும். அது போலவே நேற்றைய வாழ்க்கையிலேற்பட்ட

இன்பத்தினைப் பார்த்து அந்த இன்பத்தினை மேலும் வளர்த்துப் புதுமையதாக்கி அனுபவித்தல் வேண்டும். 'நேற்று' என்பது 'இன்று' அப்படியே அப்பட்டமாக ஆகுமானால், பயனில்லை. 'நேற்று' போய் 'இன்று' உருவாகும் பொழுது கழிப்பன கழித்தும், கொள்வன கொண்டும் புதுமைப் பொலிவு பெற வேண்டும். வறட்சித் தன்மையுடைய கிழட்டுத் தனத்தை நீக்கப் புதுமை உணர்வு துணை செய்யும். ஆக, புலன்களைச் சென்ற வழியே செல்ல விடாமல், போன வழியிலேயே போய்ப் பாழாக விடாமல் புது நெறியில் — பொது நெறியில் நெஞ்சத்தை நாம் பழக்க வேண்டும். ஆனால், புலன்களோ புதுமையில் நாட்டமில்லாது வழக்கத் திற்கும் பழக்கத்திற்கும் அடிமையாகின்றன. "என்னால் மாற்றிக்கொள்ள இயலவில்லையே! என்ன செய்வது?" என்று சிலர் அங்கலாய்க்கின்றனர். இந்தப் பொல்லாத பழக்கம் பயனுடையதன்று.

நிலம், பரப்பளவில் அதிகமுடையது. ஒரு நிலத்தை முழுவதும் உழுதால்தான் நிலம் பயனுடையதாகும். ஒரு நிலத்தின் ஒரு சால் மட்டுமே உழப்பெற்று, அதற்கு அண்மைத்தாய அடுத்த சால் உழப்பெறாது போகுமானால், முன்னர் உழுத உழவின் பயனுமில்லை. அது போலவே நேற்றைய தீய பழக்கத்தை விலக்க, அதனைச் சார்ந்து வரக் கூடிய தீய பழக்கங்களையும் விலக்க வேண்டும். நேற்றைய நற்பழக்கத்தை உறுதிப்படுத்திக் காப்பாற்றிக் கொள்ளப் புது நற்பழக்கங்களும் தேவை. பக்தியாகிய நற்பழக்கத்தை அரண் செய்து காப்பாற்றத் தொண்டு தேவை. இங்ஙனம் இனிய பழக்கங்களை விரிவாக்கிக் கொள்ளாமல் வாழ்தல் வாழ்க்கை ஆகாது.

இதனை அப்பரடிகள் உழுத சாலில் உழவே விரும்பும் இழுதை நெஞ்சமென்று எடுத்துக் காட்டி, இடித்துரைக் கின்றார். ஆதலால், வழக்கங்களையும் பழக்கங்களையும் மாற்றி, நலம் பல பெருக்கி, நன்றுடையானை வாழ்த்தி வாழக்

கற்றுக் கொள்ள வேண்டும். சுவைத்தனவே சுவைக்க விரும்புதல் நெஞ்சத்தினியல்பு. அங்ஙனம் மாறாது சுவைக்கத் தக்கன, நன்றுடையான் திருத்தாள்களேயாம். சுவைப் பொருள் மாறாது போனாலும் சுவைத்தற்குரிய நோக்கம் மாற வேண்டும். இதனை,

*எழுது பாவைநல் லார்திறம் விட்டுநான்*
*தொழுது போற்றிநின் றேனையும் சூழ்ந்துகொண்டு*
*உழுத சால்வழி யேயுழு வான்பொருட்டு*
*இழுதை நெஞ்சம் என்படு கின்றதே*

என்ற அப்பர் திருப்பாட்டால் அறியலாம்.

அப்பரடிகள் ஞான வாழ்க்கை வாழ்ந்தவர். அவர் நம்மனோரையும் ஞான வாழ்க்கை வாழத் தூண்டுகிறார். நல்ல வாழ்க்கையை — உழவுத் தொழிலோடு உருவகம் செய்து காட்டிப் படிப்பிக்கின்றார்.

*மெய்ம்மையாம் உழவைச் செய்து*
*விருப்பெனும் வித்தை வித்திப்*
*பொய்ம்மையாம் களையை வாங்கிப்*
*பொறையெனும் நீரைப் பாய்ச்சித்*
*தம்மையும் நோக்கிக் கண்டு*
*தகவெனும் வேலி யிட்டுச்*
*செம்மையுள் நிற்ப ராகில்*
*சிவகதி விளையு மன்றே.*

வேளாண்மைக்கு உழவு இன்றியமையாதது. அது போலவே ஞான வாழ்க்கைக்கு மெய்ம்மை உழவைச் செய்ய வேண்டும். மெய்ம்மை என்பது வெளிப்படையாக மெய்ம்மை, வாய்மை, உண்மை என விரிந்து விளங்கும் மூன்றையும் குறிக்கும். மெய்ம்மை உடலாற் செய்வது; வாய்மை யென்பது வாயினாற் கூறுவது. உண்மையென்பது உள்ளத்தில் நினைப்பது. இம்மூன்றையும் ஒரு சேரக் கடைப் பிடிப்பதே முழுநிறை மெய்ந்நெறி. மெய்ம்மை, வாய்மை,

உண்மை இம்மூன்றில் ஒன்றிருந்து ஒன்று குறைந்தாலும் அது மெய்ந்நெறியாகாது. சமய நூலோர் புறநெறி தவிர்த்து அருள் நெறியில் உய்த்துச் செலுத்தும் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நெறிகளை மெய்ந்நெறி என்பர். முன்னரே குறிப்பிட்ட மெய்ம்மை, வாய்மை, உண்மை ஆகிய சீலங்களை முறையாகச் சரியை, கிரியை, யோக ஞான நெறி நின்று ஒழுகினாலேயே பெற முடியும். காரணங்களைக் காரியமாகக் காட்டுதல் தவறில்லை. விருப்பம் இச்சை மீதூர்தல். அதாவது பசித்தான் உணவின் மாட்டும், பிணியுடையார் மருந்தின் மாட்டும், இடையீடின்றி இச்சை மீதூர்தல் போலப் பழுத்த மனத்துடன் சிவபக்தியில் மேலிட்டு இறைவனிடத்து ஆற்றல் மிக்க அன்பில் — அயரா அன்பில் முறுகி நிற்றலே விருப்ப மென்ற வித்து. மெய்ம்மை உழவில் பயிற்சியின்மையின் காரணமாகத் தொடக்க நிலையில் காணப்பெற்றனவும், இடையில் உலகியலின் காரணமாகத் தோன்றியனவுமாகிய பொய்மையை அகற்றுதல் வேண்டும். மெய்ம்மை உழவில் பொய்ம்மை தவிர வேறு களை இருத்தல் இயலாது. களை அகற்றிப் பின் பொறுமை என்ற நீரைப் பாய்ச்ச வேண்டும். பொறுமை யென்பது வேறு; சகிப்புத் தன்மை என்பது வேறு. பொறுமையையே வள்ளுவம் பொறையுடைமை என்று போற்றும். **அண்ணல் காந்தியடிகள் பொறையுடைமையை அகிம்சை யென்றார்.** தனக்கு ஏற்படும் துன்பத்தை - இழப்பை - இழிவைக் கொஞ்சமும் கூச்சமின்றி மனத்தாலும் நினைக்காது ஏற்று அனுபவித்தலே பொறையுடைமை. துன்பம் செய்யாமை மட்டும் அகிம்சையல்ல. மற்றவர் தரும் துன்பத்தையும் மகிழ்வோடு ஏற்றுத் தாங்கி அனுபவித்துத் துன்பம் தந்தாரையும் வாழ்வித்திடும் பண்பே அகிம்சை. இதனை வள்ளுவம் 'உற்ற நோய் தோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை, அற்றே தவத்திற்கு உரு' என்றது. பலர் ஊரை அறிந்திருப்பர்; உலகை அறிந்திருப்பர். ஆனால், அவர்களைப் பற்றி அவர்களுக்கே தெரியாது. சிறந்த சமய வாழ்க்கையின் முதற்படி தம்மை உணர்தலே. அதற்குப் பிறகுதான் தம்மை

யுடைய தலைவனை உணர்தல். இதனைத் 'தம்மையும் நோக்கிக் கண்டு' என்றார்.

இவ்வளவும் நிகழ்ந்த பிறகு, அயர்ந்தும் சிறு நெறி செல்லாமல் பெரு நெறியைப் பற்றி ஒழுகுதலும் எங்கும் எப்பொழுதும் யார் மாட்டும் உள்ளும் புறமும் ஒத்துப் பழகுதலும், உயிர் ஒருமைப்பாடு காணல் என்ற தகைமை நெறி நிற்றலும் ஞான வாழ்க்கைக்கு வேலி. ஞான உறவில் வாழ்க்கை முழுமையாக ஈடுபட்டு வெற்றி கண்டவரே பிறகு, இரக்கத்தின் திருவுருவமாக விளங்குவர். 'ஐயன் ஐயாற னார்க்கு அன்பலால் பொருளில்லை' என்பது அடிகள் வாக்கு. அன்பே சிவமாய் அமைந்து வாழ்வதே செம்மையுள் நிற்றல். இந்த வாழ்க்கையின் பயனாகச் சிவகதி விளையும்.

அப்பரடிகள் பிறப்பை வெறுத்தவர் அல்லர். மண்ணை வெறுத்தவரல்லர். ஆனால் இவைகளை நம்பி வழியிடை நின்றவருமல்லர். தூய மனிதப் பிறவியும் வேண்டுமென்று வேண்டுகின்றார். அப்பரடிகள் கயிலைக்குச் செல்லக் காமுற்றார். ஆனால் எந்தை சிவபெருமானோ அப்பரடி களின் இடத்திற்கே கயிலையை மாற்றினார். ஏன்? அப்பரடிகளின் அருந்தமிழை ஞாலத்தில் பயில வேண்டும்; அப்பரடிகளின் திருத்தொண்டின் நெறி வையகத்தில் நீடு நிலவ வேண்டும்! அதனாலன்றோ அரன் நாமத்தை எண்ணாது அப்பரடிகளின் நாமத்தையே எண்ணிய அப்பூதி யடிகள் வாழ்த்தப்படுகிறார். அப்பரடிகள் தமிழாசிரியர்; தமிழ்த் தலைவர்; அன்பின் ஆக்கம்; அருளின் திருவுருவம்; பத்திமையின் வடிவம்; திருத்தொண்டின் திருவுரு; நம்ம னோர்க்கும் ஞானத்தை வழங்கிய ஞானாசிரியர். அப் பரடிகள் நெறி வையகத்தில் கால்கொள்ளுமானால் சாதி வேற்றுமைகள் சருகெனக் காயும்; சமநிலைச் சமுதாயம் தோன்றும்; எல்லோரும் வாழ்வர்; இன்புற்று வாழ்வர்; இம்மண்ணகம் விண்ணகமாகும். அப்பரடிகளின் திருவடிகள் வாழ்க! வாழ்க!

# 32

# சமய இலக்கியங்கள்

தமிழ், காலத்தால் மூத்த மொழி; கருத்தாலும் மூத்து முதிர்ந்து வளர்ந்த மொழி. இலக்கியம் - இலக்கணம் - இலக்கியம் என்று சுழற்சி முறையில் செழித்து வளர்ந்த மொழி. தமிழின் செழிப்புக்கு அதன் இனிமையும், தமிழிலக்கியங்கள் காட்டும் நெறிமுறைகளும் எடுத்துக்காட்டுக்கள்.

தமிழில் விளங்கும் தொன்மையான நூல் தொல்காப்பியம். இந்நூல் 2700 ஆண்டுகளுக்கு முன் தோன்றிய தென்பர் மொழி வரலாற்றறிஞர். தொல்காப்பியம் ஓர் இலக்கண நூல். இலக்கியங்களின் வழிதான் இலக்கணங்கள் தோன்றுகின்றன. அங்ஙனமாயின் தமிழிலக்கிய உலகம் 2700 ஆண்டுகளுக்கு முந்திய பழமையுடையது. தொல்காப்பியம் இலக்கண நூல்களுள் ஒன்றெனை அழைக்கப்பெற்றாலும் அஃது அப்பட்டமான மொழி இலக்கண நூல் மட்டுமன்று. வாழ்க்கையின் இலக்கணம் கூறும் வாழ்வியல் நூலுமாகும். எல்லா மொழிகளும் எழுத்துக்கும் சொல்லுக்கும் மட்டுமே, இலக்கணம் கண்டன. ஆனால், தொல்காப்பியம் அம் மொழியைப் பேசி வாழும் மக்களின் வாழ்க்கைக்கும் இலக்கணம் வகுத்துத் தந்திருக்கிறது. இப்படித்தான் வாழவேண்டும் என்ற உணர்வு அரும்பும் தொடக்கமே சமய

நெறியின் தொடக்கம். வாழ்க்கையின் அருமைப்பாட்டை உணர்தல், வாழ்க்கையின் நோக்கத்தையறிதல், வாழ்வாங்கு வாழக் காமுறுதல், ஒழுங்குகள் கால் கொள்ளுதல், ஒழுக்கநெறி நிற்றல் ஆகியன தலையெடுக்கச் செய்து தனி மனிதனையும் சமுதாயத்தையும் வழி நடத்துவதே சமயம். ஆதலால், தொல்காப்பியம் சமய இலக்கியம் என்று அழைக்கப்பெறாவிட்டாலும் சமயத்தின் அடிப்படைக் கொள்கைகள் தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ளன. தமிழரின் சமய அனுபவம் மெய்ப்பொருளியல் அடிப்படை யிலானது. உலகியலை-உலகியலின் நிகழ்வுகளை ஆய்ந்து, சிறந்த செம்பொருள் காணும் ஆர்வமுனைப்பில், வாழ்க்கை யில் முகிழ்த்த - நெறி-செந்தமிழ்ச் சமயநெறி. இக்கருத்தினைத் தொல்காப்பியத்தின் எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் கூட நமக்குத் தருகின்றன.

எழுத்துக்களை "உயிரெழுத்து" என்றும், "மெய் யெழுத்து" என்றும், "உயிர்மெய்யெழுத்து" என்றும் முத்திறப் படுத்திய நுண்ணறிவு உயிரியல் வரலாற்றில் உண்மையாகி வருகிறது. உயிர்கள் பிறப்பு, இறப்பு இல்லாதவை. உயிர்கள் பிறத்தல்-இறத்தல் என்று நிகழ்வன, உடல் மாற்றங்களைப் பற்றியன-உயிர்கள் என்றும் உள்ளவை; தலைமைக்குரியவை. உயிரெழுத்துக்களின் முதலெழுத்தாகிய 'அ'வின் இலக்கண மும் இதுவேயாம். உடம்பினுள் இயங்கும் ஒலிக்கு முதலாகிய நாதம் 'அ' எழுத்து வடிவத்திலேயே இயங்குகிறது. உயிரின் இயக்கத்திற்கு உடம்பு கருவி. உயிர் இயக்கினாலொழிய உடம்பு தானே இயங்காது. மெய்யெழுத்தின் நிலையும் அதுவே. உயிரும் மெய்யும் கூடிய நிலையில் இயக்கங்கள் விரிவடைகின்றன. உயிர் மெய்யெழுத்தும் அப்படியே. பொருளதிகாரத்திலும் கடவுள் வாழ்த்து, மனையற வாழ்க்கை, துறவற வாழ்க்கை ஆகியன குறித்து விளக்கும் தொல்காப்பியத்தை ஒரு சிறப்பான சமய இலக்கியமெனக் கூறல் தவறன்று. ஆயினும் இன்றுள்ள நிலையில்

வாழ்க்கையிலிருந்து சமயம் பிரிந்து நெடுந்தொலைவு விலகி, வாழ்க்கையின் ஒரு பகுதியாக மட்டும் விளங்குவதால் பலர், தொல்காப்பியத்தைச் சமய நூல் என்று கருதுவதில்லை.

தொல்காப்பியர் காலந்தொட்டே நெறிமுறை உணர்வு, தமிழர் வாழ்வில் பொதுளியிருந்ததால் பின் தோன்றிய சங்க கால இலக்கியங்கள்–காதல்–வீரம் பற்றி மிகுத்துக் கூறினும் வாழ்வாங்கு வாழும் ஆர்வத்தையும் காண்கின்றோம். சங்ககால இலக்கியங்களில் பரிபாடலும், திருமுருகாற்றுப் படையும் தனித்தன்மையுடைய சமய இலக்கியங்களாகும்.

பரிபாடல் மிகச் சிறந்த சமய இலக்கியம். உயிர், உலகியல் தொடர்புடைய வேட்கைகளின் ஆர்வம் காட்டித் தேடும் இயல்பினது. இவ்வுலகில் உயிர் வாழ்க்கைக்குப் பொருள் இன்றியமையாதது; தவிர்க்க முடியாதது. தேவைகள் வாழ்க்கையை உந்திச் செலுத்துவன.

பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை

என்பது தமிழ்மறை. ஆனால் பரிபாடலில் பொன்னை விரும்பி வேண்டவில்லை. பொருளை விரும்பி வேண்ட வில்லை. போகத்தை விரும்பி வேண்டவில்லை. ஏன்? பொன்னும் பொருளும் மானிட சாதியின் படைப்பாற்றல் துணைக்கொண்டு படைக்கப்படுவன. போகம் அதாவது இன்புறுதல் மனித நலன்களைப் பொறுத்தது. இவற்றை இறைவனிடம் கேட்கும் பழக்கம் தமிழ்ச் சமய நெறியில் இல்லை. கேட்டாலும் இறைவன் தரமாட்டான். அவன் காரணங்களாக அருள் செய்வானேயன்றிக் காரியங்களாக அல்ல. என்ன வேண்டப்படுகிறது? அருள் வேண்டப் படுகிறது; அருளைப் பெற்றுத் தரும் அன்பு வேண்டப் படுகிறது. அருளையும் அன்பையும் படைத்திடும் அறம் வேண்டப்படுகிறது.

*யாஅம் இரப்பவை*
*பொருளும் பொன்னும் போகமு மல்ல நின்பால்*
*அருளும் அன்பும் அறனும் மூன்றும்*
*உருளிணர்க் கடம்பில் ஒலிதா ரோயே.*

மேலும் சமய வாழ்க்கை தனி ஓர் உயிரின் உய்திக்கு மட்டு மன்று. ஓர் உயிரின் வாழ்க்கையைச் சமுதாய வாழ்க்கையில் இணைத்து வளர்ப்பதே சமயம். சிறந்த சமய நடைமுறை சமுதாய அமைப்பு கால்கொள்ளத் துணை செய்வது. சமுதாயத்தை இணைத்து அணைத்து இன்புறுத்த-இன்புற அன்பு தேவை; அறம் தேவை. தமிழ்ச் சமய இலக்கியங்கள் சமுதாய ஒழுகியலை வலியுறுத்துவன. ஏன்? கடவுளுக்கே 'நீதி,' என்று பெயரிட்டு அழைத்தது தமிழ்ச் சமயம். ஆதலால் சமுதாய வாழ்வியலறங்கள்-உணர்வுகள் இங்கு வேண்டப் படுகின்றன.

சங்க கால இலக்கியங்கள், முழுமையாக வளர்ந்த கவிஞர்கள் பலரை நமக்கு அடையாளம் காட்டுகின்றன. சங்ககால இலக்கியங்களில் காதல் உண்டு; வீரம் உண்டு; ஆட்சி முறைகள் உண்டு! இவைகளின் ஊடே அறநெறிக் கொள்கைகளும் விளக்கமுற அமைந்து கிடக்கின்றன என்பதை அறிதல் வேண்டும். சங்க காலத்தில் வாழ்க்கை முழுமையுற்றிருந்தது. சங்ககால வாழ்க்கை, சீரான வாழ்க்கையாக இருந்ததாலும் வாழ்க்கையில் இயல்பாகவே சமயநெறிச் சீலங்கள் விளங்கியதாலும் சமயத்தை மிகுதியும் வலியுறுத்த வேண்டிய கடப்பாடிலாது போயிற்று. ஆயினும் சமய இலக்கிய வரிசையில் இவைகளும் அடங்கியன என்பது தான் உண்மை.

மானிட வாழ்க்கை புலன்களால் ஆயது. புலன்கள் தூய்மையாக இருக்க வேண்டும். பலர், பொறிகளில் தூய்மை காட்டுவர். அஃது அரியதொன்றன்று. இன்று சிலர் புறத் தோற்றத்தில் செவ்விய தோற்றம் காட்டுகின்றனர். அவர்

களுக்கு விளம்பரமும் நிறையச் செய்யப்படுகிறது. உள்ளூரில் வாழும் சராசரி மனிதரிடம் ஆர்வங்காட்டாதவர்கள், உலகு அவாவி நிற்கின்றனர். அவர்களின் அண்மையில் சென்றால் சாதித்திமிர், மற்ற மானிட சாதியை இழிவாக நினைக்கும் இழிநிலை, மொழிவெறி, காசு பறிக்கும் உத்திகள், வஞ்சனை கள், அம்மணமான புகழாசை முதலியன முடைநாற்றம் வீசுவதைக் காண்கிறோம். இவற்றைக் கூர்ந்து உணரும் மோப்ப ஆற்றல் இன்றைய மானிட சாதிக்கு மிகுதியும் இல்லை. அதனால் சங்ககால இலக்கியம் காட்டும் வாழ்க்கை முறை, பொறிகளில் தூய்மை காத்தலன்று; புலன்களில் தூய்மை காத்தலாகும். புலன்களில் தூய்மையுடையாருக்கே செந்தண்மை வரும். அதனால்தான்,

புலனழுக்கற்ற அந்தணாளன்

என்று புறநானூறு பேசுகிறது. இஃதொரு சமயக் கோட் பாடேயாம்.

அது மட்டுமா? தமிழர் தம் வழிபடு கடவுளாகிய பரசிவத்தின் வரலாறுகள் பலப்பல. அவை பழைய வரலாறு களாகவும் உருப்பெற்றுள்ளன; இலக்கியச் சான்றுகளாகவும் இடம்பெற்றுள்ளன. நமக்கு வரலாறு இன்றியமையாததன்று; அந்த வரலாறு வடித்துத் தரும் பயனுடைய வாழ்க்கை நியதி இன்றியமையாதது. சாதாரணமாக உயிரினம் வாழத்தான் விரும்புகிறது. எளிதில் இறக்க யாரும் விரும்புவதில்லை. ஏமாற்றங்களால் ஏற்படும் மனக்குறையால் நிகழும் தற் கொலைகள் உணர்ச்சி வயப்பட்டவை. அவை கணக்கில் எடுத்துக்கொள்ளத்தக்கன அல்ல. எல்லாரும் நெடுநாள் வாழத் துடிக்கின்றனர். அதற்காக மருந்துகளைத் தேடி அலை கின்றனர். அதுமட்டுமா? தாம் வாழ்வதற்காக மற்றவர்களைப் பலி கொடுப்பதற்கும்கூடச் சிலர் ஆயத்தமாகின்றனர்.

இது மனித இயல்பாக இன்று இருக்கிறது. பரசிவத்தின் நிலை என்ன? அமரர்களைக் காப்பாற்ற அலைகடலில்

எழுந்த நஞ்சினை, தாம் உண்டது சிவம். அமரர்கள் சாவா மருந்தாகிய அமுதத்தை உண்டனர். ஆனால் சாவைத்தரும் நஞ்சினையுண்ட சிவம் வாழ்ந்தது. சாவா மருந்தை உண்ட அமரர்கள் செத்தனர்.

*விண்ணோர் அமுதுண்டும் சாவ ஒருவரும்*
*உண்ணாத நஞ்சுண்டு இருந்தருள் செய்குவாய்*

என்பது சிலப்பதிகாரம். ஏன்? அமுதத்தால் மட்டுமா வாழ்ந்துவிட முடியும்? அமுதத்திலும் உயர்ந்த நல்லெண்ணம் வேண்டாமா? மற்றவர்கள் வாழவேண்டுமென்ற உணர்வே சிவம். யார் செத்தாலும் அக்கறை இல்லை; தாம் வாழ்ந்தால் போதுமென்ற அமரரின் எண்ணம் நஞ்சினும் கொடியது. ஆதலால், அமரர் தம் நெஞ்சத்திலூறிய நஞ்சை, அமுதத் தாலும் மாற்ற முடியவில்லை. ஆதலால், செத்தொழிந்தனர். இக்கருத்தினை எவ்வளவு நயம்படப் புறநானூறு பேசுகிறது.

*வலம்படு வாய்வாள் ஏந்தி ஒன்னார்*
*களம்படக் கடந்த கழல்தொடி தடக்கை*
*ஆர்கலி நறவின் அதியர் கோமான்*
*போர்அடு திருவின் பொலந்தார் அஞ்சி*
*பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி*
*நீல மணிமிடற்று ஒருவன் போல*
*மன்னுக பெரும நீயே தொன்னிலைப்*
*பெருமலை விடரகத்து அருமிசைக் கொண்ட*
*சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது*
*ஆதல் நின்னகத்து அடக்கிச்*
*சாதல் நீங்க எமக்கு ஈந்தனையே.*

நெல்லிக்கனி, சாவா மருந்து. அதியமான் தான் வாழ விரும்பாமல் தமிழ் மூதாட்டியாகிய ஔவையாரே வாழ வேண்டும் என்று எண்ணித் தருகின்றான். அதனால் பண் பாட்டுலகில் என்றும் அதியமான் வாழ்கின்றான். "நீல

கண்டம்" தன்னல மறுப்பின் சின்னம்; அருளுடைமையின் அடையாளம்.

ஓர் இனத்தில் சமயம் தோன்றி வளர்வது அந்த இனம் நன்கு வளர்ந்த காலக்கட்டத்தில்தான்; தமிழ், சமயத்தில் சிறந்து விளங்கும் மொழி. கடவுள் நம்பிக்கை, மதம், சமயம் ஆகியன ஒரு தன்மையன போலத் தோன்றினாலும் மிகுதியும் வேறுபாடுடையன என்பது எண்ணத்தக்கது. தமிழர் சமய நெறிக்குக் கடவுள் நம்பிக்கை உண்டு. ஆனால், தமிழ்ச் சமய நெறியின் கடவுள் நம்பிக்கை மற்ற சமயங்கள் அல்லது மதங்கள் கடவுளைக் கருதுவது போலவன்று. தமிழ்ச் சமயத் தின் கடவுள் நம்பிக்கை, நம்பிக்கையின் பாற்பட்டது; நல்லெண்ணத்தின்பாற்பட்டது; ஆக்கத்தின் வழியிலானது; நீதியின்பாற்பட்டது.

மதம், மக்கள் மன்றத்தைத் தழுவாதது. சமயம், மக்கள் மன்றத்தைத் தழுவியதாக, மனித குலத்தை ஆக்குவதற்காகவே தோன்றியது. மதம், உருவாக்கப் பட்டது. சமயம் பரிணாம வளர்ச்சியில் உருவானது. மதத்திற்குப் பகுத்தறிவு பகை யானது. சமயத்திற்குப் பகுத்தறிவு உடன்பாடானது. மதம், மறுமையைப் பற்றிப் பேசுவது. சமயம் இம்மையையும் பேசும்; மறுமையையும் பேசும். மதம் ஊழ்வினையின் வலிமையை மிகுத்துக் காட்டும். சமயம், ஆள்வினையை மிகுத்துக் காட்டும். மதம், சிற்றெல்லைகளைப் படைக்கும். சமயம், எல்லைகளைக் கடந்த பொதுமையைப் படைக்கும். இத்தகு சமயமே தமிழர் சமயம். இதனையே சேக்கிழார்,

செழுந்தமிழ் வழக்கு

என்கிறார். இந்தச் சமயநெறி "இந்து மதம்" என்ற கட்டமைப் பிற்குள் இல்லாதது. ஆனால் வரலாறு, நாட்டின் நடப்பில் பிணைப்பு ஏற்பட்டு இந்து மதப் பிணைப்பில் வந்த பிறகு அதன் கொள்கைகளும் இதன் கொள்கைகளாகக் கலப்பின் வழிவந்துள்ளன.

சமயம் என்பது "சமைத்தல்" என்னும் சொல்லின் அடிப்படையில் பிறந்தது. மானிட வாழ்க்கை, புலன்களின் நுகர்வுகளால் ஆயது; நுகர்வுகளுக்கு வாயிலாக இருக்கின்ற பொறிகளால் ஆயது. இப்புலன்களும் பொறிகளும் உயிரின் நலத்திற்கு ஒத்திசைந்து, உள்ளவாறு இயங்கினால் உயிர் நலமுறும். ஆனால், இயற்கையில் புலன்களும் பொறிகளும் உயிரோடு ஒத்துழைப்பதில்லை. எந்த உயிருக்கு நன்மை செய்து இன்புறுத்த வேண்டுமோ அந்த உயிருடன் இப் புலன்களும் பொறிகளும் போராடும்; அதை அலைக்கழிவு செய்யும். இதனால், உயிர்க் குலத்தின் வாழ்க்கை தடம் புரண்டு போகிறது.

மனித அறிவு, எண்ணத் தொடங்கிய காலந் தொட்டு – சற்றேறக்குறைய 14500 போர்கள் உலகத்தில் நிகழ்ந்துள்ளன. இப்போர்கள் நாடுகளுக்கிடையே நடந்த போர்கள். சாதி களிடையே நடந்த போராட்டங்கள், மதங்களுக்கிடையே நடந்த போராட்டங்கள், வீடுகளுக்கிடையே நடந்த போராட் டங்கள், வீடுகளுக்குள் நடந்த போராட்டங்கள் இந்தக் கணக்கில் சேரவில்லை.

இக்கொடிய போராட்டங்களில் கொன்று குவிக்கப் பட்ட மனிதர்களின் எண்ணிக்கை 364 கோடி என்றொரு புள்ளிக்கணக்கு பேசுகிறது. இப்புள்ளி விவரமும் நாடு களிடையே நடந்த போர்கள் பற்றியதுதான். இங்கும் அங்குமாக நடைபெற்ற கொலைகள் இந்தக் கணக்கில் சேரா. ஏன் இந்த அவலம்? உயிரை, உயிரின் உணர்வை அன்பில் சமைத்து உலகு தழீஇய வாழ்க்கை வாழச் செய்யும் சமயநெறியில் ஈடுபடாமைதான்.

புலன்களையும், பொறிகளையும் பக்குவப்படுத்தாமல் அவைதம் வழியில் விடுவதில்தான் விபத்து இருக்கிறது.

*சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ*
*நன்றின்பால் உய்ப்ப தறிவு*

என்பதறிக. அப்பரடிகள் இப்பொறிகளும் புலன்களும் உயிரின் நலத்திற்கு எதிராகப் போராடும் இயல்பினை விளக்குகின்றார். ஓர் உயிர், ஐம்புலன்களைத் துணையாகக் கொண்டு வளர்வது வாழ்வின் இயற்கை. ஆனால் இந்த ஐம்பொறிகள் உயிரோடு ஒத்துழைக்காமல் உயிருக்கு ஊறு செய்கின்றன என்று கூறுகின்றார்.

*மெய்யுளே விளக்கை ஏற்றி*
*வேண்டள வுயரத் தூண்டி*
*உய்வதோர் உபாயம் பற்றி*
*உகக்கின்றேன் உகவா வண்ணம்*
*ஐவரை அகத்தே வைத்தீர்*
*அவர்களே வலியர் சாலச்*
*செய்வதொன் றறிய மாட்டேன்*
*திருப்புக லூர ரீரே.*

உயிரின் வலிமையைவிட ஐம்புலன்களின் வலிமை மிகுதி யாததற்குக் காரணம் புலன்கள் பொறிகளிடத்திலேயே இல்லை. உயிரிடத்தில் இயல்பாக இருக்கும் அறியாமை, இன்ப துன்பம் பற்றிய முடிவுகளில் நிலை பிறழச் செய்து உயிரை அலைமோத விடுகிறது. சமய தத்துவ உலகத்தில் அறியாமை என்பதற்கு, "ஒன்றும் தெரியாமை" என்பது பொருளன்று. ஒன்றைப் பிறிதொன்றாக முறைபிறழ அறிவதே அறியாமை.

*எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்ப தறிவு*

என்பது நினைக்கத்தக்கது. பிறழ அறிவதாகிய அறியாமை யால் உயிர், நன்மையைத் தீமையென்றும் தீமையை நன்மை யென்றும் தலைதடுமாற்றமாக அறிகிறது. இன்பத்தைத் துன்பமாகவும் துன்பத்தை இன்பமாகவும் எண்ணுகிறது. இங்ஙனம் உயிரின் மயக்கநிலையில் பழகிய புலன்கள் உயிர்

தந்த பழக்க வாசனையில் நிலைத்து நின்றுவிடுகின்றன. உயிர், பட்டறிவில் நிலைதிருந்திய வழி உடல் புலன்களால் வழி திரும்ப முடிவதில்லை. அந்த நிலையில் ஒரு போராட்டம் நிகழ்கிறது. அப்போராட்டத்தில் புலன்கள் வென்று விடுவதாக அப்பரடிகள் கூறுகின்றார்.

உயிரின் அறியாமைக்கு மிகுதியும் காரணம் "செருக்கு" என்பது சமய நூற் கருத்து. உயிரின் அனைத்துத் தீமை களுக்கும் அதுவே அடிப்படை. இதனை அப்பரடிகள்,

*தினைத்தனையோர் பொறையிலா உயிர்போங் கூட்டைப்*
*பொருளென்று மிகவுன்னி மதியால் இந்த*
*அனைத்துலகும் ஆளலாம் என்று பேசும்*
*ஆங்காரம் தவிர்நெஞ்சே அமரர்க் காக*
*முனைத்துவரும் மதில்மூன்றும் பொன்ற அன்று*
*முடுகியவெஞ் சிலைவளைத்துச் செந்தீ மூழ்க*
*நினைத்தபெருங் கருணையன்நெய்த் தான மென்று*
*நினையுமா நினைந்தக்கால் உய்ய லாமே,*

என்றுகூறி விளக்குகின்றார்.

சமய வாழ்க்கையின் பயன், பொறிகளும் புலன்களும் தூய்மையுடையனவாகி உயிர் அன்பில் தழைத்து வளர்வதே யாம். உயிரின்-தூய்மை என்பது பயன்படாத் தூய்மையன்று; தீமை செய்யும் தூய்மையுமன்று. மாறாக, நன்றாற்றல் நிகழ்த்தும் தூய்மையே தூய்மை; அகத்திலும் புறத்திலும் ஒத்து இயல்வதே தூய்மை. இதனைச் சேக்கிழார்,

*பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள்*

என்று விளக்குவார். தூய்மையில் உவர்ப்பு இல்லை; உவப்பு உண்டு. தூய்மை அருள்நலஞ் சான்றது. அங்கு வேறுபாடு களில்லை; காய்தல் இல்லை. அதுவே தூய்மை. பழுத்த மனத்து அடியார்களாக விளங்குவது சமய வாழ்க்கையின் பயன்.

பொறை, சமய இயலின் ஒழுகலாறுகளில் சிறந்தது; விழுமியது. பொறையுடைமை வழி, மேலும் பல நல்ல ஒழுக்க இயல்புகள் வந்தமையும். பொறை-பொறுத்தாற்றல். நன்றும் தீதும் உலகியற்கை; சுழன்று வருவன. அவை மானிட சாதியினாலேயே படைக்கப் பெற்று அனுபவிப்பன ஆகும். இதில் ஏன் மகிழ்ச்சி? மகிழ்ச்சியின்மை? பெரியோர், சிறியோர் என்பது அவரவர்தம் சூழ்நிலைக்கு ஏற்ப அமையும் ஒழுகலாறுகளில் விளங்கும் தன்மை. இதனால்-பெரியோரை வியந்து பாராட்டுதலைத் தவிர்க்க வேண்டும். ஒரோ வழி-பெரியோரை வியந்து பாராட்டலும் சிறியோரை இகழ்தலும் கூடவே கூடாது. இஃது ஒரு ஒப்பற்ற சமுதாய நடைமுறை விதி.

> *தீதும் நன்றும் பிறர்தர வாரா;*
> *நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன;*
> *சாதலும் புதுவது அன்றே; வாழ்தல்*
> *இனிதென மகிழ்ந்தன்றும் இலமே முனிவின்*
> *இன்னா தென்றலும் இலமே...........*
> *..................................................*
> *.................................. மாட்சியின்*
> *பெரியோரை வியத்தலும் இலமே;*
> *சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே,*

என்பதறிக.

அருள்நலம் சான்ற வாழ்க்கையை விளக்கிக் காட்டுவன சமய இலக்கியங்கள். அருள்நலம் பழுத்த சமய வாழ்க்கையுடையார் எத்தகைய வேறுபாடுகளுக்கும் இடம் கொடார். சமய நெறியின் விழுமிய இலட்சியம் ஒருமைப் பாடேயாம். ஒருமைப்பாட்டு இயல்பை வளர்ப்பதில் உண்மையான சமயம் ஈடுபாடு காட்டுகிறது. மனித குலத்தின் ஒருமைப்பாட்டுக்கு எதிராக இயங்குவது சமயமன்று. சமயச் சண்டைகள், சமயத்தின் இலக்கணத்திற்கு முரணானவை.

சமயக் கலப்படங்கள், தெளிந்த சிந்தனைகளுக்குத் தடைகள். ஆதலால், சமயச்சாயல் தழுவிய இலக்கியங்களும், சமய இலக்கியங்களாகவே திகழும். திருமுறைகளும் வேறுபாடு களைக் கண்டிக்கின்றன; மனித உலகத்தின் பொதுமை நலத்திற்கு இடையூறாக வாழ்ந்த சிலர், தன்னயப்பின் காரணமாகச் சாதிகளைத் தோற்றுவித்தனர்; குலங்களைக் கண்டனர். கோத்திரங்களைக் கூறினர். இவையெல்லாமே இல்லாதவையா? இல்லை. அவை எந்த நோக்கத்தில் நடைமுறைப்படுத்தப்பெற வேண்டுமோ, அந்த நோக்கத்தின் வழியில் நடைமுறைப்படுத்தப் பெறவில்லை. பிறப்பில் காணப்படும் வேற்றுமைகள் இயல்பாக அமைவன. அவை இயற்கை நியதிகளில் தவிர்க்க முடியாதவை. அதனால், பிறப்பின் வேற்றுமைகளைப் பெரிதுபடுத்தி ஒதுக்குதல் நன்னெறியன்று. பிறப்பின் அடிப்படையிலுள்ள வேற்றுமை களைத் தவிர்த்து, தகுதியின்மைகளைத் தகுதிப்படுத்தி மக்களை உயர்த்துவதற்குத் தானே சமயம்! அச்சமயமே, தம் கடமையினின்றும் வழுவித் தாழ்த்தப்பட்டோர் என்று அவர்களை ஒதுக்குதல் முறையன்று. குலம், சமுதாய நியதியில் தவறான அமைப்பன்று. ஆனால், இச்சீரிய அமைப்பு முறை, முறைபிறழும்பொழுது சமயநெறியினின்றும் பிறழ்கின்றது. குலம் என்பது வழிவழி வரும் மரபு. உயர் குலத்தில் பிறந்ததனால் நாம் உயர்வுடையோம் என்ற கருத்தில் அகங்காரமுடையராகி ஒழுக்கமிலாது போதல் இவ்வுலக இயற்கை. ஆயினும் அக்குலத்திற் கிசைந்த ஒழுக்க மிலராயினும் குலத்திற்குரிய பெருமை கொண்டாடுவர்; குலத்திற்குரிய பயன் கேட்பர். இது நன்னெறியன்று. இத்தகைய வாழ்க்கை சமயச்சார்புடையதன்று. ஆதலால், தமிழ்ச் சமய இலக்கியங்கள் ஒருமைப்பாட்டு நெறியை வலியுறுத்துகின்றன.

யாதும் ஊரே, யாவரும் கேளிர்

என்ற அருமையான சங்க கால இலக்கியச் சொற்றொடர் நினைவு கூரத்தக்கது. சங்ககால இலக்கியங்கள் அப்பட்ட மான சமய இலக்கியங்களன்று என்பதும், ஆயினும் சமய நாகரிகம் தழுவிய இலக்கியங்களே என்பதும் முன்பே கூறப் பெற்றன. சங்க காலத்தில் வாழ்க்கையே சமயமாக விளங்கிய தால் சங்க கால இலக்கியங்களில் சமய வாழ்க்கையை விளக்கும் பாடல்கள் பல உள்ளன. இத்தகைய சமய வாழ்க்கையின் முடிவான செய்திதான்,

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்

என்ற சொற்றொடர்.

எல்லா உலகமும் ஆனாய் நீயே

என்ற அப்பரடிகளின் அருள்மொழியும் சாதி வேறுபாடற்ற ஒருமைப்பாடுடைய மனித குலத்தையே விரும்புகிறது.

மனித குலத்தை அரித்துத் தின்றழிக்கும் தீமையில் தீமை வறுமை, ஏழைமை. சமய அறிவற்றோர், வறுமையில் வாழ்தலும்கூட ஒருவகையான அறம் என்றும் ஆதலால் ஆசைகள் கூடாது என்றும் கூறுவர். இங்ஙனம் சொல்வது தவறான வழிகாட்டுதலாகும். இதனால் உயிரியலில், உலகியலில் ஆர்வம் குறைந்து வறுமையே விஞ்சியது. ஏன்? "வறுமை இயற்கை; மாற்ற முடியாதது" என்ற கருத்து வேரூன்றியுள்ளதால் உழைப்பார்வம் இல்லை.

வறுமையை விரும்பியேற்பது உயர் சமய நெறியின் மரபன்று. வறுமையை "நச்சுப் பாம்பின் நஞ்சினும்கொடியது" என்று திருவாசகம் வருணிக்கிறது.

நல்குரவென்னும் தொல்விடம்

என்பது திருவாசகம். மிகப் பிற்காலத்தில் வாழ்ந்தவர் களாகிய-சமய இயலின் தத்துவம் உணராதார் வறுமைக்கு ஊழ் காரணம் என்றனர். மேலும் அறியாதார் சிலர் ஊழை நியதியாக்கி, வெற்றி காணமுடியாது என்றனர். ஆயினும்

ஒருவர் வறுமைக்கு மற்றவர் முயன்று அதற்கு மாற்றுத் தேடுவதுதான் வாழ்க்கையின் சீலமாக அமைகிறது. இத்தகு சீலமுடைய ஒரு வாழ்க்கையை மிகப் பிற்காலத்தில்-இந்த இருபதாம் நூற்றாண்டில் "தருமகருத்தாக் கொள்கை" யென்று கூறினர். இக்கொள்கையை ஏழாம் நூற்றாண்டிலேயே அப்பரடிகள் தந்த திருமுறை இலக்கியம் எடுத்து மொழிந்தது.

*இரப்பவர்க் கீய வைத்தார்*
*ஈபவர்க் கருளும் வைத்தார்*
*கரப்பவர் தங்கட் கெல்லாம்*
*கடுநர கங்கள் வைத்தார்*
*பரப்புநீர்க் கங்கை தன்னைப்*
*படர்சடைப் பாகம் வைத்தார்*
*அரக்கனுக் கருளும் வைத்தார்*
*ஐயன்ஐ யாற னாரே,*

என்பதறிக. வறுமையும் ஏழைமையும் நிறைந்த சமுதாய அமைப்பில் சமயநெறி கால்கொள்ளாது என்பது தமிழ்ச்சமய இலக்கியங்களின் முடிவு.

சமய வாழ்க்கை, உயிரின் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய அறிகருவிகளை மையமாகக் கொண்டது. மனம், ஒன்றைப் பற்றுவது. மனம் பற்றிய ஒன்றின் தன்மையை ஆராய்ந்து நிர்ணயிப்பது புத்தி. அந்த ஒன்றை நோக்கி விரிவடைவது சிந்தனை. அதனை அடைதற்குரிய உறுதிப்பாட்டினை மேற்கொண்டு, முயற்சி செய்வது அகங்காரம். ஆக, மனம்தான் தோணிபோல் பயன்படுகிறது. இந்த மனம் குறைவிலா நிறைவு, கோதிலா அமுது, வரம்பிலா ஆற்றல், பேரறிவு என்று புகழப்பெறும் கடவுளைப் பற்றுவதன் மூலம் அத்தன்மைகளைத் தன்னிடத்து ஈர்த்துத் தன்னையும் தன்னைச் சார்ந்த இதர கருவிகளையும்

தன்னையுடைய உயிரையும் வளர்த்துச் செழுமைப் படுத்துவதே வழிபாடு.

சமய வாழ்க்கையின் சீலம், உடற்சார்புடையது மட்டுமன்று. சயம நெறியில் உடற்சார்பான ஒழுகலாறுகள் - வாயில்கள் பாதுகாப்பு மட்டுமேயாம். அகம் நிறை ஒழுக்கங்களே சமய வாழ்க்கையின் பயன். உயிர், சமய வாழ்க்கையின் அனுபவமாகிய பத்திமையில் வளரும்பொழுது தொண்டார் வமும் முகிழ்க்கும்; பார்வாழப் பணிசெய்யும் ஆர்வம் தழைக்கும்.

> பார்வாழத் திருவீதிப் பணிசெய்து
> பணிந்தேத்திப் பரவிச் செல்வார்

என்று அப்பரடிகள் பற்றிச் சேக்கிழார் குறிப்பிடுவார். சமய உணர்வில் தோன்றும் பணியார்வம் இன்பத்தை விழையாது; துன்பத்திற்குத் துவளாது; புகழ்நாட்டம் கொள்ளாது. அஃறிணையைப்போல் தன்முனைப் பற்றுத் தன்னயப் பின்றிப் பணி செய்யும் வாழ்க்கையே சிறந்த சமய வாழ்க்கையென அப்பரடிகள் கூறுவார்.

> நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
> தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
> தன்க டன்அடி யேனையும் தாங்குதல்
> என்க டன்பணி செய்து கிடப்பதே.

வையகம் தூய அன்பெனும் பத்திமையில் தழைத்துத் தொண்டு நெறியில் செழித்து வளர்வதே சமய இலக்கியங்களின் நோக்கம்-பயன்.

# 33

# சமய இலக்கியங்களில் அறநெறி

மனிதனின் ஏற்றத்தாழ்வு, பெருமை, சிறுமை ஆகியன மனத்தையே சார்ந்திருக்கின்றன. மனம், விந்தையானது. மனம் நன்மையும் செய்யும், தீமையும் செய்யும்: மனம் நல்வழியில் பழக்கப்படுத்தப்பட்டால் அஃது இனிய துணையாக அமையும். மனிதனின் பொறிகள், புலன்கள் அனைத்தும் மனத்தின் வழி இயங்குபவை. மனம், புத்தியால் இயக்கப்படும். புத்தி, சிந்தையால் சிறப்படையும். சிந்தனை, புத்தி, மனம் ஆகியவை ஒருங்கிணைந்து நன்னெறியிற் செயற்படுமானால் மனத்தூய்மை வந்தமையும். தூய்மையான மனத்தால் இயக்கப்பெறும் பொறிகளும் புலன்களும் அறநெறியில் நிற்கும்; ஒழுகும்; மகிழ்வைத் தரும்; வாழ்வை இன்பமயமாக்கும்.

மனம் இயல்பில் மயங்கும் தன்மையது; எளிதில் கவர்ச்சி வசப்படும்; தெளிவில்லாமல் ஒன்றினைப் பற்றும் அல்லது விடும். மனத்தின் அவலத்திற்கு அடிப்படை இன்ப விழைவு. அதனால், இன்ப விழைவு தீயதென்று கொள்ளுதல் கூடாது. வாழ்க்கையின் நோக்கமே இன்ப விழைவுதான். ஆனால், மயங்கிய மனம் இன்பமல்லாதனவற்றை இன்பம் என்று கருதுகிறது; அடைய முயல்கிறது. மனம் தெளிவு இல்லாமல் குழப்பமடைந்து விடுவதால், இன்பத்தைத்

துன்பம் என்றும் துன்பத்தை இன்பம் என்றும் முறை பிறழக் கருதுகிறது; நாடி முயல்கிறது.

ஒரு குடிசை; அந்தக் குடிசையில் வாழ்வோர் உயிரிரக்க வொழுக்கத்தில் வளராமையால் புலாலூண்பவர்கள். ஆமையைச் சமைத்து உண்பவர்கள்; அவர்கள் அந்தக் குடிசையின் அடுப்பில் உலைப் பானையை ஏற்றித் தீமூட்டி எரித்தனர். உயிருள்ள ஆமை ஒன்றை உலைப்பானை நீரில் அவிக்க இட்டனர். உலை நீரில் இளஞ்சூடு ஏறியபொழுது அந்த ஆமை கொள்ளை இன்பம் கண்டது. குளிர்நீரில் கிடந்து மரத்துப்போன ஆமைக்கு இதமான இளஞ்சூடு இன்பக் கிளர்ச்சியைத் தந்தது. பானையில் கிடந்த ஆமை அவ்வின்பக் கிளர்ச்சியில் திளைத்து மகிழ்ந்து விளை யாடியது. ஐயோ, பாவம்! நீர் இளஞ்சூட்டில் இருக்கும் பொழுது மகிழ்வைத் தருகிறது; அடுப்பில் நெருப்பு எரிதலால் நீரின் கொதிநிலை மாறும்; சுடு நீராகும்; ஆமை அழியும். இப்படி எண்ணிப் பார்க்க ஆமைக்கு மனம் இல்லை. ஏன்? ஆமையின் அறிவு சூழ்நிலைகளுக்கு இசைந்ததே; கட்டுப் பட்டதே. சூழ்நிலைகளை மாற்றியமைத்துக் கொள்ளும் அளவுக்கு விலங்குகளின் அறிவுத்திறன் வளரவில்லை; அமையவில்லை.

> ........................ உலையை ஏற்றித்
> தழல்எரி மடுத்த நீரில்
> திளைத்துநின் (று) ஆடுகின்ற
> ஆமைபோல் தெளிவி லாதேன்

என்றார் அப்பரடிகள்.

இந்த வாழ்க்கையை மனித வாழ்க்கையோடு பொருத்திப் பாருங்கள். வாழ்க்கையென்பது அடுப்பு; அனுபவம் என்பது பானை; ஆசையென்பது தீ; ஆமை என்பது உயிர்; அவ்வப்பொழுது பெறும் சிறுபொழுதின்பம் இளஞ்சூடு. சிறு பொழுதின்பங்கள் அனைத்தும் சிறுமை பொருந்தியவழி வருவனவேயாகும். சிறுமை பொருந்திய

இன்பங்கள் அன்பைக் கெடுக்கும்; உறவைப் பிரிக்கும்; பகையை வளர்க்கும். தெளிவற்ற மனமுடையோர் இந்நெறி நின்று அலமருவர். தெளிவுடையார் சிறுபொழுதின்பத்தை விரும்பார்; நிலையான இன்பத்தையே விரும்புவர். நிலையான இன்பம் என்பது கால எல்லையைக் குறிப்பதன்று. எங்கும் எல்லோருக்கும் இன்பமாக இருப்பதுதான் உண்மையான இன்பம்; அறநெறியின் பாற்பட்ட இன்பம். ஆதலால் சிந்தையில் தெளிவு தேவை. சிந்தையில் தெளிவுடையாராலேயே அறநெறியில் நிற்றற்கு இயலும். இதனை அப்பரடிகள்,

*சிந்தையுள் தெளிவு மாகித்*
*தெளிவினுட் சிவமு மாகி*

என்றார்.

தெளிந்த அன்புடையார் அன்பு நெறியில் நின்று வாழ்வர். அன்பில் விளைவதே அறநெறி. அன்பும் அறமும் பிரிக்க இயலாத இரட்டைப் பண்புகள்; ஒன்றையொன்று தழுவி நிற்பன. அன்பு மனித குலத்தின் கற்பு. அன்புதான் சிவம்; சிவம்தான் அன்பு! அன்பு ஆற்றல் மிக்குடையது. "ஆற்றல் மிக்க அன்பு" என்று அப்பரடிகள் பாராட்டி யுள்ளார். அன்பில் தோய்ந்த மனம் அறநெறியில் நிற்கும். கடவுளை நம்பிச் செய்கின்ற சடங்குகள், கடவுளுக்காக செய்யப்பெறுவன அல்ல. அன்பினைத் தோற்றுவித்து வளர்க்கச் சடங்குகள் பயன்படும். சமயச்சடங்குகளுள் சிறப்பான சடங்காகக் கருதப் பெறுவது வற்றாத நீர்ப் பெருக்குடைய நீர்நிலைகளில் குளிர்ப்பது; தீர்த்தம் ஆடுவது; கங்கைக்குச் சென்று குளித்தல்; குமரிக்கடல் துறைக்குச் சென்று குளித்தல்.

இந்நீர்நிலைகளிற் சென்று குளிப்பது மிகுந்த பயனைத் தரத்தக்கது. எப்படி? அங்குச் சென்று குளித்தலால் மட்டுமே பயன் விளையாது. கங்கை, காவிரி போன்ற ஆறுகளை நாடிச் செல்லும்பொழுது அந்தப் பயணத்தில் பல்வேறு மனிதர்

களைச் சந்தித்தல், அவர்களுடன் பழகுதல், அதுபோழ்து ஏற்படும் புகழ்ச்சி இகழ்ச்சிகளைப் பொருட்படுத்தாதிருத்தல், பயண வழியில் பெறும் இன்பதுன்பங்களிற் சமநிலை உணர்வைப் பெறுதல் ஆகிய அறநெறிப் பண்புகள் கிடைக்கும். ஆறு, கடல் ஆகியன தூய்மையின் சின்னங்கள்; பொதுமையைக் கற்பிக்கும் கழகங்கள். எந்த நாட்டிலும் குட்டைகள் தீர்த்தமாவதில்லை. ஏன்? அவை எல்லைக்குள் முடக்கப்பட்டவை. அவை தேக்கமுடையவை. அவைகட்குப் போக்கும் இல்லை, வரவும் இல்லை. ஆனால், ஆறு அப்படியா? கங்கை இமயமலையின் உச்சியில் தோன்றி மண்ணில் வீழ்ந்து பல நூறு கல்தொலைவு ஓடிச்சென்று கடலைச் சார்கிறது. உயர்ந்த இலட்சியப் பயணத்தின் பெருக்கன்றோ கங்கை? மலையினின்றும் அது மண்ணுக்கு வருகிறது. ஏன்? அது மண்ணுக்கு வளம் சேர்க்கவும் மனித குலத்திற்கு வாழ்வளிக்கவும் வருகிறது. இந்த உயர்ந்த இலட்சியத்தோடு அது தடைகளைக் கடந்து, விளைவுகளைக் கடந்து உயிர்க்குலம் அனைத்துக்கும் வாழ்வளித்துக் கடலைச் சார்கிறது. இடையில் அதனைத் தீர்த்தம் என்று போற்றிக் குளிப்பாரும் உளர்; அறியாமையால் அதனை மாசுபடுத்து வாரும் உளர். எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டு அது பயணம் செய்து கொண்டிருக்கிறது. இந்த நினைப்புக்களோடு கங்கையிற் குளித்தால், கங்கை நீரால் உடல் தூய்மையாகிறது. கங்கையின் பெருந்தன்மையை, இலட்சியப் பயணத்தை, உயிர்க்குலமனைத்துக்கும் கைம்மாறு கருதாது வாழ்வளிக்கும் பண்பாட்டினை, தூய்மையின்மையையே தூய்மையாக்கிக் கொண்டு வாழ்வளிக்கும் நிகழ்ச்சிகளை நினைக்கும் பொழுது மனம் தூய்மையாகிறது. அங்ஙனம் மனம் தூய்மையானால் "இங்கு ஈசன்; அங்கு ஈசன்" என்று சொல்லார். அவர்கள், 'ஈசன் எங்கும் இருக்கின்றான்; எல்லா உயிர்களிடத்தும் இருக்கின்றான்' என்று கருதி அன்பு செய்வர். இந்த அன்பு நெறியே அறநெறி. இதனை அப்பரடிகள்,

*கங்கை ஆடில்என்? காவிரி ஆடில்என்?*
*கொங்கு தண்கும ரித்துறை ஆடில்என்?*
*ஓங்கு மாகடல் ஓதநீர் ஆடில்என்?*
*எங்கும் ஈசன் எனாதவர்க்(கு) இல்லையே*

என்று பாடியருளினார்.

இத்தகைய அன்புநெறியில் நிற்பவர் தொண்டு நெறியின் தலைப்படுவர். அன்பு என்பது ஓர் உணர்வு. அது செயல்வழிதான் வெளிப்படும். அன்பின் வழியதாகச் செய்யப் பெறும் செயலே தொண்டு. அன்பின் வழியினர் தம் உடைமையைத் தனி உடைமை என்று கருதார். அவர்தம் உடைமை பயன்படும் வகையால் பொதுவுடைமைப் பாங் கினைப் பெறும். அறநிலைப் பொருளுடைமை என்பதைத் தான் 'தர்மகர்த்தா முறை' என்று பொருளியல் மேதைகள் கூறுகிறார்கள். அண்ணல் காந்தியடிகள் இந்திய சமூகப் பொருளாதாரத்திற்கு அறநிலைக் கொள்கையையே வற் புறுத்தினார். இன்றைய பாரத அரசியல் சிந்தனையும் இந்தக் கொள்கை வழி நின்று முன்னேற முயல்கிறது. நடைமுறையில் இந்தக் கொள்கை வெற்றிபெறுவது எளிதன்று. ஏன்? நம்முடைய சமூகப் பழக்க வழக்கங்கள் நெகிழ்ந்து கொடுப் பனவாக இல்லை.

அறநிலையங்கள் என்று பெயர் விளங்கி நிற்பனவற்றின் பொருளுடைமைகள்கூட மக்களுக்குப் பயன்படாமல் இருப் பதைக் காண்கிறோம். அவற்றிலேயே குறைகள் மலிந்தமை யால் அவை அறவழியிற் செயல்படாமல் நெறிமுறைப் படுத்தப்பட வேண்டிய அளவுக்குத் தாழ்ந்து போயின. ஆயினும், அறநிலைப் (தர்மகர்த்தா) பொருளாதார முறை நடைமுறைக்கு வந்தால் நாடு நன்மையுறும். இந்த அறநிலைப் பொருட் கொள்கை (தர்மகர்த்தா முறை) ஏழாம் நூற்றாண்டில் அப்பரடிகளாலேயே எடுத்துக் கூறப் பெற்றது. ஒருவர் மருத்துவம் பயின்றார். தம் சொந்தப் பொறுப்பிலேயே மருத்துவமனை அமைத்தார். அம்மருத்துவ மனையில்

அவருடைய சொந்தப் பொருளிலேயே மருந்துகளை வாங்கி வைத்தார். மருந்துகள் அவருக்குச் சொந்தமானவையே. அவர் உரிமை கருதி அந்த மருந்துகளையெல்லாம் தாமே உண்பாரா? பிணியுடையாரின் பிணியை நீக்கத்தானே அந்த மருந்துகள் பயன்படவேண்டும். அங்ஙனமின்றி, உரிமை கருதி அவரே அந்த மருந்துகளை உண்பாரானால் அவர் மரண மடைவார். வறுமைக்குப் “பிணி” என்றும், செல்வத்திற்கு “மருந்து” என்றும் பெயருண்டு. வறுமையுடையார் “பிணி” யுடையார், செல்வமுடையார் “மருந்து”டையார். செல்வ முடையார் செல்வத்தைத் துய்த்தற்கு இயலாது; வறுமை யுடையாரே துய்த்தற்கு இயலும். அதனாலன்றோ புற நானூறும்,

> செல்வத்துப் பயனே ஈதல்;
> துய்ப்பேம் எனினே தப்புந பலவே

என்று பாடிற்று. இக்கருத்தினை அப்பரடிகள்,

> இரப்பவர்க்(கு) ஈய வைத்தார்;
> ஈபவர்க்(கு) அருளும் வைத்தார்

என்று அருளிச் செய்தார். ஆதலால், கடின உழைப்பால் செல்வத்தை ஈட்டுதலும், ஈட்டிய பொருளைப் பசிப்பிணி யால் வருந்துவோர்க்கு வழங்கி வாழ்வித்தலும் உயர்ந்த அறநெறிகளாகும்.

இங்ஙனம் வருந்துவோர்க்கு உதவி செய்து வாழ்வளிப் பதில் வேறுபாடுகள் காட்டுவது கூடாது. உயிர்க்குலம் ஒன்றேயாம். நாடு மொழி ஆகிய வேறுபாடுகள் இயற்கையாக அமைந்தவை. அவை பொருட்படுத்தத்தக்கன அல்ல. சமய வேறுபாடுகள் சிந்தனை வளர்ச்சியாலும் தத்துவ வளர்ச்சி யாலும் உருவானவை. இவையும் பொருட்படுத்தத்தக்கன அல்ல. குல வேறுபாடுகளோ பண்புவழி அமைந்தன. ஆனால், அவை மாறுபாடுகளுக்கும் பிரிவினைக்கும் உரியன அல்ல. சாதி வேறுபாடுகள் செயற்கை முறையில் தன்னல

நாட்டத்துடன் கற்பிக்கப் பெற்றவை. ஆகவே, சாதி வேற்றுமை தீது; சாபக்கேடு. எந்தக் காரணத்தாலும் உயிர்க் குலத்தின் ஒருமைப்பாட்டுக்கு எதிராக நினைப்பதும் பேசுவதும் ஒழுகுவதும் தீமைகளாகும். எவ்வளவு பெரியவ ராகத் தெரிந்தாலும் சாதி வேற்றுமைகளை மேற்கொண் டொழுகுபவராயின் அவர் தீயோரே!

சமயங்கள் மனித உலகத்தைச் செழுமைப்படுத்தத் தோன்றியவையே. ஆனால், சமயங்களை மையமாகக் கொண்டே மாறுபாடுகளும் முரண்பாடுகளும் பகையும் வளர்க்கப்படுமாயின், சமயங்கள் பயன் தரா. இதனை அருளால் உணர்ந்த வள்ளற் பெருமான், சமயங்களைக் கடந்த பொதுநெறிக்கு மக்களை அழைத்துச் சென்றார். அந்நெறிதான் சன்மார்க்க நெறி. அப்பரடிகள் “எல்லா உலகமும் ஆனாய் நீயே” என்றார். இது மனித உலக ஒருமைப்பாட்டின் குரலுமாகும். அப்பரடிகள், பிறப்பினால் சாதி வேற்றுமை பாராட்டும் பொய்ச் சாத்திர நெறியைக் கடுமையாகச் சாடியுள்ளார். சாத்திரங்களைக் காட்டி, ஊழ்வினையைக் காட்டி, உணவுப் பங்கீட்டு அட்டை (Ration Card)யை உவமையாகக் காட்டிப் பிறப்பில் ஏற்றத் தாழ்வாக அமைந்துள்ள இன்றையச் சமுதாயக் கொடுமைகளைக் கட்டிக் காப்பாற்ற அன்றும் பலர் முயன்றனர். இன்றும் சிலர் முயன்று வருகின்றனர். அவர்கள் “ஆதாரமில்லாமலா பேசுகின்றனர்? ஒரு வகுப்பினர் ஆவுரித்துத் தின்று உழல் கின்றனராம்; அவர் புலையராம்; அதனால், தீண்டத் தகாதவராம்.” இங்ஙனம் கூறுபவர்கள் என்ன செய்கிறார்கள்? இவர்கள் மனித இரத்தத்தையன்றோ உறிஞ்சிக் குடிக் கின்றனர்? நாட்டின் நல்லூழின்மையால் ஏற்பட்ட விபத்துக் களால், இவர்கள் உயர்ந்த இடத்தில் ஒதுக்கப்பட்டு விட்டனர். இருக்கும் இடம் உயர்ந்தது என்பதாலேயே உபதேசமும் உயர்ந்ததாகிவிடுமோ? அப்படியானால், ஆவுரித்துத் தின்று உழல்வது தவறா? இல்லையா? தவறு

தான்! தவழ்ந்து நடப்பவர் தவறித்தான் வீழ்வர். ஏற்ற முடையவர் அவரை எடுத்தாள வேண்டாமா? வேண்டும் என்பதனால்தான்,

> ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்....
> அவர்கண்டீர் நாம்வணங்கும் கடவு ளாரே

என்றார் அப்பரடிகள்.

சாத்திரங்களைக் காட்டிக் குல கோத்திர வேற்று மையைக் கற்பிப்பதும் காப்பதும் அறநெறியல்லவே. எல்லா வுயிர்களும் இறையருள் பெறுதற்குரிய பாத்திரங்களே என்று கருதி அன்பு செய்தல்-அவ்வுயிர்களுக்கு உரியனவற்றைச் செய்து உதவுதல்-ஒப்புரவுக் கொள்கை. இதுவே சமய இலக்கியங்கள் காட்டும் அறநெறி.

தென்னாட்டுக்குச் சிவனாகவும், மற்றெல்லா நாடு களுக்கும் இறைவனாகவும் உள்ள பெருமான் உயர்த்தியுள்ள கொடி எருதுக் கொடி. எருது ஒரு சின்னமே! சின்னத்தின் பின்னணியில் சிந்தனை மாட்சியிருக்கிறது. வேளாண் மைக்குத் துணை செய்வது எருது. அது தன் உழைப்பினால் விளைந்த உயர் நெல்லையும், காய்களையும், கனிகளையும் மனித குலம் உண்டு மகிழ அளிக்கிறது. ஆனால், அது மனிதருக்குப் பயன்படாத வைக்கோலைத் தின்று வாழ்கிறது. எருதின் குணங்களைப் போன்ற பண்பாடுடையாரின் நெஞ்சில் பெருமான் எழுந்தருள்வான் என்பதே எருது ஊர்தியின் தத்துவம்.

சமய இலக்கியங்கள் சிந்தனையைத் தருகின்றன; புத்தியைப் புதுமைப்படுத்துகின்றன; மனத்தைத் தூய்மை செய்கின்றன; அன்பினைத் தருகின்றன. அன்பிற் பொது வுடைமை மலர்கிறது; ஒப்புரவுக் கொள்கை உயர்ந்து விளங்குகிறது; உயிர்க்குலம் ஒன்றாக இணைகிறது. இது சமய இலக்கியங்கள் காட்டும் அறநெறி. அத்தகு அறநெறி நின்று அவனியை வாழ்வித்து வாழ்வோமாக!

# 34

## சுந்தரர்

நம்பியாரூரர், சுந்தரர், ஆளுடைய நம்பிகள் என்றெல் லாம் போற்றப்பெறும் சுந்தரமூர்த்தி நாயனார் தமிழ்நாட்டு வரலாற்றில் ஒரு திருப்பு மையமாகத் திகழ்ந்தவர். செந்தமிழுக்கும் சிவநெறிக்கும் ஏற்றம் இருந்த காலம் அவர் காலம்.

நம்பியாரூரர் இறைவனைத் தம் அன்றாட வாழ்க்கை யில் உடன் உறைவோனாகவே கொண்டார்; இறைவனோடு அளவளாவினார்; உகந்தும் கூடியும் பழகினார். அவர் ஏத்தியும் வழிபட்டார்; ஏசியும் உறவு கொண்டார். ஆயினும் எந்தச் சூழ்நிலையிலும் திரு ஆரூரானை மறக்கவில்லை.

*வழுக்கி வீழினும் திருப்பெய ரல்லால்*
*மற்று நான்அறி யேன்மறு மாற்றம்* (7.54.1)

என்று பேசியவர் நம்பியாரூரர். ஆயினும் அவர் இறை வனிடத்தில் உருகிப் பேசிய இடங்களும் உண்டு. நிகழ்ச்சி களும் உண்டு.

இறைவனுக்கும் நம்பியாரூரருக்கும் இடையில் இருந்த உறவு, அறிவு எல்லைகளைக் கடந்தது. அவர்கள் உறவினைக் கலிக்காமரராலேயே புரிந்துகொள்ள முடியவில்லையே! இப்

பிறவியிலேயே இருமை யின்பமும் அடைந்த அருளியற் சமர்த்தர் நம்பியாரூரர்.

## நம்பியாரூரர் பெருமை

நம்பியாரூரரைப் புகழ்ந்து போற்றியர்வர்கள் பலர். நால்வர் புகழ் போற்றுவதில் சிவப்பிரகாசர் இயற்றிய நால்வர் நான்மணிமாலை முதன்மையானது. பரவையாரின் ஊடல் நீக்க, நாயகனை—இறைவனைத் தூது அனுப்பியது தவறு என்பது கலிக்காமர் கருத்து. இதனைக் கலிக்காமர்,

*நாயனை அடியான் ஏவும்*
*காரியம் நன்று சால*
*ஏயும்என் றிதனைச் செய்வான்*
*தொண்டனாம் என்னே பாவம்!*

(ஏயர்கோன் புரா. 384)

என்று கூறுவதாகப் பெரியபுராணம் பேசும். நம்பியாரூரர் இறைவனை உற்றுழி உதவ வேண்டுகிறார். அவ்வளவுதான். இக்குறை முடிக்க இறைவனே செல்ல வேண்டும் என்ப தில்லை.

இறைவன் திருவுள்ளம் பற்றியிருந்தால் பிற வழிகளி லும் பரவையாரின் ஊடலைத் தீர்த்திருக்க முடியும். தம் தோழனுக்கு உற்ற குறையைத் தாமே முடித்தலே இனிது; தோழமைக்குரிய இயல்பும் இதுவே.

எனவே, இறைவன் அடியார்க்கு எளியனாயிருக்கும் பாங்கினை விரும்பித் தானே தூது சென்றான். அதுவும் ஒரு நடையில் முடிக்காமல். பிரிவை நீட்டித்துக் காதலின் - தோழமையின் அருமைப் பாட்டை உணர்த்த இரண்டாந் தடவையும் நடந்தான்.

பரவையாரிடம் தூது சென்றமையால் இறைவன் தன் எளிமையையும் "நமக்கு அன்புபட்டவர் பாரமும் பூண்பர்"

என்ற ஆப்த மொழியையும் உலகிற்கு உணர்த்தவே தூது நடந்தான். இதனை நால்வர் நான்மணிமாலை,

*நோக்குறு நுதலோன் நின்னிட விருப்பால்*
*நூற்பகவு அன்னநுண் மருங்குல்*
*வார்க்குளி முலைமென் மகளிர்தம் புலவி*
*மாற்றுவான் சென்றனன் என்றால்*
*கோக்கலிக் காமன் வயிற்றிடைக் குத்திக்*
*கொண்டதே துக்குநீ புகலாய்*
*காக்கரு மதலை விழுங்கிய முதலை*
*கான்றிடத் தோன்றும்நா வலனே!*

(நால்வர் நான்மணிமாலை 15)

என்று கூறும். நம்பியாரூரர்பால் உள்ள விருப்பத்தால்தான் இறைவன் தூது போனான். இறைவன் அடியார்க்கு எளியவன் என்பது மட்டும் கருத்தல்ல; நடைமுறையும் அதுவேயாம் என்பதை நிரூபணம் செய்கிறது இந்த நிகழ்வு.

*வேதன் நாரணன் ஆர ணம்மறி*
*யாவி முப்பொருள் பேதைபால்*
*தூத னாயிரு கால்ந டந்திடு*
*தோழன் வன்மைசெய் தொண்டனுக்(கு)*
*ஆத லால்அடி யார்க ளுக்கெளி*
*யான்அ டிக்கம லங்கள்நீ*
*காத லால்அணை ஈண்டவன் வேண்டின*
*இம்மை யேதரும் கண்டிடே!*

(சித்தியார் பரபக்கம்–57)

என்று சிவஞானசித்தியாகும் இந்தக் கருத்தை உறுதி செய்கிறது.

மாதவச் சிவஞானமுனிவர் நம்பியாரூரரை "எமது குல தெய்வம்" என்று போற்றுகின்றார். நம்பியாரூரர்க்கும் சடங்கவி சிவாச்சாரியார் மகளுக்கும் நடைபெற இருந்த மரபுவழி திருமணத்தைத் தடை செய்தார் சிவபெருமான்.

தடுத்தது, ஒரே ஒரு திருமணத்தை! அதற்கு ஈடாக ஆளுடைய நம்பிகள் அதே சிவபெருமானைக் கொண்டு இரண்டு திருமணங்களைச் செய்து முடித்துக் கொண்ட வல்லாளன் என்று பாராட்டுகின்றார் மாதவச் சிவஞான முனிவர்.

*ஒருமணத்தைச் சிதைவு செய்து வல்வழக்கிட்*
*டாட்கொண்ட வுவனைக் கொண்டே*
*இருமணத்தைக் கொண்டருளிப் பணிகொண்ட*
*வல்லாளன் எல்லாம் உய்யப்*
*பெருமணச்சீர்த் திருத்தொண்டத் தொகை விரித்த*
*பேரருளின் பெருமாள் என்றும்*
*திருமணக்கோ லப்பெருமாள் மறைப்பெருமாள்*
*எமதுகுல தெய்வ மாமால்,* (காஞ்சிப் புராணம் பக்.6)

என்பது மாதவச் சிவஞான முனிவர் பாடல்.

நம்பியாரூரர், சேக்கிழார் இயற்றிய பெரியபுராணக் காப்பியத்திற்கு நாயகன் என்பதை நினைவிற் கொள்வது நல்லது. நம்பியாரூரர் வரலாறுதான் பெரியபுராணத்துக்கு அடிப்படை. மற்ற நாயன்மார்கள் வரலாறுகள் துணை வரலாறுகள் என்று கருதினால் தவறில்லை.

நம்பியாரூரர் திருமுதுகுன்றம் மணிமுத்தாற்றில் பொன்னை இட்டு, திருவாரூர்க் குளத்தில் எடுப்பதைச் சேக்கிழார் "தன்னை வினையின் குழியினின்று எடுத்தார்" என்று கவிக் கூற்றாகப் பாடுவது உள்ளத்தைத் தொடுகிறது; உருக்குகிறது.

*உள்ளத்திலொரு துளக்கமிலோம்*
*உலகுய்ய இருண்டதிருக்*
*களத்துமுது குன்றர்தரு*
*கனகமாற் றில்விட்டு*

தி. தி. VII. 23.

*வளத்தின்மலிந் தேழுலகும்*
*வணங்குபெருந் திருவாரூர்க்*
*குளத்திலெடுத் தார்வினையின்*
*குழிவாய்நின் றெனையெடுத்தார்*

(ஐயடிகள் காடவர்கோன் புராணம்.9)

என்பது அந்தப் பாடல்.

இங்ஙனம் பலராலும் போற்றப் பெற்றவர் நம்பியாரூரர். சமுதாயத்துறையிலும் சமயத்துறையிலும் நம்பியாரூரர் புதிய திருப்பு மையங்களைக் கண்டு தமிழக வரலாற்றுக்கு உந்து சக்தியாக விளங்கினார்.

தமிழ் நெறியை, தமிழிசையை, தமிழ்ப் பண்பாட்டை, தமிழக அகத்திணை வாழ்க்கையைப் புதுக்கி உயிர்ப் பளித்த தால் தமிழர்க்கு நம்பியாரூரர் குலதெய்வமே! அவர் தம் அடிமலர்கள் போற்றி! போற்றி!

## வாழ்ந்த காலம்

நம்பியாரூரர் வாழ்ந்த காலம் துல்லியமாகக் கணக் கிடப்படவில்லை. ஆனாலும் சுந்தரர் வரலாற்றில் அகச் சான்றுகளுக்கிணங்க கி.பி. ஏழாம் நூற்றாண்டின் பிற்பகுதியும் எட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியுமாக இருக்க வேண்டும் என்று கொள்ளலாம்.

திருத்தொண்டத் தொகையில் இடம் பெற்றுள்ள "கடல் சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமாள் காடவர் கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்" என்று போற்றப் பெற்ற பல்லவர் குலத்தோன்றல் நம்பியாரூரர் காலத்தில் வாழ்ந்தவன்.

பல்லவ அரசன் கழற்சிங்கன் சிறந்த சிவபக்தன். இந்தக் காடவர் கோமனாகிய கழற்சிங்கன்தான் பூசலார் நாயனார் வரலாற்றில் பேசப்பெறும் பல்லவ அரசன்.

காடவர்கோமான் கட்டிய கயிலாயநாதர் திருக் கோயில் கடவுள்மங்கலம் எழுந்தருள்வதைத்தான் இறைவன் ஒத்திப் போட்டுவிட்டு, பூசலார் நாயனாருடைய மனக் கோயிலுக்கு முன்னுரிமை கொடுத்து எழுந்தருளினான்.

நம்பியாரூரரை எடுத்து வளர்த்த நரசிங்கமுனை யரையன் திருமுனைப்பாடி நாட்டை ஆண்ட சிற்றரசன். இந்தக் காலத்திலேயே சுழறிற்றறிவார் என்று போற்றப் பெறும் சேரமான் பெருமானும் (சேரமன்னர்) வாழ்ந்தார்.

நம்பியாரூரர் காலத்தில் பல்லவர், பாண்டியர், சோழர், சேரர் ஆகிய மன்னர்கள் தமிழ்நாட்டை ஆண்டனர் என்ப தும், இந்த அரசர்கள் சிவநெறியில் தோய்ந்த பக்தியுடைய வர்களாய் இருந்தனர் என்பதும் புலப்படுகிறது.

நம்பியாரூரர் திரு ஆலவாய், திருப்பரங்குன்றம் ஆகிய தலங்களில் மூவேந்தர்களுடன் கூடி நின்று வழிபட்டதாகச் சேக்கிழார் கூறுகிறார்.

ஆதலால், நாளும் இன்னிசையால் தமிழ் வளர்த்த திருஞானசம்பந்தர், கைத்திருத்தொண்டினால் நாட்டை நடத்திய திருநாவுக்கரசர் இவர்களைத் தொடர்ந்து திருவவ தாரம் செய்தவர் நம்பியாரூரர்.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் இவர்களுடைய திருவவதாரம் அயல் வழக்கினை வென்று விளங்கப் பயன் பட்டது. ஆயினும் ஒன்றை வெற்றி பெற்றால் மட்டும் போதுமா? அதனைத் தழுவி நிற்பதற்குரிய நெறியை அறிமுகப்படுத்த வேண்டும்.

வாழ்க்கையைத் துன்பச் சுமையாகக் கருதிய கருத்துக் களை—நெறியைப் புலமாக்கிய பௌத்த, சமண சமயங்களின் கொள்கைத் தாக்கம் தமிழகத்தில் இல்லாமல் போய் விடவில்லை.

இந்தச் சூழ்நிலையில் வாழ்க்கையை அற்புதமானதாக விளக்கிக் கூறி நெறிப்பட வாழ்ந்து, இம்மையிலேயே

இப்புவியிலேயே இறைநிலை எய்தலாம் என்பதனை உணர்த்துவது நம்பியாரூரர் வரலாறு.

நம்பியாரூரர் வரலாறு விறுவிறுப்பானது; சுவையானது; அனுபவங்கள் மிகுதியும் உடையது. அது தமிழக வரலாறாக இயங்கியிருக்கிறது; தமிழ்த் தத்துவ வரலாறாக, தத்துவங்களின் விளக்க வரலாறாக இயங்கியிருக்கிறது. இவர் வரலாறு ஒண்மை யுடையது!

## சாதிகளின் சங்கமம்

நம்பியாரூரர் திருமுனைப்பாடி நாட்டில், திருநாவலூரில் ஆதிசைவ மரபில் திருவவதாரம் செய்கின்றார். பெற்றோர் சடையனார்—இசைஞானியார். நம்பியாரூரர் சிறுதேர் உருட்டி விளையாடும் பருவத்தில் நரசிங்க முனையரையர் என்ற அரசர் அவரை எடுத்துப் போய் முறையாக வளர்க்கிறார். நம்பியாரூரர் முறையாக வளர்கிறார்.

இவர் வரலாற்றில் சாதிகள் சங்கமம் ஆகின்றன. நம்பியாரூரர் பிறப்பால் ஆதிசைவ மரபினர்; தமிழ்க் குடியினர்தான்; பார்ப்பனர் அல்லர். இதனை ஆட்கொண்டருள வந்த வழக்காடி அந்தணரிடத்தில் நம்பியாரூரர் கூறுவதால் அறியலாம்.

அனைத்துநூ லுணர்ந்தீர் ஆதி
　　சைவன்என் றறிவீர் என்னைத்
தனக்குவே றடிமை என்றிவ்
　　வந்தணன் சாதித் தானேல்,
மனத்தினால் உணர்தற் கெட்டா
　　மாயையென் சொல்லு கேன்யான்
எனக்கிது தெளிய வொண்ணாது
　　என்றனன் எண்ண மிக்கான்

(தடுத்தாட்கொண்ட புராணம் 54)

என்பதறிக.

தமிழ்க் குடியில் பணிப் பகிர்வு ஏற்பட்ட காலத்தில் திருக்கோயில் பூசனைக்கு என்று ஒதுக்கப் பெற்றவர்கள் ஆதிசைவர் என்ற மரபினராக வந்தனர். பண்டைக் காலத்தில் இவர்கள் தமிழ்க் குடியினரோடு உடனிருந்து உண்ணல், மகள் கொடுத்தல், எடுத்தல் முதலியன நிகழ்த்தி வந்துள்ளனர்.

இவர்கள் வைதிக சந்தி செய்யார். இவர்களுக்கு 'காயத்ரி' இல்லை. சைவ சமயத்தில் ஸ்மார்த்தக் கலப்புத் தோன்றிய பிறகுதான், ஆதிசைவர்கள் மெள்ள மெள்ள பார்ப்பனச் சார்புடையராயினர். ஏன்? பார்ப்பனர்கள் தமிழ்நாட்டில் அரசர்களிடம் செல்வாக்கும் பெற்று வந்தனர்.

இதனால், ஏற்பட்ட பாதிப்பால் ஆதிசைவர்கள் பார்ப்பனரைச் சார்ந்து ஒழுகினர். அப்படியிருந்தும் ஒரு சிலர் தனித்து ஆதிசைவர்களாகவே அன்று போல் இன்றும் வாழ்கின்றனர். ஸ்மார்த்தக் கலப்புத் தோன்றிய பிறகுதான் திருக்கோயில்களில் பக்தர்கள் எல்லாரும் வழிபடும் முறைக்கு விபத்து ஏற்பட்டிருக்க வேண்டும்.

சேக்கிழாரின் பெரியபுராணத்திலேயே கண்ணப்பர், திருநீலநக்கர், சாக்கியர் முதலியோர் திருக்கோயில் வழிபாடு செய்தமையை அறிகிறோம். முறையாகச் சிவ்பூசை செய்தல் எளிதாக எல்லோராலும் இயலாது.

ஆதலால், திருக்கோயில்களில் எழுந்தருளியுள்ள இறைவனை முறையாக எழுந்தருளச் செய்து பூசித்து, வரும் பக்தர்கள் பூசனை செய்து கொள்ள, அருகிருந்து கற்றுக் கொடுப்பதும் செய்துகாட்டுவதும் ஆதிசைவர் பணி.

இந்நிலையில் நம்பியாரூரர், ஆதிசைவ மரபில் தோன்றினாலும் நரசிங்கமுனையரையர் என்ற மன்னரால் வளர்க்கப்படுகிறார். நற்றமிழ்ச் சுந்தரர் உருத்திர கணிகையர் மரபிலும், வேளாண் மரபிலும் திருமணம் செய்கிறார்.

பழந்தமிழ்க்குடி மரபுப்படி சுந்தரர் வரலாற்றில் ஆதிசைவ அந்தணர், அரசர், வேளாண் மரபினர் கலக்கின்றனர்.

## ஆவணங்காட்டி ஆட்கொண்டான்

நம்பியாரூரை நரசிங்கமுனையரையர் "அன்பினால் மகன்மை கொண்டான்" என்று சேக்கிழார் பாடுகிறார். இதனால் அவரை நரசிங்கமுனையரையர் உரிமைப் பிள்ளை யாக — காதற்பிள்ளையாக எடுத்துக் கொண்டார் என்பது உய்த்துணர வேண்டிய செய்தி.

மன்னர் திருவும், வைதிகத் திருவும் பொங்க நம்பியாரூரர் வளர்ந்தார்; வளர்ந்து மணப்பருவமெய்தினார். பெற்றோர் நற்றமிழ் நாவலூரருக்கு, புத்தூர் சடங்கவி சிவாச் சாரியாரின் மகளை மணம் பேசி முடித்தனர்.

திருமண நாளும் நாழிகையும் வந்தது. திருமணப் பந்தலில்—மணவறையில் நம்பியாரூரர்! திருமணக் கோலத்துடன் மணமக்கள் இருக்கையில் அமர்ந்திருந்தனர். மங்கலநாண் சூட்டும் நேரம்.

திருமணப் பந்தலில் ஒரு புதிய அந்தணர் நுழைந்தார். அங்கே குழுமியிருந்தவர்களையும் நம்பியாரூரையும் நோக்கி மணமகனுக்கும் தனக்கும் வழக்கு ஒன்று உண்டு என்றார்; திருமணம் நின்றுவிட்டது. மணப்பந்தலில் கூடியிருந்தவர்கள் வியப்படைந்தனர்; அதிர்ச்சியடைந்தனர்!

நம்பியாரூரர் முதியவரை அணுகி வழக்கு என்ன என்று வினவினார். "நீயும் உன் மூதாதையரும் எனக்கு வழி வழி அடிமை. அடிமை ஓலை இருக்கிறது" என்றார். நம்பி யாரூரருக்கு அதிர்ச்சி! ஆதிசைவ அந்தணர் எப்படி ஒரு வேதியருக்கு அடிமையாக இயலும்? இந்த வழக்கு உலகில் இல்லையே!

இந்த வழக்கைக் கூறும் இவர் ஒரு பித்தனாக இருக்க வேண்டும் என்று கருதி முதியவரை நோக்கி "எங்கே ஓலை?" என்றார்.

உன்மீது நம்பிக்கை இல்லை! ஓலையைத்தர இயலாது; நீ கிழித்தாலும் கிழித்துவிடுவாய் என்று கூறி ஓலையைத்தர மறுத்தார் முதியவர். நம்பியாரூரர் நெருங்கிப் போய் ஓலையைப் பறிக்க முயன்றார். முதியவர் ஓலையைத் தர மறுத்தார்; போராடினார்.

நம்பியாரூரர் ஓலையைப் பிடுங்கிக் கிழித்துப் போட்டு விட்டார். ஓலையைக் கிழித்தது முதியவரின் வழக்குக்குச் சாதகமாக மாறியதோடு வழக்கிற்குரிய ஆவணத்தை மறைக்கக் கிழித்ததாக முதியவர் கூறினார். வழக்கு, முதியவர் பக்கம் சாதகமாகத் திரும்பும்படி நம்பியாரூரர் செய்தது ஏனோ?

என்னதான் அவதாரமாக இருந்தாலும் மண்ணின் இயல்பும் சுற்றுச் சூழலும் யாரை விட்டுவைக்கிறது?

மீண்டும் திருமணப் பந்தலில் உள்ளோரும், நம்பி யாரூரரும் "நும் ஊர் எது?" என்று முதியவரைக் கேட்கின்றனர்! முதியவர் திருவெண்ணெய் நல்லூர் என்று கூறுகின்றனர். திருவெண்ணெய்நல்லூர்த் திருக்கோயில் ஊர்ச்சபைக்கு இந்த வழக்கைக் கொண்டுபோக இருவரும் உடன்பட்டனர்.

திருவெண்ணெய்நல்லூரை நோக்கி முதியவர் நடக் கிறார். நம்பியாரூரர் காந்தத்தை நோக்கி இரும்புத் துண்டு செல்வதுபோல முதியவர் பின் போகிறார். திருவெண்ணெய் நல்லூரிலிருந்த ஊர்ச் சபையை அணுகினார். முதிய வேதியர் வழக்கை அவையின் முன் எடுத்துரைத்தார்.

"திருநாவலூரனாகிய இவன் எனக்கு அடியான். இவன் அடிமை என்பதற்குரிய சான்றாக விளங்கிய ஓலையை என்

கையிலிருந்து பிடுங்கிக் கிழித்தெறித்து விட்டான்" என்று வழக்கை எடுத்துக் கூறினார்.

திருக்கோயிலில் ஊரவையினர் "ஆதிசைவ அந்தணர் மற்றோர் அந்தணருக்கு அடிமையாதல் இல்லையே!" என்றனர்.

"நம்பியாரூரரின் பாட்டன் உளமார இசைந்து எழுதிக் கொடுத்த அடிமை ஓலை இருக்கிறது. நகல் ஓலையைத்தான் இவன் கிழித்தான்; மூல ஓலை என்னிடம் இருக்கிறது" என்றார் முதியவர்.

மூல ஓலையைப் பாதுகாப்பாக வைத்துப் பார்த்து விட்டுத் திருப்பித் தருவதாக உறுதி கூறினால் மூல ஓலையை அவையின் முன் வைப்பதாகக் கூறினார். அவையினர் ஒத்துக் கொண்டனர். வேதியர், அவையினர், முன் ஓலையை வைத்தார்.

அவையினரின் கரணத்தான் ஓலையை வாசித்தான். ஓலையில் "திருநாவலூரில் வாழும் அருமறைவல்ல ஆதி சைவனாகிய ஆரூரான் எழுதியது. வெண்ணெய் நல்லூரில் வாழும் முனிவர் பெருமானாகிய பித்தனுக்கு யானும், என் குடும்பத்தில் வழிமுறை வழிமுறையாக இனி வருபவர்களும் அடிமைத் தொண்டு செய்வதற்கு இதுவே ஆவண ஓலை யாகும். உள்ளமும் செய்கையும் ஒத்த நிலையில் இதனை எழுதிக் கொடுக்கிறேன்! இதற்கு இவை என் கையெழுத்து" என்றிருந்தது.

ஊரவையினர் முறையாகக் கையெழுத்தை ஒத்துப் பார்த்து ஓலை சரியானதே என்ற முடிவை அறிவித்தனர். முடிவு என்ன? முதியவராகிய வேதியருக்கு நம்பியாரூரர் அடிமை செய்ய வேண்டும் என்பதேயாம்.

ஊரவையினர் திருவெண்ணெய் நல்லூரில் உள்ள வேதியரின் வீட்டு முகவரி முதலியனவற்றைக் கேட்டனர். வேதியர் "அறியீரோ" என்று கூறி முன்னே நடந்தார்.

திருவெண்ணெய் நல்லூர்த் திருவருள்துறைத் திருக்கோயிலினுட் புகுந்து மறைந்தார்.

உடனே விசும்பில் இறைவன் அம்மையப்பனாகக் காட்சி தந்தருளி, கயிலையில் கொடுத்த வாக்குறுதியால் தடுத்தாட்கொண்டதாக அருளினார்.

நம்பியாரூரர், இறைவன் கருணையை நினைத்து நெஞ்சுருகி நெகிழ்ந்து போனார். இறைவன் நம்பியாரூரருக்கு "வன்தொண்டன்" என்று பெயரிட்டார். இந்த வரலாற்றுக்கு சுந்தரர் தேவாரத்தில் அகச் சான்றுகள் உண்டு.

*அன்று வந்தெனை அகலிடத் தவர்முன்*
*ஆளதாக என்று ஆவணங் காட்டி*
*நின்று வெண்ணெய்நல் லூர்மிசை ஒளிந்த*
*நித்தலத் திரள் தொத்தினை* (7.62.5)

என்று சுந்தரர் பாடுகின்றார். மேலும்,

*தன்மையினால் அடியேனைத்*
*தாம் ஆட்கொண்ட நாள் சபைமுன்*
*வன்மைகள் பேசிட வன்றொண்டன்*
*என்பதோர் வாழ்வு தந்தார்* (7.17.2)

என்றும் குறிப்பிட்டுக் கூறுவது அறிக. வழக்கின்போது 'பித்தன்' என்றதால் "பித்தா! என்றே பாடுக" என்றான் இறைவன்.

## திருப்புமையம்

இந்த வரலாற்றுப் போக்கில் சில ஐயங்கள் எழுவது இயற்கை. முதலாவது ஐயம், "நம்பியாரூரருக்குத் திருமணம் நிச்சயிப்பதற்கு முன்பே, அதாவது பேசி முடிக்கும்பொழுதே இறைவன் திருமணத்தைத் தடுத்து இருக்கக் கூடாதா? ஏன் திருமண நாள்—நாழிகை வரை காத்திருந்து தடுக்க வேண்டும்?" என்பது.

இரண்டாவது ஐயம். "அடிமை ஓலை எப்போது பிறந்தது? எப்படிப் பிறந்தது? ஓலையில் வரலாறு கூறப் படவே இல்லை. ஓலை இயல்பாக எழுதப்பெற்றதா? அல்லது தயாரிக்கப்பெற்றதா? மூல ஓலையின் படி ஒன்று நம்பி யாரூரரின் வீட்டில் இருக்க வேண்டுமல்லவா? அப்படி இருந்ததாகச் சேக்கிழார் கூறவில்லை; முதியவர் கூறவில்லை. ஏன்?" என்பது.

இறைவன் இந்த வரலாற்றின் மையக் கருத்தாகிய சாதி ஒழிப்பைப் பலரும் அறியத்தக்க வகையில், நாடக மரபில் உணர்த்த விரும்பியுள்ளான். சாதி வேற்றுமை அகற்றும் பணி எதிர்மறையாகவும் செய்யப்பெறுதல் வேண்டும்; உடன் பாட்டு முறையிலும் அணுகி செய்யப் பெறுதல் வேண்டும் என்பது இறைவன் திருவுள்ளம்.

நம்பியாரூரருக்கு மரபு வழி நடைபெறவிருந்த திருமணத்தைத் தடைசெய்தது எதிர்மறை. ஒரே சாதி வழித் திருமணம் தடைசெய்யப் பெறுகிறது. இது முதல் முயற்சி. இன்னும்கூட இந்த முயற்சி பரவலாக மேற்கொள்ளப் பெற வில்லை. இதனைப் பலரும் அறியச் செய்ய நினைத்ததால் திருமண நிகழ்ச்சி வரை காத்திருந்து பலரும் அறியத் திருமணம் நிறுத்தப் பெற்றது. தமிழ்நாட்டு வரலாற்றில் இஃதொரு திருப்புமையும்.

நம்பியாரூரர், வேதியருக்கு அடிமையாக இருந்தால் அடிமைத் தொழில் செய்துவிட்டுப் போகிறார். அதற்காகத் திருமணத்தைத் தடை செய்வானேன்? "அடிமைக்குத் திருமண உரிமை இல்லை" என்ற மனுஸ்மிருதியின் தாக்கமா?

சென்ற நூற்றாண்டு வரை ஏன் இன்றும் பல இடங்களில் தமிழர் இல்லத் திருமணங்களில், திருமணத்தின் போது மணமகனுக்குப் பூணூல் அணிவித்துப் பார்ப்பன னாக்கிப் பின் திருமணம் செய்து வந்தனர்; செய்து

வருகின்றனர். இந்தப் பழக்கமும் மனு ஸ்மிருதியின் தாக்கம் தானா? இவையெல்லாம் ஆய்வுக்குரியன.

## தோழமையாகத் தன்னைத் தந்தனன்

திருவெண்ணெய் நல்லூரில் சிவபெருமான் நம்பி யாரூரரின் திருமணத்தைத் தடுத்து ஆட்கொண்டருளினன். நம்பியாரூரர் திருப்பதிகங்கள் பாடத் தொடங்கினார். திருத் தலப் பயணமும் செய்யத் தொடங்கினார்.

வரலாற்றை விரித்துக் கூறவேண்டிய அவசியமில்லை. சித்தவட மடத்தில் திருவடி தீட்சையும் பெற்றுக் கொண்டார். தில்லைக்கூத்தன் நம்பியாரூரைத் திருவாரூருக்கு ஆற்றுப் படுத்தினார். திருவாரூருக்கு எழுந்தருளிய நம்பியாரூரர்,

*ஆரூ ரவர் எம்மையும் ஆள்வரே கேளீர்*

என்று வினவுகின்றார். திருவாரூர் நாயகன், "நம்பியாரூரனே! தோழமையாக உனக்கு நம்மைத் தந்தனம்" என்று கூறி ஆட்கொண்டருளினன். ஆட்கொண்டருளியதுடன் "என்றும் திருமணக் கோலத்துடன் வாழ்க!" என்று வாழ்த்தியும் அருளினன். திருவாரூர், நம்பியாரூரரைத் "தம்பிரான் தோழர்" என்று ஆக்கியது; அழைத்தது. தம்பிரான் தோழரும் "என்றன்னை ஆள் தோழனே!" என்று விதந்து சிவபெரு மானை வாழ்த்துகின்றார்.

## பரவையார் திருமணம்

திருவாரூர்த் திருக்கோயிலில் நம்பியாரூரர் பரவை யாரைச் சந்திக்கின்றார். பரவையார் தம்பிரான் தோழர் காதல் முகிழ்க்கிறது. இது, பண்டு தோன்றிய காதலின் தொடர்ச்சி என்று கூறவும் வேண்டுமோ? திருவாரூர் இறைவனும், தம்பிரான் தோழருக்கும்—நங்கை பரவை யாருக்கும் இனிதே திருமணத்தை முடித்து வைக்கிறார்.

நங்கை பரவையாருக்கும் நம்பி தம்பிரான் தோழருக்கும் ஏற்பட்ட காதலை, சேக்கிழார் அகத்திணை மரபுப் படி விளக்குகின்றார். யார் யார் மனம் எதில் தோய்ந்து கிடக்கிறதோ அது அதற்கேற்பச் சொற்கள் வெளிவரும் என்பார் திருவள்ளுவர்.

தம்பிரான் தோழரும் சிவபக்தர்; நங்கை பரவையாரும் அப்படியே. ஆதலால் அவர்களிடையே முகிழ்த்த காதல் பற்றிப் பெரியபுராணம் பேசுவது எண்ணத்தக்கது. நங்கை பரவையாரைக் கண்ட தம்பிரான் தோழர் நிலைபற்றி,

*கற்பகத்தின் பூங்கொம்போ*
*காமன்றன் பெருவாழ்வோ*
*பொற்புடைய புண்ணியத்தின்*
*புண்ணியமோ புயல்சுமந்து*
*விற்குவளை பவளமலர்*
*மதிபூத்த விரைக்கொடியோ*
*அற்புதமோ சிவனருளோ*
*அறியேனென் றதிசயித்தார்,*

(தடுத்தாட்கொண்ட புராணம் 140)

என்று கூறுகிறது பெரியபுராணம்.

தம்பிரான் தோழரைக் கண்ட நங்கை பரவையார்,

*முன்னேவந் தெதிர்தோன்றும்*
*முருகனோ பெருகொளியால்*
*தன்நேரில் மாரனோ*
*தார்மார்பின் விஞ்சையனோ*
*மின்நேர்செஞ் சடைஅண்ணல்*
*மெய்யருள்பெற் றுடையவனோ*
*என்னே!என் மனத்திரித்த*
*இவன்யாரோ? எனநினைத்தார்,*

(தடுத்தாட்கொண்ட புராணம் 144)

என்றும் சேக்கிழார் அருளியுள்ள பான்மையை உணர்க. இத்தகு காதல் மரபு இன்று என்னாயிற்று? தரங்கெட்டுப் போயிற்று!

தம்பிரான் தோழர், திருவாரூர் ஈசன், பரவையாரைத் தந்தருளியதை,

*ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய*
*தோழனுமாய் யான்செய்யும் துரிசுகளுக்கு உடனாகி*
*மாழையொண்கண் பரவையைத்தந் தாண்டானை மதியில்லா*
*ஏழையேன் பிரிந்திருக்கேன் என்ஆரூர் இறைவனையே,*

(7.51–10)

என்று உள்ளம் கனிந்தும் கசிந்தும் பாடியுள்ளமை இந்த வரலாற்றை உறுதிப்படுத்துகிறது.

## அடியார்க்கும் அடியார்

இந்தச் சூழ்நிலையில்தான் தென்தமிழ் மொழியின் பயன் என்று பாராட்டப்பெறும் திருத்தொண்டத் தொகையைத் தம்பிரான் தோழர் அருளிச் செய்துள்ளார். ஆதிசைவ குடும்பத்தில் பிறந்து அரச குடும்பத்தில் வளர்ந்து வன்மை பேசி வன்தொண்டராக விளங்கிய தம்பிரான் தோழர் "அடியார்க்கும் அடியேன்" என்று எத்தனை தடவை தான் சொல்வது? புதுமாதிரியான, ஆக்கவழியிலான தண்டனை இது.

திருவாரூர் இறைவன் "தில்லை வாழந்தணர்" என்று அடியெடுத்துக் கொடுக்கத் திருத்தொண்டத் தொகையைத் தம்பிரான் தோழர் அருளிச் செய்கின்றனர். இந்தத் திருத் தொண்டத் தொகையின் விரிவாக்கமே பெரியபுராணம் என்று போற்றப்பெறும் திருத்தொண்டர் புராணம்.

## பொன்பெற்றமை

இறைவன் திருப்புகலூரில் செங்கல்லைப் பொன்னாக்கித் தர, பொன் பெறுகிறார், தம்பிரான் தோழர். பின், சில நாட்களிலேயே திருப்பாச்சிலாச்சிராமத்திலேயும் பொன் வேண்டுகிறார். திருப்பாச்சிலாச்சிராமத்துறையும் தலைவன் இப்போது பொன் தரவில்லை. உடன் தம்பிரான் தோழருக்கு முறைப்பாடு வந்துவிடுகிறது.

*வைத்தனன் தனக்கே தலையும் என்நாவும்*
*நெஞ்சமும் வஞ்சம்ஒன்று இன்றி*
*உய்த்தனன் தனக்கே திருவடிக் கடிமை*
*உரைத்தக்கால் உவமனே ஒக்கும்*
*வைத்த பாம்புஆர்த்தோர் கோவணத்தோடு*
*பாச்சிலாச் சிராமத்தெம் பரமர்*
*பித்தரே ஒத்தோர் நச்சில ராகில்*
*இவரலாது இல்லையோ பிரானார்,* (7.14–1)

என்று பாடுகிறார். இந்தப் பதிகத்தில் "இவரலா தில்லையோ பிரானார்" என்று பாடுவதால் இறைவன் பால் உண்மையில் முறைப்பாடா? சிவபெருமான் தலைமையிலிருந்து விடுதலை பெற்று வேறு கடவுள் தேடுகிறாரா? அப்படியெல்லாம் நினைக்கத் தம்பிரான் தோழர் வரலாறு இடம் தராது.

சிவபெருமானிடம் உறைப்புள்ள அடிமை பூண்டவர் தம்பிரான் தோழர். இங்ஙனம் பாடுவதெல்லாம் உரிமையும் உறவும் மேவினமையின் விளைவு! இந்தப் பதிகத்தின் திருக்கடைக் காப்புப் பாடலில்,

*ஏசின வல்ல இகழ்ந்தன அல்ல*
*எம்பெரு மான்என்றெப் போதும்*
*பாயின புகழான் பாச்சிலாச் சிராமத்து*
*அடிகளை அடிதொழப் பன்னாள்*

*வாயினாற்கூறி மனத்தினால் நினைவான்*
*வளவயல் நாவல்ஆ ரூரன்*
*பேசின பேச்சைப் பொறுக்கில ராகில்*
*இவரலா தில்லையோ பிரானார்,* (7.14.12)

என்று தாம் இறைவனை ஏசவில்லை, இகழவில்லை என்று கூறித் தாம் பேசிய பேச்சைப் பொறுத்தருள வேண்டு வதையும் ஓர்க! இறைவனும் பிழை பொறுத்தருளி, பொன் தந்தருளினன். இந்த அற்புதத்தையும் தம்பிரான் தோழர்,

*புன்மைகள் பேசவும் பொன்னைத்தந் தென்னைப் போகம் புணர்த்த*
*நன்மையி னார்க்கிடம் ஆவது தந்திரு நாவலூரே"* (7.17.2)

என்று அருளியுள்ளமையை நினைத்தின்புறுக. அடுத்து, தம்பி ரான் தோழர் வரலாற்றில் சிந்தனைக்குரியனவற்றுள் ஒன்று "ஆற்றிலிட்டுக் குளத்தில் எடுத்தது" திருவருளால் எதுவும் சாலும் போலும்!

## சங்கிலியார் திருமணம்

தம்பிரான் தோழர் பல திருத்தலங்களை வணங்கிக் கொண்டு திருஒற்றியூர் வந்தடைகிறார். திருஒற்றியூரில் நடந்த வரலாற்று நிகழ்வுகள் சிந்தைக்கினியன. பண்டை நல்லூழ் கூட்டத் தம்பிரான் தோழர் நங்கை சங்கிலியாரிடம் மனம் போக்கிக் கவலையுடன் இருக்கின்றார்.

திருஒற்றியூர் இறைவன் எழுந்தருளி, சங்கிலியாரிடத் தில் தம்பிரான் தோழரை அறிமுகம் செய்துவைக்கும் பாங்கு நினைத்து நினைத்து மகிழ்தலுக்குரியது. பண்பார்ந்த நட்பியலுக்கு ஓர் அறிமுகமாக விளங்குகிறது.

*சாருந் தவத்துச் சங்கிலி! கேள்,*
*சால என்பால் அன்புடையான்*
*மேரு வரையின் மேம்பட்ட*
*தவத்தான் வெண்ணெய் நல்லூரில்*

*யாரும் அறிய யான்ஆள*
*உரியான் உன்னை எனைஇரந்தான்*
*வார்கொள் முலையாய்! நீஅவனை*
*மணத்தால் அணைவாய் மகிழ்ந்" தென்றார்!*

(ஏயர்கோன் 239)

என்று பேசும் சேக்கிழார் வாக்கு நினைத்தின்புறத் தக்கது. இவ்வாறு கூறிய இறைவனிடம் சங்கிலியார், தம்பிரான் தோழருக்குத் திருவாரூரில் உள்ள ஈடுபாட்டை விண்ணப்பிக் கிறார்.

பெருமான் அதற்கு "உன்னைப் பிரியேன்" என்று ஆரூரன் சபதம் செய்து தருவான் என்று பதில் கூறுகிறார். அதன்பின் சிவபெருமான் தம்பிரான் தோழரிடம் வந்து "சங்கிலியார் தம்மைப் பிரியேன் என்று சபதம் செய்யுமாறு கேட்கிறாள்" என்றார்.

தம்பிரான் தோழர் திருவாரூர் மற்றும் தலங்களுக்குச் செல்லத் தடையாக அமையுமே என்று எண்ணிப் பெருமா னிடம் "ஐய, எனை ஆண்ட தலைவ! சங்கிலியார்க்கு நான் சபதம் செய்யும் காலத்தில் நீ, கருவறையில் எழுந்தருளி யில்லாமல் மகிழின் கீழ் எழுந்தருள வேண்டும்" என்று வேண்டுகிறார், இறைவன் முன் சபதம் செய்தலைத் தவிர்க்க!

இறைவன் முன்னால் செய்தால்தான் சபதமா? இறைவன், கருவறையில் மட்டும்தான் எழுந்தருளியுள் ளானா? மகிழ மரத்தடியில் இறைவன் இல்லையா?

இந்த வினாக்களுக்கு எல்லாம் கிடைக்கக்கூடிய ஒரே விடை, காதல் மீதூரும்பொழுது இவையெல்லாம் கவனத் திற்கு வாரா என்பதைத் தவிர வேறு என்ன?

அதன்பின், சங்கிலியாரிடம் இறைவன் நம்பியாரூரர் சபதம் செய்ய முன்வந்துள்ளார் என்று கூறியதுடன் "திருக்கோயில் கருவறை முன் சபதம் செய்யவேண்டாம். மகிழ மரத்தடியில் சத்தியம் செய்தால் போதும் என்று மகிழ

மரத்தடியில் சபதம் பெற்றுக்கொள்" என்றும் அறிவுறுத்து கின்றான். எம்பெருமான் திருவிளையாட்டு என்னே!

வைகறைப் பொழுது! சங்கிலியார் தோழிகளுடன் திருக்கோயிலுக்கு வருகிறார். நம்பியாரூரர் சங்கிலியாரை அணுகி, பெருமான் அருளியதைக் கூறிச் சபதம் செய்து தரவும், திருமணம் செய்து கொள்ளவும் இறைவன் எழுந் தருளியுள்ள கருவறையின் திருமுன்புக்குச் சங்கிலி யாரை அழைத்தார்.

சங்கிலியாரின் பாங்கிகள் "இதற்காக இறைவனின் கருவறைக்குச் செல்லவேண்டுமா? அவசியமில்லை. இந்த மகிழமரத்து அடியிலேயே சபதம் செய்தால் போதும்" என் கின்றனர்.

நம்பியாரூரர் மனம்மருட்சி அடைகிறார். ஆயினும் திருமண வேட்கை வெற்றி பெறுகிறது. நம்பியாரூரர் மகிழின் கீழ்ச் சங்கிலியாருக்கு "நின்னைப் பிரியேன்" என்று சபதம் செய்து கொடுக்கிறார். திருமணமும் நடக்கிறது.

இத் திருமணத்தில் திரு ஒற்றியூர் இறைவன் அறச் சங்கடத்திற்கு ஆளானார். தம்பிரான் தோழர் விருப்பத் தையும் புறக்கணிக்க முடியவில்லை. சங்கிலியார் நலனையும் புறக்கணிக்கத் திருவுள்ளம் இல்லை. முதற் கட்டத்தில் சதுரப்பாட்டுடன் நடந்து கொண்டு விட்டான் இறைவன். இந்த நிகழ்வுகள் பற்றித் தம்பிரான் தோழர் நமது தேவாரத்தில்,

பொன்னவிலும் கொன்றையினாய் போய்மகிழ்க்கீழ்
இருவென்று
சொன்னஎனைக் காணாமே சூளுறவு மகிழ்க்கீழே
என்னவல்ல பெருமானே இங்கிருந்தாயோ என்ன
ஒன்னலரைக் கண்டாற்போல் 'உளோம் போகீர்'
என்றானே, (7.89.9)

என்று பாடுவதை அறிந்து மகிழ்க.

தி. தி. VII. 24.

## கண்களை இழந்ததும் பெற்றதும்

இளவேனில் பருவம் வருகிறது. அப்போது நம்பியாரூரருக்குத் திருவாரூர் வசந்த விழா நினைவுக்கு வருகிறது. வசந்த விழாவைக் காணும் அன்பு மேலிடுகிறது. "எழிலாரூர்ப் பெருமானே! ஆரூர் அரசே! நின்னை யான் எங்ஙனம் பிரிந்திருப்பேன்?" என்று எண்ணி அழுகிறார்; புலம்புகின்றார்; ஆரூரை நோக்கிப் புறப்பட்டுவிட்டார்.

திருஒற்றியூர் எல்லையைக் கடக்கிறார்; கடந்த அளவில் அவர் கண்கள் இரண்டையும் இழக்கிறார்; மூர்ச்சையாகிறார், சபதம் பிழைத்தமையால்! நம்பியாரூரருக்கு வேறு ஏது பற்றுக்கோடு? இறைவனிடத்தில் கண்களைத் தரவேண்டிப் பாடுகிறார்.

*அழுக்கு மெய்கொடுன் திருவடி அடைந்தேன்*
*அதுவும் நான்படப் பாலதொன் றானால்*
*பிழுக்கை வாரியும் பால்கொள்வர் அடிகேள்*
*பிழைப்பன் ஆகிலும் திருவடிப் பிழையேன்*
*வழுக்கி வீழினும் திருப்பெய ரல்லால்*
*மற்று நான்அறி யேன்மறு மாற்றம்*
*ஒழுக்க என்கணுக்கு ஒருமருந் துரையாய்*
*ஒற்றி யூரெனும் ஊர்உறை வானே,* (7.54.1)

என்று கசிந்துருகின்றார். கண் கிடைக்கவில்லை. மீண்டும் அழுது அரற்றிக் கைக்கோலாவது தருக என வேண்டுகிறார். இதனை,

*மூன்று கண்ணுடை யாய் அடியேன் கண்*
*கொள்வ தேகணக் குவழக் காகில்*
*ஊன்றுகோ லெனக் காவது ஒன்றருளாய்*
*ஒற்றி யூரெனும் ஊருறை வானே!* (7.54.4)

என்பதால் அறியலாம். "இறைவா! உனக்கோ மூன்று கண்! எனக்கிருந்த இரண்டு கண்ணையும் பிடுங்கிக் கொண்டாய்! இங்ஙனம் என் இரண்டு கண்ணையும் பிடுங்கிக் கொண் டதன் மூலமாவது கணக்கு வழக்கைத் தீர்த்துக் கொண் டாயா? அல்லது தொடருமா?" என்னும் பொருள் படக் "கணக்கு வழக்கும்" பேசுகிறார்.

சபதம் பிழைத்ததற்குக் கண்களைப் பறிப்பதுதான் தண்டனையா? வேறு தண்டனை கொடுத்திருக்கக் கூடாதா? சத்தியம் செய்தது வாய்தானே! ஏன் ஊமையாக்கி இருக்கக்கூடாது? என்ற கேள்வி எழலாம்.

திருமுறைத் தமிழில் உள்ள விருப்பத்தால் பெருமான் ஊமையாக்கவில்லை. நம்பியாரூரர் தம் கண் இழந்த பிறகு பாடும் பதிகங்கள் அற்புதமானவை; நெஞ்சு நெகிழத்தக்கவை. தாம் விரும்பிக் கேட்கும் நம்பியாரூரரின் நற்றமிழ்ப் பாடல் களை அனுபவிக்க இயலாதே என்று ஊமையாக்கவில்லை.

நம்பியாரூரரின் கண்கள் காதலுக்குத் துணை நின்ற தாலும் நாடு காண ஆசை அவருக்கு ஏற்பட்டதால் சபதம் பிழைத்ததாலும் கண்களைக் குருடாக்கினார் என்றும் அமைதிகொள்ளலாம். இந்த இடையீடு தம்மீது காதலை மேலும் தூண்டும் என்றும் பெருமான் எண்ணியிருக்கலாம்.

திருஒற்றியூர் இறைவன், நம்பியாரூரரின் துன்பம் கண்டு இரங்கவில்லை. நம்பியாரூரர் தொண்டர்கள் வழி காட்டத் திருமுல்லைவாயிலை அடைகிறார். திருமுல்லை வாயில் திருப்பதிகத்தில் "சங்கிலிக்கா என் கண் கொண்டனை பண்ப" என்று பாடுகிறார். "பண்ப" என்ற சொல் சங்கிலிக்கு நல்ல விதமாக நடந்து கொள்வதற்காக என் கண்களைப் பறித்தாயோ என்னும் பொருள் படக் கூறியதோ என்று எண்ண வேண்டியிருக்கிறது.

பின் திருவெண்பாக்கம் திருக்கோயிலையடைந்து இறைவனை வணங்கிப் "பிழைகளைப் பொறுப்பதே பெரி

யோர் கடன்! நீ என் பிழையைப் பொறுப்பாய் என்று எண்ணியே பிழை செய்தேன்! ஆனால், பிழை பொறுத்தருள் செய்ய மறுக்கிறாய்! இதனால் உனக்குப் பழி வாராதா?" என்று கேட்கிறார். திருவெண்பாக்கத்திறைவன் திருவுள்ளம் இரங்கிக் கோல் ஒன்று தந்தருள்கின்றான்.

*மான்திகழும் சங்கிலியைத் தந்துவரு பயன்களெல்லாம்*
*தோன்றஅருள் செய்தவித்தாய் என்றுரைக்க உலகமெலாம்*
*ஈன்றவனே வெண்கோயில் இங்கிருந்தா யோஎன்ன*
*ஊன்றுவதோர் கோலருளி 'உளோம்போகீர்' என்றானே!*

(7. 89. 10)

என்ற பாடல் திருவெண்பாக்கத்திறைவன் ஊன்றுகோல் தந்தருளி "உளோம் போகீர்!"; என்று ஒன்னலரிடம் — அதாவது பொருந்தாப் பகைவரிடம் பேசுவது போல் பேசி அனுப்பிவிடுகிறான் என்பதைக் குறிப்பிடுகிறது. மேலும் பல திருத்தலங்களையும் பணிந்தேத்திக் கொண்டு காஞ்சிபுரத் திற்குச் சென்று கச்சியேகம்பனைப் போற்றிப் பரவுகின்றார்.

கச்சியேகம்பன் நம்பியாரூரருக்கு இடக்கண்ணை அருளிச் செய்கிறான். இது உண்மையா? நம்பியாரூரர்க்கு இடக்கண்ணை அருளிச்செய்தவன் கச்சியேகம்பனா? அல்லது கச்சியேகம்பனின் பங்கிலுறையும் அன்னை காமாட்சியா? பெற்றது இடக்கண். ஆதலால், காமாட்சி அம்மையின் கருணை என்றே கருதவேண்டும். அன்னை தானே முந்திப் பொழிபவள் கருணையை! இதனை,

*ஆலந்தா னுகந்து அமுதுசெய் தானை*
*ஆதியை அமரர் தொழுதேத்தும்*
*சீலந்தான் பெரிதும் உடையானைச்*
*சிந்திப்பார்அவர் சிந்தையுள்ளானை*
*ஏல வார் குழலாள் உமை நங்கை*
*என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற*

காலகாலனைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே, (7.61.1)

என்று பாடி விளக்குகிறார். மீண்டும் பலபதிகளைக் கண்டு வணங்கிக் கொண்டு—திருவாவடுதுறைக்கு வந்து சேர்கிறார். இந்நிலையில் உடலில் நோய் வேறு வந்து விட்டது. இதனை,

கண்ணி லேன்உடம் பில்அடு நோயால்
கருத் தழிந்து உனக்கே பொறை யானேன்,
(7.70.2)

என்று பாடி வருந்துகின்றார். அடுத்து, திருத்துருத்திக்குச் செல்கின்றார். திருத்துருத்தி இறைவனின் ஆணைப்படி திருக்கோயில் திருக்குளத்தில் நீராடி நோய் நீங்கப் பெறுகிறார். இதனை,

மின்னுமா மேகங்கள் பொழிந்திழிந் தருவி
வெடிபடக் கரையொடும் திரைகொணர்ந்து எற்றும்
அன்னமாங் காவிரி அகன்கரை உறைவார்
அடியிணை தொழுதெழும் அன்பாராம் அடியார்
சொன்னவா றறிவார் துருத்தியார் வேள்விக்
குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன்
என்னைநான் மறக்குமாறு எம்பெரு மானை
என்னுடம்பு அடும்பிணி இடர் கெடுத்தானை, (7.74.1)

என்ற பாடல் புலப்படுத்துகிறது.

சொன்னவாறறிவார் திருவருளால் உடல் நோய் நீங்கப்பெற்றுப் பல தலங்களையும் வழிபட்டுக் கொண்டு திருவாரூரை வந்தடைந்தார். திருவாரூர் பரவையுண் மண்டளியை வாழ்த்தி வணங்கிப் பின்பு இராக்கால வழிபாட்டிற்குத் திருவாரூர்த் திருமூலட்டானேசுவரர் திருக்கோயிலுக்குச் செல்லுகிறார். இந்த நிலையில் திருவாரூர்ப் பெருமானோடு தான் அயலாய்ப் போனது போல எண்ணி வருந்திப் பாடுகின்றனர்.

அதன்பின் புற்றிடங்கொண்ட ஈசன் திருமுன் நிலந்தோய வீழ்ந்து வணங்கிப் பிறிதொரு கண்ணையும் தந் தருளும்படி வேண்டுகிறார். இந்தப் பதிகம் மிக மிக அற்புத மானது; உருக்கமானது. பாடலில் அடிமைத் திறமும் இருக் கிறது. மேவிப் பழி சுமத்தும் பாங்கும் இருக்கிறது.

*மீளா அடிமை உமக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாதே*
*மூளாத் தீப்போல் உள்ளே கனன்று முகத்தால் மிகவாடி*
*ஆளாய் இருக்கும் அடியார் தங்கள் அல்லல்*
*சொன்னக்கால்*
*வாளாங் கிருப்பீர் திருவாரூரீர் வாழ்ந்து போதீரே.* (7.95.1)

*விற்றுக் கொள்வீர் ஒற்றி அல்லேன் விரும்பி ஆட்பட்டேன்*
*குற்றம் ஒன்றும் செய்ததில்லை கொத்தை ஆக்கினீர்*
*எற்றுக் கடிகேள் என்கண் கொண்டீர்? நீரே பழிப்பட்டீர்!*
*மற்றைக் கண்தான் தாரா தொழிந்தால் வாழ்ந்து போதீரே*
(7.95.2)

என்று பாடுகிறார். திருவாரூர் பெருமான் இரங்கியருளி வலக் கண்ணையும் தந்தருளுகின்றார். தம்பிரான் தோழர் ஆவல் தீர இரு கண்களாலும் ஆரூரானைத் தொழுதேத்திப் போற்றி னார்; ஆடினார்; பாடினார்; மகிழ்ந்தார்.

## பரவையார்பால் பெருமான் தூது

சங்கிலியார் திருமணச்செய்தியை அறிந்த பரவையார் சுந்தரருடன் புலவிகொண்டார். இதையறிந்த சுந்தரர் சான் றோர் சிலரைத் தூதனுப்பினார். பரவையார் உடன்பட வில்லை. மாறாகப் பரவையார் தாம் உயிர் துறப்பது உறுதி என்று கூறினார்.

தூது சென்றவர்கள் திரும்பி வந்து நடந்ததெல்லாம் நம்பியாரூரரிடம் கூற, அவருக்குக் கவலை மேலிட்டது;

திகைத்தார்; விதிவிடங்கப் பெருமானைச் சரண் அடைந்தார்; துயர் தீர்க்குமாறு வேண்டினார்.

நள்ளிரவில் வீதிவிடங்கர் நம்பியாரூரரிடம் வந்து "என்ன நேரிட்டது! யாது துன்பம்?" என்று ஒன்றும் தெரியாதவர் போலக் கேட்கிறார்? பரவையார் சம்மதம் பெற்றுச் சங்கிலியாரைத் திருமணம் செய்திருக்கலாம். அப்படிச் செய்யவில்லை.

ஏன்? நம்பியாரூரர் வரலாறு நீடிக்கவேண்டும் என்பது நோக்கம்! நம்பியாரூரரின் தோழமைத் திறத்திலும் தண்டமிழிலும் தோய்ந்து மகிழ இயலாமல் போகுமே! நம்பியாரூரரின் தவிப்பை, அதன்மூலம் அவர் தம் இசைத் தமிழை அனுபவிப்பதில் இறைவனுக்கு ஆர்வம் அதிகம்! அது போகட்டும்.

திருவாரூருக்கு நம்பியாரூரர் வந்த பிறகாவது இறைவன் தாமே வலியச் சென்று பரவையார் புலவியைத் தீர்த்து வைத்திருக்க்கூடாதா? "கூடலையாற்றூருக்கு வா" என்று அழைத்து வழிகாட்டி முன் செல்ல முடிகிறது. பரவையார் புலவியைக் காலத்தால் தீர்த்திருக்கக்கூடாதா? வேண்டி நிற்கும்பொழுதும் ஒன்றும் அறியாதவர்போல் யாது துயர் என்று கேட்கிலார் வீதிவிடங்கர்.

பரவையார் புலவியைத் தணிக்கச் சைவ அந்தணர் கோலத்தில் பரவையார் வீட்டுக்குச் செல்கிறான் இறைவன். பரவையார் உடன்படவில்லை. முதல் சுற்றில் பரவையார் உடன்படவேண்டும் என்று திருவாரூர் இறைவனே விரும்பவில்லை. அப்படி விரும்பியிருந்தால் வீதிவிடங்கப் பெருமான் தன் உருவத்துடனேயே சென்றிருப்பான் — வீதிவிடங்கனாகவே சென்றருளியிருப்பான்; பரவையார் மறுத்திருக்க மாட்டார்.

திருவாரூர் இறைவனுக்குப் பரவையார் புலவி நீடிக்க வேண்டும். நம்பியாரூரரின் தவிப்பு கூடுதலாக வேண்டும். அடுத்து, நம்பியாரூரரின் உள்ளத்தில் எழும் தூய அன்பில்

திளைத்தாட வேண்டும்; அவர் செந்தமிழை மேலும் அனுபவிக்க வேண்டும் என்பது திருவுள்ளம்.

ஆதலால் வீதிவிடங்கன் "பரவையார் சமாதானம் அடையவில்லை; மறுக்கிறாள்" என்ற செய்தியுடன் தம்பிரான் தோழரை அணுகுகிறார். நம்பியாரூரருக்கு ஏற்பட்ட ஏமாற்றம் தாங்கொணாத் துயரத்தைத் தந்தது.

திருவாரூர் இறைவனை நோக்கி; "ஐயன்மீர்! பரவையாருடன் கூட்டுவிக்கத் தவறுவீராயின் உயிர் தரியேன்" என்றார். மீண்டும் திருவாரூர் இறைவன் தூது போக உடன்பட்டார்.

வீதிவிடங்கன் தம் திருக்கோலத்துடன் பரவையார் மாளிகையை நண்ணினார். வீதிவிடங்கப் பெருமானின் திருக்கோலக் காட்சியில் ஈடுபட்ட பரவையார் விரைந்து சென்று வணங்கினார்.

பெருமான், "நம்பியாரூரன் நின்னையடைதல் வேண்டும்" என்றார். பரவையாரும் இசைந்தார். வீதி விடங்கப் பெருமான் விரைந்து போந்து சுந்தரரை அணுகிப் பரவையாரின் உடன்பாட்டைத் தெரிவிக்கிறார்.

நம்பியாரூரர் பரவையாரின் மாளிகைக்குச் செல்லப் பரவையார் அன்புடன் வரவேற்றாள். தங்கள் பொருட்டு இறைவன் திருவாரூர்த் தெருவில் இருமுறை திருவடி நோக நடந்த கருணையை நினைத்து இருவரும் உருகினர். இந்த நிகழ்ச்சிகளைச் சுந்தரர் நினைத்து நினைத்து நெஞ்சுருகிப் பாடியுள்ளார்.

*.......அடியேற்கு எளிவந்த*
*தூதனைத் தன்னைத் தோழமை அருளித்*
*தொண்டனேன் செய்த துரிசுகள் பொறுக்கும்*
*நாதனை......,*

**(7.68.8)**

என்ற வரிகள் அவ்வரலாற்றுக்கு அகச்சான்று. இந்தத் தூது தொடர்பாக ஏயர்கோன் கலிக்காமர் பிணக்குக் கொள்ள இறைவன் அப்பிணக்குக்கு நம்பியாரூரர் மூலமே தீர்வு காண்கிறார்.

## சேரமான் தோழர்

சுந்தரர் தொடர்ந்து திருமணக் கோலத்தில் மகிழ்ந்து வாழ்தலை விரும்புகின்றார். திருநாகைக் காரோணப் பதிகத்தில் அணிகளும் பிறவும் வேண்டிப் பாடுகின்றார்.

*பத்தூர்புக் கிரந்துண்டு பலபதிகம் பாடி*
*பாவையரைக் கிறிபேசிப் படிறாடித் திரிவீர்*
*செத்தார்தம் எலும்பணிந்து சேவேறித் திரிவீர்*
*செல்வத்தை மறைத்துவைத்தீர் எனக்கொருநாள் இரங்கீர்*
*முத்தாரம் இலங்கிமிளிர் மணிவயிரக் கோவை*
*அவைபூணத் தந்தருளி மெய்க்குஇனிதா நாறும்*
*கத்தூரி கமழ்சாந்து பணித்தருள வேண்டும்*
*கடல்நாகைக் காரோணம் மேவியிருந் தீரே.*

(7.46.1)

இந்தப் பாடலில் நட்புரிமையின்பாற்பட்ட கிண்டல், கேலியெல்லாம் இருக்கிறது. நாகைக் காரோணத்து இறைவனும் ஆரூரர் வேண்டியன எல்லாம் வழங்கியருளினார். மேலும் கடிதில் செல்லக் குதிரையும் கொடுத்தார்.

நம்பியாரூரர் வாழ்க்கை இனிதே நடைபெற வேண்டும் என்ற கவலை இறைவனுக்கு உண்டு. தாமே தோழமையாக இருந்தாலும் யாதும் குறை வந்துவிடக் கூடாதே என்ற கவலை, இறைவனுக்கு இருந்தது. கலிக்காமருடன் இருந்த பிணக்கைத் தவிர்த்து, நட்பாக்கித் தந்தார்.

இந்தச் சூழ்நிலையில் சுந்தரரின் வாழ்க்கைத் தேவைகள் வளர்ந்து விட்டமையை நாகைக் காரோணப் பதிகம் விளக்கிக் கூறுகிறது. இவற்றை ஈடு செய்யத் தக்க வகையில் சேர அரசராகிய சேரமான் பெருமாளுக்குத் தகுதி மிகுதியும் கூடிய நிலையில் அறிமுகப்படுத்தி நட்புரிமைப் படுத்துகிறார்.

நம்பியாரூரைப் பற்றிய அறிமுகம் கிடைத்தவுடனேயே அவர் சுந்தரரைக் காணத் திருவாரூருக்கு வந்துவிட்டார். சுந்தரரும் அவரை வரவேற்று மகிழ்ந்தார். நம்பியாரூரரும் சேரமான் பெருமாளும் புற்றிடங் கொண்டானை வணங்கி மகிழ்ந்தனர்.

சேரமான் பெருமாள் தாம் இயற்றிய மும்மணிக் கோவையை மொழிந்தார். தம்பிரான் தோழர். "சேரமான் தோழ"ருமானார்.

சேரமான் தோழரும் சேரமான் பெருமாளும் திருஆல வாயிலை வணங்க எழுந்தருளினர். இடையில் பல திருத் தலங்களை, திருப்புத்தூர் உள்பட வணங்கிக்கொண்டு ஆலவாயை நண்ணினர். அங்கு, பாண்டிய அரசன், பாண்டியனின் மகளை மணந்திருந்த சோழன், சேரமான் பெருமாள் ஆகிய மூவேந்தர்களுடன் நற்றமிழ் வேந்தராகிய சுந்தரர் ஆலவாயிலுறை அடிகளை வணங்கிப் போற்றினார்.

சேரமான் பெருமானுக்கு ஆலவாயவண்ணல் முன்பே அறிமுகம் திருமுகப்பாசுரத்தின் வாயிலாக! திருப்பரங் குன்றத்து இறைவன் முன் மூவேந்தருடன் வழிபட்ட முறையைச் சேரமான் தோழர் திருப்பதிகம் கூறுகிறது.

**அடிகேள் உமக்கு ஆட்செய அஞ்சுதும் என்று**
**அமரப் பெருமானை ஆரூரர் அஞ்சி**
**முடியால் உலகாண்ட மூவேந்தர் முன்னே**
**மொழிந்து ஆறும் ஓர் நான்கும் ஓரொன்றினையும்**

*படியா இவை கற்றுவல்ல அடியார்*
*பரங்குன்றம் மேய பரமன் அடிக்கே*
*குடியாகி வானோர்க்கும் ஓர்கோவும் ஆகிக்*
*குலவேந்தராய் விண்முழுதும் ஆள்பவரே* (7.2.11)

இப்பாடல் நம்பியாரூரர் வரலாற்றுக்கு ஒரு சிறந்த அகச் சான்று. பாண்டிய நாட்டுத் திருப்பதிகள் பலவும் வணங்கிய நிலையில் சேரமான் பெருமான், சேரநாட்டுக்கு எழுந்தருளும் படி வேண்டி நின்றார்.

சேரமான் தோழரும் உடன்பட்டுச் சேரமான் பெருமானுடன் எழுந்தருளிச் செல்லும் வழியில் காவிரி வெள்ளத்தைக் கடந்து கரையேறி ஐயாற்றிறைவனை வணங்கிக் கொங்கு நாட்டைக் கடந்து சேர நன்னாடு அடைந்தனர்.

சேர நன்னாட்டில் திருவஞ்சைக்களத் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவனைப் போற்றி வணங்கினார். சேர நன்னாட்டில் சேரமான் தோழருக்கு அரச வரவேற்பு வழங்கப் பெற்றது. சேரமான் தோழருக்குத் திருவாரூர் நினைவு வந்துவிட்டது.

*பொன்னும் மெய்ப் பொருளும் தருவானைப்*
*போகமும் திருவும் புணர்ப்பானைப்*
*பின்னை என் பிழையைப் பொறுப்பானைப்*
*பிழையெல்லாம் தவிரப் பணிப்பானை*
*இன்ன தன்மையன் என்றறி யொண்ணா*
*எம்மானை எளிவந்த பிரானை*
*அன்னம் வைகும் வயற் பழனத்தணி*
*ஆரூரானை மறக்கலும் ஆமே,* (7.59.1)

என நினைந்து பாடினார். இப்பாடல் மூலம் இறைவன் ஆன்மாவை ஆணவத்தின்—ஆதிக்கத்திலிருந்து மீட்பதற்கான மாயா கன்ம மலங்களை அதாவது, பொன், போகம் முதலியவற்றை ஆன்மாவுக்குக் கூட்டுவித்துப் பக்குவப்

படுத்திப் பின் மெய்ப் பொருளும் திருவும் கூட்டுவிக்கிறான் என்ற உண்மையை உணர்த்துகின்றார்.

பிழை பொறுத்தல் மட்டும் போதாது. பிழை தவிர்க்கவும் பணிக்கவேண்டும் என்ற வாழ்வியல் நெறி உணர்த்தப் பெறுகிறது.

சேரமான் தோழர் திருவாரூருக்குப் பயணமானார். அதுபோழ்து சேரமான் பெருமான் பெரும்பொருள்களுடன் சேரமான் தோழருக்கு விடை தந்து வழியனுப்பி வைத்தார். இடைவழியில் திருமுருகன் பூண்டி வருகின்றார், சேரமான் தோழர்!

திருமுருகன் பூண்டியில் கடவுள் ஆணைவழி, பொருள்கள் வழிப்பறி கொள்ளப்படுகின்றன. சுந்தரர் திருமுருகன் பூண்டித் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவனை நோக்கி,

*கொடுகு வெஞ்சிலை வடுக வேடுவர் விரவ லாமை*
*சொல்லித்*
*திருடு மொட்டெனக் குத்திக் கறைகொண்டு*
*ஆறலைக்குமிடம்*
*முடுகு நாறிய வடுகர் வாழ் முரு கன் பூண்டி மாநகர்வாய்*
*இடுகு நுண்ணிடை மங்கை தன்னொடும் எத்துக்கு இங்*
*கிருந்தீர் எம்பிரானீரே* (7.49.1)

என்று பாடுகிறார்.

வேடுவர் வழிப்பறி செய்கின்றனர். "நீர் எதற்காக இங்கு இருக்கின்றீர்" என்று வினவும் முறையில் இந்தப் பதிகம் முழுவதும் அமைந்துள்ளது. இறைவன் வழிப்பறி செய்த பொருள்களைத் திரும்பத் தந்தருளினன்.

இந்த நிகழ்ச்சிக்கும் — அதாவது நம்பியாரூரர் கொண்டு வந்த — சேரமான் பெருமாள் தந்த பொருளை வழிப்பறி செய்தமைக்குச் சேக்கிழார் ஓர் அருமையான

*காரணம் காட்டுகின்றார்; அக்காரணத்தை ஐய வினா வாக்குகின்றார், என்ன காரணம்?*

*திருமுருகன் பூண்டிஅயற்*
*செல்கின்ற போழ்தின்கண்*
*பொருவிடையார் நம்பிக்குத்*
*தாமேபொன் கொடுப்பதலால்*
*ஒருவர்கொடுப் பக்கொள்ள*
*ஒண்ணாமைக் கதுவாங்கிப்*
*பெருகருளால் தாங்கொடுக்கப்*
*பெறுவதற்கோ? அதுஅறியோம்,*

(கழறிற்றறிவார் புராணம் 165)

என்பது பெரிய புராணம்.

தம்முடைய தோழனாகிய தம்பிரான் தோழருக்குப் பொருள் தாமே தரவேண்டும். மற்றவர் தரவும் கூடாது; இவர் பெறவும் கூடாது. மற்றவர் கொடுத்துப் பெற்றால் தம் நட்புரிமைக்கு இழுக்கு என்று சிவபெருமான் கருதியிருப்பார் போலும்! என்று சேக்கிழார் பாடுவது நினைந்து மகிழத் தக்கது.

## இரண்டும் உடன் நிகழ்வது ஏன்?

அதன்பின், திருவாரூர் சென்றடைந்து சில நாள் தங்கி யிருந்தார் நம்பியாரூரர்; மீண்டும் சேரமான் பெருமாளைக் காண வேணவாக் கொண்டு சேர நாட்டுக்குப் பயண மானார்; பயண வழியில் அவிநாசித் திருத்தலத்திற்கு எழுந்தருளுகின்றார்.

அவிநாசியில் அருகருகில் ஒரு வீட்டில் மங்கல முழங்கொலியும், மற்றொரு வீட்டில் அழு குரலும் கேட்கிறது. இந்த முரண்பட்ட நிலை சுந்தரருக்கு உவகையைத் தரவில்லை.

"இரண்டும் உடன் நிகழ்வது ஏன்?" என்று வினா எழுப்பி, அழுகுரல் கேட்ட வீட்டுக்குச் செல்கிறார். அருமந்தப் புதல்வனை முதலை வாய்ப் பறிகொடுத்த தாயின் அழுகை அது. உடனே சிவபெருமானை வேண்டி முதலை யுண்ட பாலகனை மீண்டுத் தந்து தாய்க்கு மகிழ்வூட்டு கின்றார்.

## கயிலைப் பயணம்

சேர நன்னாடு அடைந்து சேரமான் பெருமாளுடன் மகிழ்ந்துறைகின்றபோது திருவஞ்சைக் களத்தில் எழுந்தருளி யுள்ள இறைவனைக் காதல் மீக்கூர வணங்கித் "தலைக்குத் தலைமாலை" எனும் பதிகம் பாடி அருள்கின்றார். இப்பதிகம் முழுவதிலும் திருவடிசாரும் வேட்கையைப் புலப்படுத்தி னார்.

கயிலாயத்துறையும் இறைவன் வெள்ளை யானையை அனுப்பித் தம்பிரான் தோழரை அழைத்து வரும்படி தேவர்களை அனுப்பினான். சேரமான் தோழர் சேரமான் பெருமாளைச் சிந்தித்துக் கொண்டே வெள்ளை யானையின் மீது அமர்ந்து கயிலைக்குப் பயணமானார்.

இதனை அறிந்த சேரமான் பெருமாள் தனது குதிரையின் செவியில் திருவைந்தெழுத்தை ஓதி அவரும் பயணமானார். சுந்தரர் இவர்ந்து சென்ற வெள்ளை யானைக்கு முன்பாகக் குதிரை செல்கிறது.

தம்பிரான் தோழர் கயிலைநாதனை அணுகி வணங்கி நின்று சேரமான் பெருமாள் வந்திருப்பதை விண்ணப் பித்தார். சேரமான் பெருமாளும் அழைக்கப்பெற்றார்.

சேரமான் பெருமாள் உள்ளே சென்று வீழ்ந்து வணங்கித் "திருவுலாப் பாடினேன்; திருச்செவி சாத்தியருளப் பெறவேண்டும்" என்று விண்ணப்பித்தார். ஈசனும் 'சொல்லுக' என்றருளித் திருவுலாவைக் கேட்டார்.

திருக்கயிலையில் எழுந்தருளியுள்ள சிவபெருமானுக்குச் செந்தமிழில் இயற்றிய ஞான உலா பரிசு. சிவபெருமான் ஞான உலாவைக் கேட்டருளினன். கயிலையில் பேசப்படும் மொழி எது? அம்மையப்பனுக்கு மொழி ஏது?

உண்மையில் கடவுளுக்கு நாடு, மொழி, இனம், மதம் இவற்றிற்கும் இணைப்புண்டாக்கி வேறுபாடு தோன்றப் பேசுவது தவறு. எல்லைகளைக் கடந்ததே கடவுள். கடவுளுக்கு நாடும் இல்லை; மொழியும் இல்லை; இனமும் இல்லை; மதமும் இல்லை.

ஆயினும் வாழும் மாந்தருக்கு நாடு, மொழி, இனம், மதம் இவையெல்லாம் உள்ளனவே. இந்த அடிப்படையில் ஆய்வு செய்தால் கயிலையின் மொழி தமிழேயாதல் வேண்டும். அல்லது கயிலைநாதனுக்குத் தமிழ் தெரியும் என்று அறியவேண்டும்.

சேரமான் பெருமானின் ஞான உலா அரங்கேறியது கயிலையில்! கயிலை வாசி அம்மையப்பன். அம்மை, திருஞானசம்பந்தருக்கு ஞானப்பால் கொடுத்தருளிய பின், திருஞான்சம்பந்தர் பாடிய மொழி "தோடுடைய செவியன்" என்ற தமிழ்தானே!

ஆதலால், சிவநெறி மரபுப்படி தமிழில் இறைவனை வழிபடலாம்; தமிழன் வழிபடலாம் என்பதே உண்மை. தமிழில் பாடிய சேரமான் பெருமானும் தம்பிரான் தோழரும் கயிலையில் பணிபுரியும் பேரின்ப வாழ்வில் திளைத்து மகிழ்ந்திருந்தனர்.

## சுந்தரர் நெறி

சுந்தரர் வரலாற்றில் படிப்பினைகள் பல உண்டு. ஆய்வு செய்ய வேண்டியனவும் உண்டு. கயிலாயத்துறை இறைவன் சிவன், உமையொருபாகம் கொண்டவன்; உமையின் மீது

நீங்கா விரும்பினன். அப்படியிருக்கச் சுந்தரரின் காதல், கயிலாயத்தில் அனுமதிக்கப்பெறாதது ஏன்?

சிவன் உமையிடத்துக் கொண்ட காதல் கவர்ச்சிக் காதல் அல்ல; ஐந்தொழில் நிகழ்த்தும் குறிப்புடைய காதல்; உலகுய்யச் செய்யும் காதல்! சுந்தரர் காதல் அத்தகையதன்று. இன்று நிகழ்கின்ற காதல் வாழ்வு, காமவேட்கை தணிந்ததாக நிகழ்வுறின் நன்மக்கட் பேறுண்டாம்!

நம்பியாரூரர் பிறப்பு, வளர்ப்பு, திருமண வாழ்க்கை அத்தனையிலும் வருணக்கலப்பு ஏற்பட்டுள்ளமையை ஓர்க! பிறப்பு, சைவ அந்தணர் குலத்தில்; வளர்ப்பு, அரசர் குலத்தில்; திருமணங்கள், முறையே உருத்திர கணிகையர் குலம், வேளாண் குலத்தில்! இங்ஙனம் சிவபெருமான் திட்டமிட்டு வருணக் கலப்பைச் செய்து வைத்தமையால் இறைவன் திருவுள்ளம் வருணபேதமற்ற சமுதாயமே என்பது தெளிவான உண்மை.

ஆனால், இன்று சமுதாய ரீதியிலும் சரி, சமய ரீதியிலும் சரி, சாதி வேற்றுமை நெகிழ்ந்து கொடுக்கக் கூட மறுக்கிறது! சாதி முறைகள் இறுக்கமாகிக் கொண்டு வருகின்றன. இது வரலாற்று உண்மைக்கு மாறானது; பண்பாட்டுக்கு முரணானது; தீது!

தமிழ்நாட்டில் பரவிய அயல் வழக்குகள் காரணமாகத் தமிழர் வாழ்க்கையில் நிலையாமையுணர்வு ஆதிக்கம் செலுத்தியது. வாழ்க்கையையே துன்பச் சுமையாக்கி விட்டனர். மனையற வாழ்க்கை கொச்சைப்படுத்தப் பெற்றது. கடவுள் பயப்படக்கூடிய பொருளானார்! கடவுள் வாழ்த்துப் பொருளாகவே விளங்கினார்.

இத்தகு வாழ்க்கை முறை நன்றன்று என்று தமிழ் மக்களுக்கு உணர்த்தி வாழ்வாங்கு வாழும் நெறியில் ஆற்றுப்படுத்தவே சுந்தரர் வரலாற்றைத் திருவருள் முன்னின்று இயக்கியதாகும்.

வாழ்க்கை பொருளுடையது; அர்த்தமுடையது. கடவுள் வாழ்த்துப் பொருள் மட்டுமல்ல; வாழ்வுப் பொருள் என்ற நெறிமுறை உருவாகியது சுந்தரர் வரலாற்றின் மூலம்தான்! இதனால் தமிழ்நாடு தனது நாகரிகத்தை வளர்த்துக் கொண்டது.

சமஸ்கிருத மொழியே அருச்சனை மொழி என்ற நடைமுறையைச் சுந்தரர் வரலாறு மாற்றியது. "அருச்சனை பாட்டேயாகும்" என்று சொற்றமிழ்ப் பாடல்களை அருச்சனையாக்கித் தமிழருக்காகத் தொடங்கி வைத்ததே சிவபெருமான்தான்! முதல் தமிழருச்சனை செய்தவர் சுந்தரர்.

இன்று தமிழருச்சனை தமிழ் மக்களால் கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளப்பெற்றுள்ளது. ஆயினும் பரவலாக நடைமுறைக்கு வரவில்லை. தமிழ் மக்களுக்குத் தமிழார்வம் இல்லை! இஃது ஒரு தவக்குறைவே.

சைவ சமயம் சார்ந்த வாழ்க்கைக்குத் தாழ்வெனும் தன்மை இன்றியமையாதது. நம்பியாரூரர் தம்பிரான் தோழர்; அரச குடும்பத்தில் வளர்ந்தவர். யாராக இருந்தால் என்ன?

அடியார்களுக்கு வணங்கிய வாயினராதல் தவிர்க்க இயலாத கடமை என்பதைத் திருத்தொண்டத்தொகை விளக்குகிறது. அடியார்களிடம் வணக்கம் இன்றியமையாதது என்பதே திருத்தொண்டத்தொகையின் விழுமிய பொருள்.

இந்த உலகில் நிலவும் துன்பத்தை இயற்கை என்றும் நியதி என்றும் அனுபவிக்கும் கொள்கை தமிழருடையதன்று. இந்த உலகில் வாழ்க்கையை இன்புறு நலன்கள் நிறைந்த வாழ்க்கையாக மாற்ற வேண்டும் என்பதே வாழ்க்கையின் குறிக்கோள்.

சங்ககாலக் கவிஞன் வினா எழுப்பி விடை காண்கிறான். ஒரு வீட்டில் அழுகுரல், பிறிதொரு வீட்டில் மகிழ்ச்சி எதனால்? ஏன்? கடவுளின் படைப்பு என்பதைக் கவிஞன்

மறுக்கிறான். அப்படி இன்ப துன்ப வேறுபாடுகளுடன் உலகத்தைக் கடவுள் படைத்திருந்தால், அக்கடவுள் பண்பில்லாதவன் என்பது கவிஞன் கருத்து.

மேலும் கவிஞன், "இந்த உலகம் இன்னாததாக இருக்கலாம் என்று அமைதி கொள்ளாதே; இனிய காண்க!" என்று ஆணையிடுகின்றான். "இனிய காண்க! இதன் இயல் புணர்ந்தோரே" என்பது சங்ககாலக் கவிஞன் வாக்கு!

இதே வாக்கினைச் சுந்தரர் அவிநாசியில் உயிர்ப்பிக் கிறார். ஒரு வீட்டில் மங்கல ஒலி முழங்கப் பிறிதொரு வீட்டில் அழுகை ஒலி கேட்க இரண்டும் உடன் நிகழ்வது ஏன்? என்று வினா எழுப்பி விடையும் கண்டார் சுந்தரர்.

ஆனால், நாம்தான் தொடர்ந்து இந்த இரு வேறு நிலையை மாற்றாமல் ஊழ் என்றும் விதியென்றும் சமா தானம் சொல்லிக்கொண்டிருக்கிறோம். இந்த நிலை நீடித்தல் விரும்பத்தக்கது அன்று.

சுந்தரர் வரலாறு முழுதும் நட்பின் இலக்கணம் பொதுளுகிறது. நட்பில் சிறந்து விளங்கச் சுந்தரர் வரலாறு துணை செய்யும். உயிர்த் தோழமை மனிதனை வளர்க்கும்; வாழ்விக்கும். நட்பு என்பது கடமை வழிப்பட்டது. சிறந்த நட்பில் பிழைகள் தெரியா. அப்படியே பிழைகள் ஒரோவழி தெரிந்தாலும் பிழைகளை ஏற்றுக்கொண்டு நட்பு பாராட்டு வதுதான் நட்பு.

குறைகளை மறந்துவிடுதல் மூலமே நட்பு வளரும். இதற்கு இலக்கியமாகத் திகழ்வது சுந்தரர் வரலாறு. நம்பி யாரூரருக்கு வாய்த்த நண்பர்கள் இருதய சுத்தமான நண்பர்கள். சிவபெருமான், சுந்தரர், சேரமான் பெருமான் இவர்களிடையில் வளர்ந்த நட்பு எல்லையற்றது; அழிவற்றது. இத்தகு நட்பியல் நெறி நாட்டில் வளர வேண்டும்.

சுந்தரர் பாடிய பாடல்கள் ஏழாவது திருமுறையாக வரிசைப்படுத்தப் பெற்றுள்ளன. சுந்தரர் திருமுறையில் 100

பதிகங்கள் உள்ளன. 1026 பாடல்கள் உள்ளன. ஆயினும், சுந்தரர் அருளிய பாடல்கள் முழுமையும் நமக்குக் கிடைத்தில என்பதே வலிமையான கருத்து.

சுந்தரர் பதிகங்கள் அனைத்திலும் கடைக்காப்பு உண்டு. திருநாவுக்கரசர் பதிகத்தில் மட்டுமே கடைக்காப்பு இல்லை. சுந்தரர் திருமுறையின் விழுமிய சிறப்பு, சிவத்துடன் சுந்தரருக்கு இருந்த நெருங்கிய உறவும் உரிமையும் வெளிப்படும் நிலை, ஏவல், இகழ்தல், ஏசுதல் போன்றவை சுந்தரர் தேவாரத்தில் மிகுதி.

"மகத்திற் புக்கதோர் சனி எனக்கானாய்" என்றார். திரு ஓணக்காந்தளியில் "மதியுடையவர் செய்கை செய்யீர்" என்றார். இம்மொழிகளைத் திரும்பச் சொல்லவும் நாணம் ஏற்படுகிறது. ஆயினும் வன்தொண்டர் வாய்ச் சொற்கள் அன்றோ? அதனால் பெருமானுக்கு உவகையாயின.

சுந்தரர் இறைவனை அன்றாட வாழ்க்கையில் உடன் உறைவானாகப் பெற்றவர். பெற்று நடந்து கொண்டவர்; வாழ்ந்தவர்.

சங்க காலந்தொட்டே சிவபெருமானுக்கு "நீலமணி மிடற்று இறைவன்" என்ற பெயர் வழங்கி வருகிறது. ஔவையார்,

நீலமணி மிடற்று ஒருவன்போல
மன்னுக பெரும நீயே!

என்றார். பாற்கடல் கடைந்த போழ்து கடலில் எழுந்த நஞ்சினைத் தான் உண்டும், அமுதத்தினை அமரர்களுக்குத் தந்தும் நஞ்சினை உமையம்மை துணையுடன் கண்டத்தில் அடக்கியதால் "நீலகண்டன்" என்ற பெயர் வந்தது. நஞ்சின் காரணமாகச் சிவபெருமான் கண்டம் கருத்திருந்தது.

சுந்தரர் திருமுறையில் "நீலமணி மிடற்றிறைவன்" என்று போற்றப் பெறுகிறான். திருப்புன்கூர்ப் பதிகத்தில்

சுந்தரர் அந்த வரலாற்றையே குறிப்பிட்டுப் பாடுகின்றார். அதுமட்டும் அல்லாமல் நஞ்சுண்டிருந்த அருமைப் பாட்டைச் 'சீலம்' என்று போற்றுகின்றார்.

கோல மால்வரை மத்தென நாட்டிக்
கோளரவு சுற்றிக்கடைந் தெழுந்த
ஆல நஞ்சுகண் டவர்மிக இரிய
அமரர் கட்குஅருள் புரிவது கருதி
நீலம் ஆர்கடல் விடந்தனை உண்டு
கண்டத்தே வைத்த பித்தநீ செய்த
சீலங் கண்டுநின் திருவடி அடைந்தேன்
செழும்பொழில் திருப்புன்கூர் உளானே,

(7.55.5)

என்பது அந்தப் பாடல்.

சைவம் வினைக்கொள்கையில் நம்பிக்கை உடையது. "இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் எனும்" விதிக் கொள்கை யிலிருந்து நற்றமிழ் நம்பியாரூரர் மேலும் வளர்ந்து இம்மைச் செய்தது இம்மையிலேயே பயன் கூட்டும் என்ற கருத்தை வலியுறுத்துகிறார்.

தீவினையிலிருந்து அகலத் துணை செய்யவேண்டியது நெஞ்சமே! அப்படித் துணை செய்யாத நெஞ்சத்தை 'மட நெஞ்சமே!' என்று அழைக்கிறார். ஏன் மனிதனுக்கு மனம் நல்லதைச் செய்வதில்லை.

இந்த உலகில் ஒருவரைக் குத்திப் படுகாயப்படுத்தி உடைமையைப் பறித்தல் போன்ற களவினால் வரும் பாவங்களும் யாராவது ஒருவரைப் பகைத்துக்கொண்டு அப்பகை காரணமாக அவர்க்கு இழைத்த தீமைகளால் வரும் பாவங்களும் அடுத்த பிறவி வரை நீட்டிக்கா. இப் பிறப்பி லேயே வந்து வருத்தத்தைத் தரும். இது சுந்தரரின் கொள்கை; கோட்பாடு.

*குற்றொரு வரைக் கூறை கொண்டு*
*கொலைகள் சூழ்ந்த களவெலாம்*
*செற்றொரு வரைச் செய்த தீமைகள்*
*இம்மையே வரும் திண்ணமே!*
*மற்றொரு வரைப் பற்றி லேன்மற*
*வாதெழும் மட நெஞ்சமே*
*புற்றரவுடைப் பெற்றம் ஏறி*
*புறம் பயந்தொழப் போதுமே!*

(7.35.4)

ஆதலால், இப்பிறப்பிலேயே தீமைகள் செய்வதைத் தவிர்க்க வேண்டும்.

மனித குலத்தில் உறவு முக்கிய இடத்தை வகிக்கிறது. உறவு மூலம் சமுதாயம் உருக்கொள்கிறது; வளர்கிறது; வாழ்கிறது. உறவு என்பது எல்லோருக்கும் உற்றுழி உதவுதல். "உற்று மற்றின்மை" என்று பாடுகின்றார்.

வாழ்க்கைக் கல்வி இன்றியமையாதது. சங்க காலத்தில் கல்வி போற்றப்படுவதாக இருந்தது. நீடூர்ப் பதிகத்தில் "கற்ற கல்வியினும் இனியானே இறைவனே!" என்றார்.

சுந்தரர் இறைவனை அனுபவித்தவர். சுந்தரர் பதிகங்கள், பதினேழு பண் வகையில் அமைந்துள்ளன. சுந்தரர் தமிழிசை கேட்பதில் சிவபெருமானுக்குள்ள விருப் பத்தை நினைவு கூர்கிறார்; திருஞானசம்பந்தருக்கும், திரு நாவுக்கரசருக்கும் தமிழோடிசை கேட்கும் இச்சையால் காசு தந்த வரலாற்று நிகழ்ச்சியை நினைவு கூர்கின்றார். அவர் களுடைய தமிழிசைக்குக் காசு தந்த நீ, என் தமிழ்ப் பாடல் கேட்டு, கண் தரக்கூடாதா என்பது போலக் கேட்கின்றார்.

சுந்தரர் தம் காலத்திலும், தம் காலத்திற்கு முன்பும் வாழ்ந்த அடியார்களை மதித்தவர்; போற்றியவர். திருஞான சம்பந்தர் திருஅவதாரம் செய்த சீர்காழி மண்ணைத் தம்

காலால் மிதிக்க அஞ்சுகின்றார். தமது திருமுறையில் பல அடியார்களை நினைந்து பாடுகின்றார்.

திருநாளைப் போவாரைச் 'செம்மையே ஆய திரு நாளைப் போவார்' என்று பாராட்டுகின்றார். இங்ஙனம் அடியார்களைப் போற்றும் பாங்கு விழுமியது ஆகும். அடியார்கள் செய்த பிழைகளைப் பொறுத்தருளும் தலைவன் இறைவன் என்பதனை விளக்க ஒரு பட்டியலே தருகிறார்.

நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தன்
நாவினுக் கரையன் நாளைப் போவானும்
கற்ற சூதன்,நற் சாக்கியன், சிலந்தி
கண்ணப்பன் கணம் புல்லன் என்றிவர்கள்
குற்றம் செய்யினும் குணமெனக் கருதும்
கொள்கை கண்டுநின் குரைகழ லடைந்தேன்
பொற்றி ரள்மணிக் கமலங்கள் மலரும்
பொய்கை சூழ்திருப் புன்கூரு ளானே! (7.56.4)

இந்தப் பாடலில் குறிப்பிடப் பெற்றுள்ள அடியார்கள் நன்றே செய்தனர். ஆயினும் உலகோர் பார்வையில் குற்ற மெனக் கருதப்படுகிறது. திருஞானசம்பந்தர் செய்த குற்ற மென்ன? திருவீழிமிழலையில் திருஞானசம்பந்தருக்கும் திருநாவுக்கரசருக்கும் படிக்காசு வழங்கிய இறைவன் திருஞானசம்பந்தருக்கு மட்டும் வாசியுள்ள காசாகத் தந்தருளினன்.

அப்பரடிகளுக்கு வாசியில்லாத காசு தந்தனன். இந்த வேற்றுமை நிலையைத் தாங்கிக் கொள்ளமாட்டாது இறை வனிடம் முறையிட்டு "வாசி தீரப்பாடி" வாசியில்லாத காசு பெற்றார் திருஞாசம்பந்தர்.

அதாவது அப்பரடிகள் வாசியில்லாத காசு பெற்ற மையைத் தாங்கிக் கொள்ளமாட்டாமை; இறைவன் அருளிய கொடையோடு மனம் நிறைவு பெறாமை ஒன்று.

இரண்டாவது மதுரையில் பாண்டிய அரசன் சமணர்களைக் கழுவேற்றியபொழுது அந்த வன்செயலைத் தடுக்காமை.

திருநாவுக்கரசர் செய்த குற்றங்கள் சமண சமயத்திற்குப் போய் வந்தது; திருஞானசம்பந்தர் மதுரை செல்லத் துணிந்த பொழுது திருவருளை நம்பாது நாளையும் கோளையும் காரணம் காட்டித் தடுக்க முயன்றது; திருமறைக்காட்டில் மறைக்கதவம் திறக்கப் பாடியபொழுது, இறைவன் தமிழ் கேட்கும் இச்சையால் காந்தாழ்த்தியதை உணராது அயர்ந்தது ஆகியன.

திருநாளைப் போவார் இறைவன் திருவருள் கைவரப் பெற்றும் திருக்கோயிலுக்குள் நுழையாமல் தாழ்வு மனப் பான்மையுடன் தயங்கியது. மூர்க்கர் சூதாடியது. சாக்கியர் இறைவன்மீது கல்லெறிந்தது. சிலந்தி தன் வாய் எச்சிலால் இறைவனுக்குப் பந்தல் அமைத்தது; மேனியில் வீழ்ந்தது. கண்ணப்பர் மரபு மீறிய நிலையில் பூசனை செய்தது. அதாவது வாயில் நீர்கொணர்ந்து உமிழ்ந்து திருமஞ்சனம் செய்தது. இறைச்சியைத் திருவமுதாகப் படைத்தது; அதுவும் சுவைத்துப் பார்த்த இறைச்சியைப் படைத்தது. இறைவன் திருமுடியில் செருப்பணிந்த காலைத் தூக்கி வைத்தது ஆகியன.

கணம்புல்லர் தலைமயிரைக் கொண்டு திருவிளக்கு எரித்தது. இவையெல்லாம் தூய மனத்துடன் செய்யப் பெற்றவை; குற்றமில்லாதவை.

எனினும் சுந்தரருக்குத் தன் குற்றத்தை இறைவன் மன்னிக்கவேண்டும் என்பது முறையீடு! அதற்காக முன்பே குற்றங்கள் மன்னிக்கப்பட்டிருக்கும் போது என் குற்றம் மட்டும் மன்னிக்கப்படக் கூடாதா? என்று கேட்கிறார்.

## 1. உவமைகள்

சுந்தரர் தேவாரத்தில் நிறைய உவமைகள் உண்டு. ஒன்றிரண்டு உவமைகளைப் பார்க்கலாம். ஆடு கறப்பவர்கள், ஆடு கறக்கும்பொழுது பால் கறக்கும் பாத்திரத்தில் பிழுக்கை விழுந்துவிடும். பால் கறப்பவர்கள் பிழுக்கைகள் விழுந்த பால் என்று பயன்படுத்தாமல் கீழே ஊற்றிவிட மாட்டார்கள். பிழுக்கைகளை வாரிப் போட்டு விட்டுப் பாலை வீணாக்காமல் உபயோகப்படுத்துவார்கள்.

இறைவா! திருஒற்றியூர் உறையும் இறைவா! நான் உன் திருமுன்புக்கு அழுக்கு நிறைந்த உடம்போடு வந்தது உண்மை. ஆனால் நான் என்ன பிழுக்கை விழுந்த பாலைவிட மட்டமா? நான் பிழை செய்வேன்! என் சொந்த வாழ்க்கையில் பிழை செய்வேன்!

ஆயினும் இறைவா! நின் திருவடிக்கு யாதொரு தவறும் செய்யேன்! நின்னாமம் மறவேன்! ஏன் வழுக்கியே வீழட்டுமா? நான் வழுக்கியதால்தானே சபதம் செய்து கொடுத்தேன்!

ஆயினும் நின் திருப்பெயர் மறந்தேனா? இல்லை. இல்லை! என்னை ஆட்கொண்டு கண்ணுக்கு மருந்து கொடு என்றார். "பிழுக்கை வாரியும் பால் கொள்வர்" என்பது நல்ல உவமை.

அழுக்கு மெய்கொடுன் திருவடி யடைந்தேன்
அதுவும் நான்படற் பாலதொன் றானால்
பிழுக்கை வாரியும் பால்கொள்வர் அடிகேள்
பிழைப்ப னாகிலும் திருவடிப் பிழையேன்
வழுக்கி வீழினும் திருப்பெய ரல்லால்
மற்றுநான் அறியேன்மறு மாற்றம்
ஒழுக்க என்கணுக் கொருமருந் துரையாய்
ஒற்றியூர்எனும் ஊர்உறை வானே! (7.54.1)

சுந்தரர் கண்களை இழந்த நிலையில் மற்றவர் வழிகாட்டிச் செல்லும் தன் நிலையை, "கழித்தலைப்பட்ட நாயது போல" என்று கூறி விளக்குகின்றார். ஒருவன் நாயைக் கழியைக் காட்டி இழுத்துச் செல்லுதல் போல் தன்னையும் இழுத்துப் போவதாகக் கூறும் செய்தி உணர்வைத் தொடு கிறது; அழுகையை வரவழைக்கிறது.

அடுத்து, ஒரு சிறந்த உவமை, "வாழை தான் பழுக்கும் நமக்கென்று" என்பது. மானுட வாழ்க்கையில் இளமை நலம் பொருந்திய மகளிர் இன்பம் தருவர். அந்த இளைய மகளிர் என்றும் இன்பந்தருவர் என்று கருதுவது ஒருவகையான மயக்கம்.

ஒரு தடவை பழம் தந்த வாழை மீண்டும் தராது. அதுபோலத்தான் மகளிரும் தொடர்ந்து இன்பந்தர இயலாது என்று வாழையையும் இளைய மகளிரையும் உவமிக்கிறார்.

## 2. பழமொழிகள்

சுந்தரர் தமது பாடல்களில் பழமொழிகளை வைத்தும் பாடியுள்ளார். சுந்தரர் திருமுறையில் பயிலும் பழமொழிகள் பலகாலும் சிந்திக்கத் தக்கன.

*நரியார்தங் கள்ளத்தாற் பக்கான பரி*
*சொழிந்து நாளும் உள்கித்.....*
*திரியாத அன்பராய்ச் சென்றுமுன் னடி வீழும்*
*சிந்தை யாரைத்*
*தரியாது தருமனார் தமர்செக்கி லிடும்போது*
*தடுத்தாட் கொள்வான்*
*பெரியோர்கள் புலியூர்ச்சிற் றம்பலத்துஎம் பெருமானைப்*
*பெற்றா மன்றே!* (7.90.3)

இந்தப் பாடலில் நரியின் வஞ்சனை எடுத்துக் காட்டப் படுகிறது. வஞ்சனையைக் கள்ளம் என்று குறிப்பிடுகிறார். இரண்டுபட்ட தன்மைக்குக் கள்ளம் என்று பெயர். அதாவது,

நன்றுடையார் போல் காட்டித் தீமை செய்தல். இது வஞ்சனை; தந்திரம்.

அடுத்து, உலக வழக்கில் பெருவழக்காகப் பயிலும் பழமொழி,

'பேயோடாயினும் பிரிவு தீயது' என்ற பழமொழி.

*பேயோ டேனும் பிரிவொன் றின்னா*
*தென்பர் பிறரெல்லாம்*
*காய்தான் வேண்டிற் கனிதா னன்றோ*
*கருதிக் கொண்டக்கால்*
*நாய்தான் போல நடுவே திரிந்தும்*
*உமக்காட் பட்டோர்க்கு*
*வாய்தான் திறவீர் திருவா ரூரீர்*
*வாழ்ந்து போதீரே!* (7.95.9)

ஆம்! பேயோடு கூடப் பிரிவு கூடாது. கூடிவிட்டால் பேய் உடனிருந்தபோது செய்த தீங்கைவிட அளவில் கூடுதலான தீமையைச் செய்யும்! ஆதலால், போயோடு ஆயினும் பழகிய பின் பிரியக்கூடாது. பெருந்தலைவர் காமராசர் இந்தப் பழமொழியை அடிக்கடி கூறுவார் என்பது நினைவு கூரத்தக்கது.

சுந்தரர், திருத்துறையில் எழுந்தருளியுள்ள இறைவனை நோக்கி "வேண்டினேன் தவநெறி" என்று வேண்டுகின்றார். சுந்தரர் நெறி எது? சுந்தரர் பரவையாருடன் கூடி வாழ்ந் ததைச் சேக்கிழார் யோகம் பயின்றார் என்று கூறி, சுந்தரரின் மனை வாழ்க்கையைச் சிறப்பிக்கின்றார்.

*தென்னாவ லூர்மன்னன் தேவர்பிரான் திருவருளால்*
*மின்னாருங் கொடிமருங்குல் பரவையெனும்*
*மெல்லியல்தன்*
*பொன்னாரும் முலையோங்கல் புணர்குவடே சார்வாகப்*
*பன்னாளும் பயில்யோகம் பரம்பரையின் விரும்பினார்.*

(தடுத்தாட்கொண்ட புராணம் 182)

என்றருளியமை அறிக. அதுபோலவே, "சங்கிலியார் மென் தடந்தோள் தோயும் பொழுதும் நின் திருவருள் மறக்க கில்லேன்" என்று அருளிய வற்றால் மனை வாழ்க்கை இழிவானதல்ல; முறையான மனைவாழ்க்கையிலேயே இம்மை, மறுமை நலன்களை அடையலாம் என்று உணர்த்துவது சுந்தரர் நெறி.

இறைவன் வாழ்த்துப்பொருள் மட்டும் அல்ல. வாழ்வுப் பொருள்; வாழ்க்கைப் பயணத்துக்கு அமைந்த தோழமை மிக்க துணை என்ற பார்வையில் இறைவனை வழிபட வேண்டும் என்பது சுந்தரர் நெறி.

மானுடத்திற்கு வாய்க்கும் நல்ல துணை தோழமையே யாம்! காதலிக்காமல் கூட வாழ்ந்து விடலாம். தோழர் இல்லாமல் வாழ முடியாது. ஒருவன் வாழ்க்கையில் அதிகம் பங்கேற்பவர் யார்? மனைவியா? தோழனா? தோழன்தான்!

மனைவி, துரிசுகள் — குற்றங்குறைகளை ஜீரணித்துக் கொள்ளமாட்டாள்; தோழன் ஜீரணித்துக் கொள்வான்; இதற்குப் பரவையார் — சிவபெருமான் இவர்களை ஒத்துப் பார்க்கலாம்! ஆதலால், வாழ்க்கை வளர, வாழ்க்கையில் இன்பம் பொதுள, பாதுகாப்புணர்வு தலைப்பட, நல்ல தோழன் தேவை என்பது சுந்தரர் நெறி.

இன்பமும் துன்பமும் மனிதனின் படைப்பு. இவை மாற்றங்களுக்கு உரியன என்பது சுந்தரர் நெறி.

சுந்தரமூர்த்தி நாயனார் வரலாறு நம்மனோர் வாழ்விற்கு ஓர் எடுத்துக்காட்டு! சுந்தரரின் திருமுறைப் பாடல்கள் நாளும் ஓதத் தக்கன.

# 35

# திருமுறையின் ஆற்றல்

தமிழ் இலக்கிய மரபுகள் மரணத்தை வென்ற மரபுகளாகும். "கூற்றம் குதித்தலும் கைகூடும்" என்று திருக்குறள் கூறுகிறது. பக்குடுக்கை நன்கணியார் என்ற சங்ககாலப் புலவர்,

ஓரில் நெய்தல் கறங்க ஓரில்
ஈர்ந்தண் முழுவின் பாணி ததும்பப்
புணர்ந்தோர் பூவணி அணியப் பிரிந்தோர்
பைத லுண்கண் பணிவார் புறைப்பப்
படைத்தோன் மன்றஅப் பண்பி லாளன்
இன்னா தம்மஇவ் வுலகம்
இனிய காண்கஇதன் இயல்புணர்ந் தோரே!

என்று பாடினார். இதனால் துன்பம் இயற்கை; மரணம் இயற்கை என்ற கருத்துக்களில் நம்பிக்கைகளில் தமிழருக்கு நம்பிக்கை இல்லை. இதுமட்டுமல்ல. மனிதனுக்கு வாய்க்கும் துன்பத்திற்குக் கடவுள் காரணம் அல்ல என்ற முற் போக்கான சிந்தனை தமிழருக்கு இருந்தது. இந்த உலக இயற்கை துன்பம் சூழ்ந்ததாக இருக்கலாம். ஆனாலும் துன்ப உலகத்தை இனிய உலகமாக மாற்றிப் புதியதோர் உலகம்

காண்பது மானுடத்தின் கடமை என்பதே தமிழரின் கருத்து. ஆதலால், மரணம் இயற்கை நியதி என்ற நம்பிக்கை எல்லையைக் கடந்து சென்று மரணமிலாப் பெருவாழ்வு பெற்றிடச் சிந்தித்துள்ளனர்; எண்ணியுள்ளனர்.

ஆம்! தமிழர்களின் வழிபடு கடவுள் சிவம்! சிவன் பிறப்பு - இறப்பு அறியாத பெருந்தலைவன். விண்ணோர்கள் அமுதுண்டும் சாவ, நஞ்சுண்டும் சாவா மூவாத் தலைவன் சிவன். ஆதலால், சிவனை வழிபாடு செய்பவர்கள் மரண மிலாப் பெருவாழ்வு எய்தலாம். எய்தமுடியும். ஆனால், இதுவரையில் நடைபெறவில்லை! ஏன்? மரணத்திலிருந்து பலரை மீட்டவர்கள் கூட, இன்று நம்மிடையில் இல்லை. இவர்கள் மரணம் அடைந்தார்களா? இல்லை, இல்லை! ஒருபொழுதும் மரணம் அடைந்திருக்க இயலாது. பாம்பு சட்டையை உரித்துக் கொண்டாற்போல இந்த அருளா ளர்கள் சிவானந்தப் பெருவாழ்வு நண்ணினர். சிவானந்தப் பெருவாழ்வில் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இதுவே மரபுவழிச் சிந்தனை!

சிவனை நினைந்து நினைந்து வழிபாடு செய்த அடியார்களும் நாயன்மார்களும் சிவனைப் போலவே ஐந்தொழில் செய்யும் ஆற்றல் பெற்றனர்.

*நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த*
*மறைமொழி தானே மந்திரம் என்ப,*

என்ற நூற்பாவுக் கிணங்க அமைந்தவை நாயன்மார்களின் திருமுறைப்பாடல்கள். இரும்பு சுடாது. நெருப்பொடு சேர்ந்த இரும்பு சுடும். நாயன்மார்கள் சிவன் திருவருள் உணர்த்தத் திருவருள் தோய்ந்து வந்தவை அத்திருப்பாடல்கள். அதனா லன்றோ "என்னுரை தன்னுரையாக" என்று சிவபெருமான் ஏற்றுக் கொண்டாதாகத் திருஞானசம்பந்தர் அருளிச் செய்கின்றார். தளரா உறுதியுடன் 'ஆணை நமதே' என்றும் அருளிச் செய்திருப்பதையும் உணர்க. ஆனால் அப்படிப்

பட்ட ஆற்றல் அவசியம் ஏற்பட்டபொழுது மற்றவர்கள் நலனுக்காகவே பயன்படுத்தப் பெற்றது. எந்த ஒரு சூழ்நிலையிலும் இந்த ஆற்றல் தற்சார்புக்காகப் பயன்படுத்தப் பெற்றதில்லை. சுயநலம் கடுகளவு சேர்ந்தாலும் பொது நலம் கெடும்; ஆன்ம நலம் கெடும். நாயன்மார்கள் வரலாற்றைக் கூர்ந்து நோக்கின் அவர்கள் தனிப்பட்ட முறையில் துன்புற்றுன்னர். ஆனால் மற்றவர்களுக்காக அற்புதங்கள் செய்துள்ளனர்.

சென்னை மயிலாப்பூரில் வாழ்ந்த சிவநேசச் செட்டி யார் மகள் பூம்பாவை என்பவள் பாம்பு கடித்து இறந்து போனாள். பெற்றோருக்குப் பூம்பாவையின் மீது அளவற்ற பரிவு. பூம்பாவையின் பிரிவு தாங்க இயலாமல் துன்புற்றனர். பிரிவுத் துயரை ஆற்றிக்கொள்ளப் பூம்பாவை உடம்பை எரித்த சாம்பலை ஒரு பானையில் எடுத்து வைத்தனர். திருஞானசம்பந்தர் மயிலை கற்பகாம்பிகை உடனுறை கபாலீசுவரரை வழிபட வருகிறார். அதுபோது சிவநேசச் செட்டியார் பூம்பாவையின் சாம்பல் குடத்துடன் சென்று திருஞானசம்பந்தர் திருமுன் வீழ்ந்து வணங்கி, பூம்பாவையை எழுப்பித் தரும்படி வேண்டினர். சிவநேசச் செட்டியார் துன்பத்தைக் கண்டு திருஞானசம்பந்தர் கசிந்துருகி, "மட்டிட்ட" என்று பதிகம் எடுத்துப் பாடினார். பூம்பாவை உருப்பெற்று எழுந்தாள். நிறைமொழி மாந்தராகிய திருஞானசம்பந்தரின் மறை வாக்கால் உருவமே இல்லாத நிலையில் சாம்பல் உருவம் பெற்றது.

அப்பரடிகள் திங்களூர் செல்கிறார். திங்களூர் அந்தணர் அப்பூதியடிகள் தமது இல்லத்தில் அப்பரடிகளுக்கு திருவமுது படைக்க விரும்புகிறார். அப்பரடிகளுக்குத் திருவமுது படைக்க வாழை இலை நறுக்கப் போன அப்பூதியடிகளின் மகன் மூத்ததிருநாவுக்கரசு நச்சரவம் தீண்டி இறந்து போகின்றான். அப்பரடிகள் திருவமுதருந்தத் தடை வரக்கூடாது என்று எண்ணிய பெற்றோர், மூத்த

திருநாவுக்கரசின் சடலத்தை மூடி மறைத்துவிட்டு அப்பரடிகளுக்குத் திருவமுது படைக்கின்றார். அப்பரடிகள் மூத்த திருநாவுக்கரசை உடனிருந்து உண்ண அழைக்கின்றார். அப்பூதியடிகள் மூத்த திருநாவுக்கரசின் மரணத்தை மறைக்க "அவன் இப்போது இங்கு உதவான்" என்றார். அப்பரடிகள் விட்டபாடில்லை. அப்பூதியடிகள் உண்மையைக் கூறும் நிலை வந்தது. அப்பரடிகள் மிக வருந்தி, "ஒன்று கொலாம்" என்று பதிகம் எடுத்துப்பாடி மூத்த திருநாவுக்கரசை எழுப்பினார். மூத்த திருநாவுக்கரசு எழுந்தான். இங்குச் செத்தவரை உடலிருந்த நிலையில் மீட்டது தமிழ் மறை. செத்தாரை எழுப்பிய அற்புதம் இது. இங்கு ஒருவரின் உடல் இருந்தது.

நம்பியாரூரர் அவிநாசிக்குச் செல்கிறார். அவிநாசியில் ஒரு வீட்டில் அழுகுரல் கேட்கிறது. இன்னொரு வீட்டில் மகிழ்ச்சி நிரம்பி வழிகிறது. தமிழர் மரபு இதனை ஏற்றுக் கொள்வதில்லை. சங்ககாலக் கவிஞர் பக்குடுக்கை நன்கணியார்,

> ஓரில் நெய்தல் கறங்க ஓரில்
> ஈர்ந்தண் முழவின் பாணி ததும்ப,

என்று பாடினார் அல்லவா? அவருக்கு ஆயிரம் ஆண்டு களுக்குப் பிறகு நம்பியாரூரர் அவிநாசிக்குச் சென்ற பொழுதும் அதே நிலை! எனவே, "இரண்டும் உடன் நிகழ்வது என்?" என்று கேட்டார், நம்பியாரூரர். இரண்டு வீட்டிலும் ஒரே நாளில் ஆண் மகவு பிறந்திருக்கிறார்கள். ஒருவீட்டாரின் மகன் குளிக்கச் சென்ற இடத்தில் முதலையால் விழுங்கப்பெற்றான். அதனால் அழுகை; துன்பம்; துயரம். பிறிதொரு வீட்டில் மகனுக்குப் பிறந்தநாள் விழா. இந்த வேறுபாட்டினை நம்பியாரூரரால் ஏற்றுக் கொள்ள இயலவில்லை. ஆனால் குளத்திலோ தண்ணீர் இல்லை; முதலையும் இல்லை; பையனும் இல்லை. அவனது

உடலும்கூட முதலையால் ஜீரணிக்கப் பெற்றுவிட்டது. இந்த நிலையில் நம்பியாரூரர் "தலைக்குத் தலைமாலை" என்று பதிகம் எடுத்துப் பாடுகின்றார். மறைமொழி அல்லவா? திருவருளாற்றல் செறியப் பெற்ற சொற்கள் அல்லவா? அதனால் குளத்தில் தண்ணீர் நிரம்புகிறது! முதலையும் வருகிறது! அந்த முதலை, தான் உண்ட பாலனை உமிழ்கிறது! பெற்றோருக்கு எல்லையற்ற மகிழ்ச்சி!

இங்ஙனம் திருமுறை சாம்பலுக்குப் பெண்ணுருக் கொடுத்தும், உயர் பிரிந்த உடலுக்கு உயிர் கொடுத்தும் அடுத்து உடலும் இல்லாத நிலையில் உடலை வரவழைத்தும் கொடுத்தது. இது திருநெறிய தமிழுக்குரிய ஆற்றல். இன்று தமிழ் மக்கள் திருநெறிய தமிழை ஓதினால் வீறும் பெறலாம்; வளம் பெறலாம்; வாழ்நாள் பெறலாம்.

தமிழ்மாமுனிவர்
தவத்திரு
# குன்றக்குடி அடிகளார்
# நூல்வரிசை

திருக்குறள்
இலக்கியம்
சமய இலக்கியம்
சமயம்
பொது